ஜனவரி 2022

WINMEEN.COM
LEARNING LEADS TO RULING


# நடப்பு நிகழ்வுகள்











**1. சமீப செய்திகளில் இடம்பெற்ற கார்பன் நிறைந்த, வைர வடிவிலான, பூமிக்கு அருகில் உள்ள சிறுகோளின் பெயர் என்ன?**

அ) அப்பல்லோ

**ஆ) ரியுகு (Ryugu) ☑**

இ) ஈரோஸ்

ஈ) பென்னு



✓ '1999 JU3' என்றும் அழைக்கப்படுகிற ரியுகு, ஒரு கார்பன் நிறைந்த, வைர வடிவிலான, பூமிக்கு அருகில் உள்ள சிறு கோள் ஆகும். ரியுகுவிலிருந்து பூமிக்குத் திரும்பிய JAXA இன் ஹயபுசா–2ஆல் கொண்டு வரப்பட்ட மாதிரியில் மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வு, அந்தப் பொருள் மிகவும் கருமையாக இருப்பதைக் காட்டுகிறது. அது 2% ஒளியை மட்டுமே பிரதிபலிக்கிறது.

---

**2. சிறுமிகளின் பாதுகாப்பிற்காக எந்த மாநிலம் / UT'இன் காவல்துறை 'அபயா' என்ற திட்டத்தை தொடங்கியுள்ளது?**

அ) பஞ்சாப்

**ஆ) புது தில்லி ☑**

இ) ஒடிஸா

ஈ) மேற்கு வங்கம்

✓ தில்லி காவல்துறை ஆணையர் இராகேஷ் அஸ்தானா, பெண் குழந்தைகளின் பாதுகாப்பிற்காக தில்லி காவல் படை மற்றும் NGO ஆகியவற்றின் கூட்டு முயற்சியான 'அபயா' என்ற திட்டத்தை தொடங்கினார்.

✓ தில்லி காவல்துறையும் தன்னார்வ தொண்டு நிறுவனமா –ன சக்தி அறக்கட்டளையும் இணைந்து குழந்தைகளி –டையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட இத்திட்டத்தை செயல்படுத்துகின்றன.

---

**3. சமீப செய்திகளில் இடம்பெற்ற கனிமீடு எந்தக்கோளின் நிலவாகும்?**

அ) சனி

**ஆ) வியாழன் ☑**

இ) வெள்ளி

ஈ) நெப்டியூன்



✓ NASA சமீபத்தில் வியாழனின் நிலவான கனிமீடு அருகே சேகரிக்கப்பட்ட ஒலிகளை வெளியிட்டது. நமது சூரிய குடும்பத்தில் உள்ள மிகப்பெரிய நிலவு கனிமீடு ஆகும்.

✓ கனிமீடு, சூரிய குடும்பத்தில் உள்ள பிற நிலவுகளைப் போலல்லாமல் தனக்கென சொந்த காந்தப்புலத்தையும் கொண்டுள்ளது. வியாழன் கோளின் சுற்றுப்புறத்தை கண்காணிக்க NASA ஜூனோ விண்கலத்தை ஏவியது. இந்த ஆண்டின் தொடக்கத்தில், ஜூனோ கனிமீடுவின் மின்காந்த அலைகளை சேகரித்தது.

---

**4. சமீபத்தில் திறக்கப்பட்ட T–சேது, எந்த மாநிலத்தின் மிக நீளமான பாலமாகும்?**

அ) கர்நாடகா

**ஆ) ஒடிஸா ☑**

இ) பீகார்

ஈ) மேற்கு வங்காளம்



✓ ஒடிஸா மாநில முதலமைச்சர் நவீன் பட்நாயக் சமீபத்தில் கட்டாக் மாவட்டத்தில் பாயும் மகாநதி ஆற்றின் மீது கட்டப்பட்டுள்ள அம்மாநிலத்தின் மிக நீளமான பாலமான T–சேது பாலத்தை திறந்து வைத்தார். 3.4 கிமீ நீளமுள்ள இப்பாலம், ஆங்கில எழுத்தான 'T' வடிவத்தில் கட்டப்பட்டு உள்ளது. இதற்கான மொத்த மதிப்பீடு ₹111 கோடி ஆகும்.

---

**5. பங்கஜ் அத்வானி & துருவ் சித்வாலா ஆகியோருடன் தொடர்புடைய விளையாட்டு எது?**

அ) மட்டைப்பந்து

ஆ) டென்னிஸ்

இ) பூப்பந்து

**ஈ) பில்லியர்ட்ஸ் ☑**



✓ இந்திய பில்லியர்ட்ஸ் வீரர் பங்கஜ் அத்வானி இறுதி ஆட்டத்தில் துருவ் சித்வாலாவை வீழ்த்தி 11ஆவது தேசிய பில்லியர்ட்ஸ் பட்டத்தை வென்றார். பங்கஜ் அத்வானி ஸ்னூக்கர் போட்டியில் 23 முறை உலக சாம்பியன் பட்டம் வென்றவராவார். IBSF உலக பில்லியர்ட்ஸ் சாம்பியன்ஷி –ப்பை 15 முறை வென்றுள்ளார்.

✓ 2018ஆம் ஆண்டில், அவருக்கு இந்திய அரசாங்கத்தால் 'பத்ம பூஷன்' விருது வழங்கப்பட்டது. துருவ் சித்வால, 3 முறை உலக இறுதிப்போட்டியை எட்டியுள்ளார். மேலும் 2 முறை ஆசிய பில்லியர்ட்ஸ் சாம்பியனாகியுள்ளார்.

---

**6. "டிராகன் விண்கலம்" சார்ந்த விண்வெளி நிறுவனம் எது?**

அ) NASA

ஆ) வர்ஜின் அட்லாண்டிக்

**இ) ஸ்பேஸ் X ☑**

ஈ) புளூ ஆர்ஜின்



✓ ஸ்பேஸ் X'இன் 'டிராகன் விண்கலம்' 2021 டிச.21 அன்று சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு சரக்கு விநியோகம் செய்வதற்காக ஏவப்பட்டது. அது NASA'இன் சார்பாக சென்றது. புளோரிடாவில் உள்ள NASA'இன் கென்னடி விண்வெளி மையத்திலிருந்து ஏவப்பட்டது.

---

**7. உள்நாட்டில் உருவாக்கப்பட்ட அடுத்த தலைமுறை கவச பொறியாளர் உளவு வாகனம், எந்த ஆயுதப்படையில் சேர்க்கப்பட்டது?**

**அ) இந்திய இராணுவம் ☑**

ஆ) இந்திய கடற்படை

இ) இந்திய விமானப்படை

ஈ) இந்திய கடலோர காவல்படை



- ✓ உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட அடுத்த தலைமுறை கவச பொறியாளர் உளவு வாகனத்தின் முதல் தொகுப்பு இந்திய இராணுவத்தின் பொறியாளர்கள் குழுமத்தில் சேர்க்கப்பட்டது. இந்த அமைப்பு பாதுகாப்பு ஆராய்ச்சி & மேம்பாட்டு நிறுவனத்தால் (DRDO) வடிவமைக்கப்பட்டது.
- ✓ மேலும், மேதக்கில் உள்ள ஆர்ட்னன்ஸ் ஃபேக்டரி மற்றும் பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிட், புனே ஆகியவற்றால் இது தயாரிக்கப்பட்டது.

---

**8. காவல்துறையில் அனைத்து பதவிகளிலும் திருநங்கை -களுக்கு 1% இடஒதுக்கீட்டை அறிவித்துள்ள மாநில அரசு எது?**



அ) தமிழ்நாடு

**ஆ) கர்நாடகா ☑**

இ) ஒடிஸா

ஈ) மத்திய பிரதேசம்

- ✓ கர்நாடகா மாநில அரசு தனது காவல்துறையில் உள்ள அனைத்து பதவிகளிலும் திருநங்கைகளுக்கு 1 சதவீத இடஒதுக்கீடு வழங்க முடிவு செய்துள்ளது. அரசின் இந்த நடவடிக்கை திருநங்கைகளை அரசிற்குள் கொண்டு வரவும், சமூகத்தில் அவர்களுக்கு எதிரான கருத்துகளை அகற்றவும் உதவும். இது தொடர்பான ஆட்சேர்ப்பு செயல்முறையையும் அந்தத் துறை அறிவித்துள்ளது.

---

**9. அண்மையில், "Inmarsat-6 F1" செயற்கைக்கோளை விண்ணில் ஏவிய நாடு எது?**



அ) அமெரிக்கா

**ஆ) ஜப்பான் ☑**

இ) இஸ்ரேல்

ஈ) ஐக்கிய அரபு அமீரகம்

- ✓ ஜப்பான் சமீபத்தில் H-2A ஏவுகலத்தின்மூலம் 'Inmarsat-6 F1' என்ற நவீன வணிகத் தகவல் தொடர்பு செயற்கைக் கோளை ஏவியது. 5,470 கிலோகிராம் எடை கொண்ட இச்செயற்கைக்கோள், இதுவரை ஏவப்பட்ட மிகப்பெரிய மற்றும் அதிநவீன வணிக தகவல் தொடர்பு செயற்கைக் கோள்களுள் ஒன்றாகும்.

---

**10.நடுவண் அமைச்சர் நிதின் கட்கரி, அண்மையில் எந்த இடத்தில், அறிவார்ந்த போக்குவரத்து (Intelligent Transport) அமைப்பைத் தொடங்கி வைத்தார்?**



**அ) தில்லி விரைவுச்சாலை ☑**

ஆ) அகமதாபாத் விரைவுச்சாலை

இ) பெங்களூரு விரைவுச்சாலை

ஈ) லக்னோ விரைவுச்சாலை

- ✓ நடுவண் அமைச்சர் நிதின் கட்கரி சமீபத்தில் தில்லியில் உள்ள கிழக்கு புற விரைவுச் சாலையில் அறிவார்ந்த போக்குவரத்து அமைப்பைத் தொடங்கி வைத்தார். இது போக்குவரத்து தொடர்பான பிரச்சனைகளை குறைத்து பயணிகளின் பாதுகாப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ✓ அதிநவீன போக்குவரத்து உட்கட்டமைப்பைக் கொண்ட இவ்வமைப்பு, ஓட்டுநரின் வசதியை மேம்படுத்தவும், ஏதேனும் விபத்தைக் கண்டறியவும், அவசர ஊர்தி அந்த இடத்திற்குச் சென்றடைவதை உறுதிசெய்யவும் எச்சரிக்கைகளை அனுப்பும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. தமிழகத்தில் 11 புதிய மருத்துவக் கல்லூரிகளை தொடங்கி வைக்கிறார்: பிரதமர் மோடி ஜன.12-ல் மதுரை வருகை**

ஜனவரி 12-ம் தேதி தமிழகம் வரும் பிரதமர் நரேந்திர மோடி, மதுரையில் பாஜக நடத்தும் பொங்கல் விழாவில் பங்கேற்க இருப்பதாக தமிழக பாஜக தலைவர் கே.அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நேற்று வெளியிட்ட அறிக்கையில் அவர் கூறியிருப்பதாவது:

தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகையையொட்டி பாஜக சார்பில் ஜனவரி 12-ம் தேதி 'மோடி பொங்கல்' விழா மதுரையில்நடைபெறவுள்ளது. இந்த விழாவில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்கிறார். இந்நிகழ்ச்சியை ஒருங்கிணைத்து நடத்துவதற்கு மாநிலப் பொதுச்செயலாளர் கரு.நாகராஜன் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது.

மாநில துணைத் தலைவர் ஏ.ஆர்.மகாலட்சுமி, தேசிய பொதுக்குழு உறுப்பினர் சசிகலா புஷ்பா,மாநிலச் செயலாளர் உமாரதி, மகளிரணி மாநிலத் தலைவர் மீனாட்சி, எஸ்.சி. அணி மாநிலத் தலைவர் பொன்.பாலகணபதி,தேசிய பொதுக்குழு உறுப்பினர் நீலமுரளி யாதவ், மாவட்டத் தலைவர்கள் மகா சுசீந்திரன், டாக்டர் சரவணன், மேப்பல் சக்திவேல், பாண்டியன், ராமநாதபுரம் மாவட்டப் பார்வையாளர் நாகேந்திரன், மகளிரணி மாநிலச் செயலாளர் கவிதா • காந்த் ஆகியோர் இக்குழுவில் இடம்பெற்றுள்ளனர். இதுதவிர 6 பேர் கொண்ட வரவேற்புக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்திருந்தது. அதன்படி, தமிழகத்தில் திருவள்ளூர், அரியலூர், கள்ளக்குறிச்சி, திருப்பூர், நீலகிரி, நாகப்பட்டினம், நாமக்கல், கிருஷ்ணகிரி, திண்டுக்கல், ராமநாதபுரம், விருதுநகர் ஆகிய 11 மாவட்டங்களில் புதிய மருத்துவக் கல்லூரிகள் தொடங்க மத்திய அரசு அனுமதி அளித்தது. அதனைத் தொடர்ந்து நிதி ஒதுக்கப்பட்டு, கட்டிடப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன்மூலம்தமிழகத்துக்கு கூடுதலாக 1,450இடங்கள் கிடைக்கவுள்ளன.

ஜனவரி 12-ம் தேதி விருதுநகரில் நடைபெறும் விழாவில் 11 மருத்துவக் கல்லூரிகளையும் பிரதமர்நரேந்திர மோடி தொடங்கி வைக்கிறார். முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் திமுக ஆட்சி அமைந்த பிறகு நடைபெறும்

அரசு விழாவில் பிரதமர் மோடி பங்கேற்பது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

11 மருத்துவக் கல்லூரிகள் திறப்பு விழாவில் பங்கேற்க தமிழகம் வரும் பிரதமர் மோடி, மதுரையில் பாஜக சார்பில் நடைபெறும் பொங்கல் விழாவில் பங்கேற்கிறார். இதற்கான ஏற்பாடுகளை தமிழக பாஜக தலைவர் கே.அண்ணாமலை, மாநில அமைப்புப் பொதுச்செயலாளர் கேசவ விநாயகம் உள்ளிட்டோர் செய்து வருகின்றனர்.

இதில் 10 ஆயிரத்திற்கும் அதிகமான பெண்கள் பொங்கல் வைப்பதற்கும், பல்வேறு கலை நிகழ்ச்சிகளுக்கும் பாஜகவினர் ஏற்பாடு செய்து வருகின்றனர்.

மதுரை பொங்கல் விழாவில் வேட்டி, சட்டை, துண்டு அணிந்துமோடி பங்கேற்க இருப்பதாக பாஜகவினர் தெரிவிக்கின்றனர்.

மதுரை பொங்கல் விழாவில் பங்கேற்கும் மோடி, தமிழில் சில நிமிடங்கள் பேச இருப்பதாகவும், அதற்காக அவர் பயிற்சி எடுத்து வருவதாகவும் பாஜகவினர் தெரிவிக்கின்றனர்.

கடந்த 2021-ம் ஆண்டு ஜனவரி14-ம் தேதி மதுரையில் நடைபெற்ற பொங்கல் விழாவில் காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்திபங்கேற்றார். மதுரை அவனியாபுரத்தில் நடைபெற்ற ஜல்லிக்கட்டு போட்டியையும் ராகுல் காந்தி பார்வையிட்டார்.

இந்நிலையில் இந்த ஆண்டு மதுரையில் நடைபெறும் பொங்கல் விழாவில் பிரதமர் மோடி பங்கேற்பது குறிப்பிடத்தக்கது.இந்த விழாவில் பாஜக தேசியப் பொதுச்செயலாளர் சி.டி.ரவி, தேசிய மகளிரணித் தலைவர் வானதி சீனிவாசன் உள்ளிட்டோரும் பங்கேற்க உள்ளனர்.

---

**2. திருச்செந்தூர் உள்ளிட்ட 7 கோயில்களில் மருத்துவ மையங்கள்: முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்**

திருச்செந்தூர், திருவண்ணாமலை, மேல்மலையனூர், சோளிங்கர், மருதமலை, திருத்தணி, பழனி ஆகிய இடங்களிலுள்ள திருக்கோயில்களில் அமைக்கப்பட்ட மருத்துவ மையங்களை இன்று முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்:

"முதல்வர் ஸ்டாலின் இன்று (31.12.2021) தலைமைச் செயலகத்தில், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை சார்பில் திருச்செந்தூர் சுப்பிரமணியசுவாமி கோயில், திருவண்ணாமலை அருணாச்சலேசுவரர் கோயில், மேல் மலையனூர் அங்காள பரமேஸ்வரி கோயில், சோளிங்கர் லட்சுமி நரசிம்ம சுவாமி கோயில், மருதமலை சுப்பிரமணிய சுவாமி கோயில், திருத்தணி சுப்பிரமணிய சுவாமி கோயில், பழனி தண்டாயுதபாணி சுவாமி கோயில் (மேம்படுத்தப்பட்ட மருத்துவ மையம்) ஆகிய 7 கோயில்களில் மருத்துவ மையங்களை காணொலிக் காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார்.

தமிழ்நாட்டில் உள்ள திருக்கோயில்களில் அதிகளவில் பக்தர்கள் வருகை புரியும் 10 கோயில்கள் தேர்வு செய்யப்பட்டு அக்கோயில்களில், தரிசனத்திற்கு வரும் பக்தர்களுக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டால் உடனுக்குடன் உயிர் காக்கும் மருத்துவ முதலுதவி அளித்திடும் வகையில் இரண்டு மருத்துவர்கள், இரண்டு செவிலியர்கள், இரண்டு பல்நோக்கு மருத்துவப் பணியாளர்களை கொண்டு மருத்துவ மையங்கள் ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் 2021-22ம் ஆண்டு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையின் மானியக் கோரிக்கையில், பக்தர்கள் அதிகளவில் வருகை புரியும் 10 திருக்கோயில்களில் தேவையான மருத்துவர் மற்றும் மருத்துவப் பணியாளர்களுகளுடன் கூடிய மருத்துவ மையங்கள் ஏற்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, கோயில் மருத்துவ மையங்களில் பணியாற்றிட தகுதியான மருத்துவர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்கள் தேர்வு செய்யப்பட்டு கோயில்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். முதற்கட்டமாக, திருச்செந்தூர் சுப்பிரமணியசுவாமி கோயில், திருவண்ணாமலை அருணாச்சலேசுவரர் கோயில், மேல்மலையனூர் அங்காள பரமேஸ்வரி கோயில், சோளிங்கர் லட்சுமி நரசிம்ம சுவாமி கோயில், மருதமலை சுப்பிரமணிய சுவாமி கோயில், திருத்தணி சுப்பிரமணிய சுவாமி கோயில், பழனி தண்டாயுதபாணி சுவாமி கோயிலில் என 7 கோயில்களில் அமைக்கப்பட்ட மருத்துவ மையங்கள் இன்று திறந்து வைக்கப்பட்டது.

இந்த மருத்துவ மையங்களில் முதலுதவி மற்றும் அடிப்படை சிகிச்சை மேற்கொள்வதற்கு தேவையான ஆக்ஸிஜன் சிலிண்டர்கள், ரத்த அழுத்த மாணி, படுக்கைகள், உயிர்காக்கும் மருந்துகள் போன்ற அனைத்து அடிப்படை வசதிகளும் உள்ளன. இதனால் கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு அவசர மருத்துவ உதவி தேவைப்படும் நேரத்தில் பேருதவியாக செயல்படும். இப்பணிக்காக ஓர் மருத்துவ மையத்திற்கு ஓராண்டிற்கு சுமார் ரூ.30 லட்சம், வீதம் 10 கோயில் மருத்துவ மையங்களுக்கு மொத்தம் ரூ.3 கோடி கோயில் நிதியிலிருந்து செலவு செய்யப்படும்.

இந்த நிகழ்ச்சியில், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் சந்தர மோகன் உள்ளிட்ட அரசு உயர் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்."

இவ்வாறு தமிழக அரசு தெரிவித்துள்ளது.

---

**3. கட்டுமான பணி தரத்தை உறுதி செய்ய சென்னை ஐஐடி உள்ளிட்ட தொழில்நுட்ப கல்லூரிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்: தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் தகவல்**

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது: சென்னையில் உள்ள தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய தலைமை அலுவலகத்தில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்துடன் நகரமயமாக்கல், கட்டிடங்கள் மற்றும் சுற்றுச்சூழலுக்கான

மையம் மற்றும் பல்கலைக்கழக பொறியியல் கல்லூரி திண்டுக்கல் ஆகிய நிறுவனங்களுடன் வாரியத்தினால் மேற்கொள்ளப்படும் கட்டுமானப் பணிகளின் தரத்தை உறுதி செய்ய வாரிய மேலாண்மை இயக்குனர் கோவிந்த ராவ் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் மேற்கொள்ளப்படும் கட்டுமானப் பணிகளின் தரத்தை பல்வேறு நிலைகளில் உறுதி செய்ய சம்பந்தப்பட்ட மண்டலங்களில் உள்ள புகழ்பெற்ற தொழில்நுட்ப கல்லூரிகளான சென்னை ஐஐடி, தேசிய தொழில்நுட்பக் கழகம், திருச்சி அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் இதர அரசு பொறியியல் நிறுவனங்களை மூன்றாம் தரக்கட்டுப்பாடு குழுவாக நியமனம் செய்திட வாரியத்தால் முடிவு செய்யப்பட்டது.அதன் அடிப்படையில் மூன்றாம் தரப்பு தரக்கட்டுப்பாடு முகமையாக, சென்னை ஐஐடி மற்றும் தமிழ்நாடு அரசு ஆகியவற்றின் கூட்டு முயற்சியால் உருவான நகரமயமாக்கல், கட்டிடங்கள் மற்றும் சுற்றுச்சூழலுக்கான மையம், பல்கலைக்கழக பொறியியல் கல்லூரி திண்டுக்கல் ஆகிய நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

நிகழ்ச்சியில் வாரிய நிர்வாக பொறியாளர்கள் ரவிச்சந்திரன், பாண்டியன், கியூப் நிறுவனத்தின் முதன்மை செயல் அலுவலர் பத்மநாபன் மற்றும் பல்கலைக்கழக பொறியியல் கல்லூரி திண்டுக்கல் உதவி பேராசியர் திவ்யா உட்பட பலர் கலந்து கொண்டனர்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

---

### 4. 19–வது சர்வதேச திரைப்பட விழா தொடக்கம்: 53 நாடுகளின் 100 படங்கள் திரையிடப்படுகின்றன

சென்னையில் 19–வது சர்வதேச திரைப்பட விழா தொடங்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து சென்னை சர்வதேசத் திரைப்பட விழாவை 19 ஆண்டுகளாக ஒருங்கிணைத்து வரும் இந்தோ சினி அப்ரிசியேஷன் பவுண்டேஷன் (Indo Cine Appreciation Foundation) திரைப்படச் சங்கத்தின் பொதுச் செயலாளரும் திரைப்பட விழா இயக்குநருமான இ.தங்கராஜ் கூறியதாவது:

கடந்த சில ஆண்டுகளில் 53 உலக நாடுகளிலிருந்து வெளியான 100 படங்கள் 19–வது சென்னை சர்வதேசத் திரைப்பட விழாவில் திரையிடப்படுகின்றன. இவற்றில் சிறந்த வெளிநாட்டுப் படத்துக்கான ஆஸ்கர் போட்டிப் பிரிவுக்கு அனுப்பப்பட்ட ஈரான் நாட்டின் 'ஹீரோ' (A Hero), ஆஸ்திரேலியாவின் 'வென் பொமேகிரேனட்ஸ் ஹவுல்' (When Pomegranates Howl), இந்தோனேசியாவின் 'யுனி' (Yuni), தென் கொரியாவின் 'டேக்ஸி டிரைவர்' உள்ளிட்ட படங்கள் சிறப்பு கவனம் பெறுகின்றன.

திரையிடப்படும் இந்தியப் படங்களில், தமிழ்ப் படங்கள்: உடன்பிறப்பே, கர்ணன், தேன், கட்டில், சிவரஞ்சனியும் இன்னும் சில பெண்களும், இராமே ஆண்டாலும் இராவணே ஆண்டாலும், ஐந்து உணர்வுகள், மாறா, பூமிகா, சேத்துமான், கயமை கடக்க.

மலையாளப் படங்கள்: காக்கத்துருத்து, நாயாட்டு, நிறைய தத்தகளுள்ள மரம், சன்னி.

பிறமொழி இந்தியப் படங்கள்: 21–ஸ்ட் டிஃபன் – குஜராத்தி, டொல்லு – கன்னடம், ஃபனரல் – மராத்தி, கல்கொக்கோ – பெங்காலி, நாட்யம் – தெலுங்கு, நிவாஸ் – மராத்தி, கிலியு பஞ்சரதொலில்லா – கன்னடம், செம்கோர் – திமாசா, அன்ஹெர்ட் – தெலுங்கு, வர்துல் – மராத்தி.

சென்னை பிவிஆர் மல்டிபிளெக்ஸ், சத்யம் சினிமாஸ், சாந்தம், சீசன்ஸ், சிக்ஸ் டிகிரீஸ் திரையரங்குகளில் இவை திரையிடப்படுகின்றன. இவ்வாறு இ.தங்கராஜ் தெரிவித்துள்ளார்.

---

### 5. 2021இல் மருத்துவம்: தொடரும் கரோனாவும் துளிர்க்கும் நம்பிக்கையும்

#### கரோனா இரண்டாம் அலை

தேர்தல் பரப்புரைகள், லட்சக்கணக்கில் மக்கள் கூடிய மத நிகழ்வுகள், அரசின் மெத்தனம், கரோனா தடுப்பு நடவடிக்கைகளைப் பின்பற்றுவதில் மக்களின் ஒழுங்கின்மை, தடுப்பூசி வதந்திகள் போன்றவை கரோனா இரண்டாம் அலைக்கு வித்திட்டன. மருத்துவ மனையில் இடம் கிடைப்பது சிக்கலானது. இடம் கிடைத்தாலும் ஆக்சிஜன் படுக்கைக்கு வழியில்லை. உயிர் காக்கும் மருந்துகளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவியது. இடுகாட்டில் நீண்ட வரிசையில் சடலங்கள் காத்திருந்தன. புனித ஆறான கங்கையில் சடலங்கள் பெருமளவில் வீசப்படன. வரலாற்றின் கறுப்புப் பக்கங்கள் அவை.

#### மருத்துவ ஆக்சிஜன் பற்றாக்குறை

இரண்டாம் அலையின் உச்சத்தில், 'இன்னும் சில மணி நேரத்திற்குத் தேவை யான ஆக்சிஜன் இருப்பு மட்டுமே எங்க ளிடம் இருக்கிறது. நோயாளிகளின் உயிருக்கு ஆபத்து' என்று டெல்லியிலிருக்கும் ஒரு மருத்துவமனை சமூக ஊடகத்தில் பகிர்ந்த பதிவு நாட்டை உலுக்கியது. விரைவில், அந்த நிலை நாடெங்கும் இருக்கும் மருத்துவமனைகளுக்கும் ஏற்பட்டது. நீதிமன்றங்கள் தலையிட்டு உத்தரவு பிறப்பித்த பின்னரும் ஒன்றும் செய்ய முடியாத நிலையில் ஒன்றிய அரசு இருந்தது. ஆரம்பத்தில் சற்று தடுமாறிய தமிழக அரசு, பின்னர் இந்தப் பிரச்சினையைத் திறம்படக் கையாண்டது.

#### பூஞ்சை நோய்கள்

கரோனா இரண்டாம் அலையின் முடிவில், கறுப்புப் பூஞ்சை நோய்த் தொற்று (மியூகோமைகோசிஸ்) அதிகரிக்கத் தொடங்கி பேசுபொருளானது. இந்தியாவில் இதனால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 30,000க்கு மேல் சென்றது. சில வட மாநிலங்களில் 'கறுப்புப் பூஞ்சை' யைப் போலவே 'வெள்ளைப் பூஞ்சை' (Candidiasis) நோயும் பரவத் தொடங்கியது. மத்தியப் பிரதேசத்தில் கரோனாவிலிருந்து மீண்டவருக்குப் பச்சை பூஞ்சை நோய்ப் பாதிப்பு ஏற்பட்டது. கரோனாவைவிட ஆபத்தான இந்த நோய்கள் இந்தியாவில் பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தவில்லை என்பதே ஓர் ஆறுதல்.

**நீடிக்கும் கோவிட்**

பொதுவாக, நோயின் தீவிரத்தைப் பொறுத்து இரண்டு முதல் மூன்று வாரங்களுக்குள் கரோனாவினால் பாதிக்கப்பட்டவர்கள் மீண்டு விட்டனர். நோய்த் தொற்றின் கடுமையான கட்டத்துக்குப் பிறகும் சிலருக்கு மட்டும் கரோனா பாதிப்புகள் தொடர்ந்தன. இது 'நீடிக்கும் கோவிட்' என அழைக்கப்பட்டது. கரோனாவின் தீவிர பாதிப்பிலிருந்து மீண்ட பலரும், இதன் பாதிப்புக்கு ஆளாகினர். 'நீடிக்கும் கோவிட்' டை மருத்துவ உலகம் கூடுதல் கவனத்துடன் கையாண்டது. தமிழக அரசும் சென்னை கிண்டி அரசு கரோனா மருத்துவமனையில் 'கோவிட்டுக்குப் பிந்தைய சிகிச்சை மைய' த்தை நிறுவியது.

**இந்தியாவில் தடுப்பூசி**

இந்தியாவில் 'கோவிஷீல்டு', 'கோவேக்ஸின்' ஆகிய இரண்டு தடுப்பூசிகளுக்கு முதலில் அனுமதி அளிக்கப்பட்டது. தடுப்பூசி போடும் பணிகள் ஜனவரி 16இல் தொடங்கப்பட்டன. ஆரம்பத்தில் தடுப்பூசி குறித்துப் பரவிய சந்தேகங்களும் வதந்திகளும் தடுப்பூசித் திட்டத்துக்குப் பெரும் சவாலாக இருந்தன. இருப்பினும் கரோனா உயிரிழப்புகளால் மக்களிடையே ஏற்பட்ட அச்சம், அரசின் முன்னெடுப்புகள் போன்றவை தடுப்பூசிகளுக்குத் தட்டுப்பாடு நிலவும் வகையில் நிலைமையை மாற்றியமைத்தன. தற்போது இந்தியாவில் 84 கோடி பேருக்கு ஒரு டோஸ் தடுப்பூசி போடப்பட்டுள்ளது, 60 கோடி பேருக்கு இரண்டு டோஸ் போடப்பட்டுள்ளது.

**கரோனா வைரஸுக்கு மாத்திரைகள்**

கரோனாவுக்கான சிகிச்சையில் புதிதாக இரண்டு மாத்திரைகள் வெளியாகியுள்ளன. அட்லாண்டாவில் உள்ள எமோரி பல்கலைக்கழக ஆய்வாளர்களால் உருவாக்கப்பட்ட 'மோல்னுபிரவிர்' (Molnupiravir). மெர்க் நிறுவனம், ரிட்ஜ்பேக் பயோதெரபியூடிக்ஸ் நிறுவனத்துடன் இணைந்து தயாரித்த இந்த மாத்திரைக்கு பிரிட்டன் அரசு அவசரகால பயன்பாட்டுக்கு அனுமதி அளித்தது. இரண்டாவது, பைசர் நிறுவனம் தயாரித்த 'பேக்ஸ்லோவிட்' (Paxlovid). இவை கரோனா தொற்றை ஆரம்பநிலையிலேயே தடுத்து, தொற்றாளருக்கு இறப்பு ஏற்படுவதைப் பெருமளவு தவிர்த்துவிடும் ஆற்றல் கொண்டவை.

**ஒமைக்ரான் கரோனா**

இந்தியாவில் கண்டறியப்பட்ட, இரண்டாம் அலைக் குக் காரணமான டெல்டா அல்லது பி.1.617.2 வேற்றுரு வில் ஏற்பட்ட மாறுபாடு காரணமாக உருவான புதிய டெல்டா பிளஸ் வேற்றுரு கண்டறியப்பட்டது. இதனால் அக்டோபரில் மூன்றாம் அலை ஏற்படக்கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்ட நிலையில், டெல்டா பிளஸ் வேற்றுருவின் பரவல் இந்தியாவில் குறைவாகவே இருந்தது. இந்த நிலையில், நவம்பர் மாத இறுதியில் தென்னாப்பிரிக்காவில் கண்டறியப்பட்ட 'ஒமைக்ரான்' (Omicron) எனும் புதிய கரோனா வேற்றுருவம் (Variant) மக்களை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது.

**மருத்துவ நோபல் 2021**

வெப்பநிலை, தொடுதல் ஆகியவற்றினால் உடலில் நடக்கும் மாற்றங்களுக்குக் காரணமாக இருக்கும் உணரிகளைக் கண்டறிந்த தற்காக அமெரிக்காவைச் சேர்ந்த விஞ்ஞானிகள் ஆர்டெம் பாட்டபூட்டியான், டேவிட் ஜூலியஸ் ஆகிய இருவரும் இந்த ஆண்டு மருத்துவத்துக்கான நோபல் பரிசைப் பெற்றார்கள். வெப்பம், குளிர், இயந்திர சக்தி போன்றவை, நம் உடலின் நரம்பு மண்டலத்தில் உணர்ச்சித் தூண்டலை எவ்வாறு ஏற்படுத்துகின்றன என்பது குறித்த இவர்களின் ஆராய்ச்சி, வலி நிவாரணி மருந்துகள் உருவாக்கத்தில் புதிய பாதையைக் காட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**இன்சுலின், பி.சி.ஜி. தடுப்பூசிக்கு 100 வயது**

நீரிழிவு நோயை எதிர்கொள் வதில் இன்சுலினின் பங்களிப்பு அளப்பரியது. முதலாம் வகை நீரிழிவு நோயாளிகளுக்கு இன்சுலின்தான் ஒரே மருந்து. ஆயுள் முழுவதும் இன்சுலின் போட்டுக் கொண்டவர்கள் 90 வயது வரை வாழ்ந்துள்ளனர். பி.சி.ஜி. தடுப்பூசி குழந்தைகளுக்கு ஏற்படும் காசநோயை மட்டுமல்லாமல் பலதரப்பட்ட வைரஸ் நோய்கள், சுவாசக் கோளாறுகள், வயிற்றுக் கோளாறுகள் போன்றவற்றையும் தடுக்கும். நெஞ்சகக் காசநோயைத் தடுப்பதைவிட மூளைக் காசநோய் போன்ற மோசமான காசநோய் வகைகளைப் பெரிதும் தடுக்கும். இது ஏற்கெனவே செலுத்தப்பட்ட நாடுகளில் கரோனா சார்ந்த இறப்பும் குறைவாக உள்ளது.

**நோரோ, ஜிகா, பறவைக் காய்ச்சல்**

2021இன் தொடக்கத்தில், வட இந்திய மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களில் பறவைக் காய்ச்சல் திடீரென வீரியத்துடன் பரவியது. பெரும் எண்ணிக்கையிலான பண்ணைக் கோழிகள் கொல்லப்பட்டன. ஏடிஸ் எஜிப்தி கொசுக்கள் கடிப்பதால் பரவும் ஜிகா வைரஸால், கேரளத்தில் 20–க்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டனர். வயநாடு மாவட்டத்தில் பூக்கோடு கிராமத்தில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மாணவர்களில் 13 பேருக்குத் திடீரென்று வாந்தி, வயிற்றுப்போக்கு, வயிற்றுவலி ஆகியவை ஏற்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களுக்கு நோரோ வைரஸ் பாதிப்பு உறுதியானது. கரோனா வைரஸ் ஆட்டிப்படைத்துக்கொண்டிருந்த நேரத்தில் இந்த வைரஸ்களும் பரவியது அச்சத்தை அதிகரித்தது.

---

**6. வடகிழக்குப் பருவமழை காலம் நிறைவு: தமிழகத்தில் இயல்பைவிட 59 சதவீதம் மழை அதிகம்**

வடகிழக்குப் பருவமழை காலம் வெள்ளிக்கிழமையுடன் (டிச.31) நிறைவடைந்துள்ளநிலையில், தமிழகத்தில் இயல்பை விட 59 சதவீதம் அதிக மழை பதிவாகியுள்ளது. 22 மாவட்டங்களில் மிக அதிக மழையும், 14 மாவட்டங்களில் அதிக மழையும் பதிவாகியுள்ளது. அதிகபட்சமாக, விழுப்புரத்தில் இயல்பை விட 119 சதவீதமும், திருப்பத்தூரில் 115 சதவீதமும் அதிக மழை பெய்துள்ளது.

வடகிழக்குப் பருவமழை:

தமிழகத்துக்கு அதிக மழை பொழிவைத் தரும் வடகிழக்குப் பருவமழை அக்டோபா் முதல் டிசம்பா் வரையும் நீடிக்கும்.

நிகழாண்டில் (2021) வடகிழக்குப் பருவமழை தாமதமாக அக்டோபா் 25-ஆம் தேதி தொடங்கியது. வங்கக்கடலில் அடுத்தடுத்து உருவான காற்றழுத்தத் தாழ்வுப் பகுதிகள், தமிழக கடலோரத்தில் நிலைகொண்ட வளிமண்டல மேலடுக்கு சுழற்சிகள் ஆகியவை காரணமாக, தமிழகம், புதுச்சேரியில் பெரும்பாலான இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்து வந்தது. ஒரு சில இடங்களில் பலத்த மழையும், ஓரிரு இடங்களில் அதி பலத்த மழையும் கொட்டித்தீா்த்தது. குறிப்பாக, நவம்பா் மாதத்தில், பல மாவட்டங்களில் சராசரியை விட அதிக மழை பெய்தது. இதன்பிறகு, டிசம்பா் 1-ஆம் தேதியில் இருந்து மழை குறையத்தொடங்கியது. டிசம்பா் மாத இறுதியில் சில மாவட்டங்களில் மழை பெய்துவந்தது. அதிலும், , சென்னையில் பல இடங்களில் டிசம்பா் 30-ஆம் தேதி பலத்தமழை பெய்தது. தற்போது, வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக, சில மாவட்டங்களில் மிதமானதுமுதல் பலத்தமழை மழை பெய்கிறது.

பருவமழை காலம் நிறைவு:

இந்நிலையில், 2021-ஆம் ஆண்டுக்கான வடகிழக்குப் பருவமழை காலம் வெள்ளிக்கிழமையுடன்(டிச.31) நிறைவுபெற்றது. இந்தக் காலக்கட்டத்தில் தமிழகத்தில் இயல்பைவிட 59 சதவீதம் அதிக மழை கிடைத்துள்ளது. வடகிழக்குப் பருவமழையின் இயல்பான அளவு 448.0 மி.மீ. தற்போது வரை 711.6 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

மிக அதிகமழை:

அரியலூா், செங்கல்பட்டு, சென்னை, கோயம்புத்தூா், கடலூா், ஈரோடு, கள்ளக்குறிச்சி, காஞ்சிபுரம், கன்னியாகுமரி, கரூா், நாமக்கல், பெரம்பலூா், ராணிப்பேட்டை, தென்காசி, தேனி, திருநெல்வேலி, திருப்பத்தூா், திருவள்ளூா், திருவண்ணாமலை, திருச்சிராப்பள்ளி, வேலூா், விழுப்புரம் ஆகிய 22 மாவட்டங்களில் மிக அதிக மழை பதிவாகியுள்ளது. குறிப்பாக, விழுப்பரத்தில் இயல்பைவிட 119 சதவீதமும், திருப்பத்தூரில் 115 சதவீதமும், கன்னியாகுமரி மாவட்டத்தில் 106 சதவீதமும் அதிக மழை பெய்துள்ளது.

அதிகமழை:

தருமபுரி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, மயிலாடுதுறை, நாகப்பட்டினம், நீலகிரி, புதுக்கோட்டை, சேலம், தஞ்சாவூா், சிவகங்கை, திருப்பூா், திருவாரூா், தூத்துக்குடி, விருதுநகா் ஆகிய 14 மாவட்டங்களில் இயல்பை விட அதி மழை பெய்துள்ளது.

இயல்பு மழை:

மதுரை, ராமநாதபுரத்தில் இயல்பான மழையே பதிவாகியுள்ளது.

47 சதவீதம் அதிகம்

இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மைய அதிகாரி ஒருவா் கூறியது: தமிழகத்தில் கடந்த 2015-ஆம் ஆண்டு மொத்த மழை அளவு பொருத்தவரை சராசரியாக 922 மி.மீ. மழை பெய்யவேண்டும். ஆனால், 1,214 மி.மீ. மழை பதிவாகியது. இது, 32 சதவீதம் அதிகம்.

2021-ஆம் ஆண்டில் மொத்த (ஆண்டு) மழை அளவு பொருத்தவரை, இயல்பை விட 47 சதவீதம் அதிகம் பதிவாகியுள்ளது. ஆண்டின் இயல்பான மழை அளவு 922 மி.மீ. ஆனால், 1,379 மி.மீ. மழை கிடைத்துள்ளது. ஆகவே, 2015-ஆம் ஆண்டை காட்டிலும் 2021-இல் அதிக மழை கிடைத்துள்ளது என்றாா் அவா்.

சென்னையில்... :

வடகிழக்கு பருவமழை காலத்தில் சென்னையில் வழக்கமான மழை அளவு 784 மி.மீ. தற்போதுவரை 1,360 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. இது, இயல்பை விட 74 சதவீதம் அதிகம். இருப்பினும் 2015 -ஆம் ஆண்டு வடகிழக்கு பருவமழையுடன் ஒப்பிடும்போது, இந்த மழை அளவு குறைவாகும்.

---

### 7. 'உலக மக்கள்தொகையில் 7.4 கோடி அதிகரிப்பு'

கடந்த 2021-ஆம் ஆண்டில் உலக மக்கள்தொகையில் 7.4 கோடி அதிகரித்துள்ளதாக அமெரிக்க மக்கள்தொகை கணக்கெடுப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

2022-ஆம் ஆண்டு புத்தாண்டு தினத்தின்போது உலக மக்கள்தொகை 780 கோடியாக இருக்கும். இது, 2012-ஆம் ஆண்டு புத்தாண்டு தினத்தைவிட 0.9 சதவீதம் அதிகமாகும். அதன்படி, கடந்த ஓராண்டில் மட்டும் உலக மக்கள்தொகையில் 7.4 கோடி அதிகரித்துள்ளது.

இந்தப் புத்தாண்டு தினத்திலிருந்து உலகம் முழுவதும் ஒவ்வொரு 10 விநாடிக்கு 43 குழந்தைகள் பிறக்கும்; 20 போ் இறப்பாா்கள் என்று எதிா்பாா்க்கப்படுகிறது.

கடந்த ஆண்டில் மட்டும் அமெரிக்காவில் சுமாா் 7.07 லட்சம் போ் அதிகரித்து, 2022-ஆம் ஆண்டு புத்தாண்டு தினத்தன்று நாட்டின் மக்கள் தொகை 33.24 கோடியாக இருக்கும் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

### 8. ரூ.500 கோடி மதிப்புள்ள பச்சை மரகதலிங்கம் மீட்பு: சிலை கடத்தல் தடுப்புப் பிரிவு விசாரணை

தஞ்சாவூரில் ரூ.500 கோடி மதிப்புள்ள பச்சை மரகத லிங்கத்தை சிலை கடத்தல் தடுப்புப் பிரிவு போலீஸாா் பறிமுதல் செய்து, விசாரணை செய்து வருகின்றனா்.

இது குறித்து போலீஸ் தரப்பில் கூறப்பட்டதாவது:

தஞ்சாவூா் அருளானந்த நகா் 7ஆவது குறுக்குத் தெருவில் என்.ஏ.சாமியப்பன் என்பவா் வீட்டில் தொன்மையான சிலைகள் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாக சிலை கடத்தல் தடுப்புப் பிரிவுக்கு கடந்த வியாழக்கிழமை ரகசியத் தகவல் கிடைத்தது.

அந்த தகவலின் அடிப்படையில் சிலை கடத்தல் தடுப்புப் பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளா்கள் இரா.ராஜாராம், ப.அசோக் நடராஜன் தலைமையில் அப்பிரிவு போலீஸாா் அந்த வீட்டில் திடீா் சோதனை செய்தனா். அப்போது அங்கு எந்த சிலைகளும்

கண்டெடுக்கப்படவில்லை. இதையடுத்து அங்கிருந்த சாமியப்பனின் மகன் அருண் பாஸ்கா் என்பவரிடம் விசாரணை செய்தனா்.

ரூ.500 கோடி மதிப்பு:

விசாரணையில், தனது தந்தை சாமியப்பனிடம் தொன்மையான பச்சை மரகதலிங்கம் ஒன்று இருப்பதாகவும், அது தற்போது அந்த பகுதியில் உள்ள ஒரு வங்கியின் பாதுகாப்பு பெட்டகத்தில் வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தாா். இதையடுத்து அருண் பாஸ்கா் உதவியுடன் வங்கிப் பாதுகாப்பு பெட்டகத்தில் இருந்த அந்த பச்சை மரகத லிங்கத்தை சிலை கடத்தல் தடுப்புப் பிரிவினா் மீட்டனா்.

அந்த சிலை, சாமியப்பனிடம் எப்படி கிடைத்தது என அருண் பாஸ்கரிடம் விசாரணை மேற்கொண்டபோது, அது தொடா்பாக எந்தவித ஆவணங்களும் தங்களிடம் இல்லை என்று அவா் தெரிவித்தாா். இதைத் தொடா்ந்து மீட்கப்பட்ட மரகத லிங்கத்தின் மதிப்பு குறித்து அங்கீகாரம் பெற்ற மரகதக்கல் மதிப்பீட்டாளா்களிடம் சிலை கடத்தல் தடுப்பு பிரிவினா் கொடுத்து ஆய்வு செய்தனா். அப்போது அந்த சிலையின் சா்வதேச மதிப்பு ரூ.500 கோடி இருக்கும் என மதிப்பீட்டாளா்கள் தெரிவித்தனா்.

தருமபுரம் ஆதீன மடம்:

இந்த பச்சை மரகத லிங்கம் மீட்பு தொடா்பாக சென்னையில் சிலை கடத்தல் தடுப்புப் பிரிவு ஏடிஜிபி ஜெயந்த் முரளி செய்தியாளா்களுக்கு வெள்ளிக்கிழமை அளித்த பேட்டி:

மீட்கப்பட்ட பச்சை மரகதலிங்கம் சிலை குறித்து விசாரணை நடத்தப்பட்டதில், அந்த சிலை நாகப்பட்டினம் மாவட்டம் திருக்குவளையில் உள்ள தருமபுரம் ஆதீன மடத்துக்கு சொந்தமான தியாகராஜா் கோயிலில் இருந்து கடந்த 2016ஆம் ஆண்டு அக்டோபா் மாதம் 9–ஆம் தேதி திருடப்பட்டது என்பது தெரியவந்துள்ளது.

இது தொடா்பாக தருமபுர ஆதீன மடத்தின் கண்காணிப்பாளா் சௌரிராஜன், அப்போது திருக்குவளை காவல் நிலையத்தில் புகாா் செய்துள்ளாா். புகாரின் பேரில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, துப்பு துலங்காமல் இருந்துள்ளது. கடந்த 5 ஆண்டுகளாக துப்பு துலங்காமல் இருந்த இந்த வழக்கில், இப்போது துப்பு துலங்கப்பட்டு, சிலை மீட்கப்பட்டுள்ளது.

இந்த சிலையை வைத்திருந்த சாமியப்பன், தற்போது மருத்துவமனையில் இருக்கிறாா். அவா் குணம் அடைந்தவுடன் வழக்கு விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைப்பாணை அனுப்பப்படும். அவரிடம் விசாரணை நடத்திய பின்னா், சிலை திருட்டு குறித்த முழு விவரமும் காவல்துறைக்கு கிடைக்கும் என்றாா் அவா்.

பேட்டியின்போது அவருடன் சிலை கடத்தல் தடுப்புப் பிரிவு எஸ்.பி. பொன்னி உடன் இருந்தாா். இந்த வழக்கில் சிறப்பாக செயல்பட்ட சிலை கடத்தல் தடுப்புப் பிரிவு போலீஸாருக்கு ஏடிஜிபி ஜெய்ந்த் முரளி, வெகுமதி அளித்தாா்.

இந்த வழக்குத் தொடா்பாக சிலை கடத்தல் தடுப்புப் பிரிவு நடத்திய முதல் கட்ட விசாரணையில், பச்சை மரகதலிங்கம் சோழா் காலத்தில் கம்போடியாவில் இருந்து கொண்டு வரப்பட்டு தருமபுரம் ஆதீன மடத்துக்கு வழங்கப்பட்டது என்பது தெரியவந்துள்ளது. மேலும் சோழ மன்னா்கள், போரில் தங்களுக்கு கிடைத்த வெற்றியின் அடையாளமாக அந்த மடத்துக்கு வழங்கியிருப்பதாகவும் சிலை கடத்தல் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனா்.

---

**9. யு–19 ஆசிய கோப்பையை தக்கவைத்தது இந்தியா: 8–ஆவது முறையாக சாம்பியன் ஆகி சாதனை**

பத்தொன்பது வயதுக்கு உள்பட்டோருக்கான (யு–19) ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா 8–ஆவது முறையாக சாம்பியன் ஆகி சாதனை படைத்துள்ளது.

துபையில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் இந்தியா 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் இலங்கையை வீழ்த்தி கோப்பையை வென்றது. யு–19 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி, வரும் ஜனவரி 14–ஆம் தேதி மேற்கிந்தியத் தீவுகளில் தொடங்க இருக்கும் நிலையில், இந்தப் பட்டம் இந்திய அணிக்கு உத்வேகம் அளிப்பதாக இருக்கும்.

50 ஓவா்கள் கொண்ட இந்த ஆசிய போட்டியில், இறுதி ஆட்டத்தின்போது கனமழை பெய்ததை அடுத்து முதலில் ஆடிய இலங்கைக்கான ஓவா்கள் 38–ஆக குறைக்கப்பட்டது. அதில் அந்த அணி 9 விக்கெட் இழப்புக்கு 106 ரன்கள் அடித்தது. பின்னா் 'டக்வொா்த் லீவிஸ்' முறையில் இந்திய அணிக்கு 32 ஓவா்களில் 102 ரன்கள் இலக்காக நிா்ணயிக்கப்பட்டது. இந்தியா 21.3 ஓவா்களில் 1 விக்கெட் இழப்புக்கு 104 ரன்கள் அடித்து வென்றது.

முன்னதாக டாஸ் வென்ற இலங்கை பேட்டிங்கை தோ்வு செய்தது. அணியின் தொடக்க வீரா் சமிந்து விக்கிரமசிங்கே 2 ரன்களுக்கு வெளியேற, உடன் வந்த ஷெவோன் டேனியல் 6 ரன்களுக்கு நடையைக் கட்டினா். 3–ஆவது வீரராக வந்த அஞ்சலா பண்டாரா 1 பவுண்டரியுடன் 9 ரன்கள் சோ்க்க, மிடில் ஆா்டரில் சதீஷா ராஜபட்ச 1 பவுண்டரியுடன் 14, பவன் பதிராஜா 4, ரனுதா சோமரத்னே 1 பவுண்டரியுடன் 7 ரன்களுக்கு ஆட்டமிழந்தனா்.

இவ்வாறாக இலங்கை 33 ஓவா்களில் 7 விக்கெட் இழப்புக்கு 74 ரன்கள் எடுத்திருந்த நிலையில் கனமழை காரணமாக ஆட்டம் சுமாா் 2 மணி நேரங்களுக்கு தடைப்பட்டது.

பின்னா் ஆட்டம் தொடங்கியபோது அந்த அணிக்கான ஓவா்கள் 38–ஆக குறைக்கப்பட்டது. பின்னா் தொடங்கிய ஆட்டத்தில் கேப்டன் துனித் வெலாலகே 1 பவுண்டரியுடன் 9, ரவீன் டி சில்வா 1 பவுண்டரியுடன் 15, மதீஷா பதிரானா 1 பவுண்டரியுடன் 14 ரன்களுக்கு வீழ்ந்தனா். இறுதியில் யாசிரு ரோட்ரிகோ 2 பவுண்டரிகளுடன் 19 ரன்களுக்கு ஆட்டமிழக்காமல் இருந்தாா்.

இந்திய பௌலிங்கில் விக்கி ஆஸ்த்வல் 3, கௌஷல் தாம்பே 2, ராஜ்வா்தன், ரவிகுமாா், ராஜ் பாவா ஆகியோா் தலா 1 விக்கெட் எடுத்தனா்.

பின்னா் 102 ரன்களை இலக்காகக் கொண்டு ஆடிய இந்திய அணியில், தொடக்க வீரா்களில் ஒருவரான ஹா்னூா் சிங் 5 ரன்களுக்கு வெளியேறினாா். உடன் வந்த அங்க்ரிஷ் ரகுவன்ஷி 7 பவுண்டரிகளுடன் 56,

ஷேக் ரஷீது 2 பவுண்டரிகளுடன் 31 ரன்கள் சேர்த்து ஆட்டமிழக்காமல் அணியை வெற்றிக்கு வழி நடத்தினர். இலங்கை தரப்பில் யாசிரு ரோட்ரிகோ 1 விக்கெட் எடுத்திருந்தார்.

சுருக்கமான ஸ்கோர்

இலங்கை – 106/9

யாசிரு ரோட்ரிகோ 19*

ரவீன் டி சில்வா 15

மதிஷா பதிரானா 14

பந்துவீச்சு

விக்கி ஆஸ்த்வல் 3/11

கௌஷல் தாம்பே 2/23

ரவி குமார் 1/17

இந்தியா– 104/1 (இலக்கு 102)

அங்க்ரிஷ் ரகுவன்ஷி 56*

ஷேக் ரஷீது 31*

ஹர்னூர் சிங் 5

பந்துவீச்சு

யாசிரு ரோட்ரிகோ 1/12

டிரெவீன் மேத்யூ 0/2

சமிந்து விக்ரமசிங்கே 0/14

ஆதிக்கம் செலுத்தும் இந்தியா...

யு–19 ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியாவே ஆதிக்கம் செலுத்துகிறது. இத்துடன் 9 முறை நடைபெற்றுள்ள இப்போட்டியில் இந்தியா 8–ஆவது முறையாக சாம்பியன் ஆகியிருக்கிறது. ஆப்கானிஸ்தான் சாம்பியன் ஆன 2017–இல் இந்தியா நாக் அவுட் சுற்றுக்கு தகுதிபெறவில்லை.

முன்னதாக, கடந்த 2012–ஆம் ஆண்டு இந்தியா – பாகிஸ்தான் மோதிய இறுதி ஆட்டம் டை ஆனதை அடுத்து, கோப்பை இரு அணிகளுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது.

ஆண்டு இடம் சாம்பியன் ரன்னர்–அப்

1989 வங்கதேசம் இந்தியா இலங்கை

2003 பாகிஸ்தான் இந்தியா இலங்கை

2012 மலேசியா இந்தியா – பாகிஸ்தான்

2013/14 ஐக்கிய அரபு அமீரகம் இந்தியா பாகிஸ்தான்

2016 இலங்கை இந்தியா இலங்கை

2017 மலேசியா ஆப்கானிஸ்தான் பாகிஸ்தான்

2018 வங்கதேசம் இந்தியா இலங்கை

2019 இலங்கை இந்தியா வங்கதேசம்

2021 ஐக்கிய அரபு அமீரகம் இந்தியா இலங்கை

---

**10. உலக பிளிட்ஸ் செஸ்: கோனெரு ஹம்பிக்கு 5–ஆம் இடம்**

உலக பிளிட்ஸ் செஸ் சாம்பியன்ஷிப் மகளிர் பிரிவில் இந்தியாவின் கோனெரு ஹம்பி 5–ஆம் இடமும், ஆர். வைஷாலி, 14–ஆவது இடமும் பிடித்து போட்டியை நிறைவு செய்தனர்.

போலந்தின் வார்சா நகரில் நடைபெற்ற இப்போட்டியில் மொத்தம் விளையாடப்பட்ட 17 சுற்றுகளின் முடிவில் ஹம்பி 11.5 புள்ளிகளும், வைஷாலி 10.5 புள்ளிகளும் பெற்றனர். மொத்த சுற்றுகளில் ஹம்பி 10 வெற்றிகள், 3 டிராக்கள், 4 தோல்விகளை பதிவு செய்துள்ளார். வைஷாலி 10 வெற்றிகள், ஒரு டிரா, 6 தோல்விகளை பதிவு செய்திருக்கிறார்.

இதர இந்திய வீராங்கனைகளில் வந்திகா அகர்வால் 9.5 புள்ளிகளுடன் 30–ஆவது இடமும், பத்மினி ரௌத் 8.5 புள்ளிகளுடன் 55–ஆவது இடமும் பிடித்தனர்.

ஓபன் பிரிவு: பிளிட்ஸ் சாம்பியன்ஷிப்பின் ஓபன் பிரிவில் மொத்தம் நடைபெற்ற 21 சுற்றுகளின் முடிவில் இந்தியாவின் விதித் குஜராத்தி 13 புள்ளிகள் பெற்று 18–ஆவது இடத்துடன் நிறைவு செய்தார். 10 சுற்றுகளில் வெற்றி பெற்ற அவர், 6 சுற்றுகளை டிரா செய்து, 5 சுற்றுகளில் தோல்வி கண்டார்.

மற்றொரு இந்தியரான நிஹல் சரினும் 13 புள்ளிகள் பெற்று 19–ஆவது இடம் பிடித்தார். அவர் 9 சுற்றுகளில் வென்று, 8 சுற்றுகளை டிரா செய்து, 4 சுற்றுகளில் தோல்வியை சந்தித்தார். இதர இந்தியர்களில் அர்ஜூன் எரிகாய்சி, குகேஷ் ஆகியோர் தலா 12.5 புள்ளிகளுடன் முறையே 24 மற்றும் 32–ஆம் இடம் பிடித்தனர். ஹர்ஷா பாரதகோடி 11 புள்ளிகளுடன் 68–ஆவது இடம் பிடித்தார்.

ஹரிகிருஷ்ணா, ரௌனக் சத்வானி, மித்ரபா குஹா ஆகியோர் தலா 10.5 புள்ளிகளுடன் முறையே 84, 86, 89–ஆவது இடங்களை எட்டினர். சுனில்தத் நாராயணன் 10 புள்ளிகளுடன் 112–ஆவது இடம் பிடிக்க, அபிமன்யு புரானிக், ஆதித்யா மிட்டல் ஆகியோர் தலா 9 புள்ளிகளுடன் முறையே 131 மற்றும் 141–ஆவது இடங்களைப் பிடித்தனர். சங்கல்ப் குப்தா 8.5 புள்ளிகளுடன் 150–ஆவது இடம் பிடித்தார்.

சாம்பியன்கள்: மகளிர் பிரிவில் கஜகஸ்தானின் பிபிசரா அசௌபயேவா 14 புள்ளிகளுடன் சாம்பியன் ஆக, ரஷியாவின் அலெக்ஸாண்ட்ரா கொஸ்டெனியுக் 12.5 புள்ளிகளுடன் 2–ஆம் இடமும், அதே நாட்டைச் சேர்ந்த வாலென்டினா குனினா 12 புள்ளிகளுடன் 3–ஆம் இடமும் பிடித்தனர்.

ஓபன் பிரிவில் பிரான்ஸின் மேக்ஸிம் வச்சியர் 15 புள்ளிகளுடன் சாம்பியன் ஆக, போலந்தின் ஜேன் கிறிஸ்டோஃப் டுடா, பிரான்ஸின் அலிரிஸா ஃபிரௌஸ்ஜா ஆகியோரும் அதே புள்ளிகளுடன் முறையே 2 மற்றும் 3–ஆம் இடங்களைப் பிடித்தனர்.

---

**11. 2021–ஆம் ஆண்டில் டாலருக்கு நிகரான ரூபாய் மதிப்பு 1.67% சரிவு**

2021–ஆம் ஆண்டில் அமெரிக்க டாலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு 1.67 சதவீதம் குறைந்துள்ளது.

இதுகுறித்து வர்த்தகர்கள் கூறியது:

கச்சா எண்ணெய் விலை உயர்வு, அமெரிக்க கடன்பத்திரங்களுக்கான வட்டி விகிதம் உயர்த்தப்படும்

என்ற எதிர்பார்ப்பு போன்ற நிகழ்வுகள் கடந்த ஆண்டில் ரூபாய் மதிப்பு சரிவுக்கு முக்கிய காரணங்களாக பார்க்கப்பட்டன. கடந்த ஆண்டில் மட்டும் அமெரிக்க டாலருக்கு நிகரான ரூபாய் மதிப்பு 122 காசுகள் அதாவது 1.67 சதவீதம் இழப்பை சந்தித்துள்ளது.

அந்நியச் செலாவணி சந்தையில் 2021-ஆம் ஆண்டின் கடைசி வர்த்தக நாளான வெள்ளிக்கிழமை நடைபெற்ற வர்த்தகத்தில் டாலருக்கு நிகரான ரூபாய் மதிப்பு 13 காசுகள் உயர்ந்து 74.29-இல் நிலைபெற்றது. வார அடிப்படையில் ரூபாய் மதிப்பு 74 காசுகள் ஆதாயத்தை ஈட்டியுள்ளது என வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

---

**12. விவசாயிகள் உதவித் தொகை திட்டம்: தமிழ்நாட்டுக்கு ரூ. 738 கோடி**

இந்தியாவின் முன்னேற்றத்தை கரோனா நோய்த்தொற்றால் தடுக்க முடியாது என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பிரதமரின் விவசாயிகள் உதவித்தொகை திட்டத்தின் கீழ், ஆண்டுதோறும் மூன்று தவணைகளாக ரூ.2,000 வீதம் மொத்தம் ரூ.6,000 உதவித்தொகையை விவசாயிகளுக்கு மத்திய அரசு வழங்கி வருகிறது. இந்த உதவித்தொகை விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்படுகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ், பத்தாவது தவணையாக 10.09 கோடிக்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு ரூ.20,946 கோடி உதவித்தொகையை விடுவிக்கும் நிகழ்ச்சி காணொலி வழியாக சனிக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் பிரதமர் மோடி கலந்துகொண்டு விவசாயிகள் உதவித்தொகை, 1.24 லட்சம் விவசாயிகள் பலனடையும் வகையில் சுமார் 351 உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளுக்கு ரூ.14 கோடிக்கும் அதிகமான மானியம் ஆகியவற்றை விடுவித்தார்.

இந்நிகழ்ச்சியில் இவ்வாண்டின் முதல் உரையாக பிரதமர் மோடி பேசியதாவது:

விவசாயிகள் உதவித்தொகை திட்டம் உழவர்களுக்கு மிகப் பெரிய அளவில் உறுதுணையாக உள்ளது. இந்த உதவித்தொகைத் தவணைகளை, எந்தவொரு இடைத்தரகரின் இடையூறும் இல்லாமல் உரிய நேரத்தில் விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் மத்திய அரசு செலுத்தியுள்ளது. இந்தத் திட்டம் தரமான விதைகளையும் உரங்களையும் வாங்க விவசாயிகளுக்கு உதவுகிறது.

உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளதன் மூலம் கூட்டு வலிமையின் சக்தியை சிறு விவசாயிகள் உணர்கின்றனர். அந்த அமைப்புகள் மூலம் பேரம் பேசும் திறன், வேளாண் விளைபொருள்கள் அளவு, புதிய கண்டுபிடிப்புகள், இடர்ப்பாடுகளைக் கண்டறிந்து கட்டுப்படுத்துவது, சந்தை நிலைமைக்கு ஏற்ப தகவமைத்துக் கொள்வது அதிகரித்துள்ளது. அந்த அமைப்புகள் மூலம் இடுபொருள்களை மொத்தமாக வாங்கவும், தங்கள் விளைபொருளை சில்லறை விற்பனை செய்யவும் விவசாயிகளால் முடிகிறது.

தற்போது 'ஒரு மாவட்டம் ஒரு தயாரிப்பு' போன்ற திட்டங்களால் விவசாயிகளால் பலனடைய முடிகிறது. அவர்களுக்கு தேசிய மற்றும் உலக அளவிலான சந்தைகளின் கதவுகள் திறக்கின்றன.

நுண்ணீர் பாசனத்தின் கீழ் 60 லட்சம் ஹெக்டேர் நிலம்: கரோனா நோய்த்தொற்று பாதிப்பைத் தாண்டியும் உணவு தானிய உற்பத்தி 30 கோடியை எட்டியுள்ளது. கடந்த 6-7 ஆண்டுகளில் பால் உற்பத்தி சுமார் 45 சதவீதம் அதிகரித்துள்ளது.

குறைந்தபட்ச ஆதரவு விலையில் கொள்முதல் செய்யப்பட்ட உணவு தானியங்கள் சாதனை அளவை எட்டியுள்ளது. சுமார் 60 லட்சம் ஹெக்டேர் விளைநிலம் நுண்ணீர் பாசனத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், தவணைக் கட்டணமாக (ப்ரீமியம்) ரூ.21,000 கோடி மட்டுமே கிடைத்தபோதிலும் ரூ.1 லட்சம் கோடிக்கும் அதிகமாக இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

பால் பண்ணைத் துறை உள்கட்டமைப்பை வலுப்படுத்த காமதேனு ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது.

இயற்கை விவசாயத்தில் மிகப் பெரிய அளவில் உழவர்கள் ஈடுபட வேண்டும். ரசாயனம் இல்லாத விவசாயம்தான் மண் வளத்தைக் காப்பதற்கு பிரதான வழி. ரசாயனம் இல்லாத விளைபொருள்களுக்கும் மிகப் பெரிய தேவை நிலவுகிறது.

விவசாயத்தில் புதிய கண்டுபிடிப்புகளை மேற்கொள்ளும் பணியில் உழவர்கள் தொடர்ந்து ஈடுபட வேண்டும்.

2021-ஆம் ஆண்டு நினைவுகூரப்படும்: கரோனா நோய்த்தொற்றுக்கு எதிராக இந்தியா வலுவுடன் போராடியதற்காகவும், பல்வேறு சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டதற்காகவும் 2021-ஆம் ஆண்டு நினைவுகூரப்படும். அந்த ஆண்டில் பல்வேறு துறைகளில் சீர்திருத்தங்களின் வேகத்தை இந்திய அதிகமாக்கியதுடன் நவீன உள்கட்டமைப்பையும் உருவாக்கியது.

2021-ஆம் ஆண்டு இந்தியாவின் கலாசார பாரம்பரியத்தை வலுப்படுத்தும் ஆண்டாகவும் இருந்தது. அயோத்தியில் ராமர் கோயில் கட்டுமானப் பணிகள் தொடக்கம், காசி விஸ்வநாதர் கோயிலை மேம்படுத்துதல் உள்ளிட்ட பணிகள் இந்தியாவின் கலாசாரத்தை வலுப்படுத்தியுள்ளது.

கடந்த ஆண்டு பெண்களின் சட்டபூர்வ திருமண வயதை 21-ஆக அதிகரிப்பதற்கான நடவடிக்கை தொடங்கப்பட்டது. தேசிய பாதுகாப்பு அகாதெமியில் பயிற்சி பெறுவதற்கு பெண்களுக்கு கதவு திறக்கப்பட்டது.

இந்தியாவில் 50,000-க்கும் மேற்பட்ட ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள் செயல்படுகின்றன. அவற்றில் 10,000 நிறுவனங்கள் கடந்த 6 மாதங்களில் தொடங்கப்பட்டவை.

புத்தாண்டில் இந்தியா காலடி எடுத்துவைக்கும் தருணத்தில், கடந்த காலங்களில் செய்த சாதனைகளை தூண்டுகோலாக எடுத்துகொண்டு புதிய பயணத்தை நாடு தொடங்க வேண்டியது அவசியம்.

'அனைவருடனான, அனைவருக்குமான வளா்ச்சி, அனைவரின் முயற்சி' என்ற மந்திரத்துடன் நாடு முன்னோக்கிச் செல்கிறது.

சரியான தருணம்: இந்த ஆண்டுடன் நாடு சுதந்திரமடைந்து 75 ஆண்டுகள் நிறைவடையவுள்ளது. நாட்டின் தீா்மானங்களை நிறைவேற்ற துடிப்பான புதிய பயணத்தைத் தொடங்கவும், புத்துயிா் பெற்ற வீா்யத்துடன் முன்னோக்கிச் செல்லவும் இது சரியான தருணமாகும்.

பல்வேறு அம்சங்களில் கரோனா பரவலுக்கு முந்தைய நாள்களைவிட தற்போது இந்தியாவின் பொருளாதாரம் மேலானதாக உள்ளது.

நாட்டின் பொருளாதாரம் 8 சதவீதத்துக்கும் அதிகமாக வளா்ச்சி கண்டு வருகிறது. அந்நிய முதலீட்டை ஈா்ப்பதில் இந்தியா சாதனை அளவை எட்டியுள்ளது. நாட்டின் அந்நிய செலாவணி கையிருப்பு புதிய உச்சத்தை எட்டியுள்ள நிலையில், சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) வசூலும் அதிகரித்துள்ளது.

இந்த நிதியாண்டில் 400 பில்லியன் டாலா்களுக்கு (சுமாா் ரூ.29.80 லட்சம் கோடி) ஏற்றுமதி செய்ய இந்தியா திட்டமிட்டுள்ளது.

நாடு வளா்ச்சியடைவதற்கான வேகத்தை நாம் மேலும் அதிகப்படுத்த வேண்டும். அதற்குக் கரோனா தொற்று சவால்களை விடுத்து வருகிறது. எனினும் இந்தியாவின் முன்னேற்றத்தை கரோனாவால் தடுக்க முடியாது.

கரோனா தொற்றுக்கு எதிராக முழுமையான எச்சரிக்கை மற்றும் விழிப்புணா்வுடன் இந்தியா தொடா்ந்து போராடும். அதேவேளையில் தேச நலனும் கவனத்தில் கொள்ளப்படும் என்றாா் அவா்.

தமிழ்நாட்டுக்கு ரூ.738 கோடி:

பிரதமரின் விவசாயிகள் உதவித்தொகை திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டைச் சோ்ந்த 36,68,729 விவசாயிகளுக்கு ரூ.738.99 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

உதவித்தொகையை விடுவிக்கும் நிகழ்ச்சியில் தமிழ்நாடு, உத்தர பிரதேசம், ராஜஸ்தான், பஞ்சாப் மற்றும் உத்தரகண்ட் மாநிலங்களைச் சோ்ந்த உழவா் உற்பத்தியாளா் அமைப்புகளுடன் பிரதமா் மோடி கலந்துரையாடினாா். அப்போது தமிழ்நாட்டைச் சோ்ந்த உழவா் உற்பத்தியாளா் அமைப்பு சாா்பில் பேசிய பிரதிநிதி, அந்த அமைப்பு பெண்களுக்குச் சொந்தமானதாக இருப்பதாகவும், அதனை பெண்களே முழுமையாக நிா்வகித்து வருவதாகவும் தெரிவித்தாா்.

---

**13. சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த 25,000 கி.மீ. சைக்கிளில் பயணித்த பசுமை மனிதர்**

ராஜஸ்தானைச் சேர்ந்த வியாபாரி நர்பாத் சிங் புரோஹித் சைக்கிளில் 25,000 கி.மீ. தொலைவு பயணம் செய்து சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறார்.

ராஜஸ்தான் தலைநகர் ஜெய்ப்பூரைச் சேர்ந்த நர்பாத் சிங் புரோஹித் (34), இனிப்பு, கார வகைகளை விற்பனை செய்யும் கடையை நடத்தி வருகிறார். அவருக்கு மனைவி, ஒரு மகன், ஒரு மகள் உள்ளனர். சுற்றுச்சூழல் மீதான ஆர்வம் காரணமாக ராஜஸ்தான் மாநிலத்தில் மட்டும் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மரக்கன்றுகளை நட்டுள்ளார். தனது சொந்த செலவில் 21 குளங்களை வெட்டியுள்ளார். ராஜஸ்தான் மாநில மக்கள், அவரை 'பசுமை மனிதர்' என்று அழைக்கின்றனர்.

சுற்றுச்சூழலை பாதுகாப்பது தொடர்பாக நாடு முழுவதும் விழிப்புணர்வு ஏற்படுத்த திட்டமிட்ட நர்பாத் சிங் புரோஹித், கடந்த 2019 ஜனவரியில் காஷ்மீரின் ஜம்மு பகுதியில் இருந்து சைக்கிள் பயணத்தை தொடங்கினார். இதுவரை 23 மாநிலங்களில் 25,000 கி.மீ. தொலைவை சைக்கிளில் கடந்து மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி உள்ளார்.

தற்போது தெலங்கானாவில் முகாமிட்டுள்ள அவர் இன்னும் 5,000 கி.மீ. தொலைவு சைக்கிளில் பயணம் செய்து தனது சொந்த ஊரான ஜெய்ப்பூருக்கு செல்ல திட்டமிட்டுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறும்போது, "நான் 10% மாற்றுத் திறனாளி. எனது காலில் 38 தையல்கள் போடப்பட்டுள்ளன. சுற்றுச்சூழலை பாதுகாக்க வேண்டும் என்ற ஆர்வம் காரணமாக நாடு முழுவதும்சைக்கிளில் பயணம் செய்து மரக்கன்றுகளை நட்டு வருகிறேன். வரும் வழியெல்லாம் கிராமங்கள், நகரங்களுக்கு சென்று சுற்றுச்சூழல் குறித்து மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறேன்.

எதிர்கால சந்ததியினர் வளமாக வாழ வேண்டும்.இதற்கு ஒவ்வொரு நபரும் தன்னுடைய வாழ்நாளில் 2 மரங்களை நட்டு வளர்க்க வேண்டும். என்னுடைய மாத வருவாயில் 70 சதவீதத்தை சுற்றுச்சூழல் பாதுகாப்புக்காக செலவிடுகிறேன். சுற்றுச்சூழலை பாதுகாத்தால் மட்டுமே இயற்கை பேரழிவுகளில் இருந்து தப்பிக்க முடியும்" என்றார்.

---

**14. நம்பகத்தன்மையில் மருத்துவர்கள் முதலிடம்; நம்பகமான நாடுகளில் இந்தியாவுக்கு 2–ம் இடம்: சர்வதேச கருத்துக் கணிப்பில் தகவல்**

நம்பகத்தன்மை குறித்து சர்வதேச அளவில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில் மருத்துவர்கள் முதலிடம் பிடித்துள்ளனர். அரசியல்வாதிகள் கடைசி இடத்தில் உள்ளனர். உலகின் நம்பகமான நாடுகள் பட்டியலில் மலேசியா முதலிடத்தையும் இந்தியா 2–வது இடத்தையும் பெற்றுள்ளன.

பிரான்ஸ் தலைநகர் பாரிஸை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் இப்சாஸ் என்ற நிறுவனம் சர்வதேச அளவில் முக்கிய விவகாரங்கள் தொடர்பாக கருத்து கணிப்பு நடத்தி வருகிறது. இந்த வரிசையில் சர்வதேச அளவில் நம்பகத்தன்மை குறித்துஅந்த நிறுவனம் கருத்து கணிப்பு நடத்தி முடிவுகளை வெளியிட்டுள்ளது.

இதில் நம்பகத்தன்மைமிக்க பணியாளர்களில் மருத்துவர்கள் முதலிடம் பிடித்துள்ளனர். மருத்துவர்களுக்கு ஆதரவாக 64% பேர் வாக்களித்துள்ளனர். அதற்கு அடுத்து விஞ்ஞானிகளுக்கு 61%, ஆசிரியர்களுக்கு 55%, ராணுவ வீரர்களுக்கு 42 %,

போலீஸாருக்கு 37%, நீதிபதிகளுக்கு 34%, வழக்கறிஞர்களுக்கு 29%, தொலைக்காட்சி செய்தி வாசிப்பாளர்களுக்கு 27%,மத போதகர்களுக்கு 25%, அரசுஊழியர்களுக்கு 24%, செய்தியாளர்களுக்கு 23%, வங்கி ஊழியர்களுக்கு 23%, தொழிலதிபர்களுக்கு 23%, அமைச்சர்களுக்கு 14% பேரும்ஆதரவு அளித்துள்ளனர்.

அரசியல்வாதிக்கு கடைசி இடம்

இப்சாஸின் நம்பகத்தன்மைபட்டியலில் அரசியல்வாதிகள் கடைசி இடத்தில் உள்ளனர். அவர்களுக்கு ஆதரவாக 10% மக்கள் மட்டுமே வாக்களித்துள்ளனர்.

சர்வதேச நாடுகளில் மருத்துவர்கள் மீது அந்த நாட்டு மக்கள் எந்த அளவுக்கு நம்பிக்கை வைத்துள்ளனர் என்பது குறித்து இப்சாஸ் கருத்து கணிப்பு நடத்தியுள்ளது. இதில் பிரிட்டிஷ் மருத்துவர்களுக்கு 72% மக்கள் ஆதரவுஅளித்துள்ளனர். நெதர்லாந்து மருத்துவர்களுக்கு 71% பேரும், கனடாமருத்துவர்களுக்கு 70% பேரும்ஆதரவு தெரிவித்துள்ளனர். இந்தியாவில் மருத்துவர்கள் மீது 64% மக்கள் நம்பிக்கை வைத்துள்ளனர்.

உலகின் நம்பகமான நாடு குறித்து இப்சாஸ் நடத்திய கருத்துக் கணிப்பில் மலேசியா முதலிடத்தைப் பிடித்துள்ளது. இந்தியாவுக்கு 2-ம் இடம் கிடைத்துள்ளது. சுவீடன், நெதர்லாந்து, கனடா, அமெரிக்கா, துருக்கி, பிரிட்டன், ரஷ்யா, பிரான்ஸ், ஆஸ்திரேலியா, ஜெர்மனி, ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.

---

### 15. பெண்களுக்கு எதிரான குற்றங்கள்; கடந்த ஆண்டு 31,000 புகார்கள் பதிவு: தேசிய பெண்கள் ஆணையம் தகவல்

நாடு முழுவதும் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக கடந்த ஒரே ஆண்டில் சுமார் 31 ஆயிரம் புகார்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தேசிய பெண்கள் ஆணையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த ஆணையம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

நாட்டில் கடந்த ஆண்டில் மட்டும் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக 30,864 புகார்கள் பதிவு செய்யப் பட்டிருக்கின்றன. இது, கடந்த 2020-ம் ஆண்டை காட்டிலும் 30 சதவீதம் அதிகமாகும்.

மொத்த புகார்களில் 11,013 புகார்கள், பெண்களை உணர்வுபூர்வமாக துன்புறுத்தும் சம்பவங்கள் தொடர்பானவை. பெண்களுக்கு எதிரான வன் முறை தொடர்பாக 6.633 புகார் களும், வரதட்சணை கொடுமை தொடர்பாக 4,589 புகார்களும் பதிவாகியுள்ளன.

கடந்த ஆண்டு பதிவு செய்யப்பட்ட புகார்களில் பாதிக்கும் மேற்பட்டவை உத்தரபிரசேதத்தில் இருந்து பெறப்பட்டவை. அம்மாநிலத்தில் இருந்து 15,828 புகார்கள் பெறப்பட்டுள்ளன. அடுத்தபடி யாக டெல்லியில் இருந்து 3,336, மகாராஷ்டிராவில் இருந்து 1,504 புகார்களும், ஹரியாணாவில் இருந்து 1,460 புகார்களும், பிகாரில் இருந்து 1,456 புகார்களும் பதிவாகியுள்ளன.

இதுகுறித்து தேசிய பெண்கள் ஆணையத்தின் தலைவர் ரேகா சர்மா கூறும்போது, "பெண்களுக்கு எதிரான குற்றங் கள் தொடர்பான புகார்கள் தற்போது அதிக அளவில் பெறப் படுகின்றன. தேசிய பெண்கள் ஆணையத்தின் பணிகள் குறித்து மக்கள் மத்தியில் அதிக அளவில் விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது என்பதையே இது காட்டுகிறது” என்றார்.-பிடிஐ

---

### 16. ரூ.700 கோடி செலவில் உத்தர பிரதேச மாநிலம் மீரட் நகரில் தயான்சந்த் விளையாட்டு பல்கலை. : பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார்

ரூ.700 கோடி செலவில் மேஜர் தயான்சந்த் விளையாட்டுப் பல்கலைக்கழகம் அமைப்பதற்காக பிரதமர் நரேந்திர மோடி அடிக்கல் நாட்டினார்.

ஹாக்கி விளையாட்டில் புகழ்பெற்ற மேஜர் தயான்சந்த் நினைவாக உத்தரபிரதேச மாநிலம் மீரட் நகரில் இந்தப் பல்கலைக்கழகம் அமையவுள்ளது. விளையாட்டு பல்கலைக்கழகத்துக்கு நேற்று அடிக்கல் நாட்டி பிரதமர் நரேந்திர மோடி பேசியதாவது:

மீரட் நகரம் நமது பலம் மற்றும்கலாச்சாரத்தின் மையமாக அமைந்துள்ளது. சமண தீர்த்தங்கரர்களின் தேசமாகவும், சிந்து சமவெளி நாகரிக காலத்திலிருந்தே இந்தியாவின் வலிமையையும் பறைசாற்றும்நகரமாக மீரட் இருந்து வந்துள்ளது.

நாட்டில் உயர்ந்த விளையாட்டு விருதுக்கு மேஜர் தயான்சந்த் பெயர் சூட்டப்பட்டது. தற்போது மீரட்டில் அமையும் விளையாட்டு பல்கலைக்கழகம் அவருக்கு அர்ப்பணிக்கப்படுகிறது. ரூ.700 கோடி செலவில் அமையும் இந்த பல்கலைக்கழகம், இளைஞர்களுக்கு சர்வதேச அளவிலான விளையாட்டு வசதிகளை அளிக்கும். ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான ஆடவர் மற்றும் மகளிர் இங்கு பட்டம் பெறவுள்ளனர்.

விளையாட்டு சாதனங்கள் உற்பத்தியில் இந்தியா தன்னிறைவு பெற வேண்டும். புதிய கல்விக்கொள்கையில் விளையாட்டுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. அறிவியல், கணிதம் உள்ளிட்ட பாடங்களுக்கு இணையாக விளையாட்டும் கற்று தரப்படும்.

இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி பேசினார்.

முன்னதாக மீரட் நகருக்கு வந்த பிரதமர் நரேந்திர மோடியை உ.பி. ஆளுநர் ஆனந்தி பென் படேல், முதல்வர் யோகி ஆதித்யநாத் உள்ளிட்டோர் வரவேற்றனர்.

இந்தப் பல்கலைக்கழகத்தில் ஆண்டுதோறும் 1,080 விளையாட்டு வீரர்களுக்கு (540 ஆடவர், 540 மகளிர்) பயிற்சி அளிக்கும் வசதிகள் ஏற்படுத்தப்பட உள்ளன. உலகத் தரத்தில் நவீன வசதிகள் இங்கு அமைக்கப்படவுள்ளன. இந்த பல்கலைக்கழக வளாகத்தில் நவீன சிந்தெடிக் ஹாக்கி மைதானம், கால்பந்து மைதானம், கூடைப்பந்து, வாலிபால், ஹேண்ட்பால் மைதானங்கள், கபடி ஆடுகளம் ஆகியவையும் அமைக்கப்படவுள்ளன.

மேலும் இங்கு டென்னிஸ் மைதானம், நவீன உடற்பயிற்சி மையம், சிந்தெடிக் ஓடுபாதை, நீச்சல்குளம், பல்நோக்கு வளாகம், சைக்கிள் பயிற்சி மைதானம் அமைக்கப்படும். அதுமட்டுமல்லாமல், துப்பாக்கிச் சுடுதல், ஸ்குவாஷ், ஜிம்னாஸ்டிக், பளு தூக்குதல், வில் வித்தை,கனோயிங் மற்றும் கயாகிங் படகுப் பயிற்சி வசதிகள் உள்ளிட்டவையும் அமையவுள்ளன. –பிடிஐ

---

**17. டெஸ்லாவில் ஆட்டோபைலட் குழுவில் முதல் ஊழியராக இந்தியர் நியமனம்**

'டெஸ்லா' நிறுவனத்தின் 'ஆட்டோபைலட்' குழுவில் இந்திய வம்சாவளியை சேர்ந்த அசோக் எல்லுசுவாமி நியமிக்கப்பட்டுள்ளார்.

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தை தலைமையிடமாக வைத்து இயங்கும் டெஸ்லா நிறுவனம், மின்சார வாகனங்களை தயாரித்து வருகிறது. இதன் நிறுவனரும், தலைமை நிர்வாக அதிகாரியுமான எலான் மஸ்க், சமூக வலைதளம் வாயிலாக தன் நிறுவனத்திற்கு ஆள்சேர்க்கும் பணியில் ஈடுபட்டு வருகிறார்.

இந்நிலையில் இந்த நிறுவனத்திற்கு அசோக் எல்லுசுவாமி என்ற இந்திய வம்சாவளியை எலான் மஸ்க் தேர்வு செய்துள்ளார். டெஸ்லா நிறுவனத்தின் ஆட்டோபைலட் எனப்படும், தானாக வாகனங்கள் இயங்கும் தொழில்நுட்பங்கள் குறித்து ஆய்வு செய்யும் குழுவில் அசோக் நியமிக்கப்பட்டுள்ளார். ஆட்டோபைலட் குழுவில் தேர்வு செய்யப்பட்டுள்ள முதல் ஊழியர் அசோக் எல்லுசுவாமி என்பது குறிப்பிடத்தக்கது.

---

**18. குறித்த நேரத்தில் விமானங்களை இயக்கியதில் சென்னை விமான நிலையம் 8–வது இடத்தை பிடித்தது**

சா'வதேச அளவில் விமான போக்குவரத்து, விமான நிலையங்களின் செயல்பாடுகள் குறித்து லண்டனில் உள்ள ஒரு நிறுவனம் ஆண்டுதோறும் ஆய்வு செய்து அறிக்கை வெளியிட்டு வருகிறது.

அதன்படி 2021–ம் ஆண்டு விமான நிறுவனங்கள் மற்றும் விமான நிலையங்களின் செயல்பாடுகள், விமானங்கள் குறித்த நேரத்தில் புறப்பாடு, வருகை பற்றி விரிவான ஆய்வை அந்த நிறுவனம் நடத்தியது. அந்த ஆய்வு பற்றிய அறிக்கையை தற்போது வெளியிட்டுள்ளது.

8–வது இடம்

அதில், 2021–ம் ஆண்டில் பெரிய சர்வதேச விமான நிலையங்களில் இருந்து குறித்த நேரத்தில் விமானங்கள் புறப்பட்டதில் சென்னை விமான நிலையம் 89.32 சதவீதத்துடன் 8–வது இடத்தை பிடித்துள்ளது.

மொத்தம் 49 ஆயிரத்து 923 விமானங்கள் சேவை வழங்கி உள்ளன. இதில் 70 வழித் தடங்களில் 81.90 சதவீதம் விமானங்கள் கண்காணிக்கப்பட்டுள்ளன. 28 கோடி இருக்கைகள் என்ற அடிப்படையில் பெரிய விமான நிலையங்களை கருத்தில் கொண்டு கணக்கிடப்பட்டு உள்ளது.

சென்னை விமான நிலையம்

ஜப்பான் நாட்டில் உள்ள ஒசாகா விமான நிலையம், விமானங்கள் குறித்த நேரத்தில் புறப் படுவதில் 96.51 சதவீதம் பெற்று முதல் இடத்தில் உள்ளது. சென்னை மீனம்பாக்கம் விமான நிலையம் 89.32 சதவீதம் பெற்று 8–வது இடத்தில் உள்ளது.

இந்தியாவில் சென்னை விமான நிலையம் மட்டுமே குறித்த நேரத்தில் விமானப் புறப்பாட்டை உறுதி செய்ததில் சர்வதேச அளவில் உள்ள பட்டியலில் இடம் பிடித்துள்ளது.

அந்த பட்டியலில் முதல் 20 இடங்களில் இந்திய விமான நிலையங்களில் சென்னையை தவிர வேறு எந்த விமான நிலையமும் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

---

**19. தமிழகத்தில் சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுத்தாத காற்றாலை, சூரியசக்தி மின்உற்பத்தி நிறுவுதிறன் அதிகரிப்பு: நிறுவனங்கள், வீடுகளில் அமைக்க ஆர்வம்**

தமிழகத்தில் சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுத்தாத வகையிலான காற்றாலை, சூரிய சக்தி மின்உற்பத்தி நிறுவுதிறன் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. தமிழகத்தில் வீடுகளுக்கான மின்இணைப்பு 2.20 கோடி. இதேபோல், வணிகம் 35 லட்சம், தொழிற்சாலைகள் 7 லட்சம், விவசாயம் 21 லட்சம், குடிசைகள் 9 லட்சம், இதர இனம் 14 லட்சம் என மொத்தம் 3.16 கோடிக்கும் அதிகமான தாழ்வழுத்த மின்இணைப்புகள் உள்ளன. இதுதவிர 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட உயர் அழுத்த மின் பயனீட்டாளர்களும் உள்ளனர். தற்போதைய நிலவரப்படி தமிழகத்தின் ஒட்டுமொத்த மின் தேவை 12,700 மெகாவாட். இது கோடைக்காலங்களில் மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

எனவே, பொதுமக்கள், தொழிற்சாலைகள், நிறுவனங்களின் மின்தேவையை பூர்த்தி செய்ய தமிழக மின்வாரியம் பெரும்பாலும் அனல் மின்நிலையத்தையே நம்பி உள்ளது. இதன் மூலம் 4,300 மெகாவாட் மின்சாரம் கிடைக்கிறது. இது ஒன்றை வைத்து தமிழகத்தின் அனைத்து மின்தேவைகளையும் பூர்த்தி செய்ய முடியாது. காரணம், அனல் மின்நிலையங்களில் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு கூடுதல் செலவு செய்ய வேண்டிய நிலை உள்ளது. மேலும் நிலக்கரியால் அனல் மின்சாரத்தால் காற்று மாசும் முக்கிய அம்சமாக பார்க்கப்படுகிறது. இதன் காரணமாக, தற்போது நீர் மின்நிலையங்கள் 2,300 மெகாவாட், காற்றாலை 9,600 மெகாவாட், சோலார் 4,700 மெகாவாட் என்ற அளவில் மின் உற்பத்தி நிறுவு திறன்களை பல்வேறு இடங்களில் அரசு மற்றும் தனியார் அமைத்துள்ளனர். இதுதவிர மத்திய தொகுப்பில் இருந்தும், தனியாரிடம் இருந்தும் தேவைக்கு ஏற்ப மின்சாரம் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

இதனால், ஒன்றிய மாநில அரசுகள் மரபுசாரா எரிசக்தி மூலம் மின்உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு சலுகைகள், மானியங்களை வாரி வழங்கி வருகிறது. மேலும் இத்தகைய முறையிலான திட்டங்களையும் அரசு மற்றும் தனியார் மற்றும் இரண்டு தரப்பு பங்களிப்புடன் புதிதாக பல்வேறு இடங்களில் மின்திட்டங்களை செயல்படுத்தியும் வருகிறது. இதேபோல்

தனியார் நிறுவனங்கள், சில வீடுகளிலும் தங்களுக்கு அன்றாட தேவைப்படும் மின்சாரத்தை சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுத்தாத வகையில் தயாரித்து பயன்படுத்தி வருகின்றன. இதனால், தமிழகத்தில் ஆண்டுதோறும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நிறுவுதிறன் உயர்ந்து வருகிறது. அந்தவகையில், 2016ம் ஆண்டு தமிழகத்தில் ஒட்டுமொத்த காற்றாலை மின்உற்பத்தி நிறுவுதிறன் 7613.89 மெகாவாட்டாக இருந்தது. இதுவே கடந்த 2021ம் ஆண்டில் ஒட்டுமொத்த காற்றாலை மின்உற்பத்தி நிறுவு திறன் 9,608.04 மெகாவாட்டாக அதிகரித்துள்ளது. இதேபோல் தமிழகத்தில் வீடுகளின் மேற்கூரையில் சூரியசக்தி மின்உற்பத்தி கட்டமைப்புகளையும் ஏற்படுத்துவதும் அதிகரித்துள்ளது.

அதாவது கடந்த 2016ம் ஆண்டு மாநிலத்தின் ஒட்டுமொத்த சூரியசக்தி மின்உற்பத்தி நிறுவு திறன் 1061.82 மெகாவாட்டாக இருந்தது. இதுவே கடந்த 2021ம் ஆண்டில் தமிழகத்தின் ஒட்டுமொத்த சூரிசக்தி மின்உற்பத்தி நிறுவு திறன் 4,475.21 மெகாவாட்டாக அதிகரித்துள்ளது. ஒன்றிய, மாநில அரசுகளின் பல்வேறு சலுகைகள் மற்றும் சுற்றுச்சூழல் மாசுபாட்டை குறைக்க வேண்டும் என்ற மக்களின் நிலைபாடு போன்றவற்றின் காரணமாக தமிழகத்தில் வரும் காலங்களில் சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுத்தாத மின்உற்பத்தி மேலும் அதிகரிக்கும்.

மின்உற்பத்தி நிறுவுதிறன் (மெகாவாட்டில்)

| ஆண்டு | சூரியசக்தி | காற்றாலை |
|---|---|---|
| 2016 | 1061.82 | 7613.89 |
| 2017 | 1691.83 | 7861.46 |
| 2018 | 1908.57 | 8197.09 |
| 2019 | 2575.22 | 8968.91 |
| 2020 | 3915.88 | 9304.34 |
| 2021 | 4475.21 | 9608.04 |

**20. காகித பயன்பாடே கிடையாது 3 ஸ்மார்ட் நீதிமன்றம் கேரளாவில் சாதனை: இந்தியாவிலேயே முதன் முறை**

நாட்டிலேயே முதல்முறையாக கேரளாவில் உயர்நீதிமன்றம் உள்பட 3 நீதிமன்றங்கள் ஸ்மார்ட் நீதிமன்றங்களாக மாற்றப்பட்டுள்ளன. இந்தியாவில் பெரும்பாலான அரசுத் துறைகள் தற்போது கணினிமயமாக்கப்பட்டு வருகின்றன. கேரளாவில் நீதிமன்ற நடவடிக்கைகளும் முழுக்க முழுக்க கணினிமயமாக்கும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்நிலையில், கேரளாவில் உயர் நீதிமன்றம், கோலஞ்சேரி குற்றவியல் முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றம், திருவனந்தபுரம் கூடுதல் தலைமை குற்றவியல் மாஜிஸ்திரேட் நீதிமன்றம் ஆகியவை முழுக்க முழுக்க கணினி மயமாக்கப்பட்டு காகிதம் இல்லாத நீதிமன்றங்களாக மாற்றப்பட்டுள்ளன.

இதன் தொடக்க விழா கொச்சியில் நடந்தது. உச்ச நீதிமன்ற நீதிபதி சந்திரசூட், கேரள முதல்வர் பினராய் விஜயன் ஆகியோர் காணொலி மூலமாக இவற்றை தொடங்கி வைத்தனர். கேரள உயர் நீதிமன்றத்தில் தலைமை நீதிபதி நீதிமன்றம் உள்பட 6 நீதிமன்றங்கள் முழுக்க முழுக்க கணினிமயமாக்கப் பட்டுள்ளன. விரைவில், இதில் உள்ள 27 நீதிமன்றங்களும் கணினி மயமாக்கப்பட உள்ளது. இந்தியாவிலேயே கேரளாவில் தான் முதல்முறையாக 2 மாஜிஸ்திரேட் நீதிமன்றங்கள் ஸ்மார்ட் நீதிமன்றங்களாக மாற்றப்பட்டுள்ளன. இதன்படி, போலீஸ் பதிவு செய்யும் முதல் தகவல் அறிக்கை உள்பட அனைத்து ஆவணங்களையும் டிஜிட்டல் முறையில் நேரடியாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கலாம். குற்றப் பத்திரிகை, சாட்சிகளின் வாக்குமூலம் உள்பட அனைத்து ஆவணங்களும் டிஜிட்டல் முறையில் கிடைக்கும். சம்மன்களையும் டிஜிட்டல் முறையில் அனுப்பும் வசதி உண்டு.

**1.** **சமீபத்தில் கால்நடை பாதுகாப்புச் சட்டம், 1950'இல் ஒரு திருத்தத்தை நிறைவேற்றியுள்ள மாநிலம் எது?**

அ) தமிழ்நாடு

ஆ) கேரளா

இ) உத்தரப்பிரதேசம்

**ஈ) அஸ்ஸாம் ☑**

✓ அஸ்ஸாம் மாநில சட்டமன்றம் அண்மையில் ஒரு திருத்த மசோதாவை நிறைவேற்றியுள்ளது. அது கால்நடை பாதுகாப்புச் சட்டம், 1950'ஐ மாற்றியமைத்து அச்சட்டத்தை வலுப்படுத்துகிறது. வேளாண் நோக்கங்களுக்காக கால்நடைகளை எளிதாக கொண்டு செல்வதற்கும், அவற்றை கடத்துவோர்க்கு கடுமையான தண்டனையை உறுதி செய்வதற்கும் இம்மசோதா வகை செய்யும்.

---

**2.** **நீர் மறுபயன்பாடு தொடர்பான NMCG–TERI'இன் சிறப்பு மையம் அமைக்கப்படவுள்ள இடம் எது?**

**அ) குருகிராம் ☑**



ஆ) புது தில்லி

இ) மும்பை

ஈ) கொல்கத்தா

✓ தேசிய தூய்மை கங்கை திட்டம் (NMCG) மற்றும் எரிசக்தி மற்றும் வள நிறுவனம் (TERI) ஆகியவை இணைந்து நீர் மறுபயன்பாடு தொடர்பான NMCG–TERI'இன் சிறப்பு மையத்தை குருகிராம் – ஹரியானாவில் உள்ள TERI வளாகத்தில் தொடங்கியுள்ளன.

✓ ஆராய்ச்சி மற்றும் புதுமைகளை வளர்ப்பதற்கும், ஆராய்ச்சி –க்கான இடைவெளிகளைக் கண்டறிவதற்கும், நீர் மறுப –யன்பாட்டில் அனைத்து வகையான ஆராய்ச்சிகளுக்கும் ஆதரவளிப்பதற்குமாக இம்மையம் நிறுவப்படுகிறது.

---

**3.** **துணிப்பைகளின் பயன்பாட்டை ஊக்குவிக்கும் வகை –யில் 'மீண்டும் மஞ்சப்பை' திட்டத்தை அறிமுகப்படுத்திய மாநிலம் எது?**

**அ) தமிழ்நாடு ☑**

ஆ) கேரளா

இ) கர்நாடகா

ஈ) தெலுங்கானா

✓ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின், பொதுமக்கள் துணிப்பைகளை பயன்படுத்துவதை ஊக்குவிக்கவும், நெகிழிப் பைகளை பயன்படுத்துவதை தடுக்கவுமாக 'மீண்டும் மஞ்சப்பை' திட்டத்தை தொடங்கி வைத்துள்ளார். ஒருமுறை பயன்படுத்தப்படும் நெகிழிக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை மீறியதால், இதுவரை 130க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகளின் மின்னிணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது.

✓ மஞ்சள் நிற துணிப்பைகள் தமிழ்நாட்டில் பெரும்பாலும் சுபநிகழ்ச்சிகளின்போது அதிகம் பயன்படுத்தப்படுகின்றன.

---

**4.** **ஷ்யாமா பிரசாத் முகர்ஜி ரூர்பன் திட்டத்தைச் (SPMRM) செயல்படுத்துவதில் முதலிடத்தில் உள்ள மாநிலம் எது?**

அ) கர்நாடகா




**ஆ) தெலுங்கானா ☑**

இ) பீகார்

ஈ) மேற்கு வங்காளம்

✓ ஷ்யாமா பிரசாத் முகர்ஜி ரூர்பன் திட்டத்தைச் (SPMRM) செயல்படுத்துவதில் தெலுங்கானா முதலிடத்தில் உள்ளது.

✓ உள்ளூர் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தவும், அடிப்படை சேவைகளை மேம்படுத்தவும், நன்கு திட்டமிடப்பட்ட தொகுதிகளை உருவாக்கவும் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது. இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வரும் நாடு முழுவதும் உள்ள 300 தொகுதிகளில் சங்கரெட்டி மற்றும் காமரெட்டி மாவட்டங்கள் முதல் இரண்டு இடங்களைப் பிடித்தன.

---

**5.** **சமீபத்தில் மகளிர் ITF ஒற்றையர் பட்டத்தை வென்ற மொயுகா உச்சிஜிமா சார்ந்த நாடு எது?**

அ) சீனா



**ஆ) ஜப்பான் ☑**

இ) தென் கொரியா

ஈ) வட கொரியா

✓ ஜப்பானிய டென்னிஸ் வீராங்கனை மொயுகா உச்சிஜிமா தனது முதல் $25,000 பரிசுத் தொகையுடைய மகளிர் ITF ஒற்றையர் பட்டத்தை வென்றார். NECC டெக்கான் மகளிர் ITF சாம்பியன்ஷிப்பின் இருபதாவது பதிப்பின் ஒற்றையர் இறுதிப்போட்டியில் லாட்வியாவின் டயானா மார்சின்கெ –விகாவை அவர் தோற்கடித்தார். இரட்டையர் பிரிவில் ஜப்பானின் மற்றொரு ஜோடியான ஃபுனா கோசாகி மற்றும் மிசாகி மட்சுடா இரண்டாமிடம் பிடித்தனர்.

---

**6.** **'கிராம் உஜாலா திட்டத்தைச்' செயல்படுத்துகிற மத்திய அமைச்சகம் எது?**

**அ) எரிசக்தி அமைச்சகம் ☑**

ஆ) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

இ) உழவு & உழவர்கள் நல அமைச்சகம்

ஈ) சுற்றுச்சூழல் & வன அமைச்சகம்

✓ 'கிராம் உஜாலா திட்டம்' என்பது எரிசக்தி அமைச்சகத்தின் முதன்மையான திட்டமாகும். தற்போது பயன்பாட்டில் உள்ள குழல்விளக்குகளுக்கு மாற்றாக ஒவ்வொன்றும் ₹10 விலையில் மூன்றாண்டு உத்தரவாதத்துடன் அதிக தரமுள்ள LED பல்புகளை CESL வழங்குகிறது.

✓ சமீபத்தில், CESL ஆனது கிராம் உஜாலா திட்டத்தின்கீழ் 50 இலட்சம் LED பல்புகளை விநியோகித்து சாதனை படைத்துள்ளது.

---

**7. அண்மையில் அதன் தேசிய பாதுகாப்பு கொள்கையை வெளியிட்ட ஆசிய நாடு எது?**

அ) இலங்கை

**ஆ) பாகிஸ்தான் ☑**

இ) ஆப்கானிஸ்தான்

ஈ) வங்காளதேசம்



✓ பாகிஸ்தானின் அமைச்சரவை நாட்டின் முதல் தேசிய பாதுகாப்புக் கொள்கைக்கு ஒப்புதல் அளித்தது. இது, பொருளாதார முன்னேற்றம் தேசிய பாதுகாப்பின் கருவாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. உயர் அதிகாரம் கொண்ட தேசிய பாதுகாப்புக் குழுவால் (NSC) அங்கீகரிக்கப்பட்ட ஆவணத்தை அமைச்சரவை ஏற்றுக் கொண்டது. இது 2022-26 காலகட்டத்தை உள்ளடக்கிய ஐந்தாண்டு கொள்கை ஆவணமாகும்.

---

**8. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் அண்மைய பதிப்பு, கீழ்காணும் எந்த ஆண்டில் நிறைவேற்றப்பட்டது?**

அ) 2010

ஆ) 2015

**இ) 2019 ☑**

ஈ) 2021




✓ நுகர்வோர் பாதுகாப்புச் சட்டப்படி, நுகர்வோர் பாதுகாப்பு (நேரடி விற்பனை) விதிமுறைகள், 2021'ஐ மத்திய அரசு அறிவித்துள்ளது. இப்புதிய விதிமுறைகள் நேரடிவிற்பனை நிறுவனங்கள் மற்றும் வியாபாரிகள் பிரமிட் திட்டங்கள், பண சுழற்சி திட்டங்களில் ஈடுபட தடை விதிக்கிறது.

---

**9. அரசு நடத்தும் பல்கலைக்கழகங்களில் உயர்கல்வி அமைச்சருக்கு அதிக அதிகாரங்களை வழங்குவதற்கான மசோதாவை பின்வரும் எந்த மாநிலத்தின் சட்டமன்றக் குழு நிறைவேற்றியுள்ளது?**

அ) தமிழ்நாடு

ஆ) ஆந்திர பிரதேசம்

**இ) மகாராஷ்டிரா ☑**

ஈ) தெலுங்கானா



✓ மகாராஷ்டிர மாநில பொது பல்கலைக்கழக சட்டம், 2016 (3ஆவது திருத்தம்) மசோதாவை மகாராட்டிர சட்டமன்றக் குழு நிறைவேற்றியது. அரசு நடத்தும் பல்கலைக்கழகங்க -ளில் உயர் மற்றும் தொழில்நுட்பக் கல்வி அமைச்சருக்கு அதிக அதிகாரங்களை வழங்க இது முயற்சி செய்கிறது.

✓ பல்கலைக்கழகங்களின் வேந்தராக இருக்கும் ஆளுநரிடம் அமைச்சர் பரிந்துரைகளை வழங்கவும் இந்த மசோதா அனுமதிக்கிறது. பல்கலைக்கழகங்களின் துணை வேந்தராக அமைச்சரை நியமிக்கவும் இந்தச் சட்டம் முன்மொழிகிறது.

---

**10. மதிப்பீட்டு நிறுவனமான ICRA'இன் கூற்றுப்படி, 2022 நிதியாண்டில் இந்தியாவின் மெய்யான GDP வளர்ச்சி விகிதம் எவ்வளவு என மதிப்பிடப்பட்டுள்ளது?**

அ) 12.5%

ஆ) 11%

இ) 10%

**ஈ) 9% ☑**




✓ 2021-22ஆம் நிதியாண்டில் இந்தியாவிற்கான GDP 9.0% விரிவாகும் என்ற தனது முன்னறிவிப்பை ICRA ரேட்டிங் தக்கவைத்துள்ளது. பொருளாதாரத்தின் முறையான மற்றும் முறைசாரா துறைகளில் K-வடிவ வேறுபாடு காணப்படும் என்று அது உறுதிபட கூறியுள்ளது. அடுத்த நிதியாண்டில் (2022-23) பொருளாதாரம் இதேபோன்ற 9.0% வளர்ச்சியைப் பராமரிக்கும் என ICRA நிறுவனம் எதிர்பார்க்கிறது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. 21 பொருட்கள் அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்பு விநியோகம்; முதல்வர் ஸ்டாலின் இன்று தொடங்கி வைக்கிறார்: 2.15 கோடி அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படுகிறது**

பொங்கல் பண்டிகைக்கு தமிழகத்தில் உள்ள 2.15 கோடி அரிசி குடும்ப அட்டைகள் மற்றும் இலங்கைத் தமிழர்களுக்கு 21 பொருட்கள் அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் பணியை முதல்வர் மு க ஸ்டாலின் இன்று தொடங்கி வைக்கிறார்.

தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகையை அனைவரும் மகிழ்ச்சியுடன் கொண்டாடும் வகையில் தமிழகத்தில் உள்ள 2 கோடியே 15 லட்சத்து 29,114 அரிசி குடும்பஅட்டைதாரர்கள், 18,946 இலங்கை தமிழர் குடும்பங்கள் என 2 கோடியே 15 லட்சத்து 48 ஆயிரத்து 60 குடும்பங்களுக்கு, பயனாளி ஒருவருக்கு ரூ.505 மதிப்புள்ள 21 பொருட்கள் வழங்க ₹1,088 கோடியே 17 லட்சத்து 70 ஆயிரத்து 300 ஒதுக்கப்பட்டுள்ளது.

21 பொருட்கள்

இதில், தலா ஒரு கிலோ பச்சரிசி, வெல்லம், கோதுமை மாவு, ரவை, தலா 50 கிராம் முந்திரி, திராட்சை,10 கிராம் ஏலக்காய், தலா 500 கிராம்உளுந்து, பாசிப்பருப்பு, உப்பு, தலா 100 கிராம் நெய், மஞ்சள்தூள், மிளகாய்த்தூள், மல்லித்தூள், கடுகு, சீரகம், 50 கிராம் மிளகு, 200 கிராம் புளி, 250 கிராம் கடலைப் பருப்பு, துணிப்பை ஒன்று என 20 பொருட்களும், ஒரு கரும்பும் என 21 பொருட்கள் வழங்கப்படுகின்றன.

குறிப்பாக கூட்டுறவுத் துறை மூலம் ஏலம், முந்திரி, திராட்சைமற்றும் கரும்பு ஆகியவை கொள்முதல் செய்து நியாயவிலைக் கடைகள் மூலம் 21 பொருட்களை யும் வழங்குவதற்கான, டோக்கன் வழங்கும் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், இத்திட்டத்தை முதல்வர் மு க ஸ்டாலின் இன்று காலை 10.30 மணிக்கு தலைமைச் செயலகத்தில் தொடங்கி வைக்கிறார்.

இதைத்தொடர்ந்து, மாவட்டவாரியாக அமைச்சர்கள் தொடங்கிவைக்கின்றனர். விடுதல் இல்லாமல் அனைவருக்கும் பொங்கல் பரிசுத் தொகுப்பை வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

---

**2. சென்னை வெள்ள இடர் தணிப்பு, மேலாண்மை இடைக்கால அறிக்கை: முதல்வரிடம் சமர்ப்பித்தார் அறிவுரைக் குழுத் தலைவர்**

சென்னை வெள்ள இடர் தணிப்பு மற்றும் மேலாண்மை தொடர்பான இடைக்கால அறிக்கையை, முதல்வர் மு க ஸ்டாலினிடம், அறிவுரைக் குழுவின் தலைவர் வெ திருப்புகழ் சமர்ப்பித்தார்.

சட்டப்பேரவையில் ஆளுநர்உரையாற்றும்போது, "சென்னையில் ஏற்படும் வெள்ளப் பாதிப்புகளைக் குறைக்கும் வகையில், வெள்ளக்கட்டுப்பாடு நடவடிக்கைகள், மழைநீர் கால்வாய்களை வடிவமைத்தல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ளும் வகையில், சுற்றுச்சூழல், நகர்ப்புறத் திட்டமிடல், பேரிடர் மேலாண்மை வல்லுநர்கள் அடங்கிய சென்னை பெருநகர வெள்ள மேலாண்மை குழு அமைக்கப்படும்" என்று அறிவித்தார்.

இதையடுத்து, சென்னை மாநகராட்சி ஆணையரின் பரிந்துரை அடிப்படையில், சென்னை பெருநகர வெள்ள இடர் தணிப்பு மற்றும் மேலாண்மைக்கான அறிவுரைக் குழுவை தமிழக அரசு அமைத்துள்ளது.

ஓய்வுபெற்ற ஐஏஎஸ் அதிகாரி வெ திருப்புகழ் தலைமையிலான அக்குழுவில், டெல்லி நகர் மற்றும்ஊரமைப்பு நிறுவன தலைமை திட்ட அலுவலர், காலநிலை பின்னடைவு பயிற்சி உலக வள நிறுவன இயக்குநர் நம்பி அப்பாதுரை, சென்னை வளர்ச்சி கல்வி நிறுவனப் பேராசிரியர் ஜானகிராமன், மும்பைஐஐடி கட்டுமானப் பொறியியல் துறை போராசிரியர் கபில் குப்தா உள்ளிட்டோர் இடம்பெற்றிருந்தனர்.

இந்நிலையில், நவம்பர், டிசம்பர் மாதங்களில் சென்னையில் வடகிழக்குப் பருவமழை பெரிய பாதிப்பை ஏற்படுத்தியது. இந்தப் பாதிப்புகளையும், தண்ணீரை வெளியேற்றுவதற்கான வழிமுறைகளையும் இக்குழுவினர் ஆய்வு செய்தனர்.

இதையடுத்து, சென்னையில் வெள்ளப் பாதிப்பை தடுப்பது தொடர்பான இடைக்கால அறிக்கையை, தமிழக முதல்வர் மு க ஸ்டாலினிடம், அறிவுரைக் குழுத் தலைவர் வெ திருப்புகழ் நேற்று சமர்ப்பித்தார். 90 பக்கங்கள் கொண்ட அந்த அறிக்கையில், சென்னையில் மழைப் பாதிப்புகளை தடுப்பதற்கான சில ஆலோசனைகளை குழு வழங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

குறிப்பாக, சென்னையில் மழையால் பாதிக்கப்படும் 561 இடங்கள் கண்டறியப்பட்டுள்ளதாகவும், மழை பாதிப்புகளைத் தடுக்க, நீர்நிலைகள், நீர்வழித்தடங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை முழுமையாக அகற்ற வேண்டும். அடையாறு, கூவம், பக்கிங்காம் கால்வாய் மற்றும் பல்வேறு வடிகால்களின் உண்மையான கொள்ளளவை மீட்க வேண்டும். சென்னையில் உள்ள மழைநீர்க் கால்வாய்களை அகலப்படுத்தி, ஆழப்படுத்தி மீட்டுருவாக்கம் செய்ய வேண்டும். கட்டுமானங்களை தரமானதாக மாற்றவேண்டும் என்பன உள்ளிட்ட பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

---

**3. மின்சார வாகனம் தொடர்பான புதிய முதுநிலைப் படிப்பு சென்னை ஐஐடி'இல் அறிமுகம்**

மின்சார வாகனம் தொடர்பான புதிய முதுநிலைப் பட்டப் படிப்பை சென்னை ஐஐடி அறிமுகப்படுத்துகிறது.

இது தொடர்பாக சென்னை ஐஐடி நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

இந்த ஆண்டு ஐஐடி–ல் மின் வாகனம் தொடர்பான புதிய முதுநிலைப் பட்டப் படிப்பு கொண்டுவரப்படுகிறது. இரு துறைசார்ந்த இரட்டைப்படிப்பாக இது அறிமுகப்படுத்தப்படும். இந்தப் படிப்பில் பி.டெக். 3–ம் ஆண்டு படிக்கும் மாணவர்கள் சேரலாம். மொத்தம் 25 பேர் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

மின்சார வாகனவடிவமைப்பு, தகவல் தொடர்புஉள்ளிட்ட அம்சங்கள் அடங்கியதாகவும், மின்சார வாகன தயாரிப்புமேம்பாட்டுத் துறையில் வேலைவாய்ப்பு பெறும் வகையிலும் இந்தப் படிப்பு அமைந்திருக்கும்.

ஐஐடி–ல் பி.டெக். 3–ம் ஆண்டு பயிலும் மாணவர்கள் இந்தப் படிப்பில் சேர்ந்து 5 ஆண்டுகள் படித்தால், அவர்களுக்கு ஒருங்கிணைந்த எம்.டெக். பட்டம் வழங்கப்படும். இந்தப் படிப்புக்கான சேர்க்கை ஜனவரியில் தொடங்கும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய படிப்பின் முக்கிய அம்சங்கள் குறித்து இன்ஜினீயரிங் டிசைன் துறைத் தலைவர் டி.அசோகன் கூறும்போது, "மின்சார வாகனப் பொறியாளர்களுக்குத் தேவைப்படும் அனைத்து திறமைகளையும் ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில், 8 துறைகளின் கூட்டுமுயற்சியால் இந்தப் படிப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மின் வாகனங்களுக்கான அடிப்படை விஷயங்கள், பேட்டரிகள், மோட்டார்கள் என அனைத்துத் துறைகளிலும் ஆழ்ந்த அறிவுபெறும் வகையில், மிகுந்த கவனத்துடன் இதற்கான பாடத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது" என்றார்.

---

**4. இந்தியத் தடுப்பூசிகள்: ஒரு மீள் பார்வை**

கரோனா வைரஸ் ஒமைக்ரான் வேடமிட்டு மூன்றாம் ஆண்டில் தடம்பதிக்கிறது. உலகளவில் இதை எதிர்கொள்ளத் தடுப்பூசிதான் ஒரே வழி என்று ஆரம்பம் முதலே பேசப்பட்டது. கரோனாவுக்கு எதிராக பைசர்–பயோஎன்டெக் நிறுவனத்தின் எம்.ஆர்.என்.ஏ. தடுப்பூசி முதன்முதலில் 2020 டிசம்பர் 8–ல் பிரிட்டனில் மக்கள் பயன்பாட்டுக்கு வந்தது. பாரத் பயோடெக் நிறுவனம் கோவேக்சின் தடுப்பூசியைத் தயாரித்து இந்தியாவுக்குப் பெருமை சேர்த்தது. இதுவரை 10 நிறுவனங்களின் தடுப்பூசிகளுக்கு உலக சுகாதார நிறுவனம் அனுமதி அளித்துள்ளது. கரோனா தொற்றாளருக்கு உயிரிழப்பைத் தவிர்ப்பதில் தடுப்பூசியின் பங்கு மகத்தானது.

இந்தியாவில் இலவச கரோனா தடுப்பூசித் திட்டம் 2021 ஜனவரி 16–ல் தொடங்கப்பட்டது. கோவிஷீல்டு, கோவேக்சின் முன்களப் பணியாளர்களுக்கு முதலில் செலுத்தப்பட்டது. மார்ச்–1 தொடங்கி 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும், 45 வயதுக்கு மேல் இணைநோயுள்ளவர்களுக்கும் செலுத்தப்பட்டது. மே–1 தொடங்கி 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் அனுமதியளிக்கப்பட்டது. மே–14ல் ஸ்புட்னிக்–வி இணைந்துகொண்டது. இவற்றில் கோவிஷீல்டு 88.89%, கோவேக்சின் 10.79% பயன்படுத்தப்பட்டது. ஸ்புட்னிக்–வி 1%–க்கும் குறைவு.

நவம்பர் 3–ம் தேதி 'வீடு தேடித் தடுப்பூசி'த் திட்டம் தொடங்கப்பட்டது. தடுப்பூசிக்கு எதிரான பரப்புரைகளால் பொதுச் சமூகத்துக்கு ஏற்பட்ட தயக்கத்தாலும், நாட்டில் தடுப்பூசிக்குத் தட்டுப்பாடு உண்டானதாலும் இத்திட்டம் ஆரம்பத்தில் சுணக்கம் கண்டது. பின்னர், வேகமெடுத்தது. இதுவரை 145 கோடித் தவணைகள் இந்தியாவில் செலுத்தப்பட்டுள்ளன. முழுமையாகச் செலுத்திக்கொண்டவர்கள் 64.2% பேர். 3 மாநிலங்களில் 100% இரண்டு தவணைகளும் போடப்பட்டுள்ளன. இதன் மூலம், இந்திய மருத்துவத் துறையில், குழந்தைகளுக்கு மட்டுமே தடுப்பூசித் திட்டம் என்றிருந்த வரலாறு மாறிப்போனது. இதுவரை செய்யாத சாதனையாக ஒன்றிய அரசு இத்திட்டத்தை முன்வைத்தது. ஆனாலும், 2021 டிசம்பருக்குள் தகுதியானவர்கள் அனைவருக்கும் தடுப்பூசி செலுத்திட வேண்டும் என்ற இலக்கை எட்ட முடியவில்லை. எனவே, இந்தியா செல்ல வேண்டிய தூரம் இன்னும் இருக்கிறது.

**முன்னெச்சரிக்கைத் தடுப்பூசி**

இத்திட்டத்தின் தொடக்கத்தில் மூன்று வகைத் தடுப்பூசிகளுக்குமே இரண்டு தவணைகள் போதும் என்றது அரசு. ஆனால், களநிலவரத்தில், இரண்டு தவணை செலுத்திக்கொண்டவர்களுக்குத் தடுப்பாற்றல் 6–9 மாதங்களே தாக்குப்பிடிப்பதாலும், டெல்டா மற்றும் ஒமைக்ரான் வேற்றுருவங்கள் இந்தத் தடுப்பூசிகளையும் தாண்டி மறுதொற்றை ஏற்படுத்துவதாலும், மூன்றாம் தவணையும் தேவை என்ற எதிர்பார்ப்பு உலகளவில் அதிகரித்தது. அதைத் தொடர்ந்து 60–க்கும் மேற்பட்ட உலக நாடுகள் மூன்றாம் தவணையைச் செலுத்தத் தொடங்கின. இஸ்ரேல் நான்காவது தவணையைச் செலுத்தத் தொடங்கிவிட்டது. இந்தியாவிலும் 'முன்னெச்சரிக்கைத் தடுப்பூசி' எனும் பெயரில் ஜனவரி 10–ம் தேதி தொடங்கி, மூன்றாவது தவணையைச் செலுத்த உள்ளனர். ஆரம்பத்தில் முன்களப் பணியாளர்களுக்கும் இணைநோயுள்ள 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

மேற்கத்திய நாடுகளில் மூன்றாம் தவணைக்கு, முதல் இரண்டு தவணைகள் செலுத்திக்கொண்ட தடுப்பூசிகளுக்குப் பதிலாக மாற்றுத் தடுப்பூசியைச் செலுத்திக்கொள்வது மிகுந்த பாதுகாப்பைத் தருவதாகக் கருதுகின்றனர். குறிப்பாக, எம்.ஆர்.என்.ஏ. தடுப்பூசியை அவர்கள் பரிந்துரை செய்கின்றனர். இந்தியாவில் மூன்றாம் தவணை தொடர்பான ஆராய்ச்சி வேலூரில் கிறித்துவ மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மேற்கொள்ளப்படுகிறது. இந்த ஆய்வின் முடிவு வெளிவந்ததும் இந்தியாவில் எதை முன்னெச்சரிக்கைத் தடுப்பூசியாகச் செலுத்திக்கொள்வது என்பது தெளிவாகிவிடும். அண்மையில், கோவோவேக்ஸ், கோர்பிவேக்ஸ் ஆகிய புரத வகைத் தடுப்பூசிகளும் அரசின் அனுமதி பெற்றுள்ளன. எம்.ஆர்.என்.ஏ. தடுப்பூசி, ஸ்புட்னிக் லைட், ஜைக்கோவ்–டி, ஜான்சன் அண்ட் ஜான்சன் ஆகிய தடுப்பூசிகள் ஏற்கெனவே அனுமதி பெற்றிருந்தும் இன்னும் செயலுக்கு வரவில்லை.

**தமிழ்நாட்டின் நிலவரம்**

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை தடுப்பூசித் திட்டம் வெற்றியடைய பல அடுக்கு நடவடிக்கைகளைத் தற்போதைய அரசு தொடர்ந்து முன்னெடுத்துவருகிறது. அவற்றில் மெகா தடுப்பூசி முகாம்கள் முக்கியமானவை. சென்ற வாரம் வரை 17 மெகா முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. ஆனாலும், சிம்லா மற்றும் இமாசலப் பிரதேசத்தைப் போல 100% இலக்கை உடனடியாக அதனால் எட்ட முடியவில்லை. புள்ளிவிவரப்படி பார்த்தால், தடுப்பூசிக்குத் தகுதியான 5.78 கோடிப் பேரில் 86% பேர் முதல் தவணைத் தடுப்பூசியையும் 59% பேர் இரண்டாவது தவணையையும் செலுத்திக்கொண்டுள்ளனர். 80 லட்சம் பேர் முதல் தவணையையும், 96 லட்சம் பேர் இரண்டாம் தவணையையும் இன்னமும் செலுத்திக்கொள்ளவில்லை. இவர்களில் மூத்த குடிமக்கள்தான் அதிகம். அரசின் கணக்குப்படி, தடுப்பூசி செலுத்தப்பட வேண்டிய மூத்த குடிமக்களில் இதுவரை 61% பேர் ஒரு தவணை மட்டும் செலுத்திக்கொண்டுள்ளனர். 44% பேர் இரண்டு தவணைகளைச் செலுத்திக்கொண்டு முழுப் பாதுகாப்பு பெற்றுள்ளனர்.

**தயக்கம் வேண்டாம்!**

இந்தச் சூழலில், ஒன்றிய அரசு இணைநோயுள்ள மூத்த குடிமக்களுக்கு மூன்றாம் தவணையாக முன்னெச்சரிக்கைத் தடுப்பூசியைச் செலுத்திக்கொள்ள அனுமதித்துள்ளது. இங்கே கவனிக்கப்பட வேண்டிய விஷயம், ஒமைக்ரான் தீவிரமாகப் பரவும் என்பதால், அதன் தாக்குதலுக்கு உள்ளாகிற அதிக வாய்ப்பு மூத்த குடிமக்களுக்கே இருக்கிறது. இவர்கள்தான் முன்னெச்சரிக்கைத் தடுப்பூசிக்கு முன்நிற்க வேண்டும்.

இவர்களோ இணைநோய்களின் அச்சம் காரணமாகத் தடுப்பூசிக்குத் தயங்குகின்றனர். இரண்டு தவணைகளையும் செலுத்திக்கொண்டால்தான் நாட்பட்ட பாதுகாப்பு உறுதிப்படும் என்பதையும், தடுப்பூசியால்தான் கரோனா மரணங்களை உலகளவில் குறைக்க முடிந்தது என்பதையும் உணர்ந்து, இவர்கள் இரண்டு தவணைத் தடுப்பூசிகளைக் கட்டாயம் செலுத்திக்கொள்ள வேண்டும். இணைநோயுள்ளவர்களும் மூன்றாம் தவணையைச் செலுத்திக்கொள்ளலாம். வீட்டில் பெரியவர்கள் தடுப்பூசி செலுத்திக்கொள்வதைப் பிள்ளைகள் உறுதிப்படுத்த வேண்டும்.

இந்த வாரத்திலிருந்து 15 – 18 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு கோவேக்சின் தடுப்பூசி செலுத்தப்பட இருக்கிறது. இது, இந்தியக் குழந்தைகளிடம் பரிசோதிக்கப்பட்டு முடிவுகள் திருப்தியாக இருந்தால்,

குழந்தைகள் பயன்பாட்டுக்கு அரசின் அனுமதி பெற்றுள்ளது. ஆகவே, பெற்றோர் எவ்விதத் தயக்கமுமின்றித் தங்கள் குழந்தைகளுக்குத் தடுப்பூசி செலுத்திக்கொள்ள முன்வர வேண்டும். கோவிஷீல்டு தடுப்பூசியை வடிவமைத்த ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்தின் தடுப்பூசித் துறைப் பெண் பேராசிரியை சாரா கில்பர்ட் கூறியுள்ளதை இங்கு நினைவுகூர்வது பொருத்தமாக இருக்கும்.

கரோனா இன்னும் ஓய்ந்துவிடவில்லை. இந்தப் பெருந்தொற்றின் மூலம் நமக்குக் கிடைத்துள்ள தடுப்பூசி அறிவைத் தொலைத்துவிடக் கூடாது. தடுப்பூசித் தவணைகள் விஷயத்திலும் கரோனா பாதுகாப்பு விதிமுறைகளைப் பின்பற்றுவதிலும் அலட்சியம் ஆகாது. மீறினால், அடுத்த பெருந்தொற்று இதைவிட மோசமானதாகக்கூட இருக்கும்".

டெல்டாவும் ஒமைக்ரானும் சேர்ந்து தமிழ்நாட்டில் மூன்றாம் அலையைத் தொடங்கிவிட்டது என்ற எச்சரிக்கை வந்திருக்கும் இன்றைய சூழலில் எல்லோருக்குமான அறிவுறுத்தல் இது.

---

**5. வேளாண் விளைபொருள் பட்டியலிலிருந்து பருத்தி நீக்கம்**

தமிழ்நாடு வேளாண் விளைபொருள் ஒழுங்குமுறைச் சட்டம்–1987–ல் அறிவிக்கப்பட்ட வேளாண் விளைபொருட்கள் பட்டியல் தொகுப்பிலிருந்து பருத்தியைத் தமிழ்நாடு அரசு நீக்கம் செய்து சந்தைக் கட்டண விலக்கு அளித்துள்ளது. இது தொடக்கத்தில் விவசாயிகளுக்கும் வணிகர்களுக்கும் நன்மை தருவதுபோல் இருப்பினும் நாளடைவில் மத்திய, மாநில அரசின் நிதியை அரசுச் சந்தைகள் எதிர்நோக்கும் கட்டாயம் ஏற்படும்.

தனது சுயநிதி (சந்தைக் கட்டண நிதி) மூலம் விவசாயிகளுக்கு எவ்வித சந்தை மேம்பாட்டுப் பணியையும் செய்ய இயலாமல் நலிவடைந்துவிடும். மத்திய வேளாண் சட்டங்களால் வேளாண் சந்தை அமைப்புகள் அழிந்துவிடும் என்று விவசாயிகள் போராட்டம் நடைபெற்றது அனைவரும் அறிந்ததே. அது போலத்தான் வேளாண் விளைபொருள் பட்டியலிலிருந்து பருத்தியையும் அடுத்தடுத்த விளைபொருட்களையும் நீக்கினால், ஒழுங்குமுறை வேளாண் சந்தை அமைப்புகள் வலுவிழந்துபோய்விடும். அரசு சார்ந்த சந்தை அமைப்புகள் வலுவிழந்த நிலையில், விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள்.

வணிகர்களின் நேரடிக் கட்டுப்பாட்டில் விவசாயிகள் வர வேண்டிய நிலை ஏற்படும். இடைத்தரகர்கள் மீண்டும் வருவார்கள். அரசு சார்ந்த சந்தை அமைப்புகள் வலுவிழந்த நிலையில், அனைத்து விளைபொருட்களையும் அரசே கொள்முதல் செய்வது சாத்தியமில்லா நிலை ஏற்படும். விவசாயிகளுக்குக் குறைந்தபட்ச விலைகூடக் கிடைக்க வாய்ப்பில்லாமல் போகக்கூடும். பருத்தி போன்ற விளைபொருட்களைக் கொள்முதல் செய்யும், இந்தியப் பருத்திக் கழகம் கொள்முதல் செய்ய இடைத்தரகர்களையும் வணிகர்களையும் நாட வேண்டிய நிலை வரும்.

என்னதான் வேளாண் சந்தைகளுக்கு அரசு நிதி வழங்கினாலும், அது சுயமாக நிதி ஆதாரங்களைப் பெருக்கிக்கொள்ளும் நிலையில் இருந்தால்தான் அமைப்பு வலுப்பெறும். சந்தை அமைப்புகள் வலுவாக இருந்தால்தான், அதன் மூலம் வேளாண் கொள்முதல், விற்பனை ஆகியவற்றை அரசு கண்காணித்துக் கட்டுப்படுத்த இயலும். சந்தைக் கட்டண விலக்கு அளிப்பதால், விவசாயிகளுக்கு அதிக விலை கிடைக்கும் என்பதற்கோ, நுகர்வோருக்குக் குறைந்த விலை கிடைக்கும் என்பதற்கோ எந்தவித ஆராய்ச்சித் தரவுகளும் இல்லை.

ஆகவே, சந்தைக்குள் நடக்கும் பரிவர்த்தனைக்கு மட்டும் சந்தைக் கட்டணம் விலக்கு அளித்துவிட்டு, வெளிப் பரிவர்த்தனைக்குக் கட்டணம் வசூலிக்கும் நிலை இருந்தால் நிறைய வணிகர்கள் சந்தை அமைப்புக்குள் கொள்முதல் செய்யப் போட்டி போடும் நிலை வரும். விவசாயிகளுக்கும் போட்டி விலை கிடைக்கும். ஆகவே, பருத்தி போன்ற வேளாண் விளைபொருட்களைப் பட்டியலிலிருந்து நீக்குவதும், முழுமையாகச் சந்தைக் கட்டண விலக்கு அளிப்பதையும் அரசு மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டும்.

மேலும், 100 ஏக்கர் பரப்பில் அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய வேளாண் விற்பனைச் சந்தைகளை உருவாக்கினால், சந்தை அமைப்பு மேம்படும். நல்ல விலை கிடைக்கும்போது உற்பத்தி தானாகப் பெருகும்.

---

**6. சேதி தெரியுமா?**

டிச.25: தேசிய மனித உரிமைகள் ஆணையம் வெளியிட்ட அறிக்கையின்படி இந்தியாவில் 2021ஆம் ஆண்டில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகம் பதிவான மாநிலங்களில் உத்தர பிரதேசம் முதலிடம் பிடித்தது.

டிச.25: மத்திய உள்துறை அமைச்சகத்தின் நிர்வாகச் சீர்திருத்தம் மற்றும் பொதுமக்கள் குறைதீர்ப்புத் துறை தயாரித்த 2021ஆம் ஆண்டு நல்லாட்சிக் குறியீட்டில் நீதி மற்றும் பொதுமக்கள் பாதுகாப்புப் பிரிவில் தமிழகம் முதலிடம் பிடித்தது.

டிச.26: பிரபல பின்னணிப் பாடகரும் நடிகருமான மாணிக்க விநாயகம் (78) உடல்நலக் குறைவால் சென்னையில் காலமானார்.

டிச.28: உலகின் மிக சக்திவாய்ந்த விண்வெளி தொலைநோக்கியான 'ஜேம்ஸ் வெப்' பை நாசா வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது.

டிச.29: அம்பை எழுதிய 'சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை' சிறுகதைத் தொகுப்புக்கு 2021ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாடமி விருது அறிவிக்கப் பட்டது. அதேபோல, 'அம்மாவுக்கு மகள் சொன்ன உலகின் முதல் கதை' என்கிற சிறார் கதை தொகுப்புக்காக எழுத்தாளர் மு.முருகேஷுக்கு பால சாகித்ய விருது அறிவிக்கப்பட்டது.

டிச.30: தேசிய அளவில் புதிய கண்டுபிடிப்புகளில் சிறந்து விளங்கும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான 'அடல்' தரவரிசைப் பட்டியலில் சென்னை ஐஐடி தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக முதலிடம் பிடித்தது.

டிச. 31: ஓமைக்ரான் வகை கரோனா வைரஸ் பரவல் அதிகரித்துள்ள நிலையில் தமிழகத்தில் மீண்டும் புதிய கட்டுப் பாடுகளைத் தமிழக அரசு அமல்படுத்தியது.

டிச.31: துபாயில் நடைபெற்ற 19 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசியக் கோப்பை கிரிக்கெட் இறுதிப் போட்டியில் இலங்கையை வீழ்த்தி இந்தியா எட்டாவது முறையாக சாம்பியனாகி சாதனை படைத்தது.

ஜன.1: புளோரோனா என்கிற புதிய கரோனா வைரஸ் வேற்றுருவம் இஸ்ரேலில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

---

**7. வைர விழா காணும் சென்னையின் கணிதப் பெருமை**

இந்தியாவின் அறிவு வளர்ச்சிக்கும் அறிவியல் வளர்ச்சிக்கும் தமிழ் மண் தொன்றுதொட்டு பங்களித்துவந்திருக்கிறது.. பிரிட்டிஷ் ஆட்சியிடமிருந்து விடுதலை பெற்ற பின், கல்வி உள்ளிட்ட வளர்ச்சி சார்ந்த குறியீடுகளில் முன்னேறிய நாடாக உருமாற்றும் கனவைச் சுமந்த தலைவர்களின் ஆட்சி இந்தியாவில் அமைந்தது. நாடு முழுவதும் பல்கலைக்கழகங்கள், ஆய்வு நிறுவனங்கள், உயர்கல்வி நிறுவனங்கள் அமைக்கப்படுவதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. நவீன கல்வி – ஆய்வுக்கான கட்டமைப்பை உருவாக்குவதில் அரசும் லட்சிய வேட்கை கொண்ட தனிநபர்களும் பங்களித்தனர்.

அந்த வகையில் புகழ்பெற்ற இந்திய இயற்பியலாளர் அல்லாடி ராமகிருஷ்ணன் 1962இல் சென்னையில் கணித அறிவியல் நிறுவனம் (Institute Of Mathematical Sciences) என்னும் சுயாதீன ஆய்வு மையத்தைத் தொடங்கினார். அதன் இயக்குநராகவும் அவர் செயல்பட்டார்.

சென்னை தரமணியில் அமைந்துள்ள கணித அறிவியல் நிறுவனம் கோட்பாடுசார் அறிவியல் பிரிவுகளுக்கான தேசிய ஆய்வு மையமாகச் செயல்பட்டுவருகிறது. 1984இலிருந்து இந்திய அணு ஆற்றல் துறையின் நிதியளிப்பில் இயங்கிவருகிறது. 2022 ஜனவரி 3 அன்று 60 ஆண்டுகளை நிறைவுசெய்திருக்கும் கணித அறிவியல் நிறுவனத்தைப் பற்றி அதில் நீண்ட காலம் பணிபுரிந்த பேராசிரியர் ஆர்.ராமானுஜத்துடன் பேசியதிலிருந்து சில பகுதிகள்:

"கோட்பாடுசார் இயற்பியல் ஆய்வுக்கான மையமாக இது தொடங்கப்பட்டது. இயற்பியலுக்கான நோபல் பரிசை வென்ற எஸ்.சந்திரசேகர் இதைத் தொடங்கிவைத்தார். 5–6 ஆய்வாளர்களை உள்ளடக்கிய மையமாகத் தொடங்கப்பட்டு வளர்ந்துவந்தது. அணு ஆற்றல் துறையின் வருகைக்குப் பிறகு மேலும் பல மடங்கு வளர்ந்தது. கணிதம் (Mathematics), கோட்பாடுசார் இயற்பியல் (Theoretical Physics), கோட்பாடுசார் கணினி அறிவியல் (Theoretical Computer Science), கணக்கீட்டு உயிரியல் (Computational Biology) ஆகிய நான்கு துறைகளில் இங்கே ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அந்த ஆய்வுகளின் அடிப்படையில் முனைவர் பட்டம், ஒருங்கிணைந்த முனைவர் பட்டம் (Integrated Phd) ஆகியவை வழங்கப்படுகின்றன.

முக்கிய ஆய்வுகள்

கணிதத்தில் எண் கோட்பாடு, வடிவியல் உள்ளிட்ட பிரிவுகளில் பல முக்கியமான ஆய்வுத் திட்டங்கள் உள்ளன. கோட்பாடுசார் இயற்பியல் பிரிவில் நியூட்ரினோ இயற்பியல், துகள் இயற்பியல் உள்ளிட்டவை சார்ந்து ஆய்வுகள் நடைபெறுகின்றன. கணக்கீட்டு உயிரியலில் உயிரியல் துறையில் நிகழும் பல புதிய கண்டுபிடிப்புகளின் கணக்கீட்டு அம்சங்கள் குறித்த ஆய்வுகள் நடைபெறுகின்றன. கோட்பாடுசார் கணினி அறிவியலில் அல்காரிதம்கள், கணக்கீட்டுக் கோட்பாடு, பாதுகாப்பு கோட்பாடு, கேம் கோட்பாடு உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் ஆய்வுகள் நடத்தப்படுகின்றன.

அறிவியலைப் பரப்பும் பணி

நிறுவனத்துக்கு வெளியில் உள்ள மாணவர்கள், ஆசிரியர்களிடையே கணிதம், அறிவியலைப் பரப்புவதற்கும் அவர்களின் அறிவியல் புரிதலை மேம்படுத்துவதற்குமான பல்வேறு திட்டங்கள் (Outreach Programmes) ஆண்டு முழுவதும் கணித அறிவியல் நிறுவனத்தில் நடத்தப்படுகின்றன. இந்தத் திட்டங்களின் கீழ் ஒவ்வோர் ஆண்டும் உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் – ஆசிரியர்கள், கல்லூரி மாணவர்கள் – ஆசிரியர்கள், பாலிடெக்னிக் கல்லூரி ஆசிரியர்கள் உள்ளிட்டோருக்குத் தனித்தனி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

இந்த வகுப்புகளில் பங்கேற்க விரும்பும் மாணவர்களும் ஆசிரியர்களும் இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ள வழிமுறையின்படி பதிவுசெய்துகொள்ள வேண்டும். ஒவ்வோர் ஆண்டும் தேசிய அறிவியல் நாளன்று (பிப்ரவரி 28) 'சயின்ஸ் அட் தி சபா' (Science at the Sabha) என்னும் பெயரில் அறிவியல் ஆய்வு குறித்து பொதுமக்களுக்கு விளக்குவதற்கான நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. இப்படியாக ஆய்வு மட்டுமல்லாமல் மக்களிடையே கணிதத்தையும் அறிவியலையும் கொண்டு சேர்ப்பதற்கும் கணித அறிவியல் நிறுவனம் தொடர்ந்து பங்களித்துவருகிறது.

60ஆம் ஆண்டு சிறப்பு நிகழ்ச்சிகள்

60 ஆண்டுகள் நிறைவை ஒட்டி இந்த ஆண்டு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் திட்டமிடப்பட்டுள்ளன. பெரும்பாலான நிகழ்ச்சிகள் கணிதத்தின் முக்கியத்துவம், எப்போதைக்குமான பொருத்தப்பாடு, சமகால பயன்பாடுகள் ஆகியவை குறித்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டவை. பருவநிலை மாற்றத்தின் தீய விளைவுகளிலிருந்து உலகை மீட்பதற்கான திட்டங்கள் அத்தியாவசியம் ஆகியிருக்கும் இந்தக் காலகட்டத்தில், பருவநிலை மாதிரியாக்கம், புவியைப் பாதுகாப்பதற்கான கணிதம் குறித்த நிகழ்ச்சிகள் நடத்தப்படவிருக்கின்றன. குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால் இந்த ஆய்வு மையத்தில் முன்பு பணியாற்றிய ஒரு ஆராய்ச்சியாளர் இமாலயத்தில் பனிச்சிகரங்கள் உருகுவது எப்படி என்பதைக் கணித மாதிரியாக்கம் மூலம் ஆய்வு செய்துவந்தார். பெருந்தொற்றுக் காலத்தில் தொற்றுப் பரவல், நோய்ப் பரவல் மாதிரியாக்கம் ஆகியவற்றைக் கணிதவியல் அடிப்படையில் புரிந்துகொண்டு

திட்டங்களை வகுப்பதற்கான முயற்சிகள் நடைபெற்றுவருகின்றன. இவை குறித்தும் நிகழ்ச்சிகள் நடத்தப்படவிருக்கின்றன.

சர்வதேச கவனம்

கணித அறிவியல் நிறுவனத்தில் சர்வதேச தரத்திலான ஆய்வுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இங்கே ஆய்வு செய்தவர்களின் ஆய்வேடுகள் சர்வதேச ஆய்விதழ்களில் வெளியாகியுள்ளன. கணித அறிவியல் நிறுவனத்தில் கோட்பாடுசார் கணினி அறிவியல் பிரிவைச் சேர்ந்த பேராசிரியர் சாகேத் சௌரப், கணித அறிவியலுக்கான 2021ஆம் ஆண்டின் மதிப்புமிக்க 'சாந்தி ஸ்வரூப் பட்நாகர் விருதைப்' பெற்றார். கணித அறிவியல் நிறுவனத்தின் முன்னாள் இயக்குநர் ஆர்.பாலசுப்ரமணியன் பிரெஞ்சு அரசால் வழங்கப்படும் 'ஷெவாலியே' விருதைப் பெற்றுள்ளார்.

---

**8. புளூ, கரோனா வைரஸ் கலவையான புளூரோனா காய்ச்சல் இஸ்ரேலில் கண்டுபிடிப்பு**

இஸ்ரேல் நாட்டில் புளூ, கரோனா வைரஸ் கலவையான புளூரோனா காய்ச்சல் கண்டறியப்பட்டுள்ளது.

சீனாவில் கடந்த 2019 இறுதியில் கரோனா வைரஸ் பரவுவது கண்டறியப்பட்டது. அங்கிருந்து உலகம் முழுவதும் வைரஸ் வியாபித்து பரவியது. தற்போது கரோனா வைரஸ் மரபணு மாறி புதிய வைரஸ்கள் உருவாகி வருகின்றன.

இந்த வரிசையில் ஒமைக்ரான் என்ற புதிய வகை கரோனா வைரஸ் பல்வேறு நாடுகளில் அதிவேகமாகப் பரவி வருகிறது. கரோனா வைரஸின் டெல்டாவும் ஒமைக்ரானும் கலந்து டெல்மைக்ரான் என்ற புதிய வைரஸ் உருவாகியிருப்பதாக விஞ்ஞானிகள் அண்மையில் எச்சரிக்கை விடுத்தனர்.

இந்த சூழலில் இஸ்ரேலின் பேட்டா டேக்வா நகரில் உள்ளமருத்துவமனையில் கர்ப்பிணி ஒருவர் அண்மையில் கரோனாஅறிகுறிகளுடன் அனுமதிக்கப்பட்டார். அவரது சளி மாதிரியை பரிசோதித்தபோது, ஒரே நேரத்தில் புளூ காய்ச்சல், கரோனாகாய்ச்சலால் பாதிக்கப்பட்டிருப் பது தெரியவந்தது. புதிய வகை காய்ச்சலுக்கு இஸ்ரேல் மருத்துவர்கள் புளூரோனா என்று பெயரிட்டுள்ளனர்.

இஸ்ரேலில் கர்ப்பிணிகளிடையே புளூ காய்ச்சல் பரவுவது அதிகரித்து வருகிறது. அவர்களில் பலர் புளூரோனா காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்று மருத்துவர்கள் சந்தேகிக்கின்றனர். எனவே புளூ, கரோனா வைரஸ் பரவலை தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இஸ்ரேலில் பெரும்பாலானோருக்கு 3–ம் தவணை கரோனாவைரஸ் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. தற்போது அந்தநாட்டில் 5–வது கரோனா அலைஏற்பட்டிருப்பதால் 4–ம் தவணைதடுப்பூசி செலுத்துவதில் தீவிரம் காட்டப்படுகிறது.

இஸ்ரேல் விஞ்ஞானிகள் கூறும்போது, "புளூரோனாகாய்ச்சலால் பாதிக்கப்படுவோருக்கு மூச்சுத் திணறல், உடல் உறுப்புகள் செயலிழப்பு, மாரடைப்பு, பக்கவாதம் உள்ளிட்ட பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே வழக்கமான கரோனா தடுப்பு நடைமுறைகளை கண்டிப்புடன் பின்பற்ற வேண்டும்" என்றனர்.

---

**9. குழந்தைகளுக்கு எதிரான இணையதளவழி குற்றங்கள் 2020–ல் 261 சதவீதம் அதிகரிப்பு**

நாடு முழுவதும் கடந்த 2020–ம் ஆண்டில் குழந்தைகளுக்கு எதிரான இணையவழி குற்றங்கள் 261 சதவீதம் அதிகரித்துள்ளது.

நாடு முழுவதும் பதிவாகும் பல்வேறு குற்றங்கள் தொடர்பான புள்ளிவிவரங்களை தேசிய குற்ற ஆவண அமைப்பு (என்சிஆர்பி) ஆண்டுதோறும் வெளியிடுகிறது. அந்த வகையில் கரோனா ஊரடங்கு அமலில் இருந்த 2020–ம் ஆண்டில் பதிவான குழந்தைகளுக்கு எதிரான இணையவழி குற்றங்கள் தொடர்பான புள்ளி விவரங்களை வெளியிட்டுள்ளது.

இதன்படி, நாடு முழுவதும் குழந்தைகளுக்கு எதிரான இணையவழி குற்றங்கள் 261 சதவீதம் அதிகரித்துள்ளது. இதுதொடர்பாக 116 பேர் கைது செய்யப்பட்ட நிலையில் ஒருவர் மட்டும்குற்றவாளி என அறிவிக்கப்பட் டுள்ளார்.

மகாராஷ்டிராவில் அதிகபட்சமாக 207 வழக்குகள் பதிவாகி உள்ளன. இந்த மாநிலத்தில் 2019–ம் ஆண்டில் பதிவான 70 வழக்குகளுடன் ஒப்பிடும்போது இது 196 சதவீதம் அதிகம் ஆகும். 2019–ல் முதலிடத்தில் இருந்த உத்தரபிரதேசம் 2020–ல் 197 வழக்குகளுடன் 2–ம் இடத்தில் உள்ளது. கர்நாடகா (144), கேரளா (126), ஒடிசா (71), ஆந்திரா (52) ஆகிய மாநிலங்கள் அடுத்தடுத்த இடங்களைப் பிடித்துள்ளன.

இதுகுறித்து இத்துறை சார்ந்தநிபுணர்கள் கூறும்போது, "ஊரடங்கு காலத்தில் இணைய தளங்களை குழந்தைகள் பார்ப்பது அதிகரித்துள்ளது. அத்துடன், குழந்தைகள் தொடர்பான ஆபாச வீடியோக்களும் அதிக அளவில் உருவாகி உள்ளன.

இதில் பெரும்பாலான வீடியோக்கள் சம்பந்தப்பட்ட குழந்தைகளின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் அவர்களுக்கு தெரிந்த நபர்களே பதிவு செய்துள்ளனர்" என்றனர்.

---

**1.** KSLV–II நூரி ஏவுகலமானது பின்வரும் எந்த நாட்டின் முதல் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட விண்வெளி ஏவுகலம் ஆகும்?



**அ) தென் கொரியா ☑**

ஆ) இஸ்ரேல்

இ) ஐக்கிய அரபு அமீரகம்

ஈ) வங்காளதேசம்

✓ தென் கொரியாவின் முதல் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட விண்வெளி ஏவுகலமான KSLV–II நூரி ஏவுகலம் தளர்வான ஹீலியம் தொட்டியின் காரணமாக தோல்வி அடைந்தது. இந்த ஏவுகலத்தின் மூன்று நிலைகளும் செயல்பட்டு, 700 கிலோமீ உயரம் சென்று, 1.5 டன் தாங்கு சுமையை வெற்றிகரமாக பிரித்தது.

✓ மூன்றாம் நிலை எந்திரம் திட்டமிடப்பட்டதை விட 46 விநாடிகள் முன்னதாக எரிவதை நிறுத்தியதால் இந்தத் திட்டம் தோல்வியடைந்தது.

---

**2.** 'சிறந்த சுகாதார புகையிலா' பிரச்சாரத்தைத்தொடங்கிய நாடு எது?



அ) ஆஸ்திரேலியா

**ஆ) UK ☑**

இ) இந்தியா

ஈ) பிரான்ஸ்

✓ UK அரசாங்கம் 'Better Health Smoke–Free' என்ற பெயரில் ஒரு புதிய முயற்சியைத் தொடங்கியுள்ளது. இது வயது வந்தோரிடையே புகைப்பிடிப்பதால் ஏற்படும் தாக்கத்தை எடுத்துக்கூறுகிறது. புகைப்பிடிப்பவர்களை புகைபிடிப்ப –தை விட்டுவிடுமாறு இப்பிரச்சாரம் வலியுறுத்திகிறது.

✓ இந்தப் பிரச்சாரத்தால் வெளியிடப்பட்ட தரவுகளின்படி, புகைபிடிக்கும் பெற்றோரை உடைய 4.9 சதவீத பதின்ம வயதினரும் அந்தப் பழக்கத்தை ஏற்றுக்கொண்டுள்ளனர். 2030ஆம் ஆண்டுக்குள் மக்கள் புகையிலிருந்து விடுபட நியூசிலாந்து இலக்கு நிர்ணயித்துள்ளது.

---

**3.** 'நிதி நிலைத்தன்மை அறிக்கை' என்பது எந்த நிறுவன –த்தால் வெளியிடப்பட்ட முதன்மை அறிக்கையாகும்?

அ) NITI ஆயோக்

**ஆ) இந்திய ரிசர்வ் வங்கி ☑**

இ) உலக வங்கி

ஈ) ஆசிய வளர்ச்சி வங்கி

✓ 'நிதி நிலைத்தன்மை அறிக்கை' என்பது 'இந்திய ரிசர்வ் வங்கி'யால் அரையாண்டுக்கு ஒருமுறை வெளியிடப்படும் ஓர் அறிக்கையாகும். இந்த அறிக்கையின் அண்மைய பதிப்பை ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ளது.

✓ இவ்வறிக்கையின்படி, இந்தியாவில் சில்லறை வர்த்தகம் தலைமையிலான கடன் வளர்ச்சி மாதிரியானது நுகர் –வோர் நிதி இலாகாவில் இயல்புநிலை அதிகரிப்பு மற்றும் புதிய கடன் பிரிவில் மந்தநிலை ஆகிய 2 காரணிகளால் சிக்கல்களை எதிர்கொள்ளத் தொடங்கியுள்ளது.

---

**4.** சபா அல்–கலித் அல்–சபா, எந்த நாட்டின் பிரதமராவார்?



அ) பஹ்ரைன்

**ஆ) குவைத் ☑**

இ) ஓமன்

ஈ) சவூதி அரேபியா

✓ சபா அல்–கலித் அல்–சபா குவைத்தின் பிரதமராகவுள்ளார். குவைத் சமீபத்தில் ஒரு புதிய நிதியமைச்சர் மற்றும் மூன்று எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களுடன் ஒரு புதிய அமைச்சரவையை அமைத்துள்ளது. இந்தப் புதிய அமைச்சரவையில் 1 பெண் அமைச்சர் மட்டுமே உள்ளார். இதில் மூன்று எதிர்க்கட்சி எம் பி'க்களும், ஒரு அரசு சார்பு சட்டமியற்றுநரும் அடங்குவர்.

---

**5.** BRICS புதிய வளர்ச்சி வங்கியின் புதிய உறுப்பினராக இணையவுள்ள நாடு எது?



அ) இத்தாலி

**ஆ) எகிப்து ☑**

இ) இஸ்ரேல்

ஈ) வங்காளதேசம்

✓ BRICS புதிய வளர்ச்சி வங்கி (NDB) எகிப்தை தனது புதிய உறுப்பினராக சேர்க்கப்போவதாக அறிவித்தது. NDB ஆனது BRICS நாடுகளான பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென்னாப்பிரிக்க ஆகிய நாடுகளால் 2015ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. வங்காளதேசம், ஐக்கிய அரபு அமீரகம் (UAE) மற்றும் உருகுவே ஆகிய நாடுகளுக்குப் பிறகு NDB'இல் இணைக்கப்பட்ட 4ஆவது புதிய உறுப்பினர் எகிப்து ஆகும். மார்கோஸ் டிராய்ஜோ, புதிய வளர்ச்சி வங்கியின் தலைவராக உள்ளார்.

---

**6.** சீரமைக்கப்பட்ட விநியோகத் துறை திட்டத்தை (RDSS) செயல்படுத்துகிற மத்திய அமைச்சகம் எது?

**அ) எரிசக்தி அமைச்சகம் ☑**

ஆ) அணுசக்தி அமைச்சகம்

இ) உள்துறை அமைச்சகம்

ஈ) நிலக்கரி அமைச்சகம்

✓ நிதி உதவி வழங்குவதன்மூலம் DISCOM'களின் செயல் திறனை மேம்படுத்த இந்திய அரசாங்கம் சீரமைக்கப்பட்ட விநியோகத் துறை திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. இரண்டு பொதுத்துறை நிறுவனங்கள்–REC மற்றும் PFC ஆகியவை இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கான மைய முகமைகளாக பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

✓ அஸ்ஸாம் மற்றும் மேகாலயா ஆகியவை அண்மையில் சீரமைக்கப்பட்ட விநியோகத் துறை திட்டத்திற்கு (RDSS) முன்னோடிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

---

**7.** "ஏர்கன் சரண்டர் அபியான்" செயல்படுத்தப்படுகிற மாநிலம் / யூடி எது?

அ) சத்தீஸ்கர் **ஆ) அருணாச்சல பிரதேசம் ☑**

இ) அஸ்ஸாம் ஈ) மேற்கு வங்காளம்



✓ அருணாச்சல பிரதேச மாநிலத்தில் "ஏர்கன் சரண்டர் அபியான்" செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்தின்கீழ், பறவைகளை கண்மூடித்தனமாக வேட்டையாடுவதைத் தடுக்க மக்கள் தங்கள் ஏர்கன்களை தானாக முன்வந்து கொடுக்கவேண்டும். "ஏர்கன் சரண்டர் அபியான்" குறித்து பிரதமர் மோடி சமீபத்தில் பேசினார்.

---

**8.** **HDFC வங்கி பின்வரும் எந்த வங்கியுடன் இணைந்து தனது வங்கிச் சேவைகளை புறநகர் & ஊரகங்களுக்கு விரிவுபடுத்தியுள்ளது?**

**அ) இந்திய அஞ்சல் கொடுப்பனவு வங்கி (IPPB) ☑**

ஆ) கேரளா கிராமின் வங்கி

இ) தமிழ்நாடு கிராம வங்கி

ஈ) சௌத் இந்தியன் வங்கி

✓ HDFC வங்கி, இந்தியா போஸ்ட் பேமெண்ட்ஸ் வங்கியுடன் (IPPB) இணைந்து தனது வங்கிச்சேவைகளை புறநகர் & ஊரகங்களுக்கு விரிவுபடுத்தியுள்ளது. IPPB'இன் 4.7 கோடி வாடிக்கையாளர்களுக்கு நிதியுதவி வழங்குவதன்மூலம், HDFC & IPPB வங்கிக்கு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. IPPB வாடிக்கையாளர்களில் 90% பேர் ஊரகங்களில் வசிக்கின்றனர்.

---

**9.** **UNSC'இன் பயங்கரவாத எதிர்ப்புக்குழுவின் தலைமை –யாக இந்தியா செயல்படவுள்ள ஆண்டு எது?**

**அ) 2022 ☑**

ஆ) 2023

இ) 2024

ஈ) 2025




✓ நடப்பு 2022ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு அவைக்கு (UNSC) இந்தியா தலைமைதாங்கவுள்ளது.

✓ இதற்கு முன்பு கடந்த 2012'இல் இந்தியா இந்தக் குழுவின் தலைவராக இருந்தது. இந்தப்பதவிக்காலத்தில், தலிபான் தடைகள் குழுவிற்கும் இந்தியா தலைமை வகிக்கிறது. 15 நாடுகளைக் கொண்ட இவ்வவைக்கு இந்தியா இரண்டு ஆண்டுகளுக்குத் தலைமை வகிக்கும்.

---

**10.** **மத்திய சாலைப்போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தின் அண்மைய வழிகாட்டுதல்களுடன் தொடர்புடைய 'FFV–SHEV'இன் விரிவாக்கம் என்ன?**

அ) Flex Fibre Strong Hybrid Electric Vehicles

**ஆ) Flex Fuel Strong Hybrid Electric Vehicles ☑**

இ) Flex Fibre Substitute Hybrid Electric Vehicles

ஈ) Flex Fuel Strong Hybrid Electric Vehicles

✓ மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் Flex Fuel Vehicles (FFV) மற்றும் Flex Fuel Strong Hybrid Electric Vehicles (FFV–SHEV) தொடர்பான வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது. ஆட்டோமொபைல் உற்பத்தியாளர்கள் BS–VI விதிமுறைகளுக்கு உட்பட்ட வாகனங்களை 6 மாத காலத்திற்குள் தயாரிக்க அறிவுறுத் –தப்படுகிறார்கள்.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. சிறுதானியங்களுக்கு ஏன் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்?**

நம் முன்னோர்களால் ஆதி காலத்திலிருந்தே உண்ணப்பட்டுவந்த ஆரோக்கியமான உணவில் முதல் இடத்தைப் பிடிப்பவை சிறுதானிய வகைகளான குதிரைவாலி, கேழ்வரகு, தினை, வரகு, சாமை, கம்பு, பனிவரகு, சோளம் போன்றவைதான். அதிக சத்துக்களுடன் நிறைய மருத்துவ குணங்களையும் உள்ளடக்கிய சிறுதானியங்கள் ஏழைகளின் உணவாக மட்டுமே பார்க்கப்பட்ட நிலை மாறி, சிறுதானிய உணவுப் பழக்கம் வீடுகளில் தொடங்கி உணவகங்கள் வரை பரவத் தொடங்கியுள்ளது.

எனவே, இந்தியாவின் பாரம்பரியமிக்க சிறுதானிய வகைகளை உலக மக்களிடையே பிரபலப்படுத்தும் விதமாக இந்தியாவுடன் வங்கதேசம், கென்யா, நேபாளம், நைஜீரியா, ரஷ்யா, செனகல் ஆகிய நாடுகள் இணைந்து எடுத்த முன்னெடுப்பை 70 நாடுகள் வழிமொழிய 193 ஐ.நா. சபையின் உறுப்பு நாடுகள் இந்தத் தீர்மானத்தை ஒருமனதாக ஆதரித்ததால், வருகிற 2023–ம் ஆண்டை சிறுதானியங்களுக்கான சர்வதேச ஆண்டாக ஐ.நா. அறிவித்திருக்கிறது.

மருந்தாகும் சிறுதானிய உணவுகள்

உடலுக்கு நல்லது என்று பல உணவு வகைகளைப் பயன்படுத்தும் நாம், சிறுதானிய உணவுகளை உண்பதைக் காலப்போக்கில் மறந்துவிட்டோம். ஆரோக்கியத்தைப் பேணுவதற்குத் தேவையான அனைத்துச் சத்துக்களும் சிறுதானியங்களில் உள்ளன. சிறுதானியங்களில் நார்ச் சத்து, கால்சியம், இரும்பு, பாஸ்பரஸ் போன்ற தாது உப்புக்கள் அதிகமாகக் காணப்படுவதால் நாம் உண்ணும்போது நம் உடலுக்கு ஆரோக்கியம் கிடைக்கிறது. சிறுதானியங்களில் சத்துக்களுடன் பல மருத்துவக் குணம் கொண்ட நுண்ணுயிர் எதிர்ப்பு வேதிப்பொருட்களும் ஆக்சிஜனேற்ற எதிர்ப்பொருட்களும் உள்ளன. சிறுதானியங்களில் உள்ள கிளைசிமிக் இன்டெக்ஸ் சர்க்கரை நோயாளிகளுக்குச் சிறந்தது.

இதிலுள்ள மாவுச்சத்து மெதுவாகச் செரிமானமாவதால் சர்க்கரை நோயாளிகளுக்குச் சிறந்த உணவு ஆகும். சிறுதானியங்களில் உள்ள லிக்னின் என்ற பொருள் மருத்துவக் குணம் உடையது. இது குடல் சுத்தமாவதற்கு மிகவும் உதவுகிறது. மாதவிடாய் பிரச்சினை, இதய நோய், ரத்த அழுத்தம் போன்றவற்றைச் சீராக்கும் வல்லமை சிறுதானிய உணவுக்கு உண்டு. குழந்தைகளுக்கு ஆஸ்துமா, தும்மல் போன்ற பிரச்சினைகள் வராமல் சிறுதானியங்கள் தடுக்கின்றன. சிறுதானியங்களில் உள்ள பாஸ்பரஸ், மக்னீசியம் போன்ற தாதுப்பொருட்கள் உடல் செல்களை உறுதிப்படுத்தி எலும்புகளுக்கு உறுதி அளிக்கின்றன.

சாகுபடிக்கேற்ற சிறப்பியல்புகள்

சிறுதானிய சாகுபடியால் ஏற்படும் நன்மைகள் பற்றியும், அவை நம்முடைய சூழலுக்கு எவ்வாறு ஏற்றதாக

உள்ளன என்பது பற்றியும் பெரும் பகுதியினருக்குத் தெரிவதில்லை. சிறுதானியங்கள் எளிதாக அனைவரும் சாகுபடி செய்ய ஏதுவான பல சிறப்பியல்புகளைக் கொண்டவை. நெல் விளைவதற்கு 120–180 நாட்கள் மற்றும் அதிக அளவு தண்ணீர் (1,000 – 4,500 மி.மீ) தேவைப்படும். ஆனால், சிறுதானியங்களுக்கு குறைவான அளவு தண்ணீர் (250–400 மி.மீ) இருந்தாலே போதுமானது.

பெரும்பாலான சிறுதானியங்கள் பயிரிடப்பட்டு மிகக் குறுகிய காலத்தில் அதாவது 65–90 நாட்களுக்குள் அறுவடைக்கு வந்துவிடும். மிதமான தட்பவெப்ப நிலையிலும் நன்றாக வளரக்கூடியவை, மண்வளம் குறைந்த இடங்களிலும் சாகுபடி செய்யலாம், மானாவாரிச் சாகுபடிக்கு ஏற்றவை, வறட்சியைத் தாங்கி வளரக்கூடியவை, சிறுதானியங்கள் சாகுபடியில் பூச்சி, நோய்த் தாக்குதல் மிகக் குறைவு. மற்ற பயிர்களுக்குக் கொடுப்பதைப் போல அதிகமான ஊட்டத்தை சிறுதானியப் பயிர்களுக்குக் கொடுக்கத் தேவையில்லை.

குறைவான அளவுக்குக் கொடுத்தாலே போதுமானது. நெல் மாதிரியான பகலில் 'பூக்கும்' பயிர்களில் மகரந்தச் சேர்க்கை நடைபெறும்போது, அதிகமான வெப்பம் இருந்தால் சரியான முறையில் விதைகள் உற்பத்தியாகாது. ஆனால், சிறுதானியப் பயிர்கள் அனைத்தும் இரவு 12 மணி முதல் அதிகாலை 4.30 மணிக்குள் மகரந்தச் சேர்க்கையை முடித்துக்கொள்வதால், வெப்பநிலைப் பிரச்சினைகள் இல்லாமல் முழுமையான அளவில் மகரந்தச் சேர்க்கை நடைபெற்று அதிக மகசூல் கிடைக்கும். புவி வெப்பமாதலால் ஏற்படும் இழப்புகள் சிறுதானியத்தில் மிகவும் குறைவு. சிறுதானியச் சாகுபடியில் குறைந்த அளவு வேலையில், குறைந்த செலவில் அதிக வருமானம் கிடைக்கும். சிறு, குறு விவசாயிகளின் பொருளாதார வளர்ச்சியில் சிறுதானியங்கள் சாகுபடி பெரும் பங்கு வகிக்கிறது.

சிறுதானியப் பயிர்களில் ஒன்றான சாமையில் மல்லியச்சாமை, பெருஞ்சாமை, வெள்ளச்சாமை, கட்டவெட்டிச்சாமை, திருகுலாச்சாமை, சடஞ்சாமை, கருஞ்சாமை, செஞ்சாமை, சிட்டஞ்சாமை, பில்லுசாமை போன்ற நாட்டு ரகங்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. தினையில் கெண்டித்தினை, செந்தினை, மரத்தினை, பாலாந்தினை, வெள்ளைதினை, பைந்தினை, சிறுதினை, நாட்டுத்தினை, மாப்புத்தினை போன்ற நாட்டு ரகங்களும். வரகுப் பயிரில் திரிவரகு, புறவரகு, பெருவரகு, உடும்புக்காலி வரகு, செங்காலி வரகு, சிட்டுக்கீச்சான் வரகு போன்ற நாட்டு ரகங்களும்... கேழ்வரகுப் பயிரில் சாட்டைக் கேழ்வரகு, காரக் கேழ்வரகு, கண்டாங்கிக் கேழ்வரகு, பெருங்கேழ்வரகு, பிச்சாகாடிக் கேழ்வரகு போன்ற ரகங்களும் பரவலாகக் காணப்படுகின்றன.

சோளத்தில் செஞ்சோளம், கருஞ்சோளம், உப்பஞ்சோளம், கருப்பு ரட்டு சோளம், சிகப்பு ரட்டு சோளம், கோவில்பட்டி மொட்ட வெள்ளைச் சோளம், அரியலூர் நெட்ட மஞ்ச சோளம் போன்ற நாட்டு ரகங்கள் காணப்படுகின்றன. சிறுதானியத்தில் நாட்டு ரகங்களுடன், மகசூல் அதிகம் தரக்கூடிய பல பல்கலைக்கழக ரகங்களும் வெளியிடப்பட்டுள்ளன. கேழ்வரகில் பையூர் 2, கோ 14, கோ 15 போன்ற ரகங்கள், தினையில் கோ 7 என்பவற்றில் அதிகக் கிளைப்பு வரும், கதிரும் நீளமாக இருக்கும். பனிவரகு என்பது அற்புதமான ஒரு சிறுதானியம், பனிக்காலத்தில் எந்தப் பாசனமும் இல்லாமலேயே பனிப்பொழிவினால் கிடைக்கும் நீரிலேயே வளர்ந்துவிடக் கூடியது.

சிறுதானியப் பயிர்களில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளவும் பல புதிய ரகங்கள் வெளியிடவும் திருவண்ணாமலை மாவட்டம் அத்தியந்தலில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் 2013 முதல் சிறுதானிய மகத்துவ மையத்தைத் தொடங்கி கேழ்வரகு, தினை, சாமை, பனிவரகு போன்ற சிறுதானியப் பயிர்களில் ATL 1 என்ற ரகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இன்னும் பல ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

கரோனா பெருந்தொற்று பரவத் தொடங்கியதிலிருந்து மக்களின் உணவு முறையில் ஊட்டச்சத்து மற்றும் நோய் எதிர்ப்புத் திறன் நிறைந்த உணவு வகைகள் இடம்பெறத் தொடங்கியுள்ளன. இந்நிலையில், இவ்வளவு சிறப்பு மிக்க நம் நிலத்தின் பயிர்களான சிறுதானியச் சாகுபடிக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, கவனம் செலுத்துவதன் மூலம் உடல் ஆரோக்கியம் மட்டுமின்றி, விவசாய நிலங்களின் சூழலியல் சமநிலையையும் பாதுகாத்து சிறுதானியங்களின் உற்பத்தியில் தன்னிறைவு அடைய முடியும்.

---

**2. தவறும் வானிலை முன்கணிப்புகள்: தீர்வுதான் என்ன?**

ஒரு பேருந்து நிறுத்தத்தில் அனைவரும் குடைபிடித்து நிற்கிறார்கள். ஒருவர் மட்டும் குடையில்லாமல் மழையில் நனைகிறார். பக்கத்தில் இருப்பவரிடம் குடை இல்லாதவர் எரிச்சலுடன் இப்படிக் கேட்கிறார், "நான் வானிலைத் துறையில் வேலை பார்க்கிறேன் என்பது உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று. மழை பெய்யும் என்பதை ஊரே அறிந்திருக்கும்போது, வானிலைத் துறை முன்னறிவிப்புகள் மட்டும் ஏன் அதை கணிக்கத் தவறுகின்றன என்கிற கேள்வியை 2007–ல் ஆர்.கே.லக்ஷ்மண் வரைந்த ஒரு கேலிச்சித்திரம் நறுக்கென உணர்த்திவிடுகிறது. 14 ஆண்டுகள் கடந்தும் இந்திய வானிலை ஆய்வுத் துறை அதேபோன்ற விமர்சனங்களை எதிர்கொண்டுதான் வருகிறது.

2021 நவம்பர் 7, அதிகாலையில் பெய்த 21 செ.மீ. மழை, டிசம்பர் மாதம் 30–ல் ஒருசில மணி நேரத்தில் 15 செ.மீ–க்கு மேல் பெய்த மழையைப் பற்றி சென்னை வானிலை ஆய்வு மையம் முன்கூட்டியே எச்சரிக்கை விடுத்திருக்கவில்லை. இந்தப் பெருமழையால் சென்னை வெள்ளத்தில் மிதக்கத் தொடங்கிவிட்ட பிறகு, மழை தீவிரமாக இருக்கும் என்று அந்த மையம் எச்சரிக்கை விடுத்தது மக்களிடையே ஏமாற்றத்தையும் அயர்ச்சியையும் ஏற்படுத்தியது. டிசம்பர் 30 திடீர் மழை குறித்து எச்சரிக்கத் தவறியதாகக் குற்றம்சாட்டி, சென்னை வானிலை ஆய்வு மைய முன்கணிப்பு வசதிகளை

மேம்படுத்தும்படி உள்துறை அமைச்சர் அமித் ஷாவுக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் கடிதம் எழுதியிருக்கிறார்.

நவம்பர் 6 அன்று ஒரே இரவில் பெய்த 21 செ.மீ. மழை 2015–க்குப் பிறகு பெய்த மிகப் பெரிய மழை. அதே நேரம், மண்டல வானிலை ஆய்வு மையத்தின் 3 ரேடார்களில் சென்னை துறைமுகத்தில் உள்ள ரேடாரும் காரைக்காலில் உள்ள ரேடாரும் அதற்கு முன்னதாகவே பழுதுபட்டிருந்தன. வடகிழக்குப் பருவமழை தொடங்குவதற்கு முன் இந்த ரேடார்களில் பழுது நீக்கப்பட்டிருக்கவில்லை. மதுரை மக்களவை உறுப்பினர் சு.வெங்கடேசன் இது குறித்துப் பிரச்சினையை எழுப்பிய பிறகுதான் அவை பழுதாகியிருந்த தகவலே பொது வெளிச்சத்துக்கு வந்தது. அந்தக் காலத்தில் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள ரேடார் தரும் தகவல்களைக் கொண்டே சென்னை வானிலை ஆய்வு மையம் முன்கணிப்பை வெளியிட்டுவந்தது.

இரண்டு நாட்களுக்கு ஒரு முறை ஒரு வானிலை பலூனில் ரேடியோசோண்டே எனப்படும் கருவி வைக்கப்பட்டு, சென்னை, காரைக்காலில் பறக்கவிட்டு, வானிலை ஆய்வுத் துறை ஆராயும். இந்தக் கருவியே வளிமண்டல மேலடுக்கு சுழற்சி குறித்த தகவலைத் தரும். இந்தப் பரிசோதனை பல மாதங்களாகச் செய்யப்படவில்லை என்று தெரிகிறது. அது மட்டுமல்லாமல், குறிப்பிட்ட பகுதியில்–ஊரில் எவ்வளவு மழை பொழியும் என்பதையும் குறுகிய காலத்தில் கனமழை பெய்யும் Mesoscale நிகழ்வுகளையும் முன்கணிப்பது சிரமம் என்று வானிலை ஆய்வுத் துறை கூறுகிறது.

அறிவியல் அடிப்படை

முந்தைய தரவுகள், கணிப்புகள், கணினி மாதிரிகள் ஆகியவற்றின் அடிப்படையிலேயே மழை, புயல், வெள்ளம் குறித்த எச்சரிக்கைகளை இந்திய வானிலை ஆய்வுத் துறை வெளியிட்டுவருகிறது. வானிலைக் கணிப்பில் குறுகிய கால முன்கணிப்பு – குறிப்பிட்ட நிமிடத்திலிருந்து அடுத்த ஆறு மணி நேரத்துக்கு வழங்கப்படும் இந்தக் கணிப்பில் காற்றின் வேகம், காற்று வீசும் திசை ஆகியவை கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

டாப்ளர் வானிலை ரேடார் குறுகிய கால முன்கணிப்புக்குப் பயன்படுகிறது. அதேநேரம் நீண்ட கால முன்கணிப்பு என்பது அதிக காலத்துக்கானது. செயற்கைக்கோள் படங்கள் இரண்டு வகை முன்கணிப்புக்கும் பயன்பட்டாலும் புயல் போன்றவற்றின் நகர்வைத் தீர்மானிக்கவே பெரிதும் பயன்படுகின்றன. அதே நேரம், செயற்கைக்கோள் படங்கள் தரும் தகவல்களைக் கணினி மாதிரியில் உள்ளிட்டு, குறுகிய கால முன்கணிப்பைத் துல்லியமாகப் பெறுவது கடினம்.

வானிலை முன்கணிப்புக்கு 'குளோபல் ஃபோர்காஸ்ட் சிஸ்டம்ஸ்' (GFS) எனப்படும் ஒரே ஒரு மாதிரியை மட்டுமே இந்திய வானிலை ஆய்வுத் துறை பின்பற்றுகிறது. இப்படி ஒரு மாதிரியை மட்டும் பின்பற்றுவது தவறான முன்கணிப்புக்கு வழிவகுக்கும் என்று தனியார் வானிலை ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். மண்டல அளவிலான வானிலை முன்கணிப்பு சார்ந்து ஜி.எஃப்.எஸ். மாதிரியில் பிரச்சினை இருப்பதாக, புவி அறிவியல் அமைச்சகச் செயலாளர் ராஜீவன் தெரிவிக்கிறார். 35 ஆண்டுகளாகத் தென்மேற்குப் பருவமழை குறித்து ஆராய்ந்துவருபவர் இவர்.

முன்னெச்சரிக்கைகளில் கவனம்

புத்தாயிரத்தின் தொடக்க ஆண்டுகளில் சென்னை வானிலை ஆய்வு மையத்தின் இயக்குநர் பொறுப்புக்கு எஸ்.ஆர்.ரமணன் நியமிக்கப்பட்டார். அந்தக் காலத்தில் தொலைக்காட்சி செய்தி அலைவரிசைகளும் பெருகத் தொடங்கியிருந்தன. வானிலை முன்னெச்சரிக்கையைத் தமிழில் சுருக்கமாகவும் சுவாரசியமாகவும் அவர் கூறிய முறை சாதாரண மக்களையும் கவர்ந்தது. வானிலை முன்னெச்சரிக்கைகள் குறித்து மக்கள் பெரிதாகக் கவனம் கொள்ளாதிருந்த நிலையை அது சற்று மாற்றியது.

2015 சென்னை பெருவெள்ளத்துக்குப் பிறகு சென்னையில் தனியார் வானிலைப் பதிவர்கள் பெருகினார்கள். 'தமிழ்நாடு வெதர்மேன்' பிரதீப் ஜான், 'சென்னை ரெயின்ஸ்' ஸ்ரீகாந்த் உள்ளிட்ட பலரும் எந்த நேர இடைவெளியில் பெருமழை பெய்யும் – குறிப்பிட்ட எந்தப் பகுதியில் புயல் கரையைக் கடக்கும், எப்போது கூடுதல் முன்னெச்சரிக்கை தேவை என்கிற தகவல்களை வழங்கிவருகிறார்கள். சர்வதேச வானிலை மாதிரிகள் இணையத்தில் அளிக்கும் தரவுகளை ஆராய்ந்தே இந்த எச்சரிக்கைகளை அவர்களால் விடுக்க முடிகிறது.

அரசு நிறுவனத்தைப் போன்ற தீர்மானிக்கப்பட்ட பொறுப்புகள் அவர்களுக்கு இல்லையென்றாலும்கூட, சமூக ஊடகங்களில் தங்களைப் பின்தொடர்பவர்களின் நம்பிக்கையைக் காப்பாற்றும் வகையில் அவர்கள் தொடர்ச்சியாக இந்தத் தகவல்களைப் பதிவிட்டுவருகிறார்கள். இப்படித் தனியார் ஆய்வாளர்களே கூடுதல் தகவல்களைத் தர முடியும்போது, அரசு நிறுவனம் இன்னமும் பொத்தாம் பொதுவாக எச்சரிக்கை விடுத்துக்கொண்டிருப்பதால் என்ன பயன்?

வானிலை சார்ந்து ஒரு தனிநபர் அதிகபட்சமாக என்ன தெரிந்துகொள்ள விரும்புவார். குறிப்பிட்ட நிகழ்வு எப்போது தீவிரமாக இருக்கும்? அது தன்னை நேரடியாகப் பாதிக்குமா? பாதிப்பிலிருந்து எப்படித் தற்காத்துக்கொள்வது? –இவைதான் ஒருவருடைய எதிர்பார்ப்புகளாக இருக்கும். இது சார்ந்த தகவல்களை வானிலை ஆய்வு மையம் வெளியிடும்போதே மக்களின் நம்பிக்கையைப் பெற முடியும்.

வானிலை ஆய்வு மையத்தின் முன்னெச்சரிக்கை 100% சரியாக இருக்க வேண்டுமென யாரும் எதிர்பார்ப்பதில்லை. குறிப்பிட்ட நிகழ்வு சார்ந்து விடுக்கப்பட்ட எச்சரிக்கையால், தனக்குப் பயன் கிடைத்ததா என்றே பார்க்கிறார்கள். ஒருவருடைய கைபேசியிலேயே ஒரு நாளின் குறிப்பிட்ட நேரத்தின் வெப்பநிலை, மழையளவு, காற்று வீசும் வேகம் உள்ளிட்டவற்றைத் தெரிந்துகொள்ளும் நவீனச் செயலிகள் உள்ள நிலையில், வானிலை ஆய்வுத் துறை இன்னமும் பழைய பாணியிலான முன்னெச்சரிக்கைகளை விடுத்துக்கொண்டிருப்பது எப்படிப் பெருமளவு மக்களின் கவனத்தைப் பெறும்?

பருவநிலை மாற்றம்

இந்திய வானிலை ஆய்வுத் துறை கணிதவழி வானிலைக் கணிப்பு மாதிரிகளையே இன்னும் பயன்படுத்திவருகிறது. பிரிட்டன் வானிலை ஆய்வுத் துறையோ முன்கணிப்புக்கு சூப்பர் கம்ப்யூட்டர்களைப் பயன்படுத்துகிறது. செயற்கைக்கோள் தரும் தரவுகளைக் காட்சிபூர்வமாகச் சித்தரிக்க சூப்பர் கம்ப்யூட்டர்கள் உதவுகின்றன. இந்தச் செயல்முறை மூலம் ஒருசில விநாடிகளில் திட்டவட்டமான வானிலை முன்கணிப்பைத் தர முடிகிறது.

பருவநிலை மாற்றம் குறித்து உலக வானிலை அமைப்பு, ஐபிசிசி உள்ளிட்டவை தொடர்ந்து எச்சரிக்கைகளை விடுத்துவருகின்றன. இந்திய வானிலை ஆய்வுத் துறை, பருவநிலை மாற்றம் போன்ற பிரச்சினைகளை ஆராய்ச்சிக்கான தரவு சேகரிப்பு சார்ந்து மட்டுமே அணுகிவருவதுபோலத் தெரிகிறது. டிசம்பர் 30–ம் தேதி சென்னையில் சில மணி நேரத்தில் கொட்டித் தீர்த்த மழைக்கு பருவநிலை மாற்றத்தின் ஓர் அம்சமான 'லா நீன்யா விளைவு' காரணமாக இருக்கலாம் என மேரிலாண்ட் பல்கலைக்கழக வளிமண்டலக்–கடலியல் துறைப் பேராசிரியர் ரகு முருட்டுகுட்டே தெரிவிக்கிறார்.

எனவே, இயற்கைச் சீற்றங்கள் சார்ந்த நடைமுறை முன்னெச்சரிக்கைகளை விடுப்பதற்கு உரிய வகையில் பருவநிலை மாற்றம் குறித்த ஆராய்ச்சிகளை மாற்றியமைத்து வானிலை ஆய்வுத் துறை பயன்படுத்த வேண்டும். அப்படித் தொடர்பு ஏற்படுத்தப்படாவிட்டால், எதிர்காலத்தில் வானிலை ஆய்வு மையத்தின் எச்சரிக்கைகள் உரிய பலனைத் தராத சம்பிரதாய அறிவிப்புகளாகிவிடும் ஆபத்து இருக்கிறது.

---

### 3. ஓஎன்ஜிசியின் முதல் பெண் தலைவர் அல்கா மிட்டல்

ஓஎன்ஜிசி நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனராக அல்கா மிட்டல் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார். ஓ.என்.ஜி.சி நிறுவனத்தின் தலைமை பொறுப்பேற்கும் முதல் பெண்மணி ஆவார்.

ஓஎன்ஜிசியின் கடைசி முழுநேர இயக்குநரான சஷி ஷங்கர் மார்ச் 31, 2021 அன்று பதவியில் இருந்து ஓய்வு பெற்றார், அவருக்குப் பதிலாக யாரும் தேர்ந்தெடுக்கப்படவில்லை. இதன் பிறகு இடைக்கால தலைவராக சுபாஷ் குமார் பதவி வகித்து வந்தார்.

இந்தநிலையில் நாட்டின் முன்னணி பொதுத்துறை நிறுவனங்களில் ஒன்றான ஓஎன்ஜிசி நிறுவனத்தின் மனிதவள மேம்பாட்டுத்துறை இயக்குனரான அல்கா மிட்டல், நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனராக கூடுதல் பொறுப்பேற்றுக்கொண்டுள்ளார். இதற்கான ஒப்புதலை பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் நடவடிக்கைக்கு அமைச்சரவையின் நியமனக் குழு வழங்கியுள்ளது.

ஜனவரி 1, 2022 முதல் ஆறு மாத காலத்திற்கு, அல்லது பதவிக்கு வழக்கமான பதவியில் இருப்பவரை நியமிக்கும் வரை, அல்லது மறு உத்தரவு வரும் வரை, எது விரைவில் முடியுமோ அதுவரை அவர் அந்த பதவியில் நீடிப்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஓஎன்ஜிசி நிறுவனத்தின் தலைவராக பொறுப்பேற்கும் முதல் பெண்மணி எனும் சிறப்பை பெறுகிறார்.

அல்கா மிட்டல் யார்?

அல்கா மிட்டல் ஓஎன்ஜிசி நிறுவனத்தின் மனிதவளத் துறை இயக்குனராக 2018– ம் ஆண்டு டிசம்பரில் பொறுப்பேற்றார். இதன் மூலம், ஓஎன்ஜிசி நிறுவன இயக்குனர் குழுவில் முழு நேர இயக்குனராக பொறுப்பு வகிக்கும் முதல் பெண் எனும் சிறப்பையும் அவர் பெற்றார்.

பொருளாதார பாடத்தில் முதுகலை பட்டம் பெற்றவரான அக்லா மிட்டல் எம்பிஏ பெற்ற பிறகு 1985–ல் ஓஎன்ஜிசி நிறுவனத்தில் பட்டதாரி பயிற்சியாளராக சேர்ந்தார்.

தலைமை திறன் மேம்பாட்டு துறையின் தலைவராகவும் இருந்துள்ளார். அப்போது 5,000–க்கும் மேற்பட்ட பயிறசியாளர்களை பயன்படுத்தி, தேசிய பயிற்சி ஊக்குவிப்பு திட்டத்தினையும் சிறப்பாக செயல்படுத்தியுள்ளார். இதுமட்டுமின்றி இந்தியா முழுவதும் பல திட்டங்களையும் செயல்படுத்தியுள்ளார்.

---

### 4. பிரதான வங்கிகள் பட்டியலில் எஸ்பிஐ, ஐசிஐசிஐ, HDFC: ரிசர்வ் வங்கி

தோல்வியடையாத மிகப்பெரிய நிறுவனங்கள் பட்டியலில் பொதுத் துறையைச் சோ்ந்த பாரத ஸ்டேட் வங்கி (எஸ்பிஐ), ஐசிஐசிஐ வங்கி, ஹெச்டிஎஃப்சி வங்கி ஆகியவை இடம்பெற்றுள்ளதாக ரிசா்வ் வங்கி செவ்வாய்க்கிழமை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ரிசா்வ் வங்கியின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: உள்நாட்டில் அமைப்பு ரீதியில் பிரதானமாக உள்ள வங்கிகளின் பட்டியலில் (டி–எஸ்ஐபி) எஸ்பிஐ, ஐசிஐசிஐ, ஹெச்டிஎஃப்சி ஆகிய வங்கிகள் இடம்பெற்றிருப்பது அடையாளம் காணப்பட்டுள்ளது. கடந்த 2020–ஆம் ஆண்டின் பட்டியலிலும் இதே வங்கிகள்தான் பிரதான வங்கிகள் பட்டியலில் இடம்பெற்றிருந்தன என்று ரிசா்வ் வங்கி தெரிவித்துள்ளது.

கடந்த 2015 மற்றும் 2016–ஆம் ஆண்டுகளில் டி–எஸ்ஐபி பட்டியலில் எஸ்பிஐ, ஐசிஐசிஐ வங்கிகள் உள்ளதாக ரிசா்வ் வங்கி அறிவித்தது.

மேலும், வங்கிகளிடம் சேகரிக்கப்பட்ட புள்ளிவிவரங்களின் அடிப்படையில் எச்டிஎஃப்சி வங்கியும் இந்தப் பட்டியலில் இடம்பெற்றிருப்பதாக கடந்த 2017 மாா்ச் 31–இல் ரிசா்வ் வங்கி அறிவித்தது.

---

### 5. கடந்த 2021–ம் ஆண்டில் ரூ.4.15 லட்சம் கோடி தங்கம் இறக்குமதி செய்தது இந்தியா

கடந்த ஆண்டில் இந்தியாவில் 5,570 கோடி டாலருக்கு (சுமார் ரூ.4.15 லட்சம் கோடி) வெளிநாடுகளிலிருந்து தங்கம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. தங்கம் விலை சற்று சரிந்ததால் முந்தைய ஆண்டைக் காட்டிலும் அதிக எடையிலான தங்கம் இந்தியாவுக்குள் வந்துள்ளது.

2020–ம் ஆண்டில் கரோனா பாதிப்பு தீவிரம் காரணமாக ஊரடங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதால் திருமணம் உள்ளிட்ட பல சுப நிகழ்ச்சிகள் தள்ளிப்போடப்பட்டன. இவை அனைத்தும் கடந்த

ஆண்டில் நடைபெற்றதால் தங்கம் அதிகஅளவில் உள்நாட்டில் வாங்கப்பட்டுள்ளது.

உலக நாடுகளில் அதிக அளவில் தங்கம் நுகரப்படும் நாடுகளின் பட்டியலில் இந்தியா இரண்டாம் இடம் வகிக்கிறது.

2021–ம் ஆண்டு 2,200 கோடி டாலருக்கு தங்கம் இறக்குமதிசெய்யப்பட்டது. 2011–ல் தங்கஇறக்குமதிக்கு செலவிடப்பட்ட தொகை 5,390 கோடி டாலராகும். இதுதான் அதிகபட்ச அளவாக இருந்தது. ஆனால் அந்த அளவுகடந்த ஆண்டு முறியடிக்கப்பட்டுள்ளது.

2021–ம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட தங்கத்தின் அளவு 1,050 டன்னாகும். கடந்த பத்து ஆண்டுகளில் மிக அதிக அளவில் தங்கம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. 2020–ம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட தங்கத்தின் அளவு 430 டன்னாகும்.

2020–ம் ஆண்டு இந்தியாவில் ஊரடங்கு கடுமையாக கடைப்பிடிக்கப்பட்டது. இதனால் தங்கம் வாங்குவது பெரிதும் குறைந்தது. திருமண நிகழ்வு மற்றும் அட்சய திருதியை போன்ற காலங்களில்தங்கம் வாங்குவதும் பாதிக்கப்பட்டது. மணப்பெண்ணுக்கு வரதட்சினையாக தங்கம் அளிக்கும் பழக்கம் இந்தியாவில் பின்பற்றப்படுகிறது. மேலும் திருமண நிகழ்வில் தங்கம் பரிசளிப்பதும் அதிகமாக உள்ளது.

கடந்த ஆண்டு தொடக்கத்தில் தங்கத்தின் விலை சற்று சரிந்திருந்ததால் அதிக அளவில் தங்கம் வாங்கப்பட்டுள்ளது.

அதேசமயம் 2020–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் அதிகபட்சமாக 10 கிராம் தங்கத்தின் விலை ரூ.56,191 ஆக உயர்ந்தது. ஆனால் கடந்த ஆண்டு மார்ச் மாதத்தில் இது ரூ.43,320 ஆகக் குறைந்தது. இந்த கால கட்டத்தில் மட்டும் 177 டன் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

---

**6. பிரான்ஸில் கண்டறியப்பட்ட அதிவேக கரோனாவின் குணங்கள்!**

மிக வேகமாகப் பரவும் தன்மை கொண்ட ஒமைக்ரான் வகை கரோனாவால் உலக நாடுகள் தவித்து வரும் நிலையில், அதைவிட தீவிரமாகப் பரவும் புதிய கரோனா வகை கண்டறியப்பட்டுள்ளதாக பிரான்ஸ் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனா்.

பிரான்ஸின் ஐஹெச்யு மெடிட்டரேன் தொற்றுநோய் ஆய்வகத்தைச் சோ்ந்த விஞ்ஞானிகள், 12 கரோனா நோயாளிகளின் உடலில் முற்றிலும் புதிய வகை கரோனா தொற்று ஏற்பட்டுள்ளதைக் கண்டறிந்துள்ளனா்.

'பி.1.640.2' என வகைப்படுத்தப்பட்டுள்ள அந்த கரோனா வகைக்கு, அதனைக் கண்டறிந்த ஆய்வகமான 'ஐஹெச்யு' என்று தற்காலிகமாக பெயரிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து அண்மையில் தயாரிக்கப்பட்ட ஆய்வறிக்கையில், ஐஹெச்யு வகை கரோனாவில் 46 குரோமோசோம் மாற்றங்கள் காணப்படுவதாகவும் 37 உட்கருத் துகள்கள் (நியூக்ளியோடைட்) குறைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம், இது ஒமைக்ரான் வகை கரோனாவைவிட மனிதா்களின் உடலில் மிக வேகமாகப் பரவும் தன்மை கொண்டதாக இருக்கும் என்று நிபுணா்கள் கூறுகின்றனா்.

கரோனா போன்ற தீநுண்மிகளின் மேற்புறம் காணப்படும் 'கொக்கி' புரதங்கள்தான், மனித செல்களில் காணப்படும் புரதங்களோடு இணைந்து தொற்றுகின்றன. பல்வேறு வகை அமினோ அமிலங்கள் ஒன்றிணைந்து இந்தக் கொக்கிப் புரதங்களை உருவாக்குகின்றன.

தற்போது கரோனாவுக்கு எதிராக உருவாக்கப்பட்டுள்ள தடுப்பூசிகள் அனைத்தும், கொக்கிப் புரதங்களை இலக்காகக் கொண்டே வடிவமைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், புதிதாகக் கண்டறியப்பட்டுள்ள ஐஹெச்யு வகை கரோனாக்களின் கொக்கிப் புரதங்களில் 14 வகை அமினோ அமிலங்கள் மாற்றியமைந்துள்ளன. அவற்றில் என்501ஒய் என்றழைக்கப்படும் அமினோ அமிலமும் ஒன்று.

ஐஹெச்யு வகை கரோனாவின் கொக்கிப் புரதங்களில் அந்த வகை அமிலம் காணப்படுவதால் அது தீவிரமாகப் பரவும் தன்மை கொண்டதாக இருக்கும் என்று நிபுணா்கள் கூறுகின்றனா்.

ஏற்கெனவே அந்த வகை அமினோ அமிலம் ஆல்ஃபா வகை கரோனாவில் கண்டறியப்பட்டது. அதனைத் தொடா்ந்து பீட்டா, காமா, ஒமைக்ரான் உள்ளிட்ட வேகமாகப் பரவும் தன்மை கொண்ட கரோனா வகைகளில் காணப்பட்டது.

இதுகுறித்து இந்த ஆய்வை மேற்கொண்ட விஞ்ஞானிகள் கூறுகையில், கரோனா தீநுண்மி தன்னை எப்படி உருமாற்றம் செய்துகொள்ளும் என்பதை யாராலும் கணிக்க முடியாது என்பதை புதிதாகக் கண்டறியப்பட்டுள்ள ஐஹெச்யு வகை கரோனா உணா்த்துகிறது என்றனா்.

கடந்த ஆண்டின் முற்பகுதியில் இந்தியா உள்ளிட்ட நாடுகளில் டெல்டா வகை கரோனா மிக வேகமாகப் பரவி ஆயிரக்கணக்கான உயிரிழப்புகளை ஏற்படுத்தியது. அந்த வகை கரோனாவைவிட பல மடங்கு வேகத்தில் பரவும் தன்மை கொண்ட ஒமைக்ரான் வகை கரோனா, தென் ஆப்பிரிக்கா மற்றும் அதன் அண்டை நாடான போட்ஸ்வானாவில் கடந்த ஆண்டு நவம்பா் மாதம் கண்டறியப்பட்டது.

இதனால் அச்சமடைந்த உலக நாடுகள், ஒமைக்ரான் வகை கரோனாவைக் கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. அதையும் மீறி, 100–க்கும் மேற்பட்ட நாடுகளில் பல்லாயிரக்கணக்கானவா்களுக்கு ஒமைக்ரான் வகை கரோனா பரவியுள்ளது.

அந்த வகை கரோனா இதுவரை இல்லாத வேகத்தில் பரவும் தன்மை கொண்டதாக இருந்தாலும், அதனால் உயிரிழக்கும் அபாயம் மிகவும் குறைவாக உள்ளதாக பல்வேறு ஆய்வுகளின் முடிவுகள் தெரிவிக்கின்றன.

இந்தச் சூழலில், ஒமைக்ரானைவிட அதிக வேகத்தில் பரவும் புதிய வகை கரோனா கண்டறியப்பட்டுள்ளதாக பிரான்ஸ் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

**7. இந்திய பெருங்கடலில் சீனாவின் நடமாட்டத்தை கண்காணிக்க 2 அதிநவீன போர் விமானங்கள்**

இந்திய பெருங்கடல் பகுதியில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து வரும் நிலையில், வான் ரோந்துப் பணிகளில் அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட அதிநவீன போா் விமானங்களை இந்தியா சோ்த்துள்ளது.

இதுதொடா்பாக இந்திய விமானப் படையின் செய்தித் தொடா்பாளா் விவேக் மத்வால் கூறுகையில், 'நீா்மூழ்கிக் கப்பல்களைக் கண்டறியும் போா் விமானமும், கடல் பகுதியை வானிலிருந்து உளவு பாா்க்கும் 'பொஸைடன் 8ஐ' அதிநவீன கடல் ரோந்து விமானமும் அமெரிக்காவிடம் இருந்து கடந்த டிசம்பா் 30-ஆம் தேதி இந்தியா பெற்றது. இதில் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட தொழில்நுட்ப கருவிகள் பொருத்தப்பட்டு சோதனை செய்யப்பட்டது. தற்போது அவை இந்திய பெருங்கடல் பகுதியில் ரோந்துப் பணியில் சோ்க்கப்பட்டுள்ளன' என்றாா்.

'பொஸைடன் 8ஐ' ரகத்தைச் சோ்ந்த 8 விமானங்களை 2013-இல் முதல்முறையாக இந்தியா வாங்கியது. இவை அரங்கோணத்தில் உள்ள ஐஎன்எஸ் ராஜாளி விமானப் படைத் தளத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் கட்டமாக வாங்கப்பட்ட 4 விமானங்கள் கோவாவில் உள்ள ஐஎன்எஸ் ஹான்சாலில் நிறுத்தி வைக்கப்படுகின்றன.

இவை இந்திய பெருங்கடலில் சீனாவின் கப்பல்கள், நீா்மூழ்கி கப்பல்கள் ஆகியவற்றை தொடா்ந்து கண்காணிக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளன.

கடந்த 2020-இல் கிழக்கு லடாக் பகுதியில் சீன ராணுவ வீரா்களின் நடமாட்டத்தைக் கண்காணிக்கவும் இந்த வகை விமானங்களை இந்தியா பயன்படுத்தியது.

கடல் பகுதியில் கண்காணிப்பை பலப்படுத்த இரண்டு ட்ரோன்களை அமெரிக்காவிடம் இருந்து கடந்த ஆண்டு இந்தியா வாங்கியது. மேலும் 30 அதிநவீன ட்ரோன்களையும் அமெரிக்காவிடம் வாங்க இந்தியா முடிவு செய்துள்ளது. இவை சுமாா் 35 மணி நேரம் தொடா்ந்து பறந்து கடல் மற்றும் நிலப் பரப்பில் உள்ள இலக்குகளை துல்லியமாகத் தாக்கும் திறன் படைத்தவையாகும்.

**8. ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் பயங்கரவாதத் தடுப்பு குழுத் தலைவராக டி.எஸ்.திருமூர்த்தி பொறுப்பேற்பு**

இந்த ஆண்டுக்கான ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் பயங்கரவாதத் தடுப்பு குழுத் தலைவராக ஐ.நா.வுக்கான இந்தியத் தூதா் டி.எஸ்.திருமூா்த்தி பொறுப்பேற்றுள்ளாா்.

கடந்த 2001-ஆம் ஆண்டு அமெரிக்காவில் நடைபெற்ற இரட்டை கோபுரத் தாக்குதலைத் தொடா்ந்து ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் துணை அமைப்பாக பயங்கரவாதத் தடுப்பு குழு (சிடிசி) உருவாக்கப்பட்டது. இந்தக் குழுவின் 2022-ஆம் ஆண்டு தலைவராக ஐ.நா.வுக்கான இந்தியத் தூதா் டி.எஸ்.திருமூா்த்தி பொறுப்பேற்றுள்ளாா்.

இதனைத்தொடா்ந்து பயங்கரவாதத் தடுப்புக்கு எதிரான பலதரப்பட்ட எதிா்வினையை வலுப்படுத்தவும், பயங்கரவாத அச்சுறுத்தலுக்கு எதிரான உலகளாவிய நடவடிக்கை திறம்பட இருப்பதிலும் சிடிசியின் பங்கை மேம்படுத்த குழுவின் தலைவராக உறுதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று இந்தியா தெரிவித்துள்ளது.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியா தற்காலிக உறுப்பினராக உள்ளது. இந்த உறுப்பினா் காலம் நிகழாண்டு டிச.31-ஆம் நிறைவடைகிறது.

**9. ஏரியில் பாலம் கட்டும் சீனாவால் நமக்கு என்ன பிரச்சினை?**

ஒரு பக்கம் தைவானை ஆக்கிரமிக்க சீனா முயற்சித்து வருகிறது. இன்னொரு பக்கம், இந்தியாவுடன் சீனாவுக்கு நீண்ட நெடுங்காலமாக எல்லைப்பிரச்சினை இருந்து வருகிற சூழலில் இந்திய பகுதிகளை ஆக்கிரமிக்கவும் முயற்சிக்கிறது.

கல்வான் தாக்குதல்

இதற்கிடையேதான் கிழக்கு லடாக்கில் கல்வான் பள்ளத்தாக்கு பகுதியில் இந்திய படைகளுடன் கடந்த 2020-ம் ஆண்டு மே மாதம் முதல் மோதல்போக்கில் சீன துருப்புகள் ஈடுபட்டு வருகின்றன.

அதே ஆண்டின் ஜூன் மாதம் 15-ந்தேதி கல்வான் பள்ளத்தாக்கு பகுதியில், திடீரென சீன படையினர் பயங்கர ஆயுதங்களுடன் வந்து, இந்திய படை வீரர்கள் மீது காட்டுமிராண்டித்தனமான தாக்குதல் நடத்தினர். இதில் இந்திய வீரர்கள் 20 பேர் வீர மரணம் அடைந்தனர்.

ஆனால் அந்த நிலையிலும், தாய் மண்ணை காக்க வேண்டும் என்ற தவிப்பில், சீன துருப்புகளை இந்திய ராணுவ வீரர்கள் துணிச்சலுடன் எதிர்த்து நின்று பதிலடி கொடுத்தனர். இதில் சீனப்படையினர் 45 பேர் கொன்று குவிக்கப்பட்டதாக தகவல்கள் வெளிவந்தன. முதலில் தன் தரப்பு உயிர்ச்சேதத்தை ஒப்புக்கொள்ளாத சீனா, கடைசியில் படைவீரர்கள் 4 பேர் கொல்லப்பட்டுள்ளதாக ஒப்புக்கொண்டது.

இந்த மோதலுக்குப்பின்னர்தான் எல்லையில் பதற்றம் தணிக்கவும், அமைதியை பராமரிக்கவும் இரு தரப்பு பேச்சுவார்த்தை மறுபடியும் நடந்து வருகிறது.

பெயர் சூட்டி அடாவடி

இதற்கு மத்தியில்தான் கடந்த சில தினங்களுக்கு முன்னர் திடீரென அருணாசலபிரதேசத்தை தெற்கு திபெத் என்றுசொல்லி சொந்தம் கொண்டாடி வருவதை புதுப்பிப்பது போல சீனா நடந்து கொண்டது.

அந்த பகுதிகளுக்கு பெயர் சூட்டி அடாவடி செய்தது.

பாலம் கட்டும் சீனா

இப்போது சீனாவின் மற்றொரு அடாவடிச்செயல், செயற்கைக்கோள் படம் மூலம் அம்பலத்துக்கு வந்துள்ளது. இந்த செயற்கைக்கோள் படத்தில் கிழக்கு லடாக்கில் பாங்காங் சோ ஏரியின் இரு கரைகளையும் இணைக்கும் கட்டுமானம் தெரிகிறது. இதுதான் பாலம்.

கிழக்கு லடாக்கில் பாங்காங் சோ ஏரியின் வடக்கு மற்றும் தெற்கு கரைகளை இணைக்கிற வகையில் சீனா இந்த பாலத்தை கட்டி வருகிறது. இது சரியாக கிழக்கு லடாக்கில் எல்.ஏ.சி. என்று சொல்லப்படுகிற அசல் கட்டுப்பாட்டு கோட்டுக்கு 25 கி.மீ. முன்பாக அமைவ தாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் பாலம் கட்டும் பணி சில காலமாகவே நடந்து வந்துள்ளதாம்.

சீனாவுக்கு என்ன ஆதாயம்?

வடக்கு கரை பகுதியில் குர்னாக் கோட்டையில் சீனப்படையின் பாதுகாப்பு அரண் உள்ளது. தெற்கு கரையில் மோல்டோ என்ற இடம் உள்ளது. இவ்விரண்டுக்கும் இடையே 200 கி.மீ. தொலைவு உள்ளது. சீனா கட்டுகிற பாலம் வடக்கு, தெற்கு கரைகளுக்கு இடையே 500 மீட்டர் தொலைவுக்கு அமைகிறது.

இந்தப்பாலத்தால் சீனாவுக்கு என்ன லாபம் என்ற கேள்வி எழும். ஆதாயம் இருக்கிறது.

இந்த பாலத்தால் பாங்காங் சோ ஏரியின் இரு பகுதிகளுக்கும் இடையேயான தொலைவை கடக்க ஆகிற நேரம் 12 மணி நேரத்தில் இருந்து 3 அல்லது 4 மணி நேரம்தான் ஆகும்.

தற்போது வரை சீனப்படையினர் ரூடோக் கவுண்டியை கடந்து ஒரு ரவுண்டானாவை சுற்றித்தான் வர முடியும். ஆனால் இனி சீனப்படை நேரடியாக வந்து விடலாம்.

இந்த பாலம் சீனப்படையினர் பயண நேரத்தை வெகுவாக குறைத்து விடும்.

இந்தியாவுக்கு என்ன பிரச்சினை?

இந்த பாலம் சீனப்பகுதியில்தான் கட்டப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. ஆனால் இதில் இந்தியாவுக்கு ஒரு சிக்கல். இதற்கு ஏற்ற வகையில் தனது செயல்பாட்டு திட்டங்களை மாற்றியமைக்க வேண்டிய கட்டாயம் இந்திய ராணுவத்துக்கு ஏற்பட்டுள்ளது.

சீனாவுக்கு பதிலடி கொடுக்கிற விதத்தில் இந்தியாவும் அதிரடி வியூகம் அமைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

### 10. தனி ஆளாக தென்துருவத்தை அடைந்து இந்திய பெண் சாதனை!

இங்கிலாந்தில் ராணுவ அதிகாரியாக பணியாற்றி வரும் இந்திய வம்சாவளியை சேர்ந்த சீக்கிய பெண் ஹர்பிரீத் சிங். 32 வயதான இவர் தனி ஒருவராக தென்துருவத்தை அடைந்து வரலாற்று சாதனை படைத்துள்ளார். இந்த சாதனையை படைத்த முதல் பெண் என்கிற பெருமையும் இவரை சேரும்.

மைனஸ் 50 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை மற்றும் மணிக்கு 96 கி.மீ. வேகத்தில் வீசிய காற்றுக்கு மத்தியில் தொடர்ந்து 40 நாட்களாக 1,127 கி.மீ. பயணம் செய்து அவர் தென்துருவத்தை அடைந்தார்.

சவால் மிகுந்த இந்த பயணத்தின் அனுபவங்களை தொடர்ச்சியாக சமூகவலைத்தளத்தில் பதிவிட்டு வந்த ஹர்பிரீத் சிங், தென்துருவத்தை அடைந்த சாதனை நிகழ்வை நேரலையில் வீடியோவாக ஒளிபரப்பினார்.

அதன் பின்னர் இதுகுறித்து அவர் சமூக வலைத்தளத்தில் வெளியிட்ட பதிவில் "பனிப்பொழிவு இருக்கும் தென்துருவத்துக்கு சென்றேன். இப்போது பல உணர்வுகளை உணர்கிறேன். 3 ஆண்டுகளுக்கு முன்பு துருவ உலகத்தைபற்றி எனக்கு எதுவும் தெரியாது, இறுதியாக இங்கே இருப்பதை யதார்த்தமாக உணர்கிறேன். இங்கு வருவது கடினமாக இருந்தது. எனக்கு ஆதரவளித்த அனைவருக்கும் நன்றி சொல்ல விரும்புகிறேன்'' என குறிப்பிட்டுள்ளார்.

---

### 11. தமிழர் திருநாளை மக்கள் சிறப்பாக கொண்டாட ரூ.1,297 கோடியில் பொங்கல் பரிசு தொகுப்பு திட்டம்

முதல்வர் மு.க.ஸ்டாலின் 21 வகையான பொருட்களை வழங்கி தொடங்கி வைத்தார்

2.15 கோடி அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெறுவர்

தமிழகத்தில் பொங்கல் பண்டிகையையொட்டி ரூ.1,297 கோடி மதிப்பில் 21 வகையான பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமை செயலகத்தில் நேற்று தொடங்கி வைத்தார். இதன்மூலம் 2.15 கோடி அரிசி குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெறுவார்கள். தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகையை தமிழக மக்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் கொண்டாடும் வகையில், 2022ம் ஆண்டு தைப் பொங்கலுக்கு அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கும் 21 பொருட்கள் அடங்கிய தொகுப்பு வழங்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் கடந்த நவம்பர் மாதம் அறிவித்தார்.

அதன்படி, பொங்கலுக்கு தேவையான பச்சரிசி 1 கிலோ, வெல்லம் 1 கிலோ, முந்திரி 50 கிராம், திராட்சை 50 கிராம், ஏலக்காய் 10 கிராம், பாசிப்பருப்பு 500 கிராம், நெய் 100 கிராம் போன்ற பொருட்களும், பண்டிகை கால சமையலுக்கு தேவையான மஞ்சள் தூள் 100 கிராம், மிளகாய் தூள் 100 கிராம், மல்லித்தூள் 100 கிராம், கடுகு 100 கிராம், சீரகம் 100 கிராம், மிளகு 50 கிராம், புளி 200 கிராம், கடலை பருப்பு 250 கிராம், உளுத்தம் பருப்பு 500 கிராம், ரவை 1 கிலோ, கோதுமை மாவு 1 கிலோ, உப்பு 500 கிராம் மற்றும் துணிப்பை ஒன்றும், ஒரு முழு கரும்பு என 21 பொருட்கள் அடங்கிய பரிசு தொகுப்பு வழங்கப்படுகிறது. தமிழகத்தில் பொங்கல் பரிசு தொகுப்பு 2,15,48,060 குடும்பங்களுக்கு மொத்தம் ரூ.1,297 கோடி செலவில் வழங்கப்படுகிறது.

தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து ரேஷன் கடைகளிலும் அரிசி பெறும் குடும்ப அட்டை வைத்திருப்பவர்களுக்கு ரேஷன் கடைகளில் 21 பொருட்கள் அடங்கிய பொங்கல் பரிசு தொகுப்பு திட்டத்தை

தொடங்கி வைப்பதன் அடையாளமாக, சென்னை தலைமை செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று காலை 10 மணிக்கு 21 பொருட்கள் அடங்கிய பொங்கல் பரிசு தொகுப்பு திட்டத்தை 10 குடும்பங்களுக்கு வழங்கி தொடங்கி வைத்தார். அப்போது உணவுத்துறை அமைச்சர் சக்கரபாணி, தலைமை செயலாளர் இறையன்பு மற்றும் உயர் அதிகாரிகள் உடன் இருந்தனர். முதல்வர் மு.க.ஸ்டாலின் பொங்கல் பரிசு தொகுப்பு திட்டத்தை நேற்று காலை தொடங்கி வைத்ததை தொடர்ந்து தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து ரேஷன் கடைகளிலும் நேற்று காலை 10 மணி முதல் பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் பணி தொடங்கியது.

தமிழகம் முழுவதும் பொங்கல் தொகுப்பு வழங்குவதை கண்காணிக்க அனைத்து மாவட்டங்களில் மாவட்ட கலெக்டர்கள் தலைமையில் குழு அமைக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது. இந்நிகழ்ச்சியில் கூட்டுறவு துறை அமைச்சர் இ.பெரியசாமி, உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் சக்கரபாணி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமை செயலாளர் இறையன்பு, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை கூடுதல் தலைமை செயலாளர் முகமது நசிமுத்தின், உணவு பொருள் வழங்கல் துறை ஆணையாளர் ராஜாராமன், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக மேலாண்மை இயக்குநர் பிரபாகர், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் சண்முகசுந்தரம், மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

* ரேஷன் கடைகளில் 10ம் தேதி வரை கிடைக்கும்தமிழகம் முழுவதும் அந்தந்த மாவட்டங்களில் அமைச்சர்கள், எம்எல்ஏக்கள், கலெக்டர்கள் பொங்கல் பரிசுப் பை வழங்கும் பணியை தொடங்கி வைத்தனர். முன்னதாக கொரோனா பரவலை தடுக்கும் வகையில், குடும்ப அட்டைதாரர்கள் அதிக எண்ணிக்கையில் ரேஷன் கடைகளுக்கு ஒரே நேரத்தில் வருவதை தவிர்க்கவும், கொரோனா தொற்று பாதுகாப்பு நடவடிக்கைகளை பின்பற்ற ஏதுவாக பொங்கல் பரிசு தொகுப்பு விநியோகத்தை முறைப்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தெரு வாரியாக உள்ள குடும்ப அட்டையின் எண்ணிக்கையின் அடிப்படையில் தினமும் சுழற்சி முறையில் சுமார் 150 முதல் 200 குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்காக, குடும்ப அட்டைதாரர்களுக்கு பொருட்கள் வழங்கும் நாள், நேரம் போன்ற விவரங்களை குறிப்பிட்டு வீடு வீடாக டோக்கன் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி பொதுமக்கள் ரேஷன் கடைகளுக்கு வர அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், பொங்கல் பரிசு தொகுப்பு வருகிற 10ம் தேதி வரை வழங்குவதற்கான டோக்கன் வழங்கப்பட்டுள்ளது. அதனால் டோக்கனில் உள்ள நாள், நேரத்தை பின்பற்றி பொதுமக்கள் ரேஷன் கடைகளுக்கு வந்து பொங்கல் பரிசு தொகுப்பை பெற கடைகளுக்கு வர வேண்டும் என்று உணவு வழங்கல் துறை அதிகாரிகள் கேட்டுக் கொண்டுள்ளனர். பொங்கல் பரிசு தொகுப்பு நேற்று தொடங்கி வருகிற 10ம் தேதி வரை வழங்கப்படும் என்று அறிவித்தாலும், ஊருக்கு சென்றவர்கள் மற்றும் பொருட்கள் வாங்க முடியாதவர்களின் வசதிக்காக பொங்கல் பண்டிகைக்கு பிறகும் பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கப்படும்.

---

**12. சிம்–ஸ்வாப் மூலம் 25 லட்சம் சுருட்டிய கும்பல்... தமிழகத்தில் இதுவே முதன்முறை... 4 பேர் கைது!**

தமிழக மத்திய குற்றப்பிரிவு (சிசிபி) போலீசார் பல்வேறு மாநிலங்களில் கை வரிசை காட்டிவந்த சிம் பரிமாற்ற மோசடி நெட்வொர்க்கை கண்டுபிடித்துள்ளனர். சென்னையில் உள்ள கண் மருத்துவமனையில் பணம் கொள்ளையடிக்கப்பட்ட வழக்கை விசாரித்த போது இந்த கும்பல் சிக்கியுள்ளது. இந்த வழக்கில் 4 பேர் கைது செய்யப்பட்டு, 154 டெபிட் கார்டுகள், 105 சிம் கார்டுகள், 128 ஆதார் கார்டுகள், 22 போலி பான் கார்டுகள் பறிமுதல் செய்யப்பட்டன.

சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள பிரபல கண் மருத்துவமனையின் ஊழியர்கள் கடந்த நவம்பர் 22 அன்று சைபர் க்ரைம் பிரிவில் அளித்த புகார் போலீசாரை அதிர்ச்சிக்குள் ஆழ்த்தியது. அந்த புகாரில், மருத்துவமனை மற்றும் ஊழியர்களின் வங்கி கணக்கில் இருந்து அடுத்தடுத்து அவர்களுக்கு தெரியாமல் ரூ. 24 லட்சம் வரை எடுக்கப்பட்டுள்ளதாகவும் மேலும், பாதிக்கப்பட்டவர்களின் சிம் கார்டு வேலை செய்யவில்லை எனவும் கூறியிருந்தனர். விசாரணையை தொடங்கிய சைபர் க்ரைம், மர்ம நபர்கள் மருத்துவமனை கணக்கில் இருந்து 24 லட்ச ரூபாயை அவர்களுக்குத் தெரியாமல் 5 பரிவர்த்தனையில் எடுத்திருப்பதை உறுதி செய்தது.

மேலும், மருத்துவமனையின் அதிகாரப்பூர்வ மெயில் ஐடியை ஹேக் செய்து அதன்மூலம் ஊழியர்களுக்கு சம்பளத்தை வழங்கும் வங்கிக் கணக்குகளுடன் இணைக்கப்பட்ட சிம் எண்களை செயலிழக்க வைத்துள்ளனர். பின்னர், அதே எண்ணில் போலி சிம் கார்டுகளை தயார் செய்து அதன் மூலம் வங்கிப் பரிவர்த்தனைகளுக்கான OTPகளைப் பெற்று பணத்தை சுருட்டியது தெரிய வந்தது. மேலும், அந்த பணத்தை மேற்கு வங்கத்தில் உள்ள 16 வெவ்வேறு வங்கிக் கணக்குகளில் டெபாசிட் செய்யப்பட்டதை தமிழக சைபர் க்ரைம் கண்டுபிடித்தது.

அதனை தொடர்ந்து, வங்கி அறிக்கைகள் மற்றும் பரிவர்த்தனை செய்யப்பட்ட ஸ்னாப்ஷாட்களை எடுத்துக்கொண்டு தனிப்படை போலீசார் மேற்கு வங்கத்திற்கு புறப்பட்டனர். அங்கு, மேற்கு வங்க காவல்துறையின் உதவியுடன் ஏடிஎம் மோசடியில் ஈடுபட்டு வந்த பிகாரைச் சேர்ந்த ராகேஷ் குமார் சிங், ரோஹன் ஆகிய இரண்டு பேரை முதற்கட்டமாக பிடித்து விசாரித்தனர். விசாரணையில், சென்னை மருத்துவமனை வங்கி கணக்கை ஹேக் செய்ததில் இவர்களுக்கு தொடர்பு இருப்பது தெரிய வந்தது. தொடர்ந்து நடத்திய விசாரணையில், எஞ்சிய குற்றவாளிகளான சயந்தன் முகர்ஜி மற்றும் ராகுல் ராய் கைது செய்யப்பட்டனர். நான்கு பேரிடம் இருந்தும் 154 டெபிட் கார்டுகள், 105 சிம் கார்டுகள் மற்றும் 128 ஆதார்

கார்டுகள் மற்றும் 22 போலி பான் கார்டுகளை போலீசார் பறிமுதல் செய்தனர். தொடர்ந்து அவர்களை சென்னைக்கு அழைத்து வந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதுகுறித்து சென்னை மாநகர காவல் ஆணையர் சங்கர் ஜிவால் கூறியதாவது: மாநிலத்தில் சிம்–ஸ்வாப் மோசடி நடப்பது இதுவே முதல் முறை. இந்த மோசடிக்கு ஆளானவர்கள் யார் வேண்டுமானாலும் நேரில் வந்து புகார் அளிக்கலாம் என்றார்.

---

### 13. நாட்டின் மின்நுகர்வு 110.34 பில்லியன் யூனிட்: 2020 டிசம்பருடன் ஒப்பிடுகையில் 4.5% உயர்வு

உலக நாடுகளை தொடர்ந்து இந்தியாவில் கொரோனாவின் தாக்கம் அதிகமாக இருந்தது. குறிப்பாக முதல் அலையை விட இரண்டாவது அலையில் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. இதனால் பலரும் உயிரிழப்புகளை சந்தித்தனர். பெரும்பாலான இடங்களில் உள்ள அரசு, தனியார் மருத்துவமனைகளில் ஆக்ஸிஜன் கிடைக்காமல் மக்கள் தவித்தனர். இதையடுத்து நாடு முழுவதும் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு, முழுமையான ஊரங்கு அமல்படுத்தப்பட்டது. இதனால் தொழில்கள் அனைத்தும் முடங்கின. மக்கள் தங்களது வீடுகளுக்குள்ளேயே இருந்தனர்.

குறிப்பாக நாட்டில் உள்ள பெரிய தொழிற்சாலைகளான துணி உற்பத்தி தொழிற்சாலைகள், இரும்பு உருக்கும் தொழிற்சாலைகள், சணல் தொழிற்சாலைகள், பருத்தி தொழிற்சாலைகள், வாகன உற்பத்தி தொழிற்சாலைகள் என பல்வேறு பிரிவுகளை சேர்ந்த தொழிற்சாலைகள் முழுவதும் இயங்கவில்லை. இதேபோல் ஐடி நிறுவனங்களும் முடங்கியது. இதுபோன்ற காரணங்களினால் சம்மந்தப்பட்ட இடங்களில் மின்சாரம் பயன்படுத்துவது பெருமளவில் குறைந்தது. பிறகு ஒன்றிய, மாநில அரசுகள் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டன.

மேலும் பொதுமக்களும் அதிகப்படியாக தடுப்பூசி செலுத்திக்கொள்வதில் ஆர்வம் காட்டினர். இதன் காரணமாக கொரோனாவின் பாதிப்பு கொஞ்சம், கொஞ்சமாக குறைந்தது. நிலைமை கட்டுக்குள் வந்தது. இதனைத்தொடர்ந்து 50 சதவீத தொழிலாளர்களுடன் அனைத்து தொழிற்சாலைகளும், நிறுவனங்களும் இயங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டது. பிறகு தொற்று மேலும் குறைந்தது. இதனால் தொழில் நிறுவனங்கள், அலுவலகங்கள் முழுமையாக செயல்படுவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதனால் அவை கொஞ்சம், கொஞ்சமாக முழுமையாக இயங்க தொடங்கியது.

குறிப்பிட்ட சில ஐடி நிறுவனங்களை தவிர மற்ற நிறுவனங்கள் அனைத்தும் முழுமையாக இயங்கி வருகிறது. இதன் காரணமாக சம்மந்தப்பட்ட இடங்களில் வழக்கம் போல் மின்சாரம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் நாட்டில் மின்நுகர்வு தற்போது அதிகரித்துள்ளது. அதாவது அதிகபட்சமாக ஒருநாளினுடைய மின்தேவை கடந்த 2021ம் ஆண்டு டிசம்பரில் 183.38 ஜிகாவாட்டாக இருந்தது. இதுவே 2020ம் ஆண்டு 182.78 ஜிகாவாட்டாகவும், 2019ம் ஆண்டு 10.49 ஜிகாவாட்டாகவும் இருந்தது குறிப்பிடத்தக்கது. இதேபோல் கடந்த 2021ம் ஆண்டு நவம்பர் மாதம் மின்நுகர்வு முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2.6 சதவீதம் அதிகரித்தது குறிப்பிடத்தக்கது.

அதாவது 2021ம் ஆண்டு நவம்பரில் மின்நுகர்வு 99.37 பில்லியன் யூனிட்டாக இருந்தது. 2020ம் ஆண்டில் 96.88 பில்லியன் யூனிட்டாகவும், 2019ம் ஆண்டில் 93.94 பில்லியன் யூனிட்டாகவும் இருந்தது. இதனைத்தொடர்ந்து 2021ம் ஆண்டு டிசம்பரில் மின்நுகர்வு 110.34 பில்லியன் யூனிட் ஆகும். இது 2020ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 4.5 சதவீதம் அதிகமாகும். அதாவது 2020ம் ஆண்டில் மின்நுகர்வு 105.62 பில்லியன் யூனிட்டாகவும், 2019ம் ஆண்டில் 101.08 பில்லியன் யூனிட்டாகவும் இருந்தது குறிப்பிடத்தக்கது.

---

### 14. மேலும் 2 பி–8ஐ போர் விமானம் இந்திய கடற்படையில் இணைப்பு

நீர்மூழ்கிக்கப்பலைத் தாக்கி அழிக்க கூடிய 2 பி–8ஐ போர் விமானங்கள் இந்திய கடற்படையில் இணைக்கப்பட்டன. அமெரிக்காவின் போயிங் நிறுவனத்திடமிருந்து எட்டு பி–8ஐ போர் விமானங்களை கொள்முதல் செய்ய ஒன்றிய அரசு கடந்த 2009ம் ஆண்டு ஒப்பந்தம் செய்து கொண்டது.

இந்தப் போர் விமானங்கள் நீர்மூழ்கிக் கப்பலைத் தாக்கி அழிக்கும் திறன் கொண்டவையாகும். இந்தியப் பெருங்கடல் பகுதியில் சீனாவின் ஆக்கிரமிப்பு, ஊடுருவல் நடவடிக்கைகளை உளவு பார்ப்பதில் பி–8ஐ விமானங்கள் முக்கிய பங்கு வகித்து வருகின்றன.

அதன்படி, முதல் எட்டு பி–8ஐ போர் விமானம் கடந்த 2013ம் ஆண்டில் இந்திய கடற்படையில் இணைக்கப்பட்டன. இவை தற்போது அரக்கோணத்தில் ஐஎன்எஸ் ராஜாளியில் நிறுத்தப்பட்டுள்ளன. இந்நிலையில் தற்போது மேலும் 2 பி–8ஐ போர் விமானங்கள் கடந்த 30ம் தேதி கோவா வந்தடைந்தன. இது குறித்து கடற்படை செய்தி தொடர்பாளர் விவேக் மத்வால் கூறுகையில், 'உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட கருவிகள் பொருத்தப்பட்டு, அனுமதி பெற்ற பிறகு இவை இந்திய கடற்படையில் இணைக்கப்பட்டுள்ளன. இந்த போர் விமானங்களுக்கு மிக் 29கே படையினர் வரவேற்பு அளித்தனர். இரண்டாவது முறை கூடுதலாக வாங்கிய 4 பி–8ஐ போர் விமானங்கள் 316 விமானப்படை பிரிவில் ஐஎன்எஸ் ஹன்சாவில் இருந்து செயல்பட உள்ளன,' என்றார்.

---

**1. மத்திய பிரதேசத்தின் பன்னா புலிகள் காப்பகத்தில் முதன்முறையாகக் காணப்பட்ட ஃபெலிஸ் சில்வெஸ்ட்ரிஸ் ஆர்னேட் என்பது எந்த விலங்கின் அறிவியல் பெயராகும்?**



**அ) இந்தியப் பாலைவனப் பூனை ☑**

ஆ) மான்

இ) ஆப்பிரிக்க சிறுத்தை

ஈ) ஆசிய யானை

- ✓ மத்திய பிரதேசத்தின் பன்னா புலிகள் காப்பகத்தில் முதல் முறையாக இந்தியப் பாலைவனப் பூனை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. "Felis silvestris ornate" என்பது இந்த இனத்தின் அறிவியல் பெயர். இந்தியப் பாலைவனப் பூனை பொதுவாக இராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள தார் பாலைவனத்தில் காணப்படுகிறது.
- ✓ இந்தியாவில் அழிந்து வரும் விலங்குகளுள் ஒன்றான மீன்பிடி பூனை, முன்னர் இக்காப்பகத்தில் காணப்பட்டது.

---

**2. எந்தப் பொருளின் மீதான ஜிஎஸ்டி விகித உயர்வை ஒத்திவைக்க ஜிஎஸ்டி கவுன்சில் முடிவு செய்துள்ளது?**



**அ) ஜவுளி ☑**

ஆ) ஆட்டோமொபைல்

இ) கையடக்க தொலைபேசிகள்

ஈ) பருத்தி

- ✓ GST கவுன்சில் கூட்டத்தில் ஜவுளிக்கான GST விகிதத்தை 5 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாக உயர்த்தும் முடிவு ஒத்திவைக்கப்பட்டது. விகித உயர்வை மறுபரிசீலனை செய்ய, அமைச்சர்கள் குழுவுக்கு இது பரிந்துரைத்துள்ளது.
- ✓ பருத்தியில் தயாரிக்கப்படும் ஜவுளிகள் தவிர அனைத்து ஆயத்த ஜவுளிப் பொருட்களுக்கும் GST வரி 12 சதவீதமாக உயர்த்தப்பட்டது. ₹1,000'த்துக்கு குறைவான காலணிக –ளைத் தவிர மற்ற காலணிகளுக்கான GST விகிதம் 5 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. குஜராத், மேற்கு வங்கம், இராஜஸ்தான் மற்றும் தமிழ்நாடு மாநில பிரதிநிதிகள் இந்த GST விகித உயர்வுக்கு எதிர்ப்பு தெரிவித்திருந்தனர்.

---

**3. ஏழைகள் வைத்திருக்கும் இருசக்கர வாகனங்களுக்கு பெட்ரோல் விலையில் லிட்டருக்கு ₹25/ஐ குறைத்த மாநில அரசு எது?**



அ) தமிழ்நாடு

ஆ) ஒடிஸா

**இ) ஜார்க்கண்ட் ☑**

ஈ) கேரளா

- ✓ ஜார்க்கண்ட் மாநில முதலமைச்சர் ஹேமந்த் சோரன், ஏழைகள் வைத்திருக்கும் இருசக்கர வாகனங்களுக்கு பெட்ரோல் லிட்டருக்கு ₹25/–க்கு வழங்கப்படும் என்று அறிவித்தார். ஒவ்வொரு மாதமும் 10 லிட்டர் பெட்ரோலுக்கு இச்சலுகை வழங்கப்படும். ஏழை குடும்ப அட்டைதாரர் –களின் வங்கிக்கணக்கில் லிட்டருக்கு ₹25 செலுத்தப்படும்.

---

**4. ரிசர்வ் வங்கியின் சமீபத்திய அறிவிப்பின்படி, வங்கிக் கணக்குகளுக்கான KYC புதுப்பிப்புக்கான காலக்கெடு என்ன?**




அ) ஜனவரி 31, 2022

**ஆ) மார்ச் 31, 2022 ☑**

இ) ஜூன் 30, 2022

ஈ) செப்டம்பர் 30, 2022

- ✓ இந்திய ரிசர்வ் வங்கி (RBI) வங்கிக் கணக்குகளுக்கான KYC புதுப்பிப்புக்கான கடைசி தேதியை அடுத்த ஆண்டு மார்ச்.31 வரை மூன்று மாதங்களுக்கு நீட்டித்துள்ளது.
- ✓ COVID–19'இன் புதிய திரிபினால் நிலவும் நிச்சயமற்ற தன்மை காரணமாக இக்காலக்கெடு நீட்டிக்கப்பட்டுள்ளது. தொற்றுநோய் காரணமாக ரிசர்வ் வங்கி கடந்த ஆண்டு மே முதல் விதிகளை தளர்த்தியது. KYC ஆவணங்கள் வாடிக்கையாளர்களால் புதுப்பிக்கப்படாமல் இருந்தால் வங்கிச் சேவைகளை தடைசெய்யக்கூடாது என்றும் RBI அறிவித்துள்ளது.

---

**5. COVID'க்கான இந்தியாவின் முதல் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட ரிசெப்டர் பைண்டிங் டொமைன் (RBD) புரத உப–அலகு தடுப்பூசி எது?**



**அ) CORBEVAXTM ☑**

ஆ) NOVAVAX

இ) DIVIVAX

ஈ) SEROVAXTM

- ✓ COVID'க்கான இந்தியாவின் முதல் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட ரிசெப்டர் பைண்டிங் டொமைன் (RBD) புரத உப–அலகு தடுப்பூசி 'CORBEVAXTM' ஆகும்.
- ✓ பயோலாஜிக்கல் இ லிட் உருவாக்கியுள்ள இந்தத் தடுப்பூசி, அவசரகால பயன்பாட்டு அங்கீகாரத்திற்கான இந்தியாவி –ன் மருந்துக் கட்டுப்பாட்டாளர் ஜெனரல் அனுமதியை சமீபத்தில் பெற்றுள்ளது. பயோடெக்னாலஜி துறை மற்றும் அதன் PSU பயோடெக்னாலஜி இண்டஸ்ட்ரி ஆராய்ச்சி உதவி கவுன்சில் (BIRAC) ஆகியவை பயோலாஜிக்கல் இ'இன் COVID–19 தடுப்பூசிக்கு ஆதரவளித்துள்ளன.

---

**6. அண்மையில் 25 சீன J–10C போர் விமானங்களை வாங்கிய நாடு எது?**



அ) ஆப்கானிஸ்தான்

**ஆ) பாகிஸ்தான் ☑**

இ) இலங்கை

ஈ) வங்காளதேசம்

- ✓ பாகிஸ்தான் வான்படைக்கு குறைந்தது 25 சீன ஜே–10சி போர் விமானங்களை வாங்குவதை பாகிஸ்தான் அரசு உறுதிசெய்துள்ளது. இந்தியா வைத்திருக்கும் பிரான்சின் ரபேல் போர் விமானங்களுக்கு மாற்றாக இந்த ஜெட் விமானங்கள் இருப்பதாக பாகிஸ்தான் கூறுகிறது. பாகிஸ்தானிலும் அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட F–16 ஜெட் விமானங்கள் உள்ளன.

---

**7.** **சூர்யா பிராந்திய நீர் வழங்கல் திட்டம் செயல்படுத்தப்ப –டுகிற மாநிலம் எது?**



அ) கர்நாடகா

**ஆ) மகாராஷ்டிரா ☑**


இ) ஆந்திர பிரதேசம்

ஈ) தெலுங்கானா

✓ சூர்யா பிராந்திய நீர் வழங்கல் திட்டம் மும்பையில் செயல்படுத்தப்படுகிறது. இது மும்பையின் மேற்கு துணை பிராந்தியத்தில் உள்ள இரண்டு மாநகராட்சிகளுக்கு ஒரு நாளைக்கு 403 மில்லியன் லிட்டர் நீர் விநியோகத்தை செய்கிறது. மும்பை பெருநகர பிராந்திய மேம்பாட்டு ஆணையம் திட்டத்தின் முதல் சுரங்கப்பணியை நிறைவு செய்துள்ளது. இந்தத் திட்டம் 2023 வரை கட்டம் கட்டமாக முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

**8.** **Trace Gas Orbiter எந்தக் கோளின் வளிமண்டலத்தை ஆய்வு செய்வதற்காக ஏவப்பட்டது?**



அ) வெள்ளி

**ஆ) செவ்வாய் ☑**

இ) வியாழன்

ஈ) சனி

✓ "ExoMars TGO" என்றும் அழைக்கப்படுகிற Trace Gas Orbiter ஐரோப்பிய விண்வெளி நிறுவனம் (ESA) மற்றும் இரஷ்ய ரோஸ்கோஸ்மோஸ் ஏஜென்சி ஆகியவற்றுக்கு இடையேயான கூட்டுத் திட்டமாகும். Trace Gas Orbiter 2016இல் செவ்வாய்க்கோளை அடைந்து 2018இல் அதன் முழுப்பணியைத்தொடங்கியது.

✓ சமீபத்தில், அவ்விண்கலத்தால் எடுக்கப்பட்ட புதிய படம் வஸ்டிடாஸ் பொரியாலிஸ் பகுதியில் ஒரு சிறிய பள்ளம் இருப்பதைக் காட்டுகிறது. இப்பள்ளம் ஓரளவு நீர் பனியால் நிரம்பியுள்ளது.

---

**9.** **'தேஜாஸ்' என்பது பின்வரும் எந்நாட்டுடன் இணைந்து இந்தியாவால் தொடங்கப்பட்ட ஒரு புதிய திட்டமாகும்?**



அ) அமெரிக்கா

**ஆ) ஐக்கிய அரபு அமீரகம் ☑**


இ) ஆஸ்திரேலியா

ஈ) பிரான்ஸ்

✓ "தேஜாஸ்" / அமீரக பணிகள் மற்றும் திறன்களுக்கான பயிற்சியின் புதிய திட்டத்தின்கீழ், வளைகுடா நாடுகளில் உள்ள இந்தியத் தொழிலாளர்களுக்கு சான்றிதழ் மற்றும் பயிற்சி அளிப்பதற்காக ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள முன்னணி பணியமர்த்துநர்களுடன் அரசாங்கம் கூட்டு சேர்ந்துள்ளது. இது ஒரு ஆண்டில் 10,000 இந்திய பணியாளர்களுக்கும், அடுத்த 5 ஆண்டுகளில் வளைகுடா கூட்டுறவு கவுன்சில் பிராந்தியத்தில் 100,000 தொழிலாளர்களுக்கும் பயிற்சி அளித்து, சான்றளித்து, பணியமர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

**10.** **ஜியுவான்–1 02இ என்ற புதிய புவி கண்காணிப்பு செயற்கைக்கோளை ஏவிய நாடு எது?**



அ) ஜப்பான்

**ஆ) சீனா ☑**

இ) ஐக்கிய அரபு எமிரேட்ஸ்

ஈ) இஸ்ரேல்

✓ சீனா தனது Chang Zheng 4C ஏவுகலம்மூலம் 'Ziyuan–1 02E' என்ற புதிய புவி வள கண்காணிப்பு செயற்கைக் கோளை நிலைநிறுத்தியுள்ளது. ஒரு தொழிற்முறை சாரா வானொலியான 'CubeSat' உடன் இச்செயற்கைக்கோள் சமீபத்தில் ஏவப்பட்டது.

✓ 'வளம்' எனப்பொருள்படும் ஜியுவான் ரிமோட்–சென்சிங் செயற்கைக்கோள்களின் வரிசையிலுள்ளது. இது உயர் தெளிவுத்திறன் கொண்ட நிழற்படங்களை எடுப்பதை நோக்கமாகக்கொண்டுள்ளது.

✓ புவியின் வளங்களை ஆய்வு செய்வதற்கும், பேரிடர் மேலாண்மைக்கும், நிலப்பயன்பாட்டு கண்காணிப்புக்கும் இப்படங்கள் பயன்படுத்தப்படலாம்.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. தமிழகத்தில் புதிதாக 10.17 லட்சம் வாக்காளர்கள் சேர்ப்பு: தேர்தல் ஆணையம்**

தமிழகத்தில் புதிதாக 10.17 லட்சம் வாக்காளர்கள் சேர்க்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்து உள்ளது. சிறப்பு முகாமில் 10 லட்சம் பேர் விண்ணப்பித்த நிலையில் தற்போது இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, வாக்காளர் பட்டியலில் புதிதாக 10.17 லட்சம் பேர் சேர்க்கப்பட்டுள்ளனர். இரண்டு லட்சத்துக்கும் அதிகமான பெயர்கள் வாக்காளர் பட்டியலிருந்து நீக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் 6 கோடிக்கும் அதிகமான வாக்காளர்கள் உள்ளனர். இதில் 3,12,26,750 பேர் ஆண்கள். 3,23,91,256 பேர் பெண்கள். 18 –19 வயதுள்ள 4,32,600 பேர் புதிதாக பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர். மூன்றாம் பாலினத்தில் 7,804 பேருக்கு வாக்காளர் அடையாள அட்டை உள்ளது.

சோழிங்கநல்லூரில் (7,11,755) அதிக வாக்காளர்களும், கீழ்வேளூரில் (1,78,517) குறைவான வாக்காளர்களும் உள்ளனர். புதுச்சேரியில் 10.10 இலட்சம் வாக்காளர்கள் உள்ளனர்.

---

**2. ₹1,000 கோடி செலவில் 1,150 ஏக்கர் பரப்பளவில் அமைகிறது: தூத்துக்குடியில் நாட்டின் முதலாவது "சர்வதேச பர்னிச்சர் பூங்கா"**

இந்தியாவில் முதலாவதாக தூத்துக்குடியில் ₹1,000 கோடி மதிப்பீட்டில், 1,150 ஏக்கர் பரப்பளவில் 'சர்வதேச பர்னிச்சர் பூங்கா' அமைக்கப்படுகிறது. இந்தப்பூங்காமூலம் ₹4,500 கோடிக்கு தொழில் முதலீடுகளை ஈர்க்கவும், 3.5 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கவும் திட்டமிடப்பட்டு உள்ளது. இப்பணிகளுக்கு தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் வரும் 11ஆம் தேதி அடிக்கல் நாட்டுகிறார்.

பர்னிச்சர் தொழிலுக்கு என நாட்டிலேயே முதல் சிறப்பு பொருளாதார மண்டலமாக இந்தப் பூங்கா அமைகிறது. மர அரவை ஆலை, பர்னிச்சர் பொருட்கள் தயாரிப்பு நிறுவனங்கள், ஏற்றுமதி, இறக்குமதி நிறுவனங்கள் உள்ளிட்ட சுமார் 100 நிறுவனங்கள் வரை இப்பூங்காவில் இடம்பெற வாய்ப்பிருப்பதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

பர்னிச்சர் உற்பத்தி தொடங்கி பேக்கிங் செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது வரையிலான அனைத்து நிறுவனங்களும் இந்தப் பூங்காவில் இடம் பெறுகின்றன.

**3.5 லட்சம் பேருக்கு வேலை**

பர்னிச்சர் தொழில் தொடர்பாக ஆண்டுக்கு 5,000 பேருக்கு பயிற்சி அளிக்கும் கூடம், பர்னிச்சர்களின் தரத்தை பரிசோதிக்கும் ஆய்வுக்கூடம், கூட்ட அரங்கம், வீடியோ கான்பரன்சிங் வசதி, தங்கும் விடுதிகள், ஹோட்டல்கள் போன்ற அனைத்து வசதிகளும் இதில் இடம் பெறும். இந்தப் பூங்கா மூலம் சுமார் ₹4,500 கோடிக்கு தொழில் முதலீடுகளை ஈர்க்கவும், நேரடியாகவும், மறைமுகமாகவும் சுமார் 3.5 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கவும் திட்டமிடப்பட்டு உள்ளதாக சிப்காட் அதிகாரிகள் தெரிவித்தனர்.

மரத்தடிகள் இறக்குமதியில் தூத்துக்குடி துறைமுகம் நாட்டில் 3–வது இடத்தில் உள்ளது.

இவற்றைக் கொண்டு இங்கேயே சர்வதேச தரத்தில் பர்னிச்சர்கள் தயார் செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், கன்னியாகுமரி மற்றும் தேனி மாவட்டங்களில் கிடைக்கும் ரப்பர் மரத்தடிகள், நீலகிரி, தென்காசி, கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள யூகலிப்டஸ் மரங்கள், திண்டுக்கல், கோவை மாவட்டங்களில் உள்ள மலை வேம்பு, திண்டுக்கல் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் உள்ள சில்வர் ஒக் மரங்கள் போன்ற மரங்களைப் பயன்படுத்தும் வகையிலும் இந்த பர்னிச்சர் பூங்கா அமைக்கப்படுகிறது.

---

**3. பொருளாதாரத்தில் பின்தங்கிய பொதுப் பிரிவினருக்கு 10% இடஒதுக்கீடு: 2 நீதிபதிகள் கொண்ட உச்ச நீதிமன்ற அமர்வு இன்று விசாரிக்கும்**

பொருளாதாரத்தில் பின்தங்கிய பொதுப் பிரிவினருக்கு (EWS) மருத்துவ மேற்படிப்பில் 10% இடஒதுக்கீடு வழங்குவது தொடர்பான வழக்கில் 3 நீதிபதிகள் கொண்ட அமர்வுக்கு பதில் 2 நீதிபதிகள் கொண்ட அமர்வு உச்ச நீதிமன்றத்தில் இன்று விசாரணை நடத்தவுள்ளது.

பொருளாதாரத்தில் பின்தங்கிய பொதுப் பிரிவினருக்கு மருத்துவ மேற்படிப்பில் 10% இடங்களை ஒதுக்க மத்திய அரசு ஆணை பிறப்பித்தது. ஆனால், இதற்கு இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தில் இடம் இல்லை என்று உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு இன்னும் விசாரணையில் உள்ளது.

இந்நிலையில், மருத்துவக் கல்லூரி முதல் ஆண்டு வகுப்பில் 10% இடங்களை பொருளாதாரத்தில் பின்தங்கிய பொதுப் பிரிவினருக்கு ஒதுக்கீடு செய்ய மத்திய அரசு முற்பட்டது. இதையடுத்து, அரசின் நடவடிக்கைகளை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யப்பட்டது. அதன் காரணமாக கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற இருந்த நீட் கவுன்சலிங் தள்ளிவைக்கப்பட்டது.

இதனிடையே, ஆண்டுக்கு ₹8 இலட்சம் வருமானம் உள்ளவர்கள் பொருளாதார ரீதியாக பின்தங்கிய பொதுப் பிரிவினராக கருதப்படுவர் என உச்சநீதிமன்றத்தில் மத்திய அரசு அறிக்கை தாக்கல் செய்தது.

இந்த வழக்கை உச்ச நீதிமன்ற நீதிபதிகள் சந்திரசூட், ஏ எஸ் போபண்ணா, சூர்யகாந்த் ஆகிய 3 பேர் கொண்ட அமர்வு விசாரித்து வந்தது. இந்நிலையில், இந்த வழக்கை ஜனவரி 3, 4 ஆகிய தேதிகளில் விரைந்து விசாரிக்க வேண்டும் என மத்திய அரசு சார்பில் சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா உச்சநீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்தார். இதனிடையே, இந்த வழக்கு மேற்கண்ட 3 நீதிபதிகள் கொண்ட அமர்வால் நேற்று விசாரிக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்நிலையில், மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வை இரண்டாக குறைத்து உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி என் வி இரமணா நேற்று புதிய உத்தரவு பிறப்பித்தார். அதன்படி இந்த வழக்கை நீதிபதிகள் சந்திரசூட், ஏ எஸ் போபண்ணா ஆகியோர் கொண்ட இரு நீதிபதிகள் அமர்வு இன்று விசாரணை நடத்தவுள்ளது. அதேபோல் மருத்துவ மேற்படிப்புகளில் இதர பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீடு குறித்த மனுவும் இன்று விசாரணைக்கு வரவுள்ளது.

---

**4. சென்னை ஐஐடி.யில் 'சாரங் 2022' கலாசார விழா இன்று தொடக்கம்:**

சென்னை ஐஐடி.யில் 'சாரங் 2022' கலை– கலாசார விழா வியாழக்கிழமை தொடங்கி ஞாயிற்றுக்கிழமை வரை நான்கு நாள்கள் நடைபெறவுள்ளது. அதில் 100'க்கும் மேற்பட்ட நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. இந்த நிகழ்ச்சியை மாணவர்களே முன்னின்று நடத்துவர். அந்த வகையில் 27ஆவது ஆண்டாக 'சாரங் 2022' கலை கலாசார விழா மெய்நிகர் முறையில் நடைபெற உள்ளது.

இந்த ஆண்டுக்கான கலாசார விழாவின் கருப்பொருள் 'செவிவழி அறிவு மற்றும் மரபுகள்' என்பதாக இருக்கும்.

---

**5. தெற்காசியாவிலேயே முதலீடுகளுக்கு உகந்த மாநிலமாக மாற்றுவோம்**

தெற்காசியாவிலேயே முதலீடுகளுக்கு உகந்த மாநிலமாக தமிழகத்தை மாற்றுவோம் என்று ஆளுநர் உரையில் கூறப்பட்டுள்ளது.

**ஆளுநர் உரையில் கூறியிருப்பது:**

தெற்காசியாவிலேயே முதலீடுகளுக்கு உகந்த முதல் முகவரியாக தமிழ்நாட்டை மாற்றிட தமிழ்நாடு அரசு உறுதியாக உள்ளது. இந்த அரசாங்கம் பொறுப்பேற்றபின், கடந்த 7 மாதங்களில் 3 முதலீட்டாளர் மாநாடுகளை நடத்தியது. இதன் பயனாக ₹56,230 கோடி முதலீட்டில் 1 லட்சத்து 74,999 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கக்கூடிய 109 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன.

இதில், இதுவரை ₹21,508 கோடி மதிப்பிலான திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு ஏற்றுமதி ஊக்குவிப்புக் கொள்கை, தமிழ்நாடு நிதிநுட்பக்கொள்கை ஆகிய 2 புதிய கொள்கைகளை முதல்வர் வெளியிட்டுள்ளார். தமிழகத்தின் பொருளாதாரம், 2030ஆம் ஆண்டுக்குள் ஒரு லட்சம் கோடி டாலர் என்ற இலக்கை அடைய இக்கொள்கைகள் மிக முக்கியப் பங்கு வகிக்கும்.

**தரவு மையங்களின் முகவரி:** தரவுகளின் அடிப்படையில் முடிவுகளை எடுப்பதற்கான கட்டமைப்பை உருவாக்கி, நிர்வாகத்திறனை மேம்படுத்துவதே அரசின் நோக்கமாகும். பல்வேறு துறைகளின் தரவுகளை, ஒருங்கிணைத்து ஆராய்வதன்மூலம், அரசுத் திட்டங்களின் பலன்களை உரிய பயனாளிகளுக்கு கொண்டு செல்வதே தரவுத் தூய்மைத் திட்டத்தின் நோக்கமாகும்.

வெளிப்படைத்தன்மையும், பொறுப்புணர்வையும் மேம்படுத்தி, கோப்புகளின் மீது விரைவாக முடிவெடுக்கவும் மின் அலுவலக முறையை செயல்படுத்துவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அரசின் சொத்துகளைத் திறம்பட மேலாண்மை செய்வதற்குத் தகுந்த தொழில்நுட்பத்துடன் கணினிமயமாக்கப்பட்ட அமைப்பு ஒன்று செயல்பாட்டுக்கு கொண்டுவரப்படும்.

தரவு மையங்களில் ₹30,000 கோடி அளவிலான முதலீட்டை ஈர்த்து, தரவுமைய முதலீடுகளின் முகவரியாக தமிழ்நாடு உருவெடுத்துள்ளது. மேலும், அதிக முதலீட்டை ஈர்ப்பதற்கும் தரவுமையங்கள் அமைப்பதை எளிதாக்குவதற்கும் "தரவுமையக்கொள்கை–2021" என்ற புதிய கொள்கையை அரசு வெளியிட்டுள்ளது எனக் கூறப்பட்டுள்ளது.

---

**6. சாகச சுற்றுலாவை உள்ளடக்கிய புதிய சுற்றுலா கொள்கை – ஆளுநர்**

தமிழகத்தில் சுற்றுலா மூலம் பொருளாதாரம் பொலிவு பெறுவதற்கான திட்டம் வகுக்கப்படும் என்றும், சாகச சுற்றுலாவை உள்ளடக்கிய புதிய சுற்றுலாக் கொள்கை வெளியிடப்படும் என ஆளுநர் உரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆளுநர் உரையில் கூறியிருப்பதாவது:

முதலமைச்சரின் சாலை மேம்பாட்டுத் திட்டத்தில், இந்த ஆண்டில் ₹2,989 கோடி மதிப்பீட்டில் 894 கிமீ சாலைகளை அகலப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

சென்னைப் பெருநகரில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக, ₹407 கோடி மதிப்பீட்டில் பரங்கிமலை – மேடவாக்கம் சாலை சந்திப்பில் கீழ்பாலம், பரங்கிமலை – பூந்தமல்லி – ஆவடி சாலையில் பல்வழி மேம்பாலம், மத்திய கைலாச சந்திப்பில் மேம்பாலம் என மூன்று முக்கியத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

முதல்வரால் அறிவிக்கப்பட்ட, மகளிருக்கு இலவசப் பேருந்துப் பயணத் திட்டத்தினால், கடந்த நான்கு மாதங்களில் மகளிர் பயணிகளின் எண்ணிக்கை 40 சதவீதத்திலிருந்து 61 சதவீதமாக உயா்ந்துள்ளது. மகளிரிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள இந்தத் திட்டம், பெண்களின் சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிவகை செய்யும். ஒருங்கிணைந்தப் பன்முறை நகரப்போக்குவரத்து வசதிகளை உறுதி செய்வதற்கும், பயணிகளுக்குச் செல்லிடம் வரை போக்குவரத்து இணைப்பை வழங்கவும், சென்னை மெட்ரோ ரயில் நிலையங்களிலிருந்து நகரின் பல்வேறு பகுதிகளுக்கு சிற்றுந்து சேவை தொடங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் பார் போற்றும் வரலாறு, செழுமையான பண்பாடு, இயற்கை வளங்களின் அழகியல் ஆகியவற்றை முன்னிலைப்படுத்துவதன் வாயிலாக, மாநிலத்தில் சுற்றுலா மூலம் பொருளாதாரம் பொலிவு பெறுவதற்கான திட்டம் அரசால் வகுக்கப்படும்.

இந்த ஆண்டு, சாகச சுற்றுலாவை உள்ளடக்கிய புதிய சுற்றுலாக் கொள்கை வெளியிடப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

---

**7. புதுச்சேரியில் அட்சய பாத்திரம் மதிய உணவுத் திட்டம் தொடக்கம்**

புதுச்சேரியில் தனியார் பங்களிப்புடன் அரசுப்பள்ளி மாணவர்களுக்கான அட்சய பாத்திரம் மதிய உணவுத் திட்டத்தை துணைநிலை ஆளுநர் (பொ) தமிழிசை சௌந்தரராஜன், முதல்வர் என் ரங்கசாமி ஆகியோர் தொடக்கிவைத்தனர்.

---

**1.** 'சர்வதேச தொற்றுநோய்க்கான தயார்நிலை (Epidemic Preparedness) நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?



அ) டிசம்பர் 25

ஆ) டிசம்பர் 26

**இ) டிசம்பர் 27 ☑**

ஈ) டிசம்பர் 28

✓ டிசம்பர் 27 – சர்வதேச தொற்றுநோய் தயாரிப்பு நாளாக அனுசரிக்கப்படுகிறது. ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் பேரறிவிப்பின் அடிப்படையில் கடந்த 2020ஆம் ஆண்டில் தொற்றுநோய்க்கான தயார்நிலைக்கான முதல் சர்வதேச நாள் குறிக்கப்பட்டது.

✓ WHO'இன் கூற்றுப்படி, இந்த நாள் தொற்றுநோய்களைத் தடுப்பதன் முக்கியத்துவத்தைக் குறிக்கிறது.

---

**2.** 'உலக சங்கீத தான்சென் விழா' நடைபெறுகிற மாநிலம் எது?



**அ) மத்திய பிரதேசம் ☑**

ஆ) மகாராஷ்டிரா

இ) சிக்கிம்

ஈ) அருணாச்சல பிரதேசம்

✓ 'உலக சங்கீத் தான்சென் திருவிழா' மத்திய பிரதேசத்தில் தொடங்கியது. இந்த விழா குவாலியரில் டிச.30ஆம் தேதி வரை நடைபெறும். இது 'உலக சங்கீத் தான்சென்' திரு விழாவின் 97ஆம் பதிப்பாகும். ஓம்காரேஷ்வரில் அமைந்து உள்ள சித்தநாத் கோவிலின் மாதிரியில் மேடை அமைக்க –ப்பட்டுள்ளது. இதன் தொடக்க விழாவில் "தேசிய காளிதாஸ் விருதுகள்" வழங்கப்படும்.

---

**3.** துணை தேசிய பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்பட் –டுள்ள இந்திய அதிகாரி யார்?



**அ) விக்ரம் மிஸ்ரி ☑**

ஆ) அருண் குமார் சிங்

இ) தினேஷ் பாட்டியா

ஈ) மன்பிரீத் வோஹ்ரா

✓ சீனாவுக்கான இந்தியாவின் முன்னாள் தூதர் விக்ரம் மிஸ்ரி, தேசிய பாதுகாப்பு கவுன்சில் செயலகத்தில் துணை தேசிய பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டார்.

✓ 1989 பேட்சில் இந்திய வெளியுறவுத்துறை அதிகாரியாக இருந்த இவர், பல தூதரக பதவிகளை வகித்துள்ளார். விக்ரம் மிஸ்ரி, 2019'இல் சீனாவுக்கான இந்திய தூதராக நியமிக்கப்பட்டார். வெளியுறவு அமைச்சகம் பிரதீப் குமார் இராவத்தை சீனாவுக்கான அடுத்த தூதராக நியமித்தது.

---

**4.** 6G தொழினுட்பத்தில் 6 பணிக்குழுக்களை அமைத்து உள்ள மத்திய அமைச்சகம் எது?

அ) தகவல் & ஒலிபரப்பு அமைச்சகம்

ஆ) திறன் மேம்பாடு & தொழில் முனைவோர் அமைச்சகம்

**இ) தகவல் தொடர்பு அமைச்சகம் ☑**

ஈ) வர்த்தகம் & தொழில்துறை அமைச்சகம்

✓ தகவல் தொடர்பு அமைச்சகத்தின் கீழுள்ள தொலைத் தொடர்பு துறை, 6G தொழில்நுட்பத்தில் ஆறு பணிக் குழுக்களை அமைத்துள்ளது.

✓ இப்பணிக்குழுவுக்கு நாடு முழுவதும் உள்ள IIT–மெட்ராஸ், IIT–கான்பூர், ஐஐஎஸ்சி போன்றவற்றின் இயக்குநர்கள் தலைமை தாங்குகின்றனர். இந்தியா இந்த ஆண்டு 5G தொழில்நுட்பத்தை செயல்படுத்துகிறது. இக்குழு 6G'இல் உள்ள செயல்முறை & சவால்களை பகுப்பாய்வு செய்யும்.

---

**5.** 'SMILE' திட்டத்தைச் செயல்படுத்தவுள்ள நடுவண் அமைச்சகம் எது?

அ) கல்வி அமைச்சகம்

ஆ) பெண்கள் & குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

**இ) சமூக நீதி & அதிகாரமளித்தல் அமைச்சகம் ☑**

ஈ) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

✓ SMILE (Support for Marginalised Individuals for Livelihood and Enterprise) என்பது சமூக நீதி & அதிகாரமளித்தல் அமைச்சகத்தால் உருவாக்கப்பட்ட ஒரு திட்டமாகும்.

✓ திருநங்கை/நம்பிகள் மற்றும் யாசகர்களின் நலனுக்கான இரண்டு துணைத் திட்டங்கள் இதில் அடங்கும். இந்தத் திட்டத்தில் மறுவாழ்வு, மருத்துவ வசதிகள், ஆலோசனை –கள், கல்வி, திறன் மேம்பாடு மற்றும் பொருளாதார இணைப்புகள் ஆகியவை அடங்கும்.

---

**6.** 2021 செப்.உடன் முடிவடைந்த 2ஆவது காலாண்டில் இந்தியாவின் நடப்புக் கணக்கு இருப்பு எவ்வளவு?




அ) $9.6 பில்லியன் உபரி

**ஆ) $9.6 பில்லியன் பற்றாக்குறை ☑**

இ) $0.6 பில்லியன் உபரி

ஈ) $0.6 பில்லியன் பற்றாக்குறை

✓ 2021 செப்டம்பர் மாதத்துடன் முடிவடைந்த இரண்டாவது காலாண்டில் (Q2Fy22) இந்தியாவின் நடப்புக் கணக்கு இருப்பு $9.6 பில்லியன் பற்றாக்குறையை பதிவுசெய்து உள்ளது. இது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 1.3 சதவீதமாக உள்ளது.

✓ 2021 ஜூனுடன் முடிவடைந்த முதல் காலாண்டில் நடப்புக் கணக்கு உபரி $6.6 பில்லியன் (GDP'இல் 0.9 சதவீதம்) இருந்தது. ரிசர்வ் வங்கியின் கூற்றுப்படி, நடப்புக்கணக்கு பற்றாக்குறை முக்கியமாக வர்த்தக இடைவெளியை விரிவுபடுத்தியது மற்றும் முதலீட்டு வருமானத்தின் அதிகரிப்பு இதற்கு காரணமாகும்.

---

**7.** 2022 ஜனவரி.1 நிலவரப்படி, அமெரிக்க மக்கள்தொகை கணக்கெடுப்பு பணியகத்தின்படி, உலகின் மதிப்பிடப்பட்ட மக்கள்தொகை எவ்வளவு?



அ) 3.8 பில்லியன்

ஆ) 5.8 பில்லியன்

**இ) 7.8 பில்லியன் ☑**

ஈ) 9.8 பில்லியன்

- ✓ அமெரிக்க மக்கள்தொகை கணக்கெடுப்பு அலுவலகத்தின் படி, 2022 புத்தாண்டு நாளின்படி, உலக மக்கள்தொகை 7.8 பில்லியனாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இது 74 மில்லியன் அதிகரிப்பு அல்லது 2021 புத்தாண்டு நாளிலிருந்து 0.9% வளர்ச்சி விகிதத்தைக் குறிக்கிறது.
- ✓ உலகளவில் ஒவ்வொரு நொடிக்கும் 4.3 பிறப்புகளும் இரு இறப்புகளும் எதிர்பார்க்கப்படுகின்றன. சீனா, 1.4 பில்லிய –ன் மக்களுடன் உலகின் அதிக மக்கட்தொகைகொண்ட நாடாக உள்ளது. மேலும், 2025ஆம் ஆண்டில் இந்தியா சீனாவை முந்திவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

**8. பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவினரை இனங் காண தற்போதுள்ள ஆண்டு வருமான வரம்பு என்ன?**

அ) ₹6 இலட்சம்



**ஆ) ₹8 இலட்சம் ☑**

இ) ₹9 இலட்சம்

ஈ) ₹10 இலட்சம்

- ✓ மூவர்கொண்ட குழுவின் பரிந்துரைக்குப்பிறகு, பொருளா –தாரத்தில் பின்தங்கிய பிரிவினரை (EWS) அடையாளம் காண தற்போதுள்ள ஆண்டு வருமான வரம்பு ₹8 இலட்ச –த்தைத் தொடர மத்திய அரசு முடிவு செய்துள்ளது. NEET–PG சேர்க்கையைக் கையாளும்போது உச்சநீதிமன்றம் 10% இடஒதுக்கீடு குறித்த ஐயங்களை எழுப்பியது மற்றும் EWS ஒதுக்கீட்டின் வருமான வரம்பை மறுபரிசீலனை செய்ய மத்திய அரசு குழுவை அமைத்தது.
- ✓ இக்குழுவில் முன்னாள் மத்திய நிதித்துறை செயலாளர் அஜய்பூஷன் பாண்டே உள்ளிட்டோர் இடம்பெற்றுள்ளனர்.

---

**9. 2020–21ஆம் ஆண்டில் இந்தியாவின் பிறப்பு பாலின விகிதம் என்ன?**

அ) 918




ஆ) 920

**இ) 937 ☑**

ஈ) 951

- ✓ இந்தியாவின் பிறப்பு பாலின விகிதம் (Sex Ratio at Birth – SRB) தேசிய அளவில் 19 புள்ளிகள் உயர்ந்துள்ளது.
- ✓ 2014–15'இல் 918ஆக இருந்த இது, 2020–21இல் 937 ஆக உள்ளது. பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தின் ஆண்டு இறுதி மதிப்பாய்வின்போது இது அறிவிக்கப்பட்டது. நாடு முழுவதும் 640 மாவட்டங்களை உள்ளடக்கிய "பேட்டி பச்சாவோ பேட்டி பதாவோ திட்டம்" இந்தியா முழுவதும் செயல்படுத்தப்படுகிறது. போஷான் டிராக்கர் செயலி நிரப்பு ஊட்டச்சத்தின் நிகழ்நேர கண்கா –ணிப்பை உறுதி செய்கிறது. பிரதமர் மாத்ரு வந்தனா திட்டம் கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக் –காக செயல்படுத்தப்படுகிறது.

---

**10. பெரிய மாநிலங்களுள் முதல் டோஸ் தடுப்பூசிகளை 100 சதவீதம் பதிவுசெய்த முதல் மாநிலம் எது?**

அ) தமிழ்நாடு



**ஆ) தெலுங்கானா ☑**

இ) ஆந்திர பிரதேசம்

ஈ) கர்நாடகா

- ✓ 100% முதல் டோஸ் தடுப்பூசிகளை பதிவு செய்த நாட்டின் முதல் பெரிய மாநிலமாக தெலுங்கானா ஆனது. மத்திய அரசின் மதிப்பிடப்பட்ட வயது வந்தோர் மக்கள்தொகை இலக்கின்படி, 2.77 கோடி குடிமக்களுக்கு முதல் டோஸ் தடுப்பூசியை தெலுங்கானா மாநிலம் செலுத்தியுள்ளது.
- ✓ முதல் டோஸின் அடிப்படையில் தேசிய சராசரியைவிட 9 சதவீதமும், இரண்டாவது டோஸில் தேசிய சராசரியை விட 3 சதவீதமும் அம்மாநிலம் முன்னிலையில் உள்ளது.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. வேட்பாளர் செலவு உச்ச வரம்பு உயர்வு**

உ.பி., உட்பட 5 மாநிலங்களுக்கு சட்டசபை தேர்தல் தேதி விரைவில் அறிவிக்க உள்ள நிலையில் வேட்பாளரின் தேர்தல் செலவு உச்ச வரம்பு உயர்த்தப்பட்டு உள்ளது.

**தலைமை தேர்தல் ஆணைய அறிவிப்பு:**

பெரிய மாநிலங்களில் சட்டசபை தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரின் செலவுத் தொகைக்கான உச்ச வரம்பு 28 லட்சம் ரூபாயில் இருந்து, 40 லட்சம் ரூபாயாக உயர்த்தப் பட்டு உள்ளது. சிறிய மாநிலங்களுக்கு 20 லட்சம் ரூபாயிலிருந்து, ₹28 லட்சமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

லோக்சபாவுக்கு பெரிய மாநிலங்களின் வேட்பாளருக்கு 70 லட்சம் ரூபாயாக இருந்த செலவுத் தொகை உச்ச வரம்பு 90 லட்சம் ரூபாயாகவும், சிறிய மாநிலங்களில் 54 லட்சம் ரூபாயில் இருந்து 75 லட்சம் ரூபாயாகாவும் உயர்த்தப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

---

**2.பிரதமர் பாதுகாப்பில் குறைபாடு? – மத்திய அரசு, பஞ்சாப் தனித்தனியாக விசாரணைக் குழு அமைப்பு**

பிரதமர் பாதுகாப்பில் குறைபாடு ஏற்பட்டதாக எழுந்த சர்ச்சை தொடர்பாக மத்திய உள்துறை அமைச்சகம், மாநில அரசு தனித்தனியாக விசாரணைக் குழு அமைத்துள்ளது.

பஞ்சாப் மாநிலத்தில் பல்வேறு நலத்திட்டங்களை தொடங்கி வைப்பதற்காக கடந்த புதன்கிழமை பிரதமர் மோடி விமானம் மூலம் பஞ்சாப் சென்றார். மோசமான வானிலை காரணமாக நிகழ்ச்சி நடைபெறும் இடத்துக்கு காரில் செல்ல முடிவு செய்தார்.

ஆனால், விவசாயிகள் போராட்டம் காரணமாக அவரது வாகன அணி வகுப்பு மேம்பாலத்தில் 15 நிமிடத்துக்கும் மேலாக நின்றது. போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படாததால் தனது பயணத்தை பிரதமர் மோடி ரத்து செய்ததாக மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்தது. இதனையடுத்து, மத்திய உள்துறை அமைச்சகம் இது தொடரபாக விசாரிக்க மூன்று பேர் கொண்ட

விசாரணைக் குழுவை அமைத்துள்ளது. இதற்கு சுதிர் குமார் சக்சேனா தலைமை வகிக்கிறார். குழுவில் உளவுத் துறை இணை இயக்குநர் பல்பீர் சிங் மற்றும் சிறப்பு பாதுகாப்புக் குழுவின் தலைவர் எஸ்.சுரேஷ் ஆயியோர் இடம்பெற்றுள்ளனர்.

இதேபோல் பஞ்சாப் மாநில அரசு ஓய்வு பெற்ற நீதிபதி மெஹ்தாப் கில், உள்துறை முதன்மைச் செயலாளர் அனுராக் வர்மா தலைமையில் ஒரு விசாரணைக் குழுவை அமைத்துள்ளது. இக்குழுவானது மூன்று நாட்களில் விசாரணை அறிக்கையைத் தாக்கல் செய்யும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்தை பிரதமர் நரேந்திர மோடி டெல்லியில் நேற்று சந்தித்துப் பேசினார். அப்போது பஞ்சாபில் நிகழ்ந்த பாதுகாப்பு குறைபாடுகள் குறித்து குடியரசுத் தலைவர் முழுமையாக கேட்டறிந்தார். பாதுகாப்பு குறைபாடு குறித்து அவர் ஆழ்ந்த கவலை தெரிவித்தார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

---

**3. 2ம் கட்ட பசுமை மின்சக்தி வழித்தடம் – தமிழகம் உட்பட மாநிலங்களுக்கு இடையேயான பகிர்வு அமைப்புக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல்**

இரண்டாம் கட்ட பசுமை மின்சக்தி வழித்தடம் அமைப்பதில் தமிழகம் உட்பட மாநிலங்களுக்கு இடையேயான பகிர்வு அமைப்புக்கு, பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை இன்று ஒப்புதல் அளித்தது.

இதன் மூலம் சுமார் 10,750 சுற்று கிமீ தூரத்துக்கு மின் பகிர்மான வழித்தடம் மற்றும் சுமார் 27,500 மெகாவோல்ட் – ஆம்பியர் அளவுக்கு மின்பரிமாற்ற திறன் கொண்ட துணை மின்நிலையங்கள் அமைக்கப்படும். இத்திட்டம் குஜராத், ஹிமாச்சலப் பிரதேசம், கர்நாடகா, ராஜஸ்தான், தமிழ்நாடு மற்றும் உத்தர பிரதேசம் ஆகிய மாநிலங்கள் இடையே மின்தொகுப்பு ஒருங்கிணைப்புக்கு –ம் மற்றும் சுமார் 20 GW புதுப்பிக்கத்தக்க மின்சக்தியை அனுப்பவும் உதவும்.

இத்திட்டம் மொத்தம் ₹12,031.33 கோடி மதிப்பில் அமைக்கப்படவுள்ளது மற்றும் இதில் மத்திய நிதி உதவி, திட்ட செலவில் 33 சதவீதமாக அதாவது ₹3970.34 கோடியாக இருக்கும். இந்த மின்பகிர்வு அமைப்பு 2021–22ம் ஆண்டு முதல் 2025–26ம் வரை 5 ஆண்டு காலத்தில் அமைக்கப்படும். மத்திய அரசின் நிதியுதவி, மாநிலங்களுக்கு இடையேயான மின்பகிர்வு கட்டணங்களை ஈடுசெய்யவும், மின்சாரத்தை குறைந்த விலையில் வைத்திருக்கவும் உதவும். மத்திய அரசின் உதவியால், நாட்டு மக்களுக்கு குறைந்த கட்டணத்தில் மின்சாரம் கிடைக்கும். இத்திட்டம் 2030ம் ஆண்டுக்குள், 450 ஜிகா வாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறன் அமைக்கும் இலக்குக்கு உதவும்.

இத்திட்டம், நாட்டின் நீண்ட கால மின்சக்தி பாதுகாப்புக்கும் மற்றும் கார்பன் வெளியேற்றத்தை குறைப்பதன் மூலம் நிலையான சுற்றுச்சூழல் வளர்ச்சியை மேம்படுத்தவும் உதவும். மேலும், இத்திட்டம் மின்சாரம் மற்றும் இது தொடர்பான துறைகளில் நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பை ஏற்படுத்தும்.

முதல்கட்ட பசுமை மின்சக்தி வழித்தட திட்டம் ஆந்திரபிரதேசம், குஜராத், ஹிமாச்சலப் பிரதேசம், கர்நாடகா, மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, ராஜஸ்தான் மற்றும் தமிழகத்தில் ஏற்கனவே அமல்படுத்தப்பட்டு வருகிறது. 24 ஜிகாவாட் திறனுள்ள புதுப்பிக்கத்தக்க மின்சக்தி திட்டம் 2022ம் ஆண்டுக்குள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

**4. தேசிய புற்றுநோய் நிறுவன இரண்டாவது வளாகம் இன்று திறப்பு – காணொலி மூலம் பிரதமர் திறந்து வைக்கிறார்**

மேற்கு வங்க மாநில தலைநகர் கொல்கத்தாவில் அமைந்துள்ள சித்தரஞ்சன் தேசிய புற்றுநோய் நிறுவனத்தில் இரண்டாவது வளாகம் கட்டப்பட்டுள்ளது. பிரதமரின் விருப்பத்திற்கு ஏற்ப நாட்டின் அனைத்து பகுதிகளிலும் சுகாதார வசதிகளை விரிவுபடுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் திட்டத்தின் கீழ் இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

மொத்தம் 530 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்த வளாகம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் மத்திய அரசு 430 கோடி ரூபாய் நிதி உதவியும் மீதி தொகை மேற்கு வங்க அரசாலும் வழங்கப்பட்டுள்ளன.

---

**5. மெட்ரோ சேவையை வண்டலூர் வரை நீட்டிக்கும் திட்டம்: பேரவையில் முதல்வர் ஸ்டாலின் பதில்**

மெட்ரோ சேவையை வண்டலூர் வரை நீட்டிக்கும் திட்டம் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது என்று சட்டப்பேரவையில் முதல்வர் ஸ்டாலின் பதில் அளித்தார்.

நடப்பாண்டுக்கான சட்டப்பேரவை முதல் கூட்டம் கலைவாணர் அரங்கில் நேற்று தொடங்கியது. ஆளுநர் சிறப்புரையுடன் நேற்று தொடங்கப்பட்ட சட்டப்பேரவைக் கூட்டத்தில் அதிமுக, விசிக கட்சிகள் ஆளுநர் உரைக்கு எதிர்ப்பு தெரிவித்து வெளிநடப்பு செய்தனர். தமிழக வரலாற்றில் முதல் முறையாக சட்டப்பேரவை கேள்வி நேரம் மக்களுக்கு நேரடியாக ஒளிபரப்பு செய்யப்பட்டு வருகிறது.

இதில், பல்லாவரம் சட்டப்பேரவை உறுப்பினர் கருணாநிதி சென்னை மெட்ரோ ரயில் சேவையை மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து, பல்லாவரம் மற்றும் குரோம்பேட்டை வழியாக வண்டலூர் வரை நீட்டிப்பது தொடர்பாக முதல்வரிடம் ஒரு கேள்வியை எழுப்பினார்.

சென்னை மெட்ரோ ரயில் சேவையை மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து, பல்லாவரம் மற்றும் குரோம்பேட்டை வழியாக வண்டலூர் வரை நீட்டிக்க அரசு ஆவன செய்யுமா? ஆம் எனில், எப்போது? என்ற அவரது கேள்விக்கு, "வண்டலூர் அருகே கிளாம்பாக்கத்தி –ல் சென்னை மாநகருக்கான புதிய பேருந்து முனையம் அமைக்கப்பட்டு வருவதன் காரணமாக, மெட்ரோ ரயில் இணைப்பை மீனம்பாக்கம் விமான நிலையத்திலிருந்து

கிளாம்பாக்கம் வரை நீட்டிக்க வேண்டிய அவசியம் உள்ளது. இதனைக்கருதி, இத்தடத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான பணிகள் பன்னாட்டு நிறுவனத்தின் மூலமாக முடிக்கப்பட்டுள்ளது.

இந்த விரிவான இறுதித் திட்ட அறிக்கை அரசின் ஆய்வில் தற்போது இருக்கிறது. இந்த அறிக்கையின் அடிப்படையில், பணிகளைச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு தொடங்கியுள்ளது" என்று முதல்வர் ஸ்டாலின் தெரிவித்தார்.

**1.** "Women and girls left behind: Glaring gaps in pandemic responses" என்ற தலைப்பில் அறிக்கையை வெளியிட்ட நிறுவனம் எது?

அ) உலக பொருளாதார மன்றம்

ஆ) உலக வங்கி

**இ) ஐநா பெண்கள் அமைப்பு ☑**

ஈ) NITI ஆயோக்

- ✓ ஐநா அவையின் பெண்கள் அமைப்பானது சமீபத்தில் "Women and girls left behind: Glaring gaps in pandemic responses" என்ற ஒரு புதிய அறிக்கையை வெளியிட்டது. இவ்வறிக்கையின்படி, அரசாங்கத்திடமிருந்து பெண்கள் COVID–19 நிவாரணத்தைப் பெறுவதற்கான வாய்ப்புகள் குறைவாகவே உள்ளது.
- ✓ குழந்தைகளுடன் வாழும் வேலைசெய்யும் தாய்மார்களில் குறைந்தது 29 சதவீதம் பேரும் குழந்தைகளுடன் வாழும் வேலை செய்யும் ஆண்களில் 20% பேரும் தங்களின் வேலையை இழந்துள்ளனர். குழந்தைகளுடன் தனித்து வாழும் ஒற்றைப்பெண்களே அதிகம் பின்தங்கியிருப்பதாக இந்த அறிக்கை கூறுகிறது.

---

**2.** அண்மையில் 200 டெஸ்ட் விக்கெட்டுகள் என்ற மைல் கல்லை எட்டிய இந்திய வேகப்பந்து வீச்சாளர் யார்?



**அ) முகமது ஷமி ☑**

ஆ) இரவிச்சந்திரன் அஸ்வின்

இ) இரவீந்திர ஜடேஜா

ஈ) ஜஸ்பிரித் பும்ரா

- ✓ முகமது ஷமி சமீபத்தில் தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான முதல் டெஸ்டில் 200 டெஸ்ட் விக்கெட்டுகள் என்ற மைல் கல்லை எட்டினார். 31 வயதான அவர் தனது 55ஆவது டெஸ்ட் போட்டியில் இந்தச் சாதனையை எட்டியதால், இந்திய வேகப்பந்து வீச்சாளர்களுள் இந்தச் சாதனையை வேகமாக படைத்த மூன்றாவது நபராக அவர் ஆனார்.
- ✓ கபில்தேவ் (434), இஷாந்த் சர்மா (311), ஜாகீர் கான் (311), மற்றும் ஜவகல் ஸ்ரீநாத் (236) ஆகியோருக்கு பிறகு அவர் உள்ளார்.

---

**3.** 'பெண்களுக்கான புதிய கொள்கை – 2021' வரைவை வெளியிட்ட மாநிலம் எது?



**அ) தமிழ்நாடு ☑**

ஆ) கேரளா

இ) ஒடிஸா

ஈ) மேற்கு வங்கம்

- ✓ பள்ளி மற்றும் கல்லூரி பயிலும் பெண்களுக்கான கட்டாய தற்காப்புக் கலைப் பயிற்சி போன்ற அம்சங்களை உள்ளடக்கிய 'பெண்களுக்கான புதிய கொள்கை–2021' ஐ தமிழ்நாடு அரசு சமீபத்தில் வெளியிட்டது.
- ✓ இக்கொள்கை அனைத்து போக்குவரத்து முறைகளையும் பெண்களுக்கு ஏற்றதாக மாற்ற முயற்சி செய்கிறது.

---

**4.** இந்திய இராணுவத்தின் "குவாண்டம் கம்ப்யூட்டிங் ஆய்வகம் மற்றும் செயற்கை நுண்ணறிவு மையம் (AI)" அமைக்கப்பட்டுள்ள மாநிலம் எது?



அ) குஜராத்

ஆ) மகாராஷ்டிரா

**இ) மத்திய பிரதேசம் ☑**

ஈ) ஹரியானா

- ✓ இந்திய இராணுவம், மத்திய பிரதேசத்தில் உள்ள மோவ், இராணுவ தொலைத்தொடர்பு பொறியியல் கல்லூரியில் 'குவாண்டம் கம்ப்யூட்டிங் ஆய்வகம் மற்றும் செயற்கை நுண்ணறிவு மையம்' ஆகியவற்றை அமைத்துள்ளது.
- ✓ இந்த மையங்கள் ஆயுதப்படைகளால் பயன்படுத்தப்படும் அதிநவீன தொழில்நுட்பங்களை உருவாக்குவதற்கான ஆராய்ச்சியை மேற்கொள்ளும். இது தேசிய பாதுகாப்பு கவுன்சில் செயலகத்தின் ஆதரவுடன் இந்திய இராணுவத்தால் நிறுவப்பட்டுள்ளது.

---

**5.** உலகில் 'அருமண் பொருள்' உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் நாடு எது?



அ) இந்தியா

ஆ) ஜப்பான்

**இ) சீனா ☑**

ஈ) அமெரிக்கா

- ✓ அருமண் பொருட்களை உற்பத்தி செய்யும் உலகின் முன்னணி நிறுவனமாக 'ஹினா' உள்ளது. சமீபத்தில், சீனாவில் மூன்று அரசுக்கு சொந்தமான அருமண் சுரங்க நிறுவனங்கள் 'சீனா ரேர் எர்த்ஸ்' குழுமம் என்ற புதிய நிறுவனத்தை உருவாக்குகின்றன. சீனா தனது அருமண் பொருட்களின் விநியோகச் சங்கிலியை வலுப்படுத்தி வருகிறது. அருமண் என்பது பதினேழு கனிமங்களின் கலவையாகும். இது நுகர்வோர் மின்னணுவியல் மற்றும் இராணுவ உபகரணங்களின் உற்பத்தியில் முதன்மைப் பொருட்களாகப் பயன்படுத்தப்படுகிறது.

---

**6.** தேசிய 'விமான விளையாட்டுக் கொள்கை' வரைவை வெளியிட்டுள்ள மத்திய அமைச்சகம் எது?

அ) இளைஞர் விவகாரங்கள் & விளையாட்டு அமைச்சகம்

**ஆ) சிவில் வான்போக்குவரத்து அமைச்சகம் ☑**

இ) புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம்

ஈ) வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்

- ✓ சிவில் வான்போக்குவரத்து அமைச்சகம் பொதுமக்களின் கருத்துக்காக தேசிய விமான விளையாட்டுக் கொள்கை வரைவை வெளியிட்டுள்ளது.
- ✓ இக்கொள்கையானது இந்தியாவின் விமான விளையாட் –டுக்கான திறனை ஊக்குவிக்க எண்ணுகிறது மற்றும் பாதுகாப்பில் சிறந்த நடைமுறைகளை உறுதிசெய்வதில் கவனஞ்செலுத்துகிறது. 2030'க்குள் இந்தியாவை சிறந்த விமான விளையாட்டு நாடுகளுள் ஒன்றாக மாற்றுவதுதான் இக்கொள்கையின் நோக்கம்.

---

**7. பின்வரும் எந்தத்துறைக்கு 'பிரதமர் உயர்சிறப்பு விருது' வழங்கப்படுகிறது?**

அ) விளையாட்டு

**ஆ) பொது நிர்வாகம் ☑**




இ) தொழில்முனைவு

ஈ) கல்வி

- ✓ நிர்வாகச் சீர்திருத்தங்கள் மற்றும் பொதுமக்கள் குறைதீர் துறையானது கடந்த 2006ஆம் ஆண்டு முதல் "பொது நிர்வாகத்தில் சிறந்து விளங்குவதற்கான பிரதமர் உயர் சிறப்பு விருதுகளை" வழங்குகிறது. மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங் சமீபத்தில் பிரதமரின் சிறப்பு விருதுக்கான இணையதளத்தைத் தொடங்கினார். விருதுக்கான பதிவுகளும் தொடங்கப்பட்டுள்ளன.
- ✓ இந்த ஆண்டு பரிசுத்தொகை ₹10 இலட்சத்திலிருந்து ₹20 இலட்சமாக இரட்டிப்பாக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தின் பொருளாதார வளர்ச்சியில் மாவட்ட ஆட்சியர்களின் செயல்திறனை அங்கீகரிக்கும் வகையில், கடந்த 2020'இல் இத்திட்டம் மறுசீரமைக்கப்பட்டது.

---

**8. 2021-22ஆம் ஆண்டிற்கான இந்தியாவின் வருடாந்திர ஏற்றுமதி இலக்கு என்ன?**

அ) $100 பில்லியன்

ஆ) $200 பில்லியன்



**இ) $400 பில்லியன் ☑**

ஈ) $500 பில்லியன்

- ✓ வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம் வெளியிட்ட தரவுகளின்படி, கடந்த 2021 டிசம்பரில் இந்தியா $37.29 பில்லியன் மதிப்பிலான பொருட்களை ஏற்றுமதி செய்துள்ளது. ஏப்ரல் – டிசம்பரில் இந்தியாவின் சரக்கு ஏற்றுமதி கிட்டத்தட்ட $300 பில்லியனாக இருந்தது.
- ✓ இது ஆண்டுக்காண்டு 48.85 சதவீதம் மற்றும் 2019ஆம் ஆண்டின் இதே காலகட்டத்திற்கு எதிராக 26 சதவிகிதம் அதிகரித்துள்ளது. எனவே, இந்தியா தனது வருடாந்திர ஏற்றுமதி இலக்கில் மூன்றில் ஒரு பங்கை எட்டியுள்ளது.
- ✓ அதாவது 2021-22 நிதியாண்டின் முதல் 9 மாதங்களில் தனது வருடாந்திர இலக்கான $400 பில்லியனில் 1/3 பங்கு. பொறியியல் பொருட்கள், பெட்ரோலியப் பொருட்கள் மற்றும் இரத்தினங்கள் மற்றும் நகைகளுக்கான அதிக தேவையே இதற்குக் காரணமாக அமைந்துள்ளது.

---

**9. 2021 – DRDO நாளுக்கானக் கருப்பொருள் என்ன?**

அ) ஆத்மநிர்பார் பாரத்

**ஆ) ஏற்றுமதி ☑**

இ) முதன்மை பாதுகாப்பு தொழில்நுட்பங்கள்

ஈ) வலிமை மற்றும் அறிவியல்

- ✓ DRDO அதன் 63ஆவது நிறுவன நாளை 2021 ஜன.01 அன்று அனுசரித்தது. DRDO, கடந்த 1958ஆம் ஆண்டில் 10 ஆய்வகங்களுடன் பாதுகாப்புத் துறையில் ஆராய்ச்சிப் பணிகளை மேம்படுத்துவதற்காக நிறுவப்பட்டது.
- ✓ தற்போது, டிஆர்டிஓ, ஏரோநாட்டிக்ஸ், போர் வாகனங்கள், எலக்ட்ரானிக்ஸ், இன்ஸ்ட்ருமென்டேஷன், அட்வான்ஸ்டு கம்ப்யூட்டிங், சிமுலேஷன் உள்ளிட்ட பல துறைகளுடன் இணைந்து செயல்படுகிறது. நடப்பு 2021ஆம் ஆண்டிற்கான DRDO நாளின் கருப்பொருளாக 'ஏற்றுமதி'யை DRDO தலைவர் அறிவித்தார்.

---

**10. INSACOG என்பது மரபணு வரிசைமுறை மற்றும் COVID திரிபுகளின் மாறுபாட்டைக் கண்காணிப்பதற்காக எந்த நாட்டால் அமைக்கப்பட்ட மன்றமாகும்?**

அ) அமெரிக்கா

ஆ) இரஷ்யா

**இ) இந்தியா ☑**

ஈ) UK

- ✓ மரபணு வரிசைமுறை மற்றும் COVID-19 திரிபுகளின் மாறுபாட்டைக் கண்காணிக்க, இந்திய மத்திய சுகாதார அமைச்சகம், கடந்த 2020'இல் இந்திய SARS-CoV-2 ஜெனோமிக்ஸ் கூட்டமைப்பை (INSACOG) அமைத்தது.
- ✓ INSACOG ஆனது இந்திய மத்திய சுகாதார அமைச்சகம், உயிரி-தொழில்நுட்பத் துறை, CSIR மற்றும் ICMR ஆகியவற்றுடன் இணைந்து தொடங்கப்பட்டது. INSACOG ஆய்வகம், COVID நேர்மறை மாதிரிகளை அனுப்புவதை தற்காலிகமாக நிறுத்துமாறு மாநிலங்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. மருத்துவ படிப்பு மாணவர் சேர்க்கையில் ஓபிசிக்கு 27% இடஒதுக்கீடு வழங்கும் அரசாணை செல்லும்: உச்சநீதி மன்றம் உத்தரவு**

தற்போதைய இடஒதுக்கீடு நடைமுறைகளின்படி 2021-22 கல்வி ஆண்டுக்கான இளநிலை, முதுநிலை மருத்துவப் படிப்புகளுக்கான கலந்தாய்வை நடத்தலாம். மருத்துவப் படிப்பு சேர்க்கையில் இதர பிற்படுத்தப்பட்டோருக்கான (ஓபிசி) 27 சதவீத இடஒதுக்கீடு செல்லும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மருத்துவ இளநிலை படிப்புகளில் 15% இடங்களையும், மருத்துவ முதுநிலை படிப்புகளில் 50% இடங்களையும் அகில இந்திய தொகுப்புக்கு மாநில அரசுகள் அளித்து வருகின்றன.

அகில இந்திய ஒதுக்கீட்டு இடங்களில் இதர பிற்படுத்தப்பட்டோருக்கு (ஓபிசி) 27 சதவீத இடஒதுக்கீடும், பொருளாதாரத்தில் நலிந்த பொதுப்பிரிவினருக்கு (EWS) 10 சதவீத இடஒதுக்கீடும் வழங்கப்படுகிறது. இதை உறுதி செய்து கடந்த ஜூலையில் மத்திய அரசு, அரசாணையை வெளியிட்டது.

இந்த அரசாணையை எதிர்த்துஉச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. வழக்கு நிலுவையில் இருந்ததால் முதுநிலை மருத்துவப் படிப்புகளுக்கான கலந்தாய்வை நடத்த முடியவில்லை. இதன் காரணமாக அரசு மருத்துவமனைகளில் மருத்துவர்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டது. இதைக் கண்டித்து கடந்த டிசம்பரில் நாடு

முழுவதும் மருத்துவ மாணவர்கள் போராட்டம் நடத்தினர். இதைத்தொடர்ந்து மத்திய அரசின் கோரிக்கையை ஏற்று வழக்கு விசாரணை விரைவுபடுத்தப்பட்டது.

இதனிடையே, உச்சநீதிமன்ற உத்தரவின்படி, பொருளா –தாரத்தில் நலிந்த பொதுப் பிரிவினருக்கு வருமான உச்ச வரம்பாக ரூ.8 லட்சம் நிர்ணயிக்கப்பட்டதுகுறித்து ஆய்வு செய்ய நிதித்துறை முன்னாள் செயலாளர் அஜய்பூஷண் பாண்டே தலைமையில் 3 பேர் கொண்ட குழு அமைக்கப் –பட்டது. இந்தக் குழு கடந்த டிசம்பர் 31–ம்தேதி தனது அறிக்கையை மத்திய அரசிடம் சமர்ப்பித்தது.

அதில் பொருளாதாரத்தில் நலிந்த பொதுபிரிவினருக்கு ₹8 லட்சம் உச்சவரம்பு நியமிக்கப்பட்டது நியாயமானது என்று தெரிவிக்கப்பட்டது. இதை உச்சநீதிமன்றத்தில் மத்திய அரசு பதிவு செய்தது.

இந்தச் சூழலில் இதுதொடர்பான வழக்கை விசாரித்த நீதிபதிகள் சந்திர சூட், போபண்ணா அமர்வு இடைக்கால உத்தரவை பிறப்பித்தது. அதில் கூறியிருப்பதாவது:

பாண்டே கமிட்டியின் பரிந்துரைகளை ஏற்றுக் கொள்கிறோம். தற்போதைய இடஒதுக்கீடு நடைமுறைகளின்படி 2021–22 ஆண்டு இளநிலை, முதுநிலை மருத்துவப் படிப்புகளுக்கான கலந்தாய்வை நடத்தலாம். அதாவது, மருத்துவப்படிப்புகளில் இதர பிற்படுத்தப்பட்டோருக்கான 27 சதவீத இடஒதுக்கீடு, பொருளாதாரத்தில் நலிந்த பொது பிரிவினருக்கு 10 சதவீத இடஒதுக்கீடு நடைமுறையைப் பின்பற்றி கலந்தாய்வு நடத்தலாம்.

இதர பிற்படுத்தப்பட்டோருக்கான 27 சதவீத இடஒதுக்கீடு வழங்கவகை செய்யும் அரசாணை செல்லும். இதுகுறித்து தொடர்ந்து விசாரிக்கத் தேவையில்லை. எனினும், பொருளாதாரத்தில் நலிந்தபொது பிரிவினருக்கான வருமான உச்சவரம்பு ரூ.8 லட்சமாக நிர்ணயிக்கப்பட்டது குறித்து மார்ச் 3–வது வாரத்தில் இறுதி விசாரணை நடத்தப்படும். இதுதொடர்பான பாண்டே கமிட்டியின் அறிக்கை ஆய்வு செய்யப்படும்.

இவ்வாறு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

---

**2. 'பொறியியல் புரட்சிகள்' என்ற தலைப்பில் விஞ்ஞானி டில்லிபாபு எழுதிய நூல் இன்று வெளியீட்டு விழா: இணைய வழியில் நடைபெறுகிறது**

ராணுவ விஞ்ஞானி டில்லிபாபு எழுதிய 'பொறியியல் புரட்சிகள்' நூல் வெளியீட்டு விழா இன்று மாலை 6 மணிக்கு இணைய வழியில் நடைபெறுகிறது.

தேசிய வடிவமைப்பு, ஆராய்ச்சி மன்றத்தின் (என்டிஆர்எஃப்) இயக்குநரான ராணுவ விஞ்ஞானி டாக்டர் வி.டில்லிபாபு, அறிவியல், தொழில்நுட்பம் தொடர்பாக பல்வேறு நூல்களை எழுதியுள்ளார். அந்த வரிசையில், தேசிய அளவில் வளர்ச்சியை கட்டமைத்த அறிவியல் தொழில்நுட்ப நிகழ்வுகள் தொடர்பாக 'பொறியியல் புரட்சிகள்' என்ற தலைப்பிலான நூலை டில்லிபாபு எழுதியுள்ளார். தொழில்நுட்ப முயற்சிகளில் இந்திய விஞ்ஞானிகள் சந்தித்த சவால்கள், சாதனைகள் குறித்த தகவல்கள் இதில் இடம்பெற்றுள்ளன.

இந்த நூல் வெளியீட்டு விழா இணைய வழியில் இன்று (ஜன.8) மாலை 6 மணிக்கு நடக்க உள்ளது. உயர் நீதிமன்ற நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் தலைமையில் நிகழும் நூல் வெளியீட்டு விழாவில், விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை, எழுத்தாளர் திலகவதி ஐபிஎஸ் ஆகியோர் பங்கேற்று உரையாற்றுகின்றனர். ராணுவ விஞ்ஞானி வி.டில்லிபாபு ஏற்புரை நிகழ்த்துகிறார்.

திசையெட்டு பதிப்பகம், ஆளுமைச் சிற்பி மாத இதழ் இணைந்து இந்த நிகழ்வை வழங்குகின்றன. எழுத்தாளர் பிரியசகி, ஆளுமைச் சிற்பி மாத இதழ் ஆசிரியர் மெ.ஞானசேகர் ஆகியோர் ஒருங்கிணைப்பு செய்கின்றனர். விழா நேரலையை https://youtu.be/W9BoXP_xRWc என்ற வலைதளம் மூலமாக அனைவரும் காணலாம்.

---

**3. கூட்டுறவு சங்க இயக்குநர்களின் பதவிக்காலம் 3 ஆண்டாக குறைப்பு; பேரவையில் மசோதா நிறைவேற்றம்:**

கூட்டுறவு சங்க இயக்குநர்கள் குழுவின் பதவிக்காலத்தை 5 ஆண்டுகளில் இருந்து 3 ஆண்டுகளாக குறைக்க வகை செய்யும் சட்டமுன்வடிவு பேரவையில் குரல் வாக்கெடுப்பின் மூலம் நிறைவேற்றப்பட்டது. முன்னதாக, இந்த சட்ட முன்வடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்து அதிமுக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.

தமிழகத்தில் கூட்டுறவுச் சங்க இயக்குநர்கள் குழுவின் பதவிக்காலத்தை 5 ஆண்டுகளில் இருந்து 3 ஆண்டுகளாக குறைக்க வகை செய்யும் சட்டமுன்வடிவை சட்டப்பேரவையில் கூட்டுறவுத் துறை அமைச்சர் இ.பெரியசாமி நேற்று அறிமுகம் செய்தார். இந்தசட்ட முன்வடிவை ஆரம்ப நிலையிலேயே எதிர்ப்பதாக கூறி அதிமுக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர். அதன்பிறகு இந்த சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வு செய்யப்பட்டு, குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டது.

முறைகேடு புகார்கள்

இந்த சட்ட முன்வடிவில் கூறப்பட்டிருப்பதாவது: கூட்டுறவு சங்கங்களில் நிதி முறைகேடுகள் மற்றும் மோசடிகள் தொடர்பாக பொதுமக்களிடம் இருந்தும், கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்களிடம் இருந்தும் பல புகார்கள் வரப்பெற்றுள்ளன. கூட்டுறவு சங்கங்களின் செயல்பாடுகள் ஆய்வு செய்யப்பட்டதில் அதிக அளவிலான நிதி முறைகேடுகளும், போலி நகைகள் மீதான கடன்கள் மற்றும் கோடிக்கணக்கில் போலிக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளது போன்றவை வெளிக் கொண்டு வரப்பட்டுள்ளன.

எனவே, கூட்டுறவு சங்கங்களின் நலனை பாதுகாக்கும் நோக்கில், அவற்றின் நிர்வாகங்களை நெறிப்படுத்தவும் முறையான ஆளுகையை உறுதி செய்யவும், கூட்டுறவு சங்கங்களின் செயல்பாடுகளின் திறனை அதிகரிக்கவும், சங்கங்களின் இயக்குநர்கள் குழுவின் பதவிக் காலத்தை 5 ஆண்டுகளில் இருந்து 3 ஆண்டுகளாக குறைக்க அரசு முடிவு செய்துள்ளது.

அத்துடன் ஒரு சட்டத்தை மேற்கொள்வதன் மூலம் இந்தியஅரசியலமைப்பின் 9–பி பகுதி யின் வகைமுறைகளுடன் இசைந்து செய்யப்பட்ட திருத்தங்களுக்கு முந்தைய 1983–ம் ஆண்டு கூறப்பட்ட தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டத்தில் இருக்கும் சில வகைமுறைகளை மீட்டெடுக்கவும் அரசு முடிவு செய்துள்ளது. இந்த சட்ட முன்வடிவானது மேற்சொன்ன முடிவுக்கு செயல்வடிவம் கொடுக்கிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

---

**4. சட்டப்பேரவையில் 13 மசோதாக்கள் நிறைவேறின**

தமிழகத்தில் 6 மாநகராட்சிகள், 2 காவல் ஆணையரகங்களை புதிதாகத் தொடங்கியது உட்பட 13 சட்ட மசோதாக்கள் சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டன.

தமிழக சட்டப்பேரவையில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தின் இடையில், தாம்பரம், காஞ்சிபுரம், சிவகாசி, கடலூர், கும்பகோணம், கரூர் ஆகிய 6 புதிய மாநகராட்சிகள் உருவாக்கம் தொடர்பான சட்ட மசோதாக்களை அமைச்சர் கே.என்.நேரு நேற்று முன்தினம் தாக்கல் செய்தார்.

தொடர்ந்து, நகர ஊரமைப்பு சட்டத்தில் நிலம் அல்லது கட்டிட மேம்பாட்டுக்காக வழங்கப்பட்ட திட்ட அனுமதிக்கான காலஅளவை ஐந்திலிருந்து 8 ஆண்டுகளாக உயர்த்துவது தொடர்பான சட்ட முன்வடிவை அமைச்சர் சு.முத்துசாமி தாக்கல் செய்தார்.

பேரவைக் கூட்டத்தில் இறுதிநாளான நேற்று சென்னை மாநகர காவல் சட்டத்தை, புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள ஆவடி, தாம்பரம் மாநகரங்களுக்கு நீட்டிப்பு செய்வதற்கான சட்ட மசோதாவை முதல்வர் மு.க.ஸ்டாலின் தாக்கல் செய்தார்.

தொடர்ந்து, தமிழ்நாடு வேளாண்விளை பொருள் சந்தைப்படுத்துதல் திருத்த சட்ட மசோதவை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழக திருத்த சட்ட மசோதாவை அமைச்சர் எஸ்.ரகுபதி, நிதி ஒதுக்க சட்ட மசோதாவை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் தாக்கல் செய்தனர்.

இதுதவிர, தமிழக அரசுக்குச் சொந்தமான பொதுத் துறை நிறுவனங்கள், அரசுக் கழகங்கள், சட்டப்பூர்வமான வாரியங்கள் மற்றும் மாநில அரசின் கட்டுப்பாட்டில் உள்ளஅதிகார அமைப்புகளின் பணியிடங்களுக்கான ஆள்சேர்க்கை தொடர்பான கூடுதல் பணிகளை, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திடம் ஒப்படைக்க அரசு முடிவெடுத்துள்ளது.

இதற்கு வழி செய்யும் வகையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய (கூடுதல்செயற்பணிகள்) சட்ட மசோதவை நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தாக்கல் செய்தார்.

இந்த சட்ட மசோதாக்கள் அனைத்தும் நேற்றே பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டன.

---

**5. ஒமைக்ரான் பாதிப்பு குறைவா? – கூடுதல் எச்சரிக்கை அவசியமில்லையா?**

2021ஆம் ஆண்டுடன் கரோனா விடை பெற்றுவிடும் என்று நினைத் திருந்த நிலையில், கரோனாவின் தாக்கம் மீண்டும் உச்சமடைந்துவருகிறது. 2021 டிசம்பர் பிற்பகுதியில் ஒமைக்ரான் (Omicron) சென்னையில் நுழைந்ததால், புத்தாண்டுக் கொண்டாட்டங்களுக்குத் தமிழகத்தில் தடை விதிக்கப்பட்டது. பத்தாம் வகுப்புக்குக் கீழுள்ள மாணவர்களுக்குப் பள்ளிகள் மூடப்பட்டன. பல மாநிலங்களில் இரவு ஊரடங்கு அமலுக்கு வந்தது.

இரண்டாம் அலையின் உச்சத்தைச் சரியாகக் கணித்த கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் பால் கட்டுமன், ஒமைக்ரான் பரவலின் வளர்ச்சிப் போக்கை 'அதிவேகம்' என்கிறார். தினசரி கரோனா பாதிப்பு பத்துநாட்களுக்குள் நான்கு மடங்காக, அதாவது நாற்பதாயிரமாக உயர்ந்திருக்கிறது. பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அபரிமிதமாக அதிகரித்தபோதும், மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவோர் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது. ஒமைக்ரான் வேற்றுருவால் கடுமையான பாதிப்பு ஏற்படும் சாத்தியம் குறைவு என்பதை இது உணர்த்தினாலும், இதில் நிறைய ஆபத்துகள் மறைந்தும் இருக்கலாம். ஒமைக்ரானின் வீரியத்தை இந்த நேரத்தில் குறைத்து மதிப்பிடுவது பேராபத்தில் முடியக்கூடும்.

ஒமைக்ரான் பாதிப்பு

பொதுவாக, வைரஸ் எப்படிப்பட்ட தாக்கத்தை இனிமேல் ஏற்படுத்தும் என்பதை முழுமையாகக் கணிக்க முடியாது. இருப்பினும், ஆய்வக விலங்குகள் மீதும் மனித திசுக்களின் மீதும் நடத்தப்பட்ட புதிய ஆய்வுகள், மற்ற வேற்றுருக்களைப் போல் 'ஒமைக்ரான்' வேற்றுரு நுரையீரலுக்குள் தீவிரமாகப் பரவாது என்று கணித்துள்ளன. எலிகள், வெள்ளெலிகள் ஆகியவற்றின் மீதான ஆய்வுகளில், ஒமைக்ரான் தொற்று குறைவான பாதிப்புகளையே ஏற்படுத்தியது. அந்தப் பாதிப்பும் மேல் சுவாசக்குழாய், மூக்கு, தொண்டை, மூச்சுக்குமாய் ஆகியவற்றில் மட்டும் பெரும்பாலும் இருந்துள்ளது. நுரையீரலுக்குக் குறைவான தீங்கையே விளைவித்திருந்தது. சுவாச மண்டலத்தின் மேல்பகுதியையே ஒமைக்ரான் பாதிக்கும் என்கிற கருத்துக்கான தொடக்கப்புள்ளி இது.

கரோனா பாதிப்பைப் பொறுத்தவரை, அது மூக்கு, வாய், தொண்டை ஆகியவற்றில் ஏற்படுத்தும் பாதிப்பினால் பெரிய ஆபத்து ஏற்படுவதில்லை. நுரையீரலுக்குள் நுழையும்போதுதான் உயிருக்கு ஆபத்தானதாக மாறுகிறது. கடந்த புதன் அன்று, ஒமைக்ரான் பாதிப்புக்கு உள்ளாக்கப்பட்ட எலிகள், வெள்ளெலிகள் குறித்து ஜப்பான், அமெரிக்கா ஆகிய நாடுகளின் ஆராய்ச்சியாளர்கள் கூட்டாக வெளியிட்ட அறிக்கை, ஒமைக்ரானால் அவற்றின் நுரையீரல் லேசாகப் பாதிக்கப்பட்டுள்ளது, அவற்றின் எடை குறையவில்லை, மரணத்துக்கான சாத்தியம் மிகவும் குறைவாக உள்ளது என்று தெரிவிக்கிறது.

ஒமைக்ரான் பாதிப்பு நுரையீரலில் ஏன் குறைவு?

நுரையீரல் செல்களின் மேற்பரப்பில் TMPRSS2 எனும் புரதம் இருக்கிறது. இந்தப் புரதமே நுரையீரலுக்குள்

கரோனா வைரஸ் நுழைவதற்கு வழிவகுக்கிறது. ஆனால், ஒமைக்ரான் வைரஸ் இந்தப் புரதத்தை இறுக்கமாகப் பற்றிக்கொள்ளவில்லை. இதன் விளைவாக, டெல்டா வேற்றுருவைப் போல், ஒமைக்ரான் வேற்றுருவால் நுரையீரலுக்குள் ஊடுருவிப் பாதிப்பை ஏற்படுத்த முடியவில்லை. நுரையீரலுக்குள் நுழைந்தால் வைரஸ் அழிக்கப்படும் என்பதாலோ என்னவோ, ஒமைக்ரான் இந்தப் புரதத்தைப் பற்றிக்கொள்ளும் இயல்பற்றதாகத் தன்னைத் தகவமைத்துக்கொண்டிருக்கலாம்.

TMPRSS2 புரதம் இல்லாத செல்களைக் கொண்டிருக்கும், சுவாசக் குழாய், மூக்கு, தொண்டை ஆகியவற்றில் மட்டும் ஒமைக்ரான் பாதிப்பு அதிகமாக இருப்பதால், அது எளிதாகவும் அதிவேகமாகவும் பரவுகிறது. ஆனால், இது ஆரம்பக்கட்ட சிந்தனையே, இந்தக் கருதுகோளை அங்கீகரிப்பதற்கு இன்னும் கூடுதல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

கள உண்மை நிலவரம்

இரண்டாம் அலையின் உச்சத்தில் தினசரி பாதிப்பு நான்கு லட்சமாக இருந்தது. அதனுடன் ஒப்பிடும்போது, தற்போதைய தினசரி பாதிப்பு குறைவாக இருப்பதைப் போலத் தோன்றலாம். குறைவான அரசுப் பதிவுகள், பெரிய நகரங்களில் அதிகமாகப் பரவும் முறை உள்ளிட்ட காரணங்களால், தினசரி பாதிப்பு எண்ணிக்கை உண்மையான களநிலவரத்தைப் பிரதிபலிக்காது.

பிசிஆர் பரிசோதனை விகிதமே உண்மையான ஆபத்தை உணர்த்தும். இரண்டாம் அலையின் உச்சத்தில் பிசிஆர் பரிசோதனையின் நேர்மறை முடிவுகளின் விகிதம் 25 சதவீதம் என்றிருந்தது. டிசம்பர் 27 அன்று 0.5 சதவீதத்துக்கும் கீழே சென்றிருந்த அது, தற்போது மும்பையில் 17 சதவீதத்தை நெருங்கிவிட்டது. மற்ற நகரங்களிலும் அதிவேகமாக உயர்ந்துவருகிறது. ஒமைக்ரான் எவ்வளவு வீரியத்துடன் பரவுகிறது என்பதற்கு இதைவிட வேறு சான்று தேவையில்லை.

தடுப்பாற்றலும் தயார்நிலையும்

புதிய அலை அச்சுறுத்தலாக விளங்கினாலும், அதை எதிர்கொள்வதற்குத் தற்போது நாடு தயார் நிலையில் இருப்பது நம்பிக்கையளிக்கிறது. இந்தியாவில் 44 சதவீத மக்களுக்கு இரண்டு தவணைத் தடுப்பூசியும் போடப்பட்டிருக்கிறது. இத்துடன் கோடிக்கணக்கானோர் முந்தைய தொற்றினால் பெறப்பட்ட நோயெதிர்ப்பாற்றலையும் கொண்டிருக்கின்றனர். முக்கியமாக ஜூன், ஜூலை ஆகிய மாதங்களில் நடத்தப்பட்ட தேசிய செரோ–சர்வேயில் 68 சதவீதத்தினர் ஏற்கெனவே கோவிட் ஆன்டிபாடிகளைக் கொண்டிருந்தனர். சமீபத்திய சர்வேயில், அது இன்னும் அதிகரித்திருக்கிறது.

ஒப்பீட்டளவில் நாட்டின் மருத்துவக் கட்டமைப்பும் தயார் நிலையில் உள்ளது. இரண்டாம் அலையில் கற்ற பாடங்கள், மருத்துவர்களையும் சுகாதாரக் கட்டமைப்பையும் கூடுதல் திறன்மிக்கவையாக மாற்றியுள்ளன. தமிழ்நாடு அரசும் கோவிட் சிறப்பு மருத்துவமனைகளைத் தயார்நிலையில் வைத்திருக்கிறது.

எச்சரிக்கை தேவை

ஒமைக்ரான் தொற்றால் கடுமையான பாதிப்போ மரணமோ ஏற்படும் சாத்தியம் குறைவாக இருப்பது போல் தோன்றினாலும், மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டிய அவசியத்தை மருத்துவர்கள் தொடர்ந்து வலியுறுத்திவருகிறார்கள்.

ஒமைக்ரான் வேற்றுருவின் ஆரம்ப கட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பான்மையோர் இளம்வயதினர், அவர்களுக்குக் கடுமையான பாதிப்பு ஏற்படும் சாத்தியம் முந்தைய வேற்றுருக்களிலும் குறைவாக இருந்தது. மேலும், முந்தைய கரோனா தொற்றாலோ தடுப்பூசியாலோ நோயெதிர்ப்பாற்றல் பெற்றவர்களையே ஒமைக்ரான் பெருமளவில் பாதித்திருக்கிறது. எனவே, தடுப்பூசி போடப்படாத வயதானவர்களை ஒமைக்ரான் எவ்வாறு பாதிக்கும் என்பது குறித்த தெளிவு இல்லை. குறிப்பாக இந்திய மக்கள்தொகை, நெரிசலான வாழ்க்கை முறை, அதிக ஊட்டச்சத்துக் குறைபாடு, நீரிழிவு, காசநோய் போன்ற காரணிகள் மக்களை அதிக ஆபத்தில் தள்ளக்கூடும்.

சமூகப் பொறுப்புணர்வு அவசியம்

கரோனா இரண்டாம் அலை, அதிகார வர்க்கத்தின் போதாமையையும் அரசியல்வாதிகளின் இயலாமையையும் வெட்ட வெளிச்சமாக்கியது. தடுப்பூசி போதுமான அளவு கிடைக்காத நிலையிலும், அது இந்தியாவில் தயாரிக்கப்பட்டது என்கிற பெருமிதம் எஞ்சியிருந்தது. மிகப் பெரும் எண்ணிக்கையில் மக்கள் கூடிய மதநிகழ்வுகளும், தேர்தல் பரப்புரைகளும் ஊக்குவிக்கப்பட்டன.

புதிய ஆண்டில் உருவாகிவரும் புதிய அலையின் காலகட்டம் இரண்டாம் அலையின் காலகட்டத்துடன் ஒத்துப்போகிறது. தற்போதும், பல மாநிலங்கள் தேர்தலை எதிர்கொண்டிருக்கின்றன. இந்தப் பின்னணியில் நாம் அனைவரும் சமூகப் பொறுப்புணர்ந்து செயலாற்ற வேண்டும். தனிமனித இடைவெளி, முகக்கவசம் அணிதல், கைகளை சோப்பால் கழுவுதல், கூட்டங்களைத் தவிர்த்தல், தடுப்பூசி செலுத்திக்கொள்ளுதல் உள்ளிட்ட கரோனா தடுப்பு நடைமுறைகளை அனைவரும் பின்பற்ற வேண்டும்.

---

**6. ஆண்டு தேசிய வருமானம் 2021–2022, முதல் முன்கூட்டிய உத்தேச மதிப்பீடுகள்**

மத்திய புள்ளிவிவரம் & திட்ட நடைமுறைப்படுத்துதல் அமைச்சகத்தின் தேசிய புள்ளியியல் அலுவலகம் 2021–2022 நிதியாண்டிற்கான ஆண்டு வருமானத்தின் முன்கூட்டிய உத்தேச மதிப்பீடுகளை வெளியிட்டுள்ளது.

2021–22–ம் ஆண்டுக்கான உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி) அல்லது நிலையான விலை மதிப்பிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி ரூ. 147.54 லட்சம் கோடி ரூபாயை எட்டும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

முன்னதாக 2020–2021–ம் ஆண்டின் தற்காலிக மதிப்பீட்டின்படி இது 135.13 லட்சம் கோடி ரூபாயாக இருந்தது. 2021–2022–ம் ஆண்டில் ஜிடிபி வளர்ச்சி 9.2

சதவீதமாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. 2020–2021–ம் ஆண்டில் இது 7.3 சதவீதமாக இருந்தது.

தற்போதைய விலைமதிப்பின் அடிப்படையிலான 2021–2022–ம் ஆண்டுக்கான ஜிடிபி ரூ 232.15 லட்சம் கோடி ரூபாயை எட்டும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. 2020–2021–ம் ஆண்டில் தற்காலிக மதிப்பீடுகளின்படி இது 197.46 லட்சம் கோடி ரூபாயாக இருந்தது. 2021–22–ம் ஆண்டில் 17.6 சதவீதம் என்னும் அளவில் வளர்ச்சி இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தனிநபர் வருமானம் மற்றும் இதர விவரங்கள் அறிக்கைகள் 1 முதல் 4 வரையில் வழங்கப்பட்டுள்ளன.

நிலையான விலைமதிப்புள்ள பொருள்களுக்கான வரியைப் பெறுவதில் வால்யூம் எக்ஸ்ட்ராபொலேஷன் என்ற முறைப்படி எண்ணிக்கையில் வளர்ச்சியைப் பொறுத்து வரி விதிக்கப்படும். பொருட்களுக்கும், சேவைகளுக்குமான வரி கணக்கிடப்பட்டு, மொத்த வரி அளவு கணக்கிடப்படுகிறது.

---

**7. 3–வது தேசிய தண்ணீர் விருதுகளை அறிவித்தார் மத்திய ஜல் சக்தித்துறை அமைச்சர்.**

**சிறந்த மாநிலங்களுக்கான பிரிவில் தமிழ்நாட்டிற்கு மூன்றாம் பரிசு**

3–வது தேசிய தண்ணீர் விருதுகளை, மத்திய ஜல் சக்தித்துறை அமைச்சர் திரு.கஜேந்திர சிங் ஷெகாவத், புதுதில்லியில் இன்று அறிவித்தார். 2020–ம் ஆண்டுக்கான இந்த விருதில், நீர்வளத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தியதற்கான சிறந்த மாநிலங்களுக்கான பிரிவில், தமிழ்நாட்டிற்கு மூன்றாம் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரிவில் உத்தரப்பிரதேசம் முதல்பரிசையும், ராஜஸ்தான் இரண்டாம் பரிசையும் பெறுகின்றன.

தென் மாநிலங்களில், இத்திட்டத்தை சிறப்பாக செயல்படுத்திய சிறந்த கிராமப் பஞ்சாயத்துக்கான பிரிவில், செங்கல்பட்டு மாவட்டம் வெள்ளப்புத்தூர் ஊராட்சி 2–ம் பரிசையும், சிறந்த நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான பிரிவில், மதுரை மாநகராட்சி 3–வது பரிசையும், சிறந்த பள்ளிக்கூடங்களுக்கான பிரிவில், காவேரிப்பட்டிணம் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி முதல் பரிசையும், புதுச்சேரி, அமலோற்பவம் லூர்து அகாடமி 2–ம் பரிசையும், புதுச்சேரி மனப்பட்டு அரசு நடுநிலைப் பள்ளி 3–ம் பரிசையும் பெற உள்ளன.

சிறந்த தொழிற்சாலைகளுக்கான பிரிவில், தமிழ்நாட்டில் உள்ள ஹுண்டாய் மோட்டார் இந்தியா நிறுவனம் (ஹுண்டாய் கார் தொழிற்சாலை)–க்கு இரண்டாம் பரிசும், சிறந்த தொண்டு நிறுவன பிரிவில் கன்னியாகுமரி விவேகானந்தா கேந்திரா–வுக்கு 2–ம் பரிசும் வழங்கப்பட உள்ளது.

விருது அறிவிப்பு நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் திரு.கஜேந்திர சிங் ஷெகாவத், வாழ்க்கைக்கு தண்ணீர் மிகவும் அடிப்படையானது என்றார். இந்தியாவின் தற்போதைய தண்ணீர் தேவை, ஆண்டுக்கு சுமார் 1,100 பில்லியன் கன மீட்டர் என மதிப்பிடப்பட்டுள்ளதாகவும், இது 2050–ம் ஆண்டு வாக்கில், 1,447 பில்லியன் கன மீட்டராக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். உலகில் வேகமாக வளர்ந்துவரும் பொருளாதார நாடான இந்தியாவிற்கு, தண்ணீர் வளம் மிக முக்கியமானது என்றும் அவர் குறிப்பிட்டார். உலகின் மொத்த மக்கள் தொகையில் 18% பேர் இந்தியாவில் வசிக்கும் நிலையில், உலகின் புதுப்பிக்கத்தக்க தண்ணீர் வளத்தில் 4% தான் இந்தியாவில் உள்ளது என்றும் அவர் கூறினார்.

தண்ணீர் சுழற்சியில், மேற்பரப்பில் கிடைக்கும் தண்ணீர் மற்றும் நிலத்தடி நீர் ஆகிய இரண்டும் ஒருங்கிணைந்த அங்கம் என்பதால், ஒன்றுபட்ட தேசிய தண்ணீர் விருதை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தே இந்த விருதுகள் ஏற்படுத்தப்பட்டதாகவும் மத்திய அமைச்சர் திரு.ஷெகாவத் தெரிவித்தார்.

---

**8. பந்துவீச தாமதமானால் 1 ஃபீல்டர் குறைப்பு: ஐசிசியின் புதிய விதிமுறை**

சர்வதேச டி20 கிரிக்கெட்டில் ஒரு அணி பந்துவீச நிர்ணயிக்கப்பட்டதைவிட அதிக நேரம் எடுத்துக் கொண்டால், 30 யார்டு வட்டத்துக்கு வெளியே 1 ஃபீல்டர் குறைக்கப்பட வேண்டும் என்ற புதிய விதியை ஐசிசி வெள்ளிக்கிழமை அறிவித்தது.

வழக்கமாக அந்த இடத்தில் 5 ஃபீல்டர்கள் (முதல் 6 ஓவர்க–ளுக்குப் பிறகு) அனுமதிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. இப்புதிய விதிமுறை இம்மாதத்திலிருந்து நடைமுறைக்கு வருகிறது. பந்துவீச்சு தாமதத்துக்கு ஏற்கனவே, புள்ளிகள் குறைப்பு, அணியினருக்கான ஆட்ட ஊதியத்தில் அபராதம் ஆகிய விதிமுறைகள் அமலில் இருக்கும் நிலையில், தற்போது கூடுதலாக இந்த ஃபீல்டர் குறைப்பு விதியும் சேர்க்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய விதியின்படி, பந்துவீச்சுக்கென நிர்ணயிக்கப்–பட்ட நேரத்தின் முடிவில் பௌலிங் செய்யும் அணி கடைசி ஓவரின் முதல் பந்தை வீசும் நிலையில் இருக்க வேண்டும். அவ்வாறு இல்லாமல் போனால், நிர்ணயிக்கப்பட்ட நேரம் முடிவதிலிருந்து எஞ்சியிருக்கும் ஓவர்கள் நிறைவடையும் வரை 30 யார்டுக்கு வெளியே 5 ஃபீல்டர்களுக்கு பதிலாக, 4 ஃபீல்டர்களே நிறுத்தப்பட வேண்டும்.

இதுதொடர்பான அறிவுறுத்தலை ஃபீல்டிங் செய்யும் அணியின் கேப்டன், பேட்டர், லெக் நடுவர் ஆகியோருக்கு பௌலிங் சைடில் இருக்கும் நடுவர் வழங்குவார். அனைத்து ஃபார்மட்டுகளிலும் ஆட்டத்தின் வேகத்தை அதிகரிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள ஐசிசி கிரிக்கெட் கமிட்டி வழங்கிய பரிந்துரையின் அடிப்படையில் இந்த புதிய விதி சேர்க்கப்பட்டுள்ளது.

---

**9. பாகிஸ்தான் உச்சநீதிமன்றத்தின் முதல்பெண் நீதிபதி நியமனம்**

பாகிஸ்தான் உச்சநீதிமன்றத்திற்கு முதன்முறையாக ஒரு பெண் நீதிபதி நியமிக்கப்பட்டிருக்கிறார்.

லாகூர் உயர் நீதிமன்றத்தின் நீதிபதியான ஆயிஷா மாலிக் உச்சநீதிமன்ற நீதிபதியாக பதவி உயர்வு

பெறுகிறார். இதற்கு பாகிஸ்தானின் சட்ட கமிஷன் நேற்று ஒப்புதல் அளித்துள்ளது. ஹாவார்டு பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற நீதிபதி ஆயிஷா மாலிக் முன்னணி கார்ப்பரேட் மற்றும் சட்ட ஆலோசனை மையம் நடத்தி வந்தார்.

பின்னர் லாகூர் உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டு 20 ஆண்டுகள் பணியாற்றி தற்போது பாகிஸ்தான் உச்சநீதிமன்றத்தின் முதல் பெண் நீதிபதியாகியிருக்கிறார். கரும்பு விவசாயிகளுக்கு கூலி வழங்குதல், தேர்தலில் சொத்து அறிவிப்பு வெளியிடுதல் உள்ளிட்ட பல்வேறு முக்கிய வழக்குகளில் தீர்ப்பு அளித்துள்ளார்.

---

**10. சீனா மீண்டும் ஒரு சாதனை 7 கோடி டிகிரி வெப்பத்தில் செயற்கை சூரியன் தகதக...ஒரிஜினலை விட 5 மடங்கு அதிக வெப்பம்**

சீனா உருவாக்கி உள்ள செயற்கை சூரியன் ஏழு கோடி டிகிரி செல்சியசில் தொடர்ந்து 17 நிமிடங்கள் ஒளி வீசி சாதனை படைத்துள்ளது. இது சூரியனை விட 5 மடங்கு அதிக வெப்பமாகும். உலக நாடுகளில் அரசியல், எல்லை பிரச்னை, கடல் பகுதி ஆக்கிரமிப்பு, ஏவுகணை தயாரிப்பு மற்றும் சோதனை, விளையாட்டு, அறிவியல், ஆராய்ச்சிகள், ஆய்வுகள் என அனைத்து துறைகளிலும் தனக்கென்று ஒரு தனி முத்திரையை சீனா தொடர்ந்து பதித்து வருகிறது. இந்த சாதனைக்கு அணி சேர்க்கும் விதமாக சீனாவின் செயற்கை சூரியன் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. சூரிய சக்தியானது அணுக்கரு இணைவு மூலம் உருவாகிறது.

சூரியனின் மையப் பகுதி ஹைட்ரஜன் கருக்களை ஹீலியமாக இணைப்பதன் மூலம் 1.5 கோடி டிகிரி செல்சியஸ் வெப்பத்தை ஏற்படுத்துகிறது. இது, பல வகைகளில் மனித இனத்துக்கு பலனை அளித்து வருகிறது. சீனா கடந்த 1999ம் ஆண்டிலிருந்தே 'ஈஸ்ட்' என்ற பெயரில் செயற்கை சூரியனை உருவாக்கும் திட்டத்தில் ஈடுபட்டு வருகிறது. இதற்காக, ரூ.70 லட்சம் கோடி வரை செலவிட்டுள்ளது. ஆரம்பத்தில், மிக குறைந்த நேரம் மட்டுமே குறைந்த அளவிலான வெப்பத்தை மட்டுமே இந்த செயற்கை சூரியன் உற்பத்தி செய்தது. இதை படிப்படியாக மேம்படுத்திய சீன விஞ்ஞானிகள், சில தினங்களுக்கு முன் 7 கோடி டிகிரி செல்சியசிஸ் வெப்பத்தை உருவாக்கினர்.

இது சூரியனை விட 5 மடங்கு அதிக வெப்பமாகும். 17 நிமிடங்கள் இந்த வெப்பநிலை நீடித்தது. மாசு ஏற்படாத வகையில் சுத்தமான எரிசக்தியை தயாரிப்பதற்கான சீனாவின் செயற்கை சூரியன் திட்டத்துக்கு உலகளவில் வரவேற்பு ஏற்பட்டுள்ளது. அதே நேரம், சீனா இந்த திட்டத்தை தீய நோக்கங்களுக்கு பயன்படுத்தவும் வாய்ப்புகள் இருப்பதாக அச்சம் ஏற்பட்டுள்ளது. சீனாவில் செயற்கை சூரியனை உருவாக்கிய அதே விஞ்ஞானிகள் பிரான்ஸ் நாட்டிலும் இதே போன்ற திட்டத்தை செயல்படுத்தி வருகின்றனர். இதற்கு, 'இட்டர்' என பிரான்ஸ் பெயரிட்டுள்ளது.

---

**1.** **'சீமா பவானி' என்பது எல்லைப் பாதுகாப்புப் படையின் (BSF) எந்தக் குழுவின் பெயர்?**

அ) ஒட்டகக் குழு



ஆ) கிரீக் குரோகடைல்

**இ) அனைத்து பெண்கள் பைக்கர் அணி ☑**

ஈ) அனைத்து பெண்கள் கிரீக் குரோகடைல்

- ✓ 'சீமா பவானி' என்பது எல்லைப் பாதுகாப்புப் படையின் அனைத்து பெண்கள் பைக்கர் அணியாகும்.
- ✓ குடியரசு நாளன்று இந்த அணியினர் தங்கள் திறமையை வெளிப்படுத்துவார்கள். இதில் பல்வேறு நிலைகளில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட பெண் இராணுவத்தினர் கலந்துகொள்கின்றனர். 2016ம் ஆண்டு உருவாக்கப்பட்ட 'சீமா பவானி' அணி, கடந்த 2018ம் ஆண்டு குடியரசு நாள் அணிவகுப்பில் முதன்முறையாக பங்கேற்றது.

---

**2.** **சமீப செய்திகளில் இடம்பெற்ற அடல் சுரங்கப்பாதை அமைந்துள்ள மாநிலம் / யூடி எது?**

**அ) ஹிமாச்சல பிரதேசம் ☑**



ஆ) அருணாச்சல பிரதேசம்

இ) சிக்கிம்

ஈ) உத்தரகாண்ட்

- ✓ அடல் சுரங்கப்பாதையானது மலைப்பாங்கான ஹிமாச்சல பிரதேச மாநிலத்தில் அமைந்துள்ளது. இது லே–மனாலி நெடுஞ்சாலையில் ரோஹ்தாங் கணவாய்க்கு அடியில் 9 கிமீ நீளத்தில் அமைந்துள்ள அனைத்து காலநிலைக்கும் ஏற்ற சாலையாகும். 2022ஆம் ஆண்டின் முதல் நாளில் இந்தச் சுரங்கப்பாதை அதிகபட்ச எண்ணிக்கையிலான வாகனங்களைச் சந்தித்தது.
- ✓ அதிகாரிகளின் கூற்றுப்படி, 2022 ஜன.1 அன்று மொத்தம் 7,515 வாகனங்கள் சுரங்கப்பாதையைக் கடந்தன. இது, 2020 அக்.3ஆம் அன்று திறக்கப்பட்டதிலிருந்து இதுவரை இல்லாத அதிகபட்ச எண்ணிக்கையாகும்.

---

**3.** **அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற இந்திரா காந்தி இராஷ்ட்ரிய உரன் அகாதமி அமைந்துள்ள மாநிலம் எது?**

**அ) உத்தர பிரதேசம் ☑**



ஆ) உத்தரகாண்ட்

இ) பீகார்

ஈ) மேற்கு வங்காளம்

- ✓ இந்திரா காந்தி இராஷ்ட்ரிய உரன் அகாதமி (IGRUA) இந்திய அரசாங்கத்தால் 1986ஆம் ஆண்டு பர்சத்கஞ்ச் விமான நிலையத்தில் நிறுவப்பட்டது. இது உத்தர பிரதேச மாநிலத்தில் அமைந்துள்ளது.
- ✓ ஒரு தன்னாட்சிமிக்க அமைப்பான IGRUA, சிவில் விமான போக்குவரத்து அமைச்சகத்தின்கீழ் ஓர் ஆளுங்குழுவால் நிர்வகிக்கப்படுகிறது. கடந்த 2021ஆம் ஆண்டில் இந்திரா காந்தி தேசிய உரன் அகாடமி, 18 பயிற்சி விமானங்கள் மூலம் 19,000 மணிநேரம் விமானப்பயிற்சி அளித்துள்ளது. 2022ஆம் ஆண்டில் பயிற்சி விமானங்களின் எண்ணிக்–கையை அதிகரித்து 121 பேருக்கு 25,000 மணி நேரம் பயிற்சியளிக்க இந்நிறுவனம் இலக்கு நிர்ணயித்துள்ளது.

---

**4.** **சமீப செய்திகளில் இடம்பெற்ற, "புளூ புக்" என்பது எந்த ஆயுதப்படை / குழுவின் கையேடாகும்?**

அ) மத்திய ரிசர்வ் போலீஸ் படை



**ஆ) சிறப்பு பாதுகாப்புக் குழு ☑**

இ) தேசிய பாதுகாப்புப் படை

ஈ) இந்திய கடலோர காவல்படை

- ✓ "Blue Book" என்பது சிறப்பு பாதுகாப்புக் குழுவின் (Special Protection Group) கையேட்டின் பெயராகும். இது இந்தியப் பிரதமரை சிறப்புற பாதுகாக்கிறது. இந்தியப் பிரதமர் மோடி, பஞ்சாப் போராட்டவாதிகளின் மறியல் காரணமாக ஒரு பா–லத்தில் சுமார் 20 நி காத்திருக்க வேண்டியதாகி விட்டது.
- ✓ வழக்கமாக, பிரதமரின் நிரல்கள் முதலமைச்சர், உள்துறை அமைச்சர் மற்றும் காவல்துறைத் தலைவர் உள்ளிட்ட மாநிலத்தின் உயர்மட்டத் தலைமையுடன் பகிரப்படும். SPG, பாதுகாப்புத் திட்டத்திற்காக மாநிலக் காவல்துறை மற்றும் பிற அதிகாரிகளுடன் ஒருங்கிணையும்.

---

**5.** **சீக்கியர்களின் 5வது தக்தாக தக்த் தம்தாமா சாகிப்பை அங்கீகரித்துள்ள மாநிலம் / யூடி எது?**

அ) பஞ்சாப்



**ஆ) தில்லி ☑**

இ) பீகார்


ஈ) உத்தர பிரதேசம்

- ✓ தக்த் தம்தாமா சாகிப்பை சீக்கியர்களின் ஐந்தாவது தக்த் ஆக அங்கீகரிப்பதற்காக, தில்லி சீக்கிய குருத்வாரா சட்டம், 1971'இல் திருத்த மசோதாவை தில்லி சட்டமன்றம் நிறைவேற்றியது. 'தக்த்' அல்லது 'சிம்மாசனம்' என்பது சீக்கியர்களுக்கான தற்காலிக அதிகாரத்தின் இடமாகும்.
- ✓ பஞ்சாபில் மூன்று மற்றும் மகாராஷ்டிரா மற்றும் பீகாரில் தலா 1 என மொத்தம் ஐந்து சீக்கிய தக்த்துகள் உள்ளன.

---

**6.** **2021ஆம் ஆண்டுக்கான சிறந்த பால்கன் தடகள வீரராக அறிவிக்கப்பட்ட நோவக் ஜோகோவிச் சார்ந்த நாடு எது?**

அ) பல்கேரியா



ஆ) சைபீரியா

**இ) செர்பியா ☑**

ஈ) கிரேக்கம்

- ✓ செர்பியாவைச் சார்ந்த முன்னணி டென்னிஸ் வீரரான நோவக் ஜோகோவிச் 2021ஆம் ஆண்டின் சிறந்த பால்கன் தடகள வீரராக ஏழாவது முறையாக தேர்வு செய்யப்பட்டார்.
- ✓ உலகின் நெ.1 இடத்தைப் பிடித்துள்ள அவர் இந்த ஆண்டு நான்கு கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் மூன்றில் வெற்றி பெற்றார். இந்த வாக்கெடுப்பில் கிரேக்க கூடைப்பந்து வீரர் ஜியானிஸ் அன்டெட்டோகவுன்ம்போ 2ஆவது இடத்தைப் பிடித்தார். அதைத் தொடர்ந்து மற்றொரு கிரேக்க நீளம் தாண்டுதல் வீரர் மில்டியாடிஸ் டென்டோக்லு உள்ளார்.

---

**7. ஆராய்ச்சி சாதனங்களுடன் 'சிமோர்க்' செயற்கைக் கோள் தாங்கி ஏவுகலத்தை ஏவிய நாடு எது?**



அ) வங்காளதேசம்

**ஆ) ஈரான் ☑**

இ) இஸ்ரேல்

ஈ) ஐக்கிய அரபு அமீரகம்

✓ ஈரான் 3 ஆராய்ச்சி சாதனங்களைக் கொண்ட 'சிமோர்க்' என்ற செயற்கைக்கோள் தாங்கி ஏவுகலத்தை ஏவியதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

✓ 'சிமோர்க்' என்பது ஈரான் மொழியில் 'பீனிக்ஸ்' என பொருள்கொள்ளப்படுகிறது. அந்த நாடு 470 கிமீட்டர் (290 மைல்) உயரத்தில் அந்தச் சாதனங்களை ஏவியது. 2018 மே மாதத்தில் அமெரிக்கா ஒருதலைப்பட்சமாக அணுசக்தி ஒப்பந்தத்திலிருந்து விலகி ஈரானுக்கு எதிராக மீண்டும் பொருளாதாரத்தடைகளை விதித்தது.

---

**8. கடந்த 2021ஆம் ஆண்டில் அதிக புலிகள் இறப்பைப் பதிவு செய்த மாநிலம் எது?**



அ) கர்நாடகா

**ஆ) மத்திய பிரதேசம் ☑**

இ) மகாராஷ்டிரா

ஈ) குஜராத்

✓ தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையத்தின் இணைய தளத்தில் உள்ள தரவுகளின்படி, கடந்த 2021ஆம் ஆண்டில் நாட்டில் மொத்தம் 126 புலிகள் இறந்துள்ளன.

✓ 126 புலிகளுள், 60 புலிகள் வேட்டையாலும் விபத்தாலும் இறந்ததாக கூறப்படுகிறது. இதில் அதிகபட்சமாக மத்திய பிரதேசத்தில் (44), மகாராஷ்டிராவில் (26), கர்நாடகாவில் (14) புலிகள் இறந்துள்ளன.

---

**9. உலகிலேயே மிகநீளமான மெட்ரோ ரயில் நெட்வொர்க் உள்ள நகரம் எது?**

அ) சென்னை

ஆ) புது தில்லி

**இ) ஷாங்காய் ☑**

ஈ) டோக்கியோ

上海地铁 Shanghai Metro

✓ அண்மையில் செயல்பாட்டுக்கு வந்த இரண்டு புதிய வழித் தடங்களுடன் சீனாவின் ஷாங்காய் உலகின் மிக நீளமான மெட்ரோ இரயில் நெட்வொர்க்கைக் கொண்ட தனது நிலையைத் தக்கவைத்துக்கொண்டுள்ளது.

✓ இந்தப் புதிய பாதைகள் நகரின் மெட்ரோ நெட்வொர்க்கின் மொத்த நீளத்தை 831 கிமீஆக உயர்த்தியது. ஷாங்காய் மெட்ரோ ரயில் நெட்வொர்க்கிற்கு அடுத்தபடியாக பெய்ஜிங் உள்ளது. தில்லி மூன்றாவது இடத்தில் உள்ளது.

---

**10. 'அட்டகாமா லார்ஜ் மில்லிமீட்டர் / சப்மில்லிமீட்டர் அரே (ALMA)' அமைந்துள்ள நாடு எது?**



அ) அமெரிக்கா **ஆ) சிலி ☑**

இ) ஆஸ்திரேலியா ஈ) ரஷ்யா

✓ சிலியில் உள்ள 'Atacama Large Millimeter/submillimeter Array (ALMA)'ஐ அறிவியலாளர்கள் குழு WB89–789 பகுதியில் புதிதாக உதித்த விண்மீனை (புரோட்டோ ஸ்டார்) கண்காணிக்கப் பயன்படுத்தியது. இது தீவிர வெளிப்புற கேலக்ஸியில் அமைந்துள்ளது.

✓ அறிவியலாளர்கள் கரிமம்–, உயிர்வளி–, நைட்ரஜன்–, சல்பர்– மற்றும் சிலிக்கான்–தாங்கி மூலக்கூறுகளை அதில் கண்டறிந்துள்ளனர். புரோட்டோஸ்டாரின் வேதி செறிந்த வளி மற்றும் அதனுடன் தொடர்புடைய கூடு முதன்முறையாக நமது அண்டத்தின் விளிம்பில் கண்டறியப்பட்டுள்ளது.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. பத்திரிகையாளர்களுக்கான காப்பீட்டுத் திட்டம் இன்று தொடக்கம்**

ஊதிய உச்சவரம்பின்றி அனைத்து பத்திரிகையாளர்களையும் அரசின் காப்பீட்டில் சேர்ப்பதற்கான திட்டம் சென்னையில் திங்கள்கிழமை தொடங்கப்படுகிறது. ராஜா அண்ணாமலைபுரத்தில் உள்ள இமேஜ் அரங்கில் நடைபெறும் நிகழ்ச்சியில் பத்திரிகையாளர்களுக்கான காப்பீட்டுத் திட்டத்தை முதல்வர் மு க ஸ்டாலின் தொடக்கி வைக்கிறார்.

பத்திரிகையாளர்களுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின் கீழ் பயனாளிகளின் குடும்ப ஆண்டு வருமானம் இப்போது ₹72 ஆயிரமாக உள்ளது. அரசால் அங்கீகரிக்கப்பட்ட பத்திரிகையாளர்களின் குடும்பங்கள் வருமான உச்சவரம்பின்றி முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பயனாளிகளாக சேர்த்துக் கொள்ளப்படுவர் என அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதற்கான அரசு உத்தரவும் வெளியாகியுள்ளது.

---

**2. ஒமைக்ரான் ஆழிப்பேரலை! | கொவைட் 19 கொள்ளை நோய்த்தொற்றின் ஒமைக்ரான் உருமாற்றம் குறித்த தலையங்கம்**

உலகம் முழுவதும் அதிவேகமாகப் பரவிக்கொண்டிருக்கும் கொவைட் 19 கொள்ளை நோய்த்தொற்றின் ஒமைக்ரான் உருமாற்றம் ஏற்படுத்தும் அச்சுறுத்தல் அதிர்ச்சி அளிக்கிறது. ஆழிப்பேரலையாக மீண்டும் ஒருமுறை கொவைட் 19 தாக்கக் கூடும் என்கிற உலக சுகாதார நிறுவனத்தின் எச்சரிக்கையைப் புறந்தள்ளிவிட முடியாது.

சீனாவின் பல நகரங்களில் பொது முடக்கம் அமல்படுத்தப்பட்டிருப்பதால் அத்தியாவசியப் பொருள்கள் கூட இல்லாமல் பொதுமக்கள் அவதிப்படுகிறார்கள் என்று செய்திகள் வருகின்றன. அமெரிக்காவிலும், ஐரோப்பாவின் பல நாடுகளிலும் இதுவரை இல்லாத அளவிலான பாதிப்புகள் பதிவாகி இருக்கின்றன.

ஒருபுறம் ஒமைக்ரான் உருமாற்றம் பரவுகிறது என்றால், இன்னொருபுறம் ஏறத்தாழ 40% அளவில் டெல்டா உருமாற்ற பாதிப்பும் காணப்படுகிறது.

பிரிட்டன், துருக்கி, கிரீஸ், ஜெர்மனி, பிரான்ஸ், ஸ்வீடன், பின்லாந்து, ஆஸ்திரேலியா என தீநுண்மித் தொற்றின் பரவல் எல்லைகளும் கண்டங்களும் கடந்து காட்டுத்தீ போலப் பரவிக் கொண்டிருக்கிறது. இந்தியாவும் அதற்கு விதிவிலக்கல்ல.

உச்சநீதிமன்றத்தில் 4 நீதிபதிகள், 150 பணியாளர்களை தீநுண்மித் தொற்று பாதித்திருக்கிறது என்றால், மக்களவை – மாநிலங்களவை செயலகங்களில் பணியாற்றும் சுமார் 400 பேரையும் பாதித்திருக்கிறது.

கடந்த ஆண்டு ஏப்ரல், மே மாதத்தில் டெல்டா உருமாற்றம் ஏற்படுத்திய, நிலைகுலைய வைத்த பாதிப்புகளின் பின்னணியில் இப்போதைய ஒமைக்ரான் உருமாற்றப் பரவலை நாம் கவனக்குறைவாக எடுத்துக்கொள்ளக் கூடாது. தமிழகத்தில் நேற்றைய நிலவரப்படி 12,895 பாதிப்புகள் பதிவாகியிருக்கின்றன.

அவற்றில் ஏறத்தாழ பாதிக்குப் பாதி, அதாவது 6,156 பாதிப்புகள் சென்னையில் மட்டுமாகக் காணப்படுகிறது. பாதிக்கப்பட்டவா்களில் 85% பேருக்கு ஒமைக்ரான் உருமாற்ற பாதிப்பு காணப்படுவதாக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவிக்கிறார்.

சர்வதேச அளவில் அதிவிரைவாகப் பரவிக் கொண்டிருக்கும் ஒமைக்ரான் உருமாற்றத்தை எதிர்கொள்வதற்கு உடனடியாக எதிர்ப்பு சக்தியை உறுதிப்படுத்தும் மூன்றாவது தவணை (பூஸ்டர் டோஸ்) போடப்படுவது அவசியம் என்று மருத்துவ ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். தடுப்பூசி போட்டுக் கொண்டவர்களையும் ஒமைக்ரான் உருமாற்றம் பாதிக்கிறது என்றாலும்கூட, பாதிப்பு கடுமையாக இல்லை என்று கூறப்படுகிறது. அதனால் பூஸ்டர்டோஸ் எனப்படும் மூன்றாவது தவணை தடுப்பூசி அத்தியாவசியமாகிறது.

இந்தியாவில் ஏறத்தாழ 5 கோடி பேர் இரண்டு தவணை தடுப்பூசி போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களில் 2.7 கோடி பேர் முன்களப் பணியாளர்களும், இணைய நோய் உள்ளவர்களும், மூத்த குடிமக்களும். இரண்டாவது தவணை தடுப்பூசியும் போட்டுக்கொண்டு ஆறு முதல் 10 மாதங்கள் கழிந்துவிட்ட நிலையில் அவர்களது கொவைட் 19–க்கான எதிர்ப்பு சக்தி குறைந்திருக்கும். அதனால் உடனடியாக மூன்றாவது தவணை தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டியது கட்டாயமாகிறது.

தமிழகத்தில் மூன்றாவது தவணை தடுப்பூசி செலுத்தும் பணி முதல்வர் மு க ஸ்டாலினால் இன்று முதல் தொடங்கி வைக்கப்பட இருக்கிறது. தமிழகத்தில் 5.65 லட்சம் மருத்துவப் பணியாளர்கள், 9.78 லட்சம் முன்களப் பணியாளர்கள், 20.83 லட்சம் மூத்த குடிமக்கள் என 36.26 லட்சம் பேர் மூன்றாவது தவணை தடுப்பூசிக்குத் தகுதி பெற்றவர்கள். தமிழகத்தில் ஏற்கெனவே 71 லட்சம் தடுப்பூசிகள் கையிருப்பில் இருக்கும் நிலையில், கால தாமதமில்லாமல் 3ஆவது தவணை தடுப்பூசி செலுத்தும் பணியை தொடங்கி இருப்பது வரவேற்புக்குரியது.

அகில இந்திய அளவில் சுமார் 1.05 கோடி சுகாதாரப் பணியாளர்கள், 1.9 கோடி முன்களப் பணியாளர்கள், இணை நோய்களும் மூத்த குடிமக்களும் என்று 2.75 கோடி பேர் மூன்றாவது தவணை தடுப்பூசிக்குத் தகுதி பெற்றவர்கள். தமிழகத்தைப் போலவே எல்லா மாநிலங்களும் மூன்றாவது தவணை தடுப்பூசி போடும் திட்டத்தை விரைவுபடுத்தினால்தான் ஒமைக்ரான் பாதிப்பிலிருந்து அவா்களைப் பாதுகாக்க முடியும்.

மூன்றாவது தவணைக்கு எந்தத் தடுப்பூசி மருந்தை பயன்படுத்துவது என்கிற கேள்வியும் எழுந்திருக்கிறது. மூன்றாவது தவணையை செயல்படுத்தும் பல்வேறு நாடுகளில், பைசர் நிறுவனத்தின் எம்ஆர்என்ஏ பரவலாக பரிந்துரைக்கப்படுகிறது. இரண்டு தவணைக்கு மேல் கோவிஷீல்டு தடுப்பூசியால் முந்தைய அளவு பாதுகாப்பை வழங்க முடியுமா என்கிற கேள்வி சிலரால் எழுப்பப்படுகிறது. இந்தியாவில் மூன்றாவது தவணையும் போடுவதற்கான கோவிஷீல்டு தடுப்பூசி கையிருப்பு போதுமான அளவு இருக்கிறது.

90% பேர் கோவிஷீல்டு போட்டுக் கொண்டவர்களாகவும் இருக்கிறார்கள். அதனால்தான் எழுப்பப்பட்டிருக்கும் ஐயப்பாடு, சற்று கவலை அளிக்கிறது.

இந்தியாவில் தயாரிக்கப்படும் பல்வேறு தடுப்பூசிகள் பயன்பாட்டுக்குத் தயாராக இருக்கின்றன. அவற்றில் கோவாக்ஸினும், சைகோவ் டி 2 மட்டுமே அவசரகால பயன்பாட்டுக்கான அனுமதி பெற்றிருக்கின்றன.

இந்தியாவில் சீரம் இன்ஸ்டியூட்டால் தயாரிக்கப்படும் கோவாவேக்ஸ் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஆனால், இந்தியாவில் பயன்பாட்டில் இல்லை. இப்பின்னணியில் அனைவருக்கும் இன்னும் கூட முதல் 2 தவணை தடுப்பூசி போடாமல் இருக்கிறோம் என்பதும், மூன்றாவது தவணை தடுப்பூசிக்கு ஐந்து கோடிக்கும் அதிகமானோர் இருக்கிறார்கள் என்பதும் நாம் நினைவில் கொள்ளவேண்டிய எதார்த்தங்கள்.

போர்க்கால அடிப்படையில் தடுப்பூசி போடுவதன்மூலம் தான் கொவைட் 19–இன் அடுத்த ஆழிப்பேரலையை எதிர்கொள்ள முடியும்!

---

### 3. ஆழ்கடல் சோதனை ஓட்டத்தில் ஐஎன்எஸ் விக்ராந்த்

உள்நாட்டிலேயே கட்டப்பட்ட முதல் விமானம் தாங்கிப் போர்க் கப்பலான ஐஎன்எஸ் விக்ராந்த் மீண்டும் ஆழ்கடல் சோதனைக்கு உள்படுத்தப்பட்டது.

ஐஎன்எஸ் விக்ராந்த் விமானம் தாங்கிக் கப்பலானது ரூ.23,000 கோடி செலவில் கொச்சி கப்பல்கட்டும் தளத்தில் கட்டப்பட்டது. இதன் மூலமாக விமானம் தாங்கிக் கப்பலை சொந்தமாகக் கட்டும் திறன் கொண்ட வெகுசில நாடுகளுடன் இந்தியாவும் இணைந்தது.

ஐஎன்எஸ் விக்ராந்த் கப்பலின் முதலாவது சோதனை ஓட்டம் கடந்த ஆண்டு ஆகஸ்டில் 5 நாள்களுக்கு நடைபெற்றது. பின்னர் கடந்த ஆண்டு அக்டோபரில் 10 நாள்களுக்கு அக்கப்பல் சோதனை செய்யப்பட்டது. இந்நிலையில், அக்கப்பலின் சோதனை ஓட்டம் மீண்டும் நடைபெற்று வருகிறது.

---

**4. சாகிப்சாதா ஸோராவர் சிங், சாகிப்சாதா பத்தே சிங் தியாகத்தைக் குறிக்கும் வகையில் டிசம்பர் 26–ம் தேதியை வீர் பால் தினமாக பிரதமர் அறிவித்தார்**

ஸ்ரீ குரு கோவிந்த் சிங் அவர்களின் பர்காஷ் புரப் புனிதமான தினத்தையொட்டி, பிரதமர் நரேந்திர மோடி, சாகிப்சாதா ஸோராவர் சிங், சாகிப்சாதா பத்தே சிங் தியாகத்தைக் குறிக்கும் வகையில் டிசம்பர் 26–ம் தேதியை வீர் பால் தினமாக அறிவித்தார்.

---

**5. சீனாவில் செயல்படும் ஆசிய உள்கட்டமைப்பு வங்கி துணை தலைவரானார் உர்ஜித்**

ரிசர்வ் வங்கியின் முன்னாள் கவர்னர் உர்ஜித் படேல், ஆசிய உள்கட்டமைப்பு மேம்பாட்டு வங்கியின் (ஏஐஐபி) துணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த 2016ம் ஆண்டு ரகுராம் ராஜன் ஓய்வு பெற்ற பிறகு, ரிசர்வ் வங்கி கவர்னராக பொறுப்பேற்றவர் உர்ஜித் படேல்.

இவர் தனது பதவிக்காலம் முடியும் முன்பாக கடந்த 2018ம் ஆண்டு. சொந்தகாரணங்களுக்காக பதவியை ராஜினாமா செய்தார். இந்நிலையில், உர்ஜித் படேல் தற்போது ஆசிய உள்கட்டமைப்பு மேம்பாட்டு வங்கியின் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

துணைத் தலைவராக இருந்த டி.ஜே. பாண்டியனின் பதவிக்காலம் முடிந்ததைத் தொடர்ந்து, அந்த பதவியில் உர்ஜித் படேல் நியமிக்கப்பட்டுள்ளார். இவரது பதவிக்காலம் 3 ஆண்டுகள். அடுத்த மாதம் அவர் பொறுப்பேற்க உள்ளார்.

ஏஐஐபி வங்கி சீனாவை தலைமையிடமாக கொண்டு செயல்படுகிறது. இது, ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் உள்ள நாடுகளில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த கடன் வழங்கி வருகிறது. இந்த வங்கியை உருவாக்கிய உறுப்பு நாடுகளில் இந்தியாவும் ஒன்று. இந்த வங்கியில் சீனா 26.06 சதவீத பங்குகளையும், இந்தியா, 7.5 சதவீத பங்குகளையும் வைத்துள்ளது.

---

**6. அடிலெய்ட் டென்னிஸ்: போபண்ணா/ராம்குமாா் ஜோடி சாம்பியன்**

ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற அடிலெய்ட் டென்னிஸ் போட்டியின் ஆடவா் இரட்டையா் பிரிவில் இந்தியாவின் ரோஹன் போபண்ணா/ராம்குமாா் ராமநாதன் இணை சாம்பியன் ஆகி அசத்தியுள்ளது.

ஏடிபி டூா் போட்டிகளில் இருவரும் ஜோடி சோ்ந்த முதல் போட்டியிலேயே இவ்வாறு பட்டம் வென்றுள்ளனா். ஏடிபி இரட்டையா் போட்டியில் போபண்ணாவுக்கு இது 20–ஆவது பட்டமாக இருக்கும் நிலையில், ராம்குமாருக்கு இது முதல் பட்டமாகும்.

வெற்றிக் கோப்பையுடன் இருவரும், தலா 250 ஏடிபி புள்ளிகள் பெறுகின்றனா். அத்துடன், மொத்த ரொக்கப் பரிசான ரூ.13.88 லட்சத்தையும் அவா்கள் பகிா்ந்துகொள்கின்றனா். ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் போட்டியான ஆஸ்திரேலிய ஓபனில் ஒற்றையா் பிரிவு தகுதிச் சுற்றில் களம் காண இருக்கும் நிலையில், ராம்குமாருக்கு இந்த சாம்பியன் பட்டம் நல்லதொரு உத்வேகத்தை அளிப்பதாக இருக்கும்.

முன்னதாக, இப்போட்டியின் இறுதிச் சுற்றில் போபண்ணா/ராம்குமாா் ஜோடி 7–6 (8/6), 6–1 என்ற செட்களில் போட்டித்தரவரிசையில் முதலிடத்தில் இருந்த குரோஷியாவின் இவான் டோடிக்/பிரேஸிலின் மாா்செலோ மெலோ இணையை 1 மணி நேரம் 21 நிமிஷங்கள் போராடி வென்றது.

ஆட்டத்தில் இந்திய இணை தான் சந்தித்த 4 பிரேக் பாய்ண்ட்களையும் தக்க வைத்துக் கொண்டதுடன், எதிா் ஜோடியின் பிரேக் பாய்ண்ட்களை இரு முறை பிரேக் செய்தனா். இரு செட்களிலும் எதிா் தரப்பு வீரா்களின் சா்வ்களை போபண்ணா திறம்பட எதிா்கொண்டதும், ராம்குமாா் ஆல்–ரவுண்ட் அசத்தல் காட்டியதும் ஆட்டத்தை அவா்களுக்கு சாதகமாக மாற்றியது.

வாகை சூடினாா் மான்ஃபில்ஸ்

இப்போட்டியின் ஆடவா் ஒற்றையா் பிரிவில், பிரான்ஸின் கேல் மான்ஃபில்ஸ் சாம்பியன் ஆனாா். இறுதிச்சுற்றில், போட்டித்தரவரிசையில் முதலிடத்தில் இருந்த மான்ஃபில்ஸ் 6–4, 6–4 என்ற நோ் செட்களில், போட்டித்தரவரிசையில் 2–ஆவது இடத்தில் இருந்த ரஷியாவின் காரென் கசானோவை தோற்கடித்தாா். இது மான்ஃபில்ஸின் 11–ஆவது ஒற்றையா் பிரிவு பட்டமாகும்.

பாா்ட்டிக்கு இரு கோப்பை

அடிலெய்ட் இன்டா்னேஷனல் டென்னிஸ் போட்டியில் மகளிா் ஒற்றையா் பிரிவில் ஆஸ்திரேலியாவின் ஆஷ்லி பாா்ட்டி கோப்பை வென்றாா்.

உலகின் முதல்நிலை வீராங்கனையாக இருக்கும் பாா்ட்டி தனது இறுதிச் சுற்றில் 6–3, 6–2 என்ற நோ் செட்களில், போட்டித்தரவரிசையில் 7–ஆவது இடத்திலிருந்த கஜகஸ்தானின் எலனா ரைபாகினாவை தோற்கடித்தாா். ஒற்றையா் பிரிவில் பாா்ட்டிக்கு இது 14–ஆவது பட்டமாகும். இந்த வெற்றியுடன் அவா் ஆஸ்திரேலிய ஓபன் போட்டிக்கு செல்வது குறிப்பிடத்தக்கது.

பாா்ட்டி/சாண்டா்ஸ் வெற்றி: மகளிா் இரட்டையா் பிரிவிலும் ஆஷ்லி பாா்ட்டி, சக நாட்டவரான ஸ்டோா்ம் சாண்டா்ஸுடன் இணைந்து சாம்பியன் பட்டம் வென்றாா். பாா்ட்டி/சாண்டா்ஸ் இணை இறுதிச் சுற்றில் 6–1, 6–4 என்ற நோ் செட்களில், போட்டித்தரவரிசையில் 3–ஆவது இடத்திலிருந்த ஸ்லோவேனியாவின் ஆண்ட்ரியா கிளெபாக்/குரோஷியாவின் டரியா ஜுராக் ஷ்ரிபா் ஜோடியை தோற்கடித்தது.

---

**7. ஏடிபி கோப்பை வென்றது கனடா**

ஏடிபி கோப்பை ஆடவா் அணிகள் டென்னிஸ் போட்டியின் இறுதிச்சுற்றில் கனடா 2–0 என்ற கணக்கில் ஸ்பெயினை வீழ்த்தி சாம்பியன் ஆனது. கனடா இப்போட்டியில் கோப்பை வென்றது இது முதல் முறையாகும்.

இறுதிச் சுற்றின் இரு ஆட்டங்களுமே ஒற்றையா் பிரிவில் நடைபெற்றது. இதில் கனடாவின் ஃபெலிக்ஸ் ஆகா் அலியாசிமே 7–6 (7/3), 6–3 என்ற செட்களில் ஸ்பெயினின் ராபா்டோ பௌதிஸ்டா அகட்டை வென்றாா்.

மற்றொரு ஆட்டத்தில் கனடாவின் டெனிஸ் ஷபோவெலாவ் 6–4, 6–3 என்ற நோ் செட்களில் பாப்லோ கரீனோ பஸ்டாவை வீழ்த்தினாா்.

---

**8. நிலவில் தண்ணீா் ஆதாரம்: சீன விண்கலம் கண்டுபிடிப்பு**

நிலவின் தரைப்பரப்பில் தண்ணீா் இருப்பதற்கான ஆதாரங்களை சீனா விண்கலம் கண்டறிந்துள்ளது.

நிலவில் ஆய்வு மேற்கொள்வதற்காக சாங்கே–5 என்ற விண்கலத்தை 2020, நவம்பரில் சீனா அனுப்பியது. நிலவின் மத்திய உயா் அட்சரேகை பகுதியில் தரையிறங்கிய அந்த விண்கலத்தின் லேண்டரில் உள்ள ஒரு கருவி, தரைப்பரப்பில் உள்ள பாறையின் நிறமாலை பிரதிபலிப்பை அந்த இடத்திலேயே அளந்தது. பின்னா், 1, 731 கிராம் எடையிலான பாறை மாதிரியுடன் விண்கலம் பூமிக்குத் திரும்பியது.

அந்தப் பாறை மாதிரியை சீன அறிவியல் அகாதெமியைச் சோ்ந்த விஞ்ஞானிகள் ஆய்வு செய்தனா். அதன் முடிவுகள் 'சயின்ஸ் அட்வான்சஸ்' இதழில் வெளியாகியுள்ளது.

அதன்படி, நிலவின் தரைப்பரப்பில் உள்ள பாறைப் படிவங்களில் ஒரு டன்னுக்கு 120 கிராம் தண்ணீா் இருப்பதாகத் தெரியவந்துள்ளது. சந்திரனின் நிலப்பரப்பில் அதிக ஈரப்பதத்துக்கு காரணம் சூரிய காற்று ஆகும். அதுதான் தண்ணீரை உருவாக்கும் ஹைட்ரஜனை கொண்டு வந்ததாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனா்.

---

**1. எந்த இந்திய நிறுவனத்தின் துணை நிறுவனம் திருகோணமலை எண்ணெய் சேமிப்புக் கிடங்கை கூட்டாக அபிவிருத்தி செய்வதற்கான ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டது?**

**அ) இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் ☑**

ஆ) பாரத் பெட்ரோலியம்

இ) இந்துஸ்தான் பெட்ரோலியம்


ஈ) எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கழகம்

- ✓ இலங்கா IOC, இலங்கை பெட்ரோலியக் கார்ப்பரேஷன் மற்றும் இலங்கை அரசாங்கம் திருகோணமலை எண்ணெய் சேமிப்புக் கிடங்கை கூட்டாக அபிவிருத்தி செய்வதற்கான குத்தகை ஒப்பந்தங்களில் கைச் சாத்திட்டன. இதற்கேற்ப 14 கச்சா எண்ணெய் சேமிப்புக் கிடங்குகள் இந்தியன் ஆயில் நிறுவனத்திற்கும், 24 கச்சா எண்ணெய் சேமிப்பு தொட்டிகள் இலங்கை பெட்ரோலிய கார்ப்பரேஷனுக்கும் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன.
- ✓ எஞ்சிய 61 கச்சா எண்ணெய் சேமிப்புக்கிடங்குகள் இந்திய எண்ணெய் நிறுவனம் மற்றும் இலங்கை பெட்ரோலியக் கார்பரேஷன் ஆகிய கூட்டிணைந்த நிறுவனத்திற்கும் கூட்டாக குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது.
- ✓ இந்நிறுவனத்தின் 51% பங்குகள் இலங்கை பெட்ரோலிய நிறுவனத்திற்கும் 49 வீத பங்குகள் இந்திய எண்ணெய் நிறுவனத்திற்கும் வழங்கப்பட்டுள்ளது.

---

**2.சமீப செய்திகளில் இடம்பெற்ற, 'குண்ட்கட்டி' சட்டம், எந்த இந்திய மாநிலம்/யூடியில் நடைமுறையில் உள்ளது?**

அ) ஹிமாச்சல பிரதேசம்



**ஆ) ஜார்கண்ட் ☑**

இ) சிக்கிம்

ஈ) உத்தரகாண்ட்

- ✓ சட்டத்துக்குப் புறம்பாக மரங்களை வெட்டி விற்பனை செய்ததாகக் கூறி ஒருவரை கிராம மக்கள் சிலர் தாக்கி உள்ளனர். 'குண்ட்கட்டி' சட்டத்தை மீறியதற்காக அந்நபர் காவல்துறையின் முன்னிலையில் உயிருடன் எரிக்கப்பட் –டார். 'குண்ட்கட்டி' அமைப்பு என்பது பழங்குடியினரின் பரம்பரை அடிப்படையிலான நிலத்தை கூட்டாக வைத்திருக்கும் ஒரு முறையாகும்.
- ✓ இந்த முறையின்படி, முண்டா பழங்குடியினர் மரங்களை வெட்டி விவசாயத்திற்கு நிலத்தை தயார் செய்வார்கள், அது ஒரு தனி நபருக்கு பதிலாக முழு இனத்திற்கும் சொந்தமானதாக பார்க்கப்படும்.

---

**3. ஜப்பான் சமீபத்தில் எந்த நாட்டுடன், 'பரஸ்பர அணுகல் ஒப்பந்தம்' கையெழுத்திட்டது?**

அ) அமெரிக்கா



**ஆ) ஆஸ்திரேலியா ☑**

இ) பிரேசில்

ஈ) ரஷ்யா

- ✓ பாதுகாப்பான மற்றும் நிலையான இந்தோ–பசிபிக் பிராந்தியத்தை உறுதி செய்வதற்காக, ஜப்பான் சமீபத்தில் ஆஸ்திரேலியாவுடனான ஒரு வரலாற்று சிறப்பு வாய்ந்த பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
- ✓ இந்தோ–பசிபிக் பிராந்தியத்தில் சீனாவின் இராணுவ மற்றும் பொருளாதார செல்வாக்கு விரிவாக்கத்தின் மத்தியில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. "Reciprocal Access Agreement" என அழைக்கப்படும் இது, ஜப்பானின் இரண்டாவது இத்தகைய ஒப்பந்தமாகும். ஜப்பானின் மற்றொரு இராணுவ ரீதியிலான ஒப்பந்தம் அமெரிக்காவுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

---

**4. 'Integrated Approach in S&T for Sustainable Future' என்பது எந்த நாளுக்கானக் கருப்பொருளாகக் அறிவிக்கப்பட்டுள்ளது?**

அ) உலக அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நாள்



**ஆ) தேசிய அறிவியல் நாள் ☑**

இ) உலக ஆராய்ச்சி & வளர்ச்சி நாள்

ஈ) தேசிய புத்தாக்க நாள்

- ✓ இந்த ஆண்டு (2021) தேசிய அறிவியல் நாளுக்கான கருப் பொருள் "Integrated Approach in S&T for Sustainable Future" என அறிவிக்கப்பட்டுள்ளது. மத்திய அறிவியல் & தொழில்நுட்ப அமைச்சகம் சமீபத்தில் இதனை அறிவித்தது.
- ✓ அறிவியல்சார் விஷயங்களைப் பற்றிய விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்துவதற்காக இக்கருப்பொருள் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இந்திய இயற்பியலாளர் சர் CV ராமன் 'இராமன் விளைவைக்' கண்டுபிடித்ததைக் குறிக்கும் வகையில் பிப்.28 அன்று இந்தியாவில் தேசிய அறிவியல் நாள் கொண்டாடப்படுகிறது.

---

**5. APEDA'இன் கூற்றுப்படி, 2020–21'இல் இந்தியாவில் ஏற்றுமதி செய்யப்பட்ட முதன்மைப் பொருள் எது?**

**அ) பாஸ்மதி அல்லாத அரிசி ☑**



ஆ) தக்காளி

இ) பருத்தி

ஈ) பால்

- ✓ வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டாணையத்தின் (APEDA) கூற்றுப்படி, 2020–21ஆம் ஆண்டில், பாஸ்மதி அல்லாத அரிசி, பாசுமதி அரிசி மற்றும் எருமை இறைச்சி ஆகியவை இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட முதல் 3 தயாரிப்புகளாகும்.
- ✓ APEDA'இன் கூற்றுப்படி, மொத்த ஏற்றுமதி மதிப்பு 2011–12'இலிருந்த ₹83,000 கோடியுடன் ஒப்பிடுகையில் 2020 –21'இல் ₹15 லட்சம் கோடிக்கும் அதிகமாக உயர்ந்துள்ளது.

---

**6. இரயில்வே வாரியத்தின் தலைவர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரியாக நியமிக்கப்பட்டவர் யார்?**

அ) ஷோபித் திரிபாதி



**ஆ) வினை குமார் திரிபாதி ☑**

இ) இராஜேஷ் அரோரா

ஈ) குமார் வர்மா

✓ இரயில்வே வாரியத்தின் தலைவர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரியாக வினைகுமார் திரிபாதியை நியமிக்க மத்திய அமைச்சரவையின் நியமனக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. தற்போது அவர் வடகிழக்கு இரயில்வே பொது மேலாளராக பணியாற்றி வருகிறார். அவர், 1983 பேட்ச் இந்திய இரயில்வே சர்வீஸ் ஆஃப் எலக்ட்ரிக்கல் இன்ஜினியர்ஸ் (IRSEE) ஆவார்.

---

**7. கீழ்காணும் எவ்வமைச்சகத்தால் 'படே பாரத் பிரச்சாரம்' தொடங்கப்பட்டது?**

அ) பெண்கள் & குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

**ஆ) கல்வி அமைச்சகம் ☑**

இ) உள்துறை அமைச்சகம்

ஈ) பாதுகாப்பு அமைச்சகம்

✓ மத்திய கல்வி அமைச்சகம் 2022 ஜனவரி.1 தொடர்ந்து 100 நாட்களுக்கு 'படே பாரத் பிரச்சாரம்' என்ற பெயரில் வாசிப்பு பிரச்சாரத்தை தொடங்கியுள்ளது.

✓ இந்தப்பிரச்சாரம் பாலர் வகுப்பு மற்றும் 8ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களின் வாசிப்புத்திறன், சொல்லகராதி மற்றும் சிந்தனை திறன்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

**8. 2021-22'இல் விஜய் ஹசாரே கோப்பையை வென்ற மாநில அணி எது?**

அ) தமிழ்நாடு




**ஆ) ஹிமாச்சல பிரதேசம் ☑**

இ) ஒடிஸா

ஈ) கர்நாடகா

✓ ஜெய்ப்பூரில் நடைபெற்ற 2021-22 பதிப்பில், ஹிமாச்சலப் பிரதேசம் VJD முறையில் தமிழ்நாட்டு அணியை வீழ்த்தி, அதன் முதல் விஜய் ஹசாரே கோப்பையை வென்றது.

✓ தமிழ்நாடு அணி 5 முறை சாம்பியன் பட்டம் வென்ற அணி ஆகும். ரஞ்சி ஒருநாள் டிராபி என்று அழைக்கப்படும் விஜய் ஹசாரே கோப்பை 2002-03'இல் தொடங்கப்பட்டது. புகழ் பெற்ற இந்திய கிரிக்கெட் வீரர் விஜய் ஹசாரேவின் நினைவாக இந்தப் போட்டி நடத்தப்படுகிறது.

---

**9. சீனா சமீபத்தில் எந்த இந்திய மாநிலத்தில் உள்ள 15 இடங்களுக்கான 'பெயர்களின்' பட்டியலை வெளியிட்டது?**

அ) மிசோரம்



ஆ) நாகாலாந்து

இ) திரிபுரா

**ஈ) அருணாச்சல பிரதேசம் ☑**

✓ அருணாச்சல பிரதேச மாநிலத்தில் உள்ள 15 இடங்களின் "தரப்படுத்தப்பட்ட" பெயர்களை சீன சிவில் விவகார அமைச்சகம் அறிவித்துள்ளது. அருணாச்சல பிரதேசத்தின் 90,000 சகிலோமீட்டர் பரப்பளவை சீனா தனது சொந்தப் பகுதி எனக்கூறிவருகிறது. அது 2017இல் அம்மாநிலத்தை "தெற்கு திபெத்" என்று அழைத்தது.

✓ மறுபெயரிடுவது இந்தியாவின் இறையாண்மையை அம் மாநிலத்திலிருந்து விலக்காது என்று இந்தியா, சீனாவுக்கு பதிலடி கொடுத்துள்ளது.

---

**10. நடுவண் சுற்றுச்சூழல் அமைச்சகம் எத்தயாரிப்புக்கு 'நீட்டிக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பு – Extended Producer Responsibility' குறித்த வழிகாட்டுதல்களை வெளியிட்டது?**

அ) உயிரி மருத்துவக் கழிவுகள்



**ஆ) கழிவு டயர்கள் ☑**

இ) நெகிழிக்கழிவுகள்

ஈ) மின்னணு கழிவுகள்

✓ சுற்றுச்சூழல், வனம் & காலநிலை மாற்ற அமைச்சகம், கழிவு டயர்களுக்கான "நீட்டிக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பு" குறித்த விதிமுறைகளின் வரைவு அறிவிப்பை வெளியிட்டது. இறுதி செய்யப்பட்டால், புதிய நிதியாண்டு முதல் இந்த வரைவு அமலுக்கு வரும். இந்தியா ஒவ்வோர் ஆண்டும் சுமார் 275,000 டயர்களை நிராகரிக்கிறது; ஆனால் அதற்கான விரிவான திட்டம் நாட்டிடம் இல்லை.

✓ கழிவு டயர்கள் சுற்றுச்சூழலுக்குப் பாதுகாப்பானதாக மேலாண்மை செய்யப்படுவதை உறுதிசெய்வது டயர் உற்பத்தியாளரின் பொறுப்பாகும்.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. சென்னை ஐஐடி'க்கு புதிய இயக்குநர் நியமனம்**

சென்னை ஐஐடி இயக்குநராக இருந்த பாஸ்கர் ராமமூர்த்தி ஓய்வு பெற்றதை தொடர்ந்து அந்த பணியிடம் காலியாக இருந்தது.

இதைத்தொடர்ந்து சென்னை ஐஐடி'இன் புதிய இயக்குநராக பேராசிரியர் காமகோடி நியமிக்கப்பட்டு உள்ளார். இதைப்போல தில்லி ஐஐடி இயக்குநராக மும்பை ஐஐடி பேராசிரியர் ரங்கன் பானர்ஜி, மாண்டி ஐஐடி இயக்குநராக கான்பூர் ஐஐடி பேராசிரியர் லட்சுமிதர் பெகேரா ஆகியோர் நியமிக்கப்பட்டு உள்ளனர்.

மேலும் மும்பை ஐஐடி பேராசிரியர் சுகாஸ் ஜோஷி, இந்தூர் ஐஐடி இயக்குநராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

---

**2. அஞ்சல்தலை கண்காட்சி**

தமிழக அஞ்சல்துறை சார்பில், 'டீஎன் டிஜிபெக்ஸ்-2022' என்ற மாநில அளவிலான மெய்நிகர் அஞ்சல்தலை கண்காட்சி ஜன.7ஆம் தேதி தொடங்கி ஜனவரி.10 வரை நடைபெற்றது. 'அஞ்சல்தலை சொல்லும் கலை' என்ற பெயரில் நடைபெற்ற இதன் நிறைவு விழா சென்னையில் நடைபெற்றது.

---

**3. மின் கட்டணத்தைக் கணக்கிட விரைவில் செயலி**

மின் கட்டணத்தைக் கணக்கிட விரைவில் கைப்பேசி செயலி அறிமுகம் செய்யப்பட உள்ளது.

இதுகுறித்து மின்வாரிய அதிகாரிகள் கூறியதாவது: சேவைகளை எண்ம வடிவில் வழங்கும் முயற்சியை

மின்வாரியம் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாகவே தற்போது நுகர்வோரே மின் கட்டணத்தைக் கணக்கிடும் வகையில் கைப்பேசி செயலி ஒன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. இதனை கைப்பேசியில் பதிவிறக்கம் செய்து, கட்டணத்தை கணக்கீடு செய்யலாம். மேலும், அச்செயலியில் மீட்டர் நிழற்படத்தை பதிவேற்றம் செய்த ஒரு சில நிமிஷங்களில் மின் கட்டண ரசீது, குறுஞ்செய்தி வாயிலாக நுகர்வோருக்கு அனுப்பப்படும்.

---

**4. சிக்கய்ய நாயக்கர் கல்லூரி அரசு கல்லூரியாக அறிவிப்பு**

ஈரோடு மக்களின் இருபதாண்டு கால கோரிக்கையை ஏற்று சிக்கய்ய நாயக்கர் கல்லூரியை அரசு கல்லூரியாக தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

---

**5. தமிழ்ப்பல்கலையில் அரிய தாள் ஆவணங்கள் – மரபு சார் பாதுகாப்பு ஆய்வகம் தொடக்கம்**

தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக்கழகத்தில் அரிய தாள் ஆவணங்கள் – மரபுசார் பாதுகாப்பு ஆய்வகம் திறக்கப்பட்டுள்ளது.

தமிழ்ப்பல்கலைக்கழக அரிய கையெழுத்துச் சுவடித் துறையில் உள்ள கையெழுத்துச் சுவடிகளும், பல்கலைக் கழகப் பொது நூலகத்தில் உள்ள காலத்தால் பழமையான நூல்களும் இந்த ஆய்வகத்தின் வழியாகப் பாதுகாக்கப்படும். இந்த ஆய்வகப் பணியின் வழியாகத் தமிழ்மரபில் உள்ள மரபுசார்ந்த பாதுகாப்பு முறைகளுக்கா –ன காப்புரிமை பெறுவதற்கு ஆவன செய்யப்படும்.

---

**1.** 'நிர்பயா கதி' பிரச்சாரத்துடன் தொடர்புடைய மாநிலம் எது?



அ) மேற்கு வங்கம்

**ஆ) ஒடிஸா ☑**

இ) கர்நாடகா

ஈ) குஜராத்

✓ ஒடிஸா மாநிலத்தின் கஞ்சம் மாவட்டம் முதல் குழந்தை திருமணம் இல்லாத மாவட்டமாக தனை அறிவித்துள்ளது. இது 'நிர்பயா கதி' (அச்சமற்ற மொட்டு) என்ற பிரச்சாரத்தை மேற்கொண்டுள்ளது. இந்தப்பிரச்சாரத்தின்மூலம், மாவட்ட நிர்வாகம் 1 லட்சத்திற்கும் மேற்பட்ட இளம் வயதினருக்கு ஆலோசனை வழங்கியது மற்றும் 450'க்கும் மேற்பட்ட சிறார் திருமணங்களை நிறுத்தியுள்ளது.

✓ குழந்தை திருமணங்கள் நடப்பதை அறிவித்தால் ஊக்கத் தொகை வழங்குதல், திருமணங்களுக்கு ஆதார் அட்டை –யை கட்டாயமாக்கல்போன்ற பல்வேறு நடவடிக்கைக –ளை அவர்கள் செயல்படுத்தியுள்ளனர்.

---

**2.** மாணாக்கர் துளிர் மற்றும் புத்தாக்க கொள்கை (SSIP) 2.0'ஐ அறிமுகப்படுத்திய மாநிலம் எது?



அ) தெலுங்கானா

**ஆ) குஜராத் ☑**

இ) மகாராஷ்டிரா

ஈ) ஒடிஸா

✓ குஜராத் மாநில முதலமைச்சர் பூபேந்திர படேல், சர்வதேச கல்வி நிறுவனங்களின் மாநாட்டில் (ICAI–2022) மாணாக்கர் துளிர் மற்றும் புத்தாக்க கொள்கை (SSIP) 2.0'ஐ அறிமுகப்படுத்தினார். இது பள்ளி மாணாக்கருக்கு புத்தாக் –கத்தில் நிதியுதவி செய்வதை நோக்கமாகக்கொண்டு உள்ளது. 2027 மார்ச் வரை அடுத்த 5 ஆண்டுகளுக்கு வரை செயல்படுத்தப்படும். நிதியுதவி முந்தைய பதிப்பின் ₹200லிருந்து ₹500 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

---

**3.** அண்மையில் எந்த நாட்டின் தலைவராக, 'ஓலாஃப் ஸ்கோல்ஸ்' நியமிக்கப்பட்டார்?



அ) அமெரிக்கா

**ஆ) ஜெர்மனி ☑**

இ) பிரேசில்

ஈ) ரஷ்யா

✓ ஓலாஃப் ஸ்கோல்ஸ் 2021 டிசம்பர் முதல் ஜெர்மனியின் அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்தியப் பிரதமர் மோடி ஜெர்மன் அதிபருடன் கலந்துரையாடினார் மற்றும் அவர் அதிபராக நியமிக்கப்பட்டதற்கு வாழ்த்து தெரிவித்தார்.

✓ முதலீடு & வர்த்தக இணைப்புகள் உட்பட, தற்போதுள்ள ஒத்துழைப்பு முன்னெடுப்புகளின் திறன்களை அவர்கள் மதிப்பாய்வு செய்தனர். புதிய பகுதிகளில் ஒத்துழைப்பைப் பன்முகப்படுத்துவது மற்றும் பரிமாற்றங்கள் குறித்தும் அவர்கள் விவாதித்தனர்.

---

**4.** 'உஜாலா' திட்டத்தைச் செயல்படுத்துகிற நடுவண் அமைச்சகம் எது?



**அ) எரிசக்தி அமைச்சகம் ☑**

ஆ) சுற்றுச்சூழல் அமைச்சகம்

இ) பெட்ரோலியம் & இயற்கை எரிவாயு அமைச்சகம்

ஈ) வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்

✓ உஜாலா திட்டத்தின் கீழ் LED விளக்குகள் விநியோகம் மற்றும் விற்பனையின் 7 ஆண்டுகளை மின்சாரத்துறை அமைச்சகம் வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது.

✓ குறைந்த செலவில் LED விளக்குகள் வழங்கும் உஜாலா திட்டம் கடந்த 2015 ஜன.5 அன்று தொடங்கப்பட்டது. தற்போது வரை, நாடு முழுவதும் 36.78 கோடி LED விளக்குகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. Unnat Jyoti by Affordable LEDs for All என்பதன் சுருக்கமே 'UJALA'.

---

**5.** பெகாசஸ் மால்வேர் சிக்கலைக் கண்டறிவதற்காக தொழில்நுட்பக் குழுவை நியமித்த அமைப்பு எது?




அ) மின்னணு & தகவல் தொழில்நுட்ப அமைச்சகம்

**ஆ) இந்திய உச்சநீதிமன்றம் ☑**

இ) சென்னை உயர்நீதிமன்றம்

ஈ) NITI ஆயோக்

✓ பெகாசஸ் மால்வேர் சிக்கலைக் கண்டறிய இந்திய உச்ச நீதிமன்றம் தொழில்நுட்பக் குழுவை நியமித்தது. குடிமக்கள் தங்கள் மொபைல் சாதனங்கள் பெகாசஸ் தீம்பொருளால் பாதிக்கப்பட்டுள்ளதாக சந்தேகிக்கப்பட்டால், குழுவைத் தொடர்புகொள்ளுமாறு அத்தொழில்நுட்பக்குழு பொதுமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.

✓ நியாயமானதாக இருந்தால், சாதனத்தை பரிசோதிக்க அனுமதிக்கும்படி அக்குழு அந்நபரைக் கோரும்.

---

**6.** மிகவும் இளவயது உலக ரேபிட் செஸ் சாம்பியனான நோடிர்பெக் அப்துசட்டோரோவ் சார்ந்த நாடு எது?



அ) சுவிட்சர்லாந்து

ஆ) ரஷ்யா

**இ) உஸ்பெகிஸ்தான் ☑**

ஈ) உக்ரைன்

✓ உஸ்பெகிஸ்தானைச் சேர்ந்த நோடிர்பெக் அப்துசட்டோ ரோவ், 17 வயது மூன்று மாதங்களில், உலக ரேபிட் செஸ் சாம்பியன் ஆனார். மேக்னஸ் கார்ல்சன் தனது 18 வயதில் 2009ஆம் ஆண்டில் உலக பிளிட்ஸ் பட்டத்தை வென்றார்.

✓ போலந்தின் வார்சாவில் நடந்த உலக ரேபிட் சாம்பியன் –ஷிப் போட்டியில் முன்னணி வீரர் மேக்னஸ் கால்சனை நோடிர்பெக் தோற்கடித்தார். உலக பிளிட்ஸ் பட்டத்தை பிரான்சின் மாக்சிம் வச்சியர்–லாக்ரேவ் வென்றார்.

---

**7. இந்தியாவின் மிகப்பெரிய சூரிய ஆற்றல் திட்டத்தை இராஜஸ்தானில் தொடக்கியுள்ள இந்திய நிறுவனம் எது?**

அ) அதானி பவர்

**ஆ) அஸூர் பவர் ☑**

இ) டாடா பவர்

ஈ) ரினியூ பவர்

✓ இந்திய சூரிய மின்னுற்பத்தியாளரான அசூர் பவர் தனது மிகப்பெரிய திட்டமான 600 MW சோலார் பூங்காவை இராஜஸ்தான் மாநிலத்தில் முழுமையாக இயக்கியுள்ளது.

✓ இந்தச் சூரிய ஆற்றல் பூங்கா பிகானேரில் அமைந்துள்ளது. இது 25 ஆண்டுகளுக்கு சோலார் எனர்ஜி கார்ப்பரேஷன் ஆப் இந்தியாவுக்கு (SECI) அதன் மின்சாரத்தை வழங்கும்.

---

**8. அண்மையில் அமைக்கப்பட்ட 'எரிசக்தி மாற்ற ஆலோச–னைக் குழுவின்' தலைவர் யார்?**



**அ) தருண் கபூர் ☑**

ஆ) ரமேஷ் சந்த்

இ) V K பால்

ஈ) அமிதாப் காந்த்

✓ மத்திய பெட்ரோலியம் & இயற்கை எரிவாயு அமைச்சகம் முன்னாள் பெட்ரோலிய செயலாளர் தருண் கபூர் தலைமையில் எரிசக்தி மாற்ற ஆலோசனைக் குழுவை அமைத்துள்ளது. இந்தக்குழுவில் அனைத்து பொதுத்துறை எண்ணெய் & எரிவாயு நிறுவனங்களின் பிரதிநிதிகள் உள்ளனர்.

✓ மேலும் இது எண்ணெய் மற்றும் எரிவாயு துறைக்கான ஆற்றல் மாற்றத்திற்கான செயல் திட்டத்தை உருவாக்கும். 2070ஆம் ஆண்டிற்குள் நிகர சுழிய உமிழ்வை இந்தியா உறுதிசெய்துள்ளது. இந்தக்குழு 2022இன் நடுப்பகுதியில் மாற்றத்திற்கான ஒரு செயல்திட்டத்தை பரிந்துரைக்கும்.

---

**9. 'மாவட்ட அளவிலான நல்லாட்சிக் குறியீடு' கொண்ட முதல் மாநிலம்/யூனியன் பிரதேசம் எது?**




அ) மிசோரம்

ஆ) புதுச்சேரி

இ) திரிபுரா

**ஈ) ஜம்மு & காஷ்மீர் ☑**

✓ ஜம்மு மற்றும் காஷ்மீர் 'மாவட்ட அளவிலான நல்லாட்சிக் குறியீட்டைக்'கொண்ட முதல் யூனியன் பிரதேசமாக மாற உள்ளது. நிர்வாக சீர்திருத்தங்கள் மற்றும் பொதுமக்கள் குறைதீர்க்கும் துறையானது ஜம்மு & காஷ்மீர் அரசுடன் இணைந்து இந்தப் பணியை மேற்கொள்ளும்.

✓ உழவு, வணிகம் மற்றும் தொழிற்துறை, பொதுப்பாதுகாப்பு, பொது சுகாதாரம் போன்ற வளர்ச்சி மற்றும் மாவட்ட நிர்வாகத்தின் பல்வேறு அம்சங்களை மதிப்பிடுவதற்கான 58 குறிகாட்டிகள் இந்தக் கட்டமைப்பில் இருக்கும்.

---

**10. சமூக சீர்திருத்தவாதியான சாவித்ரிபாய் பூலே, இந்தியாவின் முதல் பெண்கள் பள்ளியை எம்மாநிலத்தில் நிறுவினார்?**



அ) தமிழ்நாடு

**ஆ) மகாராஷ்டிரா ☑**

இ) மத்திய பிரதேசம்

ஈ) கேரளா

✓ சமூக சீர்திருத்தவாதி சாவித்ரிபாய் பூலே 1831 ஜனவரி.3 அன்று மகாராஷ்டிராவில் பிறந்தார். இவரது பிறந்தநாள் நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது. 1848ஆம் ஆண்டில் சாவித்ரிபாய் தனது கணவர் ஜோதிராவ் பூலேவுடன் இணைந்து மகாராஷ்டிராவின் புனேவில் இந்தியாவின் முதல் பெண்கள் பள்ளிகளுள் ஒன்றை நிறுவினார்.

✓ ஆசிரியையான முதல் இந்தியர் என்ற பெருமையையும் அவர் பெற்றார். அவர் கைம்பெண்களுக்கான தங்குமிடம் மற்றும் சிசுக்கொலை தடுப்பு இல்லத்தையும் திறந்து வைத்தார். சிறார் திருமணம் மற்றும் சதி முறையை அவர் கடுமையாக எதிர்த்தார்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. 12-01-2021 – அயலகத் தமிழர் நாள்**

---

**2. தமிழகத்தில் புதிதாக 11 மருத்துவக் கல்லூரிகள்: பிரதமர் மோடி காணொலியில் இன்று திறந்து வைக்கிறார்**

தமிழகத்தில் 11 புதிய மருத்துவக் கல்லூரிகளை பிரதமர் மோடி இன்று காணொலி மூலம் திறந்துவைக்கிறார். இதில் முதல்வர் மு.க.ஸ்டாலின், மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் மன்சுக் மாண்ட்வியா, தமிழக சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் அதிகாரிகள் பங்கேற்கின்றனர்.

தமிழகத்தில் திருவள்ளூர், அரியலூர், கள்ளக்குறிச்சி, திருப்பூர், நீலகிரி, நாகப்பட்டினம், நாமக்கல், கிருஷ்ணகிரி, திண்டுக்கல், ராமநாதபுரம், விருதுநகர் ஆகிய 11 மாவட்டங்களில் ரூ.4 ஆயிரம் கோடியில் புதிய மருத்துவக் கல்லூரிகள் கட்டப்பட்டுள்ளன.

இவற்றை இன்று (ஜன.12) பிரதமர் நரேந்திர மோடி நேரடியாக தமிழகத்துக்கு வந்து திறந்து வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஆனால் கரோனா தொற்று பரவல் அதிகரித்ததால் பிரதமர் வருகை ரத்து செய்யப்பட்டது.

இந்நிலையில் பிரதமர் அலுவலகம் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் பிரதமர் மோடி இன்று(ஜன.12) மாலை 4 மணிக்கு தமிழகத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள 11 மருத்துவக் கல்லூரிகளை டெல்லியில் இருந்தபடி காணொலி மூலம்திறந்து வைக்கவுள்ளதாக கூறப்பட்டிருந்தது.

இதன்படி இன்று நடக்கும் இந்நிகழ்வில், முதல்வர் ஸ்டாலின், மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் மன்சுக் மாண்ட்வியா, மாநில சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் அதிகாரிகள் காணொலிக்

காட்சி மூலம் பங்கேற்கின்றனர். மேலும் அந்தந்த மாவட்டங்களைச் சேர்ந்த உள்ளூர் அமைச்சர்கள், எம்பி, எம்எல்ஏக்கள், ஆட்சியர்கள் உட்பட உயர் அதிகாரிகளும் விழாவில் கலந்துகொள்கின்றனர். இந்த 11 புதிய மருத்துவக் கல்லூரிகள் மூலம் தமிழகத்துக்குக் கூடுதலாக 1,450 மாணவர் சேர்க்கைக்கான இடங்கள் கிடைக்க வாய்ப்புள்ளது.

தமிழாய்வு நிறுவனம்

இதேபோல் சென்னை பெரும்பாக்கத்தில் ரூ.24.65 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள மத்திய செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்தின் புதிய கட்டிடத்தையும் பிரதமர் மோடி காணொலி காட்சி மூலமாக இன்று திறக்கவுள்ளார்.

---

**3. தேசிய இளையோர் விழா; பிரதமர் நரேந்திர மோடி காணொலியில் இன்று தொடங்கி வைக்கிறார்:**

புதுச்சேரியில் நடப்பதாக இருந்த தேசிய இளையோர் விழாவை, கரோனா பரவலால் காணொலியில் இன்று பிரதமர் மோடி தொடங்கி வைக்கிறார். அத்துடன் ₹23 கோடியில் புதுச்சேரியில் அமைக்கப்பட்டுள்ள காமராஜர் மணிமண்டபத்தையும் பிரதமர் திறந்து வைக்கிறார்.

நாட்டின் 75ஆவது சுதந்திர தின ஆண்டு மற்றும் சுவாமி விவேகானந்தர் பிறந்தநாளையொட்டி 25ஆவது தேசிய இளையோர் விழா, அரவிந்தரின் 150ஆவது பிறந்தநாள் விழா புதுவையில் கொண்டாடப்படுகிறது.

---

**4. மனிதருக்கு பொருத்தப்பட்ட பன்றியின் இதயம்: மருத்துவ உலகில் புதிய சாதனை**

மரபணு மாற்றப்பட்ட பன்றியின் இதயத்தை மாற்று அறுவை சிகிச்சையின்மூலம் மனிதருக்கு பொருத்தப்பட்ட புதிய மருத்துவ சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்த டேவிட் பென்னட் என்பவருக்கு மரபணு மாற்றம் செய்யப்பட்ட பன்றியின் இதயத்தை பொருத்தி மேரிலாண்ட் பல்கலைக்கழக மருத்துவர்கள் இந்தச் சாதனை புரிந்துள்ளனர்.

---

**5. இனி சீனாவின் விவோ இல்லை: ஐபிஎல் ஸ்பான்ஸராக டாடா குழுமத்துடன் பிசிசிஐ ஒப்பந்தம்**

ஐபிஎல் டி20 தொடரின் டைட்டில் ஸ்பான்ஸராக சீனாவின் விவோ நிறுவனத்துக்குப் பதிலாக டாடா குழுமம் அடுத்த இரு ஆண்டுகளுக்கு உரிமத்தைப் பெற்றுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நடப்பு 2022 சீசன் மற்றும் 2023ஆம் ஆண்டு சீசனுக்கும் டைட்டில் ஸ்பான்ஸராக டாடா குழுமம் தேர்ந்தெடுக்கப்பட்–டுள்ளதாக IPL நிர்வாகிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டாடா குழுமத்துக்கு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பல்வேறு நிறுவனங்கள் செயல்பட்டு வரும் நிலையில், இந்த ஒப்பந்தத்தை பிசிசிஐ மற்றும் ஐபிஎல் நிர்வாகக் குழு நேற்று வழங்கியுள்ளது.

---

**6. சரிவிலிருந்து மீளும் இந்திய பொருளாதாரம்: ஏற்றுமதி, வேலை வாய்ப்பு, டிஜிட்டல் பரிவர்த்தனை அதிகரிப்பு**

கரோனா தொற்றினால் ஏற்பட்டபாதிப்பிலிருந்து பொருளாதாரத்தை காக்கும் வகையில் நடப்பு நிதி ஆண்டில் இந்தியாவின் ஏற்றுமதி அதிகரித்துள்ளது.

நடப்பு நிதி ஆண்டில் (2021–22) முதல் 9 மாதங்களில் இந்தியாவின் ஏற்றுமதி வர்த்தகம் 30 ஆயிரம் கோடி டாலரை எட்டியுள்ளது. இது முந்தைய ஆண்டு இதே காலத்தில் எட்டியதைவிட 22 சதவீதம் அதிகமாகும். நவம்பர் மாதத்தில் ஏற்றுமதி வர்த்தகம் குறைந்தபோதிலும் ஒட்டுமொத்தமாக ஏற்றுமதி அதிகரித்துள்ளது. நடப்பு நிதி ஆண்டில் 40,000 கோடி டாலர் என ஏற்றுமதி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அந்த இலக்கை எளிதில் எட்டிவிட முடியும் என்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

2020–21ஆம் நிதிஆண்டில் இந்தியாவின் ஏற்றுமதி வர்த்தகம் $35,400 கோடியாகும். முந்தைய நிதியாண்–டைவிட 5,700 கோடி டாலர் கூடுதலாக வர்த்தகமானது. இறக்குமதி 51,300 கோடி டாலராக இருந்தது.

நடப்பாண்டில் அமெரிக்காவுக்கான வர்த்தகம் அதிகரித்து உள்ளது. 5,870 கோடி டாலர் அளவுக்கு ஏற்றுமதியாகி உள்ளது. இதற்கு அடுத்தபடியாக சீனாவுக்கான ஏற்றுமதி வர்த்தகம் 42% அதிகரித்துள்ளது. இந்தியா அதிக அளவில் ஏற்றுமதி செய்யும் நாடுகளில் முதல் ஐந்து நாடுகளின் பட்டியலில் வங்கதேசமும் இடம்பெற்றுள்ளது. வங்கதேசத்துக்கான இந்திய ஏற்றுமதி 67% அதிகரித்து உள்ளது.

இந்தியாவின் ஏற்றுமதி அதிகரித்துள்ளதற்கு பல நாடுகளுடன் தாராள வர்த்தக ஒப்பந்தம் (எஃப்டிஏ) போடப்பட்டதும் முக்கிய காரணமாகும். இந்தியா முதலில் தாராள வர்த்தக ஒப்பந்தம் ஐக்கிய அரபு அமீரகத்துடன்தான் போட்டது. ஆனால் இந்தியாவின் கச்சா எண்ணெய் இறக்குமதி குறைந்ததைத் தொடர்ந்து அமீரகத்துடனான வர்த்தக அளவு கடந்த சில ஆண்டுகளாக குறைந்துவிட்டது. இங்கிலாந்துடன் தாராள வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்வது தொடர்பான பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. ஐரோப்பிய யூனியன் கூட்டமைப்பிலிருந்து இங்கிலாந்து வெளியேறியதால் ஏற்பட்டுள்ள வர்த்தக பாதிப்பைஈடுகட்டுவதற்காக இங்கிலாந்துடன் தாராள வர்த்தக ஒப்பந்தம் குறித்த பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்படுகிறது. ஐரோப்பிய யூனியன், ஆஸ்திரேலியா, கனடா, இஸ்ரேல் ஆகிய நாடுகளுடன் வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

டிசம்பர் மாதத்தில் மட்டும் 3,700 கோடி அளவுக்கு ஏற்றுமதி வர்த்தகம் நடைபெற்றுள்ளதாக மத்திய வர்த்தக அமைச்சர் பியுஷ் கோயல் தெரிவித்துள்ளார். முந்தைய ஆண்டு இதே காலத்தில் எட்டப்பட்ட ஏற்றுமதி அளவைக் காட்டிலும் 37 சதவீதம் அதிகமாகும்.

நடப்பு நிதி ஆண்டு முடிவடைய 3 மாதங்கள் உள்ள நிலையில் இத்தகைய ஏற்றுமதி வருமானத்தை இந்தியா இதுவரை எட்டியது இல்லை.

**மின்னுற்பத்தி**

2015–ம் ஆண்டில் பாரீஸில் நடைபெற்ற மாநாட்டில் மரபு சாரா எரிசக்தி இலக்கை எட்ட இந்தியா கையெழுத்திட்டது. இதன்படி 2030–ம் ஆண்டு எட்ட வேண்டிய இலக்கு 8 ஆண்டுகளுக்கு முன்ன தாகவே 2021–ம் ஆண்டிலேயே இந்தியா எட்டிவிட்டது குறிப்பிடத் தக்க சாதனையாகும். 40 சதவீதமின்னுற்பத்தியை மரபுசாரா மின்னுற்பத்தி மூலம் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. காற்றாலை, சூரிய மின்னுற்பத்தி மற்றும் அணு மின்னுற்பத்தி மூலம் இதை எட்ட முடிவு செய்யப்பட்டது.

இந்தியாவின் மொத்த மின்னுற் பத்தி 392 கிகாவாட் ஆகும். மரபுசாரா உற்பத்தி மூலமாக உற்பத்தி செய்ய வேண்டிய மின்னுற்பத்தி 157 கிகாவாட்டாகும். அரசு தனியார் பங்கேற்பு மூலம் இந்த இலக்கை எட்டப்பட்டுள்ளது. மரபு சாரா எரிசக்தித் துறையில் மேற்கொள்ளப்பட்ட அந்நிய முதலீடு (2014–19) 6,400 கோடி டாலராகும்.

**வேலைவாய்ப்பு**

ஐஐடி உள்ளிட்ட முன்னணி கல்வி நிறுவனங்களில் அதிக அளவில் அதிக சம்பளத்துக்கு இந்திய மாணவர்கள் முன்னணி நிறுவனங்களால் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். மும்பை ஐஐடி–யில் மட்டும் 1,400 மாணவர் களுக்கு வளாகத் தேர்வில் வேலை கிடைத்துள்ளது. ஐஐடி–டெல்லி கல்வி மையத்தில் 1,250 மாணவர்களுக்கு வேலை கிடைத்துள்ளது.

இதேபோல சென்னை ஐஐடி–யில் கடந்த ஆண்டை விட 73 சதவீதம் கூடுதலான எண்ணிக்கையில் மாணவர்களுக்கு வேலை கிடைத் துள்ளது. அத்துடன் ஊதியமும் கடந்த ஆண்டை விட 20 சதவீதம் முதல் 40 சதவீதம் வரை அதிகமாகும்.

கரோனா காலகட்டத்தில் வேலையிழந்தவர்களில் 60 சதவீதம் பேருக்கு மீண்டும் வேலை கிடைத்துள்ளது. தொழில்நுட்பப் பொறியாளர்களுக்கான தேவையும் அதிகரித்துள்ளது.

**டிஜிட்டல் பரிவர்த்தனை**

இந்தியாவின் டிஜிட்டல் மூலமான வர்த்தக பரிவர்த்தனை கடந்த ஆண்டில் அதிகரித்துள்ளது. 30,000 கோடி டாலர் அளவுக்கு வர்த்தக பரிவர்த்தனை நடைபெற் றுள்ளது. இது சீனாவை விட 60 சதவீதம் அதிகமாகும்.

**1. சிறார் திருமணத் தடை (திருத்தம்) மசோதாவை ஆராய அமைக்கப்பட்ட நாடாளுமன்றக் குழுவில் எத்தனை பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்?**

**அ) 01 ☑**

ஆ) 02

இ) 03

ஈ) 04

✓ சிறார் திருமணத் தடை (திருத்தம்) மசோதாவை ஆய்வு செய்ய நியமிக்கப்பட்ட 31 பேர்கொண்ட நாடாளுமன்றக் குழுவில் திரிணாமுல் காங்கிரஸ் எம்பி சுஷ்மிதா தேவ் மட்டுமே பெண்மணியாவார்.

✓ பெண்களுக்கான சட்டப்பூர்வ திருமண வயதை 21ஆக உயர்த்த இம்மசோதா எண்ணுகிறது. தற்போது, ஆண்க–ளுக்கான குறைந்தபட்ச திருமண வயது 21ஆகவும், பெண்களுக்கு குறைந்தபட்ச திருமண வயது 18ஆகவும் உள்ளது. பெண்களின் திருமண வயதை உயர்த்தும் திட்டம் ஜெயா ஜெட்லி தலைமையிலான NITI ஆயோக் பணிக்குழுவால் பரிந்துரைக்கப்பட்டது.

---

**2. எந்த நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்கள், '5ஆம் தலைமுறை நுண்ணலை ஈர்ப்பிகளை' உருவாக்கியுள்ளனர்?**

அ) ஐஐடி மெட்ராஸ்

ஆ) ஐஐடி பாம்பே

**இ) கேரள பல்கலைக்கழகம் ☑**

ஈ) IISc, பெங்களூரு

✓ கேரள பல்கலையின் இயற்பியல் துறை பேராசிரியர்களு–ம் ஆராய்ச்சி அறிஞர்களும் ஐந்தாம் தலைமுறை நுண் அலை ஈர்ப்பிகளை உருவாக்கியுள்ளனர். இது மின்காந்த கதிர்வீச்சுக்கு எதிராக ஒரு பயனுள்ள கவசமாக பயன்படுகிறது. மின்காந்த குறுக்கீடு உயிரினங்களின் நலத்திற்கு தீங்கானது என அறியப்படுகிறது.

✓ இது உயர்தர மின்னணு சாதனங்களையும் பாதிக்கிறது. அதிக அதிர்வெண் உள்ள இடத்தில் நுண்ணலையை ஈர்க்க அவர்கள் 'மேயனைட் எலெக்ட்ரைடு' என்ற புதிய கவசப்பொருளைப் பயன்படுத்தினர்.

---

**3. சிறப்புப் பாதுகாப்புக் குழுச் சட்டம், 1988 ஆனது எதற்கு/யாருக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக இயற்றப்பட்டது?**

அ) அணுமின் நிலையங்கள்

**ஆ) பிரதமர் மற்றும் முன்னாள் பிரதமர்கள் ☑**

இ) இந்தியாவின் நில எல்லைகள்

ஈ) இந்தியாவின் நீர் எல்லைகள்

✓ முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் படுகொலைக்குப் பிறகு சிறப்புப் பாதுகாப்புக் குழு சட்டம், 1988 நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இது இந்தியப் பிரதமர் மற்றும் இந்தியாவின் முன்னாள் பிரதமர்கள் மற்றும் அவர்களது நெருங்கிய குடும்ப உறுப்பினர்களுக்–கு பாதுகாப்பை வழங்குவதற்காக ஒன்றியத்தின் ஆயுதப் படையை ஒழுங்குபடுத்துவதை நோக்கமாகக் கொண்டது.

✓ முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்ட பின்னர், அனைத்து முன்னாள் பிரதமர்கள் மற்றும் அவர்களது நெருங்கிய குடும்பத்தினருக்கும் இது மேலும் விரிவுபடுத்தப்பட்டது.

---

**4. 'அபிலிம்பிக்ஸ்' என்பது எந்தத் துறைசார்ந்த மாற்றுத் திறனாளிகளுக்காக நடத்தப்படும் போட்டிகளாகும்?**

அ) விளையாட்டு

ஆ) குறியீட்டு முறை

**இ) திறன் செயல் விளக்கம் ☑**

ஈ) வியாபார நிர்வாகம்

✓ தேசிய திறன் மேம்பாட்டுக் கழகத்தின் (NSDC) மூலம் இந்தியத் திறன்கள்–2021'க்கான தேசிய போட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. திறன் மேம்பாடு & தொழில்முனைவு அமைச்சகத்தின்கீழ் பணிபுரியும் திறன் மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டுக்கான மைய முகமை NSDC ஆகும்.

✓ இதில் மாற்றுத்திறனாளிகளின் திறன் செயல்விளக்கமான 'அபிலிம்பிக்ஸ்' இடம்பெற்றது. இந்தியத் திறன்கள் – 2021 ஆனது யோகா, ஷூ தயாரித்தல் (தோல்) மற்றும் ஆடை தயாரித்தல் (தோல் ஆகிய மூன்று புதிய திறன்களை அறிமுகப்படுத்தியது.

---

**5. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'ஹைதராபாத் அறிவிப்பு'டன் தொடர்புடையது எது?**

அ) பருவநிலை மாற்றம்



**ஆ) மின்னாளுகை ☑**

இ) பெண்கள் அதிகாரமளித்தல்

ஈ) COVID–19 நெறிமுறை

✓ நிர்வாக சீர்திருத்தங்கள் மற்றும் பொது குறைகள் துறை, பணியாளர், பொதுமக்கள் குறைதீர் மற்றும் ஓய்வூதிய அமைச்சகம் மற்றும் மின்னணு & தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் ஆகியவை தெலுங்கானா அரசாங்கத்துடன் இணைந்து ஹைதராபாத்தில் 24ஆவது தேசிய மின் – ஆளுகை மாநாட்டை ஏற்பாடு செய்தன.

✓ "India's Techade: Digital Governance in a Post Pandemic World" என்பது இந்த மாநாட்டின் கருப்பொருளாகும்.

---

**6. சஞ்சை ஏரி என்பது எம்மாநிலம்/யூடியில் அமைந்துள்ள ஓர் ஈரநிலமாகும்?**

அ) கர்நாடகா



**ஆ) புது தில்லி ☑**

இ) ஹிமாச்சல பிரதேசம்

ஈ) ஆந்திரப் பிரதேசம்

✓ ஹஸ்தினாபூர் வனவுயிரி சரணாலயம், கிரேட்டர் நொய்டாவில் உள்ள தனௌரி மற்றும் சூரஜ்பூர் சதுப்பு நிலங்கள், தில்லி உயிரியல் பூங்கா மற்றும் சஞ்சை ஏரி, ஒக்லா பறவைகள் சரணாலயம், நஜப்கர் ஜீல் மற்றும் யமுனா ஆறு ஆகிய ஏழு ஈரநிலங்களில் ஆசிய நீர்ப் பறவைகள் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படுகிறது.

✓ இந்தக் கணக்கெடுப்பில் சஞ்சை ஏரியில் 13 இனங்கள் மட்டுமே பதிவுசெய்யப்பட்டுள்ளன. கடந்த 2019 – 2021 வரையிலும் மொத்தம் 17 இனங்கள் இருந்தன.

---

**7.** 'சீ டிராகன் 22' ராணுவப் பயிற்சியில் எந்த நாடுகளின் குழுமம் பங்கேற்கிறது?

**அ) இந்தோ–பசிபிக் நாடுகள் ☑**




ஆ) QUAD குழுமம்

இ) இந்தியப் பெருங்கடல் நாடுகள்

ஈ) பால்கன் நாடுகள்

✓ இந்தியா, ஆஸ்திரேலியா, கனடா, ஜப்பான் மற்றும் தென் கொரிய கடற்படைகளுடன் இணைந்து 'சீ டிராகன் 22' பயிற்சி தொடங்கியதாக அமெரிக்க கடற்படை அறிவித்து உள்ளது. இது ஆறு இந்தோ–பசிபிக் நாடுகள் பங்கேற்கும் பசிபிக் பெருங்கடலில் நடக்கும் ஒரு பலதரப்பட்ட நீர்மூழ்கி எதிர்ப்பு போர்ப்பயிற்சியாகும்.

✓ இந்தியா, ஜப்பான், ஆஸ்திரேலியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் 'QUAD' குழுவில் அங்கம் வகிக்கின்றன. அவை மலபார் பயிற்சியில் பங்கேற்கின்றன.

---

**8.** **எந்த மாநிலம்/யூனியன் பிரதேசத்தின் பௌத்த சமூகம் லோசர் பண்டிகையை பாரம்பரிய புத்தாண்டு நாளாகக் கொண்டாடுகிறது?**

**அ) லடாக் ☑**



ஆ) சிக்கிம்

இ) உத்தரகாண்ட்

ஈ) அருணாச்சல பிரதேசம்

✓ லடாக், பாரம்பரிய புத்தாண்டான லோசரைக் கொண்டாடுகிறது. லோசர் பண்டிகையை இப்பகுதியில் உள்ள பௌத்த சமூகத்தினர் கொண்டாடி வருகின்றனர்.

✓ ஜெ சோங்காபாவின் பிறப்பு மற்றும் முக்தி ஆண்டுவிழா ஆகியவற்றுடன் இந்தத்திருவிழா தொடங்கியது. மடங்கள், தூபிகள் மற்றும் பிற இடங்களில் மக்கள் திருவிழாவைக் கொண்டாடினர். திபெத்திய பௌத்தத்தில் பிப்ரவரி / மார்ச் மாதத்தில் திருவிழா கொண்டாடப்படுகிறது.

---

**9.**வரலாற்றுரீதியாக இந்தியாவின் ஒருபகுதியாக இருந்த குர்னாக் கோட்டை, தற்போது எந்நாட்டின் கட்டுப்பாட்டில் உள்ளது?

அ) பாகிஸ்தான்



**ஆ) சீனா ☑**

இ) பங்களாதேஷ்

ஈ) ஆப்கானிஸ்தான்

✓ வரலாற்று ரீதியாக இந்தியாவின் ஒருபகுதியாக இருந்த குர்னாக் கோட்டை, 1958 முதல் சீனாவின் கட்டுப்பாட்டில் உள்ளது. கோட்டைக்கு அருகில், சீனா புதிய பாலத்தை கட்டிவருகிறது. கிழக்கு லடாக்கில் உள்ள மெய்யான கட்டுப்பாட்டுக் கோட்டுக்கு அருகே பாங்கோங் டிசோவில் இப்பாலம் கட்டப்பட்டு வருகிறது.

---

**10.** **அணுவாயுதப் போரைத் தவிர்க்கும் நோக்கில் சமீபத்தில் அறிக்கையொன்றை வெளியிட்ட உலகளாவிய சங்கம் / அமைப்பு எது?**

**அ) UNSC ☑**



ஆ) BRICS

இ) G20

ஈ) G7

✓ ஐநா பாதுகாப்பு அவையின் நிரந்தர உறுப்புநாடுகளான ரஷ்யா, பிரிட்டன், சீனா, அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் சமீபத்தில் ஓரறிக்கையை வெளியிட்டன.

✓ அணுவாயுதங்கள் மேலும் பரவுவதையும், அணுவாயுதப் போரையும் தவிர்க்க வேண்டும் என நாடுகள் கருதுகின் –றன. அணுசக்தி நாடுகளுக்கு இடையிலான போரைத் தவிர்க்கவும் உத்திசார் இடர்களைக் குறைக்கவும் இந்த அறிக்கை எண்ணுகிறது. அணுவாயுதங்களை "முதலில் பயன்படுத்தக்கூடாது" என்ற கொள்கையை சீன நாடு கொண்டுள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. இஸ்ரோவின் புதிய தலைவராக சோமநாத் நியமனம்**

இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையமான இஸ்ரோவின் புதிய தலைவராக சோமநாத் நியமிக்கப்பட்டுள்ளார்.

இஸ்ரோவின் தற்போதைய தலைவராக இருக்கும் K சிவனின் பதவிக்காலம் முடிவடைவதைத் தொடர்ந்து புதிய தலைவருக்கான ஆலோசனை நடைபெற்று வந்த நிலையில் சோமநாத் தேர்ந்தெடுக்கப்படுவதாகவும் அடுத்த 3 ஆண்டுகள் இப்பதவியில் நீடிப்பார் என்றும் மத்திய அரசு அறிவித்துள்ளது.

கேரளத்தைச் சேர்ந்த சோமநாத் விக்ரம் சாராபாய் விண்வெளி மைய இயக்குநராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

---

**2. தமிழக மருத்துவக் கட்டமைப்புக்கு ₹3,000 கோடி**

தமிழகத்தின் மருத்துவக் கட்டமைப்பை மேம்படுத்த அடுத்த ஐந்து ஆண்டுகளில் ₹3,000 கோடி நிதியுதவி வழங்க உள்ளதாக பிரதமர் நரேந்திர மோடி அறிவித்தார்.

விருதுநகர், கள்ளக்குறிச்சி, நீலகிரி, ரமநாதபுரம், நாமக்கல், திருப்பூர், திருவள்ளூர், கிருஷ்ணகிரி, திண்டுக்கல், அரியலூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய 11 மாவட்டங்களில் ₹4,080 கோடி செலவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அரசு மருத்துவக் கல்லூரிகளை தில்லியிலிருந்து காணொலி முறையில் பிரதமர் மோடி தொடக்கிவைத்தார்.

அடுத்த ஐந்து ஆண்டுகளில் தமிழகத்துக்கு ரூ.3 ஆயிரம் கோடி நிதியுதவியை மத்திய அரசு வழங்கவிருக்கிறது. நகர்ப்புற மருத்துவக் கட்டமைப்பு, மாவட்ட பொது சுகாதார ஆய்வகங்கள், தீவிர சிகிச்சைப் பிரிவுகள் போன்றவற்றை அமைப்பதற்கு இது பேருதவியாக அமையும் என பிரதமர் அப்போது தெரிவித்தார்.

**3. ககன்யான் திட்டம்: மகேந்திரகிரியில் கிரையோஜெனிக் எஞ்சின் பரிசோதனை வெற்றி**

மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் ககன்யான் திட்டத்துக்கான கிரையோஜெனிக் எஞ்சினை இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பு (இஸ்ரோ) வெற்றிகரமாக பரிசோதித்துள்ளது.

இதுதொடர்பாக இஸ்ரோ வெளியிட்ட செய்திக்குறிப்பு:

தமிழ்நாட்டின் திருநெல்வேலி மாவட்டம் மகேந்திரகிரியில் உள்ள இஸ்ரோ வளாகத்தில் ககன்யான் திட்டத்துக்கான கிரையோஜெனிக் எஞ்சின் பரிசோதிக்கப்பட்டது. இந்தப் பரிசோதனையில் அனைத்து அம்சங்களையும் எஞ்சினின் செயல்திறன் பூர்த்தி செய்தது.

இப்பரிசோதனை வெற்றிபெற்றது ககன்யான் திட்டத்தில் முக்கிய மைல்கல்லாகும். அத்திட்டத்தின்படி, மனிதரை விண்வெளிக்கு சுமந்து செல்லும் விண்கலத்தில் இந்த எஞ்சினை இணைப்பதற்கான நம்பகத்தன்மை பரிசோதனைமூலம் உறுதியாகியுள்ளது.

இந்த எஞ்சின் மேலும் நான்கு பரிசோதனைகளுக்கு உள்படுத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2023–ஆம் ஆண்டு ககன்யான் திட்டம் செயல்படுத்தப்படும் என்று கடந்த ஆண்டு மத்திய அரசு தெரிவித்தது. அமெரிக்கா, ரஷியா, சீனாவைத் தொடர்ந்து 4ஆவது நாடாக இத்திட்டத்தை இந்தியா செயல்படுத்த உள்ளது.

---

**4. பிரதமர் மோடியின் பாதுகாப்புக்கு குறைபாடு ஏற்பட்ட விவகாரம்: ஓய்வுபெற்ற நீதிபதி இந்து மல்கோத்ரா தலைமையிலான குழு விசாரணை: உச்சநீதிமன்றம்**

பஞ்சாப் மாநிலம் பெரோஸ்பூரில் பிரதமர் நரேந்திர மோடியின் பாதுகாப்புக்கு குறைபாடு ஏற்பட்ட விவகாரத்தில் ஓய்வு பெற்ற நீதிபதி இந்து மல்கோத்ரா தலைமையிலான குழு விசாரிக்கும் என உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

பஞ்சாப் மாநிலத்தில் பல்வேறு நலத்திட்டங்களை தொடங்கி வைப்பதற்காக கடந்த ஐந்தாம் தேதி பிரதமர் மோடி விமானம் மூலம் பஞ்சாப் சென்றார். மோசமான வானிலை காரணமாக நிகழ்ச்சி நடைபெறும் இடத்துக்கு காரில் செல்ல முடிவு செய்யப்பட்டது. ஆனால், விவசாயிகள் போராட்டம் காரணமாக அவரது வாகன அணி வகுப்பு மேம்பாலத்தில் 15 நிமிடத்துக்கும் மேலாக நின்றது. போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படாததால் தனது பயணத்தை பிரதமர் மோடி ரத்து செய்து பிரதமர் பாதி வழியிலேயே டெல்லி திரும்பினார். பிரதமரின் பாதுகாப்பில் மாநில அரசு அலட்சியமாக செயல்பட்டதாகவும், பிரதமர் மோடியின் உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாகவும் பாஜகவினர் புகார் தெரிவித்து வருகின்றனர்.

இந்த விவகாரத்தில் மத்திய மற்றும் பஞ்சாப் அரசுகள் தனித்தனியாக விசாரணைக் குழு அமைத்தன. அதேநேரம் என்ஜிஓ வழக்கறிஞர் இந்த விவகாரத்தை உச்ச நீதிமன்றம் கொண்டுச் செல்ல கடந்த வெள்ளிக்கிழமை உச்ச நீதிமன்ற நீதிபதிகள் சூர்ய காந்த், ஹிமா கோலி ஆகியோர் அமர்வு விசாரித்தது.

மத்திய மற்றும் மாநில அரசுகளின் விசாரணைக் குழுக்கள் இந்த வழக்கில் விசாரணை செய்ய உச்ச நீதிமன்றம் இடைக்கால தடை விதித்தது. உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி தலைமையில் நாங்களே ஒரு விசாரணை குழுவை அமைக்கிறோம் என தெரிவித்து இருந்தது.

இந்நிலையில் பிரதமரின் பாதுகாப்பு குறைபாடு குறித்து விசாரிக்க உச்சநீதிமன்றம் அமைத்துள்ள குழுவின் தலைவராக ஓய்வுபெற்ற நீதிபதி இந்து மல்கோத்ரா செயல்படுவார் என்றும், குழுவின் உறுப்பினர்களாக பஞ்சாப் காவல்துறை தலைவர் (பாதுகாப்பு), தேசிய புலனாய்வு முகமை இயக்குநர், பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர்நீதிமன்ற பதிவாளர் ஆகியோர் இடம் பெறுவர்கள் எனவும் உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

---

**5. நாட்டின் பொருளாதார வளர்ச்சி 8.3%–ஆக இருக்கும்: உலக வங்கி கணிப்பு**

பொருளாதார நடவடிக்கைகள் முழுமையாக மீட்சி பெறாததால், ஏற்கனவே கணித்தபடி, நடப்பு நிதியாண்டில் (2021–22) இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 8.3 சதவீதமாக இருக்கும் என்று உலக வங்கி கூறியுள்ளது.

தேசிய புள்ளியியல் அலுலகம், தேசிய வருவாய் கிடைத்த விவரங்களை சமீபத்தில் வெளியிட்டது. அதில், உற்பத்தி, சுரங்கம், வேளாண்மை ஆகிய துறைகள் கரோனாவுக்குப் பிறகு மீண்டுள்ளதால், நாட்டின் பொருளாதார வளர்ச்சி 9.2 சதவீதமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், சமீபத்திய சர்வதேச பொருளாதார வாய்ப்புகள் குறித்த அறிக்கையை உலக வங்கி வெளியிட்டுள்ளது. அதில் கூறப்பட்டிருப்பதாவது:

நடப்பு நிதியாண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 8.3 சதவீதமாக இருக்கும் என்று உலக வங்கி கடந்த ஜூன் மாதம் கணித்திருந்தது. அதன் பிறகு பொருளாதார நடவடிக்கைகள் முழுமையாக மீட்சி பெறவில்லை என்பதால் பொருளாதார வளர்ச்சி குறித்த கணிப்பில் எந்த வித மாற்றமிருக்காது. அது, 8.3 சதவீதமாகவே இருக்கும்.

பல்வேறு துறைகளுக்கு வங்கிகள் கடனுதவி அளிப்பதன் மூலம் நாட்டின் பொருளாதாரம் வலுப்பட வேண்டும். நிதியுதவியைக் குறைக்கக் கூடாது.

மேலும், நாட்டின் பொருளாதார வளா்ச்சி 2022–23'இல் 8.7 சதவீதமாகவும் 2023–24'இல் 6.8 சதவீதமாகவும் இருக்கும். தனியாரின் ஒத்துழைப்புடன் முதலீடுகள் அதிகரித்திருப்பதாலும், உற்பத்திசார் ஊக்குவிப்புத் திட்டங்களாலும் பொருளாதார வளர்ச்சி பற்றிய கணிப்பு மாற்றி அமைக்கப்பட்டுள்ளது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**6. சில்லறை பணவீக்கம் 5.59%–ஆக அதிகரிப்பு**

கடந்த டிசம்பர் மாதத்தில் சில்லறை பணவீக்கம் 5.59 சதவீதமாக அதிகரித்துள்ளது மத்திய அரசின் புள்ளி விவரத்தில் தெரியவந்துள்ளது.

நுகர்வோர் விலைக் குறியீட்டை அடிப்படையாகக் கொண்டு சில்லறை பணவீக்கம் கணக்கிடப்படுகிறது.

இந்நிலையில் தேசிய புள்ளியியல் அலுவலகம் வெளியிட்டுள்ள புள்ளிவிவரத்தின்படி, கடந்த நவம்பர் மாதம் சில்லறை பணவீக்கம் 4.91 சதவீதமாக இருந்தது. இது கடந்த டிசம்பரில் 5.59 சதவீதமாக அதிகரித்துள்ளது.

கடந்த நவம்பரில் உணவுப் பொருள்களின் பணவீக்கம் 1.87 சதவீதமாக இருந்தது. இது கடந்த டிசம்பரில் 4.05 சதவீதமாக அதிகரித்தது.

உணவுப் பொருள்களின் விலைவாசி உயர்வால், கடந்த டிசம்பர் மாதம் சில்லறை பணவீக்கம் அதிகரித்துள்ளது.

ரிசர்வ் வங்கி மதிப்பீட்டின்படி நடப்பு நிதியாண்டின் நான்காவது காலாண்டில் மொத்த பணவீக்கம் உச்சத்தை எட்டி, பின்னர் படிப்படியாக குறையும் என எதிர்பார்க்கப்ப –டுகிறது.

---

**7. க. திருநாவுக்கரசுக்கு பெரியார் விருது, கே சந்துருவுக்கு அம்பேத்கர் விருது**

தமிழக அரசின் 2021–ஆம் ஆண்டுக்கான பெரியார் விருது திராவிட இயக்க ஆய்வாளர் க திருநாவுக்கரசுக்கும், அம்பேத்கர் விருது ஓய்வுபெற்ற நீதிபதி கே சந்துருவுக்கும் வழங்க முதல்வர் மு க ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பது:

தமிழக அரசு ஒவ்வோர் ஆண்டும், சமூகநீதிக்காகப் பாடுபடுபவர்களைச் சிறப்பு செய்யும் வகையில், சமூக நீதிக்கான பெரியார் விருதினை வழங்கி கௌரவித்து வருகிறது.

அவ்வகையில், 2021ஆம் ஆண்டுக்கான பெரியார் விருது திராவிட இயக்க ஆய்வாளரும், எழுத்தாளருமான க திருநாவுக்கரசுக்கு வழங்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் முன்னேற்றத்துக்காக பாடுபட்டுவரும் தமிழகத்தைச் சேர்ந்தவர்களை ஊக்குவிக்கும் வகையில் ஆண்டுதோறும் டாக்டர் அம்பேத்கர் விருது வழங்கப்பட்டு வருகிறது. அந்தவகையில், 2021ஆம் ஆண்டுக்கான Dr அம்பேத்கர் விருது சென்னை உயர்நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதி கே சந்துருவுக்கு வழங்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

விருது தொகை உயர்வு: விருது பெற்றோருக்கு விருது தொகையாக தற்போது வழங்கப்பட்டு வரும் ₹1 இலட்சம் என்பதை ₹5 இலட்சமாக உயர்த்தி வழங்க முதல்வர் ஆணையிட்டுள்ளார். விருதுத் தொகையுடன், தங்கப் பதக்கமும் தகுதி உரையும் வழங்கப்படும்.

பெரியார் விருது பெறத் தேர்வு செய்யப்பட்டுள்ள க திருநாவுக்கரசு திராவிட இயக்கத்தின் நடமாடும் கலைக் களஞ்சியம் என தமிழ்ச் சமூகத்தால் போற்றப்படுபவர். திராவிட இயக்க வரலாறான நீதிக்கட்சி வரலாறு என்னும் நூலை, அந்த இயக்கம் 1916–இல் தொடங்கப்பட்டது முதல் 1944–இல் திராவிடர் கழகம் எனப் பெயர் மாற்றம் பெற்றது வரை இரண்டு தொகுதிகளாகப் படைத்துள்ளார். திராவிட இயக்க வேர்கள், திராவிட இயக்கத் தூண்கள் போன்ற பல்வேறு வரலாற்று நூல்களையும் எழுதி தமிழ்ச் சான்றோர்களின் பாராட்டுகளைப் பெற்றவர்.

டாக்டர் அம்பேத்கர் விருது பெறத் தேர்வு செய்யப்பட்டுள்ள சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி கே சந்துரு தன்னுடைய பணிக்காலத்தில் 96,000 வழக்குகளுக்குத் தீர்வுகண்டு சாதனை படைத்தவர்.

'அம்பேத்கர் ஒளியில் எனது தீர்ப்புகள்', 'என் வழக்கை கவனி!', 'தமிழ்நாட்டில் ஒரு பெண் நீதிமன்றத்தை அணுகும்போது' ஆகிய நூல்களை இவர் எழுதியுள்ளார்.

---

**8. 2 ஆண்டுகளில் இந்தியாவில் வனப்பரப்பு 2,261 சதுர கிமீ அதிகரிப்பு: ஆய்வறிக்கை தகவல்**

இந்தியாவில் கடந்த 2 ஆண்டுகளில் 2261 சகிமீ அளவுக்கு வனப்பரப்பு அதிகரித்துள்ளதாக, ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வனப்பரப்பு பற்றி ஆய்வை 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை இந்திய வனப்பரப்பு ஆய்வு அமைப்பு நடத்தி வருகிறது.

அந்த வகையில் 2021ஆம் ஆண்டுக்கான அறிக்கையை மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ் வெளியிட்டார். அப்போது அவர் கூறியதாவது:

கடந்த 2019ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், கடந்த இரு ஆண்டுகளில் 1540 சதுர கிமீ அளவுக்கு வனப்பரப்பும், 721 சகிமீ அளவுக்கு மரங்கள் அடந்த பகுதியும் அதிகரித்துள்ளது. இந்தியாவில் வனப்பரப்பு அதிகரித்திருப்பது திருப்திகரமாக உள்ளது.

நாட்டில் வனப்பரப்பை அதிகரிக்கச் செய்வதற்காக பல்வேறு முடிவுகளை மத்திய வனம், சுற்றுச்சூழல் துறை அமைச்சகம் எடுத்துள்ளது. அடுத்த 5 ஆண்டுகளில் வனப் பரப்பை அதிகரிக்க பசுமைத் திட்டம், நகர் வன யோஜனா ஆகிய திட்டங்களை அரசு முன்னெடுத்துள்ளது.

நாட்டின மொத்த பரப்பில் தற்போது 8.09 கோடி ஹெக்டேர் அளவுக்கு வனப்பகுதியாக உள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் 2,261 சதுர கிமீ அளவுக்கு அதிகரித்துள்ளது. அதில், ஆந்திரம் (647 சதுர கிமீ), தெலங்கானா (632 சதுர கிமீ), ஒடிஸா (537 சதுர கிமீ), கர்நாடகம் (155 சதுர கிமீ), ஜார்கண்ட் (110 சதுர கிமீ) ஆகிய மாநிலங்கள் முன்னணியில் உள்ளன.

இருப்பினும் அருணாசல பிரதேசம், மணிப்பூர் உள்ளிட்ட வடகிழக்கு மாநிலங்களில் வனப்பரப்பு 1,020 சதுர கிமீ அளவுக்கு குறைந்துள்ளது.

வனப்பகுதிகளில் கடந்த 2019 நவம்பர் முதல் 2020 ஜூன் வரையிலான காலகட்டத்தில் 1,46,920 தீ விபத்துகள் நடந்துள்ளன. இதேபோல், கடந்த 2020 நவம்பர் முதல் 2021 ஜூன் வரையிலான காலகட்டத்தில் 3,98,774 தீ விபத்துகள் நடந்துள்ளன என்று வனப்பரப்பு பற்றிய அந்த ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---


**1.** IHU (B.1.640.2) என்ற புதிய COVID திரிபு கண்டறியப்ப–ட்ட நாடு எது?

அ) அமெரிக்கா

ஆ) இந்தியா

**இ) பிரான்ஸ் ☑**

ஈ) இத்தாலி



- ✓ IHU (B.1.640.2) எனப் பெயரிடப்பட்ட புதிய COVID திரிபு பிரான்ஸில் அமைந்துள்ள IHU மெடிட்டரேனி தொற்று நிறுவனத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. புதிய மாறுபாடு ஒமிக்ரானைவிட 46 பிறழ்வுகளைக் கூடுதலாக கொண்டு உள்ளதாகக் கூறப்படுகிறது.
- ✓ இதன் முதல் பாதிப்பு ஆப்பிரிக்க நாடான கேமரூனில் இருந்து வந்த ஒருவரிடம் கண்டறியப்பட்டது. அறிவியலா–ளர்களின் கூற்றுப்படி, இப்புதிய திரிபு E484K பிறழ்வைக் கொண்டுள்ளது. அது தடுப்பூசி–எதிர்ப்புத் தன்மையைக் கொண்டுள்ளது.

---

**2.** 'KABIL' என்பது பின்வரும் எம்மத்திய அமைச்சகத்தால் உருவாக்கப்பட்ட ஒரு கூட்டு நிறுவனமாகும்?

**அ) சுரங்க அமைச்சகம் ☑**

ஆ) எஃகு அமைச்சகம்

இ) MSME அமைச்சகம்

ஈ) எரிசக்தி அமைச்சகம்

- ✓ சுரங்க அமைச்சகம் 'கனிஜ் பிதேஷ் இந்தியா (கபில்)' என்ற கூட்டு நிறுவனத்தை உருவாக்கியுள்ளது. தேசிய அலுமினிய நிறுவனம் (NALCO), ஹிந்துஸ்தான் காப்பர் (HCL) மற்றும் மினரல் எக்ஸ்ப்ளோரேஷன் கார்ப்பரேஷன் (MECL) ஆகியவற்றின் பங்கு இதில் 40:30:30 ஆகும்.
- ✓ ஆஸ்திரேலியா, அர்ஜென்டினா, பொலிவியா மற்றும் சிலி போன்ற நாடுகளில் லித்தியம் மற்றும் கோபால்ட் போன்ற முக்கிய கனிமங்களின் சுரங்கங்களைக் கையகப்படுத்தும் முயற்சியில் இந்தியா ஈடுபட்டுள்ளது.

---

**3.** எந்த மத்திய பொதுத்துறை நிறுவனத்தின் முதல் பெண் தலைவராக அல்கா மிட்டல் நியமிக்கப்பட்டுள்ளார்?

**அ) ONGC ☑**

ஆ) SAIL

இ) PFC

ஈ) NTPC



- ✓ எண்ணெய் & இயற்கை எரிவாயு கழகத்தின் (ONGC) முதல் பெண் தலைவர் மற்றும் நிர்வாக அதிகாரியாக அல்கா மிட்டல் நியமிக்கப்பட்டுள்ளார். ONGC இந்தியாவின் மிகப்பெரிய எண்ணெய் மற்றும் எரிவாயு உற்பத்தியாளர் ஆகும். இந்நியமனத்திற்கான பெட்ரோலியம் & இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் முன்மொழிவுக்கு அமைச்சர–வையின் நியமனக்குழு ஒப்புதல் அளித்துள்ளது.

---

**4.** இந்தியாவின் முதல் நடமாடும் தேன் பதப்படுத்தும் வாகனம் தொடங்கப்பட்ட மாநிலம் எது?

**அ) உத்தர பிரதேசம் ☑**

ஆ) குஜராத்

இ) கர்நாடகா

ஈ) கேரளா



- ✓ இந்தியாவின் முதல் நடமாடும் தேன் பதப்படுத்தும் வேன் உத்தர பிரதேச மாநிலம் காஜியாபாத்தில் உள்ள சிரோரா கிராமத்தில் தொடங்கப்பட்டது. இதனை KVIC'இன் தலைவர் வினய் குமார் சக்சேனா தொடங்கி வைத்தார்.
- ✓ இந்நடமாடும் வாகனம் KVICஆல் அதன் பஞ்சோகெராவில் உள்ள பல்துறை பயிற்சி மையத்தில் 15 இலட்சம் ரூபாய் செலவில் வடிவமைக்கப்பட்டது. இதால் 8 மணி நேரத்தில் 300 கிகி தேனைச் செயலாக்க முடியும். மேலும் தேனின் தரத்தை ஆராயும் ஒரு பரிசோதனை ஆய்வகத்தையும் இது தன்னகத்தே கொண்டுள்ளது.

---

**5.** 'Ecowrap' என்பது எந்த நிறுவனத்தால் வெளியிடப்பட்ட முதன்மை அறிக்கையாகும்?

அ) ஆசிய வளர்ச்சி வங்கி

ஆ) NITI ஆயோக்

இ) இந்திய ரிசர்வ் வங்கி

**ஈ) பாரத ஸ்டேட் வங்கி ☑**

- ✓ 'Ecowrap' என்பது பாரத ஸ்டேட் வங்கியின் (SBI) ஆய்வுக் குழுவால் வெளியிடப்படுகிற அறிக்கையாகும்.
- ✓ இந்த அறிக்கையின் சமீபத்திய பதிப்பின்படி, இந்தியாவின் மெய்யான GDP 2021–22'இல் 9.5 சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2021–22 நிதியாண்டிற்கான தேசிய வருமானத்தின் முதல் முன்கூட்டிய மதிப்பீடுகளை NSO வெளியிட்டது. இது 2021–22'இல் GDP வளர்ச்சியை 9.2 சதவீதமாக இருக்கும் என மதிப்பிட்டுள்ளது.

---

**6.** NPCIஇன்படி, ஒரு வாடிக்கையாளருக்கு, ஒரு நாளுக்கு ஒரு டெர்மினலுக்கு, ஆதார் அடிப்படையிலான ரொக்கம் பெறும் பரிவர்த்தனைகளின் அதிகபட்ச வரம்பு என்ன?

அ) இரண்டு

ஆ) மூன்று

**இ) ஐந்து ☑**

ஈ) ஏழு

- ✓ நேஷனல் பேமென்ட்ஸ் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா, பணம் எடுப்பதற்கும் மினி ஸ்டேட்மெண்ட்களுக்கும் அதிகபட்ச வரம்புகளை அறிமுகப்படுத்தியுள்ளது. ஒரு வாடிக்கையாளருக்கு, ஒரு நாளுக்கு, ஒரு டெர்மினலுக்கு, ஆதார் அடிப்படையிலான பணம் எடுக்கும் பரிவர்த்தனை–களின் அதிகபட்ச வரம்பை ஐந்து என அது நிர்ணயம் செய்துள்ளது. இது 2022 ஜன.15 முதல் அமலுக்கு வரும்.

---

**7. அகர்தலா மற்றும் ஜிரிபாம் இடையே தொடங்கப்பட்ட புதிய ஜன் சதாப்தி விரைவு இரயிலானது திரிபுராவை பின்வரும் எந்த மாநிலத்துடன் இணைக்கிறது?**



அ) மேற்கு வங்கம்

**ஆ) மணிப்பூர் ☑**

இ) சிக்கிம்

ஈ) அஸ்ஸாம்

✓ இரு வடகிழக்கு மாநிலங்களான திரிபுரா & மணிப்பூரை இணைக்கும் அகர்தலா மற்றும் ஜிரிபாம் இடையேயான ஜன் சதாப்தி விரைவு ரயிலை மத்திய ரயில்வே அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் கொடியசைத்து தொடங்கினார்.

✓ ஜன் சதாப்தி விரைவு இரயில் வாரத்திற்கு மூன்று முறை இயக்கப்படும். இதன் பயணம் 6 மணி நேரம். இது தவிர, திரிபுராவில் இராஜ்தானி விரைவு இரயில், கஞ்சன்ஜங்கா விரைவு இரயில், ஹம்சாபர் விரைவு இரயில் உள்ளிட்டவை ஏற்கனவே இயக்கத்தில் உள்ளன.

---

**8. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற ஒநாய் எரிமலை, எந்தத் தீவுக்கூட்டத்தின் மிகவுயரமான சிகரமாகும்?**



அ) ஹவாய் தீவுகள்

**ஆ) கலபகோஸ் தீவுகள் ☑**

இ) மரியானா தீவுகள்

ஈ) கரோலின் தீவுகள்

✓ வைட்டன் மலை என்றுமழைக்கப்படும் ஒநாய் எரிமலை, கலபகோஸ் தீவுகளின் மிக உயரமான சிகரமாகும். இது பசிபிக் பெருங்கடலில் உள்ள ஒரு எரிமலைத்தீவுக்கூட்டம் ஆகும். இந்த எரிமலை சமீபத்தில் வெடித்துச்சிதறி, பசிபிக் பெருங்கடலில் புகை மண்டலத்தை உருவாக்கியது. இந்தத்தீவுகள் ஈக்வடார் மாகாணத்தின் ஒருபகுதியாகும்.

---

**9. நந்தூர் மத்மேஷ்வர் பறவைகள் சரணாலயம் உள்ள மாநிலம்/யூனியன் பிரதேசம் எது?**



அ) தமிழ்நாடு

ஆ) கேரளா

இ) கர்நாடகா

**ஈ) மகாராஷ்டிரா ☑**

✓ நந்தூர் மத்மேஷ்வர் பறவைகள் சரணாலயம் மகாராட்டிர மாநிலம் நாசிக்கில் உள்ள நிபாத் என்ற இடத்தில் அமைந்துள்ள ஈரநிலமாகும். குளிர்காலம் தொடங்கியுள்ள நிலையில், இப்பறவைகள் சரணாலயத்தில் ஏராளமான புலம்பெயர் பறவைகள் குவிந்துள்ளன.

✓ வனத்துறையினர் கூறுகையில் பூநாரைகள், கொக்குகள், கல்பொறுக்கிகள், நீலக்குஞ்சுகள் உள்ளிட்ட முப்பது (30) ஆயிரத்துக்கும் மேற்பட்ட பறவைகள் அங்கு வந்துள்ளன. கடுமையான குளிர்காலத்திலிருந்து தற்காத்துக்கொள்வத–ற்காக சைபீரியா, ஐரோப்பாவிலிருந்து அந்தப்பறவைகள் இங்கு இடம்பெயர்கின்றன.

---

**10. 2022'இல் 25ஆவது தேசிய இளையோர் விழாவை நடத்திய மாநிலம்/யூடி எது?**



அ) தமிழ்நாடு

**ஆ) புதுச்சேரி ☑**

இ) கோவா

ஈ) கர்நாடகா

✓ புதுச்சேரி யூனியன் பிரதேச அரசு, 25ஆவது தேசிய இளையோர் விழாவை ஜன.12 அன்று நடத்தியது. சுவாமி விவேகானந்தரின் பிறந்தநாளைக் குறிக்கும் வகையில் ஜன.12 அன்று நடத்தப்பட்டது.

✓ மத்திய இளையோர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகத்துடன் இணைந்து நடத்தப்பெற்ற இந்நிகழ்வில் நாடு முழுவதிலுமிருந்து 7,000 இளைஞர்கள் பங்கேற்ற–னர். விழாவின் சின்னமான, "சக்ஷம் யுவ–ஷஷக்த் யுவா" ஆகியவற்றையும் அமைச்சர் வெளியிட்டார்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. கணிதப்பாடத்தை எளிதாகக் கற்க புதுமையான திட்டம்: 25,000 ஆசிரியர்களுக்குப் பயிற்சி**

தமிழகத்தில் அரசுப்பள்ளி மாணவர்கள் கணிதப்பாடத்தை நன்கு புரிந்துகொண்டு ஆர்வத்துடன் கற்றுக்கொள்வதற்–காக ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி (சமக்ரசிக்ஷா) சார்பில் 'மகிழ் கணிதம்' என்ற புதுமையான திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக 6ஆம் வகுப்பு முதல் பிளஸ் 2 வகுப்பு வரை கற்பிக்கும் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கணித ஆசிரியர்களுக்கு 'மகிழ் கணிதம்' தொடர்பான பயிற்சி முதற்கட்டமாக ஜனவரி 20 மற்றும் 21 ஆகிய இருநாள்கள் வழங்கப்படவுள்ளது.

**ஆட்சியர்மூலம் சான்றிதழ்:** அனைத்து கணித ஆசிரியர்க–ளும் பயிற்சியில் கலந்துகொள்வதை அந்தந்த மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் உறுதிசெய்ய அறிவுறுத்தப்–பட்டுள்ளது. பயிற்சியில் கலந்துகொள்ளும் அனைத்து ஆசிரியர்களுக்கும் பங்கேற்பு சான்றிதழ் வழங்கப்படும்.

---

**2. இங்கிலாந்தில் பென்னிகுவிக் சிலை – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு**

தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் ஆகிய ஐந்து மாவட்டங்களின் நீராதாரமாக திகழ்வது முல்லைப்பெரியாறு அணை. தமிழக–கேரள எல்லையில் அமைந்துள்ள இந்த அணை ஆங்கிலேயர்கள் ஆட்சிக் காலத்தில், இங்கிலாந்தைச் சேர்ந்த பொறியாளர் கர்னல் ஜான் பென்னிகுவிக் தனது பெரும் முயற்சியால் கட்டினார்.

பென்னிகுவிக் லண்டனில் உள்ள தனது சொத்துக்களை விற்று தென்மாவட்ட மக்களின் தாகம் தீர்க்கவும், வறண்டு கிடந்த நிலங்கள் வளம் பெறவும் இந்த அணையை கட்டினார். இதனால், 'முல்லைப்பெரியாறு அணையின் தந்தை' என பென்னிகுவிக் அழைக்கப்படுகிறார்.

தேனி மாவட்ட மக்கள் சாதி, மதம் கடந்து பென்னி குவிக்கை கடவுள்போல் வணங்கிவருகின்றனர்.

பென்னிகுவிக் பிறந்தநாளான இன்று (ஜனவரி 15) தேனி மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் 'பென்னிகுவிக்' பொங்கல் என்ற பெயரில் பொங்கல் வைத்து மக்கள் வழிபடுகின்றனர். மேலும் பென்னிகுவிக் பிறந்தநாளை அரசு விழாவாகவும் தமிழக அரசு கொண்டாடி வருகிறது.

இந்நிலையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், முல்லைப் பெரியாறு அணையைக் கட்டிய கர்னல் ஜான் பென்னி குவிக் சிலை அவரது சொந்த ஊரான இங்கிலாந்து நாட்டின் கேம்பர்லியில் நிறுவப்படும் என அறிவித்துள்ளார்.

---

### 3. திருவள்ளுவர் விருது பெங்களூர் மீனாட்சி சுந்தரத்துக்கும் காமராஜர் விருது குமரி அனந்தனுக்கும் அறிவிப்பு

2022ஆம் ஆண்டிற்கான "ஐயன் திருவள்ளுவர் விருது" பெங்களூர் மு மீனாட்சி சுந்தரம் அவர்களுக்கும், 2021ஆம் ஆண்டிற்கான "பெருந்தலைவர் காமராசர் விருது" முனைவர் குமரி அனந்தன் அவர்களுக்கும் வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் ஆணையிட்டுள்ளார்.

விருதுபெறும் விருதாளர்கள் ஒவ்வொருவருக்கும் விருதுத் தொகையாக ₹1 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை வழங்கியும் பொன்னாடை அணிவித்தும் சிறப்பிக்கப்பெறுவார்கள்.

---

### 4. ஜன.16 தேசிய ஸ்டார்ட் அப் தினம்: பிரதமர் மோடி அறிவிப்பு

ஜன.16ஆம் தேதி "தேசிய ஸ்டார்ட் அப்" தினமாக கடைபிடிக்கப்படும் என பிரதமர் மோடி அறிவித்துள்ளார். இனிவரும் காலங்களில் ஜனவரி.16 தேசிய ஸ்டார்ட் அப் தினமாக கடைபிடிக்கப்படும் என பிரதமர் கூறினார்.

---

### 5. இந்திய டெஸ்ட் அணியின் கேப்டன்சியிலிருந்தும் விலகினார் விராட் கோலி

இந்திய டெஸ்ட் அணியின் கேப்டன்சியிலிருந்தும் விராட் கோலி விலகியுள்ளார்.

டி20 உலக கோப்பையுடன் இந்திய டி20 அணியின் கேப்டன்சியிலிருந்து விலகிய விராட் கோலி, ஒருநாள் அணியிலிருந்து கேப்டன்சியிலிருந்து அதிரடியாக நீக்கப்பட்டார். டெஸ்ட் அணியின் கேப்டனாக மட்டும் நீடித்த விராட் கோலி, இப்போது டெஸ்ட் அணியின் கேப்டன்சியிலிருந்தும் விலகியுள்ளார்.

2014ஆம் ஆண்டிலிருந்து இந்திய டெஸ்ட் அணியின் கேப்டனாக இருந்துவந்த விராட் கோலியின் கேப்டன்சியில் இந்திய அணி ஆஸ்திரேலியா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் சிறப்பாக விளையாடி வெற்றிகளை குவித்தது. கோலி தலைமையிலான இந்திய அணி தான் வெளிநாடுகளில் ஆதிக்கம் செலுத்தி ஆடி வெற்றிகளை குவித்தது.

ஆஸ்திரேலிய மண்ணில் கோலி தலைமையில் முதல் முறையாக 2018–2019 சுற்றுப்பயணத்தில் டெஸ்ட் தொடரை வென்று சாதனை படைத்தது. கோலி தலைமையில் இந்திய அணி டெஸ்ட் கிரிக்கெட்டில் சிறப்பாக செயல்பட்டுவந்தது. முதல் முறையாக நடத்தப்பட்ட ஐசிசி உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் ஃபைனல் வரை சென்ற இந்திய அணி, ஃபைனலில் தோற்று கோப்பையை இழந்தது.

டெஸ்ட் அணியை சிறப்பாக வழிநடத்திவந்தார் கோலி. இந்நிலையில், தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இந்திய அணி தோற்றது. இந்த தொடரில் முதல் முறையாக தென்னாப்பிரிக்க மண்ணில் டெஸ்ட் தொடரை வெல்ல இந்திய அணிக்கு வாய்ப்பிருந்தும், அனுபவமற்ற தென்னாப்பிரிக்க அணியிடம் இந்திய அணி தோற்றது. அதற்கு மோசமான பேட்டிங் தான் காரணம்.

மேலும், தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான கடைசி டெஸ்ட்டின் 2வது இன்னிங்ஸில் ஸ்டம்ப் மைக்கில் கோலி பேசியது பெரும் சர்ச்சையை கிளப்பியதோடு, கோலி மீது கடும் விமர்சனங்களையும் எழுப்பியது.

இந்நிலையில், டெஸ்ட் அணியின் கேப்டன்சியிலிருந்தும் விலகுவதாக கோலி திடீரென அறிவித்துள்ளார். கோலியின் அறிவிப்பு ரசிகர்களுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. 2014ம் ஆண்டிலிருந்து இந்திய டெஸ்ட் அணியின் கேப்டனாக இருந்துவந்த கோலி, டெஸ்ட் கேப்டனாக சிறப்பாக செயல்பட்டு பல வெற்றிகளை பெற்றுக்கொடுத்திருக்கிறார்.

---

**1. தாயின் சான்றிதழ்களின் அடிப்படையில் சாதிச்சான்றை வழங்கும் முதல் மாநிலம்/யூனியன் பிரதேசம் எது?**

அ) தமிழ்நாடு

ஆ) கேரளா

**இ) தில்லி ☑**

ஈ) அஸ்ஸாம்



✓ தில்லியின் துணை முதல்வர் மணீஷ் சிசோடியா, தாயின் சான்றிதழ்களின் அடிப்படையில் முதல் சாதிச்சான்றிதழை வழங்கினார். இதற்குமுன்னர், SC/ST சாதிச்சான்றிதழ்கள் தந்தையின் சாதிச்சான்றுகள் (அ) தந்தைவழி சான்றுகளின் அடிப்படையில் மட்டுமே வழங்கப்பட்டன. எனவே, இது ஒரு முக்கிய நடவடிக்கையாக கருதப்படுகிறது.

---

**2. 2022ஆம் ஆண்டு நிலவரப்படி, இந்தியாவில் எத்தனை வங்கிகள் அமைப்பு ரீதியாக முக்கியமான வங்கிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன?**

அ) 2

**ஆ) 3 ☑**

இ) 4

ஈ) 5

3

✓ எஸ்பிஐ, ஐசிஐசிஐ வங்கி மற்றும் HDFC வங்கி ஆகியவை உள்நாட்டு அமைப்பு ரீதியாக முக்கியமான வங்கிகளாக தொடர்ந்து அடையாளம் காணப்படுவதாக இந்திய ரிசர்வ் வங்கி அறிவித்தது. இவ்வங்கிகள் திவாலானால் நாட்டிற்கு பேரிடர் ஏற்படும். எனவே அவை மூலதனப் பாதுகாப்பு இடையகத்துடன் கூடுதலாக பொது ஈக்விட்டி அடுக்கு–1 மூலதனத்தையும் பராமரிக்க வேண்டும்.

✓ 2021 மார்ச் 31 அன்று வங்கிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் இது அறிவிக்கப்பட்டுள்ளது.

---

**3. நலபானா பறவைகள் சரணாலயம் உள்ள மாநிலம் (அ) யூனியன் பிரதேசம் எது?**

அ) மேற்கு வங்கம்

**ஆ) ஒடிஸா ☑**

இ) கேரளா

ஈ) கர்நாடகா



✓ நலபானா பறவைகள் சரணாலயம் என்பது ஒடிஸாவின் சிலிகா ஏரி ராம்சார் ஈரநிலங்களின் மையப்பகுதியாகும். சிலிகா ஏரி இந்தியாவின் மிகப்பெரிய உவர் நீர் ஏரியாகும். சிலிகாவில் நடத்தப்பட்ட நீர்ப்பறவை நிலை கணக்கெடுப்பு – 2022'இன்படி, 107 நீர்ப்பறவை இனங்களில் மொத்தம் 10,74,173 பறவைகளும், ஈரநிலத்தைச் சார்ந்த 76 இனங்களில் 37,953 பறவைகளும் கணக்கிடப்பட்டன.

✓ நலபானா பறவைகள் சரணாலயத்தில் மொத்தம் 97 வகையான 3,58,889 பறவைகள் கணக்கிடப்பட்டன.

---

**4. சமீபத்திய செய்திகளில் இடம்பெற்ற 'Plan Bee' உடன் தொடர்புடைய மத்திய அமைச்சகம் எது?**

**அ) இரயில்வே அமைச்சகம் ☑**

ஆ) சுற்றுச்சூழல், வன அமைச்சகம்

இ) உழவு அமைச்சகம்

ஈ) MSME அமைச்சகம்



✓ 'Plan Bee' முதன்முதலில் வடகிழக்கு எல்லையோர இரயில்வேயால் யானைகளை ரயில் பாதைகளிலிருந்து விலக்கிவைக்க ஒரு தனித்துவமான முறையாக செயல்ப–டுத்தப்பட்டது. நாடு முழுவதும் 'Plan Bee' திட்டத்தை ரயில்வே அமல்படுத்தவுள்ளதாக மத்திய ரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார். தேனீக் கூட்டத்தின் சலசலப்பு ஒலியை ஒலிக்கும் ஓர் ஒலிபெருக்கி அமைப்பை இது பயன்படுத்துகிறது.

---

**5. செப்டம்பரில் நடத்தப்பட்ட முதல் சோதனைக்குப் பிறகு, அண்மையில் "ஹைப்பர்சோனிக் ஏவுகணையை" ஏவிய நாடு எது?**

அ) இஸ்ரேல்

**ஆ) வட கொரியா ☑**

இ) ஈரான்

ஈ) ஐக்கிய அரபு அமீரகம்



✓ அண்மையில் 'ஹைப்பர்சோனிக் ஏவுகணை'யை வட கொரியா பரிசோதித்தது. அந்த ஏவுகணை தன் இலக்கை வெற்றிகரமாக தாக்கியது. இச்சோதனை பிராந்தியத்தில் உள்ள பல இராணுவங்களால் கண்டறியப்பட்டது. மேலும் அமெரிக்கா, தென் கொரியா மற்றும் ஜப்பானில் இருந்து விமர்சனங்களை அது ஈர்த்தது.

✓ வடகொரியா முதன்முதலில் ஹைப்பர்சோனிக் ஏவுக–ணையை செப்டம்பரில் சோதித்தது. ஹைப்பர்சோனிக் ஆயுதங்களால் ஒலியைவிட ஐந்து மடங்கு வேகத்தில் (மணிக்கு சுமார் 6,200 கிமீ) இலக்கை அடைய முடியும்.

---

**6. 'எலக்ட்ரிக் பைக் டாக்ஸி திட்டம்' என்பது எந்த இந்திய மாநிலம் / UT'இன் முன்முயற்சியாகும்?**

அ) தமிழ்நாடு

ஆ) ஒடிஸா

**இ) கர்நாடகா ☑**

ஈ) கேரளா



✓ 6 மாதங்களுக்கு முன் கர்நாடக மாநிலத்தில், 'கர்நாடகா எலக்ட்ரிக் பைக் டாக்ஸி திட்டம்' தொடங்கப்பட்டது.

✓ பெங்களூரில் எலக்ட்ரிக் பைக் டாக்சிகளை இயக்குதற்கு தனியார் நிறுவனங்கள், தனிநபர்கள், நிறுவனங்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்களை இது அனுமதித்தது. குடிமக்கள் அதிகபட்சமாக 10 கிமீட்டர் தூரத்திற்கு இந்தச் சேவையைப்பெறலாம். ஆனால், போக்குவரத்து துறைக்கு உரிமம் கோரி, இதுவரை ஒரே ஒரு விண்ணப்பம் மட்டுமே வந்துள்ளது. பைக் டாக்ஸிக்கான கட்டணத்தை கர்நாடக அரசு இன்னும் நிர்ணயம் செய்யாமல் உள்ளது.

---

**7. ஓமிக்ரான் திரிபைக் கண்டறியும் இந்தியாவின் முதல் RT–PCR கருவியான 'Omisure'ஐ உருவாக்கிய நிறுவனம் எது?**

**அ) TATA MD ☑**



ஆ) பிரமல்

இ) சன் பார்மா

ஈ) அபெக்ஸ் பார்மா

✓ இந்தியா அண்மையில் ஒரு புதிய RT–PCR சோதனைக் கருவியை அங்கீகரித்துள்ளது. இதன்மூலம் ஓமிக்ரான் திரிபைக் கண்டறிய முடியும். 'Omisure' எனப்படும் இந்தக் கருவியை ICMR உடன் இணைந்து Tata MD நிறுவனம் உருவாக்கியுள்ளது. இது 'Sars–CoV–2'ஐக் கண்டறிகிறது. மேலும் ஓமிக்ரானில் உள்ள S மரபணு வேறுபாட்டையும் அதில் கண்டறிகிறது.

---

**8. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற பரத் சுப்ரமணியம் என்பவருடன் தொடர்புடைய விளையாட்டு எது?**

அ) டென்னிஸ்



**ஆ) சதுரங்கம் ☑**

இ) டேபிள்–டென்னிஸ்

ஈ) பளு தூக்குதல்


✓ 14 வயதான பரத் சுப்ரமணியம், இத்தாலியில் நடந்த ஒரு நிகழ்வில் மூன்றாவது மற்றும் இறுதி GM நெறியைப் பெற்றபிறகு, இந்தியாவின் 73ஆவது சதுரங்க கிராண்ட் மாஸ்டர் ஆனார். அவர் இதற்கு தேவையான 2,500 (Elo) மதிப்பெண்ணையும் எட்டினார்.

✓ இப்போட்டியில் சக இந்திய வீரர் M R லலித் பாபு வெற்றி பெற்று பட்டத்தை வென்றார். கடந்த நவம்பரில் சங்கல்ப் குப்தா 71ஆவது GM ஆன இரண்டு நாட்களுக்குப் பிறகு, மித்ரபா குஹா நாட்டின் 72ஆவது GM ஆனார்.

---

**9. இந்தியாவின் UNESCO உலக பாரம்பரிய தளங்களின் விளக்கங்களை எம்மொழியில் அதன் இணையதளத்தில் வெளியிட UNESCO ஒப்புக்கொண்டது?**

அ) தமிழ்




**ஆ) ஹிந்தி ☑**

இ) சமற்கிருதம்

ஈ) தெலுங்கு

✓ UNESCO'இன் உலக பாரம்பரிய மையம் இந்தியாவில் உள்ள UNESCO உலக பாரம்பரிய தளங்கள் குறித்த விளக்கங்களை ஹிந்தியில் அதன் இணையதளத்தில் வெளியிட ஒப்புக்கொண்டுள்ளது.

✓ UNESCO'க்கான இந்தியாவின் நிரந்தர பிரதிநிதிகள் குழு இந்தத் தகவலைப்பகிர்ந்துகொண்டது. இது உலக ஹிந்தி நாள் முதல் செயல்பாட்டுக்கு வரும். உலக ஹிந்தி நாள் ஜன.10 அன்று அனுசரிக்கப்படுகிறது.

---

**10. தாமதமான தேர்தல்களால், பின்வரும் எந்த ஆப்பிரிக்க நாட்டுடனான தங்கள் உறவை துண்டிக்கப்போவதாக மேலை ஆப்பிரிக்க நாடுகள் அறிவித்தன?**

**அ) மாலி ☑**




ஆ) எகிப்து

இ) பெரு

ஈ) தென்னாப்பிரிக்கா

✓ தேர்தலை நடத்துவதில் மிகவும் தாமதம் ஏற்படுத்துவதால் மாலியுடனான தங்கள் எல்லைகளை மூடுவதோடு, அரசியல் ரீதியான உறவுகளை துண்டித்துக் கொள்ளவும் மேலை ஆப்பிரிக்க நாடுகள் முடிவு செய்துள்ளன.

✓ கடுமையான பொருளாதார தடைகள் விதிப்பும் இதில் அடங்கும். 15 உறுப்பு நாடுகளை உடைய மேலை ஆப்பிரிக்க நாடுகளின் பொருளாதார சமூகம் (ECOWAS), இந்த நிலைப்பாட்டை அறிவித்தது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. கரோனா பரவல் விகிதம்: தேசிய அளவில் புதுச்சேரி முதலிடம்**

கடந்த ஒரு வாரத்தில் வெளியான புள்ளிவிவரங்கள்படி, நாட்டிலேயே கரோனா தொற்று அதிகம் பரவும் மாநிலம் / யூனியன் பிரதேசங்களில் புதுச்சேரி முதலிடத்தில் உள்ளது. புதுச்சேரியில் 100 கரோனா பரிசோதனைகளுக்கு 51.75 சதவீதம் என்ற அளவில் தொற்று உறுதி செய்யப்பட்டது.

---

**2. இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டம்: பாதை, நிலையங்கள் அமைக்க ஆரம்ப கட்டப் பணிகள் தீவிரம்**

சென்னை மெட்ரோ ரயில் இரண்டாம் கட்ட திட்டத்தில், பாதை, நிலையங்கள் கட்டுவதற்காக, 12 இடங்களில் ஆரம்பக்கட்டப்பணிகள் வேகமாக நடந்து வருகின்றன.

இதுதவிர, 3 வழித்தடங்களில் 48 சுரங்க ரயில் நிலையங்–கள் அமைக்கவும் ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

**இரண்டாம் கட்ட திட்டம்:** சென்னை மாநகரில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையில், 2 வழித்தடங்களில் சுமார் 55 கி.மீ. தூரத்துக்கு மெட்ரோ இரயில்கள் இயக்கப்படுகின்றன. இதைத்தொடர்ந்து, ₹63,246 கோடியில் 118.9 கிமீ தூரத்துக்கு இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டப்பணி நடைபெறுகிறது. இந்தத் திட்டத்தில் கலங்கரை விளக்கம்–பூந்தமல்லி வரை 26.1 கிமீ தொலைவுக்கும், மாதவரம்–சோழிங்கநல்லூர் வரை 47 கிமீ தொலைவுக்கும், மாதவரம்–சிறுசேரி சிப்காட் வரை 45.8 கிமீ தொலைவுக்கும் 3 வழித்தடங்களில் மெட்ரோ ரயில் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இரண்டாம் கட்ட திட்டத்தில், முதலில் சுரங்கப்பாதை அமைக்கப்பட உள்ளது. மாதவரம் – தரமணி இணைப்பு சாலை வரை, 30 சுரங்க நிலையங்கள் அமையவுள்ளன. இதுதவிர, பூந்தமல்லி புறவழிச்சாலை – கலங்கரை விளக்கம் மெட்ரோ ரயில் பாதையில், கோடம்பாக்கம் பவர் ஹவுஸ் – கலங்கரை விளக்கம் இடையே சுரங்கத்தில் 12 நிலையங்களும், மாதவரம் – சோழிங்கநல்லூர் மெட்ரோ

பாதையில் 6 நிலையங்களும் என்று 3 வழித்தடங்களில் 48 சுரங்க நிலைங்கள் அமையவுள்ளன.

**3. உலகப் பொருளாதார கூட்டமைப்பின் உச்சி மாநாடு இன்று தொடக்கம்: முதல் நாளில் பிரதமர் மோடி, சீன அதிபர் ஷி ஜின்பிங் உரை**

சர்வதேச அளவில் சக்திவாய்ந்த அமைப்பாகத் திகழும் உலகப்பொருளாதார கூட்டமைப்பின் 5 நாள் உச்சிமாநாடு திங்கள்கிழமை (ஜன. 17) தொடங்கவுள்ளது.

சுவிட்சர்லாந்து நாட்டிலுள்ள டாவோஸ் நகரில் கடந்த 50 ஆண்டுகளாக இந்த உச்சிமாநாட்டை உலகப் பொருளாதார கூட்டமைப்பு நடத்தி வரும் நிலையில், கரோனா பாதிப்பு காரணமாக கடந்த 2021-ஆம் ஆண்டு உச்சிமாநாடு ஒத்திவைக்கப்பட்டது.

இந்த நிலையில், நிகழாண்டுக்கான உச்சிமாநாட்டை காணொலி வழியில் 5 நாள்களுக்கு அந்த அமைப்பு நடத்த உள்ளது. இதில் 'கரோனா பாதிப்பு' என்ற தலைப்பிலும், அடுத்ததாக 'நான்காவது தொழில் புரட்சியில் தொழில்நுட்ப ஒத்துழைப்பு' என்ற தலைப்பிலும் இரண்டு அமர்வுகள் நடைபெறவுள்ளன.

'உலகின் நிலை' என்ற கருப்பொருளில் கூட்டப்படும் நிகழாண்டுக்கான உச்சிமாநாடு, உலகின் மிக முக்கியத் தலைவர்கள் 2022ஆம் ஆண்டுக்கான தங்களின் தொலைநோக்குத் திட்டங்களை பகிர்ந்துகொள்ளும் தளமாக இருக்கும் என்று உலகப் பொருளாதார கூட்டமைப்பு சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**4. அரபிக்கடலில் இந்திய- ரஷிய கடற்படைகள் கூட்டுப் பயிற்சி**

அரபிக்கடலில் இந்திய-ரஷிய கடற்படையினர் கூட்டுப் பயிற்சியில் ஈடுபட்டதாக இந்திய கடற்படை தெரிவித்தது.

இந்தப் பயிற்சியில் ஈடுபடும் இருநாட்டுக் கடற்படைகளும் இயற்கைப்பேரிடர் அல்லது போர்போன்ற சூழ்நிலையில், சுமுகமான ஒத்துழைப்பையும், தகவல் தொடர்பையும் ஏற்படுத்திக் கொள்ளும் வகையில், இதுபோன்ற கூட்டுப் பயிற்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்படுகின்றன.

முற்றிலும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட INS கொச்சி போர்க் கப்பலும், ரஷியாவின் அட்மிரல் ட்ரிபியூட்ஸ் போர்க்கப்பலும் இந்தப் பயிற்சியில் ஈடுபட்டன.

**5. இந்தியாவின் தேசிய கோவிட் தடுப்பூசி திட்டத்தின் ஓராண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் நினைவு அஞ்சல்தலையை Dr மன்சுக் மாண்டவியா வெளியிட்டார்**

இந்தியாவின் தேசிய COVID-19 தடுப்பூசி திட்டத்தின் ஓராண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் நினைவு அஞ்சல்தலையை மத்திய சுகாதாரம் & குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா வெளியிட்டார்.

கோவாக்சின் ஊசியுடன், சுகாதாரப் பணியாளர் மூத்த குடி மக்களுக்கு தடுப்பூசி வழங்குவதைப் போன்று அஞ்சல் தலை வடிவமைக்கப்பட்டிருந்தது. கடந்தாண்டு ஜன.16ஆம் தேதி தடுப்பூசி போடும் இயக்கம் தொடங்கியது. இந்த ஓராண்டு காலத்தில் 156 கோடிக்கும் அதிகமாக டோஸ் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

**6. இந்தியா ஓபன்: வாகை சூடினார் லக்ஷயா சென்; உலக சாம்பியனை வீழ்த்தினார்**

இந்தியா ஓபன் பாட்மின்டன் போட்டியில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் லஷயா சென், ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்திய ஜோடியான சாத்விக்சாய்ராஜ்/சிரக் ஷெட்டி சாம்பியன் ஆகி அசத்தினர்.

இப்போட்டியில் இவர்கள் பட்டம் வெல்வது இது முதல் முறையாகும். அதிலும், ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவுக்கு இந்தப் போட்டியில் பட்டம் கிடைப்பதும் இது முதல்முறையே. ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதிச்சுற்றில், போட்டித்தரவரிசையில் 3ஆவது இடத்திலிருந்த லக்ஷயா சென், நடப்பு உலக சாம்பியனும், போட்டித்தரவரிசையில் 5ஆவது இடத்தில் இருந்தவருமான சிங்கப்பூரின் லோ கீன் யீவை எதிர்கொண்டார்.

இருவருக்கும் இடையே விறுவிறுப்பாக 54 நிமிஷங்கள் நீடித்த ஆட்டத்தின் முடிவில் லக்ஷயா சென் 24-22, 21-17 என்ற கேம்களில் லோ கீன் யீவை வீழ்த்தி அட்டகாசமான வெற்றியை பதிவு செய்தார்.

இதர வெற்றியாளர்கள்: இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதிச்சுற்றில் தாய்லாந்தின் புசானன் ஆங்பம்ரங்பான் சாம்பியன் ஆனார்.

மகளிர் இரட்டையரில் தாய்லாந்தின் பென்யபா எய்ம்சார்ட் / நந்தாகரன் எய்ம்சார்ட் இணையும், கலப்பு இரட்டையர் பிரிவில் சிங்கப்பூரின் ஹீ யோங் காய் டெரி / தான் வெய் ஹான் ஜோடியும் வாகை சூடின.

**7. 17-01-2022 - 'இந்திய மாமணி' டாக்டர் எம். ஜி. ராமச்சந்திரன் அவர்களின் 105ஆவது பிறந்தநாள்.**

**8. சாகித்ய அகாடமி விருது பெற்ற எழுத்தாளர் நீல பத்மநாபனின்: பள்ளிகொண்டபுரம் நாவல் ரஷ்ய மொழியில் மொழிபெயர்ப்பு**

சாகித்ய அகாடமி விருதுபெற்ற எழுத்தாளர் நீல பத்மநாபன் திருவனந்தபுரத்தில் வசித்து வருகிறார். 'இலை உதிர் காலம்' என்னும் நாவலுக்காக கடந்த 2007ஆம் ஆண்டு சாகித்ய அகாடமி விருதுபெற்ற இவரின் பள்ளிகொண்டபுரம் என்னும் நாவல் ரஷ்ய மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

கடந்த 1970ஆம் ஆண்டு வெளிவந்த பள்ளிகொண்டபுரம் நாவல் ஏற்கனவே ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. இதேபோல் நேஷ்னல் புக் டிரஸ்ட் ஆப் இந்தியாவின் ஆதான் பிரதான் திட்டத்தின்கீழ் ஹிந்தி, மலையாளம், உருது, பஞ்சாபி, மராத்தி, குஜராத்தி, தெலுங்கு, ஒரியா, வங்கம், அஸ்ஸாமி, கன்னடம் ஆகிய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டது.

திருவனந்தபுரத்தின் வாழ்க்கையை மையப்படுத்திய இந்நாவலை டாக்டர்லூபா பைச்சினா என்பவர் ரஷ்ய மொழியில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார்.

**1. 2030ஆம் ஆண்டுக்கு முன், எந்த நாட்டுடனான $50 பில்லியன் இருதரப்பு வர்த்தக இலக்கை அடைவதற்கு இந்தியா நிர்ணயித்துள்ளது?**

**அ) தென் கொரியா ☑**

ஆ) அமெரிக்கா

இ) ஜப்பான்

ஈ) ஐக்கிய அரபு அமீரகம்

✓ இந்தியாவும் தென் கொரியாவும் 2030ஆம் ஆண்டுக்கு முன் $50 பில்லியன் என்ற இருதரப்பு வர்த்தக இலக்கை நிர்ணயித்துள்ளன. தென் கொரிய வர்த்தக அமைச்சர் யோ ஹான்–கூ மற்றும் இந்திய வர்த்தக & தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல் புது தில்லியில் இது குறித்த இரு தரப்பு பேச்சுவார்த்தை நடத்தினர்.

---

**2. இந்தியாவில் எந்த மாதத்தில், 'தேசிய புத்தாக்க வாரம்' ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது?**

**அ) ஜனவரி ☑**

ஆ) பிப்ரவரி

இ) மார்ச்

ஈ) ஏப்ரல்




✓ மத்திய கல்வி அமைச்சகம், AICTE, மற்றும் வணிகம் & தொழிற்துறை அமைச்சகம் இணைந்து 2022 ஜன.10– 16 வரை 'தேசிய புத்தாக்க வாரத்தை' ஏற்பாடு செய்கின்றன.

✓ இப்புத்தாக்க வாரத்தின்போது, புதுமைகளை ஊக்குவிக்கு நோக்கில் விழிப்புணர்வை பரப்புவதற்காக இம்முகமைக –ளால் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. கல்வி அமைச்சகத்தால் "கல்வி நிறுவனங்களில் புத்தாக்க சூழலை உருவாக்குதல்" என்ற தலைப்பில் காணொளி வழி கருத்தரங்கு நடைபெற்றது.

---

**3. ரிசர்வ் வங்கி எந்தப் பேமெண்ட் வங்கிக்கு ஷெட்யூல்டு வங்கியின் அந்தஸ்தை வழங்கியுள்ளது?**

**அ) ஏர்டெல் பேமெண்ட்ஸ் வங்கி ☑**

ஆ) ஆதித்யா பிர்லா பேமெண்ட்ஸ் வங்கி

இ) என்எஸ்டிஎல் பேமெண்ட்ஸ் வங்கி

ஈ) ஜியோ பேமெண்ட்ஸ் வங்கி

✓ இந்திய ரிசர்வ் வங்கி சமீபத்தில் ஏர்டெல் பேமெண்ட்ஸ் வங்கிக்கு ஷெட்யூல்டு வங்கியின் அந்தஸ்தை வழங்கி உ உள்ளது. இதன்மூலம், ஏலங்களுக்கான அரசாங்கத்தால் வழங்கப்பட்ட கோரிக்கைகளுக்கு ஏர்டெல் பேமெண்ட்ஸ் வங்கி விண்ணப்பிக்கலாம். இது மத்திய மற்றும் மாநில அரசு அளவிலான வணிகங்களை மேற்கொள்ளலாம்.

---

**4. எரிபொருள் விலையேற்றம் காரணமாக நடந்த மக்கள் போராட்டங்களைத் தொடர்ந்து சமீபத்தில் பதவி விலகிய அரசாங்கம் எது?**

**அ) கஜகஸ்தான் ☑** ஆ) கிர்கிஸ்தான்

இ) உஸ்பெகிஸ்தான் ஈ) துர்க்மெனிஸ்தான்



✓ கசகசுதான் நாட்டின் அதிபர் காசிம்–சோமாட் டோகாயேவ், எரிபொருள் விலை உயர்வுக்கு எதிராக எழுந்த நாடு தழுவிய போராட்டங்களை அடுத்து, அரசாங்கத்தின் பதவி விலகலை ஏற்றுக்கொண்டார். ஆயிரக்கணக்கான குடி மக்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டதால், அவசரகால நிலையை அவ்வரசாங்கம் முன்னதாகவே அறிவித்தது.

---

**5. அடுத்துவரும் 2023ஆம் ஆண்டில் கேலோ இந்தியா விளையாட்டுக்களை நடத்தவுள்ள மாநிலம் எது?**

அ) தமிழ்நாடு

ஆ) ஹிமாச்சல பிரதேசம்

**இ) கர்நாடகா ☑**

ஈ) கோவா

✓ 2023ஆம் ஆண்டில் கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகளை கர்நாடகா மாநிலம் நடத்தும் என இளைஞர் அதிகாரம் & விளையாட்டுத் துறை அமைச்சர் அறிவித்தார். அடுத்த ஒலிம்பிக்கில் பங்கேற்பதற்காக மாநிலத்தில் 75'க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாகவும் அவர் அறிவித்தார். கேலோ இந்தியாவின் 2021 பதிப்பு தொற்றுநோய் காரணமாக ஒத்திவைக்கப்பட்டு, ஹரியானாவில் நடைபெறவுள்ளது.

---

**6. புதைபடிவமற்ற ஆற்றல்மூலங்களிலிருந்து, 2030ஆம் ஆண்டளவில் எத்தனை சதவீத மின்சக்தியை அடைய இந்தியா இலக்கு நிர்ணயித்துள்ளது?**

அ) 30%

**ஆ) 40% ☑**

இ) 50%

ஈ) 100%



✓ COP–21'இல் தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப் –புகளின் ஒருபகுதியாக, 2030ஆம் ஆண்டளவில் புதை படிவமற்ற ஆற்றல் மூலங்களிலிருந்து 40% மின்சக்தியை அடைய இந்தியா உறுதிபூண்டுள்ளது. 2021 நவம்பரில் அதன் புதைபடிவமற்ற எரிபொருள் அடிப்படையிலான ஆற்றல் இலக்கை இந்தியா அடைந்துள்ளதாக புது மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

✓ தற்போது, 392.01 GW என்ற மொத்த நிறுவப்பட்ட ஆற்றல் திறனுடன் இந்தியா உள்ளது.

---

**7. PM–POSHAN திட்டத்தை திறம்பட செயல்படுத்துதற்காக அக்ஷய பாத்திரம் அறக்கட்டளையுடன் கூட்டு சேர்ந்துள்ள அமைப்பு எது?**

அ) IMF

ஆ) உலக வங்கி

**இ) ஐக்கிய நாடுகள் சபை – WFP ☑**

ஈ) UNICEF

✓ பிரதம மந்திரி போஷான் சக்தி நிர்மான் (PM–POSHAN) திட்டத்தை திறம்பட செயல்படுத்துவதற்காக ஐநா உலக உணவுத்திட்டம் 'அக்ஷய பாத்திரம்' அறக்கட்டளையுடன் கைகோர்த்துள்ளது. உலக உணவுத்திட்டமானது (WFP)

60 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டு உள்ளது. அது பள்ளிகளில் உணவு வழங்குவது மற்றும் குழந்தைகளிடையே ஊட்டச்சத்தை மேம்படுத்துவதில் பணியாற்றுகிறது.

- ✓ பிரதமர் போஷான் சக்தி நிர்மான் என்பது குழந்தைகள், கர்ப்பிணிப்பெண்கள் & பாலூட்டும் தாய்மார்களுக்கான ஊட்டச்சத்து விளைவுகளை மேம்படுத்துவதற்கான இந்திய அரசின் முதன்மைத் திட்டமாகும்.

---

**8. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற குனோ பால்பூர் தேசியப்பூங்கா அமைந்துள்ள மாநிலம் எது?**

அ) தமிழ்நாடு



**ஆ) மத்திய பிரதேசம் ☑**

இ) கர்நாடகா

ஈ) கேரளா

- ✓ 1950'களிலிருந்து விடுதலை இந்தியாவில் அழிந்துவிட்ட சுமார் 8–12 சிறுத்தைகள், தென்னாப்பிரிக்கா, நமீபியா மற்றும் போட்ஸ்வானாவிலிருந்து குனோ பால்பூர் தேசிய பூங்கா – மத்திய பிரதேசத்திற்கு இடமாற்றம் செய்யப்பட உள்ளன. இந்நிலையில், மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ், 'இந்தியாவில் சிறுத்தைகளை அறிமுகப்படுத்துவத–ற்கான செயல் திட்டத்தை' வெளியிட்டுள்ளார்.

---

**9. தனக்கென ஒரு புதிய அரசியலமைப்பை வரைந்து வரும் தென்னமெரிக்க நாடு எது?**

**அ) சிலி ☑**

ஆ) பிரேஸில்

இ) அர்ஜென்டினா

ஈ) பொலிவியா

- ✓ தென்னமெரிக்க நாடான சிலி தனக்கென ஒரு புதிய அரசியலமைப்பை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. இது சம்பந்தமாக, அரசியலமைப்பு அவை அண்மையில் அமைப்பின் அறிமுகத் தலைவர் எலிசா லோன்கானுக்குப் பதிலாக புதிய தலைவராக தொற்றுநோயியல் நிபுணர் மரியா எலிசா குயின்டெரோஸைத் தேர்ந்தெடுத்தது.
- ✓ அகஸ்டோ பினோசேயின் கொடுங்கோன்மை காலத்தில் தயாரிக்கப்பட்ட அதன் முந்தைய மேக்னா கார்ட்டாவை மாற்றுவதற்கு சிலி நாடு முடிவு செய்துள்ளது

---

**10. 'நரகத்தின் நுழைவாயில்' என்றும் அழைக்கப்படும் தர்வாசா வளிப்பள்ளம் அமைந்துள்ள நாடு எது?**

அ) அமெரிக்கா



ஆ) ரஷ்யா

இ) இந்தோனேசியா

**ஈ) துர்க்மெனிஸ்தான் ☑**

- ✓ தர்வாசா வளிப்பள்ளத்தில் ஏற்பட்ட தீயை அணைக்கும் முறையைக் கண்டறிவதற்கு வல்லுநர்களுக்கு துர்க்மெனிஸ்தான் அதிபர் குர்பாங்குலி பெர்டிமுகமடோவ் உத்தரவிட்டுள்ளார். 'நரகத்தின் நுழைவாயில்' என்றும் அழைக்கப்படும் இது ஒரு மிகப்பெரிய இயற்கை எரிவாயு பள்ளமாகும். இது துர்க்மெனிஸ்தானின் தலைநகரமான அஷ்கபாத்தில் இருந்து 260 கிமீட்டர் தொலைவில் உள்ள கரகம் பாலைவனத்தில் அமைந்துள்ளது. கடந்த ஐம்பது ஆண்டுகளாக இந்த எரிவாயு எரிந்து கொண்டிருக்கிறது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. கதக் நடன மேதை பிர்ஜு மகாராஜ் காலமானார்**

பிரபல கதக் நடன மேதை பிர்ஜு மகாராஜ் (83) புது தில்லியில் காலமானார்.

உத்தர பிரதேசத்தைச் சேர்ந்த நடனக் கலைஞரான அவர் லக்னௌ பாணி கல்கா–பிண்டாதின் கரானா பாணி கதக் நாட்டியத்தில் தேர்ச்சி பெற்றிருந்தார்.

பிர்ஜு மகாராஜ் என கலையுலகினரால் மதிப்புடன் அழைக்கப்பட்ட அவரது இயற்பெயர் ப்ரிஜ்மோகன் நாத் மிஸ்ரா என்பதாகும். சத்யஜித் ரேயின் 'சத்ரஞ்ஜ் கே கிலாடி' படத்துக்கு இசையமைத்ததுடன் அத்திரைப்படத்தில் இரு பாடல்களைப் பாடியுள்ளார்.

கதக் நடனக்கலைக்கு ஆற்றிய சேவைக்காக அவருக்கு 1986'இல் பத்ம விபூஷண் விருது அளிக்கப்பட்டது. சங்கீத நாடக அகாதெமி விருது, காளிதாஸ் சம்மான், ஆந்திர ரத்னா உள்ளிட்ட ஏராளமான விருதுகளை அவர் பெற்றுள்ளார். 'விஸ்வரூபம்' திரைப்படத்துக்காக சிறந்த நடன இயக்குநருக்கான தேசிய விருது அவர் பெற்றுள்ளார்.

---

**2. ரயில்வே மேம்பாட்டு பணிகளுக்கு சிறந்த பரிந்துரை: தெற்கு ரயில்வேக்கு முதல் பரிசு, ICF'க்கு 2ஆம் பரிசு அறிவிப்பு**

2020–21ஆம் ஆண்டில், இந்திய ரயில்வே மேம்பாட்டு பணிகளுக்கு சிறந்த பரிந்துரைகள் வழங்கியதற்காக, தெற்கு ரயில்வேக்கு முதல் பரிசும், சென்னை ICFக்கு இரண்டாம் பரிசும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ரயில் பாதையில் மேம்பாட்டு பணிக்காகவும், மின் சிக்கனம், ஆண்டுக்கு ₹110 கோடி வரை சேமிக்கும் வகையில், மின்சார ரயில் என்ஜின் இயக்கம் குறித்து சிறந்த பரிந்துரை வழங்கியதற்காக, தெற்கு ரயில்வே மற்றும் மேற்கு ரயில்வேக்கு முதல் பரிசும், ₹3 லட்சமும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு ரயில்வேக்கும் பரிசு தொகை தலா ₹1.5 லட்சம் வழங்கப்படவுள்ளது.

மின்சக்தியை இழப்பின்றி முழுவதுமாக பயன்படுத்துவதற்கான வழிகாட்டி பரிந்துரைக்கு தெற்கு ரயில்வே மூன்றாவது பரிசுக்கும் தேர்வுசெய்யப்பட்டு ₹33 ஆயிரம் வழங்கப்படவுள்ளது.

ICF:

ரயில் பெட்டி தயாரிப்பில், பக்கவாட்டு சுவர் மற்றும் கூரை இணைப்புகளின் மேம்பாட்டு திட்டங்கள் தொடர்பாக சென்னை ICF (ரயில் பெட்டி இணைப்பு தொழிற்சாலை) அனுப்பிய பரிந்துரைக்கு இரண்டாம் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

மின்விநியோக மாற்றிகள் வாயிலாக மின்சார ரயில் என்ஜினில் இருந்து பெட்டிக்கு மின்தொடா்பு மேம்பாட்டுக்கான பரிந்துரைக்கு கிழக்கு ரயில்வேக்கு இரண்டாம் பரிசு கிடைத்துள்ளது. ICF மற்றும் கிழக்கு ரயில்வேக்கு தலா ஒரு லட்சம் ரூபாய் வீதம் ₹2 லட்சம் பரிசு வழங்கப்படவுள்ளது.

செயற்கை நுண்ணறிவு மற்றும் கணினி பார்வை அடிப்படையில் மேம்பாட்டு பரிந்துரைக்காக, மேற்கு ரயில்வேக்கு மூன்றாம் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. இதுதவிர, வடமேற்கு ரயில்வேயும் மூன்றாம் பரிசுக்கு தேர்வாகியுள்ளது.

---

**3. தொழில் முதலீடுகளுக்கு மிகச்சிறந்த மாநிலம் தமிழ்நாடு: ஆய்வில் தகவல்**

தொழில் முதலீடுகளுக்குச் சிறந்த மாநிலம் தமிழ்நாடு என ஆய்வில் தெரியவந்துள்ளது.

இதுகுறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு: கடந்த ஏப்ரல் முதல் டிசம்பர் வரையிலும் 304 திட்டங்களின் மூலமாக ₹1 லட்சத்து 43,902 கோடி முதலீடுகளை தமிழ்நாடு ஈர்த்துள்ளது. கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தில்

தமிழ்நாடு ₹36,292 கோடியை மட்டுமே தொழில் மூலதனமாகப் பெற்றிருந்தது.

கடந்த ஏப்ரல் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையிலும் தொழில் முதலீடுகளை அதிகமாகப் பெற்றுள்ள மாநிலம் தமிழகமாகும்.

தமிழகத்துக்கு இந்த நிதியாண்டில் கிடைத்திருக்கும் ஒட்டு மொத்த முதலீட்டு ஆதாயம் ₹1 லட்சத்து 7,610 கோடியாகும். ₹77,892 கோடி தொழில் மூலதனத்துடன் குஜராத் மாநிலம் இரண்டாவது இடத்திலும், ₹65,288 கோடி தொழில் மூலதனத்துடன் தெலங்கானா மாநிலம் மூன்றாவது இடத்திலும் இருக்கின்றன என புராஜெக்ட் டுடே நிறுவன ஆய்வு தெரிவிக்கிறது.

தமிழகத்தில் தொழில் முதலீடு செய்ய உறுதி பூண்டுள்ள சில நிறுவனங்களில் டாடா குழுமம், ஒநர தங்ய்ங்ஜ், ஹிந்துஸ்தான் யுனிலீவர், டி வி எஸ் மோட்டார், அதானி குழுமம், லார்சன் அண்ட் டூப்ரோ ஆகியவை அடங்கும்.

இந்தியா முழுவதிலும் நடப்பு நிதியாண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 7,764 தொழில் திட்டங்கள் வந்துள்ளன. இவற்றின் மொத்த முதலீட்டு மதிப்பு ₹12 லட்சத்து 76,679 கோடியாகும்.

---

**4. தமிழகத்தில் கடந்த ஆண்டில் காசநோய் பாதிப்பு 17% அதிகரிப்பு**

தமிழகத்தில் கடந்த ஆண்டில் மட்டும் 82,000 பேர் காச நோயால் புதிதாக பாதிக்கப்பட்டுள்ளனர். இது அதற்கு முந்தைய ஆண்டைக் காட்டிலும் 17 சதவீதம் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

காசநோயை முழுமையாக ஒழிக்கும் நோக்கில் மத்திய, மாநில அரசுகள் பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றன. அதுமட்டுமன்றி, 2025–க்குள் அந்நோயை முற்றிலும் ஒழிக்க வேண்டும் என்ற இலக்குடன் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

அதன் பயனாக காசநோய் பாதிப்பு தொடர்பு விழிப்புணர்வு மேம்பட்டு வருகிறது. தமிழகத்தைப் பொருத்தவரை காசநோயைக் குணப்படுத்தும் விகிதம் கணிசமாக உயா்ந்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அந்த நோயின் தாக்கத்தால் பாதிக்கப்படும் நோயாளிகளில் 84% பேரை முதல் சிகிச்சையிலேயே குணப்படுத்துவதாகவும், தொடர் சிகிச்சைகள்மூலம் மீதமுள்ளவர்களையும் பூரண குணமாக்குவதாகவும் சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், கடந்த ஆண்டில் தனியார் மற்றும் அரசு மருத்துவமனைகளில் காசநோய் பாதிப்புடன் அனுமதிக்கப்பட்டிருந்தோரின் தரவுகளை ஆய்வு செய்த போது நாடு முழுவதும் 21.38 லட்சம் பேருக்கு அந்நோய் தாக்கம் இருந்தது தெரியவந்துள்ளது.

கடந்த சில ஆண்டுகளாகவே உத்தரபிரதேசம், மகாராஷ்டிரம், இராஜஸ்தான், குஜராத் உள்ளிட்ட வட மாநிலங்களில்தான் காசநோய் பாதிப்பு அதிகமாக இருந்து வருகிறது. அதன் நீட்சியாகவே கடந்த ஆண்டின் புள்ளி விவரங்களும் அமைந்திருந்தன.

குறிப்பாக உத்தர பிரதேசத்தில் மட்டும் 4.60 லட்சத்துக்கும் மேற்பட்டோர் காசநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். தமிழகத்தை எடுத்துக் கொண்டால் 82,352 பேருக்கு அந்நோயின் பாதிப்பு இருந்தது. அவர்களில், தனியார் மருத்துவமனைகளில் 18,016 பேரும், அரசு மருத்துவமனைகளில் 64,336 பேரும் முதல்கட்ட சிகிச்சை பெற்றாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 2020'இல் அந்த எண்ணிக்கை 17% குறைவாக இருந்தது. அதாவது, அந்தக் காலகட்டத்தில் தமிழகத்தில் 70,545 பேர் காசநோயால் பாதிக்கப்பட்டிருந்தனர். அந்த எண்ணிக்கை கடந்த ஆண்டில் அதிகரித்ததற்கு பல்வேறு காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன. ஏறத்தாழ காசநோய்க்கும், கரோனா தொற்றுக்கும் ஒரே மாதிரியான அறிகுறிகள் இருப்பதால், பலர் முன்கூட்டியே பரிசோதனை செய்து கொண்டது கூட அந்நோய் பாதிப்பு அதிகமாக கண்டறியப்பட்டதற்கு காரணமாக இருக்கலாம் என மருத்துவ நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

---

**5. சமூக ஆர்வலர் சாந்தி தேவி காலமானார்**

ஒடிசாவின் ராயகடா மாவட்டத்தை சேர்ந்த பிரபல சமூக ஆர்வலரும், 'பத்மஸ்ரீ' விருது பெற்றவருமான சாந்தி தேவி (88) அண்மையில் காலமானார். அவரது மறைவுக்கு பிரதமர் நரேந்திர மோடி, ஒடிசா முதல்வர் நவீன் பட்நாயக் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

---

**6. இந்தியாவின் ஆப்பிள் ஏற்றுமதி 82% அதிகரிப்பு: வர்த்தக அமைச்சகம்**

இந்தியாவின் ஆப்பிள் ஏற்றுமதி 82% அதிகரித்துள்ளதாக வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த அமைச்சகத்தின் புள்ளிவிவரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த 2014ஆம் ஆண்டிலிருந்து ஆப்பிள் ஏற்றுமதியானது 82% வளர்ச்சியைப்பெற்றுள்ளது. அதேசமயம், பழங்களின் இறக்குமதியானது 3.8% என்ற அளவிலேயே உயர்ந்து உள்ளது. அதன்படி, கடந்த 2014–15ஆம் நிதியாண்டில் 86 லட்சம் டாலராக இருந்த ஆப்பிள் ஏற்றுமதி 2020–21 நிதியாண்டில் $1.45 கோடி அளவுக்கு உயர்ந்துள்ளது.

குறிப்பாக, நடப்பு நிதியாண்டின் ஏப்ரல் முதல் நவம்பர் வரையிலான 8 மாத காலத்தில் இதன் ஏற்றுமதி 1.23 கோடி டாலரை எட்டியுள்ளது. இது, ஆப்பிள் ஏற்றுமதியில் கடந்த சில ஆண்டுகளில் ஏற்பட்ட சிறப்பான வளர்ச்சியை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

அதேசமயம், பழங்களின் இறக்குமதி கடந்த 2014–15'இல் 23.08 கோடி டாலராக இருந்த நிலையில், கடந்த 2020–21–இல் 24 கோடி டாலரை தொட்டுள்ளது. இது, 3.8 சதவீத வளர்ச்சியாகும்.

இந்தியாவுக்கு இறக்குமதி செய்யப்படும் ஆப்பிள்களில் 82 சதவீதம் சிலி, நியூஸிலாந்து, துருக்கி, இத்தாலி, பிரேசில் மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்தவை.

இந்தியாவின் ஆப்பிள் இறக்குமதியில் சிலி 25 சதவீத பங்களிப்பை கொண்டுள்ளது. இதனைத் தொடர்ந்து நியூஸிலாந்து (16.45%), துருக்கி (12.43 சதவீதம்), இத்தாலி (10.8%) ஆகிய நாடுகள் உள்ளதாக வர்த்தக அமைச்சக புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

### 7. இந்திய வனநிலை அறிக்கை: தமிழ்நாட்டுக்கான பாடங்கள்

அண்மையில் வெளியாகியுள்ள இந்திய வனநிலை அறிக்கை– 2021, நாட்டின் மொத்த நிலப் பரப்பில் பசுமைப் பரப்பானது ஏறக்குறைய நான்கில் ஒரு பங்கை (24.6%) தொட்டிருப்பதை எடுத்துக்காட்டியுள்ளது. மொத்த நிலப் பரப்பில் மூன்றில் ஒரு பங்கு வனப் பரப்பாக இருக்க வேண்டும் என்பது இலக்கு. ஆனால், பசுமைப் பரப்பை மதிப்பிடும்போது வனங்கள் மட்டுமின்றி வனங்களுக்கு வெளியே உள்ள மரங்களின் அடர்த்தியும் கணக்கில் கொள்ளப்படுகிறது. முந்தைய 2019 மதிப்பீட்டுடன் ஒப்பிடுகையில் நாடு முழுவதும் 2,261 சதுர கிமீ பரப்பு பசுமைப் பரப்பாக மாறியிருப்பது மகிழ்ச்சிக்குரியது. வனப் பரப்பை மட்டும் கணக்கில் கொண்டால், மொத்த நிலப் பரப்பில் இது 21.7% ஆக உள்ளது. முந்தைய மதிப்பீட்டுடன் ஒப்பிடுகையில் 0.2% வனப் பரப்பு அதிகரித்துள்ளது.

குறிப்பாக, தமிழ்நாட்டில் இந்த இரண்டு ஆண்டுகளில் வனப் பரப்பானது 55 சதுர கிமீ அதிகரித்திருப்பது பாராட்டுக்குரியது. அதே வேளையில், வனங்களுக்கு வெளியே உள்ள மரங்களின் அடர்த்தி 406 சதுர கிமீ அளவுக்குக் குறைந்திருப்பது வருத்தத்தையும் அளிக்கிறது. கஜா புயலால் காவிரிப் படுகை மாவட்டங்களில் லட்சக்கணக்கான தென்னை மரங்கள் வீழ்ந்ததும் மரங்களின் அடர்த்தி குறைந்ததற்கான காரணமாக ஊகிக்கப்படுகிறது.

என்றாலும், வனப் பரப்பைப் போலவே மரங்களின் அடர்த்தி குறித்த விவரங்களையும் மாவட்டவாரியாக இந்திய வனநிலை அறிக்கை தெரிவித்தால் மட்டுமே, மரங்களின் அடர்த்தி குறைந்திருப்பதற்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றைச் சரிசெய்வதற்கான வாய்ப்புகள் உருவாகும். அதற்கு முன்பே புயல், வெள்ளம், பெருமழை போன்ற இயற்கைப் பேரிடர்களை அடுத்து, புதிதாக மரக்கன்றுகளை நடுவதும் அவற்றைப் பராமரிப்பதும் பேரிடர்க் காலத்தின் பணிகளில் ஒன்றாக மாற வேண்டும். அது மட்டுமின்றி, சாலை விரிவாக்கப் பணிகளின்போது வெட்டப்படும் மரங்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் கூடுதலான எண்ணிக்கையில் மரங்கள் நடுவதையும் ஒரு கட்டாய விதிமுறையாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தமிழ்நாட்டின் வனப் பரப்பு தற்போது 20% என்ற அளவிலேயே உள்ளது என்றாலும் காடுகள் அழிப்பைத் தடுப்பது, வனப் பரப்பை விரிவுபடுத்துவது உள்ளிட்ட நடவடிக்கைகளால் நேர்மறையான அறிகுறிகள் தென்படுகின்றன. காஞ்சிபுரம், புதுக்கோட்டை, அரியலூர் ஆகிய மாவட்டங்களில் வனப் பரப்பின் அளவு அதிகரித்துள்ளது. இடைப்பட்ட இதே ஆண்டுகளில் விழுப்புரம் மாவட்டத்தில், வனப் பரப்பின் அளவு 23 சதுர கிமீ அளவில் குறைந்திருப்பதும் கவனத்துக்குரியது.

சென்னைப் பெருநகரத்தைப் பொறுத்தவரையில், மொத்தப் பசுமைப் பரப்பு ஏறக்குறைய 5 சதுர கிமீ அளவுக்கு அதிகரித்துள்ளது. 2011–ல் 18 சதுர கிமீ ஆக இருந்த சென்னையின் மர அடர்த்திப் பரப்பு, 2021–ல் 22.7 சதுர கிமீ ஆக அதிகரித்துள்ளது. ஜப்பானிய வனவியலர் அகிரா மியாவாகியின் வழிமுறைகளைப் பின்பற்றி வாய்ப்புள்ள இடங்களிலெல்லாம் மரத் தொகுதிகளை வளர்த்ததன் காரணமாக சென்னையின் பசுமைப் பரப்பு அதிகரித்துள்ளது. இத்திசையில் மேலும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

---

### 8. பன்றியின் இதயம் மனிதருக்குப் பொருந்தியது எப்படி?

கடந்த ஜனவரி 7–ல் நவீன மருத்துவம் உலகிலேயே முதல் முறையாக மரபணு மாற்றம் செய்யப்பட்ட பன்றியின் இதயத்தை மனிதருக்குப் பொருத்தி சாதனை செய்துள்ளது. உறுப்பு மாற்றுச் சிகிச்சைக்குத் தேவையான மனித உறுப்புகள் கிடைக்காமல், உலகெங்கும் இந்த அறுவை சிகிச்சைகளுக்குப் பின்னடைவு ஏற்பட்டிருந்த நிலையில், விலங்குகளின் உறுப்புகளையும் மனிதருக்குப் பயன்படுத்த முடியும் எனும் நம்பிக்கையை இது விதைத்துள்ளது.

அமெரிக்காவின் மேரிலேண்ட் நகரைச் சேர்ந்த 57 வயதான டேவிட் பென்னட் ஒழுங்கற்ற இதயத் துடிப்பு காரணமாக மேரிலேண்ட் மருத்துவப் பல்கலைக்கழக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். செயற்கை சுவாசக் கருவிகளுடன் உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த பென்னட்டுக்குப் பன்றியின் இதயத்தை மருத்துவர் கிரிஃபித் பொருத்தினார். இன்றுவரை அந்த இதயம் சீராக இயங்குவதாக அவர் தெரிவித்துள்ளார். இந்தச் செயல்முறையைச் சொல்வது எளிது. நடைமுறையில் கடினம்.

#### உதவும் பன்றி உறுப்புகள்

மற்ற விலங்குகளைவிடப் பன்றியின் உறுப்புகள் கிட்டத்தட்ட மனிதர்களின் உறுப்புகளை ஒத்திருப்பதால்,

உறுப்பு மாற்று சிகிச்சைக்குப் பொருத்தமானவையாக இவை தேர்வு செய்யப்படுகின்றன. முதன்முதலில் 1838–ல் பன்றியின் ஒளிப்படலம் (Cornea) மனிதக் கண்ணில் பொருத்தப்பட்டது. 1964–ல் சிம்பன்சி குரங்கின் இதயம் மனிதருக்குப் பொருத்திப் பார்க்கப்பட்டது. அது தோல்வியில் முடிந்தது. 1984–ல் ஆப்பிரிக்க/அரேபியக் குரங்கின் (Baboon) இதயம் ஃபாயி (Fae) எனும் குழந்தைக்குப் பொருத்தப்பட்டது. அது 21 நாட்களுக்கு உயிரோடு இருந்தது.

பொதுவாக, 'மாற்றின உறுப்பு மாற்றுச் சிகிச்சை' யில் (Xenotransplantation) பொருத்தப்படும் உறுப்புகளை மனித உடல் நிராகரித்துவிடும். அப்படியே ஏற்றுக்கொண்டாலும் எதிர்கால நிராகரிப்பைத் தடுக்கத் தடுப்பாற்றல் எதிர்வினையை மட்டுப்படுத்தும் வீரியமான மருந்துகளைப் பயனாளி வாழ்நாள் முழுவதும் சாப்பிட வேண்டும். அதனால்தான் இம்மாதிரியான அறுவைச் சிகிச்சைகள் வேகம் பெறவில்லை. ஆனாலும், சோதனை முயற்சியாகச் சென்ற அக்டோபரில் நியூயார்க் மருத்துவமனை ஒன்றில் மூளை இறப்பு ஏற்பட்ட ஒருவருக்குப் பன்றியின் சிறுநீரகம் உடலுக்கு வெளியில் பொருத்தப்பட்ட அதிசயம் நடந்தது.

பன்றியின் சிறுநீரகச் செல்களில் சர்க்கரை வடிவில் 'ஆல்பா–1' நொதி இருக்கிறது. மனித உடலில் இது இல்லை. பன்றியிடமிருந்து பெறப்படும் சிறுநீரகத்தில், இந்த நொதியைக் கண்டுகொள்ளும் மனித உடல், இதை அந்நியனாகக் கருதி, மேற்படி உறுப்பை நிராகரித்துவிடுகிறது. கலிபோர்னியாவில் இருக்கும் 'சிந்தெடிக்ஸ் ஜீனாமிக்ஸ்' நிறுவனம், மரபணு மாற்று உறுப்புகளை வளர்ப்பதில் புகழ்பெற்றது. இந்த நிறுவனம் 'ஆல்பா–1' நொதி இல்லாத பன்றியை மரபணு மாற்று முறையில் வளர்த்துக் கொடுத்தது. அதன் சிறுநீரகத்தை மூளை இறப்பு நோயாளிக்கு நியூயார்க் மருத்துவர்கள் பொருத்தினார்கள். அதனால், அதில் பிரச்சினை எழவில்லை. இதை ஒரு மைல்கல் நிகழ்வாக மருத்துவ உலகம் பார்த்தது. இப்போது பன்றியின் இதயத்தை மனிதருக்குப் பொருத்தி வியப்பில் ஆழ்த்தியுள்ளனர் மேரிலேண்ட் மருத்துவமனை மருத்துவர்கள்.

**சாத்தியமானது எப்படி?**

பன்றிகளில் மரபணு வரிசையைத் துல்லியமாக மாற்றியமைக்கும் ஆராய்ச்சியில் முன்னேறிக்கொண்டிருக்கும் மற்றொரு அமெரிக்க நிறுவனம் 'ரெவிவிகார்' (Revivicor). இந்த நிறுவனத்தினர், பன்றி செல்களில் உறுப்பு நிராகரிப்புக்குக் காரணமாக இருக்கும் 4 வகை மரபணுக்களை 'கிரிஸ்பர்' (CRISPR/Cas9) எனும் மரபணுச் செதுக்கியால் செதுக்கி, அவற்றைச் செயலிழக்கச் செய்கின்றனர். அடுத்து, பன்றி செல்லின் மரபணு வரிசையில் புதிதாக 6 மரபணுக்களைப் புகுத்திவிடுகின்றனர்.

பிறகு, பன்றியின் கருமுட்டையிலிருந்து மரபணுவை நீக்கிவிட்டு, அதனுள் மேற்சொன்ன மாற்றியமைக்கப்பட்ட மரபணு உள்ள பன்றி செல்லைக் கலந்துவிடுகின்றனர். இப்போது இது கருக்கோளமாகிறது (Zygote). அதை 'வாடகைத் தாய்' பன்றியின் கருப்பையில் பதித்துவிடுகின்றனர். அதில் வளர்கருவாக (Embryo) வளர்ந்து சிசுவாகி 114 நாட்களில் மரபணு மாற்றமுள்ள பன்றிக்குட்டி பிறக்கிறது. படியாக்கம் (Cloning) மூலம் டோலி ஆடு பிறந்ததுபோல்தான் இது. இதன் பலனாக, மனித உடல் இந்த உறுப்புகளை அந்நியனாகக் கருதும் வாய்ப்பு குறைந்துவிட, உறுப்பு நிராகரிப்பு தவிர்க்கப்படுகிறது.

சாதாரணமாகவே பன்றிகளின் மரபணுக்களில் ரீட்ரோ வைரஸ்கள் வசிப்பதுண்டு. இவை உறுப்பு மாற்றத்துக்குப் பிறகு பயனாளிக்குத் தொற்றை உண்டாக்கி, உறுப்பு நிராகரிப்பைப் பூதாகரமாக்கும். பன்றியின் மரபணுக்களிலிருந்து 12 வகையான ரீட்ரோ வைரஸ்களை நீக்கியதன் மூலம் இது சரிசெய்யப்படுகிறது. இப்படி, 'ரெவிவிகார்' நிறுவனம் தயாரித்தளித்த மரபணு மாற்றுப் பன்றியின் இதயத்தையே பென்னட்டுக்கு மேரிலேண்ட் மருத்துவர்கள் பொருத்தியுள்ளனர்.

உறுப்பு நிராகரிப்பைத் தடுக்கும் புதிய மருந்து ஒன்றை பென்னட் இப்போது பயன்படுத்துகிறார். இதுவரை அந்த இதயத்தை அவரது உடல் நிராகரிக்கவில்லை. அவருக்குப் பொருத்தப்பட்டுள்ள பன்றியின் இதயம் மனித உடலுக்கு அந்நியமாகத் தெரியாத அளவுக்கு மரபணு மாற்றமுறையில் வளர்க்கப்பட்டது என்பதால், இந்த மருந்து இனியும் அவருக்குத் தேவைப்படுமா என்பது போகப்போகவே தெரியும்.

**இந்திய மருத்துவரின் சாதனையும் வேதனையும்**

பன்றியின் இதயத்தை மனிதருக்குப் பயன்படுத்த முடியும் என்பதை 25 ஆண்டுகளுக்கு முன்பே அசாம் மாநில மருத்துவர் ராம் பருவா நிரூபித்திருக்கிறார். 1997, ஜனவரி 1–ல் 32 வயதான ஒருவருக்குப் பன்றியின் இதயத்தை அவர் பொருத்தினார். அந்த நோயாளி 7 நாட்களுக்கு உயிருடன் இருந்தார். அவருக்குப் பல தொற்றுகள் இருந்ததால், அவரது உயிரைக் காப்பாற்ற முடியவில்லை. அரசிடம் இந்த சிகிச்சைக்கு முறையாக அனுமதி பெறவில்லை என்ற காரணத்துக்காக உறுப்பு மாற்றுச் சட்டம், 1994–ன் கீழ் பருவா கைதுசெய்யப்பட்டார்.

**வரலாறு படைக்குமா?**

இன்றைக்கு அமெரிக்காவில் மட்டும் ஒரு லட்சத்துக்கும் அதிகமானோர் மாற்று உறுப்புகளுக்காகக் காத்திருக்கின்றனர். இந்தியாவில் இதயச் செயலிழப்பால் 50 ஆயிரம் பேர் அவதிப்படுகின்றனர். இவர்களில் அதிகபட்சம் 15 பேருக்குத்தான் இதய மாற்று அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்படுகிறது. ஆண்டுதோறும் 1.8 லட்சம் பேருக்குச் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை தேவைப்படும் நிலையில், 6 ஆயிரம் பேருக்குத்தான் மாற்றுச் சிறுநீரகம் கிடைக்கிறது. வருடத்துக்கு 30 ஆயிரம் பேருக்குக் கல்லீரல் மாற்று அறுவைச் சிகிச்சை தேவைப்படுகிறது. ஆனால், 1,500 பேருக்கு மட்டுமே இது சாத்தியப்படுகிறது. இந்த நிலையில் மரபணு மாற்றுப் பன்றிகளின் உள் உறுப்புகளை மனிதருக்கும் பயன்படுத்துவது சாத்தியமானால், அனுதினமும் உயிருக்குப் போராடிவரும் பல்லாயிரக்கணக்கான மனித உயிர்கள் காக்கப்படும். நவீன மருத்துவத்தில் புதிய வரலாறு படைக்கப்படும்.

**9. சேதி தெரியுமா?**

**ஜன.1:** இந்தியாவிலேயே முதன் முறையாக கேரள உயர் நீதிமன்றம் காகித பயன்பாடு இல்லாத நீதிமன்றமாக மாறியது. அங்கே ஸ்மார்ட் நீதிமன்ற அறைகள் திறக்கப்பட்டதன் மூலம் இது சாத்தியமாகியிருக்கிறது.

**ஜன.3:** பிரான்ஸில் 'ஐஎச்யு பி.1.640.2' என்று பெயரிடப்பட்ட புதிய வகை கரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது. இது ஒமைக்ரானைவிட அதிக அளவில் பரவும் தன்மை கொண்டது.

**ஜன.4:** கரோனா தடுப்பூசியைச் செலுத்திக்கொள்ளாத செர்பிய டென்னிஸ் வீரர் நோவாக் ஜோகோவிச்சுக்கு ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியில் பங்கேற்க ஆஸ்திரேலிய அரசு விசா மறுத்தது.

**ஜன.5:** பஞ்சாப்பில் பதிண்டா விமான நிலையத்திலிருந்து ஹுசைனிவாலாவுக்குச் சாலை மார்க்கமாக சென்ற பிரதமர் மோடியின் பயணத்தில் பாதுகாப்புக் குறைபாடு ஏற்பட்டதால் சர்ச்சையானது.

**ஜன.5:** தமிழகத்தில் வெளியிடப்பட்ட இறுதி வாக்காளர் பட்டியலின்படி 6,36,25,813 வாக்காளர்கள் உள்ளனர். தமிழகத்திலேயே அதிகபட்சமாக சோழிங்கநல்லூர் தொகுதியில் 7,11,755 வாக்காளர்களும், குறைந்தபட்சமாக கீழ்வேளூர் தொகுதியில் 1,78,517 வாக்காளர்களும் உள்ளனர்.

**ஜன.6:** இந்தியாவின் முதல் திறந்தவெளி பாறை அருங்காட்சியகம் ஹைதராபாத்தில் உள்ள சி.எஸ்.ஐ.ஆர். தேசிய புவி இயற்பியல் ஆராய்ச்சி நிறுவனத்தில் திறக்கப்பட்டது.

**ஜன.6:** தமிழகச் சட்டப்பேரவை வரலாற்றில் முதன் முறையாகக் கேள்வி நேரம் நேரலையில் ஒளிபரப்பு செய்யப்பட்டது.

**ஜன.7:** மஹாகாளி ஆற்றின் குறுக்கே தார்சுலாவில் பாலம் கட்டுவதற்கு இந்தியா – நேபாளம் இடையே கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்ததுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

**ஜன.8:** நீட் தேர்வுக்கு எதிராக சட்டப் போராட்டத்தை முன்னெடுப்பது என்று தமிழக அரசு கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. நீட் விலக்குக் கோரும் மசோதாவுக்கு தமிழக ஆளுநர் ஒப்புதல் அளித்து குடியரசுத் தலைவருக்கு அனுப்பாத நிலையில் இக்கூட்டம் நடைபெற்றது.

**ஜன.8:** உத்தர பிரதேசம், உத்தராகண்ட், பஞ்சாப், கோவா, மணிப்பூர் ஆகிய 5 மாநிலங்களில் சட்டப்பேரவைத் தேர்தல் தேதியைத் தேர்தல் ஆணையம் வெளியிட்டது.

**ஜன.8:** 1983ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட கூட்டுறவு சங்கச் சட்டத்தின் மீதான திருத்த மசோதா தமிழ்நாடு சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டது. சங்க நிர்வாகிகளின் பதவிக்காலம் ஐந்து ஆண்டிலிருந்து மூன்று ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டுள்ளது.

**ஜன.9:** போர்க் கப்பலிலிருந்து இலக்கைத் துல்லியமாகத் தாக்கி அழிக்கும் அதிநவீன சூப்பர்சானிக் பிரம்மோஸ் ஏவுகணை விசாகப்பட்டினத்தில் வெற்றிகரமாகப் பரிசோதிக்கப்பட்டது.

**ஜன.10:** அமெரிக்க வரலாற்றில் முதன் முறையாகக் கறுப்பின பெண் எழுத்தாளர் மாயா ஏஞ்சலோ உருவம் பொறித்த நாணயம் வெளியிடப்பட்டது.

**ஜன.10**: சென்னையைச் சேர்ந்த 14 வயதான பரத் சுப்ரமணியம் இந்தியாவின் 73–வது செஸ் கிராண்ட் மாஸ்டர் என்ற அந்தஸ்தைப் பெற்றார்.


**ஜன.11:** பிரதமரின் பஞ்சாப் பயணத்தின்போது ஏற்பட்ட பாதுகாப்புக் குறைபாடு தொடர்பாக விசாரிக்க, உச்ச நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி இந்து மல்ஹோத்ரா தலைமையில் உச்ச நீதிமன்றம் விசாரணைக் குழுவை அமைத்தது.

**ஜன.11:** மரபணு மாற்றப்பட்ட பன்றியின் இதயத்தை டேவிட் பென்னட் (57) என்பவருக்குப் பொருத்தி அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் சாதனை புரிந்தனர்.

**ஜன.12:** தமிழகத்தில் புதிதாக 11 மருத்துவக் கல்லூரிகள் திறக்கப்பட்டன, 1,450 மருத்துவக் கல்வி இடங்கள் உருவாக்கப்பட்டன.

**ஜன.13:** இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் (ISRO) புதிய தலைவராக S சோம்நாத் நியமிக்கப்பட்டார்.

**1.** **சமீப செய்திகளில் இடம்பெற்ற 'மேற்கத்திய இடையூறு' என்பதுடன் தொடர்புடையது எது?**



அ) கலாச்சாரம்

**ஆ) வானிலையியல் ☑**

இ) பொருளாதாரம்

ஈ) அரசியல்

✓ ஒரு 'மேற்கத்திய இடையூறு' என்பது மத்தியதரைக்கடல் பகுதியில் உருவாகும் ஒரு கூடுதல் வெப்பமண்டல புயல் ஆகும். இது இந்திய துணைக் கண்டத்தின் வடக்குப் பகுதிகளில் குளிர்கால மழையைக் கொண்டுவருவதாகக் கூறப்படுகிறது. மேலை இந்தியாவைப் பாதிப்பதோடு ஒரு பெருமழையைக்கொண்டுவரும் தீவிர 'மேற்கு இடையூறு' வரும் என இந்திய வானிலை ஆய்வுத்துறை கணித்து உள்ளது.

✓ அதன்பின்னர், இரண்டு மேற்கு இடையூறுகள் வடமேற்கு இந்தியா மற்றும் மேற்கு இமயமலைப் பகுதியில் சில நாட்களுக்கு மழையைக் கொண்டுவரும் என்றும் அது கணித்துள்ளது.

---

**2.** **இந்திய வரலாற்று ஆராய்ச்சி கவுன்சில், எந்த மத்திய அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தன்னாட்சி அமைப்பாகும்?**

அ) கலாச்சார அமைச்சகம்

ஆ) வெளியுறவு அமைச்சகம்

**இ) கல்வி அமைச்சகம் ☑**

ஈ) சுற்றுலா அமைச்சகம்

✓ இந்திய வரலாற்று ஆராய்ச்சி கவுன்சில் என்பது மத்திய கல்வி அமைச்சகத்தின் கீழ் இயங்கும் ஒரு தன்னாட்சி அமைப்பாகும். பேராசிரியர் இரகுவேந்திர தன்வார் அண்மையில் இந்திய வரலாற்று ஆராய்ச்சி கவுன்சிலின் தலைவராக 3 ஆண்டுகளுக்கு அல்லது மறு உத்தரவு வரும் வரை நியமிக்கப்பட்டுள்ளார். வரலாற்று ஆய்வுகளு–க்கு வழிகாட்டுதல் இந்தக் கவுன்சிலின் நோக்கமாகும்.

---

**3.** **சமீபத்திய செய்திகளில் இடம்பெற்ற இராமாயணத்தின் சாயலில் உள்ள 'ஐபோனியா' உள்ள நாடு எது?**

அ) நேபாளம்

**ஆ) மடகாஸ்கர் ☑**

இ) இலங்கை

ஈ) மொரிஷியஸ்

✓ இந்தியக்கவிஞரும் தூதருமான அபை கே, மடகாஸ்கரின் 'ஐபோனியா'வின் பெருங்கதை இந்திய இதிகாசமான 'இராமாயண'த்தை ஒத்திருப்பதைக் கண்டறிந்தார்.

✓ 'ஐபோனியா' என்பது மடகாஸ்கரின் காவியக்கவிதை ஆகும். இது அதன் கதாநாயகன் ஐபோனியாவின் பிறப்பு, நிச்சயதார்த்தம், போராட்டம் மற்றும் இறப்பு ஆகியவற்றை விவரிக்கிறது. அவரது நிச்சயமான மனைவி ராம்பேலா, ராமாயணத்தைப்போலவே ராவடோவால் கடத்தப்பட்டார். சமற்கிருதத்திற்கும் மலகாசி மொழிக்கும் இடையே 300'க்கும் மேற்பட்ட ஒத்த சொற்கள் உள்ளன.

---

**4.** **இந்தியாவின் முதல் திறந்தவெளி பாறை அருங்காட்சி–யகம் அமைந்துள்ள நகரம் எது?**



**அ) ஹைதராபாத் ☑**

ஆ) மைசூர்

இ) திருவனந்தபுரம்

ஈ) வாரணாசி

✓ இந்தியாவின் முதல் திறந்தவெளி பாறை அருங்காட்சியக–த்தை ஹைதராபாத்தில் மத்திய அறிவியல் & தொழில் நுட்பத்துறை இணை அமைச்சர் Dr ஜிதேந்திர சிங் திறந்து வைத்தார். இந்த அருங்காட்சியகத்தில் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் இருந்து சுமார் 35 வகையான பாறைகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அவை 3.3 பில்லியன் ஆண்டுகள் முதல் 55 மில்லியன் ஆண்டுகள் வரை பழைமையானவையாகும்.

---

**5.** **பேரிடர் மேலாண்மையில் ஒத்துழைப்பு குறித்து எந்த நாட்டுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட இந்தியா ஒப்புதல் அளித்துள்ளது?**



அ) பிரான்ஸ்

**ஆ) துர்க்மெனிஸ்தான் ☑**

இ) ஆஸ்திரேலியா

ஈ) நியூசிலாந்து

✓ பேரிடர் மேலாண்மைத் துறையில் இந்தியா மற்றும் துர்க்மெனிஸ்தான் இடையேயான ஒத்துழைப்பு குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

✓ தற்போது வரை சுவிச்சர்லாந்து, ரஷியா, ஜெர்மனி, ஜப்பான், தஜிகிஸ்தான், மங்கோலியா, பங்களாதேஷ், இத்தாலி ஆகிய நாடுகள் மற்றும் சார்க் அமைப்புடனும் பேரிடர் மேலாண்மை துறையில் ஒத்துழைப்புக்கான ஒப்பந்தங்களில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது. சுங்க விவகாரங்களில் ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர உதவிக்கு இந்தியா–ஸ்பெயின் இடையே ஒப்பந்தம் செய்துகொள்ள மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

---

**6.** **'ஜீவன் ரக்ஷா' பணியுடன் தொடர்புடையது எது?**

அ) இந்திய ராணுவம்

ஆ) இந்திய கடற்படை

**இ) இரயில்வே காவல் படை ☑**

ஈ) தேசிய பாதுகாப்புப் படை

✓ இரயில்வே காவல் படை வீரர்கள் 2021ஆம் ஆண்டில் இந்திய இரயில்வே முழுவதும் 601 நபரைக் காப்பாற்றி உள்ளனர். கடந்த நான்கு ஆண்டுகளில் 'மிஷன் ஜீவன் ரக்ஷா' திட்டத்தின்கீழ் இந்தியா முழுவதும் உள்ள ரயில் நிலையங்களில் ஓடும் ரயில்களின் சக்கரங்களில் சிக்க இருந்த 1650 பேரைக் காப்பாற்றியுள்ளனர்.

✓ 1.2 இலட்சத்துக்கும் அதிகமான சரியான பயணிகளிடம் அவர்கள் விட்டுச்சென்ற இருபத்து 3 கோடி மதிப்பிலான பொருட்களை இந்திய இரயில்வே திருப்பி அனுப்பியுள்ளது.

---

**7.** **பிரதமரின் பாதுகாப்புக் குறைபாடு குறித்து விசாரிக்க நடுவண் உள்துறை அமைச்சகம் அமைத்த குழுவின் தலைவர் யார்?**

**அ) சுதிர் குமார் சக்சேனா ☑**

ஆ) அஜய் பூஷன் பாண்டே

இ) சுர்ஜித் பல்லா

ஈ) ரஞ்சன் கோகோய்



- ✓ பிரதமர் நரேந்திர மோடியின் பஞ்சாப் மாநிலம் பெரோசுபூர் வருகையின்போது பாதுகாப்பு ஏற்பாடுகளில் ஏற்பட்ட குளறுபடிகள் குறித்து விசாரிக்க 3 பேர்கொண்ட குழுவை மத்திய உள்துறை அமைச்சகம் அமைத்தது.
- ✓ அமைச்சரவை செயலகத்தின் செயலாளர் (பாதுகாப்பு) சுதிர் குமார் சக்சேனா தலைமையில் குழு அமைக்கப்படும்.

---

**8.** **'செயற்கை சூரியன்' என்பது எந்த நாட்டின் இலட்சியத் திட்டமாகும்?**

அ) இந்தியா

**ஆ) சீனா ☑**

இ) ரஷ்யா

ஈ) இலங்கை



- ✓ சீனாவின் 'செயற்கை சூரியன்', 17 நிமிடங்களுக்கு (1,056 வினாடிகள்) சூரியனைவிட 5 மடங்கு அதிக வெப்பத்திற்கு எரிந்து மீண்டும் புதிய உலக சாதனை படைத்தது. EAST (Experimental Advanced Superconducting Tokamak) அணுக்கரு இணைவு உலை 158 மில்லியன்° பாரன்ஹீட் (70 மில்லியன்°C) வெப்பநிலையை பராமரித்தது.
- ✓ கடந்த 2003'இல் பிரான்ஸின் டோரே சுப்ரா டோகாமாக், 390 வினாடிகளுக்கு இதேபோன்ற வெப்பநிலையை பராமரித்தது குறிப்பிடத்தக்கது.

---

**9.** **பசுமை ஆற்றல் வழித்தடத் திட்டத்தின் 2ஆம் கட்டத்தில், எத்தனை மாநிலங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன?**

அ) மூன்று

ஆ) ஐந்து

**இ) ஏழு ☑**

ஈ) பத்து



- ✓ பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு பசுமை ஆற்றல் வழித்தடத்திட்டத்தின் 2ஆம் கட்டத்திற்கு ஒப்புதலளித்தது. இத்திட்டத்தின்கீழ், குஜராத், இமாச்சல பிரதேசம், கர்நாடகா, கேரளா, இராஜஸ்தான், தமிழ்நாடு மற்றும் உத்தர பிரதேசம் ஆகிய ஏழு மாநிலங்களில் 20 GW புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திட்டங்கள் நிறுவப்படும்.
- ✓ இத்திட்டத்தின் மதிப்பீடு ₹12,031 கோடி. இந்த மதிப்பீட்டில் 33 சதவீதம் மத்திய அரசு நிதியுதவியாக வழங்கப்படும்.

---

**10.** **அண்மையில் தொடங்கப்பட்ட AI–அடிப்படையிலான காப்புரிமைபெற்ற அமைப்பான 'Clairvoyant'இன் நோக்கம் என்ன?**

அ) வளிமாசைக்கையாளுதல்

**ஆ) நீரைச்சுத்திகரித்தல் ☑**

இ) கிரிப்டோகரன்சி தேடல்

ஈ) கிருமி நீக்கம்

- ✓ மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங், நீர் சுத்திகரிப்புக்காக IIT முன்னாள் மாணவர்களால் தொடங்கப்பட்ட 'ஸ்வஜல் வாட்டர் பிரைவேட் லிட்' என்ற செயற்கை நுண்ணறிவு அடிப்படையில் இயங்கும் துளிர் நிறுவனத்தைத்தொடங்கி வைத்தார். நிறுவனத்தின் காப்புரிமை பெற்ற அமைப்பான, 'Clairvoyant' செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி சுத்திகரிப்பு அமைப்புகளை மேம்படுத்தவும் எதிர்கால பழுதுகளைக் கணிக்கவும் பயன்படுகிறது.
- ✓ இணைய உலக தொழில்நுட்பத்தை சூரிய ஆற்றலுடன் இணைக்கும் சுத்தமான குடிநீர் தீர்வுகளையும் வாட்டர் ATM வடிவில் அவர்கள் உருவாக்கியுள்ளனர்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. மும்பை கடற்படை கப்பலில் வெடி விபத்து: 3 வீரர்கள் பலி**

மும்பை கடற்படை தளத்தில் நிறுத்தப்பட்டிருந்த கப்பலில் ஏற்பட்ட வெடிவிபத்தில் சிக்கி 3 வீரர்கள் பலியாகினர்.

மகாராஷ்டிர மாநிலம் மும்பையில் உள்ள கடற்படை தளத்தில் வெடிவிபத்து ஏற்பட்டது. INS ரன்வீர் கப்பலின் உள்பெட்டியில் ஏற்பட்ட இந்த வெடிவிபத்தில் சிக்கி 3 வீரர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர்.

கடற்படை வீரர்கள் மற்றும் அதிகாரிகள் துரிதமாக செயல்பட்டு வெடிவிபத்தை கட்டுக்குள் கொண்டுவந்தனர். இந்நிலையில் இந்த விபத்து குறித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

---

**2. தேசிய கலைத் திருவிழாவில் தமிழகமாணவர்கள் ஏழு பேருக்கு பரிசு**

மத்திய கல்வி அமைச்சகம் சார்பில் தேசிய அளவில் நடத் கலைத்திருவிழாவில் முதல் முறையாக தமிழகத்தைச் சேர்ந்த 7 மாணவர்கள் பரிசுக்கு தேர்வு பெற்றுள்ளனர்.

பள்ளி மாணவ, மாணவிகளின் கலைத் திறன்களை ஊக்குவிக்கும் வகையில் மத்திய கல்வி அமைச்சகம், தேசிய கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் ஆகியவை இணைந்து தேசிய அளவிலான கலைத்திரு விழா போட்டிகளை கடந்த ஏழு ஆண்டுகளாக நடத்தி வருகிறது. அந்த வகையில் இந்த ஆண்டுக்கான தேசிய போட்டிகள் இணைய வழியில் சென்னை அண்ணா நூற்றாண்டு நூலக அரங்கில் நடைபெற்றன.

இதேபோன்று புது தில்லி, ஆந்திரம், கேரளம் உள்பட அனைத்து மாநிலங்களிலும் இணையவழியில் போட்டிகள் நடத்தப்பட்டன. வாய்ப்பாட்டு, இசை, நடனம்,

சிற்பக்கலை, பொம்மைகள் உருவாக்குதல் என ஒன்பது வகையான போட்டிகளில் ஏராளமான மாணவர்கள் பங்கேற்றிருந்தனர்.

இந்த நிலையில் தேசிய கலைத்திருவிழா போட்டியின் முடிவுகளை மத்திய கல்வி அமைச்சகம் தற்போது வெளியிட்டுள்ளது.

**பரிசுத் தொகை:** வெற்றி பெறுவோருக்கு முதல் பரிசாக தங்கப்பதக்கத்துடன் ₹25,000; 2ஆம் பரிசாக வெள்ளிப் பதக்கத்துடன் ₹20,000; மூன்றாம் பரிசாக வெண்கலப் பதக்கத்துடன் ₹15,000 வழங்கப்படவுள்ளது.

**தமிழகம் முதலிடம்:** இந்த ஆண்டு நடைபெற்ற தேசிய கலைத்திருவிழா போட்டிகளில் தமிழகம் ஏழு பரிசுகளை வென்று முதன்முறையாக முதலிடத்தைப் பிடித்தது. ஐந்து பரிசுகளை வென்று பிகார் இரண்டாம் இடத்தையும், தலா 4 பரிசுகளை வென்று திரிபுரா, புது தில்லி மாநிலங்கள் மூன்றாம் இடத்தையும் பெற்றன. தமிழகத்தில் இந்தப் போட்டிகளை ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வித் திட்ட இயக்ககம் (சமக்ரசிஷா) ஒருங்கிணைத்திருந்தது.

---

### 3. M K பாண்டே ராணுவ துணை தலைமை தளதியாக நியமிக்க ஒப்புதல்

இந்திய ராணுவத்தின் அடுத்த துணை தலைமை தளபதியாக M K பாண்டேயை நியமிக்கும் பரிந்துரைக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளதாக அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போதைய துணை தலைமைத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சி பி மொஹந்தி இம்மாத இறுதியில் ஓய்வு பெறவுள்ள நிலையில், அடுத்த துணை தலைமை தளபதியை நியமிப்பதற்கான ஆலோசனைகள் தொடங்கி உள்ளன. இந்த நிலையில், அருணாசல பிரதேசம், சிக்கிம் உள்ளிட்ட இந்திய இராணுவத்தின் கிழக்குப் பிரிவு தளபதியாக உள்ள லெப்டினன்ட் ஜெனரல் M K பாண்டே அடுத்த துணை தலைமை தளபதியாக நியமிக்க பரிந்துரை செய்யப்பட்டது. இந்தப் பரிந்துரையை மத்திய அரசு ஏற்றுள்ளதாகத் தெரிகிறது. அந்தமான்–நிக்கோபார் தீவுகள் பகுதியில் முப்படைகளின் தலைமைப் பொறுப்பையும் M K பாண்டே வகித்துள்ளார்.

---

### 4. ஃபிஃபா கால்பந்து விருது – சிறந்த வீரர்; ராபர்ட் லெவாண்டோவ்ஸ்கி, சிறந்த வீராங்கனை; அலெக்ஸியா புடெலாஸ்

சர்வதேச கால்பந்து சம்மேளனம் (ஃபிஃபா) வழங்கும் 2021ஆம் ஆண்டுக்கான சிறந்த கால்பந்து வீரர் விருதை போலந்தின் ராபர்ட் லெவாண்டோவ்ஸ்கியும், சிறந்த வீராங்கனை விருதை ஸ்பெயினின் அலெக்ஸியா புடெலாஸும் வென்றனர்.

இதில் லெவாண்டோவ்ஸ்கி (பேயர்ன் முனீச்) தொடர்ந்து 2–ஆவது முறையாக இந்த விருதை வெல்லும் நிலையில், அலெக்ஸியா (பார்சிலோனா) முதல் முறையாக இந்த விருதை கைப்பற்றியிருக்கிறார்.

ஸ்விட்சர்லாந்தின் ஜூரிச் நகரில் உள்ள ஃபிஃபா கால்பந்து தலைமையகத்தில் இந்நிகழ்ச்சி நடத்தப்பட்டது. முனீச்சில் இருந்து காணொலி வழியே நிகழ்ச்சியில் பங்கேற்ற லெவாண்டோவ்ஸ்கியிடம் அவரது கிளப் அதிகாரிகள் விருதை வழங்கினர். அலெக்ஸியாவும் காணொலி வழியே நிகழ்ச்சியில் பங்கேற்றிருந்தார்.

சிறந்த வீரருக்கான வாக்கெடுப்பில் ஆர்ஜென்டீனாவின் லயோனல் மெஸ்ஸி (பாரீஸ் செயின்ட் ஜெர்மெய்ன்), எகிப்தின் முகமது சலா (லிவர்பூல்) ஆகியோரைப் பின்னுக்குத் தள்ளி லெவாண்டோவ்ஸ்கி முதலிடம் பிடித்துள்ளார். மகளிர் பிரிவில், ஆஸ்திரேலியாவின் சாம் கெர் (செல்சி), ஸ்பெயினின் ஜெனிபர் ஹெர்மோசோ (பார்சிலோனா) ஆகியோரைவிட அதிக வாக்குகள் பெற்று அலெக்ஸியா வெற்றியாளர் ஆகியிருக்கிறார்.

கடந்த ஆண்டு டிசம்பரில் வழங்கப்பட்ட பேலன் தோர் கால்பந்து விருதில் ஆடவர் பிரிவில் வெவாண்டோவ்ஸ்கி 2ஆவது இடம் பிடித்திருந்தார். மெஸ்ஸி அதில் விருது வென்றிருந்தார். அதே விருதை மகளிர் பிரிவில் வென்று இருந்த அலெக்ஸியா, இவ்விருதையும் கைப்பற்றியிருக்கிறார்.

விருதுக்கான வாக்கெடுப்பில் தேசிய அணிகளின் கேப்டன்கள், பயிற்சியாளர்கள், ஊடகங்களிடம் இருந்து லெவாண்டோவ்ஸ்கிக்கு பெரும் ஆதரவு கிடைத்துள்ளது. ஆனால் ரசிகர்கள் தரப்பு வாக்குகளை லயோனல் மெஸ்ஸி அள்ளியிருக்கிறார்.

பேயர்ன் முனீச் அணிக்காக 2020–21 சீசனில் 41 கோல்கள் அடித்தும், 2021 காலண்டர் ஆண்டில் 43 கோல்கள் அடித்தும் பந்தெஸ்லிகா போட்டியில் இரு சாதனைகளை முறியடித்திருக்கிறார் லெவாண்டோவ்ஸ்கி. முன்னதாக இந்த சாதனை, அதே பேயர்ன் முனீச் அணியைச் சேர்ந்த ஜெர்மன் வீரரான ஜெர்ட் முல்லர் வசம் இருந்தது.

மகளிர் பிரிவில் சிறந்த வீராங்கனையாக தேர்வாகியிருக்கும் அலெக்ஸியா, தலைமையில் தான் பார்சிலோனா மகளிர் கால்பந்து அணி சாம்பியன்ஸ் லீக் பட்டம் வென்றது.

#### ரொனால்டோவுக்கு சிறப்பு விருது

சர்வதேச அளவில் தேசிய அணிக்காக அதிக கோல்களை அடித்த போர்ச்சுகல் வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோவுக்கு 'ஃபிபா சிறப்பு விருது' வழங்கப்பட்டது. போர்ச்சுகல் அணிக்காக 2003ஆம் ஆண்டு முதல் ஆடி வரும் ரொனால்டோ, இதுவரை 184 ஆட்டங்களில் 115 கோல்கள் அடித்திருக்கிறார். முன்னதாக ஈரான் அணிக்காக அலி டேய் 109 கோல்கள் அடித்ததே நீண்டகாலமாக சாதனையாக இருந்தது.

#### சிறந்த கோல்

2021ஆம் ஆண்டில் சர்வதேச அளவில் அடிக்கப்பட்ட சிறந்த கோலுக்கான விருதை, ஆர்ஜென்டீன வீரர் எரிக் லமேலா வென்றுள்ளார். இங்கிலீஷ் பிரீமியர் லீக் கால்பந்து போட்டியில் ஆர்செனலுக்கு எதிரான ஆட்டத்தில் டாட்டன்ஹாம் ஹாட்ஸ்பருக்காக (தற்போது செவில்லா) அவரடித்த கோல் உலகிலேயே சிறந்ததாகத் தேர்வாகியிருக்கிறது. ஈரான் வீரர் மெஹதி தரேமி (போர்டோ) அடித்த 'பை சைக்கிள் கிக்' கோல், செக்

குடியரசு வீரர் பேட்ரிக் ஷிக் (பேயர் லெவர்குசன்) அடித்த கோல் ஆகியவை லமேலாவுக்கு சவால் அளித்தன.

**சிறந்த கோல்கீப்பர்கள்**

இந்த விருதை ஆடவர் பிரிவில் எட்வர்ட் மெண்டி (செனகல்/செல்சி), மகளிர் பிரிவில் கிறிஸ்டியன் எண்ட்லர் (சிலி/ஒலிம்பிக் லயன்) வென்றனர். இதில் எட்வர்டுக்கு, கியான்லுகி டோனாருமா (இத்தாலி/பாரீஸ் செயின்ட் ஜெர்மெய்ன்), மேனுவல் நியூவர் (ஜெர்மனி/பேயர்ன் முனீச்) ஆகியோரும், கிறிஸ்டியனுக்கு ஸ்டெபானி லேப் (கனடா/பாரீஸ் செயின்ட் ஜெர்மெய்ன்), ஆன் காட்ரின் பெர்கர் (ஜெர்மனி/செல்சி) ஆகியோரும் போட்டியாளர்களா –க இருந்தனர்.

**சிறந்த பயிற்சியாளர்கள்**

ஆடவர் பிரிவில் சிறந்த பயிற்சியாளர் விருதை தாமஸ் டுஷெலும் (ஜெர்மன்/செல்சி), மகளிர் பிரிவில் சிறந்த பயிற்சியாளர் விருதை எம்மா ஹெய்ஸும் பெற்றனர் (இங்கிலாந்து/செல்சி).

வாக்கு அடிப்படையில் ஆடவர் பிரிவில் ராபர்டோ மான்சினி (இத்தாலி) 2–ஆம் இடமும், பெப் குவார்டியாலோ (ஸ்பெயின்/மான்செஸ்டர் சிட்டி) 3ஆம் இடமும் பிடித்து உள்ளனர். மகளிர் பிரிவில் லூயிஸ் கார்டெஸ் (ஸ்பெயின் / பார்சிலோனா), சரினா வெய்க்மான் (நெதர்லாந்து) ஆகியோர் முறையே 2&3ஆம் இடங்களில் இருக்கின்றனர்.

**சிறந்த ரசிகர்கள்**

இவ்விருது டென்மார்க் ரசிகர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. யூரோ கோப்பை போட்டியில் ஃபின்லாந்துக்கு எதிரான ஆட்டத்தின்போது டென்மார்க் வீரர் கிறிஸ்டியன் எரிக்சன் மாரடைப்பு ஏற்பட்டு களத்தில் சரிந்த தருணத்தில், அணியினர் விக்கித்து நிற்க, மைதானத்தில் இருந்த அந்நாட்டு ரசிகர்கள் அணியினருக்கும், எரிக்சனுக்கும் ஆதரவாக எழுப்பிய குரலுக்காக இந்த கௌரவம் அளிக்கப்பட்டது.

**ஃபேர் பிளே விருது**

இந்த விருதும் கிறிஸ்டியன் எரிக்சன் சம்பவத்தின்போது அந்த அணியினர் காட்டிய ஆதரவு, துரிதமான செயல்பாடு, தோளோடு தோள் சேர்த்து நின்ற ஒற்றுமை ஆகியவற்றுக்காக டென்மார்க் அணி வீரர்கள் மற்றும் உதவிப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டது.

**தேர்வு முறை...**

இந்த விருதுக்கான போட்டியாளர்கள் உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தேசிய கால்பந்து அணியின் பயிற்சியாளர்கள், கேப்டன்கள், ஊடகத்தினர், ரசிகர்களின் வாக்குகள் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். ஒவ்வொரு தரப்பின் வாக்குகளும் 25 சதவீதம் என்ற அளவின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டு வெற்றியாளர் தோ்வு செய்யப்பட்டுள்ளனர்.

**1. சமீப செய்திகளில் இடம்பெற்ற PARAKH என்பது எந்தத் துறையுடன் தொடர்புடைய இணையதளமாகும்?**

**அ) மாணவர் கற்றல் மதிப்பீடு ☑**

ஆ) பாதுகாப்பு கொள்முதல்

இ) முதலீட்டு ஆலோசனை

ஈ) சுங்க அனுமதி

✓ தேசிய கல்விக்கொள்கையானது PARAKH (Performance Assessment, Review, மற்றும் Analysis of Knowledge for Holistic Development) என்ற தேசிய மதிப்பீட்டு மையத்தை அறிமுகப்படுத்தியது.

✓ அண்மையில், அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி கவுன்சிலானது (AICTE) இதற்கான இணையதளத்தை தொடங்கியது. இது உயர்கல்வி மற்றும் பள்ளி பயிலும் மாணவர்கள் குறித்த மதிப்பீடுகளை மேற்கொள்ளும்.

---

**2. போபாலில் உள்ள வான் விகார் தேசியப்பூங்கா மற்றும் உயிரியல் பூங்காவின் குலாபோ சமீபத்தில் காலமானது. அது ஒரு ____?**



அ) ஒற்றைக் கொம்பு காண்டாமிருகம்

**ஆ) தேன் கரடி ☑**

இ) வங்கப்புலி

ஈ) இராட்சத ஆமை

✓ இந்தியாவின் வயதான தேன் கரடி 'குலாபோ', போபாலில் உள்ள வான் விகார் தேசியப் பூங்கா மற்றும் உயிரியல் பூங்காவில் தனது 40ஆம் வயதில் இறந்தது. இந்தப் பெண் கரடி, கடந்த 2006ஆம் ஆண்டு தனது 25 வயதில் தெருக் கலைஞரிடமிருந்து மீட்கப்பட்டது.

✓ மூப்புகாரணமாக உள்ளுறுப்புகள் செயலிழந்ததே தேன் கரடியின் இறப்புக்குக்காரணம் என உடற்கூறு பரிசோத –னைமூலம் தெரியவந்தது.

---

**3. 'செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்' அமைந்து உள்ள நகரம் எது?**

அ) மதுரை

**ஆ) சென்னை ☑**

இ) கோயம்புத்தூர்

ஈ) திருச்சிராப்பள்ளி

✓ சென்னை நகரத்தின் புறநகர்ப் பகுதியில் உள்ள பெரும்பாக்கத்தில் 'செம்மொழித்தமிழாய்வு மத்திய நிறுவ –னத்தின் புதிய வளாகத்தை பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்தார். இது முன்னர் 'செம்மொழித் தமிழுக்கா –ன சிறப்பு மையம்' என அறியப்பட்டது.

✓ இது நடுவண் கல்வி அமைச்சகத்தின் கீழ் உள்ள ஒரு தன்னாட்சி அமைப்பாகும். இது 2006 முதல் 2008 வரை மைசூருவில் உள்ள இந்திய மொழிகளுக்கான மத்திய நிறுவன வளாகத்தில் செயல்பட்டு வந்தது.

---

**4. மூன்றாவது தேசிய நீர் விருதுகள்–2020'இல் 'சிறந்த மாநிலப்' பிரிவில் முதல் பரிசை வென்ற மாநிலம் எது?**



அ) தமிழ்நாடு

**ஆ) உத்தர பிரதேசம் ☑**

இ) குஜராத்

ஈ) மகாராஷ்டிரா

✓ மூன்றாவது தேசிய நீர் விருதுகள்–2020'இல் 'சிறந்த மாநிலப் பிரிவில்' உத்தர பிரதேச மாநிலத்துக்கு முதல் பரிசு வழங்கப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து ராஜஸ்தான் மற்றும் தமிழ்நாடு உள்ளது. நீர்வளங்கள், ஆற்று மேம்பாடு மற்றும் கங்கை புத்துயிர் துறை, ஜல் சக்தி அமைச்சகம் ஆகியவை மாநிலங்கள், நிறுவனங்கள், தனிநபர்கள் போன்றவற்றுக்கு 11 வெவ்வேறு பிரிவுகளில் 57 விருதுகளை வழங்குகிறது.

✓ நீர் மேலாண்மையில் முழுமையான அணுகுமுறையை கடைப்பிடிக்க அது அவற்றை ஊக்குவிக்கிறது. மேலும் சிறந்த நீர் பயன்பாட்டு நடைமுறைகளை பின்பற்ற மக்களை அது ஊக்குவிக்கிறது.

---

**5. ₹2,000 கோடி மதிப்பிலான பால் பண்ணை கூட்டு நிறுவனத்தை உருவாக்க, 'தேசிய பால்வள மேம்பாட்டு வாரியத்துடன்' ஒப்பந்தம் செய்துள்ள மாநிலம் எது?**

அ) பஞ்சாப்

**ஆ) அஸ்ஸாம் ☑**

இ) குஜராத்

ஈ) அருணாச்சல பிரதேசம்

✓ அஸ்ஸாம் அரசும் தேசிய பால்வள மேம்பாட்டு வாரியமும் மாநிலத்தில் இத்துறையின் முழுமையான வளர்ச்சிக்காக ₹2,000 கோடி மதிப்பிலான கூட்டு நிறுவனத்தை உரு –வாக்குவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

✓ இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி, 7 ஆண்டுகளில் ஆறு புதிய அலகுகளில் இருந்து 10 இலட்சம் லிட்டர் பாலை பதப்படுத்தும் நோக்குடன் ₹2,000 கோடியில் ஒரு கூட்டு நிறுவனம் அமைக்கப்படும். உலக வங்கியின் நிதியுதவி உடன் கூடிய, 'அஸ்ஸாம் வேளாண் வணிகம் மற்றும் கிராமப்புற போக்குவரத்துத் திட்டத்தின்'கீழ் இதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

---

**6. NSO'இன் முதல் முன்கூட்டிய உத்தேச மதிப்பீடுகளின்படி, 2021-22 நிதியாண்டிற்கான GDP வளர்ச்சி என்னவாக இருக்கும்?**




அ) 8.5%

**ஆ) 9.2% ☑**

இ) 10%

ஈ) 11.5%

✓ தேசிய புள்ளியியல் அலுவலகம் (NSO) 2021–2022ஆம் நிதியாண்டிற்கான ஆண்டு வருமானத்தின் முன்கூட்டிய உத்தேச மதிப்பீடுகளை வெளியிட்டுள்ளது. 2021–2022ம் ஆண்டில் ஜிடிபி வளர்ச்சி 9.2 சதவீதமாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. 2020–2021'ம் ஆண்டில் இது 7.3 சதவீதமாக இருந்தது.

✓ மதிப்பீடுகளின்படி, இந்தியப்பொருளாதாரம் உலகின் மிக வேகமாக வளர்ந்துவரும் பெரிய பொருளாதாரமாக அதன் நிலையை மீண்டும் பெறுவதற்கான பாதையில் உள்ளது. 9.5% வளர்ச்சி இருக்கும் என இந்திய ரிசர்வ் வங்கியும் கணித்துள்ளது.

---

**7. எந்த ஆண்டில், முதல் ஸ்டார்ட்-அப் இந்தியா 'புத்தாக்க வாரம்' தொடங்கப்பட்டது?**

அ) 2015

ஆ) 2017

இ) 2019

**ஈ) 2021 ☑**




✓ இந்திய அரசாங்கம், 2021 ஜன.10 அன்று முதல் ஸ்டார்ட் அப் இந்தியா 'புத்தாக்க வாரத்தை' ஏற்பாடு செய்தது. இது புத்தாக்கங்களை ஊக்குவிக்கும் நோக்கிற்காக துளிர் நிறுவல்கள், தொழில்முனைவோர்கள், முதலீட்டாளர்கள், அடைவுகள், நிதி நிறுவனங்கள், வங்கிகள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களை ஒரே தளத்தின் கீழ் ஒன்றிணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ தொழிலக & உள்நாட்டு வணிக மேம்பாட்டுத்துறை (DPIIT) இந்தப் புத்தாக்கக் கொண்டாட்டத்தை ஏற்பாடு செய்தது.

---

**8. கடவுச்சீட்டு சேவை திட்டம் 2.0'க்கான சேவை வழங்கு -நராக உள்ள தொழில்நுட்ப நிறுவனம் எது?**

அ) டெக் மஹிந்திரா

**ஆ) TCS ☑**

இ) அக்செஞ்சர்

ஈ) விப்ரோ

✓ பாஸ்போர்ட் சேவா திட்டத்தின் இரண்டாம் கட்டத்திற்கு டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் நிறுவனத்தை வெளியுறவு அமைச்சகம் தேர்வு செய்துள்ளது.

✓ 2008'இல் அறிமுகப்படுத்தப்பட்ட இதன் முதல் கட்டத்தை டிசிஎஸ் வெற்றிகரமாக செயல்படுத்தியது. கடவுச்சீட்டு தொடர்பான சேவைகளை வழங்குவதை மேம்படுத்துதல், செயல்முறைகளை டிஜிட்டல் மயமாக்குதல், காலக்கோட் -டை விரைவாகக் கண்காணித்தல் மற்றும் வெளிப்படை -த்தன்மையை மேம்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமா -கக் கொண்டதாகும் இது.

---

**9. தேர்தல் ஆணையத்தின் அண்மைய அறிவிப்பின்படி, மக்களவைத் தேர்தலுக்கான வேட்பாளர்களின் செலவு உச்சவரம்பு என்ன?**

**அ) ₹95 இலட்சம் ☑**

ஆ) ₹75 இலட்சம்

இ) ₹60 இலட்சம்

ஈ) ₹50 இலட்சம்



✓ மக்களவைத் தேர்தலுக்கான வேட்பாளர்களுக்கான செலவு உச்சவரம்பை ₹70 இலட்சத்தில் இருந்து ₹95 இலட்சமாக உயர்த்தி தேர்தல் ஆணையம் அறிவித்தது.

✓ தேர்தல் ஆணையம் செலவு காரணிகள் மற்றும் பிற சிக்கல்கள் குறித்து ஆய்வுசெய்ய ஒரு குழுவை அமைத்தது. சட்டமன்றத் தேர்தல்களுக்கு, வேட்பாளர்களுக்கான திருத்தப்பட்ட செலவின வரம்பு பெரிய மாநிலங்களுக்கு ₹40 இலட்சமாக உள்ளது. இது முன்னர் ₹28 இலட்சமாக இருந்தது. சிறு மாநில வேட்பாளர்களுக்கான வரம்பு ₹20 இலட்சத்திலிருந்து ₹28 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

---

**10. இந்தியாவின் முதல் பல பரிமாண 'சாகச விளையாட்டுப் பயணம்' நடத்தப்பட்ட நாடு எது?**

அ) அமெரிக்கா

**ஆ) பிரான்ஸ் ☑**

இ) சுவிட்சர்லாந்து

ஈ) ஆஸ்திரேலியா



✓ இந்தியாவின் முதல் பல பரிமாண 'சாகச விளையாட்டுப் பயணம்' 2021 அக்.27 அன்று தொடங்கப்பட்டது. இது பிரான்ஸில் உள்ள தேசிய மலையேற்ற மற்றும் அதனைச் சார்ந்த விளையாட்டுப் பயிற்சி நிறுவனத்தால் (NIMAS) நடத்தப்பட்டது. சமீபத்தில், பிரான்ஸ் நாட்டில் நடத்திய, சாகச விளையாட்டுப் பயணத்தில் பங்கேற்றுத் திரும்பிய, இந்தியாவின் முதலாவது பல-பரிமாணக் குழுவை பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் வரவேற்றார்.

✓ இந்தக் குழுவினர், ஆல்ப்ஸ் மலைத்தொடரில், பிரான்ஸ், சுவிசர்லாந்து மற்றும் இத்தாலி நாடுகளில், 250 கிமீக்கும் அதிக தொலைவுக்கு, குளிர்கால மலையேற்றத்தில் ஈடுபட்டனர். அதன் தொடர்ச்சியாக, ஆல்ப்ஸ் மலைத் தொடரிலிருந்து இங்கிலீஷ் கால்வாய் வரை 975 கிமீட்டர் தொலைவுக்கு உடலை நடுங்கவைக்கும் குளிரில், சராசரியாக, ஒரு நாளைக்கு 09-10 மணி நேரம் என்ற அளவிற்கு மிதிவண்டி பயணத்தையும் மேற்கொண்டனர்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. இந்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு முகமையில் ₹1500 கோடி முதலீட்டுக்கு அமைச்சரவை ஒப்புதல்**

இந்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு முகமையில் ₹1500 கோடி முதலீட்டுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.

சுமார் 10,200 பணி-வருடங்கள் வேலைவாய்ப்பு உருவா -க்கத்திற்கும், வருடத்திற்கு சுமார் 7.49 மில்லியன் டன் கரியமில வாயு உமிழ்வைக் குறைக்கவும் இந்த முதலீடு உதவும்.

இந்திய அரசு கூடுதலாக ₹1500 கோடி முதலீடு செய்வதன் காரணமாக இந்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு முகமை கீழ்காணும் பலன்களை பெறும்:

1. புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறைக்கு ₹12000 கோடி கடன் வழங்க முடியும், இதன்மூலம் 3500-4000 மெகாவாட் கூடுதல் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி திறனுக்கான கடன் தேவை நிறைவு செய்யப்படும்.

2. புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் இந்திய அரசின் இலக்குகளை எட்டுவதற்கு பங்காற்றும் வகையில் அந்தத் துறையின் நிகர மதிப்பை அதிகரித்து கூடுதல் புதுப்பிக்கக் கூடிய எரிசக்தி திட்டங்களுக்கு கூடுதல் நிதிவசதி ஏற்படும்.

3. கடன் வழங்கும் மற்றும் கடன் பெறும் செயல்களுக்கு வசதியளிக்கும் வகையில், மூலதனத்தையும் ஆபத்தையும் சரிபார்த்து மதிப்பீடுசெய்த சொத்து விகிதாச்சாரம் மேம்படும்.

புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் 'மினி இரத்னா' (வகை-1) நிறுவனமான இந்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு முகமை, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறைக்கு எ எனத் தனியாக, வங்கி அல்லாத நிதி நிறுவனமாக, 1987'இல் உருவாக்கப்பட்டது.

34 ஆண்டுகளுக்கும் மேலான தொழில்நுட்ப-வணிக நிபுணத்துவம் கொண்ட இந்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு முகமை, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களு -க்கான நிதியளிப்பில் முக்கியப்பங்கு வகிக்கிறது.

---

**2. ஜன.19 – தேசிய பேரிடர் மீட்புப் படை நாள்**

---

**3. ஜன. 27இல் இந்தியா-மத்திய ஆசியா மாநாடு**

இந்தியா – மத்திய ஆசிய நாடுகளிடையேயான மாநாடு முதல் முறையாக வரும் ஜனவரி 27-இல் காணொலி வாயிலாக நடைபெறவுள்ளது. இதில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்று உரையாற்றுகிறார்.

இந்த மாநாட்டில் கஜகஸ்தான், கிர்கிஸ்தான் குடியரசு, தஜிகிஸ்தான், துர்க்மெனிசுதான், உஸ்பெகிஸ்தான் ஆகிய 5 நாடுகளின் அதிபர்கள் பங்கேற்கின்றனர். இந்தியா-மத்திய ஆசிய நாடுகளின் தலைவர்கள் அளவில் நடைபெறும் முதல் மாநாடு இதுவே ஆகும்.

இதுகுறித்து மத்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பு விவரம்:

இந்தியா – மத்திய ஆசியா பேச்சுவார்த்தையின் ஒரு பகுதியாக அதன் வெளியுறவு அமைச்சர்கள் நிலையிலான 3ஆம் கட்ட சந்திப்பு, கடந்த டிசம்பர்.18 முதல் 20ஆம் தேதி வரை தில்லியில் நடைபெற்றது. இந்தக் கூட்டம் இந்தியா-மத்திய ஆசிய நாடுகள் இடையிலான நட்புறவுக்கு உத்வேகம் அளித்தது.

ஆப்கானிஸ்தான் விவகாரம் மீதான பிராந்திய பாதுகாப்புப் பேச்சுவார்த்தை கடந்த ஆண்டு நவம்பர்.10'இல் தில்லியில் நடைபெற்றது. இதில், மத்திய ஆசிய நாடுகளின் தேசிய பாதுகாப்பு கவுன்சில் செயலர்கள் பங்கேற்றது. ஆப்கானிஸ்தான் விவகாரத்தில் பொதுவான பிராந்திய அணுகுமுறையை வெளிப்படுத்தியது.

இந்தியா – மத்திய ஆசிய நாடுகளின் முதல் மாநாட்டில் இருதரப்பு உறவை புதிய உயரத்துக்கு கொண்டு செல்வதற்கான உத்திகள் குறித்து தலைவர்கள் விவாதிப் -பர். மேலும், பிராந்திய பாதுகாப்புச் சூழல், சர்வதேச பிரச் -னைகள் குறித்து தலைவர்கள் தங்கள் கருத்துகளைப் பகிர்ந்துகொள்வர் என அதில் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

---

**4. இந்திய டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா ஓய்வு பெறுவதாக அறிவிப்பு!**

இந்தியாவின் நட்சத்திர டென்னிஸ் வீராங்கனையான சானியா மிர்சா 2003-ம் ஆண்டு முதல் இந்தியாவிற்காக விளையாடி வருகிறார். இதுவரை ஆறு கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ளார். 14ஆவது ஆஸ்திரேலியன் ஓப்பன் டென்னிஸ் போட்டிகளில் கலந்துகொண்டிருக்கும் சானியா மிர்சா 19 வருடங்களாக விளையாடி வருகிறார்.

இந்த நிலையில் ஆஸ்திரேலியன் ஓப்பன் டென்னிஸ் போட்டியின் மகளிர் இரட்டையர் முதல் சுற்றில் கலந்துகொண்டார் சானியா மிர்சா. பெண்கள் இரட்டையர் பிரிவில் நடந்த அரை இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் சானியா மிர்சா – உக்ரைனின் நாடியா கிச்னோக் இணை ஆஸ்திரேலியாவின் ஆஷ்லி பார்ட்டி – ஸ்டோர்ம் சான்டெர்ஸ் ஜோடியுடன் மோதியது. இதில் சானியா மிர்சா ஜோடி தோல்வி அடைந்தது.

இதைத்தொடர்ந்து சானியா மிர்சா டென்னிசில் இருந்து ஓய்வு பெறுவதாக இன்று அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

---

**5. ₹2.3 கோடியில் செல்லம்மாள் பாரதி மையம் – சபாநாயகர் மு அப்பாவு அடிக்கல் நாட்டினார்.**

கடையத்தில் ₹2.3 கோடி மதிப்பில் கட்டப்படவுள்ள செல்லம்மாள் பாரதி மையத்திற்கு சபாநாயகர் மு அப்பாவு அடிக்கல் நாட்டினார்.

---

**6. முன்னாள் நீதியரசர் சி டி செல்வம் தலைமையில் புதிய காவல் ஆணையம்: முதல்வர் ஸ்டாலின் உத்தரவு**

காவலர் – பொதுமக்கள் நல்லுறவு மேம்படவும், காவலர் நலன் காத்திடவும் முன்னாள் நீதியரசர் சி.டி.செல்வம் தலைமையிலான புதிய காவல் ஆணையத்திற்கு தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், "காவலர் – பொதுமக்களுக்கு இடையேயான உறவை மேம்படுத்தவும், காவல்துறை பணியாளர்களுக் -கு நலத்திட்டங்களைச் செயல்படுத்திடவும், புதிய பயிற்சி முறைகளைப் பரிந்துரைத்திடவும் சென்னை உயர் நீதி மன்ற முன்னாள் நீதியரசர் சி டி செல்வம் தலைமையில் புதிய காவல் ஆணையம் அமைத்திட தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இந்த ஆணையம், காவலர்களின் நலன் மற்றும் காவல்துறையின் பல்வேறு அம்சங்களை விரிவாக ஆய்வு செய்து, குறிப்பிட்ட காலவரையறைக்குள் அரசுக்குத் தனது பரிந்துரைகளை அளிக்கும். காவல்துறையின் செயல்பாடுகளைச் சிறப்பாக மேம்படுத்துவதற்கும், இணையவழிக் குற்றங்களைத் தடுத்திடவும், சேவை வழங்குவதில் மனிதாபிமானத்துடன் கூடிய நட்புறவோடு பொதுமக்களை அணுகுவதற்கும், உரிய நடவடிக்கைகள் மூலமாகக் காவல்துறையினரின் சேவையை மேலும் வலுவூட்டுவதற்கும், இந்த ஆணையத்தின் பரிந்துரைகள் வழிகாட்டியாகவும், உறுதுணையாகவும் அமைந்திடும்" என்று தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.

---

**7. கின்னஸ் உலக சாதனை படைத்த உலகின் வயதான மனிதர் 112 வயதில் காலமானார்**

உலகின் மிக வயதான மனிதராக கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்த ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த சாடர்னினோ டிலா ப்யூன்டே நேற்று முன்தினம் தனது 112ஆவது வயதில் காலமானார்.

ஸ்பெயின் நாட்டின் வடமேற்கில் உள்ள லியோன் நகரைச் சேர்ந்தவர் சாடர்னினோ டிலா ப்யூன்டே. இவரை உலகின் மிக வயதான மனிதராக கின்னஸ் சாதனைப் புத்தகம் கடந்த செப்டம்பர் மாதம் அறிவித்தது.

**1.** **RBI'இன் அண்மைய அறிக்கையின்படி, குறைதீர்ப்புத் திட்டத்தின்கீழ் அதிகபட்ச புகார்களைப்பெற்ற மண்டலம் எது?**

அ) தென் மண்டலம்

ஆ) கிழக்கு மண்டலம்

**இ) வடக்கு மண்டலம் ☑**

ஈ) மேற்கு மண்டலம்

✓ இந்திய ரிசர்வ் வங்கி (RBI) 2020 ஏப்ரல் – 2021 மார்ச்சில் பல்வேறு குறைதீர்க்கும் திட்டங்களின்கீழ் 4,04,143 புகார்களைப் பெற்றுள்ளது. புகார்களின் அளவு 22.27% சதவீதம் அதிகரித்துள்ளது. சண்டிகர், கான்பூர் மற்றும் தில்லி ஆகியவை அதிகபட்ச புகார்களைப் பெற்றுள்ளன. மேலும் 2020-21'இல் வடக்கு மண்டலத்தில் அதிகபட்ச புகார்கள் (43.10 சதவீதம்) வந்துள்ளன. அதைத் தொடர்ந்து மேற்கு மற்றும் தெற்கு மண்டலங்கள் உள்ளன.

✓ கிழக்கு மண்டலம் தொடர்ந்து குறைவான புகார்களைக் கொண்டுள்ளது. ATM மற்றும் பற்றட்டைகள், மொபைல் பேங்கிங் மற்றும் கடனட்டைகள் ஆகியவை புகார்களின் முக்கிய காரணங்களாக உள்ளன.

---

**2.** **இந்தியாவுடன் முறையான கட்டற்ற வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தைகளை சமீபத்தில் தொடங்கிய நாடு எது?**

அ) அமெரிக்கா



**ஆ) இங்கிலாந்து ☑**

இ) ரஷ்யா

ஈ) ஜப்பான்

✓ 2030ஆம் ஆண்டிற்குள் இந்தியாவிற்கும் இங்கிலாந்திற்கும் இடையிலான வர்த்தகத்தை இரட்டிப்பாக்கும் நோக்குடன், முறையான கட்டற்ற வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தைகளை இருநாடுகளும் தொடங்கின. இருநாடுகளுக்கு இடையிலான இந்த இருதரப்பு வர்த்தகத்தின் மதிப்பு ஆண்டுக்கு சுமார் $50 பில்லியன் ஆகும்.

✓ விவசாயம் மற்றும் பால்வளத்துறைபோன்ற முக்கியமான துறைகளில் இருநாடுகளும் ஒப்பந்தித்துள்ளதாக வர்த்தக அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்தார்.

---

**3.** **தொலைக்காட்சி மதிப்பீடு புள்ளி (TRP) சேவைகளை வலுப்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட பணிக்குழுவின் தலைவர் யார்?**

**அ) சசி சேகர் வேம்படி ☑**



ஆ) அனுராக் சிங் தாக்கூர்

இ) L முருகன்

ஈ) சுகந்த் வத்சா

✓ மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகமானது செய்தி சேனல்களின் பார்வையாளர் மதிப்பீட்டை உடனடியாக வெளியிடுமாறு தொலைக்காட்சி கண்காணிப்பு நிறுவனமான பிராட்காஸ்ட் ஆடியன்ஸ் ரிசர்ச் கவுன்சில் இந்தியாவை (BARC) கேட்டுக்கொண்டுள்ளது.

✓ பிரசார் பாரதியின் தலைமைச் செயல் அதிகாரி சசி சேகர் வேம்படியின் தலைமையில் செயற்குழு ஒன்றை தகவல் மற்றும் ஒலிபரப்புத்துறை அமைச்சகம் அமைத்துள்ளது. இது தொலைக்காட்சி மதிப்பீடு புள்ளி (TRP) சேவைகளை வலுப்படுத்துவதற்காக அமைக்கப்பட்டுள்ளது.

---

**4.** **ககன்யான் திட்டத்தின் பணியாளர் திறன் என்ன?**

அ) 2

**ஆ) 3 ☑**

இ) 4

ஈ) 5

✓ ககன்யான் திட்டத்திற்கான கிரையோஜெனிக் எஞ்சினின் தகுதிச்சோதனையை இந்திய விண்வெளி ஆய்வுமையம் (ISRO) 720 வினாடிகளுக்கு வெற்றிகரமாக நடத்தியது.

✓ தமிழ்நாட்டின் மகேந்திரகிரியில் அமைந்துள்ள இஸ்ரோ உந்துதல் வளாகத்தில் இச்சோதனை நடத்தப்பட்டது. இந்த நீண்டகால சோதனையானது, ககன்யான் திட்டத்தின் ஒரு முக்கிய மைல்கல்லாக பார்க்கப்படுகிறது.

---

**5.** **முர்ரி என்பது பின்வரும் எந்த நாட்டின் பிரபலமான மலைவாசஸ்தலமாகும்?**

அ) இலங்கை



**ஆ) பாகிஸ்தான் ☑**

இ) ஆப்கானிஸ்தான்

ஈ) நேபாளம்

✓ பாகிஸ்தானின் பிரபலமான மலைவாசஸ்தலமான முர்ரி, வரலாறு காணாத பனிப்பொழிவு காரணமாக குறைந்தது 21 பேர் உறைந்து இறந்ததை அடுத்து, 'பேரிடர் பாதித்த பகுதி'யாக அறிவிக்கப்பட்டது.

✓ 'முர்ரி' என்பது பாகிஸ்தானின் பஞ்சாப் மாநிலத்தின் இராவல்பிண்டி மாவட்டத்தில் உள்ள பிர்பஞ்சால் மலைத் தொடரில் அமைந்துள்ள ஒரு மலையக நகரமாகும்.

---

**6.** **'பிரவாசி பாரதிய திவாஸ்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?**

**அ) ஜனவரி 9 ☑**

ஆ) ஜனவரி 10

இ) ஜனவரி 11

ஈ) ஜனவரி 12

✓ ஜன.9 அன்று, இந்திய அரசாங்கத்துடன் வெளிநாடுகளில் உள்ள இந்திய சமூகத்தின் ஈடுபாட்டை வலுப்படுத்துவதற்காக 'பிரவாசி பாரதிய திவாஸ்' அனுசரிக்கப்பட்டது. 1915ஆம் ஆண்டில், மகாத்மா காந்தி தென்னாப்பிரிக்காவில் இருந்து இந்தியா திரும்பியதை நினைவுகூரும் விதமாக இந்த நிகழ்வு ஜனவரி.9 அன்று கொண்டாடப்படுகிறது.

---

**7.** **மெல்போர்ன் சம்மர் செட் ATP 250 நிகழ்வு பட்டத்தை வென்ற டென்னிஸ் வீரர் யார்?**

அ) ரோஜர் பெடரர்



**ஆ) ரபேல் நடால் ☑**

இ) டேனியல் மெட்வெடேவ்

ஈ) நோவக் ஜோகோவிச்

✓ டென்னிஸ் வீரர் ரபேல் நடால் சமீபத்தில் மெல்போர்ன் சம்மர் செட் ஏடிபி 250 நிகழ்வு பட்டத்தை வென்றார். 20 முறை கிராண்ட்ஸ்லாம் வென்ற சாம்பியனான அமெரிக்க வீரர் மேக்சிம் கிரெஸ்ஸியை நடால் தோற்கடித்தார். இது ரபேல் நடாலின் 89ஆம் சுற்றுப்பயண நிலை பட்டமாகும்.

---

**8. ஆசிய உட்கட்டமைப்பு & முதலீட்டு நிதியத்தின் (AIIB) புதிய துணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள இந்தியர் யார்?**



அ) இரகுராம் இராஜன்

**ஆ) உர்ஜித் படேல் ☑**

இ) D சுப்பாராவ்

ஈ) Y V ரெட்டி

✓ இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) முன்னாள் ஆளுநரான உர்ஜித் படேல், ஆசிய உட்கட்டமைப்பு மற்றும் முதலீட்டு வங்கியின் (AIIB) துணைத் தலைவராக நியமிக்கப்பட்டு உள்ளார். பெய்ஜிங்கை தளமாகக் கொண்ட இப்பலதரப்பு வங்கியின் ஐந்து துணைத் தலைவர்களுள் ஒருவராக அவர் மூன்றாண்டு காலம் பணியாற்றுவார்.

---

**9. 'மிஷன் பர்வாரிஷ்' உடன் தொடர்புடைய மாநிலம் எது?**



**அ) அஸ்ஸாம் ☑**

ஆ) உத்தர பிரதேசம்

இ) பஞ்சாப்

ஈ) மகாராஷ்டிரா

✓ அஸ்ஸாம் மாநிலத்தின் கச்சார் மாவட்டம் 'மிஷன் பர்வாரிஷ்' என்ற திட்டத்தை மேற்கொண்டது. அது ஆறு மாதங்கள் முதல் ஐந்து வயது வரை உள்ள எண்ணூறு குழந்தைகளில் 704 குழந்தைகளை கடுமையான ஊட்டச்சத்து குறைபாட்டிலிருந்து மீட்டுள்ளது.

✓ அரசாங்க நிறுவனங்கள், உள்ளூர் சிவில் அமைப்புகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் வணிகர்களை உள்ளடக்கிய இந்தத்திட்டம் அண்மையில் 'SKOCH' விருதை வென்றது.

---

**10. இந்தியாவில் நீர் மெட்ரோ திட்டம் கொண்ட முதல் நகரம் எது?**



அ) சென்னை

ஆ) கொல்கத்தா

**இ) கொச்சி ☑**

ஈ) மும்பை

✓ கேரளாவின் கொச்சி நகரம் மின்கலம்மூலம் இயங்கும் மின்சார படகுகளை அறிமுகப்படுத்திய பிறகு, நீர் மெட்ரோ திட்டத்தைக்கொண்ட இந்தியாவின் முதல் நகரமாக மாறியது. அடையாளங்காணப்பட்ட 15 வழித்தடங்களுடன் ஒருங்கிணைந்த நீர்வழிப் போக்குவரத்து அமைப்பை உருவாக்குவதை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டு உள்ளது. கொச்சி மெட்ரோ இரயில் லிமிடெட் மூலம் இது இயக்கப்படுகிறது.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. நிகழாண்டில் 3 இடங்களில் புதிதாக அகழாய்வுகள்: 4 பகுதிகளில் தொடர் ஆய்வுகள்**

தமிழகத்தில் நிகழாண்டில் மூன்று இடங்களில் புதிதாக அகழாய்வுப் பணிகள் நடைபெறும் என்று முதல்வர் மு க ஸ்டாலின் அறிவித்துள்ளார். மேலும், நான்கு இடங்களில் பல்வேறு நிலைகளில் உள்ள ஆய்வுப்பணிகள் நிகழாண்டிலும் தொடர்ந்து நடக்கும் என அவர் அறிவிப்புச் செய்துள்ளார்.

இதுகுறித்து, அவர் வெளியிட்ட அறிவிப்பு:

கீழடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள இடங்களில் எட்டாம் கட்ட அகழாய்வும், தூத்துக்குடி மாவட்டம் சிவகளையில் மூன்றாம் கட்டமும், அரியலூர் மாவட்டம் கங்கைகொண்ட சோழபுரத்தில் இரண்டாம் கட்டமும், கிருஷ்ணகிரி மாவட்டம் மயிலாடும்பாறையில் இரண்டாம் கட்டமாகவும் அகழாய்வுப் பணிகள் நடைபெறும்.

**முதற்கட்டப்பணிகள்:** முதற்கட்டமாக விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம் துலுக்கர்பட்டி, தருமபுரி மாவட்டம் பெரும்பாலை ஆகிய இடங்களில் அகழாய்வுப் பணிகள் நடக்கும். திருநெல்வேலி மாவட்டம் வள்ளியூரில் இருந்து ஆறு கிமீ தொலையில் நம்பி ஆற்றின் இடது கரையில் அமைந்துள்ள துலுக்கர்பட்டியில் நடைபெறவுள்ள முதல்கட்ட ஆய்வானது, இரும்புக்காலப் பண்பாட்டின் வேர்களைத் தேடுவதாக இருக்கும்.

விருதுநகர் மாவட்டம் சிவகாசியிலிருந்து 15 கிமீ தொலை –வில் வைப்பாறு ஆற்றின் இடதுகரையில் அமைந்துள்ள வெம்பக்கோட்டையில் ஏற்கெனவே, நுண்கற்கருவிகள், பல்வேறு வகையான மணிகள், அலங்கரிக்கப்பட்ட சங்கு வளையல்கள், காதணிகள், சுடுமண்ணால் ஆன வட்டுகள், இரும்புக் கசடுகள் ஆகியன கிடைத்துள்ளன.

இப்போது அங்கு மேற்கொள்ளப்பட உள்ள அகழாய்வின் நோக்கமானது, அதிக எண்ணிக்கையில் நுண்கற்கருவி –களை சேகரிப்பதாக அமையும்.

தருமபுரி மாவட்டம் பென்னாகரத்தில் இருந்து 25 கிமீ தொலையில் பாலாறு ஆற்றின் இடதுகரையில் பெரும்பாலை அமைந்துள்ளது. காவிரியின் கிளை ஆறான பாலாற்றின் ஆற்றங்கரைகளில் இரும்புக்காலப் பண்பாட்டின் வேர்களைத் தேடுவதே அங்குள்ள முதல் கட்ட ஆய்வின் நோக்கமாக இருக்கும்.

**கொற்கைத் துறைமுகம்:** தன்பொருநை ஆற்றின் முகத் துவாரத்துக்கு எதிரில் கடற்கரையோர முன்கள புலஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும். அதில் முதல் கட்டமாக சங்ககால கொற்கைத் துறைமுகத்தின் தொல்லியல் வளத்தைக் கண்டறிய கடலோரங்களில் ஆய்வு மேற்கொள்ளப்படும். இந்தியக் கடலாய்வு பல்கலைக்கழகம் மற்றும் தேசிய கடல்சார் தொழில்நுட்ப நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து கடலாய்வு மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

அகழாய்வுப் பணிகள் வரும் பிப்ரவரி மாதம் முதல் வாரத்தில் தொடங்கி செப்டம்பர் இறுதி வரை நடைபெறும்.

**2. ராணுவத்துக்கு 'ஏடி4' பீரங்கி எதிர்ப்பு ஆயுதம்: ஒப்பந்தம் பெற்றது ஸ்வீடன் நிறுவனம்**

இந்திய ராணுவத்துக்கு 'ஏடி4' பீரங்கி எதிர்ப்பு ஆயுதங்களைத் தயாரித்து வழங்குவதற்கான ஒப்பந்தத்தை ஸ்வீடன் நிறுவனம் பெற்றுள்ளது.

ஸ்வீடனில் உள்ள சாப் நிறுவனம், இராணுவத்துக்குத் தேவையான ஆயுதங்களை உற்பத்தி செய்து வருகிறது. அந்நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

பலத்த போட்டிக்குப் பிறகு, இந்திய ராணுவத்துக்கு 'ஏடி4' பீரங்கி எதிர்ப்பு ஆயுதங்களை வழங்கும் ஒப்பந்தத்தை சாப் நிறுவனம் பெற்றுள்ளது. அந்த ஆயுதங்கள் விமானப் படையிலும் பயன்படுத்தப்படுகின்றன. இந்த ஆயுதத்தை வீரர் ஒருவரே தனது தோள்பட்டையில் வைத்து பயன்படுத்த முடியும்.

எதிரியின் இருப்பிடம், போர்க்கப்பல், ஹெலிகாப்டர்கள், பீரங்கி வண்டிகள் மற்றும் வீரர்களை இந்த ஆயுதத்தால் எளிதில் குறிவைத்துத் தாக்க முடியும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**3. பிரதமர் நரேந்திர மோடி மற்றும் மொரிஷியஸ் பிரதமர் பிரவீந்த் குமார் ஜுக்நாத் ஆகியோர் இணைந்து திட்டங்களை தொடங்கி வைக்க உள்ளனர்**

இந்திய உதவியுடன் கட்டப்பட்ட சமூக வீட்டு வசதி அலகுகளை பிரதமர் திரு நரேந்திர மோடி மற்றும் மொரிஷியஸ் பிரதமர் திரு பிரவீந்த் குமார் ஜுக்நாத் ஆகியோர் 2022 ஜனவரி.20 அன்று காணொளிமூலம் திறந்து வைக்க உள்ளனர்.

இந்தியாவின் வளர்ச்சி ஆதரவுடன் மொரிஷியஸில் நிறுவப்படும் குடிமை சேவை கல்லூரி மற்றும் 8 MW சூரியசக்தி ஒளிமின்னழுத்த பண்ணை திட்டங்களையும் இரு தலைவர்களும் தொடங்கி வைக்க உள்ளனர்.

மெட்ரோ எக்ஸ்பிரஸ் திட்டம் மற்றும் உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு இந்தியா மொரிஷியசுக்கு வழங்கும் 190 மில்லியன் அமெரிக்க டாலர் கடனுக்கான ஒப்பந்தம், சிறு வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் உள்ளிட்டவையும் பகிர்ந்து கொள்ளப்படும்.

---

**4. சர்வதேச செஸ் வீரருக்கு ₹8 லட்சம் ஊக்கத் தொகை**

தமிழகத்தைச் சேர்ந்த சர்வதேச செஸ் வீரர் பரத் சுப்ரமணியத்துக்கு, ₹8 இலட்சம் ஊக்கத் தொகையை முதல்வர் மு க ஸ்டாலின் வழங்கினார்.

தலைமைச் செயலகத்தில் முதல்வரை நேரில் சந்தித்து அவரிடம் இருந்து ஊக்கத் தொகையை பெற்றார் பரத் சுப்ரமணியம்.

சர்வதேசப் போட்டிகளில் தொடர்ந்து சிறப்பாக விளையாடி வரும் பரத் சுப்ரமணியம், 2019ஆம் ஆண்டு சர்வதேச மாஸ்டர் பட்டம் வென்றார்.

மேலும், நிகழாண்டில் தனது 14ஆவது வயதில் கிராண்ட் மாஸ்டர் பட்டம் வென்று இந்தியாவுக்கும், தமிழகத்துக்கும் பெருமை சேர்த்துள்ளார். சர்வதேச செஸ் மாஸ்டர் பட்டம் வென்றதற்காக ₹3 இலட்சமும், கிராண்ட்மாஸ்டர் பட்டம் வென்றதற்காக ₹5 இலட்சமும் சேர்த்து மொத்தம் ₹8 இலட்சத்துக்கான ஊக்கத் தொகைக்குரிய காசோலையை அவருக்கு முதல்வர் மு க ஸ்டாலின் வழங்கினார்.

---

**1.** **இந்தியா அளித்த இரயில் பெட்டிகளைப் பயன்படுத்தி நகரங்களுக்கு இடையேயான இரயில் சேவையைத் தொடங்கியுள்ள நாடு எது?**

அ) ஆப்கானிஸ்தான்



**ஆ) இலங்கை ☑**

இ) நேபாளம்

ஈ) பங்களாதேஷ்

✓ இந்தியாவிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட டீசலில் இயங்கும் இரயிலைப் பயன்படுத்தி, நகரங்களுக்கு இடையிலான ரயில் சேவையை இலங்கை தொடங்கியது.

✓ தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் யாழ்ப்பாணக் குடாநாட்டின் காங்கேசன்துறையுடன் தலைநகரமான கொழும்புவை இணைக்கும் வகையில், நாடு முழுவதும் இந்த ரயில் சேவை இயங்கும்.

---

**2.** **2022'இல் ரிசர்வ் வங்கியால் உருவாக்கப்பட்ட புதிய துறையின் பெயர் என்ன?**

அ) டிஜிட்டல் நாணயத் துறை

**ஆ) ஃபின்–டெக் துறை ☑**

இ) தரவு அறிவியல் துறை

ஈ) AI துறை

✓ இந்திய ரிசர்வ் வங்கியானது (RBI) ஃபின்–டெக் துறையில் புதுமைகளை மேம்படுத்துவதற்காக, "ஃபின்–டெக் துறை" என்ற புதிய துறையை உருவாக்கியுள்ளது. அதனுடன் தொடர்புடைய சவால்கள் மற்றும் வாய்ப்புகளை இனம் காண்பதும் இதன் நோக்கமாகும்.

✓ கடந்த 2018ஆம் ஆண்டில், ரிசர்வ் வங்கி அதன் கட்டணத் தீர்வு அமைப்புத் துறையில் நிதி தொழில்நுட்பப் பிரிவை உருவாக்கியது. இப்புதிய ஃபின்டெக் துறையானது, இந்த விஷயத்தில் மேலும் ஆய்வு செய்வதற்கான கட்டமைப்பை வழங்கும் மற்றும் RBI'இன் கொள்கை தலையீடுகளுக்கு உதவும்.

---

**3.** **"இந்தியாவில் உலகளாவிய அணுகல்தன்மைக்கான இணக்கமான வழிகாட்டுதல்கள் & தரநிலைகள் – 2021" என்றவொன்றை வெளியிட்ட மத்திய அமைச்சகம் எது?**

**அ) வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் ☑**

ஆ) சமூக நீதி & அதிகாரமளித்தல் அமைச்சகம்

இ) சட்டம் & நீதி அமைச்சகம்

ஈ) உள்துறை அமைச்சகம்

✓ வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்தின்கீழ் உள்ள மத்திய பொதுப்பணித்துறையானது 'இந்தியாவில் உலகளாவிய அணுகல்தன்மைக்கான இணக்கமான வழிகாட்டுதல்கள் & தரநிலைகள் – 2021'ஐ வெளியிட்டது. இது 2016'இல் வெளியிடப்பட்ட தடையற்ற சூழலுக்கான வழிகாட்டுதல்களின் தொகுப்பாகும்.

✓ இந்திய தொழில்நுட்பக் கழகம் – ரூர்க்கி மற்றும் MoHUA இன் தேசிய நகர்ப்புற விவகார நிறுவனம் ஆகியவற்றின் குழுவால் இது வரைவு செய்யப்பட்டுள்ளது.

---

**4.** **நீதிபதி ஹேமா ஆணையத்தை அமைத்த மாநிலம் எது?**

அ) தமிழ்நாடு



**ஆ) கேரளா ☑**

இ) மேற்கு வங்கம்

ஈ) குஜராத்

✓ கடந்த 2017ஆம் ஆண்டில், கேரள மாநில அரசு நீதிபதி K ஹேமா (ஓய்வு பெற்றவர்), முன்னாள் அதிகாரி K B வல்சலாகுமாரி மற்றும் மூத்த நடிகை சாரதா ஆகியோர் உறுப்பினர்களாக மூன்றுபேர்கொண்ட ஆணையத்தை அமைத்தது. மலையாளத் திரையுலகில் பெண்கள் எதிர் கொள்ளும் சிக்கல்களை ஆயும் நோக்கில் ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. நீதிபதி K ஹேமா ஆணையத்தின் அறிக்கையின் பரிந்துரைகளை ஆய்ந்து செயல்படுத்துவத –ற்கான திட்டத்தை வகுப்பதற்கு மூன்று பேர் கொண்ட குழுவை கேரள மாநில அரசு சமீபத்தில் அமைத்தது.

---

**5.** **சமீபத்தில் அடையாளங்காணப்பட்ட *'Xylophaga nandani'* என்பது ____?**

**அ) மொல்லஸ்க் (நத்தை வகை) ☑**



ஆ) மீன்

இ) ஆமை

ஈ) பாம்பு

✓ கேரளா மற்றும் பிரெஸிலைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் குழு, 'சைலோபாகா நந்தனி' என்ற ஓர் அரிய, ஆழ்கடல் மொல்லஸ்கின் புதிய இனத்தை கண்டறிந்துள்ளனர்.

✓ சைலோபாகைடே குடும்பத்தைச் சேர்ந்த இம்மொல்லஸ்க் கீழைஅரபிக்கடலிலில் அடையாளங்காணப்பட்டது. கொச்சி அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் கடல்சார் அறிவியல் துறையின் பேராசிரியர் பிஜோய் நந்தனின் நினைவாக இந்தப் புதிய நத்தை இனத்திற்கு இந்தப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

---

**6.** **'மகா மேளா' என்பது எந்த மாநிலத்தில் ஆண்டுதோறும் நடைபெறும் ஒரு மதஞ்சார் விழாவாகும்?**

**அ) உத்தர பிரதேசம் ☑**



ஆ) பீகார்

இ) குஜராத்

ஈ) மேற்கு வங்கம்

✓ பிரயாக்ராஜில் அமைந்துள்ள சங்கமத்தின் கரையில் ஆயிரக்கணக்கான யாத்ரீகர்கள் புனிதநீராடியதை அடுத்து 47 நாள் நடக்கும் வருடாந்திர 'மகா மேளா' தொடங்கியது. சங்கமம் என்பது கங்கை, யமுனை மற்றும் புராணகால சரஸ்வதி ஆகிய மூன்று ஆறுகளின் புனித சங்கமமாகும். பொதுவாக மகர சங்கராந்தி விழாவைக் குறிக்கும் வகையில் இந்த விழா நடத்தப்படுகிறது.

---

**7.** '*Hydrophis gracilis*' என்ற ஓர் அரியவகை கடல் பாம்பு காணப்பட்ட மாநிலம் / யூனியன் பிரதேசம் எது?



**அ) கேரளா ☑**

ஆ) மகாராஷ்டிரா

இ) கோவா

ஈ) ஆந்திரப் பிரதேசம்

✓ நீர்ப்பறவைகள் கணக்கெடுப்பின்போது, பறவை நோக்காளர்கள் குழுவால் ஓர் அரியவகை கடல்பாம்பு கண்டறியப்பட்டது. கேரள மாநிலத்தின் திருவனந்தபுரத்தில் உள்ள பெருமாத்துறா கடற்கரையில், '*Hydrophis gracilis*' என்ற ஒரு சிறுதலைகொண்ட கடல் பாம்பு காணப்பட்டது.

✓ திருவனந்தபுர பறவை ஆர்வலர்கள் மற்றும் இயற்கை ஆர்வலர்கள் மன்றத்தின் உறுப்பினர்கள், ஆண்டுதோறும் மேற்கொள்ளும் நீர்ப்பறவைகள் கணக்கெடுப்பின் ஒரு பகுதியாக இக்கணக்கெடுப்பை மேற்கொண்டனர்.

---

**8.** **ஜேம்ஸ் வெப் விண்வெளித் தொலைநோக்கியின் முதன்மை நோக்கம் என்ன?**

அ) ஞாயிறின் மேற்பரப்புபற்றி அறிவது

**ஆ) பிரபஞ்சத்தின் தோற்றம்பற்றி அறிவது ☑**

இ) சேய்மையில் அறியப்பட்ட விண்மீன் திரள்பற்றி ஆய

ஈ) கோள்கள் அமைப்பின் கட்டமைப்பை ஆய

✓ NASA ஜேம்ஸ் வெப் விண்வெளித் தொலைநோக்கியை 2021 டிசம்பர்.25 அன்று ஏவியது. இது NASA, ஐரோப்பிய விண்வெளி முகமை (ESA) மற்றும் கனடிய விண்வெளி நிறுவனம் ஆகியவற்றின் கூட்டுப் பணியாகும்.

✓ இத்தொலைநோக்கி சமீபத்தில் அதன் இறுதிக்கட்டத்தை நிறைவுசெய்தது. ஜேம்ஸ் வெப் விண்தொலைநோக்கியின் நோக்கம் இதுவரை கட்டப்பட்டதிலேயே மிகப்பெரிய விண்வெளித் தொலைநோக்கியாக விளங்குவதும் பிரபஞ்சத்தின் தோற்றம்பற்றி அறிவியலாளர்கள் மேலும் கண்டறிய உதவுவதுமாகும்.

---

**9.** **உலக வர்த்தக அமைப்பில் சீனாவின் தற்போதைய நிலை என்ன?**

அ) உயர் நடுத்தர வருமானம்கொண்ட நாடு

ஆ) வளர்ந்த நாடு

**இ) வளரும் நாடு ☑**

ஈ) குறைந்த வளர்ச்சியடைந்த நாடு

✓ உலக வர்த்தக அமைப்பில் (WTO) இருபது ஆண்டுகளை சீனா நிறைவுசெய்துள்ளது. 'உலக வர்த்தக அமைப்பில்' அதன் தற்போதைய நிலை 'வளரும் நாடு' என உள்ளது.

✓ உலக வர்த்தக அமைப்பின் விதிமுறைகளின்கீழ் 'வளரும் நாடுகளுக்கு' ஒதுக்கப்பட்ட பலன்களைப் பெறும் உயர் நடுத்தர வருமானம் கொண்ட நாடாக சீனா இருப்பதாக பல நாடுகள் கவலை தெரிவிக்கின்றன.

---

**10.** **அத்தியாவசியப்பொருட்களை தடையின்றி வழங்குவதற்காக சிறப்பு குறைதீர்ப்புப் பிரிவை அறிவித்த மத்திய அமைச்சகம் எது?**

அ) உள்துறை அமைச்சகம்

**ஆ) உணவு பதப்படுத்தும் தொழிலக அமைச்சகம் ☑**

இ) ஜவுளி அமைச்சகம்

ஈ) சாலைப்போக்குவரத்து & நெடுஞ்சாலை அமைச்சகம்

✓ மத்திய உணவுபதப்படுத்துதல் தொழிற்துறை அமைச்சகம், அனைத்து குடிமக்களுக்கும் சீராக அத்தியாவசியப்பொருட்கள் தடையின்றி வழங்கப்படுவதை உறுதி செய்வதற்காக, உணவு&உணவு தொடர்பான தொழில்துறைக்காக சிறப்பு குறைதீர்ப்புப் பிரிவைத் தொடங்கியுள்ளது.

✓ நாடடங்கு விதிக்கப்பட்ட முதல் அலையின்போது இந்த அமைச்சகம் இதேபோன்ற குறைதீர்ப்புப்பிரிவை அமைத்தது. தொழிற்துறையினர் மற்றும் மக்கள் தங்கள் குறைகள் & ஐயங்களை covidgrievance-mofpi@gov.in என்ற மின்னஞ்சல் (e-mail) முகவரிக்கு அனுப்பலாம் என உணவு பதப்படுத்துதல் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. இந்தியாவுக்கு எதிரான செயல்பாடு: 35 யூடியூப் சேனல்களை முடக்கிய மத்திய அரசு**

கடந்த மாதம் 20 யூடியூப் சேனல்களை மத்திய அரசு முடக்கிய நிலையில், இன்று மீண்டும் 35 யூடியூப் சேனல்களை முடக்கியுள்ளது.

டிசம்பர் 21 அன்று மத்திய அரசு மொத்தம் 20 யூடியூப் சேனல்கள் மற்றும் இரண்டு இணையதளங்களை முடக்கியது. இந்திய இறையாண்மைக்கு எதிராகச் செயல்பட்டதாக இந்தத் தளங்கள் முடக்கப்பட்டன. இந்தத் தளங்கள் பாகிஸ்தானில் இருந்து ஒருங்கிணைக்கப்பட்டு செயல்பட்டுக்கு வருவதாகவும், நாட்டின் முக்கிய விவகாரங்களான காஷ்மீர், விவசாயிகள் போராட்டம் மற்றும் ராமர் கோவில் போன்றது தொடர்பாக தவறான தகவல்களை இவை பரப்பி வருவதாகவும் புகார் எழ, அந்தக் குற்றச்சாட்டின் பேரில் மத்திய அரசு அனைத்தையும் முடக்கி நடவடிக்கை எடுத்தது.

இதைத்தொடர்ந்து இன்று மீண்டும் 35 யூடியூப் சேனல்கள் முடக்கப்பட்டுள்ளது என மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்பு துறை தெரிவித்துள்ளது.

இந்த 35 சேனல்களும் பாகிஸ்தானிலிருந்து செயல்பட்டு வந்தவை. இவை இந்திய இறையாண்மைக்கு எதிராகச் செயல்பட்டதாக உளவுத்துறை கொடுத்த தகவலின் அடிப்படையில் முடக்கப்பட்டுள்ளன. 35 யூடியூப் சேனல்கள் உடன் இரண்டு டுவிட்டர் கணக்குகள், 2 இன்ஸ்டாகிராம் கணக்குகள், 2 இணையதளங்கள் மற்றும் ஒரு பேஸ்புக் கணக்கு முடக்கப்பட்டுள்ளன.

பாகிஸ்தானிலிருந்து செயல்படும் இந்த சேனல்கள் 1 கோடியே 20 இலட்சத்திற்கும் மேற்பட்ட சந்தாதாரர்களையும், 130 கோடிக்கும் மேற்பட்ட பார்வையாளர்களையும் கொண்டவையாகும். இவற்றில் சில யூடியூப் சேனல்கள்

பாகிஸ்தான் தொலைக்காட்சி செய்தி வாசிப்பாளர்கள் & தொகுப்பாளர்களால் நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

தகவல் தொழில்நுட்ப (இடைநிலை வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் டிஜிட்டல் மீடியா விதிமுறைகள்) சட்டம் 2021, விதி 16–ன் கீழ் இந்த முடக்கத்துக்கான 5 உத்தரவுகளை மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் தனித்தனியாக பிறப்பித்துள்ளது.

---

**2. கோவை முகமது ரபிக்கு கோட்டை அமீர் பதக்கம்**

குடியரசு தின விழாவில், கோவையைச் சேர்ந்த முகமது ரபி என்பவருக்கு, 'கோட்டை அமீர் மதநல்லிணக்க பதக்கம்' வழங்கப்பட உள்ளது.

மதநல்லிணக்கத்திற்காக பாடுபட்ட கோட்டை அமீர் பெயரில், 'கோட்டை அமீர் மத நல்லிணக்க பதக்கம்' அரசால் ஏற்படுத்தப்பட்டது. தமிழகத்தில் மத நல்லிணக்கத்திற்காக பாடுபட்டு, சிறப்பாக சேவை செய்து வரும் நபருக்கு, ஆண்டுதோறும் குடியரசு தின விழாவில் இந்தப் பதக்கம் வழங்கப்படுகிறது.

முகமது ரபிக்கு வழங்கப்படும் பதக்கம் வெள்ளியால் செய்யப்பட்டு, தங்கமுலாம் பூசப்பட்டிருக்கும். இதுதவிர, 25 ஆயிரம் ரூபாய்க்கான வரைவு கேட்புக் காசோலை, சான்று போன்றவை முதல்வரால் வழங்கப்படவுள்ளன.

---

**3. மருத்துவ அறிவியல் வெற்றி!**

மருத்துவ அறிவியல் மிகப்பெரிய சாதனையை நிகழ்த்துவதற்கு முன்னோட்டம் நடத்தியிருக்கிறது. ஒட்டுமொத்த மனித இனத்துக்குமே வரப்பிரசாதமாக அமைய இருக்கும் அந்த சாதனை, அமெரிக்காவில் நிகழ்ந்திருக்கிறது.

நியூயார்க்கிலுள்ள மருத்துவமனை ஒன்றில் இதயம் செயலிழந்து மரணத்தின் விளிம்பில் இருந்த 57 வயது நோயாளி ஒருவருக்கு பன்றியின் இதயம் வெற்றிகரமாகப் பொருத்தப்பட்டிருக்கிறது. செயலிழக்கும் மனித உறுப்புகளுக்கு பதிலாக, விலங்கினங்களின் உறுப்புகளை மாற்று அறுவை சிகிச்சை மூலம் பொருத்துவதற்கு 'செனோடிரான்ஸ்பிளாண்ட்' என்று பெயர். அமெரிக்காவின் பால்டிமோரைச் சேர்ந்த டேவிட் பென்னட், மரபணு மாற்றப்பட்ட பன்றியின் இதயம் அறுவை சிகிச்சை மூலம் வெற்றிகரமாக பொருத்தப்பட்ட முதல் மனிதராக வரலாற்றில் அறியப்படுவார்.

17–ஆவது நூற்றாண்டு முதலே விலங்கினங்களின் ரத்தத்தை மனிதர்களுக்கு செலுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஜீன் பேப்டைஸ் டெனிஸ் என்கிற பிரெஞ்ச் மருத்துவர், செம்மறி ஆட்டின் ரத்தத்தை சிறுவன் ஒருவனுக்கு செலுத்தியதுதான் பதிவாகி இருக்கும் முதலாவது ரத்த மாற்று முயற்சி. 19–ஆவது நூற்றாண்டு முதலே விலங்கினங்களின் தோல் பகுதிகளை மனிதர்களுக்குப் பொருத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 1838–இல் முதன்முறையாக பன்றியின் விழிவெண்படலம் (கார்னியா) ஒருவருக்கு வெற்றிகரமாகப் பொருத்தப்பட்டது.

20ஆம் நூற்றாண்டில் பல்வேறு 'செனோடிரான்ஸ்பிளாண்ட்' முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 1960–இல் நியூ ஆர்லியன்ஸில் ரீம்ட்ஸ்மா என்கிற அறுவை சிகிச்சை மருத்துவர், மனித குரங்குகளின் சிறுநீரகத்தை அறுவை மாற்று சிகிச்சை மூலம் 13 பேருக்கு பொருத்தி சோதனை நடத்தினார். அதில் ஒரே ஒருவர் மட்டும் அந்த சிறுநீரகத்தை ஏற்றுக்கொண்டு மூன்று மாதங்கள் வாழ்ந்தார். 1964–இல் மனிதக் குரங்கின் இதயம் ஒருவருக்குப் பொருத்தப்பட்டு அந்த முயற்சி தோல்வியில் முடிந்தது.

நியூயார்க்கில் நடந்திருக்கும் இதய மாற்று அறுவை சிகிச்சைக்கு முன்னோடி சோதனை இந்தியாவில்தான் நடந்தது. 1996–இல் பருவா என்கிற அறுவை சிகிச்சை மருத்துவர், 32 வயது பூர்னோ சைக்யா என்பவருக்கு பன்றியின் நுரையீரலையும், இதயத்தையும் மாற்று அறுவை சிகிச்சை மூலம் பொருத்த முற்பட்டார். அந்த நோயாளி இறந்தார் என்பது மட்டுமல்ல, முன் அனுமதி இல்லாமல் சோதனை நடத்தியதற்காக மருத்துவர் பருவா கைது செய்யப்பட்டு, தனது மருத்துவர் பட்டத்தையும் இழக்க நேர்ந்தது. உலகில் அதுதான் பன்றியின் இதயத்தை மனிதர்களுக்குப் பொருத்தும் முதல் முயற்சி.

கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் நியூயார்க் பல்கலைக்கழகத்தின் லங்கோன் மருத்துவ மையத்தில், முற்றிலுமாக மூளை செயலிழந்துவிட்ட ஒருவருக்கு மரபணு மாற்றப்பட்ட பன்றியின் சிறுநீரகத்தை பொருத்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. மனித உடலிலுள்ள எதிர்ப்பு சக்தி அந்நிய பொருள்கள் எதையும் ஏற்றுக்கொள்ளாது என்பதால், பன்றிகள் மரபணு மாற்றப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன. அதன் மூலம் பொருத்தப்படும் உறுப்புகள் நிராகரிக்கப்படாமல் வேலை செய்யும் என்பது எதிர்பார்ப்பு.

ஏனைய விலங்கினங்களைவிட, பன்றியின் உறுப்புகள் மனித உறுப்புகளுடன் பொருந்துவதாக கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாக அறியப்படுகிறது. இதற்காகவே ரெவிவிகார் என்கிற அமெரிக்க நிறுவனம் ஒரு பண்ணையை ஏற்படுத்தி அதில் மரபணு மாற்றப்பட்ட பன்றிகளை வளர்க்கிறது. மருத்துவ பரிசோதனைக்காக இந்தப் பன்றிகள் வழங்கப்படுகின்றன. இதேபோல வேறு சில பண்ணைகளும் அமெரிக்காவில் உருவாகியிருக்கின்றன.

பன்றியின் உறுப்புகள் நிராகரிக்கப்படாமல் இருப்பதற்காக அதன் 10 மரபணுக்கள் மாற்றப்படுகின்றன. அவற்றில் நான்கு செயலிழக்கச் செய்யப்படுகிறது. மனிதர்களின் ஆறு மரபணுக்கள் பன்றிக்குச் செலுத்தப்பட்டு அதன் மூலம் நிராகரிப்புக்கான வாய்ப்பைக் குறைக்கிறார்கள். இவையெல்லாம் தொடர்ந்து நடைபெறும் சோதனை முயற்சிகள்.

பன்றி உள்ளிட்ட விலங்கினங்களின் உறுப்புகளை மனிதர்களுக்குப் பொருத்தும் முயற்சியில் சில ஆபத்துகளும் இருக்கின்றன. எத்தனை காலத்திற்கு அந்த உறுப்புகள் மனித உடலில் செயல்படும் என்பது தெரியாது. அதனால், பக்கவிளைவுகள் ஏற்படுமா என்பதும் தெரியாது. அதன் மூலம் இதுவரை மனிதஇனம் அறியாத புதிய

நோய்கள் அந்த விலங்கினங்கள் மூலம் மனிதா்களுக்கு பரவும் அபாயமும் நிறையவே உண்டு.

சாா்ஸ், கொவைட் 19, பறவைக் காய்ச்சல் போன்ற விலங்கினங்களிலிருந்தும், பறவைகளிலிருந்தும் நோய்த்தொற்றுப் பரவல் காணப்படும் நிலையில், இதுபோன்ற முயற்சிகள் தேவைதானா என்கிற கேள்வியும் எழுப்பப்படுகிறது. மனிதா்களைக் காப்பாற்றுவதற்காக விலங்கினங்களை பலியிடலாமா என்கிற கேள்விக்கு, பெரும்பாலான மக்கள் விலங்குகளைக் கொன்று மாமிசமாக உட்கொள்ளும்போது மனிதா்களைக் காப்பாற்றுவதற்காக விலங்குகளின் உறுப்புகளை பொருத்துவதில் தவறில்லை என்கிறாா்கள் மருத்துவா்கள்.

இந்தியாவில் மட்டுமே ஆண்டொன்றுக்கு சுமாா் 30,000 கல்லீரல் தேவைப்படும் நிலையில், 1,500 மாற்று அறுவை சிகிச்சைகள்தான் நடத்த முடிகிறது. 50,000-க்கும் அதிகமானோருக்கு இதய மாற்று சிகிச்சை தேவைப்படும் நிலையில், அதிகபட்சம் ஆண்டொன்றுக்கு 15 இதய மாற்று சிகிச்சைகள்தான் நடத்த முடிகின்றன. உலக அளவில் பல லட்சம் சிறுநீரக மாற்று சிகிச்சை தேவைப்படுகிறது.

அறிவியல் சோதனைகள் தொடா்வது மனிதஇனத்தின் நன்மைக்காக என்றால், அதை வரவேற்பதுதான் ஆக்கபூா்வ அணுகுமுறை.

---

**4. பெண்களின் கல்வியும் திருமண வயதும்!**

நமது நாட்டில் பெண்களின் திருமண வயதை நிா்ணயிக்கும் சட்டங்கள் ஆங்கிலேயா் காலத்திலிருந்தே சா்சைக்குரியனவாகவே இருந்து வந்திருக்கின்றன. சிறு குழந்தைகளுக்கு திருமணம் செய்து வைக்கப்படும் கொடுமையை தடுக்கும் சட்டம் ஒன்றை கொண்டு வர 19-ஆம் நூற்றாண்டின் இறுதியிலேயே ஆங்கிலேய அரசு முயன்றது. அன்றைய காலகட்டத்தில் இந்தச் சட்டத்திற்கு பெரும் எதிா்ப்பு கிளம்பியது.

1891-இல் அரசு முன்வைத்த இந்தச் சட்டத்தின் முன்வடிவிற்கு பால கங்காதர திலகா் தன்னுடைய 'கேசரி' இதழின் வாயிலாக கடுமையாக கண்டனம் தெரிவித்தாா். இந்து மதத்தின் அடிப்படைக் கூறுகளில் தலையிட, ஆங்கிலேயா்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்று முழங்கினாா். திலகரின் இந்த கூற்றுக்கு அன்றைய இந்துக்களிடையே பேராதரவு கிடைத்தது. அதனால், இச்சட்ட முன்வடிவை அரசு திரும்பப் பெற்றது.

தமிழ்நாட்டில் 19-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் நீதிபதி மாயூரம் வேதநாயகம் பிள்ளை, பாரதியாா் போன்றவா்கள் பெண் விடுதலை குறித்து எழுதி விழிப்புணா்வு ஊட்டினாா்கள். இந்திய அளவில் பெண் விடுதலை இயக்கங்கள் எழுச்சி பெற்றன. சிறு வயதிலேயே பெண் குழந்தைகளுக்குத் திருமணம் செய்யும் கொடுமையைத் தடை செய்ய வேண்டும் என்று டாக்டா் முத்துலட்சுமி ரெட்டி, ஹா்பிலாஸ் சா்தா போன்றவா்கள் குரலெழுப்பினா்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில், 1929-இல் மீண்டும் ஒரு முயற்சி எடுக்கப்பட்டு இந்த சட்ட முன்வடிவை, ராஜஸ்தான் அஜ்மீா் பகுதியைச் சோ்ந்த சமூக சீா்திருத்தவாதி ராய் சாஹிப் ஹா்பிலாஸ் சா்தா, முன்மொழிய, 1929, செப்டம்பா் 28-ஆம் நாள் குழந்தைத் திருமண தடுப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

இந்தச் சட்டத்தின்படி திருமணம் செய்வதற்கு பெண்ணுக்கு பதினான்கு வயதும், ஆணுக்கு பதினெட்டு வயதும் நிறைவடைந்திருக்க வேண்டும். இச்சட்ட முன்வடிவை ராய் சாஹிப் ஹா்பிலாஸ் சா்தா என்பவா் முன் மொழிந்ததால் இச்சட்டம் 'சா்தா சட்டம்' என்று அறியப்பட்டு, காலப்போக்கில் 'சாரதா சட்டம்' என்றாகி விட்டது.

சுதந்திரமடைந்த பின்னா், 1949-இல் மேற்கொள்ளப்பட்ட சட்டத் திருத்தத்தின் மூலம் பெண்ணின் திருமண வயது 15-ஆக உயா்த்தப்பட்டது. 1978-ஆம் ஆண்டில், அதாவது நாடு சுதந்திரமடைந்து சுமாா் முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு இந்தச் சட்டம் மீண்டும் ஒரு முறை திருத்தம் செய்யப்பட்டு, பெண்ணின் குறைந்த பட்ச திருமண வயது 18 எனவும், ஆண்களுக்கான குறைந்தபட்ச திருமண வயது 21 எனவும் மாற்றப்பட்டது.

இந்தச் சட்டம் நடைமுறையில் இருந்தும், குழந்தைத் திருமணம் என்னும் கொடுமை நாட்டில் தொடா்ந்து கொண்டு இருந்ததால், 2006-ஆம் ஆண்டில் குழந்தைத் திருமண சட்டத்தில் சில மாற்றங்கள் செய்யப்பட்டு மேலும் கடுமையான தண்டனைகளுடன் இச்சட்டம் திருத்தி அமைக்கப்பட்டது. திருத்தியமைக்கப்பட்ட குழந்தைத் திருமண தடுப்பு சட்டம் 2006-இன்படி, குறைந்தபட்ச வயதுக்கு கீழ் உள்ள ஆணுக்கோ பெண்ணுக்கோ திருமணம் செய்து வைத்தால் இரண்டு ஆண்டு சிறைத்தண்டனையும் ஒரு லட்சம் ரூபாய் அபராதமும் விதிக்கப்படும்.

இந்த திருத்தியமைக்கப்பட்ட 2006 சட்டத்தின் படி, 18 வயது பூா்த்தியடையாத பெண் குழந்தையை திருமணம் செய்து கொண்டவரும், குழந்தை திருமணத்தை நடத்தியவரும் குற்றவாளிகளாகக் கருதப்படுவா். மேலும் குழந்தைத் திருமணம் உட்பட அனைத்துத் திருமணங்களையும் பதிவு செய்ய வேண்டும் என 2006-இல் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

அண்மையில், பெண்களின் சட்டபூா்வ திருமண வயதை 18-லிருந்து 21-ஆக உயா்த்த வழிகோலும் மசோதாவை மத்திய அரசு நாடாளுமன்ற மக்களவையில் தாக்கல் செய்ததை அடுத்து இந்த மசோதாவை ஆதரித்தும் எதிா்த்தும் சா்ச்சைகள் உருவாயின. முன்னதாக, சமதா கட்சியின் முன்னாள் தலைவா் ஜெயா ஜேட்லி தலைமையில் அமைக்கப்பட்ட குழு, பாலின சமத்துவம், பாலின பேதமின்றி அதிகாரமளித்தல் போன்ற கொள்கைகளை மனதில் கொண்டு ஆண்களின் திருமண வயதிற்கு நிகராக பெண்களின் திருமண வயதும் 21-ஆக உயா்த்த வேண்டும் என்று பரிந்துரை செய்திருந்தது.

அக்குழுவின் பரிந்துரையை ஏற்றுக் கொண்ட மோடி அரசு, சிறாா் திருமண சட்டம் 2006-இல் திருத்தங்கள் கொண்டு வருவதற்கான மசோதாவை மக்களவையில் தாக்கல் செய்தது. ஆனால் இந்த மசோதா மக்களவையில் கடும் எதிா்ப்புக்குள்ளானதால், நாடாளுமன்ற நிலைக்குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

'பெண்களின் திருமண வயதை 21-ஆக உயா்த்துவது, பெண்கள் திருமணம் என்னும் பந்தத்திற்குள் நுழைவதற்கு முன் கல்வி பெறுவதற்கும், அவா்களுக்கான வேலைவாய்ப்புகள் அதிகரித்து வாழ்க்கையில் முன்னேற அவா்களுக்கு போதிய அவகாசம் கிடைப்பதற்கும் வழிவகுக்கும்' என்று பிரதமா் மோடி கூறினாா்.

திருமண வயதை 18-லிருந்து 21-ஆக உயா்த்துவதன் மூலம் பெண்கள் பொருளாதார சுதந்திரமும் அதிகாரமும் பெற்று, தங்கள் விருப்பு வெறுப்புகளை வெளியிட வாய்ப்பு பெறுவாா்கள் என எதிா்பாா்க்கப்படுகிறது.

தேசிய குடும்ப நல கணக்கெடுப்பின் ஐந்தாவது சுற்றின் (2019-20) புள்ளிவிவரம், 15-லிருந்து 19-வயது வரை உள்ள கிராமப்புற மகளிரில் 7.9 சதவீத பெண்கள் ஏற்கெனவே தாயாகி விட்டனா் என்று குறிப்பிடுகிறது. இது மகளிரின் உடல்நலம் குறித்து கவலை கொள்ள வைக்கிறது.

பெண்களின் உடல்நலத்தில் அக்கறை கொண்ட பலரும், பெண்கள் பதின் பருவத்தில் காா்ப்பம் அடைவதை தடுப்பதன் மூலம், கருச்சிதைவு, குழந்தைகள் இறந்து பிறப்பது போன்ற கொடுமைகளிலிருந்து அவா்களை காப்பாற்ற முடியும் என்று கூறுகிறாா்கள்.

இன்றைக்கு நாட்டில் 50 % பெண்கள் ரத்த சோகை போன்ற ஊட்டச்சத்து குறைபாட்டுடன் காா்ப்பத்தை எதிா்கொள்வதால் நாட்டில் மகப்பேறு இறப்பு விகிதம், சிசு இறப்பு விகிதம் போன்றவை அதிகமாக உள்ளன என்றும், திருமண வயதை உயா்த்துவதன் மூலம் அவா்களின் உடல்நலம் பாதுகாக்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

நாட்டில் குழந்தைத் திருமணங்கள் குறைந்து கொண்டு வருகின்றன என்ற செய்தி ஆறுதலளித்தாலும், ஐக்கிய நாட்டு சபையின் யுனிசெஃப் அளிக்கும் தகவலின்படி உலகின் 15 வயதிற்குக் குறைவான மணமகள்களில் மூன்றில் ஒருவா் நம் நாட்டைச் சோ்ந்தவா் என்பது நம்மைக் கவலைகொள்ள வைக்கிறது. தேசிய குடும்ப நல கணக்கெடுப்பு ஆய்வின்படி, 20 முதல் 24 வயது வரையிலான மகளிரில், 23 சதவீதம் போ் 18 வயதை அடைவதற்குள் திருமணம் செய்து கொண்டுவிட்டனா். குழந்தைத் திருமண பிரச்னை நகரங்களை விட கிராமப்புறங்களில் அதிகமாக இருப்பதாகக் கூறுகிறது ஓா் ஆய்வு முடிவு.

ஆனால், பெண்களின் திருமண வயதை உயா்த்துவதை எதிா்த்து வாதிடுபவா்களோ, குறைந்தபட்ச திருமண வயதை சட்டபூா்வமாக உயா்த்துவதனால் ஒன்றும் சாதித்து விடமுடியாது என்றும், இப்படிப்பட்ட சட்டங்களை அமல்படுத்துவதில் நடைமுறை பிரச்னைகள் உள்ளன என்றும் சுட்டிக் காட்டுகின்றனா்.

உதாரணமாக, தேசிய குற்றவியல் ஆணையம் அளித்திருக்கும் தகவலின்படி, 2020-ஆம் ஆண்டில் 758 குழந்தைத் திருமணங்கள் மட்டுமே குழந்தைத் திருமண தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவாகி உள்ளன. இத்தகவல், சட்டத்தின் கைகளில் பிடிபடாமல் தப்பிக்கும் திருமணங்கள் பல என்ற கசப்பான உண்மையை நமக்குப் புலப்படுத்துகிறது.

பெற்றோா், தங்களின் ஆண் குழந்தையைப்போல பெண் குழந்தையையும் கல்வி கற்க அனுமதிக்க வேண்டும். நமது நாட்டில் ஒரு பெண்ணிற்கு எந்த வயதில் திருமணம் செய்ய வேண்டும் என்பதை அப்பெண்ணின் குடும்ப பொருளாதார நிலை, அவருடைய இனம், மதம் சாா்ந்த பழக்க வழக்கங்கள், குடும்பத்தினரின் கல்வி நிலை, சமூக சூழ்நிலை ஆகியவையே தீா்மானிக்கின்றன.

இந்த விஷயத்தில் வரதட்சணை எனும் சமூக அவலமும் பெரும்பங்கு வகிக்கிறது. இளம் வயதில் திருமணம் செய்து விட்டால், குறைந்த வரதட்சணையில் திருமணத்தை முடித்து விடலாம் பெற்றோா் நினைக்கின்றனா்.

வயது வந்த பெண்ணை திருமணம் செய்து கொடுக்காமல் வீட்டில் வைத்திருப்பது பாதுகாப்பு இல்லை என்று பெற்றோா் நினைப்பதில் வியப்பொன்றுமில்லை. வயதிற்கு வந்த பெண்ணை, அதுவும் சற்றே அழகான பெண்ணை வீட்டில் வைத்திருந்தால் கிராமப்புறங்களில் அவா்கள் இனத்தைச் சாா்ந்த ஆண்கள் சிலா் அப்பெண்ணை தனக்குத் திருமணம் செய்து கொடுக்குமாறு கட்டாயப்படுத்துவது நாம் அடிக்கடி கேள்விப்படும் செய்தி.

இவை எல்லாவற்றிற்கும் மேல், பெண்கள் கல்வி கற்க வேண்டும் என்றால் அதற்கான வசதி கிராமப்புறத்திலுள்ள ஒவ்வொரு பெண்ணிற்கும் கிடைக்க வழிவகுக்க வேண்டும். இன்னமும் பல கிராமங்களில் உயா்கல்வி பெற வேண்டுமென்றால் அருகிலுள்ள நகரத்திற்குத்தான் செல்ல வேண்டியுள்ளது.

குழந்தைத் திருமணத்தை தடை செய்யும் சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவதற்கு முன், பெண்கள் உயா்கல்வி பெறவும், அவா்களுக்கான வேலைவாய்ப்புகளை அதிகரிக்கவும் தேவையான வசதிகளை அரசு செய்து தர வேண்டும்.

---

**5. இந்தியா கேட் பகுதியில் நேதாஜிக்கு சிலை**

தில்லியில் உள்ள 'இந்தியா கேட்' பகுதியில் சுதந்திரப் போராட்ட வீரரான நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் முழுஉருவச் சிலை நிறுவப்படும் என்று பிரதமா் நரேந்திர மோடி அறிவித்துள்ளாா்.

குடியரசு தின விழா அணிவகுப்புக்காக நேதாஜியின் சிறப்புகளை வெளிப்படுத்தும் வகையில் மேற்கு வங்க அரசு வடிவமைத்த அலங்கார ஊா்தியை மத்திய அரசு நிராகரித்தது சா்ச்சைக்குள்ளான நிலையில், பிரதமா் மோடி இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளாா்.

இது தொடா்பாக அவா் ட்விட்டரில் வெள்ளிக்கிழமை வெளியிட்ட பதிவில், 'நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் 125-ஆவது பிறந்த தின நூற்றாண்டை நாடு கொண்டாடி வரும் வேளையில், கிரானைட்டால் செய்யப்பட்ட அவரது பிரம்மாண்ட சிலை இந்தியா கேட் பகுதியில் நிறுவப்பட உள்ள செய்தியைப் பகிா்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். நாடு அவருக்குக் கடன்பட்டுள்ளதை வெளிப்படுத்தும் சிறந்த அடையாளமாக அச்சிலை அமையும்.

கிரானைட் சிலை செய்யப்படும் வரை, சிலை அமையவுள்ள இடத்தில் 'ஹாலோகிராம்' தொழில்நுட்பத்தில் அவரது சிலை காட்சிப்படுத்தப்படும். ஹாலோகிராம் சிலையை நேதாஜியின் பிறந்த தினமான ஜனவரி 23-ஆம் தேதி திறந்துவைக்க உள்ளேன்' என்று குறிப்பிட்டுள்ளாா்.

நேதாஜியின் சிலை 28 அடி உயரத்திலும் 6 அடி அகலத்திலும் அமைக்கப்படவுள்ளதாகத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

---

### 6. பாக். உச்சநீதிமன்ற முதல் பெண் நீதிபதி

பாகிஸ்தான் உச்சநீதிமன்றத்தின் முதல் பெண் நீதிபதியாக லாகூா் உயா்நீதிமன்ற நீதிபதி ஆயிஷா மாலிக் (55) நியமிக்கப்பட்டுள்ளாா். முஸ்லிம் நாடான பாகிஸ்தானின் நீதித் துறை வரலாற்றில் உச்சநீதிமன்றத்துக்கு பெண் நீதிபதி நியமிக்கப்படுவது இதுவே முதல் முறையாகும்.

இதுகுறித்து வெளியிடப்பட்டுள்ள அறிவிக்கையில், 'பாகிஸ்தான் இஸ்லாமிய குடியரசு அரசமைப்புச் சட்டத்தின் 177-ஆவது பிரிவின்படி, லாகூா் உயா்நீதிமன்ற நீதிபதி ஆயிஷா மாலிக்கை உச்சநீதிமன்ற நீதிபதியாக நியமிக்க அதிபா் ஆரிஃப் ஆல்வி ஒப்புதல் அளித்துள்ளாா். அவா் பதவியேற்கும் நாளில் இருந்து அவருடைய நியமனம் அமலுக்கு வரும்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, ஆயிஷா மாலிக்கை உச்சநீதிமன்ற நீதிபதியாக நியமிக்குமாறு பாகிஸ்தான் நீதித் துறை ஆணையம் கடந்த மாதம் பரிந்துரை செய்தது. அந்தப் பரிந்துரையை உச்சநீதிமன்ற நீதிபதிகள் நியமனங்களுக்கான நாடாளுமன்றக் குழு இரு தினங்களுக்கு முன் பரிசீலித்தது. லாகூா் உயா்நீதிமன்றத்தில் நான்காவது இடத்தில் இருப்பவா் ஆயிஷா மாலிக். இருப்பினும், பணி மூப்பைக் கருத்தில் கொள்ளாமல் ஆயிஷா மாலிக்கைத் தோ்வு செய்து, அதிபரின் ஒப்புதலுக்கு அந்தக் குழு அனுப்பி வைத்தது. அதைத் தொடா்ந்து, ஆயிஷா மாலிக்கை உச்சநீதிமன்ற நீதிபதியாக நியமிக்க அதிபா் ஒப்புதல் அளித்துள்ளாா்.

---

### 7. ஆஸ்கர் தகுதிப் பட்டியலில் இடம்பிடித்த 'ஜெய் பீம்'

நடிகர் சூர்யா நடிப்பில் அமேசான் பிரைம் ஓடிடி தளத்தில், 'ஜெய் பீம்' கடந்த நவம்பர் மாதம் வெளியாகி பல தரப்புகளிடமிருந்து பாராட்டுகளைப் பெற்று வருகிறது. கூகுளில் அதிகம் தேடப்பட்ட இந்தியப் படமாகவும் அறிவிக்கப்பட்ட 'ஜெய் பீம்' ஐஎம்டிபி இணையதளத்தில் அதிக புள்ளிகளைப் பெற்ற படங்களில் முதலிடத்தில் உள்ளது. ஆஸ்கர் யூடியூப் தளத்தில் இடம்பிடித்த முதல் தமிழ் படமாகவும் தமிழகத்திற்கு பெருமை சேர்த்துள்ளது.

பல்வேறு சர்வதேச விழாக்களில் திரையிடப்பட்டுக் கொண்டு வரும் நிலையில் 'ஜெய்பீம்' திரைப்படம் ஆஸ்கர் விருது படங்களுக்கான தகுதிப்பட்டியலில் இடம்பிடித்துள்ளது. 276 படங்கள் போட்டியிட்டுள்ள இதன் இறுதிப்பட்டியல் வரும் பிப்ரவரி 8 ஆம் தேதி அறிவிக்கப்படும். ஏற்கனவே, சூர்யாவின் 'சூரரைப் போற்று' திரைப்படமும் ஆஸ்கர் விருது பரிந்துரைக்கான திரையிடலுக்கு தேர்வு செய்யப்பட்டு இருந்தது குறிப்பிடத்தக்கது.

---

### 8. தமிழகம் முழுவதும் கூட்டுக் குடிநீர், பாதாள சாக்கடை உட்பட ரூ.662 கோடி திட்டங்களை முதல்வர் தொடங்கி வைத்தார்: ரூ.8.93 கோடியில் 5 புதிய பணிகளுக்கு அடிக்கல்

நகராட்சி நிர்வாகம், குடிநீர் வழங்கல் துறை சார்பில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் ரூ.662.22 கோடியில் நிறைவேற்றப்பட்டுள்ள 17 திட்டப் பணிகளை முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்.

இதுதொடர்பாக தமிழக அரசு நேற்று வெளியிட்ட அறிக்கை:

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் திருப்பூர் மாவட்டம் பல்லடம், திருப்பூர் ஒன்றியங்களில் 155 ஊரக குடியிருப்புகளுக்கு ரூ.99.24 கோடி, கரூர் மாவட்டம் தாந்தோணி ஒன்றியத்தில் 274 ஊரக குடியிருப்புகளுக்கு ரூ.81.41 கோடி, கோவை மாவட்டம் பொள்ளாச்சி (தெற்கு), பொள்ளாட்சி (வடக்கு), கிணத்துக்கிடவு ஒன்றியங்களில் 212 ஊரக குடியிருப்புகளுக்கு ரூ.69.31 கோடி, கிருஷ்ணகிரி மாவட்டம் கெலமங்கலம் ஒன்றியத்தில் ராயக்கோட்டை மற்றும் 28 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ.8.46 கோடியில் கூட்டுக் குடிநீர் திட்டங்கள், நாமக்கல் நகராட்சிக்கு ரூ.185.24 கோடியில் குடிநீர் மேம்பாட்டு திட்டம் ஆகிய திட்டப் பணிகள் முடிவுற்றுள்ளன.

திருச்சி மாவட்டம் மண்ணச்சநல்லூர் பேரூராட்சியில் ரூ.30.11 கோடி, எஸ்.கண்ணனூர் பேரூராட்சியில் ரூ.19.45 கோடி, ஈரோடு மாவட்டம் பெருந்துறை பேரூராட்சியில் ரூ.51.50 கோடி, தஞ்சை மாவட்டம்வல்லம் பேரூராட்சியில் ரூ.34.51 கோடியில் பாதாள சாக்கடை திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாகத் துறை சார்பில் தூத்துக்குடி மாநகராட்சி சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் தருவைக்குளம் உரக்கிடங்கு பகுதியில்ரூ.35.84 கோடியில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தின் கீழ்ரூ.11.50 கோடியில் மேம்படுத்தப்பட்ட சிவகுளம், முள்ளிக்குளம், மீளவிட்டான் குளம், மதுரை மாநகராட்சி அபிவிருத்தி, உட்கட்டமைப்பு நிதியின் கீழ் மதுரை மாநகராட்சி, குருவிக்காரன் சாலையில் ரூ.23.17 கோடியில் தரைப்பாலம் உயர்மட்ட பாலமாக மாற்றியமைப்பு ஆகிய திட்டங்களும் முடிவுற்றுள்ளன.

திண்டுக்கல் மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் கரூர் சாலை, பெஸ்கி காலேஜ் எதிர்புறம் ரூ.70 லட்சத்தில் அமைக்கப்பட்டுள்ள நுண்ணுரம் செயலாக்க மையக் கட்டிடம், கோவை மாநகராட்சி கரும்புக் கடைதெற்கு மண்டலத்தில் ரூ.75 லட்சத்தில் அமைக்கப்பட்டுள்ள நகர்ப்புற சுகாதார மையக் கட்டிடம், ரூ.77 லட்சத்தில் காளப்பட்டி மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் கட்டப்பட்டுள்ள கூடுதல் கட்டிடம், ரூ.50 லட்சத்தில் கே.கே.புதூர் மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியில் கட்டப்பட்டுள்ள உணவுக்கூடம் என மொத்தம் ரூ.662.22 கோடி மதிப்பிலான 17 முடிவுற்ற திட்டப்

பணிகளை தலைமைச் செயலகத்தில் முதல்வர் ஸ்டாலின் நேற்று காணொலி மூலம் திறந்து வைத்தார்.

நகராட்சி நிர்வாகத் துறை சார்பில் திண்டுக்கல் மாநகராட்சி திருவள்ளுவர் சாலையில் ரூ.2.50 கோடியில் அமைக்கப்பட உள்ள நூலகம், அறிவுசார் மையம், கமலா நேரு மருத்துவமனை சாலையில் ரூ.1.40 கோடியில் நகர சமுதாய சுகாதார மையமாக மேம்படுத்தும் பணி, ஒசூர் மாநகராட்சி நேரு நகரில் ரூ.1.03 கோடியில் நகர்ப்புற வீடற்றவர்களுக்கான கட்டிடம், காமராஜ் காலனியில் ரூ.2.50 கோடியில் நூலகம், அறிவுசார் மையம், மத்திகிரி பகுதியில் ரூ.1.50 கோடியில் அமைக்கப்பட உள்ள நவீனஎரிவாயு தகனமேடை என ரூ.8.93 கோடியிலான 5 புதிய திட்டப் பணிகளுக்கு முதல்வர் அடிக்கல் நாட்டினார்.

---

**9. மேடவாக்கம் – சோழிங்கநல்லூர் இணைப்புச் சாலை இனி 'செம்மொழிச் சாலை' – முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு**

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் புதிய வளாகம் அமைந்துள்ள மேடவாக்கம் சோழிங்கநல்லூர் இணைப்புச் சாலை இனி 'செம்மொழிச் சாலை' எனப் பெயர் மாற்றம் செய்யப்படும் என்று செம்மொழி விருது வழங்கும் விழாவில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் இன்று நடந்த 2010 முதல் 2019–ஆம் ஆண்டுகள் வரையிலான செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தால் வழங்கப்படும் செம்மொழித் தமிழ் விருதுகள் வழங்கும் விழாவில், முதல்வர் ஆற்றிய உரை: "தமிழுக்கும் அமுதென்றுபேர்– அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்குநேர்" என்ற புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் கவிதை வரிகளை நெஞ்சில் ஏந்தி, இந்த விழாவின் மேடையில் நான் நின்றுகொண்டு இருக்கிறேன். தமிழுக்குச் செம்மொழித் தகுதி ஏற்பட வேண்டும் என்பது தமிழறிஞர்களின் நூற்றாண்டுக் கனவு. அந்தக் கனவை நிறைவேற்றியவர் மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி. அத்தகைய தலைவரின் பெயரால் அமைந்திருக்கக்கூடிய செம்மொழித் தமிழாய்வு விருதுகள், அதை விழாவாக, அதிலும் குறிப்பாக, அண்ணா பெயரில் அமைந்திருக்கக்கூடிய இந்த நூலகத்தின் அரங்கத்தில் நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம்.

அண்ணனாகவும் தம்பியாகவும் இருந்து தமிழுக்குத் தொண்டாற்றிய இரண்டு பெருமக்களின் நினைவை ஏந்தி இந்த விழா மேடையில் நான் நின்றுகொண்டு இருக்கிறேன். தமிழ் தொன்மையான மொழி என்பதைத் தமிழர்கள் சொல்லித்தான் தெரிய வேண்டிய அவசியமில்லை. உலகம் முழுவதும் இருக்கும் மொழியியல் அறிஞர்கள், இனவியல் அறிஞர்கள் அதைத்தான் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மாபெரும் உண்மை இது.

தமிழ் குறிப்பிட்ட நாட்டு மக்கள் பேசும் மொழியாக மட்டுமல்ல, ஒரு பண்பாட்டின் அடையாளமாக இருக்கிறது நம்முடைய தமிழ் மொழியானது. நிலத்துக்கு, மண்ணுக்கு, இயற்கைக்கு, மக்களுக்கு, பண்பாட்டுக்கு இலக்கணத்தை வகுத்திருக்கக்கூடிய மொழி. தமிழைப் பேசும் போது இனிமையாக இருக்கிறது. தமிழைக் கேட்கும்போது இனிமையாக இருக்கிறது. ஏன், 'தமிழ்' என்று சொல்லும்போதே இனிமையாக இருக்கிறது. தமிழ் என்றாலே இனிமை என்றுதான் பொருள். 'இனிமையும் நீர்மையும் தமிழ் எனல் ஆகும்' என்று பிங்கலநிகண்டும் கூறுகிறது.தமிழ், உலகின் மூத்த மொழிகளில் ஒன்று. தமிழ், எந்த மொழியில் இருந்தும் கடன் வாங்கி உருவான கிளை மொழி அல்ல. தமிழில் இருந்துதான் ஏராளமான மொழிகள் உருவாகியுள்ளன. இப்படிப் பல மொழிகளை உருவாக்கும் திறன்கொண்ட மொழிதான், நமது தாய்மொழியான தமிழ். தமிழ், தமிழரசி, தமிழரசன் என்று மொழியின் பெயரையே பெயராக வைத்துக்கொள்ளும் அளவுக்கு பற்று நம் இனத்தில் இருக்கிறது. மொழிக்காக உயிரைத் தந்த தியாகிகளைப் பெற்ற மொழியும் நம் தமிழ்மொழி ஆகும்.

இலக்கியச் செழுமையும் இலக்கண அறிவும் கொண்ட மொழியை உயர்தனிச் செம்மொழியாக அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கை தமிழ் அறிஞர்கள் இடையே பல ஆண்டுகளுக்கு முன்பே எழுந்தது. அந்தக் கனவை நிறைவேற்றி வைத்தவர் மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதி. 2004–ஆம் ஆண்டு அக்டோபர் 14–ஆம் நாள், மத்திய அரசால், காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் தமிழ்மொழி, செம்மொழியாக அறிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், அன்றைய மத்திய அரசால் 2007–ஆம் ஆண்டு ஆகஸ்ட் 18–ஆம் நாள் தொடங்கி வைக்கப்பட்டது. தொடக்கத்தில் இந்த நிறுவனம், மைசூரில், இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்தில் இருந்து செயல்பட்டது. 2008–ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் நாள் முதல் சென்னைக்கு இந்த நிறுவனம் மாற்றப்பட்டுச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அப்போதுதான் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் என்று பெயர் சூட்டப்பட்டது. இதற்கும் காரணமாக இருந்தவர் தலைவர் கருணாநிதி.

சென்னை கடற்கரை காமராசர் சாலையில் உள்ள பாலாறு இல்லத்தில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் அலுவலகத்தை அவர், கடந்த 2008–ஆம் ஆண்டு சூன் 30–ஆம் திறந்து வைத்தார். செம்மொழி நிறுவனத்துக்கு எனத் தனியாக ஒரு கட்டடம் அமைய வேண்டும் என்று அவர் ஆசைப்பட்டார், அதற்காக 2007–ஆம் ஆண்டு நவம்பர் 5–ஆம் நாள் சென்னை பெரும்பாக்கத்தில் 16 ஏக்கர் நிலத்தை வழங்கினார்கள். சுமார் 1 கோடியே 45 லட்சம் ரூபாய் மதிப்பில் அந்த இடத்தை சமப்படுத்தி வழங்கினோம்.

அந்த இடத்தில் 24 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மத்திய அரசு மாபெரும் கட்டடம் அமைத்துத் தந்துள்ளது. கடந்த 12–ஆம் தேதி அந்தக் கட்டடத்தை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்திருக்கிறார். காணொலி வாயிலாக நடந்த அந்த விழாவுக்கு நான் முன்னிலை வகித்துப் பேசும்போது – ' இந்தியப் பிரதமர் செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்தின் புதிய கட்டடத்தைத் திறந்து வைத்துள்ளார்கள். அதற்காகத் தமிழ்நாட்டு மக்களின் சார்பிலும், அரசின் சார்பிலும், தனிப்பட்ட என் சார்பிலும் நன்றி தெரிவித்துக்

கொள்கிறேன்" என்று குறிப்பிட்டுச் சொன்னேன். "தலைவர் கருணாநிதி இன்று இருந்திருந்தால் மிகுந்த மகிழ்ச்சி அடைந்திருப்பார்கள். தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளின்போது தமிழுக்கு இத்தகைய சிறப்பு செய்யப்பட்டுள்ளது மகிழ்ச்சிக்குரியதாக இருக்கிறது" என்று குறிப்பிட்டுக் காட்டியிருப்பார்கள். அதன் பிறகு நானும் தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் தங்கம் தென்னரசும் பெரும்பாக்கம் சென்று தமிழாய்வு நிறுவனத்தைப் பார்வையிட்டோம். உண்மையில் மிகச் சிறப்பாக அந்த நிறுவனம் செயல்பட்டு வருகிறது. தொடக்கம் முதல் இன்று வரை இதன் வளர்ச்சிக்குப் பாடுபட்ட அனைவருக்கும் தமிழக அரசின் சார்பில் நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் 41 செவ்வியல் தமிழ் நூல்களின் ஆய்வுக்கு முதலிடம் வழங்கி வருகிறது. தொல் பழங்காலம் முதல் கி.பி. 6–ஆம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதிக்குள் தோன்றிய இலக்கிய, இலக்கணம் குறித்த ஆய்வினை மேற்கொள்ள உருவாக்கப்பட்டிருக்கக் கூடிய இந்த நிறுவனம், தமிழ்மொழி ஆய்விலும் அதன் மேம்பாட்டிலும் தனிக்கவனம் செலுத்தி வருகிறது. செம்மொழித் தமிழின் தொன்மையையும் தனித் தன்மையையும் அவற்றின் மரபுத் தொடர்ச்சியையும் ஆராய்ந்து பாதுகாப்பதை முக்கிய நோக்கமாக இந்நிறுவனம் கருதிக் கொண்டிருக்கிறது. இந்த வரிசையில் செம்மொழித் தமிழாய்வில் குறிப்பிடத்தக்க பங்களிப்புச் செய்தவர்களுக்கு விருதுகள் வழங்கிச் சிறப்பித்து வருகிறது.

செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்துக்கு, 2008–ஆம் ஆண்டு சூலை 24–ஆம் நாள், தனது சொந்த நிதியில் இருந்து ஒரு கோடி ரூபாயை தலைவர் கருணாநிதி வழங்கினார். 'கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் அறக்கட்டளை' என்ற பெயரால் ஓர் அறக்கட்டளையை நிறுவினார். இந்த அறக்கட்டளை சார்பில் தகுதிசால் தமிழறிஞர்களுக்கு விருது வழங்க வேண்டும் என்று அவர் விரும்பினார்.

இந்தியாவிலேயே மிக உயரிய விருதாக, பத்து லட்சம் ரூபாய் பரிசுத் தொகை கொண்டது இந்த விருது. பாராட்டு இதழும், தலைவர் கருணாநிதியின் உருவம் பொறித்த நினைவுப்பரிசும் வழங்கப்படும். முதல் விருது 2010, ஜூன் 23–அன்று கோவையில் நடைபெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில், அன்றைய குடியரசுத் தலைவரால் பின்லாந்து நாட்டைச் சேர்ந்த 'பேராசிரியர் அஸ்கோபார்ப்போலா' க்கு வழங்கப்பட்டது. தொடர்ச்சியாக ஆண்டுதோறும் இந்த விருதைத் தொடர்புடைய அரசுகள் வழங்கி இருக்க வேண்டும். அதை இந்த மேடையில் பேசி நான் அரசியலாக்க விரும்பவில்லை.

தமிழுக்கு, தமிழறிஞர்களுக்குச் செய்ய வேண்டிய பாராட்டுகள், மரியாதையில் கூட அரசியல் புகுந்ததன் காரணமாக, 2011–ஆம் ஆண்டு முதல் 2019–ஆம் ஆண்டு வரை இந்த விருதுகள் வழங்கப்படவில்லை. திமுக அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு விருதாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.வேறு எதற்காக இல்லாவிட்டாலும் , தமிழறிஞர்களுக்கு விருது கொடுப்பதற்காகவாவது, தமிழ்நாட்டில் மீண்டும் திமுக ஆட்சி மலர்ந்ததை நினைத்து இன்றைய நாளில் நான் பெருமைப்படுகிறேன். எப்போதும் தமிழுக்காகவே உழைத்திடும் திமுக ஆட்சிப் பொறுப்பில் இருந்த போதெல்லாம், தமிழின் வளர்ச்சிக்காகப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தியிருக்கிறது. குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால்,நமது மாநிலத்துக்கு மொழியின் பெயரால் 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டியது, திமுக ஆட்சியில்தான். தமிழ்த்தாய் வாழ்த்தை நிறுவி, அதனை மாநிலப் பாடல் ஆக்கியதும் திமுக ஆட்சியில்தான்.

உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடுகளைப் அண்ணா தலைமையில் தொடங்கி, உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு வரை நடத்தி, தமிழை உலகளவில் கொண்டு சென்றது. அய்யன் வள்ளுவர் ,அவ்வையார் முதலான பழங்காலத் தமிழ்ப் புலவர்கள் தொடங்கி, கால்டுவெல், ஜி.யு.போப் போன்ற அயல்நாட்டுத் தமிழறிஞர்கள் வரை, திருவுருவச்சிலை நிறுவியதும் திமுக ஆட்சியில்தான். தமிழ் வழியில் பயிலும் மாணவர்களுக்கு சமூகநீதி வழியில் உயர்கல்வியில் இடஒதுக்கீடு தந்தது திமுக ஆட்சிதான்.வள்ளுவருக்குச் சென்னையில் கோட்டமும் , குமரியில் 133 அடியில் வானுயர்ந்த சிலையும் நிறுவி உலகமே அண்ணாந்து பார்க்க வைத்த ஆட்சிதான் திமுகஆட்சி.சுவடிகளில் இருந்து புத்தகங்களுக்குத் தமிழ் மாறியது போல், தமிழை இணையத்துக்குக் கொண்டு செல்ல 1999–லேயே தமிழ் இணைய மாநாடு நடத்தியதும், தமிழ் இணையக் கல்விக் கழகத்தை நிறுவி, இன்று உலகில் எங்கிருந்தாலும், தமிழ் இலக்கண, இலக்கியங்களை அனைவரும் படிக்கும் அளவிற்குத் தமிழை இணையப்படுத்தியதும் திமுக ஆட்சி தான்.இப்படி என்னால், ஒரு நீண்ட பட்டியலை சொல்லிக் கொண்டிருக்க முடியும்.

இப்படித் திமுக ஆட்சி தமிழுக்கு ஆற்றிய பணிகளின் தொடர்ச்சியாகத் தான் இந்த விழாவில் சில அறிவிப்புகளை நான் வெளியிட விரும்புகிறேன். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் புதிய வளாகம் அமைந்துள்ள மேடவாக்கம் – சோழிங்கநல்லூர் இணைப்புச்சாலை இனி "செம்மொழிச் சாலை" எனப் பெயர் மாற்றம் செய்யப்படும். செம்மொழிச் சிறப்புகளை உலகெங்கும் கொண்டு சேர்க்கும் வகையில் முதற்கட்டமாகத் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் உள்ள 5 பல்கலைக்கழகங்களில் 'செம்மொழித் தமிழ் இருக்கைகள்' அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தமிழ் மொழிக்கு வளம் சேர்க்கும் முக்கியத்துவம் வாய்ந்த பல திட்டங்களை செம்மொழி நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது. செம்மொழி நிறுவனம் முன்வைத்துள்ள இலக்குகளை அடைய, தமிழ்நாடு அரசு எப்போதும் துணை நிற்கும்.விருது பெற்ற தமிழறிஞர்கள் அனைவரையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன். உங்களுக்கு விருது வழங்கியதன் மூலமாகச் செம்மொழி நிறுவனம் பெருமை அடைகிறது, ஏன், நானும் பெருமை அடைகிறேன், தமிழ்நாடு அரசும் பெருமை அடைகிறது. இந்த விருதின் மூலமாகத் தமிழ்மொழி மேலும் சிறப்படையப் பல்வேறு

ஆக்கப்பூர்வமான பணிகளை நீங்கள் தொடர வேண்டும் என்று கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

பழமைக்குப் பழமையாய், புதுமைக்கு என்றும் புதுமையாய் இருக்கக்கூடிய மொழி நம்முடைய தமிழ் மொழி. இந்த மொழி குறித்த ஆய்வுகள் தமிழ்நாட்டோடு, இந்திய எல்லையோடு முடிந்துவிடாமல் உலகளாவியதாக அமைய வேண்டும். உலக மொழியியல் கோட்பாடுகளை உள்ளடக்கியதாக நமது ஆய்வுகள் அமைய வேண்டும். மொழியை ஒரு பண்பாடாகச் சொல்வது உலக மரபாகவே உள்ளது.' நோம்சாம்ஸ்கி' போன்ற உலகப் புகழ்பெற்ற அறிஞர்கள், மொழியை மூளையின் ஓர் உறுப்பு என்று சொல்லத் தொடங்கி இருக்கிறார்கள். "குழந்தையின் மூளைக்குள் ஒரு மொழியறிவு இருக்கிறது, இது மனித இனத்துக்கே உரியது" என்று அவர் சொல்கிறார். 'தமிழ் எங்கள் இளமைக்குப் பால்' என்று எப்போதோ சொல்லிவிட்டார் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்.

உங்களது ஆய்வுகள் அறிவுப்பூர்வமானதாக மட்டுமில்லாமல் உணர்வுப்பூர்வமானதாகவும் அமைய வேண்டும். அப்படி அமைந்தால் உலக மொழியியல் அறிஞர்கள் அனைவரும் தேடி வரக்கூடிய இடமாகச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் நிச்சயமாக மாறும். அப்படி உயர்ந்து நிற்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்!' என்று அண்ணா காட்டிய பாதையில், தலைவர் கருணாநிதியின் தொலைநோக்குப் பார்வையோடு நடைபோடும் அரசு, தமிழை ஆட்சிமொழியாகவும் வழக்காடு மொழியாகவும் மேலும் உயர்த்திட தொடர்ந்து குரல் கொடுக்கும் என்பதைக் கூறி, தமிழ் வாழ்க! செம்மொழித் தமிழ் வாழ்க என்று வாழ்த்தி விடைபெறுகிறேன் எனத் தெரிவித்தார்.

விருதுகள்: முன்னதாக இந்த விழாவில், 2011 ஆம் ஆண்டிற்கான விருதினைப் பேராசிரியர் பொன். கோதண்டராமனுக்கும் (மேனாள் துணைவேந்தர், சென்னைப் பல்கலைக்கழகம்), 2012 ஆம் ஆண்டிற்கான விருதினைப் பேராசிரியர் இ. சுந்தரமூர்த்திக்கும் (மேனாள் துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக்கழகம்), 2013 ஆம் ஆண்டிற்கான விருதினைப் பேராசிரியர் ப. மருதநாயகத்துக்கும் (மேனாள் இயக்குநர், புதுவை மொழியியல் பண்பாட்டு நிறுவனம், மேனாள் பதிவாளர், புதுவைப் பல்கலைக்கழகம்), 2014 ஆம் ஆண்டிற்கான விருதினைப் பேராசிரியர் கு. மோகனராசுக்கும் (மேனாள் பேராசிரியர் & தலைவர், திருக்குறள் ஆய்வு மையம், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை), 2015 ஆம் ஆண்டிற்கான விருதினைப் பேராசிரியர் மறைமலை இலக்குவனாருக்கும் (மேனாள் தமிழ்ப் பேராசிரியர், மாநிலக் கல்லூரி,சென்னை) 2016ஆம் ஆண்டிற்கான விருதினைப் பேராசிரியர் கா. ராஜனுக்கும் (மேனாள் பேராசிரியர், வரலாற்றுத்துறை, புதுவைப் பல்கலைக்கழகம்) 2018 ஆம் ஆண்டிற்கான விருதினைக் கவிஞர் ஈரோடு தமிழன்பனுக்கு (மேனாள் தமிழ்ப் பேராசிரியர், புதுக்கல்லூரி, சென்னை) 2019 ஆம் ஆண்டிற்கான விருதினைப் பேராசிரியர் கு. சிவமணிக்கும் (மேனாள் முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர் & திருவள்ளுவர் கல்லூரி, நெல்லை) முதல்வர் மு.க. ஸ்டாலின் கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதுகளை வழங்கினார். விருதாளர்களுக்கு விருதுடன் ரூபாய் 10 லட்சம் பரிசுத் தொகையும், பாராட்டுச் சான்றிதழ், வெண்கலத்தாலான மு.கருணாநிதியின் திருவுருவச்சிலையையும் வழங்கி முதல்வர் கௌரவித்தார். இந்த விழாவில் அமைச்சர், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசு துறைச் செயலர்கள், அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

---

**10. பருவநிலை மாற்றம்: இந்திய – அமெரிக்க நிபுணா்கள் ஆலோசனை**

பருவநிலை மாற்றத்தை எதிா்கொள்ள தொழில்நுட்பத்தின் மூலம் கரியமில வாயுவை சேகரிப்பது மற்றும் பயன்பாட்டுத் தீா்வுகளின் சவால்கள் குறித்து இந்தியா, அமெரிக்காவைச் சோ்ந்த நிபுணா்கள் ஆலோசனை நடத்தினா்.

இந்தியாவின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப துறையும், அமெரிக்காவின் எரிசக்தி துறையும் இணைந்து இந்த ஆலோசனைக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்திருந்தன.

உலகில் அதிவிரைவாக வளா்ந்து வரும் பொருளாதாரங்களில் ஒன்றாக இருப்பதோடு பருவநிலை இலக்குகளை எதிா்கொள்வதற்கான இந்தியாவின் செயல்பாடு மற்றும் விருப்பங்கள் குறித்து அண்மையில் கிளாஸ்கோவில் நிறைவடைந்த பங்கேற்பாளா்கள் மாநாட்டில் பிரதமா் நரேந்திர மோடி எடுத்துரைத்ததை இந்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை செயலாளா் சந்திரசேகா் இந்தக் கூட்டத்தில் நினைவுகூா்ந்தா். "2070–ஆம் ஆண்டுக்குள் கரிய மில வாயு வெளியேற்றமே இல்லாத நாடாக இந்தியாவை மாற்றுவதற்கு பிரதமா் உத்தரவிட்டுள்ளதாகவும் அவா் கூறினாா்.

முன்னெப்போதும் இல்லாத வேகத்தில் நீடித்த வளா்ச்சி தொடரும் நிலையில், கரிய மில வாயு வெளியேற்றத்தை குறைப்பதற்கு அதனை சேகரிப்பது, பயன்படுத்துவது, இருப்பில் வைப்பது போன்ற முக்கிய வழிமுறைகளும் காணப்படுகின்றன என்று அவா் கூறினாா்.

இந்த பயிலரங்கில் பேசிய அமெரிக்காவின் படிம எரிசக்தி மற்றும் கரியமில வாயு அலுவலகம், எரிசக்தி துறை ஆகியவற்றின் துணை அமைச்சா் பொறுப்பு வகிக்கும் ஜெனிபா் வில்காக்ஸ், பருவநிலை மாற்றம், தூய்மையான எரிசக்தி இலக்குகளை எதிா்கொள்ள புதிய தொழில்நுட்பங்களை உருவாக்குவதில் பங்குதாரராக இந்தியா உள்ளது என்றாா். "

தூய்மை எரிசக்தி தொடா்பாக அமெரிக்காவின் முன் முயற்சிகளை எடுத்துரைத்த வில்காக்ஸ் இது உலகளாவிய நெருக்கடி என்றும் இதற்கான தொழில்நுட்பங்களை உலகளாவிய பங்கேற்பு தேவை என்றும் கூறினாா்.

---

**1.** **கோல்டன் குளோப்ஸ் – 2022இல் 'சிறந்த பட (நாடகம்)' விருதை வென்ற திரைப்படம் எது?**

**அ) தி பவர் ஆஃப் எ டாக் ☑**



ஆ) கிங் ரிச்சர்ட்

இ) பெல்ஃபாஸ்ட்

ஈ) கோடா

✓ கோல்டன் குளோப்ஸ் 2022'இல் 'தி பவர் ஆஃப் எ டாக்' 'சிறந்த படம் (நாடகம்)' என அறிவிக்கப்பட்டது. பெனடிக்ட் கம்பெர்பாட்ச் நடித்த இந்தப்படம் ஜேன் கேம்பியனுக்கு சிறந்த இயக்குநர் விருதையும், கோடி ஸ்மிட்–மெக்ஃபீக்கு சிறந்த துணை நடிகர் விருதையும் பெற்றுத்தந்தது.

✓ ஸ்டீவன் ஸ்பீல்பெர்க்கின் 'வெஸ்ட் சைட் ஸ்டோரி' சிறந்த திரைப்படம் (இசை அல்லது நகைச்சுவை), சிறந்த திரைப் பட நடிகை (இசை அல்லது நகைச்சுவை) மற்றும் சிறந்த துணை நடிகைக்கான திரைப்பட விருதுகளை வென்றது. வில் ஸ்மித் (கிங் ரிச்சர்ட்) திரைப்படம், நாடகம் ஆகியவற் –றில் சிறந்த நடிகருக்கான விருதை வென்றார்.

---

**2.** **மரபணு மாற்றப்பட்ட பன்றியின் இதய மாற்று அறுவை சிகிச்சையை முதன்முதலில் வெற்றிகரமாக நடத்திய நாடு எது?**



அ) சீனா

ஆ) ரஷ்யா

**இ) அமெரிக்கா ☑**

ஈ) இந்தியா

✓ அமெரிக்காவின் மேரிலாந்து பல்கலைக்கழக மருத்துவ மையத்தைச் சேர்ந்த மருத்துவர்கள் மரபணு மாற்றப்பட்ட பன்றியின் இதயத்தை மனிதருக்கு பொருத்தும் அறுவை சிகிச்சையை வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளனர்.

✓ 57 வயதான டேவிட் பென்னட், இதுபோன்ற இதய மாற்று அறுவை சிகிச்சையை செய்துகொண்ட உலகின் முதல் நபர் என்ற பெருமையைப் பெற்றார்.

---

**3.** **'ரோஜ்கர் மிஷன்' என்பது எந்த மாநிலத்தின் சமீபத்திய முன்னெடுப்பாகும்?**

அ) உத்தர பிரதேசம்



**ஆ) சத்தீஸ்கர் ☑**

இ) பஞ்சாப்

ஈ) அஸ்ஸாம்

✓ சத்தீஸ்கர் அரசு முதல்வர் பூபேஷ் பாகேல் தலைமையில் வேலைவாய்ப்பு திட்டத்தை அமைக்க முடிவு செய்துள்ளது. சத்தீஸ்கர் ரோஜ்கர் மிஷன் தலைமைச் செயலாளரும், முதன்மைச் செயலாளரும் முறையே துணைத் தலைவராகவும், CEO ஆகவும் இருப்பார்கள்.

✓ IIT மற்றும் IIM போன்ற முதன்மையான நிறுவனங்களின் நிபுணத்துவத்தைப் பயன்படுத்தி, அடுத்த 5 ஆண்டுகளில் மாநிலத்தில் சுமார் 15 இலட்சம் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

**4.** **அண்மையில் காலமான பண்டித பிர்ஜு மகாராஜுடன் தொடர்புடைய நடனம் எது?**

**அ) கதக் ☑**



ஆ) பரதநாட்டியம்

இ) குச்சிப்புடி

ஈ) மோகினியாட்டம்

✓ பழம்பெரும் கதக் நடனக்கலைஞர் பண்டித பிர்ஜு மகராஜ் அண்மையில் தனது 83ஆம் வயதில் காலமானார். அவர் தனது சீடர்களால் பண்டிதஜி மற்றும் மகராஜ்–ஜி என்றும் அழைக்கப்படுகிறார். இந்தியாவின் சிறந்த கலைஞர்களில் ஒருவராகக்கருதப்படும் அவருக்கு கடந்த 1964இல் 'சங்கீத நாடக அகாதமி விருது'ம் 1986இல் 'பத்ம விபூஷன்' விருது வழங்கப்பட்டது. சிறந்த நடன அமைப்பிற்கான தேசிய திரைப்பட விருதும் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

---

**5.** **மின்சார வாகனங்களுக்கான மின்னேற்ற உட்கட்ட –மைப்பிற்கான தரநிலைகளின்படி, பொது மின்னேற்ற நிலையத்தை யார் அமைக்க முடியும்?**

அ) டிஸ்காம்கள்



**ஆ) தனிநபர்கள் ☑**

இ) எரிசக்தி அமைச்சகம்

ஈ) மாநில அரசுகள்

✓ மின்சார வாகனங்களுக்கான மின்னேற்ற உட்கட்டமைப் –பிற்கான திருத்தப்பட்ட வழிகாட்டுதல்கள் மற்றும் தர நிலைகளை மத்திய எரிசக்தி அமைச்சகம் வெளியிட்டது.

✓ இந்த வழிகாட்டுதல்களின்படி, எந்தவொரு தனிநபரும் / நிறுவனமும் உரிமம் ஏதுமில்லாமல் பொது மின்னேற்ற நிலையங்களை அமைக்கலாம். அத்தகைய நிலையங்கள் தொழில்நுட்ப ரீதியாக பாதுகாப்பு தரநிலைகள் மற்றும் நெறிமுறைகளை பூர்த்தி செய்திருத்தல் அவசியமாகும்.

---

**6.** **COVID–19 தடுப்பூசி பற்றிய இந்தியாவின் நினைவு அஞ்சல்தலையில் இடம்பெற்றுள்ள தடுப்பூசி எது?**

அ) கோவிஷீல்டு



**ஆ) கோவாக்சின் ☑**

இ) COVOVAX

ஈ) ZyCoV–D

✓ இந்தியாவின் தேசிய COVID–19 தடுப்பூசி திட்டத்தின் ஓராண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் நினைவு அஞ்சல்தலையை மத்திய சுகாதாரம் & குடும்பநலத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது. கோவாக்சின் ஊசியுடன், சுகாதாரப் பணியாளர் மூத்த குடிமக்களுக்கு தடுப்பூசி செலுத்துவதைப்போன்று இந்த நினைவு அஞ்சல் தலை வடிவமைக்கப்பட்டுள்ளது.

✓ ஓராண்டு காலத்திற்குள், இந்தியா 156 கோடிக்கும் அதிக –மான தடுப்பூசிகளை செலுத்தியுள்ளது. இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலுடன் இணைந்து ஹைதராபாத்தைச் சார்ந்த பாரத் பயோடெக் நிறுவனத்தால் கோவாக்ஸின் தடுப்பூசி உருவாக்கப்பட்டது.

---

**7.** **அமெரிக்க நாணயத்தில் இடம்பெற்ற முதல் கறுப்பினப் பெண்மணி யார்?**

**அ) மாயா ஏஞ்சலோ ☑**



ஆ) பிலிஸ் வீட்லி

இ) வாண்டா கோல்மன்

ஈ) க்வென்டோலின் ப்ரூக்ஸ்

- ✓ கவிஞரும் ஆர்வலருமான மாயா ஏஞ்சலோ அமெரிக்க நாணயத்தில் இடம்பெற்ற முதல் கறுப்பினப் பெண்மணி ஆனார். இந்நாணயம் ஆப்பிரிக்க பெண்கள் குவார்டர்ஸ் திட்டத்தின் ஒருபகுதியாகும்.
- ✓ கடந்த 90 ஆண்டுகளாக, அமெரிக்காவின் நாணயத்தில் ஒருபுறத்தில் அதன் முதல் அதிபர் ஜார்ஜ் வாஷிங்டனும் மறுபுறத்தில் கழுகும் இடம்பெற்று வந்தது.

---

**8.** **தொடர்ந்து 4ஆம் முறையாக எந்த நாட்டின் அதிபராக 'டேனியல் ஒர்டேகா' பதவியேற்றுள்ளார்?**

**அ) நிகரகுவா ☑**



ஆ) எல் சல்வடோர்

இ) பெரு

ஈ) அர்ஜென்டினா

- ✓ மத்திய அமெரிக்க நாடான 'நிகரகுவா'வின் அதிபராக 4ஆவது முறையாக டேனியல் ஒர்டேகா பதவியேற்றார். தேர்தலுக்குப் பிறகு அவரது அரசாங்கத்தில் உள்ள பல நபர்கள்மீது அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் பொருளாதாரத் தடைகளை விதித்தன.
- ✓ ஒர்டேகாவின் அரசாங்கம் கடந்த 2007ஆம் ஆண்டு முதல் அதிகாரத்தில் இருந்து வருகிறது.

---

**9.** **ஒராங் தேசியப்பூங்கா அமைந்துள்ள மாநிலம் எது?**

அ) உத்தர பிரதேசம்



**ஆ) அஸ்ஸாம் ☑**

இ) பீகார்


ஈ) ஹிமாச்சல பிரதேசம்

- ✓ ஒராங் தேசியப்பூங்கா அசாம் மாநிலத்தில் பிரம்மபுத்திரா நதியின் வடகரையில் அமைந்துள்ளது. இது முன்பு 'ராஜீவ் காந்தி ஒராங் தேசியப்பூங்கா' என்று அழைக்கப்பட்டது. ஒராங் தேசியப்பூங்காவை தற்போதுள்ள அதன் அளவை விட மூன்று மடங்குக்கும் அதிகமாக மாற்றுவதற்கான அறிவிப்பை அரசாங்கம் அண்மையில் வெளியிட்டுள்ளது.

---

**10.** **'ஸ்மார்ட் டவுன்ஷிப்' திட்டத்தைத் தொடங்கியுள்ள மாநிலம் எது?**

**அ) ஆந்திர பிரதேசம் ☑**



ஆ) ஒடிஸா

இ) குஜராத்

ஈ) கேரளா

- ✓ ஆந்திர பிரதேச முதல்வர் ஒய் எஸ் ஜெகன் மோகன் ரெட்டி, ஜகனண்ணா ஸ்மார்ட் டவுன்ஷிப் திட்டத்திற்கான இணையதளத்தை அண்மையில் தொடங்கி வைத்தார்.
- ✓ வில்லங்கமற்ற அரசு நிலங்களை நியாயமான விலையில் வழங்குவதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. அம்மாநில அரசு ஏற்கனவே நடுத்தர குடும்பங்களுக்கு 31 லட்சம் வீட்டு பட்டாக்களை வழங்கியுள்ளது. மேலும் முதல் கட்டமாக 15.6 இலட்சம் வீடுகளைக் கட்டும் பணியையும் அது தொடங்கியுள்ளது.

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. தொல்லியல் அறிஞர் இரா நாகசாமி மறைவு**

'பத்ம பூஷண்' விருது பெற்ற தொல்லியல் அறிஞர் இரா நாகசாமி (91) காலமானார். இந்திய வரலாறு, தொல்லியல் மற்றும் கல்வெட்டு எழுத்துக் குறிப்பு அறிஞர் இரா நாகசாமி சம்ஸ்கிருத வித்துவானான ராமச்சந்திரனுக்கு மகனாக 1930ஆம் ஆண்டு ஆகஸ்ட் 10ஆம் தேதி பிறந்தார். இவர் சென்னைப் பல்கலைக்கழகத்தில் சம்ஸ்கிருத மொழியில் முதுநிலைப் பட்டபடிப்பு முடித்தார். பின்னர், டெக்கான் கல்லூரியில் தொல்லியல் தொடர்பான ஆய்வில் முனைவர் பட்டம் பெற்றார்.

இந்தியத் தொல்லியல் ஆய்வகத்தில் தொல்லியல் துறையில் பயிற்சி எடுத்த நாகசாமி, 1959ஆம் ஆண்டு முதல் சென்னை அரசு அருங்காட்சியகத்தின் பாதுகாவலர், தமிழக அரசின் தொல்லியல் துறையின் உதவி சிறப்பு அதிகாரி, தொல்லியல் துறையின் முதலாவது இயக்குநர் போன்ற பதவிகளை வகித்துள்ளார்.

மத்திய அரசின் பத்ம பூஷண், தமிழக அரசின் கலைமாமணி விருதுகளை அவர் பெற்றுள்ளார்.

---

**2. சையது மோடி சர்வதேச பேட்மிண்டன் போட்டி: பி.வி. சிந்து சாம்பியன் பட்டம் வென்றார்**

உத்தர பிரதேச மாநிலம் லக்னோவில் நடைபெற்ற சர்வதேச சையது மோடி 2022 பேட்மிண்டன் இறுதி போட்டியில் வெற்றி பெற்று பி வி சிந்து சாம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றுள்ளார்

உத்தர பிரதேச மாநிலம் லக்னோவில் சர்வதேச சையது மோடி 2022 பேட்மிண்டன் போட்டிகள் நடைபெற்றது.

தகுதிச்சுற்று, காலிறுதி மற்றும் அரையிறுதிப் போட்டிகளி -ல் வெற்றி பெற்ற இருவருக்கு இன்று இறுதி போட்டி நடைபெற்றது.

இதில் மகளிர் பிரிவில் ஒலிம்பிக் போட்டியில் இரண்டு முறை பதக்கம் வென்ற பி வி சிந்து மற்றும் எஸ்ஆர்எம் பல்கலைக்கழகத்தில் 2ஆம் ஆண்டு பி டெக் படித்து வரும் நாக்பூரைச் சேர்ந்த 20 வயதான மாளவிகா பன்சோட் என்ற மாணவி நேருக்கு நேர் மோதினர்.

இதில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்தியதால் 21–13, 21–16 என்ற நேர் செட் கணக்கில் மாளவிகா பன்சோட்டை வீழ்த்தி பி வி சிந்து வெற்றி பெற்று சாம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றார்.

முன்னதாக நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் பி வி சிந்து, ரஷ்யாவின் ஈவ்ஜீனியா கொசெட்ஸ்கயாவை முதல் செட்டில் 21–11 என்ற புள்ளி கணக்கில் வீழ்த்தினார்.

பி வி சிந்து வெற்றி பெற ஒரு செட் மீதம் இருந்த நிலையில், ரஷ்ய வீராங்கனை பாதியிலேயே விலகிக் கொள்வதாக அறிவித்ததால் பிவி சிந்து இறுதிப்போட்டிக்குள் நுழைந்தார்.

---

**3. தேசிய பூப்பந்தாட்ட போட்டியில் தமிழக மகளிர் அணி சாம்பியன்**

தேசிய சப்–ஜூனியர் பூப்பந்து போட்டியில் தமிழக மகளிர் அணி தங்கப் பதக்கம் வென்றது.

40ஆவது தேசிய சப்–ஜூனியர் பூப்பந்து சாம்பியன்ஷிப் போட்டி ஆந்திராவில் கடந்த 8ஆம் தேதி முதல் 12ஆம் தேதி வரை நடைபெற்றது. 18 மாநிலங்களைச் சேர்ந்த அணிகள் கலந்துகொண்ட இந்தத் தொடரில் தமிழ்நாடு மகளிர் அணி தங்கப்பதக்கம் வென்றது. தமிழக அணி அரை இறுதியில் 35–24 மற்றும் 35–26 என்ற கணக்கில் கர்நாடகாவை வீழ்த்தியது.

தொடர்ந்து நடைபெற்ற இறுதிச் சுற்றில் தமிழக மகளிர் அணி 35–28, 28–35, 35–28 என்ற கணக்கில் ஆந்திராவை விழ்த்தியது.

---

**1.** **மூன்றாம் பாலினத்தவர்கள் (உரிமைகள் பாதுகாப்பு) சட்டம் அமலுக்கு வந்த ஆண்டு எது?**

அ) 2000

ஆ) 2005

இ) 2010

**ஈ) 2020 ☑**

✓ 3ஆம் பாலினத்தவர்கள் (உரிமைகள் பாதுகாப்பு) சட்டம், 2019 ஆனது கடந்த 2020ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் அமலுக்கு வந்தது.

✓ மூன்றாம் பாலினத்தவரின் தனியுரிமை மற்றும் கண்ணி–யத்தைப் பாதுகாக்கும் வகையில் திருநம்பிகளுக்கும் திருநங்கைகளுக்கும் தனித்தனி இருப்பிட வசதிகளை ஏற்படுத்துமாறு மத்திய உள்துறை அமைச்சகம் சிறை அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டுள்ளது. திருநங்கைகள் சட்டம், 2019'ஐக் கருத்தில் கொண்டு வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளன. தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தி–ன்படி, கடந்த 2020இல் நாடு முழுவதுமுள்ள சிறைகளில் 70 மூன்றாம் பாலினத்தவர்கள் உள்ளனர்.

---

**2.** **'பிராந்திய திட்ட விதிகள், 2021'ஐ அறிவித்த மாநிலம் எது?**

**அ) தமிழ்நாடு ☑**

ஆ) கேரளா

இ) மணிப்பூர்

ஈ) ஆந்திர பிரதேசம்

✓ தமிழ்நாடு அரசானது 'மண்டல திட்டவிதிகள், 2021' என்ற அறிவிப்பை வெளியிட்டுள்ளது. மாநிலத்தில் 1.36 இலட்சம் ச.கிமீ பரப்பளவைக் கொண்ட 12 மண்டலங்களுக்கான திட்டங்களைத் தயாரிப்பதற்கான விதிகள் அறிவிக்கப்பட்டு உள்ளன. புதிய விதிகளின்கீழ், அடுத்த 18 மாதங்களில் நிலம் மற்றும் கட்டட பயன்பாட்டு வரைபடங்களைத் தயாரிப்பதற்காக, தமிழ்நாடு அரசு ஒரு பிராந்திய திட்டமிடல் ஆணையத்தை அமைக்கும்.

✓ பிராந்தியத்திட்டம் என்பது ஒரு இடை–தீர்வுத் திட்டமாகும், அதே சமயம் முதன்மைத் திட்டங்கள் மற்றும் விரிவான வளர்ச்சித் திட்டங்கள் இதன் உள்–தீர்வுத் திட்டங்களாகும்.

---

**3.** **2022இல் '25ஆவது தேசிய இளையோர் விழா'வை நடத்திய மாநிலம்/யூனியன் பிரதேசம் எது?**

அ) கோவா

ஆ) இலட்சத்தீவுகள்

**இ) புதுச்சேரி ☑**

ஈ) அஸ்ஸாம்

✓ புதுச்சேரியில் 25ஆவது தேசிய இளையோர் விழாவை பிரதமர் மோடி காணொளிக்காட்சிமூலம் தொடங்கினார். புதுச்சேரியில் அமைக்கப்பட்டுள்ள MSME அமைச்சகத்தின் தொழில்நுட்ப மையம் மற்றும் பெருந்தலைவர் காமராஜர் மணிமண்டபம், ஆகியவற்றையும் அவர் திறந்துவைத்தார்.

---

**4.** **WEF தாவோஸ் நிகழ்ச்சி நிரல் 2022'இன்போது 'P3 (Pro–Planet People) இயக்கத்தை அறிவித்த நாடு எது?**

அ) அமெரிக்கா

ஆ) ரஷ்யா



**இ) இந்தியா ☑**

ஈ) UK

✓ இந்தியப்பிரதமர் நரேந்திர மோடி உலகப் பொருளாதார மன்றத்தின் (WEF) தாவோஸ் நிகழ்ச்சி நிரல் 2022'இல் இந்தியாவின் காலநிலை மாற்றக் கடமைகளை அடிக் கோடிட்டுக் காட்ட "P3 (Pro–Planet People) இயக்கத்தை" அறிமுகப்படுத்தினார். உலகப் பொருளாதார மன்றத்தின் தாவோஸ் நிகழ்ச்சி நிரல் மெய்நிகர் உச்சிமாநாட்டில் உலகத் தலைவர்கள் மற்றும் உலகெங்கிலும் உள்ள முக்கியமான நிறுவனங்களின் தலைவர்களால் காலநிலை நடவடிக்கை, தொற்றுநோய் மீட்பு மற்றும் சமூக–பொருளாதார மீள்தன்மை குறித்து விவாதிக்கப்பட்டது.

---

**5.** **மூத்த அதிகாரியான விக்ரம் தேவ் தத், எந்த அமைப்பின் புதிய தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநராக உள்ளார்?**

**அ) ஏர் இந்தியா ☑**



ஆ) ஆயுள் காப்பீட்டு நிறுவனம்

இ) சென்ட்ரல் எலெக்ட்ரானிக்ஸ் லிட்

ஈ) பாரத் சஞ்சார் நிகம் லிட்

✓ மூத்த அதிகாரி விக்ரம் தேவ் தத், ஏர் இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார். விக்ரம் தேவ் தத் AGMUT (அருணா–ச்சல பிரதேசம், கோவா, மிசோரம் மற்றும் யூனியன் பிரதேசம்) கேடரின் 1993–பேட்ச் ஐஏஎஸ் அதிகாரி ஆவார்.

✓ மேலும் தற்போது தில்லி அரசாங்கத்தில் முதன்மை செயலராக (சுற்றுலா) உள்ளார். பணியாளர் அமைச்சகம் பிறப்பித்த உத்தரவின்படி, கூடுதல் செயலர் பதவிநிலை மற்றும் ஊதியக்கட்டில் அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

---

**6.** **'இந்தியாவின் காலநிலை அபாயங்கள் மற்றும் பாதிப்பு அட்லஸை' வெளியிட்ட மத்திய அமைச்சகம் எது?**

அ) அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம்

**ஆ) புவி அறிவியல் அமைச்சகம் ☑**

இ) சுற்றுச்சூழல், வனம் & காலநிலை மாற்ற அமைச்சகம்

ஈ) வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்


✓ இதன்வகையில் முதலாவதான 'இந்தியாவின் காலநிலை அபாயங்கள் மற்றும் பாதிப்பு அட்லஸை' மத்திய புவி அறிவியல் அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

✓ இதன்படி, மேற்கு வங்கம், ஒடிஸா மாநிலத்தின் அண்டை மாவட்டங்கள் மற்றும் தமிழ்நாட்டின் இராமநாதபுரம், புதுக் கோட்டை மற்றும் தஞ்சாவூரில் உள்ள சுந்தரவனங்கள் ஆகியவை சூறாவளி மற்றும் 8.5 முதல் 13.7 மீ உயரம் வரை எழும் புயல் அலைகளால் மிகவும் பாதிக்கப்படக் கூடியவையாக அறியப்பட்டுள்ளன.

---

**7.** **தடுப்பூசி போடப்படாத நிலையில், ஆஸ்திரேலியாவில் இருந்து நாடு கடத்தப்பட்ட டென்னிஸ் ஆளுமை யார்?**

அ) ரபேல் நடால்



**ஆ) நோவக் ஜோகோவிச் ☑**

இ) ரோஜர் பெடரர்

ஈ) டேனியல் மெட்வெடேவ்

- ✓ தடுப்பூசி போட்டுக்கொள்ளாத டென்னிஸ் வீரர் நோவக் ஜோகோவிச்சின் சவாலை நீதிபதிகள் நிராகரித்ததை அடுத்து, ஆஸ்திரேலியாவிலிருந்து அவர் நாடு கடத்தப்பட்டார். ஆஸி. அரசு "உடல்நலம் மற்றும் நல்லொழுங்கு" அடிப்படையில் அவரது நுழைவு இசைவை ரத்து செய்தது.

---

**8.** **இந்தியாவின் குற்றவியல் சட்டங்கள் பற்றிய விரிவான மதிப்பாய்வைத் தொடங்கியுள்ள மத்திய அமைச்சகம் எது?**

**அ) உள்துறை அமைச்சகம் ☑**

ஆ) சட்டம் மற்றும் நீதி அமைச்சகம்

இ) சுரங்க அமைச்சகம்

ஈ) புவி அறிவியல் அமைச்சகம்

- ✓ மத்திய உள்துறை அமைச்சகம் இந்தியாவின் குற்றவியல் சட்டங்களை "விரிவான மதிப்பாய்வு" செய்வதற்கான செயல்முறையைத் தொடங்கியுள்ளது.
- ✓ உள்துறை அமைச்சர் அமித் ஷா, இந்திய தண்டனைச் சட்டம் (IPC), குற்றவியல் நடைமுறைச் சட்டம் (CrPC) மற்றும் இந்திய சாட்சியச்சட்டம் ஆகியவற்றில் திருத்தம் செய்வதற்காக இந்தியத் தலைமை நீதிபதி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முதலமைச்சர்கள் ஆகியோரின் ஆலோசனைகளைக்கோரினார். உயர்நீதிமன்றங்களின் தலைமை நீதிபதிகள், யூனியன் பிரதேசங்களின் நிர்வாகிகள், பார் கவுன்சில்கள் மற்றும் சட்டப் பல்கலைகளின் ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

---

**9.** **'2 Vs 2' வேளாண் சந்தை அணுகல் சிக்கல்களை செயல்படுத்துவதற்காக, இந்தியா, எந்த நாட்டுடனான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது?**

**அ) அமெரிக்கா ☑**



ஆ) இஸ்ரேல்

இ) ரஷ்யா

ஈ) ஆஸ்திரேலியா

- ✓ இந்திய உழவு மற்றும் உழவர்கள் நலத்துறை மற்றும் அமெரிக்க வேளாண்மைத் துறை ஆகியவை "2 Vs 2 வேளாண் சந்தை அணுகல்" சிக்கல்களைச் செயல்படுத்துவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. சமீபத்திய ஒப்பந்தத்தின்படி இந்திய மாம்பழங்கள் மற்றும் மாதுளை அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.
- ✓ இந்தியாவிற்கு செர்ரிகள், நொய் வைக்கோல், அமெரிக்க பன்றி இறைச்சி மற்றும் பன்றி இறைச்சி பொருட்களை இறக்குமதி செய்ய அனுமதிக்கும் ஒப்பந்தங்களிலும் இந்தியா கையெழுத்திட்டது.

---

**10.** **பிரதமருக்கான பாதுகாப்பு வீதிமீறல்கள் குறித்து விசாரிப்பதற்காக உச்சநீதிமன்றம் நியமித்த விசாரணைக் குழுவிற்கு தலைமை தாங்குபவர் யார்?**

அ) நீதிபதி இரஞ்சன் கோகாய்



**ஆ) நீதிபதி இந்து மல்கோத்ரா ☑**

இ) நீதிபதி P சதாசிவம்

ஈ) நீதிபதி K G பாலகிருஷ்ணன்

- ✓ பிரதமர் நரேந்திர மோடியின் பஞ்சாப் பயணத்தின்போது ஏற்பட்ட பாதுகாப்பு வீதிமீறல்கள் குறித்து விசாரிக்க, உச்ச நீதிமன்றம் அதன் முன்னாள் நீதிபதி இந்து மல்கோத்ரா தலைமையில் விசாரணைக் குழுவை நியமித்தது.
- ✓ இக்குழுவில் பஞ்சாப் மற்றும் ஹரியானா நீதிமன்றத்தின் தலைமைப் பதிவாளர், தேசிய புலனாய்வு அமைப்பின் தலைமை இயக்குநர் அல்லது அவரால் பரிந்துரைக்கப்பட்ட அதிகாரி & பஞ்சாப் காவல்துறையின் ஏடிஜிபி (பாதுகாப்பு) ஆகியோர் அடங்குவர். பாதுகாப்பு வீதிமீறல்களுக்கான காரணங்களை இந்தக் குழு ஆராய்ந்து, பிரதமர் மற்றும் அரசியலமைப்புச் செயல்பாட்டாளர்களின் பாதுகாப்பிற்கு பாதுகாப்புப்படை அவசியம் என்று பரிந்துரைக்கும்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. 29 குழந்தைகளுக்கு பிரதமர் விருது**

2021, 2022ஆம் ஆண்டுகளுக்கான பிரதமரின் தேசிய பால புரஸ்கார் விருதுகள் மின் எண்மம் (டிஜிட்டல் சான்றிதழ்கள்) முறையில் நாடு முழுவதுமுள்ள 29 குழந்தைகளுக்கு வழங்கப்பட்டன.

பிளாக்செயின் எனப்படும் இணையவழி ஆவண பரிமாற்ற தொழில்நுட்பத்தின்கீழ் முதன்முறையாக பிரதமர் மோடி சான்றிதழ்களை வழங்கினார்.

விருது பெற்ற 29 சிறார்களில் தமிழகத்தை சேர்ந்த இரு குழந்தைகளும் பிரதமரின் தேசிய பால புரஸ்கார் விருதுகள் பெற்றனர்.

விருதுநகரைச் சேர்ந்த 8 வயது சிறுமி என சி விஷாலினி வெள்ளப் பேரிடர்களின்போது நீரில் மூழ்குவதைத் தடுக்கும் ஒரு தானியங்கி பல் செயல்பாட்டு உயிர் மீட்பு வெள்ளவீடு ஒன்றை கண்டுபிடித்ததற்காக கிடைத்துள்ளது.

செங்கல்பட்டு மாவட்டத்தை சேர்ந்த 14 வயது அஸ்வதா பிஜு இளம்பழங்கால ஆராய்ச்சியாளராகி, முதுகெலும்பிகள் அல்லது முள்ளந் தண்டுளிகள் சிற்றினங்கள் புதைபடிவ (தொல்லுயிர் எச்சம்) மாதிரிகளை சேகரித்து பாதுகாப்பதோடு கருத்தரங்குகள், காட்சிகளை நடத்தி விழிப்புணர்வு ஏற்படுத்தியதற்காக பிரதமரின் விருதை பெற்றார்.

புதுமை, சமூக சேவை, கல்வித்திறன், விளையாட்டு, கலை மற்றும் கலாச்சாரம் (6), வீரம் (3) ஆகிய பிரிவுகளில் 29 விருதுகள் பெற்ற நபர்களில் 14 சிறுமிகள் உள்ளனர். இவர்களுக்கு சான்றிதழுடன் ₹1 லட்சம் ரொக்கமும் இந்த சிறார்களுக்கு பரிசாக வழங்கப்பட்டது.

---

**2. உணவு தரச் சான்றுகள் பெற்ற 314 கோயில்கள்:**

தமிழ்நாட்டிலுள்ள கோயில்களில் வழங்கப்படும் உணவு, பிரசாதங்கள் சிறந்த தரமுடையதாக இருப்பதாக 314 கோயில்களுக்கு இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரக் கட்டுப்பாட்டு நிறுவனத்தின் தரச்சான்றுகள் வழங்கப்பட்டு உள்ளன.

மயிலாப்பூர் கபாலீசுவரர் கோயில், திருவேற்காடு தேவி கருமாரியம்மன் கோவில், திருத்தணி சுப்பிரமணிய சுவாமி கோயில், திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வ–ரர் கோயில், சென்னை தங்கசாலை ஏகாம்பரேஸ்வரர் கோயில், திருமுல்லைவாயல் மாசிலாமணீசுவரர் கோயில், திருப்போரூர் கந்தசாமி கோயில், மாமல்லபுரம் சயன பெருமாள் கோயில், சென்னை அங்காள பரமேஸ்வரி கோயில், கங்காதீஸ்வரர் கோயில் ஆகியவை தரச்சான்று பெற்ற கோயில்களில் குறிப்பிடத்தக்கவை.

**சான்று எதற்கு?:** தமிழ்நாட்டில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் 754 கோயில் உள்ளன. இவற்றில் பழனி, திருவரங்கம், திருச்செந்தூர், சமயபுரம், திருத்தணி ஆகிய கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கப்படுகிறது. ஆண்டுக்கு ₹76 கோடி செலவில் 754 கோயில்களிலும் நாளொன்றுக்கு 70,000 பக்தர்களுக்கு உணவு தரப்படுகிறது.

இந்திய அரசின் உணவுப் பாதுகாப்பு மற்றும் தரக்கட்டுப்பா–ட்டு நிறுவனமானது, நாடு முழுவதும் உணவு தயாரித்து வழங்கும் நிறுவனங்களின் உணவு வகைகளை பரிசோதித்து தரச்சான்று வழங்கும் பணியைச் செய்கிறது. மேலும், மத வழிபாட்டுத் தலங்களில் தயாரிக்கப்படும் உணவுக்கும் சான்று அளிக்கிறது. அதன்படி, தமிழ்நாட்டில் 314 கோயில்களுக்கு உணவுக்கான தரச்சான்றிதழ் பெறப்பட்டுள்ளது.

---

**3. இந்தியா வருகிறார் இஸ்ரேல் பிரதமர்**

இந்தியா – இஸ்ரேல் இடையேயான ராஜீய ரீதியிலான உறவு 30 ஆண்டுகளை எட்டியுள்ள நிலையில், அந்நாட்டு பிரதமர் நா∴ப்டாலி பென்னட் இந்தியா வர உள்ளதாக இந்தியாவுக்கான இஸ்ரேல் தூதர் நவோர் கிலோன் தெரிவித்தார்.

இந்தியா–இஸ்ரேல் இடையே தூதரக உறவு தொடங்கி 30 ஆண்டுகள் நிறைவடைந்ததை குறிப்பிடும் வகையில் இணையவழியில் நடைபெற்ற சிறப்பு இலச்சினை வெளியீட்டு விழா திங்கள்கிழமை நடைபெற்றது.

இந்தியாவுக்கான இஸ்ரேல் தூதர் நவோர் கிலோனும் இஸ்ரேலுக்கான இந்திய தூதர் சஞ்சீவ் சிங்லாவும் இணைந்து இந்த இலச்சினையை வெளியிட்டனர்.

வாராணசி, ஆமதாபாத் NIT'இன் இறுதி ஆண்டு மாணவர் நிகில் உருவாக்கிய இரு நாடுகளுக்கு இடையேயான 30 ஆண்டுகள் நல்லுறவை குறிப்பிடும் இலச்சினை இறுதியாகத் தேர்வு செய்யப்பட்டது.

---

**4. கரீ∴ப் பருவத்தில் தமிழ்நாட்டில் 7 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல்: 1,20,231 விவசாயிகள் பயன்**

கரீ∴ப் பருவத்தில் (23.01.2022 வரை) நாடு முழுவதும் 606.19 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. இதில் தமிழ்நாட்டில் மட்டும் 7,43,077 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. இதனால் 1,20,231 தமிழக விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

2021–22ஆம் ஆண்டு கரீ∴ப் சந்தைப் பருவத்தில் குறைந்தபட்ச ஆதரவு விலையில் நெல் கொள்முதல் சுமுகமாக நடைபெற்று வருகிறது.

குஜராத், அஸ்ஸாம், ஹரியாணா, ஹிமாசல பிரதேசம், ஜம்மு–காஷ்மீர், ஜார்க்கண்ட், பஞ்சாப், உத்தர பிரதேசம், உத்தரகண்ட், தெலங்கானா, இராஜஸ்தான், கேரளம், தமிழ்நாடு, மேற்கு வங்கம், திரிபுரா, பிகார், ஒடிஸா, மகாராஷ்ட்ரம், சத்தீஸ்கர், ஆந்திரம், மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் இருந்து நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

குறைந்தபட்ச ஆதரவு விலையில் ₹1,18,812.56 கோடி மதிப்பிலான நெல் கொள்முதல்மூலம், இதுவரை, 77.00 லட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர் என்று மத்திய அரசு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**5. ஐசிசி சிறந்த வீரர் ஷாஹின் ஷா அப்ரிடி, வீராங்கனை ஸ்மிருதி மந்தனா**

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐசிசி) ஆண்டின் சிறந்த கிரிக்கெட் வீரராக 'சர் கேரிபீல்ட் சோபர்ஸ்' விருதுக்கு ஷாஹின் ஷா அப்ரிடி (பாகிஸ்தான்), 'ரேச்சல் ஹெஹோ பிளிண்ட்' விருதுக்கு ஸ்மிருதி மந்தனா (இந்தியா) ஆகியோர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

**சிறந்த வீரர்: ஷாஹின் ஷா அப்ரிடி (பாகிஸ்தான்):**

'சர் கேரிபீல்ட் சோபர்ஸ்' விருது ஏற்படுத்தப்பட்டபின் முதன்முறையாக இந்த விருதைப் பெறும் பாகிஸ்தான் வீரர் என்ற சிறப்பை ஷாஹின் அப்ரிடி பெற்றுள்ளார்.

**சிறந்த வீராங்கனை: ஸ்மிருதி மந்தனா (இந்தியா):**

சிறந்த வீராங்கனைக்கான 'ரேச்சல் ஹெஹோ பிளிண்ட்' விருதுக்கு இரண்டாவது முறையாக தேர்வு செய்யப்பட்டு உள்ளார்.

**சிறந்த டெஸ்ட் வீரர்: ஜோ ரூட் (இங்கிலாந்து)**

**சிறந்த ஒருநாள் வீரர்: பாபர் ஆஸம் (பாகிஸ்தான்)**

**சிறந்த ஒருநாள் வீராங்கனை: லிஸே லில்லி (தென்னாப்பிரிக்கா)**

இந்த விருதைப் பெறும் முதல் தென்னாப்பிரிக்க வீராங்கனை லிஸே ஆவார்.

வளரும் வீரர் விருது தென்னாப்பிரிக்காவின் யான்மேன் மலானுக்கும், வீராங்கனை விருது பாகிஸ்தானின் பாத்திமா சனாவுக்கும் கிடைத்துள்ளது.

சிறந்த நடுவர் விருது மரைஸ் எராஸ்மஸுக்கு கிடைத்துள்ளது.

---

**6. விபின் ராவத், 127 பேருக்கு பத்ம விருதுகள்: முழு விவரம்**

2022ஆம் ஆண்டுக்கான 'பத்ம' விருதுகளை மத்திய உள்துறை அமைச்சகம் அறிவித்தது. மறைந்த முப்படைத் தலைமைத் தளபதி விபின் ராவத்துக்கு 'பத்ம விபூஷண்' விருது உள்பட 128 பேருக்கு 'பத்ம' விருதுகள் வழங்கப்பட்–டுள்ளன.

மறைந்த முன்னாள் உத்தர பிரதேச முதல்வர் கல்யாண் சிங்குக்கு 'பத்ம விபூஷண்' விருது, காங்கிரஸ் மூத்த தலைவர் குலாப் நபி ஆசாத், முன்னாள் மேற்கு வங்க முன்னாள் முதல்வர் புத்ததேவ் பட்டாச்சார்ஜி, கூகுள் தலைமைச்செயல் அதிகாரி சுந்தர்பிச்சை, மைக்ரோசாப்ட் தலைமைச்செயல் அதிகாரி சத்யா நாதெள்ளா உள்ளிட்–டோருக்கு 'பத்ம பூஷண்' விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தைச் சேர்ந்த சிற்பி பாலசுப்பிரமணியம், சௌகார் ஜானகி உள்ளிட்டோருக்கு 'பத்மஸ்ரீ' விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

கலை, இலக்கியம், கல்வி, சமூக சேவை, அரசியல், தொழில், விளையாட்டு போன்ற துறைகளில் சாதனை படைப்பவர்களுக்கு மத்திய அரசு ஆண்டுதோறும் குடியரசு தினத்தன்று 'பத்ம' விருதுகளை அறிவித்து வருகிறது.

நடப்பாண்டில் 128 பத்ம விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. 4 'பத்ம விபூஷண்' விருதுகளும் 17 'பத்ம பூஷண்' விருதுகளும், 107 'பத்மஸ்ரீ' விருதுகளும் அறிவிக்கப்பட்டு உள்ளன. 2 விருதுகளை இருவர் பகிர்ந்துகொள்கிறார்கள்.

விருது பெறுவோரில் 34 பேர் பெண்கள். 13 பேருக்கு மறைவுக்குப் பிறகு வழங்கப்படுகிறது. 10 பேர் வெளிநாட்டுப் பிரிவில் விருது பெறுகிறார்கள். 'பத்ம' விருதுகள் வழங்கும் விழா, வரும் மார்ச், ஏப்ரல் மாதங்களில் நடைபெறும் என்று தெரிகிறது.

**பத்ம விபூஷண் விருது பெறுவோர் (4)**

1. பிரபா ஆத்ரே– கலை– மகாராஷ்டிரம்
2. ராதேஷ்யாம் கெம்கா– இலக்கியம், கல்வி– உத்தர பிரதேசம்
3. விபின் ராவத்– ஆட்சிப் பணி– உத்தரகண்ட்
4. கல்யாண் சிங்– அரசியல்– உத்தர பிரதேசம்

**பத்ம பூஷண் விருது பெறுவோர் (17)**

1. குலாம் நபி ஆசாத்– அரசியல்– ஜம்மு–காஷ்மீர்
2. விக்டர் பானர்ஜி– கலை– மேற்கு வங்கம்
3. புத்ததேவ் பட்டாச்சார்ஜி– அரசியல்– மேற்கு வங்கம்
4. N சந்திரசேகரன், TATA குழுமத்தலைவர் – மகாராடிரா
5. கிருஷ்ணா எல்லா, சுசித்ரா எல்லா, பாரத் பயோடெக் நிறுவனம்– தொழில்– தெலங்கானா
6. ராஜீவ் மெஹரிஷி, முன்னாள் சிஏஜி– ஆட்சிப் பணி– ராஜஸ்தான்
7. சத்யா நாதெள்ளா, மைக்ரோசாப்ட் சிஇஓ– தொழில்– அமெரிக்கா
8. சுந்தர் பிச்சை, கூகுள் சிஇஓ– தொழில்– அமெரிக்கா
9. சைரஸ் பூனாவாலா, சீரம் நிறுவனம்– தொழில்– மகாராஷ்டிரம் உள்ளிட்ட 17 பேர்

**பத்மஸ்ரீ விருது பெறுவோர் (107)**

1. சிற்பி பாலசுப்பிரமணியம்– இலக்கியம், கல்வி– தமிழ்நாடு
2. S பல்லேஷ் பஜந்திரி– கலை– தமிழ்நாடு
3. S தாமோதரன்– சமூக சேவை– தமிழ்நாடு
4. சௌகார் ஜானகி– கலை– தமிழ்நாடு
5. R முத்துக்கண்ணம்மாள்–கலை–தமிழ்நாடு
6. A K C நடராஜன்– கலை– தமிழ்நாடு
7. V சேஷையா– மருத்துவம்– தமிழ்நாடு
8. நீரஜ் சோப்ரா– விளையாட்டு– ஹரியாணா
9. சங்கரநாராயண மேனன் சுண்டயில்– விளையாட்டு– கேரளம்
10. சோனு நிகம்– கலை– மகாராஷ்டிரம் உள்ளிட்ட 107 பேர்.

**தமிழக பத்ம விருதாளர்கள்...**

**N சந்திரசேகரன் (பத்ம பூஷண்)**

TATA சன்ஸ் குழுமத்தின் தலைவரான N சந்திரசேகரன் நாமக்கல் மாவட்டம், மோகனூரில் பிறந்தவர்.

1987'இல் டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் (TCS) நிறுவனத்தி–ல் சேர்ந்த அவர், 2009'இல் அதன் தலைமைச் செயல் இயக்குநராக உயர்ந்தார். தற்போது டாடா சன்ஸ் குழுமத்தின் தலைவராக உள்ளார். தற்போது மும்பையில் வசிக்கிறார்.

**சிற்பி பாலசுப்பிரமணியம் (பத்மஸ்ரீ)**

கோவை மாவட்டம், ஆத்துப்பொள்ளாச்சியை சேர்ந்த சிற்பி பாலசுப்பிரமணியம் கவிஞர், மொழிபெயர்ப்பாளர், பேராசிரியர், இதழாசிரியர், கல்வியாளர் என பன்முகம் கொண்டவர். மொழிபெயர்ப்புக்காகவும் (2001–அக்கினிசாட்சி), படைப்பிலக்கியத்துக்காகவும் (2003– ஒரு கிராமத்து நதி) இரண்டு முறை சாகித்திய அகாதெமி விருது பெற்றுள்ளார். மேலும் தமிழ்நாடு அரசின் பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ளார்.

**சௌகார் ஜானகி (பத்மஸ்ரீ)**

N T ராமாராவ் நடித்த "சௌகார்" என்ற தெலுங்கு படத்தில் 19ஆவது வயதில் கதாநாயகியாக அறிமுகமானார். இவரது நடிப்பு ரசிகர்களிடம் வரவேற்பை பெற்றதை அடுத்து, "சௌகார் ஜானகி" ஆனார்.

**டாக்டர் வி சேஷய்யா (பத்மஸ்ரீ)**

கடந்த 1957ஆம் ஆண்டில் சென்னை மருத்துவக் கல்லூரியில் MBBS பயின்ற டாக்டர் வி சேஷய்யா, அதன் பின்னர் இந்திய இராணுவத்தில் மருத்துவ சேவை ஆற்றினார்.

சென்னை மருத்துவக்கல்லூரியில் உதவிப்பேராசிரியராக இருந்த டாக்டர் வி சேஷய்யா, சர்க்கரை நோய் துறையை 1978'இல் தொடங்கினார்.

டாக்டர் வி சேஷய்யாவின் பிறந்தநாளான மார்ச் 10ஆம் தேதி தேசிய பேறுகால சர்க்கரை நோய் விழிப்புணர்வு தினமாக கடைப்பிடிக்கப்படுகிறது.

**A K C நடராஜன் (பத்மஸ்ரீ)**

திருச்சியைச் சேர்ந்த கிளாரினெட் இசைக்கலைஞர் AKC நடராஜனுக்கு 'பத்மஸ்ரீ' விருது அறிவிக்கப்பட்டுள்ளது. காற்று இசைக் கருவிகளைப் பயன்படுத்தும் பாரம்பரிய குடும்பத்தை சேர்ந்தவர்.

**R முத்துக்கண்ணம்மாள் (பத்மஸ்ரீ)**

திருச்சி அருகே உள்ள விராலிமலையில் அமைந்துள்ள சதிர் நடனக்குடும்பத்தைச்சேர்ந்த R முத்துக்கண்ணம்மா (82), தனது எட்டு வயது முதல் நடனக் கலையை பயின்று –ள்ளார். சதிர் நடனக்கலையைப் பயிற்றுவித்து வருகிறார்.

**S பல்லேஷ் பஜந்திரி (பத்மஸ்ரீ)**

கலைப் பிரிவில் 'பத்மஸ்ரீ' விருது அறிவிக்கப்பட்டுள்ள பல்லேஷ் பஜந்திரி, ஷெனாய் இசைக் கலைஞராவார். ராஞ்சனா உள்ளிட்ட பல்வேறு ஹிந்தி திரைப்படங்களில் அவர் ஷெனாய் இசைத்துள்ளார்.

---

**7. சிறப்பாக பணிபுரிந்ததற்காக தமிழகத்தைச் சேர்ந்த 20 காவல் அதிகாரிகளுக்கு குடியரசுத்தலைவர் விருது: செயல்பாடு, சாதனைகள் மற்றும் நன்மதிப்பு அடிப்படையில் வழங்கப்படுகிறது**

சிறப்பாக பணிபுரிந்த தமிழ்நாட்டு காவல்துறையினர் 20 பேருக்கு குடியரசுத்தலைவர் விருது வழங்கப்படுகிறது.

காவல்துறையில் சிறப்பாக பணிபுரிந்தவர்களுக்கு ஆண்டுதோறும் குடியரசு நாளை முன்னிட்டு, குடியரசுத் தலைவர் விருதுகள் வழங்கப்படுகின்றன. அந்த வகையில், இந்த ஆண்டு குடியரசுத் தலைவர் விருது பெற தமிழக காவல்துறை அதிகாரிகள் 20 பேர் தேர்வாகி உள்ளனர்.

தகைசால் பணிக்கான குடியரசுத் தலைவர் காவல் விருதுகள் சென்னை தலைமையிட ADGP வெங்கடராமன், தஞ்சாவூர் குற்றப்புலனாய்வுத்துறை ஆய்வாளர் சிவனருள் ஆகியோருக்கு வழங்கப்படுகின்றன.

பாராட்டத்தக்க பணிக்கான குடியரசுத்தலைவர் விருதுகள் தமிழக காவல்துறையில் 18 பேருக்கு வழங்கப்படுகின்றன.

---

**8. இரயில்வே பாதுகாப்புப்படை உதவி ஆய்வாளருக்கு உயரிய விருது**

குடியரசு தினத்தையொட்டி, இந்திய காவல்துறையின் உயரிய பதக்கம் தெற்கு ரயில்வேயின் பாலக்காடு கோட்டத்தின் இரயில்வே பாதுகாப்புப் படை (RPF) உதவி ஆய்வாளர் K M சுனில்குமாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

K M சுனில்குமார், இரயில்வே பாதுகாப்புப் படையில் கடந்த 1996ஆம் ஆண்டு சேர்ந்தார். இவர், பல்வேறு வழக்குகளை திறம்பட விசாரித்து, குற்றவாளிகளை கைது செய்துள்ளார். 2018ஆம் ஆண்டில், ஹவாலா வழக்கில் ₹3 கோடியே 44 லட்சத்து 54,500 ரொக்கத்தை பறிமுதல் செய்ததற்காக, இவரை கேரளகாவல்துறை பாராட்டியது குறிப்பிடத்தக்கது. சுனில் குமாரின் சிறப்பான பணியைப் பாராட்டி, இந்திய காவல்துறையின் உயரிய பதக்கம் அறிவிக்கப்பட்டுள்ளது.

---

**8. வீரதீரச் செயல்களுக்கான குடியரசுத்தலைவர் பதக்கம்: 939 பேருக்கு அறிவிப்பு**

குடியரசு நாளையொட்டி, வீரதீரச்செயல்களைப் புரிந்ததற்காக, காவல்துறையைச் சேர்ந்த 939 பேர் குடியரசுத்தலைவரின் பதக்கத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளனர். அவர்களின் விவரங்களை மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்டது.

நாடு முழுவதும் 939 பேர் காவல்துறையின் சிறந்த சேவைக்கான விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அவர்களில், வீரதீரச்செயலுக்கான காவலர் பதக்கத்துக்கு 189 பேரும், தலைசிறந்த சேவைக்கான குடியரசுத் தலைவர் காவலர் பதக்கத்துக்கு 88 பேரும், தகுதிமிக்க சேவைக்கான காவலர் பதக்கத்துக்கு 662 பேரும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

வீரதீரச் செயலுக்கான பதக்கம் பெறும் 189 பேரில், 134 பேர் ஜம்மு–காஷ்மீரில் வீரச்செயல் புரிந்தமைக்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இடதுசாரி தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வீரச்செயல் புரிந்தமைக்காக 47 பேருக்கும், வடகிழக்கு பிராந்தியத்தில் வீரச்செயல் புரிந்தமைக்காக ஒருவருக்கும் இந்தப் பதக்கம் வழங்கப்பட உள்ளது.

பதக்கம் பெறுவோரில் 115 பேர் ஜம்மு காஷ்மீர் காவல் துறையைச் சேர்ந்தவர்கள் ஆவர். 30 பேர் மத்திய ரிசர்வ் காவல்படையையும் (CRPF), 3 பேர் இந்திய–திபெத்திய எல்லைக்காவல்படையையும், 2 பேர் எல்லைப்பாதுகாப்புப் படையையும், 3 பேர் சசஸ்திர சீமா பல் படையையும், 10 பேர் சத்தீஸ்கர் காவல்துறையையும், 9 பேர் ஒடிஸா காவல்துறையையும், 7 பேர் மகாராஷ்டிர காவல் துறையையும், எஞ்சியவர்கள் பிறமாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களையும் சேர்ந்தவர்கள் ஆவர்.

**சிறைத் துறையினருக்கு சேவைப் பதக்கம்:**

சிறைத்துறையினருக்கான சீர்திருத்த சேவைப் பதக்கங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன. தலைசிறந்த சேவைக்கான குடியரசுத்தலைவரின் சீர்திருத்த சேவைப் பதக்கம் 5 பேருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த சிறைத்துறையினர் 37 பேர், தகுதிமிக்க சேவையாற்றியதற்கான சீர்திருத்த சேவைப்பதக்கம்பெற தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 3 பேர் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள்.

**அவர்களின் விவரம்:**

டி பரணிதரன் – உதவி ஜெய்லர், வி பிரியா – உதவி ஜெய்லர், கே பாஸ்கர் – கிரேடு 1 வார்டர்.

**6 வீரர்களுக்கு சௌர்ய சக்ரா விருது**

இந்திய ராணுவம், அஸ்ஸம் ரைஃபிள்ஸ் படையைச் சேர்ந்த 6 வீரர்களுக்கு வீரதீரச் செயல்களுக்கான சௌர்ய சக்ரா விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக இந்திய ராணுவம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: குடியரசு தினத்தையொட்டி இந்திய

ராணுவத்தைச் சேர்ந்த 5 வீரர்கள், அஸ்ஸாம் ரைஃபிள்ஸ் படையைச் சேர்ந்த ஒரு வீரர் என மொத்தம் 6 பேருக்கு சௌர்ய சக்ரா விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த விருது அறிவிக்கப்பட்டுள்ள 5 ராணுவ வீரர்களான நாயப் சுபேதார் ஸ்ரீஜித், ஹவில்தார்கள் அனில் குமார் தோமர், காஷிராய் பம்மன்னள்ளி, பிங்கு குமார், சிப்பாய் மாருப்ரோலு ஜஸ்வந்த் குமார் ரெட்டி ஆகியோர் பயங்கரவாதிகளுடனான மோதலின்போது வீரமரணம் அடைந்தனர். இதுதவிர 4 வீரர்களுக்கு உத்தம் யுத்த சேவை விருது, 10 வீரர்களுக்கு யுத்த சேவை விருது, 84 பேருக்கு சேனை விருது (தீரச்செயல்), 40 பேருக்கு சேனை விருது (சிறப்பான சேவை) அறிவிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**9. சிறந்த தேர்தல் நடைமுறை: 8 தமிழகம், புதுச்சேரி அதிகாரிகளுக்கு தேசிய விருதுகள்**

2021ஆம் ஆண்டு தமிழகம், புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தலை முறையாக நடத்தி வாக்காளர்களை வாக்களிக்க ஊக்குவிக்கும் விதமாக செயல்பட்டது, தேர்தல் முறைகேடுகளைத் தடுத்தது உள்ளிட்ட பணிகளில் சிறப்பாக செயல்பட்ட 8 தமிழக, புதுச்சேரி தேர்தல் அதிகாரிகளுக்கு 12ஆவது தேசிய வாக்காளர் தினத்தையொட்டி இந்திய தேர்தல் ஆணையத்தின் சிறந்த தேர்தல் நடைமுறைக்கான தேசிய விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

நாடு முழுவதும் ஐந்து விதமான பிரிவுகளில் 23 பேருக்கு இந்திய தேர்தல் ஆணையத்தின் தேசிய விருதுகள் செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டன. இந்திய தலைமை தேர்தல் ஆணையர்கள் முன்னிலையில் இந்த விருதுகளை மத்திய சட்டம், நீதித்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு தில்லியில் செவ்வாய்க்கிழமை வழங்கினார். இதில் கடந்தாண்டு 2021 –இல் தமிழகம், மேற்கு வங்கம், கேரளம் உள்ளிட்ட 5 மாநில சட்டப்பேரவை தேர்தல்களில் சிறப்பாக பணியாற்றிய பல்வேறு தரப்பினருக்கு நடப்பு ஆண்டின் சிறந்த தேர்தல் நடைமுறைக்கான தேசிய விருதுகள் கிடைத்துள்ளன.

**சிறந்த மாநில விருதுகள்:** சிறப்பாக செயல்படும் மாநில விருதுகள் பிரிவில் தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி சத்ய பிரத சாகுவிற்கு வழங்கப்பட்டது.

தமிழகத்தில் 2021ஆம் ஆண்டு சட்டப்பேரவை தேர்தலில் சுதந்திரமாகவும் நியாயமான முறையில் தேர்தலை சுமூகமாக நடத்த தகவல் தொழில்நுட்ப முயற்சிகள், பாதுகாப்பு மேலாண்மை மற்றும் பிற தொடர்புடைய அம்சங்களுக்காக இவ்விருது சத்ய பிரத சாகுவிற்கு வழங்கப்பட்டது.

இதே 2021ஆம் ஆண்டில் அஸ்ஸாம் மாநிலத்தில் நடைபெற்ற அம்மாநில சட்டப்பேரவை தேர்தல் நிர்வாகத்தை சிறப்பாக மேற்கொண்ட அம்மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி நிதின் காடேவிற்கு சிறந்த மாநிலங்களுக்கான விருது கொடுக்கப்பட்டது.

சிறந்த தேர்தல் நடைமுறைக்கான தேசிய விருதுகளின் பொதுப்பிரிவில் 10 விருதுகள் வழங்கப்பட இதில் மூன்று விருதுகள் தமிழக, புதுச்சேரி மாநில அதிகாரிகள் பெற்றனர். இதில் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரும் மாவட்ட தேர்தல் அதிகாரியுமான வி.விஷ்ணு, தகவல் தொழில் நுட்பத்தின் மூலம் "வாக்குச் சாவடி வழிகாட்டி" என்கிற செயலி மூலம் சமூக ஊடகங்களின் போலிச் செய்திகள், வேட்பாளர்களின் செலவுகள் உள்ளிட்டவையும் வெற்றிகரமாக கண்காணிக்கப்பட அவர் இந்த விருதை பெற்றார்.

**தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர்:** இதேமாதிரி வாக்காளர்கள் மத்தியில் பல்வேறு புதுமையான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தியமைக்காக தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் Dr கே செந்தில் ராஜ்க்கும் சிறந்த தேர்தல் நடைமுறைக்கான தேசிய விருது கிடைத்தது. அவர் மத்திய சட்ட அமைச்சரிடமிருந்து இவ்விருதை பெற்றார்.

தூத்துக்குடி மாவட்டத்தில் வருவாய், உள்ளாட்சி, காவல் துறை உள்ளிட்ட முழு நிர்வாகத்தையும் வாக்காளர் விழிப்புணர்வு பணியில் ஈடுத்தப்பட்டது.

சுமார் 1 லட்சம் பள்ளி மாணவர்கள், பெற்றோருக்கு தபால் வழியாக கடிதம் எழுதி கட்டாயமாக வாக்களிக்க வேண்டும், அதுவும் வோட்டுக்கு பணம் பெறாமல் வாக்களிக்க வேண்டும் போன்றவைகளை கடிதத்தின் வாயிலாக மாணவர்கள் தெரிவித்தனர்.

பிரபலமான முத்து குளியல், கல்லூரி மாணவர்கள் ஆகியவை மூலமாக வாக்களிப்பது குறித்த விடியோ உருவாக்கப்பட்டு பிரசாரம் செய்யப்பட்டது. இதற்காக இந்த மாவட்ட தலைமை தேர்தல் அதிகாரி என்கிற முறையில் டாக்டர் செந்தில் ராஜ் விருதை பெற்றார்.

மேலும் புதுச்சேரி தேர்தலில் காரைக்கால் பகுதியில் சிறப்பாக பாதுகாப்பு பணியில் ஈடுபட்ட காவல் கண்காணிப்பாளர் நிகரிகா பட், தமிழகம் புதுச்சேரி மாநிலங்களைச் சேர்ந்த வருமான வரி புலனாய்வுத் துறை இயக்குநர் ஜெனரல் பிரவீண் குமார், கூடுதல் இயக்குநர் பி எஸ் சிவசங்கரன் ஆகியோர் தமிழக சட்டப் பேரவைத் தேர்தலில் வேட்பாளர்களது செலவினங்களை கண்காணித்து 83 இடங்களில் சோதனைகளை மேற்கொண்டு ₹103 கோடி மதிப்புள்ள ரொக்கப்பணம் உள்ளிட்டவைகளை கைப்பற்றியதற்காக விருதுகளை பெற்றனர்.

இதே மாதிரி அம்பாச முத்திரம் சட்டப்பேரவை தொகுதி தேர்தல் அதிகாரியும் சேரன்மாதேவி துணை ஆட்சியருமான பிரதிக் தயாள், அதிக வாக்குபதிவு செய்த புதுச் சேரி மாநில துணை தலைமை தேர்தல் அதிகாரி பி தில்லைவேல் ஆகியோர் சிறந்த தேர்தல் நடைமுறைக்கா –ன தேசிய விருதைப் பெற்றனர்.

---

**10. ஹிமாசல பிரதேசம் தினம்**

யூனியன் பிரதேசமாக இருந்த ஹிமாசல பிரதேசம் கடந்த 1971ஆம் ஆண்டு ஜன.25ஆம் தேதி நாட்டின் 18ஆவது மாநிலமாக உருவெடுத்தது. அந்தத் தினமே ஹிமாசல பிரதேச தினமாக கொண்டாடப்படுகிறது.

---

**11. சுனாமி தாக்கிய டோங்கா தீவுக்கு இந்தியா ₹1.50 கோடி நிதியுதவி**

சுனாமி தாக்கிய டோங்கா தீவுக்கு உடனடி நிவாரணமாக இந்தியா சார்பில் $2 லட்சம் டாலர்கள் (சுமார் ₹1.50 கோடி) நிதியுதவி வழங்கப்படுகிறது.

கடந்த ஜன.15ஆம் தேதி தென் பசிபிக் தீவுகளில் ஒன்றான டோங்கா அருகே கடலுக்கு அடியில் எரிமலை வெடித்தது. அதனைத்தொடர்ந்து டோங்காவில் ஆழிப்பேரலைத் தாக்கியது. இந்தப் பேரிடரில் 3 பேர் பலியாகினர். அந்தத் தீவின் மொத்த மக்கள்தொகையில் 5இல் 4 பங்கு பேர் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், இந்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், "இந்திய–பசிபிக் தீவுகள் ஒத்துழைப்பு கூட்டமைப்பின்கீழ் 'நெருங்கிய நட்பு நாடு' என்ற அடிப்படையிலும், இந்தியா உறுதுணையாக இருப்பதை வெளிப்படுத்தும் நோக்கிலும் இந்த உதவி டோங்காவுக்கு வழங்கப்படுகிறது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**12. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி மதிப்பீட்டை 9%ஆக குறைத்தது IMF**

சர்வதேச செலாவணி நிதியம் (IMF), நடப்பு நிதியாண்டுக்கான பொருளாதார வளர்ச்சி மதிப்பீட்டை 9 சதவீதமாக குறைத்துள்ளது.

இதுகுறித்து அந்நிதியத்தின் உலகப் பொருளாதார ஆய்வு அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

புதிய வகை கரோனா தீநுண்மி வேகமாக பரவி வருவது வர்த்தக நடவடிக்கைகளில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அதனைக்கருத்தில்கொள்ளும்போது நடப்பு நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 9% அளவுக்கே இருக்கும் என தற்போது மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

கடந்தாண்டு அக்டோபரில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டில் இந்திய பொருளாதாரத்தின் வளர்ச்சி நடப்பு நிதியாண்டில் 9.5 சதவீதமாகவும், ஏப்ரல் 2022 முதல் மார்ச் 2023 வரையிலான 2023ஆம் நிதியாண்டில் 7.1 சதவீதமாகவும் இருக்கும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. சாதகமற்ற நிலவரங்களையடுத்து தற்போது இம்மதிப்பீடு குறைக்கப்பட்டுள்ளது.

கடந்த 2020–21ஆம் நிதியாண்டில் இந்தியப் பொருளாதாரம் 7.3% பின்னடைவைக்கண்டது என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய புள்ளியியல் அலுவலகம் நடப்பு நிதியாண்டில் பொருளாதார வளர்ச்சி 9.2 சதவீதமாக இருக்கும் எனத் தெரிவித்துள்ளது. ரிசர்வ் வங்கி மதிப்பீட்டில் இது 9.5 சதவீதமாக இருக்கும் அறிவிக்கப்பட்டது. இந்நிலையில், IMF மதிப்பீடு அதைவிட குறைவாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

---

**13. வாக்களிப்பதை கட்டாயமாக்க 86% இந்தியர்கள் விருப்பம்: ஆய்வில் தகவல்**

12ஆம் தேசிய வாக்காளர் நாளையொட்டி வெளியிடப்பட்ட ஆய்வு ஒன்றின்படி வாக்களிப்பதை கட்டாயமாக்க வேண்டும் என்று 86 சதவீத இந்தியர்கள் விரும்புவது தெரியவந்துள்ளது.

தேர்தல் ஆணையம் கடந்த 1950ஆம் ஆண்டு ஜனவரி 25ஆம் தேதி நிறுவப்பட்டது. கடந்த 2011 முதல் இந்த நாள் தேசிய வாக்காளர் தினமாகக் கொண்டாடப்படுகிறது. புதிய மற்றும் இளம் வாக்காளர்களின் பெயர்களைப் பதிவு செய்ய இது ஊக்கமளிக்கிறது.

இந்நிலையில், நாடு முழுவதும் நான்கு லட்சம் பேரிடம் பப்ளிக் ஆப் என்ற சமூக வலைதளம் ஆய்வு ஒன்றை நடத்தியது. அந்த ஆய்வின்படி நாட்டின் தற்போதைய வாக்குப்பதிவு முறை மீது 80 சதவீதம் பேர் நம்பிக்கையை தெரிவித்தனர்.

"வாக்களிப்பது எனன்ற கடமையானது சமூக வளர்ச்சிக்கு இந்தியக் குடிமக்களின் முக்கியமான பங்களிப்பாகும். வாக்களிப்பதை கட்டாயமாக்க வேண்டுமா என்ற கேளவிக்கு 86 சதவீதம் பேர் ஆம் என்று பதிலளித்தனர்" என்று இந்த ஆய்வு கூறுகிறது.

உத்தர பிரதேசம், உத்தரகண்ட், பஞ்சாப், கோவா, மணிப்பூர் ஆகிய மாநிலங்களுக்கு அடுத்த மாதம் பேரவைத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில் இந்த ஆய்வு வெளியிடப்பட்டுள்ளது.

இந்த ஆய்வில் பங்கேற்றவர்களில் 60 சதவீதம் பேர் 30 வயதுக்கும் கீழ் உள்ளவர்களாவர். எதை அடிப்படையாக வைத்து வாக்களிப்பீர்கள் என்ற கேள்விக்கு களத்தில் உள்ள வேட்பாளர் கடந்த முறை எவ்வாறு செயல்பட்டார் என்பதை அடிப்படையாக வைத்து வாக்களிப்போம் என்று 34 சதவீதம் பேர் பதிலளித்தனர்.

அனைத்து வேட்பாளர்களையும் விரிவாக ஆராய்ந்து அதன் அடிப்படையில் வாக்களிப்போம் என்று 31 சதவீதம் பேர் தெரிவித்தனர்.

ஒட்டுமொத்த செல்வாக்கை வைத்து வாக்களிப்பதாக 4.96 சதவீதம் பேரும் வேட்பாளர்களின் அரசியல் கட்சியை வைத்து வாக்களிப்பதாக 11.92 பேரும் தெரிவித்தனர்.

மக்கள் வாக்களிக்கத் தவறுவது ஏன் என்பது குறித்து இந்த ஆய்வில் கேட்கப்பட்டது. அதற்கு வாக்குப்பதிவின்போது உள்ளூரில் இல்லாமல் மற்றொரு நகரில் இருப்பதுதான் முக்கிய காரணம் என்று 30.04 சதவீதம் பேர் தெரிவித்தனர். எனினும் 56.3 சதவீதம் பேர் தாங்கள் வாக்களிக்கத் தவறியதே இல்லை என்று குறிப்பிட்டனர்.

கடந்த காலங்களில் வாக்களிக்காமல் இருந்ததற்கு தேர்தல் குறித்த தகவல் இல்லாதது (5.22 சதவீதம்), எந்தக் கட்சியையும் ஆதரிக்காதது (7.19), அக்கறை செலுத்தாதது (1.27) போன்ற காரணங்களையும் ஆய்வில் பங்கேற்றோர் தெரிவித்தனர்.

இந்த ஆய்வில் பங்கேற்றவர்களில் 79.5 சதவீதம் பேர் தங்கள் வாழ்நாளில் ஒரு முறையாவது வாக்களித்திருப்பதாக கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

---

**14. ஜஜாரியாவுக்கு பத்ம பூஷண்; நீரஜுக்கு பத்ம ஸ்ரீ**

பாரா ஈட்டி எறிதல் வீரர் தேவேந்திர ஜஜாரியாவுக்கு 'பத்ம பூஷண்' விருதும், ஈட்டி எறிதல் வீரர் நீரஜ் சோப்ராவுக்கு 'பத்மஸ்ரீ' விருதும் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர். இதில் 'பத்ம ஸ்ரீ' விருதுக்கு நீரஜ் சோப்ரா உள்பட 8 பேர் தேர்வாகியுள்ளனர்.

2004 (ஏதென்ஸ்), 2016 (ரியோ) ஆகிய பாராலிம்பிக் போட்டிகளில் தங்கப்பதக்கம் வென்ற ஈட்டி எறிதல் வீரர் தேவேந்திர ஜஜரியா, கடந்த ஆண்டு நடந்த டோக்கியோ பாராலிம்பிக்கில் வெள்ளிப்பதக்கம் பெற்றிருந்தார். மறுபுறம், நீரஜ் சோப்ராவோ டோக்கியோ ஒலிம்பிக்கில் முதலிடம் பிடித்து, போட்டியின் வரலாற்றில் தடகள பிரிவில் தங்கம் வென்ற முதல் இந்தியர் என்ற சாதனையை படைத்தார்.

நீரஜ் சோப்ராவோடு, பாரா துப்பாக்கி சுடுதல் வீராங்கனை அவனி லெகாரா, பாரா பாட்மின்டன் வீரர் பிரமோத் பகத், பாரா ஈட்டி எறிதல் வீரர் சுமித் அன்டில், தற்காப்புக் கலையான 'கலரிப்பயட்டு' ஜாம்பவான் சங்கரநாராயண மேனன் சுண்டயில், முன்னாள் சர்வதேச தற்காப்புக்கலை சாம்பியன் பைசல் அலி தார், இந்திய கால்பந்து அணி முன்னாள் கேப்டன் பிரம்மானந்த் சங்க்வல்கர், ஹாக்கி வீராங்கனை வந்தனா கட்டாரியா ஆகியோரும் 'பத்ம ஸ்ரீ' விருது பெறுகின்றனர்.

**15. T20 தரவரிசை: மீண்டும் முதலிடத்தில் ஷபாலி வர்மா**

மகளிர் T20 கிரிக்கெட்டில் ICC தரவரிசையில் பேட்டர்கள் பிரிவில் இந்தியாவின் ஷபாலி வர்மா மீண்டும் முதலிடம் பிடித்துள்ளார்.

ICC வெளியிட்ட புதிய தரவரிசையின்படி, ஷபாலி ஓரிடம் முன்னேறி முதலிடத்தைப் பிடிக்க, ஸ்மிருதி மந்தனா ஓர் இடம் சறுக்கி 4ஆவது இடத்துக்கு வந்துள்ளார்.

ஆஸ்திரேலியாவின் பெத் மூனி மற்றும் மெக் லேனிங் ஆகியோர் முறையே 2, 3ஆவது இடங்களில் உள்ளனர்.

பௌலர்கள் பிரிவில் இந்தியாவின் தீப்தி சர்மா ஓரிடம் ஏற்றங்கண்டு 4ஆவது இடத்தை எட்டியிருக்கிறார். முதல் 3 இடங்களில் மாற்றமின்றி இங்கிலாந்தின் சோபி எக்லஸ்டோன், சாரா கிளென், தென்னாப்பிரிக்காவின் ஷப்னிம் இஸ்மாயில் ஆகியோர் தக்கவைத்துக்கொண்டு உள்ளனர்.

ஆல்-ரவுண்டர்கள் பிரிவிலும் தீப்தி சர்மா ஓரிடம் முன்னேறி 3ஆவது இடத்தைப் பிடித்துள்ளார். நியூஸிலாந்தின் சோபி டிவைன், இங்கிலாந்தின் நேட் ஸ்கிவர் ஆகியோர் முதலிரு இடங்களில் தொடர்கின்றனர்.

**16. 15 இலட்சம் கிலோமீட்டர் தொலைவு சென்று இலக்கை அடைந்தது ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கி**

அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான NASA அனுப்பியுள்ள உலகின் மிகப்பெரிய 'ஜேம்ஸ் வெப்' விண்வெளி தொலைநோக்கி செயற்கைக்கோள் அதன் இலக்கை அடைந்தது.

பிரபஞ்சம் தோன்றியபோது உருவான நட்சத்திரங்கள் குறித்து ஆய்வுசெய்வதற்காக 'ஜேம்ஸ் வெப்' தொலைநோக்கியை NASA உருவாக்கியது. 10 பில்லியன் டாலர் (சுமார் ₹74,000 கோடி) மதிப்பீட்டில் உருவாக்கப்பட்ட இத்தொலைநோக்கி கடந்த டிசம்பர்.25ஆம் தேதி ஏவுகலம் மூலம் விண்ணில் செலுத்தப்பட்டது.

இந்நிலையில், பூமியிலிருந்து 15 இலட்சம் கிலோமீட்டர் தொலைவைக் கடந்து அதன் இறுதி சுற்றுவட்டப் பாதையை 'ஜேம்ஸ் வெப்' தொலைநோக்கி அடைந்தது. 'L2' என்ற சுற்றுவட்டப் பாதையில் அது சுற்றிவரும்.

ஆரம்பகால பிரபஞ்சத்தின் இரகசியத்தை இந்தத் தொலைநோக்கி வெளிக்கொண்டுவரும் என நம்பும் அறிவியலாளர்களுக்கு இது மாபெரும் வெற்றியாகக் கருதப்படுகிறது. ஜூலையிலிருந்து 'ஜேம்ஸ் வெப்' தொலைநோக்கியின் தரவுகள் கிடைக்கக்கூடும் என NASA தெரிவித்துள்ளது.

**17. சத்தியமங்கல புலிகள் காப்பகத்துக்கு சர்வதேச விருது**

உலகிலேயே 10 ஆண்டுகளில் புலிகள் எண்ணிக்கை இருமடங்குக்கும் மேல் உயர்ந்ததற்காக சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்துக்கு சர்வதேச விருதான 'TS2' என்ற உயரிய விருது வழங்கப்படுகிறது.

நீலகிரி மற்றும் மேற்குத்தொடர்ச்சி மலைப்பகுதியில் 1,455 ஏக்கர் நிலப்பரப்பில் உள்ள சத்தியமங்கலம் வனவுயிரிகள் சரணாலயம் 2013 டிச.1ஆம் தேதி சத்தியமங்கலம் புலிகள் காப்பகமாக அறிவிக்கப்பட்டது. அப்போது, சுமார் 30 புலிகள் இருந்ததாக அப்போதைய கணக்கெடுப்பில் தெரியவந்தது.

2013ஆம் ஆண்டு முப்பது புலிகளாக இருந்த காப்பகத்தில் தற்போது 80 புலிகள் உள்ளது தெரியவந்துள்ளது.

உலக அளவில் புலிகளை பாதுகாப்பதற்கு ரஷியா, சீனா, இந்தோனேசியா, வங்கதேசம் உள்ளிட்ட 13 நாடுகளில் உள்ள கன்சர்வேஷன் & டைகர் ஸ்டான்டர்டு, வைல்டு லைப் கன்சர்வேஷன் ஆப் சொசைட்டி, உலகளாவிய நிதியகம் என 13 அமைப்புகள் கூட்டமைப்பு ஏற்படுத்தியுள்ளன. இந்தக் கூட்டமைப்பு 10 ஆண்டுகளில் புலிகளின் எண்ணிக்கையை இருமடங்காக உயர்த்தும் நோக்கில் 2010ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.

2022ஆம் ஆண்டில் இருமடங்காக உயர்த்திய நாட்டுக்கு 'TS2' எனும் சர்வதேச விருது வழங்கப்படும் என அந்தக் கூட்டமைப்பு அறிவித்தது.

இதன்படி, சர்வதேச அளவில் 10 ஆண்டுகளில் புலிகளின் எண்ணிக்கை இருமடங்குக்கும்மேல் உயர்ந்ததற்காக 'TS2' என்ற விருது முதல் பரிசாக சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்துக்கு வழங்கப்பட்டது. 2ஆவது பரிசு நேபாளத்தில் உள்ள பர்தியா தேசியப்பூங்காவுக்கு வழங்கப்பட்டது.

**18. சேலம் வனப்பகுதிகளில் புதிய வகை பச்சைப் புறா, பட்டாம்பூச்சி இனம்**

சேலம் மாவட்டத்தில் புதிய வகை செம்மஞ்சள் மார்பு பச்சைப்புறா, 'கொக்கிகுறி வெள்ளையன்' என்ற பட்டாம்பூச்சி இனம் கண்டறியப்பட்டது.

**இதுதொடர்பாக மாவட்ட வன அலுவலர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:**

சேலம் மாவட்டத்தில் காப்புக்காடுகள் 115494.5 ஹெக்டேர் பரப்பளவும் மற்றும் காப்புநிலங்கள் 9268.420 ஹெக்டேர்

பரப்பளவும் என மொத்தம் 124762.9 ஹெக்டேர் பரப்பளவி–ல் வனங்கள் உள்ளன.

இக்காப்புக் காடுகளில் யானை, காட்டு மாடு, கரடி, மான், முள்ளம்பன்றி, உடும்பு, காட்டுப்பன்றி, குரங்குகள், மலைப் பாம்பு, மயில் உள்ளிட்ட பல்வேறு வகையான வன உயிரினங்கள், பறவை இனங்கள் வாழ்ந்து வருகின்றன.

சேலம் வன மண்டலம் – சேலம் வனக்கோட்டத்துக்கு உள்பட்ட சேர்வராயன் தெற்கு வனச்சரகம், சேர்வராயன் வடக்கு வனச்சரகம், டேனிஷ்பேட்டை, மேட்டூர், ஏற்காடு, ஆத்தூர், வாழப்பாடி, தம்மம்பட்டி, கல்வராயன் ஆகிய 9 வனச்சரகங்களை உள்ளடக்கியதாகும்.

**கணக்கெடுப்புப் பணி...**

இந்த வனச்சரகங்களில் உள்ள காப்புக்காடு, காப்பு நில வனப்பகுதியில் சுமார் 40 வனப்பணியாளர்கள் அடங்கிய குழுவினர் மற்றும் 83 நபர்கள் அடங்கிய தன்னார்வலர்க–ள் ஆகியோர் 16 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு கடந்த 2021, பிப்.17 முதல் பிப்.19 வரை மூன்று நாள்கள் 2021ஆம் ஆண்டுக்கான பறவைகள், பட்டாம்பூச்சிகளைக் கணக்கெடுக்கும் பணியை மேற்கொண்டனர்.

சேலம் மாவட்ட வனங்களில் 225 வகையான பறவை இனங்கள் உள்ளன. இப்பறவைகள் கணக்கெடுப்பின் போது சேலம் மாவட்டத்தை வழியாகக்கொண்ட 175 வகையான இனங்களும், வெளிமாநிலம் மற்றும் மாவட்டங்களில் வாழும் 49 இனங்களும் மற்றும் பொதுவாக தெற்காசிய நாடுகளில் காணப்படும் (செம் மஞ்சள்மார்பு பச்சைப்புறா) என்ற புதிய வகை பறவை இனமும் கண்டறியப்பட்டன.

செம்மஞ்சள்மார்பு பச்சைப்புறா பறவை இனமானது பழ வகைகளை உண்ணக்கூடியது; ஜோடியாகவும், சிறுசிறு கூட்டங்களாகவும் வாழும் குணமுடையது.

இவை அமைதியாகவும், மரங்களில் மெதுவாக நகர்ந்து இரைதேடும் பழக்கமுடையவை. சேர்வராயன் மலை அடிவாரப்பகுதிகளில் இப்பறவை தென்பட்டுள்ளது.

**பட்டாம்பூச்சி கணக்கெடுப்பு:**

பட்டாம்பூச்சிகள் கணக்கெடுப்பில் 147 பட்டாம்பூச்சி இனங்கள் கண்டறியப்பட்டன. இதில், சேலம் மாவட்டத்தில் வாழும் 146 இனங்கள் மற்றும் இந்தியா (இமயமலை), சீனா, நேபாளம், இந்தோனேசியா, பாகிஸ்தான், மியான்மர், சிக்கிம், பூடான் ஆகிய நாடுகளில் வாழும் இனமான 'கொக்கிக்குறி வெள்ளையன்' என்ற புதிய வகை பட்டாம்பூச்சியும் கண்டறியப்பட்டன.

**1. இந்தியாவின் முதல் சானிட்டரி நாப்கினற்ற கிராமமான 'கும்பலாங்கி' அமைந்துள்ள மாநிலம் எது?**



அ) தமிழ்நாடு

**ஆ) கேரளா ☑**

இ) கர்நாடகா

ஈ) ஒடிஸா

✓ இந்தியாவிலேயே முதன்முறையாக சானிட்டரி நாப்கின் பயன்பாடற்ற கிராமமாக கும்பலாங்கி திகழ்கிறது. இது கேரளாவின் எர்ணாகுளம் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இது எர்ணாகுளம் தொகுதியில் செயல்படுத்தப்படும் 'அவள் காயி' (அவளுக்காக) என்ற திட்டத்தின் ஒருபகுதியாகும்.

✓ இதன்கீழ் பதினெட்டு அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடை மகளிர்க்கு மாதவிடாய் கோப்பைகள் வழங்கப்படவுள்ளன. கும்பலாங்கி கிராமத்தை முன்மாதிரி கிராமமாக கேரள ஆளுநர் அறிவித்துள்ளார். இது இந்தியாவின் முதல் 'மாதிரி சுற்றுலா கிராமம்' என்ற பட்டத்தையும் பெற்றுள்ளது.

---

**2.** Tu-160M / White Swan Bomber'ஐ **உருவாக்கிய நாடு எது?**



அ) இஸ்ரேல்

ஆ) இந்தியா

இ) சீனா

**ஈ) ரஷ்யா ☑**

✓ ரஷ்யா தனது 'Tu-160M' உத்திசார் குண்டுதாரியான 'வைட் ஸ்வான்'ஐ உருவாக்கியுள்ளது. அண்மையில் இதன் பரிசோதனை வெற்றிகரமாக நடத்தப்பட்டது. ரஷ்ய இராணுவத்தின்படி, புதிதாக உருவாக்கப்பட்ட இக்குண்டு தாரியை சுமந்துசெல்லும் 'Tu-160M' ஏவுகணையின் 80% உபகரணங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன. மேலும், அணு மற்றும் வழமையான ஆயுதங்கள்மூலம் தொலைதூரத்தில் உள்ள எதிரி இலக்குகளையும் இது தாக்கும்.

---

**3.எவ்வகையான LED, மின்னோட்டத்திற்கு பதிலளிக்கும் வகையில் ஒளியை உமிழும் கரிம சேர்மத்தை படலமாகப் பயன்படுத்துகிறது?**



அ) QLED

**ஆ) OLED ☑**

இ) பீட்டா LED

ஈ) மெட்டா LED

✓ ஆர்கானிக் லைட்-எமிட்டிங் டையோடு (OLED) என்பது ஒரு வகை LED (ஒளி-உமிழும் டையோடு) ஆகும். இதில் உள்ள எமிசிவ் எலக்ட்ரோலுமினசென்ட் லேயர் என்பது மின்னோட்டத்திற்கு பதிலளிக்கும் ஓர் ஒளியை உமிழும் கரிம சேர்மத்தின் படலமாகும். இது Liquid Crystal Display -களுக்கு ஒரு மாற்றாக உள்ளது. சமீபத்தில், மினசோட்டா பல்கலை, எம்ஐடி, கொரிய இன்டஸ்ட்ரியல் டெக்னாலஜி நிறுவனம் மற்றும் பூசன் தேசிய பல்கலை ஆகியவற்றின் ஆராய்ச்சியாளர்கள் குழு, முழுவதுமாக 3D-அச்சிடப்பட்ட ஒரு நெகிழ்வான OLED டிஸ்ப்ளேக்களை உருவாக்கும் ஓர் அச்சிடும் நுட்பத்தை செய்து காண்பித்தது.

**4.** ICANN-**ஆதரவிலான யுனிவர்சல் அக்செப்டென்ஸ் வழி செலுத்து குழுவின் தூதராக நியமிக்கப்பட்டுள்ள இந்தியர் யார்?**



**அ) விஜய் சேகர் சர்மா ☑**

ஆ) சச்சின் பன்சால்

இ) பவிஷ் அகர்வால்

ஈ) தீபிந்தர் கோயல்

✓ உலகளாவிய இணைய அமைப்பான ICANN-ஆதரவு யுனிவர்சல் அக்செப்டன்ஸ் வழிசெலுத்து குழுமமானது Paytm நிறுவனர் விஜய் சேகர் சர்மாவை அதன் தூதராக நியமித்துள்ளது. இணையத்தை அணுகுவதற்கு தற்போது பயன்படுத்தப்படாத மொழிநிரல்களுக்கான தரநிலையை உருவாக்கி அதைப் பரிந்துரைப்பதில் குழு செயல்படுகிறது.

---

**5. டிமிடர் கோவசெவ்ஸ்கி என்பவர் எந்த நாட்டின் புதிய பிரதமரானார்?**



அ) கிரேக்கம்

**ஆ) வடக்கு மாசிடோனியா ☑**

இ) எகிப்து

ஈ) அர்ஜென்டினா

✓ வடக்கு மாசிடோனியாவின் நாடாளுமன்றம் புதிய சமூக ஜனநாயகத் தலைவரான டிமிடர் கோவசெவ்ஸ்கியின்கீழ் புதிய அமைச்சரவையைத் தேர்ந்தெடுத்தது. அவர் தனது சமூக ஜனநாயக முன்னோடியான சோரன் ஜாவ்வை அடுத்து பதவியேற்றார். தற்போதைய எரிசக்தி நெருக்கடி மற்றும் பல்கேரியாவுடனான முக்கிய பேச்சுவார்த்தைக -ளை சமாளிப்பது தனது உடனடி பணிகள் என்று புதிய பிரதமர் அறிவித்தார். வடக்கு மாசிடோனியா குடியரசு என்பது தென்கிழக்கு ஐரோப்பாவில் உள்ள ஒரு நாடாகும்.

---

**6. உழவர்களின் உணவுப்பாதுகாப்பை மேம்படுத்துவதற் -காக உலக உணவுத் திட்டத்துடன் கைகோர்த்த இந்திய மாநிலம் எது?**

அ) தமிழ்நாடு

**ஆ) ஒடிஸா ☑**

இ) தெலுங்கானா

ஈ) அஸ்ஸாம்

✓ சிறு மற்றும் குறு விவசாயிகளின் உணவுப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக ஐநாவின் உலக உணவுத்திட்டமும் ஒடிஸா மாநில அரசும் கைகோர்த்துள்ளன.

✓ பருவநிலை மாற்றத்திற்கு ஏதுவாக உழவர்களின் நெகிழ் திறனை வலுப்படுத்துவதை இந்த ஒப்பந்தம் நோக்கமாகக் கொண்டுள்ளது. உலக உணவுத்திட்டமும் உழவுத்துறை -யும் சிறு உழவர்களுக்கு சேவைகளை வழங்குதற்கான கருவிகள் மற்றும் வழிகாட்டுதல்களை உருவாக்கும்.

---

**7.** இராபர்ட்டா மெட்சோலா என்பவர் எந்தப் பன்னோக்கு நிறுவனத்தின் இளவயது தலைவராகியுள்ளார்?

**அ) ஐரோப்பிய நாடாளுமன்றம் ☑**



ஆ) யுனெஸ்கோ

இ) யுனிசெப்

ஈ) உலக வங்கி

✓ மத்திய வலதுசாரி சட்டமியற்றுநர் இராபர்ட்டா மெட்சோலா ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் 3ஆம் பெண் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். ஐரோப்பிய ஒன்றியத்தின் மிகச்சிறிய நாடான மால்டாவைச் சேர்ந்த 43 வயதான இவர், ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் மிக இளம் வயது தலைவராகவும் உள்ளார்.

---

**8.** 'பேரிடர் தாங்கும் உட்கட்டமைப்புக்கான கூட்டணி'யை தொடக்கிய நாடு எது?

அ) அமெரிக்கா

ஆ) ஆஸ்திரேலியா

**இ) இந்தியா ☑**

ஈ) சீனா

✓ 2019ஆம் ஆண்டு நியூயார்க்கில் நடந்த ஐநா காலநிலை நடவடிக்கை உச்சிமாநாட்டில் 'பேரிடர் தாங்கக்கூடிய உட் கட்டமைப்புக்கான கூட்டணி'யை இந்தியா அறிவித்தது. தேசிய பேரிடர் மீட்புப்படை நாள் ஆண்டுதோறும் ஜன.19 அன்று கொண்டாடப்படுகிறது. கடந்த 2006'இல் இதே நாளில் உள்துறை அமைச்சகத்தின்கீழ், தேசிய பேரிடர் மீட்புப்படை (NDRF) உருவாக்கப்பட்டது.

---

**9.** இந்தியாவிலிருந்து பிரம்மோஸ் ஏவுகணைகளை கொள்முதல் செய்வதற்கு ஒப்புதல் அளித்த முதல் நாடு எது?

**அ) பிலிப்பைன்ஸ் ☑**




ஆ) இஸ்ரேல்

இ) ரஷ்யா

ஈ) ஆஸ்திரேலியா

✓ பிலிப்பைன்ஸ் நாட்டின் கடற்படைக்கு கரையில் இருந்து கப்பலை எதிர்க்கும் ஏவுகணைகளை கொள்முதல் செய்வதற்காக பிரம்மோஸ் ஏரோஸ்பேஸ் நிறுவனத்திற்கு $374 மில்லியன் ஒப்பந்தத்தை அந்நாடு வழங்கியுள்ளது.

✓ இந்தியா-ரஷ்ய கூட்டு முயற்சியான 'பிரம்மோஸ் ஏரோ ஸ்பேஸ்', நீர்மூழ்கிக்கப்பல்கள், கப்பல்கள், விமானங்கள் (அ) தரையிலிருந்து ஏவக்கூடிய சூப்பர்சோனிக் குரூஸ் ஏவுகணையான 'பிரம்மோஸ்'ஐ தயாரிக்கிறது.

---

**10.** 'Pandemic Billionaires' என்ற தலைப்பிலான அறிக்கை ஒன்றை வெளியிட்ட நிறுவனம் எது?

அ) பிரதம் அறக்கட்டளை

**ஆ) ஆக்ஸ்பாம் ☑**

இ) பன்னாட்டு மன்னிப்பு அவை

ஈ) யுனிசெப்

✓ ஆக்ஸ்பாமின் அண்மைய அறிக்கையின்படி, ஆசியாவில் உள்ள (இந்தியா, சீனா, ஹாங்காங் மற்றும் ஜப்பானைச் சேர்ந்தவர்கள்) 20 பேரின் (பெரும்பாலும் மருந்துத்துறை உடன் தொடர்புடையவர்கள்) செல்வநிலை தொற்றுநோய் காலத்தில் பல்கிப்பெருகியுள்ளது.

✓ இவ்வறிக்கையின்படி, இப்பகுதியில் உள்ள ஏழ்மையான 90 சதவீதத்தினரைவிட 1 சதவீத பணக்காரர்கள் அதிக சொத்துவைத்திருந்தனர். 2020 மார்ச் மாதத்தில் 803ஆக இருந்த மொத்த கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை 1/3 பங்கு அதிகரித்து, கடந்த ஆண்டு நவம்பரில் 1,087 ஆக உயர்ந்துள்ளது. அவர்கள் அனைவரையும் இவ்வறிக்கை 'தொற்றுநோய்கால பில்லியனர்கள்' என அழைக்கிறது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. தமிழகத்தில் நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு பிப்.19-ல் ஒரே கட்டமாக வாக்குப்பதிவு**

தமிழகத்தில் நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. 21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள், 490 பேரூராட்சிகளில் பிப்.19-ம் தேதி ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடக்கிறது.

நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் தொடர்பான அறிவிப்பை தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் வெ.பழனிகுமார் வெளியிட்டார். அப்போது அவர் கூறியதாவது:

தமிழகத்தில் நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான தேர்தல் ஒரே கட்டமாக நடத்தப்படுகிறது. 21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள், 490 பேரூராட்சிகள் என மொத்தம் 649 நகர்ப்புற உள்ளாட்சிகள் உள்ளன. 21 மாநகராட்சிகளில் 1,374 வார்டு உறுப்பினர் பதவியிடங்கள், 138 நகராட்சிகளில் 3,843 வார்டு உறுப்பினர் பதவியிடங்கள், 490 பேரூராட்சிகளில் 7,621 வார்டு உறுப்பினர் பதவியிடங்கள் என மொத்தம் 12,838 வார்டு உறுப் பினர் பதவிகளுக்கு பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட உள்ளனர். இந்த பதவிகளுக்கான தேர்தல்கள் அனைத்தும் கட்சி அடிப்படையில் நடக்கும்.

தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் 28-ம் தேதி (நாளை) தொடங்குகிறது. காலை 10 முதல் மாலை 5 மணி வரை வேட்புமனுக்கள் பெறப்படும். பிப்.4-ம் தேதி வரை வேட்புமனுக்களை தாக்கல் செய்யலாம். மனுக்கள் மீதான பரிசீலனை பிப்.5-ம் தேதி நடக்கும். மனுக்களை திரும்பப் பெற பிப்.7 கடைசி நாளாகும். அன்று மாலையே இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும்.

வாக்குப்பதிவு பிப்.19-ம் தேதி ஒரே கட்டமாக நடக்கிறது. காலை 7 மணிக்கு தொடங்கி மாலை 6 மணி வரை வாக்குப்பதிவு நடக்கும். மாலை 5 முதல் 6 மணி வரை கரோனா அறிகுறி உள்ளவர்கள் மற்றும் கரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் வாக்களிக்க அனுமதிக்கப்படுவர்.

தேர்தல் நடக்கும் மாநகராட்சிகளில் 15,158, நகராட்சிகளில் 7,417, பேரூராட்சிகளில் 8,454 என மொத்தம் 31,029 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட உள்ளன. அதிகபட்சமாக சென்னை மாநகராட்சியில் 5,794 வாக்குச் சாவடிகள் உள்ளன.

ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த வேட்பாளர்களுக்கு வைப்புத் தொகையாக பேரூராட்சி வார்டு உறுப்பினருக்கு ₹500, நகராட்சி வார்டு உறுப்பினருக்கு ₹1,000, மாநகராட்சி வார்டு உறுப்பினருக்கு ₹2 ஆயிரம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பிற வேட்பாளர்களுக்கு வைப்புத் தொகையாக பேரூராட்சி வார்டு உறுப்பினருக்கு ₹1,000, நகராட்சி வார்டு உறுப்பினருக்கு ₹2,000, மாநகராட்சி வார்டு உறுப்பினருக்கு ₹4,000 நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

---

**2. பொதுநூலக சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ள முன்னாள் துணைவேந்தர் M ராஜேந்திரன் தலைமையில் குழு: தமிழக அரசு அரசாணை பிறப்பிப்பு**

பொது நூலகச் சட்டத்தில் தேவையான திருத்தங்கள் மேற்கொள்வதற்காக முன்னாள் துணைவேந்தர் M ராஜேந்திரன் தலைமையில் ஓர் உயர்நிலைக்குழுவை தமிழக அரசு அமைத்துள்ளது.

இதுதொடர்பாக பள்ளிக்கல்வித்துறை முதன்மைச் செயலர் காகர்லா உஷா வெளியிட்டுள்ள அரசாணையில் கூறியிருப்பதாவது:

**நவீன தொழில்நுட்பத்துக்கு ஏற்ப**

பொது நூலகங்களுக்கான நிதிநிலையை மேம்படுத்துதல் மற்றும் நிதி ஆதாரத்தை ஏற்படுத்தும் வகையில் தற்போதைய பொது நூலகச் சட்டத்தில் திருத்தம் செய்வது அவசியம் ஏற்பட்டுள்ளது.

மேலும், தற்போதைய நவீன தொழில் நுட்பத்துக்கு ஏற்ப வாசகர்களுக்கு சிறப்பான சேவைகளை வழங்கவும், நவீன தகவல் வளங்களை நூலகங்களுக்கு வழங்கவும், நவீன தொழில்நுட்ப வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு பொது நூலகச் சட்டத்தில் உரியதிருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று பொதுநூலக இயக்குநர் கூறியுள்ளார்.

**நேரடி நியமன முறையில் பணி**

மேலும், பொது நூலகங்களில்பணியாற்றும் நூலகர்களுக்கு பணிவிதிகளை முறைப்படுத்த வேண்டும். பொது நூலகங்களில்உள்ள அனைத்து பணியிடங்களிலும் நேரடி நியமன முறையில் பணியாளர்களை நியமிக்கும் வகையில்விதிகளை முறைப்படுத்த வேண்டும்.

சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகம், மதுரையில் புதிதாக அமையவுள்ள கலைஞர்நினைவு நூலகம் ஆகியவற்றைஒரே அலகாகக் கருதி பணியிடங்களை உருவாக்கி அவற்றை நிரப்ப உரிய திருத்தங்கள் மேற்கொள்வதும் அவசியம். எனவே, இத்திருத்தங்களை மேற்கொள்ள ஓர் உயர்நிலைக் குழுவை அமைக்கலாம் என்றும் பொதுநூலக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

இயக்குநரின் கருத்துருவை ஏற்று, தமிழ்நாடு பொதுநூலகச் சட்டத்தில் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ள தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் எம்.ராஜேந்திரன் தலைமையில் ஓர் உயர்நிலைக் குழுவை அமைத்து அரசு ஆணையிடுகிறது.

இந்த உயர்நிலைக்குழு தனது அறிக்கையை ஆறு மாதங்களுக்குள் அரசிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

இவ்வாறு அரசாணையில் கூறப்பட்டுள்ளது.

---

**3. நாஞ்சில் சம்பத், சுகி சிவம், பாரதி பாஸ்கர்: தமிழ் வளர்ச்சித்துறை விருதுகள் அறிவிப்பு**

கடந்த 2021ஆம் ஆண்டுக்கான தமிழ்வளர்ச்சித்துறை விருதுகளை முதல்வர் ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

தமிழ்மொழி மற்றும் இலக்கிய வளர்ச்சிக்கும் தமிழ்ச் சமுதாய உயர்வுக்கும் தொண்டாற்றிப் பெருமை சேர்த்த தமிழ்ப் பேரறிஞர்கள் மற்றும் தன்னலமற்ற தலைவர்கள் பெயரில், தமிழ்நாடு அரசு பல்வேறு விருதுகளை ஏற்படுத்தி வழங்கி வருகிறது. அவ்வகையில் தமிழ்நாடு அரசின் விருதுகளுக்கான விருதாளர்களை தமிழக முதல்வர் ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்ட அறிவிப்பில், அந்த வகையில், 2021ஆம் ஆண்டிற்கான பேரறிஞர் அண்ணா விருது – நாஞ்சில் சம்பத், மகாகவி பாரதியார் விருது – பாரதி கிருஷ்ணகுமார், பாவேந்தர் பாரதிதாசன் விருது – புலவர் செந்தலை கவுதமன், சொல்லின் செல்வர் விருது – சூர்யா சேவியர், சிங்காரவேலர் விருது – கவிஞர் மதுக் கூர் இராமலிங்கம், தமிழ்த்தாய் விருது – மலேசியத்தமிழ் எழுத்தாளர் சங்கம், அருட்பெருஞ்சோதி வள்ளலார் விருது – முனைவர் இரா. சஞ்சீவிராயர், சி. பா. ஆதித்தனார் திங்களிதழ் விருது – உயிர்மை திங்களிதழ், தேவநேயப் பாவாணர் விருது – முனைவர் கு. அரசேந்திரன், உமறுப் புலவர் விருது – நா. மம்மது, கிஆபெ விருது – முனைவர் ம ராசேந்திரன், கம்பர் விருது – பாரதி பாஸ்கர், ஜி யு போப் விருது – AS பன்னீர்செல்வம், மறைமலையடிகள் விருது – சுகி சிவம், இளங்கோவடிகள் விருது– நெல்லைக் கண்ணன், அயோத்திதாசப் பண்டிதர் விருது – ஞான. அலாய்சியஸ் அவர்களுக்கும் வழங்கிட ஆணையிடப் பெற்றுள்ளன.

இவ்வாண்டு முதல் விருது பெறும் ஒவ்வொருவருக்கும் விருதுத்தொகை ₹1,00,000/–லிருந்து ₹2,00,000/– உயர்த்தியும் ஒரு சவரன் தங்கப்பதக்கம், விருதுக்கான தகுதியுரை ஆகியன வழங்கி பொன்னாடை அணிவித்தும் சிறப்பிக்கப் பெறுவர்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**4. காவல் ஆய்வாளர் உள்பட எட்டு பேருக்கு வீரதீரச் செயலுக்கான அண்ணா பதக்கம்:**

பெண் காவல் ஆய்வாளர் உள்பட எட்டு பேருக்கு வீரதீரச் செயலுக்கான அண்ணா பதக்கங்கள் வழங்கப்பட்டது.

**அண்ணா பதக்கம்:** பல்வேறு இக்கட்டான சூழ்நிலைகளில் சிக்கிக்கொண்ட பொதுமக்களை, களத்தில் இறங்கி வீர தீரத்துடன் காப்பாற்றியவர்களை கௌரவிக்கும் வகையில், ஆண்டுதோறும் வீரதீரச் செயலுக்கான அண்ணா பதக்கம் வழங்கப்பட்டு வருகிறது. நிகழாண்டில், எட்டு பேருக்கு அண்ணா பதக்கம் வழங்கப்பட்டது.

சென்னை ஓட்டேரி பகுதியில் மழை வெள்ளத்தில் சிக்கியவரை மீட்டு மருத்துவமனையில் சேர்த்ததுடன், காணாமல்போன மாற்றுத்திறனாளி சிறுவனையும் 3

மணி நேரத்துக்குள் மீட்டு பெற்றோரிடம் ஒப்படைத்தார், கீழ்ப்பாக்கம் காவல் ஆய்வாளர் இராஜேஸ்வரி.

வெள்ளத்தில் சிக்கி உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த 2 நபர்களை மீட்டு கரை சேர்த்தார் விழுப்புரம் மாவட்டம் அத்தியூர் திருவாதியைச் சேர்ந்த தீயணைப்பு வீரர் மூ ராஜீவ்காந்தி. பொதுமக்களின் உயிருக்கும் உடமைக்கும் அச்சுறுத்தல் விளைவித்த யானைகளை யாருக்கும் எந்தப் பாதகமும் இல்லாமல் பிடிக்க பேருதவி புரிந்த கோவை மாவட்டம் அன்னூர் வட்ட வனக்கால்நடை உதவி மருத்துவர் கி அசோகன் ஆகிய அரசு ஊழியர்களுக்கு வீர தீரச்செயலுக்கான அண்ணா பதக்கத்தை முதலமைச்சர் மு க ஸ்டாலின் வழங்கினார்.

**பொதுமக்கள் பிரிவு:** சாலைவிபத்தின்போது கண்மாய்க்கு –ள் விழுந்து நீரில் மூழ்கிக் கொண்டிருந்தவர்களை துணிச்சலுடன் போராடி காப்பாற்றினார் சிவகங்கை மாவட்டம் வைகை வடகரையைச்சேர்ந்த முத்துகிருஷ் –ணன்.

குளிக்கச்செல்லும்போது நிலைதடுமாறி கிணற்றில்விழுந்த சிறுமியைக் காப்பாற்றினார் திருச்சி மாவட்டம் மணப்பாறை வட்டத்தைச் சேர்ந்த சிறுவன் லோகித்.

வாய்க்காலில் மூழ்கி உயிருக்குப்போராடிக்கொண்டிருந்த ஐந்து பேரைக் காப்பாற்றினார் திருப்பூர் மாவட்டம் வே கள்ளிபாளையம் கிராமத்தைச் சேர்ந்த சொக்கநாதன், சுதா என்ற பேச்சியம்மாள்.

திருவொற்றியூரில் அடுக்குமாடி குடியிருப்பு இடிந்து விழுவதற்குள் மக்கள் அனைவரையும் வெளியேற்றி பேரிழப்பை தடுத்து நிறுத்தினார் திருவொற்றியூரைச் சேர்ந்த மு தனியரசு. வெவ்வேறு நிகழ்வுகளில் வீரதீரச் செயல்களின் மூலமாக உயிர்களைக் காத்த 8 பேருக்கும் வீரதீரச் செயலுக்கான அண்ணா பதக்கங்களை முதல்வர் மு க ஸ்டாலின் வழங்கினார். இந்த விருதானது தலா ₹1 லட்சக்கான காசோலை, ₹9,000 மதிப்புள்ள தங்கமுலாம் பூசிய பதக்கம், சான்றிதழ் அடங்கியது.

**கோட்டை அமீர் பதக்கம்:** கோவை மாவட்டத்தில் மத நல்லிணக்கத்துக்காக தொடர்ந்து பல்வேறு நற்செயல்களில் ஈடுபட்டு வருபவர், ஜே முகமது ரபி. கோவை கே கே புதூரைச் சேர்ந்த அவர், கோட்டை அமீர் மத நல்லிணக்கப் பதக்கத்துக்குத் தேர்வு செய்யப்பட்டார். பதக்கமும், ₹25 ஆயிரத்துக்கான காசோலை மற்றும் சான்றிதழ் அடங்கிய கோட்டை அமீர்பதக்கத்தை முதல்வர் மு க ஸ்டாலினிடம் இருந்து பெற்றார் முகமது ரபி.

**சிறந்த வேளாண்மை:** செம்மை நெல் சாகுபடி முறையைப் பின்பற்றி ஹெக்டேருக்கு 13 ஆயிரத்து 800 கிலோ நெல் தானிய மகசூல் பெற்ற சேலம் மாவட்டம் பூலாம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த செ ராமசாமி, முதலமைச்சரின் சி நாராயணசாமி நாயுடு நெல் உற்பத்தி திறனுக்கான விருதினைப்பெற்றார். ₹5 இலட்சம், பதக்கம், சான்றிதழ் அடங்கியது இந்த விருது.

**காந்தியடிகள் காவலர் பதக்கம்:** கள்ளச்சாராய ஒழிப்பில் சிறந்த முறையில் பணியாற்றிவரும் காவலர்களுக்கு ஆண்டுதோறும் காந்தியடிகள் காவலர் பதக்கம் வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு குடியரசு தினத்தில் ஐவருக்கு இந்தப் பதக்கம் அளிக்கப்பட்டது.

இந்த விருது ₹40 ஆயிரத்துக்கான காசோலை, பதக்கம் அடங்கியது.

---

**5. தனி மாவட்டமாக திருப்பதி உதயம்: ஸ்ரீ பாலாஜி மாவட்டமாக அரசு கெஜட்டில் வெளியீடு**

ஆந்திராவில் தற்போது 13 மாவட்டங்கள் உள்ளன. இவற்றை மக்களவைத் தொகுதிகளின் அடிப்படையில் 26 மாவட்டங்களாக உருவாக்க ஜெகன் மோகன் தலைமையிலான அரசு முடிவுசெய்தது. இதன்படி அமைச்சரவை ஒப்புதலுக்குப்பிறகு புதிய மாவட்டங்கள் மற்றும் அவற்றின் எல்லைகள் தொடர்பான அறிவிப்பை ஆந்திர அரசு நேற்று வெளியிட்டது.

இதன்படி ஆந்திராவில், ஸ்ரீகாகுளம், மன்யம், விஜயநகரம், அல்லூரி சீதாராம ராஜு, விசாகப்பட்டினம், அனகாபள்ளி, காக்கிநாடா, கோனசீமா, இராஜ மகேந்திர வரம், பீமவரம், ஏலூரு, கிருஷ்ணா, விஜயவாடா, குண்டூர், பல்நாடு, பாபட்லா, நெல்லூர், கர்னூல், நந்தியாலா, அனந்தபுரம், புட்டபர்த்தி, கடப்பா, இராயசோட்டி, சித்தூர், திருப்பதி (ஸ்ரீபாலாஜி) என மொத்தம் 26 மாவட்டங்கள் செயல்பாட்டுக்கு வரும்.

இந்தப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் தங்கள் கருத்துகளை 30 நாட்களுக்குள் தெரிவிக்கவேண்டும். இதன் அடிப்படையில் இறுதி அறிவிப்பாணை வெளியிடப்பட்டு, உகாதி பண்டிகை முதல் புதிய மாவட்டங்கள் செயல்படத் தொடங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் சித்தூர் மாவட்டத்திலிருந்து தனி மாவட்டமாக திருப்பதி உதயமாகிறது. இதற்கு ஸ்ரீபாலாஜி மாவட்டம் என பெருமாளின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இந்த மாவட்டத்தில் திருப்பதி, சந்திரகிரி, ஸ்ரீகாளஹஸ்தி, வெங்கடகிரி, சூளுர் பேட்டை, நாயுடு பேட்டை ஆகிய சட்டப்பேரவை தொகுதிகள் இடம்பெற உள்ளன.

பூகோள ரீதியாக முதலில் தமிழகத்தில் இருந்து ஆந்திரா தனியாக பிரிந்தது. அப்போது கர்னூல் தலைநகரமாக அமைக்கப்பட்டது. இந்த தருணத்தில், மகாராஷ்டிரா, ஒடிசா, கர்நாடக எல்லையில் உள்ள சில பகுதிகள் ஆந்திராவுடன் இணைக்கப்பட்டன. ஏற்கனவே இணையமாட்டோம் என அடம்பிடித்த தெலங்கானாவும் ஆந்திராவுடன் இணைக்கப்பட்டது. இதனால் 294 தொகுதிகளுடன் தென்னிந்தியாவின் மிகப்பெரிய மாநிலமாக ஆந்திரப் பிரதேசம் 1956–ல் உருவானது.

இந்நிலையில் ஆந்திர பிரதேசத்தில் இருந்து 2014ஆம் ஆண்டு ஜூன் 2ஆம் தேதி தனி தெலங்கானா மாநிலம் உருவானது. ஐதராபாத்துடன் தெலங்கானா பிரிக்கப்பட்டதால், ஆந்திராவுக்கு புதிய தலைநகரமாக அமராவதி நகரம் அறிவிக்கப்பட்டது.

கடந்த 2019–ல் ஜெகன் தலைமையில் ஆட்சி ஏற்பட்ட பிறகு ஆந்திராவுக்கு 3 தலைநகரங்கள் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் தொடர் போராட்டத்தால் அந்த அறிவிப்பை முதல்வர் ஜெகன் வாபஸ் பெற்றார். இந்நிலையில் புதிதாக 13 மாவட்டங்கள் உருவாக்கும் அறிவிப்பை ஜெகன் அரசு வெளியிட்டுள்ளது.

---

**6. பிரேம் பிஹாரி நாராயண் ராய்ஜாதா உருவாக்கத்தில் சித்திர எழுத்துக்களில் அரசியலமைப்பு சட்ட நூல்: நாடாளுமன்ற நூலக கண்ணாடி பேழையில் பாதுகாப்பு**

இந்திய அரசியலமைப்பு சட்டத்தை உருவாக்க நியமிக்கப் –பட்ட குழுவின் தலைவராக இருந்தவர் டாக்டர் பீம்ராவ் அம்பேத்கர். மற்றொரு சிறப்பாக அம்பேத்கர் உருவாக்கிய சட்டத்தை ஆங்கில சித்திர எழுத்துக்கள் வடிவில் 233 பக்கங்கள் கொண்ட நூல் உருவாக்கப்பட்டுள்ளது. அதை உருவாக்கியவர் பிரேம் பிஹாரி நாராயண் ராய்ஜாதா. அந்த நிகழ்வு தற்போது 73ஆவது குடியரசு தினத்தில் வியப்புடன் நினைவுகூரப்படுகிறது.

அரசியலமைப்பு சட்டத்தை சித்திர எழுத்துகளால் முடிக்க பிரேம் நாராயண் ராய்ஜாதாவுக்கு 6 மாதம் ஆகியுள்ளது. இதை உருவாக்க அவர் தனது பேனாவில் 432 'நிப்'புகளை பயன்படுத்தி உள்ளார். 13 கிலோ எடையுள்ள பக்கங்களை, நூல் வடிவில் தொகுத்து அதன் அட்டைகள் உள்ளிட்ட ஒவ்வொரு பக்கத்தையும், சாந்திநிகேதனின் பிரபல ஓவியர்கள், அஜந்தா வகை ஓவியங்களால் அழகுப்படுத்தி உள்ளனர். இதன் இந்தி மொழிபெயர்ப்பும் சித்திர எழுத்துகளால் பதிவாகி நூல் வடிவம் பெற்றுள்ளது. இதை 264 பக்கங்களில் வசந்த் கிருஷ்ண வேத் என்பவர் எழுதியுள்ளார்.

தில்லியில் கடந்த டிசம்பர் 16, 1901–ல் பிறந்தவர் பிரேம் பிஹாரி நாராயண் ராய்ஜாதா. இவர் சித்திர எழுத்துகள் எழுதுவதில் புகழ்பெற்ற ஆய்வாளர்கள் குடும்பத்தை சேர்ந்தவர். தனது இளம்வயதிலேயே பெற்றோரை இழந்த பிரேம் நாராயண், அவரது தாத்தா ராம் பிரசாத் சக்ஸேனா மற்றும் தாய்மாமன் சத்தூர் பிஹாரி நாரயண் சக்ஸேனாவால் வளர்க்கப்பட்டார்.

ஆங்கிலம் மற்றும் பாரசீக மொழி அறிஞராக வளர்ந்த பிரேம் நாராயண், ஆங்கில அரசின் அதிகாரிகளுக்கு பாரசீக மொழியை பயிற்றுவித்து வந்தார்.

டெல்லியின் புகழ்பெற்ற செயின்ட் ஸ்டீபன் கல்லூரியில் இளங்கலைப் பட்டம் பெற்றவர், சித்திர எழுத்து கலையை தனதுதாத்தா ராம் பிரசாத் சக்ஸேனாவிடம் கற்றுக் கொண்டார். அதன்பிறகு சித்திர எழுத்துகள் எழுதுவதில் பிரேம் பிஹாரி புகழ் பெற்றார்.

இதனால், அப்போதைய பிரதமர் ஜவகர்லால் நேரு, பிரேம் நாராயணனை அழைத்து கவுரப்படுத்தினார்.

இவ்விரண்டு நூல்களும் தற்போது நாடாளுமன்ற நூலக கட்டிடத்தில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. தோல் பைண்டிங் செய்யப்பட்ட நூல்கள் கருப்புநிற அட்டைகளில் தங்கவேலைபாடுகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. இரு நூல்களும் கண்ணாடிப் பேழைகளில் வைத்து அவை கெடாமல் இருக்க நைட்ரஜன் வாயு நிரப்பப்பட்டுள்ளது. இந்தப் பாதுகாப்பு முறைக்காக, அமெரிக்காவின் கலிபோர்னியாவில் உள்ள ஒரு நிறுவனத்திடம் 1992–ல் உதவி பெறப்பட்டது குறிப்பிடத்தக்கது.

---

**7. கெயிலும் ஜான்டி ரோட்ஸூம் உண்மையான சிறப்பு தூதர்கள்: 73ஆவது குடியரசு தினத்தில் பிரதமர் மோடி பாராட்டு**

நாட்டின் 73ஆவது குடியரசு தினத்தைக் கொண்டாடும் வேளையில் பிரதமர் நரேந்திர மோடி, பிரபல கிரிக்கெட் வீரர்களான ஜான்டி ரோட்ஸ் மற்றும் கிறிஸ் கெயில் ஆகியோருக்கு அந்நாட்டுடனான 'ஆழ்ந்த தொடர்பை' வெளிப்படுத்தும் விதமாக கடிதம் எழுதியுள்ளார்.

தென் ஆப்பிரிக்காவைச் சேர்ந்த ஜான்டி ரோட்ஸ், ஐபிஎல் தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணிக்கு பீல்டிங் பயிற்சியாளராக பணியாற்றி உள்ளார். மேலும் அவர் தனது மகளுக்கு 'இந்தியா' எனவும் பெயர்சூட்டியுள்ளார். அதேவேளையில் மேற்கிந்தியத் தீவுகளைச் சேர்ந்த கிறிஸ் கெயில், IPL தொடரில் தனது அதிரடி பேட்டிங்கால் ரசிகர்கள் மத்தியில் பெரிய வரவேற்பை பெற்றவராவார்.

---

**8. குடியரசு தின விழா அணிவகுப்பில் பங்கேற்ற ரஃபேல் போர் விமான முதல் பெண் விமானி**

தில்லி ராஜபாதையில் நேற்று நடைபெற்ற குடியரசு தின அணிவகுப்பின்போது இந்திய விமானப் படையின் வீரர்கள் அணிவகுத்துச் சென்றனர். அதைத் தொடர்ந்து விமானப் படையின் 75 விமானங்கள் பறந்து சாகசம் செய்தன. இதில் பிரான்ஸிடமிருந்து வாங்கிய ரஃபேல் போர் விமானங்களும் அடக்கம்.

அணிவகுப்பின்போது ரஃபேல் போர் விமானத்தின் முதல் பெண் போர் விமானி என்ற பெருமையைப் பெற்ற ஷிவாங்கி சிங் உள்ளிட்டோர் பங்கேற்றனர். அதே நேரத்தில் குடியரசு தின விழா அணிவகுப்பில் பங்கேற்ற 2ஆவது பெண் போர் விமானி ஷிவாங்கி என்பது குறிப்பிடத்தக்கது.

வாரணாசியைச் சேர்ந்த ஷிவாங்கி சிங், இந்திய விமானப் படையில் 2017–ல் சேர்ந்தார். முதலில் மிக்–21 பைசன் ரக விமானத்தை இயக்கி வந்த ஷிவாங்கி தற்போது ரஃபேல் போர் விமானத்தை இயக்கி வருகிறார்.

---

**8. 73ஆவது குடியரசு தின விழா கோலாகலம்: ஏஎஸ்ஐ பாபு ராமுக்கு அசோக சக்ரா விருது வழங்கினார் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த்**

அசோக சக்ரா விருது: ஜம்மு காஷ்மீரில் தீவிரவாதிகளுக்கு எதிராகப் போராடி மூன்று தீவிரவாதிகளை கொலை செய்துவிட்டு வீரமரணமடைந்த சிறப்பு காவல் ஆய்வாளர் பாபு ராமுக்கு அசோக சக்ரா விருது வழங்கப்பட்டது. அந்த விருதினை அவருடைய மனைவி ரீனா ராணி, மற்றும் மகன் மாணிக் குடியரசுத் தலைவரிடமிருந்து பெற்றுக் கொண்டனர்.

---

**9. காஷ்மீர்: லால் சவுக் பகுதியில் 30 ஆண்டுகளுக்கு பின் ஏற்றப்பட்ட இந்திய தேசியக்கொடி...!**

காஷ்மீரின் ஸ்ரீநகரில் உள்ள பிரபலமான லால் சவுக் பகுதியிலுள்ள மணிக்கூண்டு டவரில் 30 ஆண்டுகளுக்கு பின் நேற்று இந்திய தேசியக்கொடி ஏற்றப்பட்டது.

---

**10. ஐடி நிறுவனங்களில் டிசிஎஸ் பெரும் சாதனை: உலக அளவில் 2ஆவது இடம்**

உலகளவில் ஐடி துறையைச்சேர்ந்த அதிக சொத்து மதிப்பு மிக்க நிறுவனங்களின் பட்டியலில் டாடா கன்சல்டன்ஸி சர்வீசஸ் (டிசிஎஸ்) இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது. இதைத்தவிர முதல் 25 நிறுவனங்களின் பட்டியலில் இந்தியாவைச் சேர்ந்த மேலும் நான்கு நிறுவனங்கள் இடம்பிடித்துள்ளன.

இதுகுறித்து பிராண்ட் பைனான்ஸ் ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

அதிக மதிப்புமிக்க நிறுவனங்களின் பட்டியலில், இந்திய மதிப்பில் சுமார் ₹2.71 லட்சம் கோடியுடன் அசென்ஸர் நிறுவனம் தகவல் தொழில்நுட்ப சேவையில் மிகவும் வலுவான இடத்தில் உள்ளது. இதற்கு அடுத்த 2ஆவது இடத்தை இந்தியாவின் டிசிஎஸ் நிறுவனம் பிடித்துள்ளது.

டிசிஎஸ் முந்தைய ஆண்டை விட 12% மற்றும் 2020'ஐ விட 24% அதிகரித்து இரண்டாவது இடத்தில் உள்ளது. டிசிஎஸ் பிராண்ட் மதிப்பு 16.8 பில்லியன் டாலர் ஆகும்.

அதிக மதிப்புமிக்க நிறுவன பட்டியலில், இன்போசிஸ் மூன்றாவது இடத்தில் உள்ளது. இன்போசிஸ், கடந்த ஆண்டை விட 52 சதவீத பிராண்ட் மதிப்பு மற்றும் 2020 இல் 80% வளர்ச்சியுடன் உலகின் மிக வேகமாக வளர்ந்து வரும் ஐடி சேவை வழங்கும் பிராண்டாக உருவெடுத்து உள்ளது. ஐபிஎம் நான்காவது இடத்தில் உள்ளது.

டிசிஎஸ் மற்றும் இன்போசிஸைத் தொடர்ந்து டாப் 25 நிறுவனங்களின் பட்டியலில் மேலும் நான்கு இந்திய நிறுவனங்கள் உள்ளன. விப்ரோ 7ஆவது இடத்திலும், HCL 8ஆவது இடத்திலும், டெக் மஹிந்திரா 15ஆவது இடத்திலும், எல்டிஐ 22ஆவது இடத்திலும் உள்ளன.

2020 முதல் 2022 வரையிலான காலத்தில் இந்திய தகவல் தொழில்நுட்ப சேவை நிறுவனங்களின் சராசரி வளர்ச்சி விகிதம் 51 சதவீதமாக இருந்தது. அதேசமயம், அமெரிக்க பிராண்டுகளின் வளர்ச்சி 7% குறைந்துள்ளது.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**11. தமிழ்நாட்டில் 3 சிறந்த காவல் நிலையங்களுக்கு விருது – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்**

தமிழ்நாட்டில் 3 சிறந்த காவல் நிலையங்களுக்கு முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் விருது வழங்கி கௌரவித்தார். இதில் முதலிடம் பிடித்த திருப்பூர் மாநகர தெற்கு காவல் நிலையம் சார்பில் ஆய்வாளர் பிச்சையா விருதை பெற்றுக் கொண்டார். இரண்டாமிடம் பிடித்த திருவண்ணாமலை தாலுகா காவல் நிலைய ஆய்வாளர் ஹேமாமாலினி, மூன்றாமிடத்தைப்பிடித்த மதுரை மாநகர E–3 அண்ணா நகர் காவல் நிலைய ஆய்வாளர் சாதுரமேஷ் ஆகியோர் விருதைப் பெற்றுக்கொண்டனர்.

---

**1.** 'செயற்கை நிலவு' திட்டத்தை உருவாக்கிய நாடு எது?



அ) இந்தியா

**ஆ) சீனா ☑**

இ) ரஷ்யா

ஈ) இஸ்ரேல்

✓ சீன தேச அறிவியலாளர்கள் "செயற்கை நிலவு" ஆராய்ச்சி வசதியை உருவாக்கியுள்ளனர். இது காந்தத்தன்மையைப் பயன்படுத்தி குறை–ஈர்ப்புவிசைகொண்ட சூழல்களை உருவகப்படுத்துகிறது. இந்த ஆண்டு அதிகாரப்பூர்வமாக தொடங்கப்படும் இவ்வசதி, புவியீர்ப்பு விசையை மறையச் செய்வதற்காக வெற்றிட அறைக்குள் சக்திவாய்ந்த காந்தப் புலங்களைப்பயன்படுத்தும். இந்த விளைவு 'Diamagnetic Levitation' என்று அழைக்கப்படுகிறது.

---

**2.** 'தேசிய துளிர்நிறுவனங்கள் நாள்' கொண்டாடப்படுகிற தேதி எது?



அ) ஜனவரி 1

**ஆ) ஜனவரி 16 ☑**

இ) ஜனவரி 17

ஈ) ஜனவரி 25

✓ ஆண்டுதோறும் ஜன.16 தேதி தேசிய துளிர்நிறுவனங்கள் நாள் கொண்டாடப்படும் எனப் பிரதமர் மோடி அறிவித்தார்.

✓ இத்தசாப்தம் 'இந்தியாவின் தொழினுட்பம்' என்றும் பிரதமர் கூறினார். தொழிற்துறை மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத்துறையால் அங்கீகரிக்கப்பட்ட 61,000'க்கும் மேற்பட்ட துளிர்நிறுவனங்களுடன், இந்தியா உலகின் மூன்றாவது மிகப்பெரிய துளிர்நிறுவனங்களுக்கு உகந்த சூழலமைப்பாக விளங்குகிறது.

---

**3.** இந்திய காடுகளின் அறிக்கை–2021'இன்படி, நாட்டின் காடுகளின் பரப்பளவானது இந்திய புவியியல் பரப்பளவில் எவ்வளவு சதவீதம் அதிகரித்துள்ளது?



அ) 19.71%

**ஆ) 21.71% ☑**

இ) 25.71%

ஈ) 30.71%

✓ மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகமானது இந்திய காடுகள் அறிக்கை – 2021'ஐ வெளியிட்டது. இவ்வறிக்கையின்படி, வனப்பகுதி 7,13,789 சகிமீ அல்லது இந்தியாவின் புவியியல் பகுதியில் 21.71% ஆக அதிகரித்துள்ளது. இது 1,540 சதுரகிலோமீ பரப்பளவு அதிகரித்துள்ளதைக் காட்டுகிறது. ஆந்திரம், தெலுங்கானா, ஒடிஸா, கர்நாடகா மற்றும் ஜார்கண்ட் ஆகியவை காடுக–ளின் பரப்பை அதிகரிப்பதில் பெரும் பாங்காற்றியுள்ளன.

---

**4.** 'I4F இந்தியா–இஸ்ரேல் தொழிற்துறை ஆராய்ச்சி & மேம்பாடு மற்றும் தொழில்நுட்ப புதுமை நிதியம்' என்பது இந்தியாவுக்கும் கீழ்காணும் எந்நாட்டிற்கும் இடையிலான ஒத்துழைப்பாகும்?



அ) இந்தோனேசியா

**ஆ) இஸ்ரேல் ☑**

இ) ஜெர்மனி

ஈ) பிரான்ஸ்

✓ 'I4F இந்தியா–இஸ்ரேல் தொழிற்துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு மற்றும் தொழில்நுட்ப புதுமை நிதியம்' என்பது அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை, இந்திய அரசு மற்றும் இஸ்ரேல் புத்தாக்க ஆணையம் ஆகியவற்றுக்கு இடையேயான ஒத்துழைப்பாகும். இது இந்தியா மற்றும் இஸ்ரேல் இடையே கூட்டு தொழிற்துறை R&D'ஐ மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ இருநாடுகளும் சமீபத்தில் $5.5 மில்லியன் மதிப்பிலான 3 கூட்டு R&D திட்டங்களுக்கு (சுகாதாரப் பராமரிப்பில் நோய் அறிதலுக்கான IoT நானோ உணரிகள்; 'NoMoreMos' – கொசுக்களைக் கட்டுப்படுத்துவதற்கு உயிரியல் ரீதியான தீர்வு; & 'IoT அடிப்படையில் இந்தியா முழுவதும் உழவு மற்றும் சுற்றுச்சூழல் தரவுகளை நிகழ்நேரத்தில் சேகரிப்ப–தற்காக செயற்கைக்கோள் தகவல்தொடர்புகளை செயல் முறைப்படுத்துவது) ஒப்புதல் அளித்துள்ளன.

---

**5.** 'இந்திய உதவியுடன் கட்டப்பட்ட சமூக வீட்டுவசதித் திட்டம்' தொடங்கப்பட்ட நாடு எது?



அ) மடகாஸ்கர்

**ஆ) மொரிஷியஸ் ☑**

இ) மாலத்தீவுகள்

ஈ) மியான்மர்

✓ இந்திய உதவியுடன் கட்டப்பட்ட சமூக வீட்டுவசதி அலகுகளை பிரதமர் மோடி மற்றும் மொரிஷியஸ் பிரதமர் பிரவீந்த் குமார் ஜுக்நாத் ஆகியோர் திறந்துவைத்தனர். இந்தியாவின் வளர்ச்சி ஆதரவுடன் மொரிஷியஸில் நிறுவப்படும் குடிமை சேவை கல்லூரி மற்றும் 8 MW சூரியசக்தி ஒளிமின்னழுத்த பண்ணை திட்டங்களையும் இருதலைவர்களும் தொடங்கிவைத்தனர்.

✓ மெட்ரோ எக்ஸ்பிரஸ் திட்டம் மற்றும் உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு இந்தியா மொரிஷியசுக்கு வழங்கும் $190 மில்லியன் டாலர் கடனுக்கான ஒப்பந்தம், சிறு வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் உள்ளிட்டவையும் பகிர்ந்துகொள்ளப்படும்.

---

**6.** எந்த இந்திய மாநிலம் தனது மாநிலத்தின் பொன்விழா கொண்டாட்டங்களைத் தொடங்கி, 'உட்கட்டமைப்பு நிதி ஆணையத்தை' அமைக்க முடிவுசெய்துள்ளது?

அ) தமிழ்நாடு

**ஆ) அருணாச்சல பிரதேசம் ☑**

இ) தெலுங்கானா

ஈ) அஸ்ஸாம்

✓ அருணாச்சல பிரதேச அரசு, உட்கட்டமைப்பு வளர்ச்சியை துரிதப்படுத்த, 'அருணாச்சல பிரதேச உட்கட்டமைப்பு நிதி ஆணையத்தை' நிறுவவுள்ளது.

✓ அருணாச்சல பிரதேச மாநிலத்தின் பொன்விழா கொண்டாட்டங்களை விடுதலையின் அடையாளமாக

தொடக்கப்பட்டதை முதலமைச்சர் பேமா கந்து நினைவு கூர்ந்தார். மாவட்ட அளவிலான நல்லாட்சி குறியீட்டை உருவாக்கவும் அ பி அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

---

**7. திருத்தப்பட்ட 'கிராமப்புற வளர்ச்சித்திட்ட உருவாக்கம் மற்றும் அமலாக்க வழிகாட்டுதல்களை' வெளியிட்ட மத்திய அமைச்சகம் எது?**

அ) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

**ஆ) பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் ☑**

இ) உழவு மற்றும் உழவர்கள் நல அமைச்சகம்

ஈ) சுற்றுச்சூழல், வனம் & காலநிலை மாற்ற அமைச்சகம்

- ✓ மத்திய பஞ்சாயத்து ராஜ் அமைச்சகமானது திருத்தப்பட்ட 'கிராமப்புற வளர்ச்சித்திட்ட உருவாக்கம் & அமலாக்க வழிகாட்டுதல்களை' வெளியிட்டது.
- ✓ புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட கிராமப்புற வழிகாட்டுதல்கள் கிராமப்புற இந்தியாவை மாற்றுவதையும் கிராமப்புற செழிப்பை மேம்படுத்துவதையும் நோக்கமாகக்கொண்டு உள்ளன. பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்தின் SVAMITVA திட்டம் மற்றும் ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் RURBAN திட்டம்போன்ற முன்னெடுப்புகளுக்கு இது துணைபுரியும்.

---

**8. "2021'இல் இந்தியாவின் காலநிலை" அறிக்கையை வெளியிட்ட நிறுவனம் எது?**

அ) நபார்டு

**ஆ) இந்திய வானிலை ஆய்வு மையம் ☑**

இ) NITI ஆயோக்

ஈ) சுற்றுச்சூழல் அமைச்சகம்

- ✓ இந்திய வானிலை ஆய்வுத்துறை சமீபத்தில் தனது '2021 ஆம் ஆண்டில் இந்தியாவின் காலநிலை' அறிக்கையை வெளியிட்டது. இந்த அறிக்கையின்படி, கடந்த 1901இல் நாடுதழுவிய அளவில் பதிவுகள் தொடங்கியதிலிருந்து '2021' ஆனது இந்தியாவில் ஐந்தாவது மிகவெப்பமான ஆண்டாக பதிவாகியுள்ளது.
- ✓ மேலும், கடந்த ஆண்டில் (2021) நிகழ்ந்த தீவிர வானிலை நிகழ்வுகளால் நாட்டில் 1,750 உயிர்கள் பலியாகியுள்ளதா –கவும், மகாராஷ்டிரா மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டதா –கவும் இந்த அறிக்கை காட்டுகிறது.

---

**9. சமீப செய்திகளில் இடம்பெற்ற '(ALH) 84001' விண்கல், பின்வரும் எக்கோளிலிருந்து வந்து பூமியில் விழுந்தது?**




அ) வியாழன்

**ஆ) செவ்வாய் ☑**

இ) வெள்ளி

ஈ) சனி

- ✓ '(ALH) 84001' என்று அழைக்கப்படும் விண்கல் 1984இல் செவ்வாய்க்கோளில் இருந்து பூமியில் வந்து விழுந்தது. 4 தசாப்தங்களுக்கும் மேலாக அறிவியலாளர்கள் இந்த விண்கல்லின் மேற்பரப்பில் காணப்படும் கரிமசேர்மங்கள் செவ்வாய்க்கோளின் முதுகாலத்திற்கு ஆதாரமா? என்று விவாதித்து வருகின்றனர்.

---

**10. இந்தியா அண்மையில் எந்த நாட்டுடன் இணைந்து வங்கக்கடலில், 'கடல்சார் கூட்டாண்மை பயிற்சியை' மேற்கொண்டது?**



அ) ஆஸ்திரேலியா

**ஆ) ஜப்பான் ☑**

இ) பிரான்ஸ்

ஈ) இலங்கை

- ✓ இந்திய கடற்படைக் கப்பல்களான ஷிவாலிக் மற்றும் கட்மட் ஆகியவை வங்காள விரிகுடாவில் ஜப்பான் கடல் சார் தற்காப்புப்படை (JMSDF) கப்பல்களான உரகா மற்றும் ஹிராடோவுடன் இணைந்து கடல்சார் கூட்டாண்மை பயிற்சியை மேற்கொண்டன.
- ✓ இந்தப் பயிற்சியானது வான்பயிற்சிகள் மற்றும் உத்திசார் சூழ்ச்சிகள் உட்பட பல்வேறு கடல்சார் நடவடிக்கைகளை உள்ளடக்கியது. இரு கடற்படைகளுக்கு இடையிலான பரந்த உத்திசார் கூட்டாண்மைகளை மேலும் வலுப்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. செப்.10–ல் ஆசிய விளையாட்டு போட்டி: சீனாவில் தொடங்குகிறது**

19ஆவது ஆசிய விளையாட்டு போட்டி செப்.10–25ம் தேதி வரை சீனாவின் ஹாங்சோ நகரில் நடைபெற உள்ளது.

ஒலிம்பிக் விளையாட்டுகளான நீச்சல், வில்வித்தை, தடகளம், பூப்பந்து, குதிரையேற்றம், வாள்வீச்சு, கால்பந்து, ஹாக்கி, ஜூடோ, கபடி உள்ளிட்ட 40 விளையாட்டுகளில் 61 பிரிவுகளில் போட்டிகள் நடைபெற உள்ளன. ஈ–ஸ்போர்ட்ஸ் மற்றும் பிரேக்டான்சிங்கிற்கு இந்த ஆண்டு ஆசிய ஒலிம்பிக் கவுன்சில் ஒப்புதல் அளித்துள்ளதால் இவை பதக்க விளையாட்டுகளாக அறிமுகமாகிறது. மேலும், பார்வையாளர்களின் உற்சாகத்தை உயர்த்தும் வகையில் 11 வருடங்களுக்குப் பிறகு கிரிக்கெட் போட்டி டி20 வடிவமாக சேர்க்கப்பட்டுள்ளது.

ஆசிய ஒலிம்பிக் கவுன்சிலின் தெற்காசிய மண்டலத்தில் இந்தியா உறுப்பினராக உள்ளது. மேலும் ஆசிய விளையாட்டுகளின் அனைத்து பதிப்புகளிலும் போட்டியிட்ட 7 நாடுகளில் ஒன்றாகவும் இந்தியா உள்ளது. ஒவ்வொரு ஆசிய விளையாட்டுப் போட்டிகளிலும் இந்தியா குறைந்தபட்சம் ஒருதங்கப் பதக்கத்தையாவது வென்றுள்ளது. 1990ம் ஆண்டு போட்டியை தவிர, பதக்கப் பட்டியலில் முதல் 10 நாடுகளுக்குள் எப்போதும் இடம் பிடித்துள்ளது. இதுவரை, ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா 139 தங்கம், 178 வெள்ளி மற்றும் 299 வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.

இம்முறை ஆசிய விளையாட்டுப் போட்டியில் ஓசியானியா நாடுகளைச் சேர்ந்த 300–க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் பங்கேற்கும் வாய்ப்பு முதன்முறையாக கிடைத்துள்ளது. ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து உள்ளிட்ட

ஓசியானியா விளையாட்டு வீரர்கள், டிரையத்லான், தடகளம், வுசு, ரோலர்ஸ்கேட்டிங், பளுதூக்குதல் ஆகிய 5 விளையாட்டுகளில் போட்டியிட அனுமதிக்கப்படுவார்கள். ஆசிய விளையாட்டு போட்டிகள் அனைத்தையும் சோனி தொலைக்காட்சி நேரலை செய்கிறது.

---

**2. தனியார் நிறுவனத்துடன் இணைந்து ஐஐடி–ல் 5–ஜி தொழில்நுட்ப மேம்பாட்டு ஆராய்ச்சி**

5ஜி தொழில்நுட்ப மேம்பாடு தொடர்பாக சென்னை ஐஐடில் ஆராய்ச்சி நடைபெற உள்ளது.

தொலைத்தொடர்புத் துறையில் 5ஜி தொழில்நுட்பத்தை மேம்படுத்துவது தொடர்பாக சென்னை ஐஐடியுடன் இணைந்து செயல்பட L&T இன்போடெக் நிறுவனம் முடிவு செய்துள்ளது.

இதன்மூலம் இருநிறுவனங்களும் 5ஜி தொழில்நுட்பத்தில் புதுமைகளையும், கிராமப்புறங்களில் குறைந்த செலவில், குறைந்த அலைவரிசையில் மேம்படுத்தப்பட்ட 5ஜி நெட்வொர்க் வசதிகளையும் ஏற்படுத்த திட்டமிட்டுள்ளன.

---

**3. காடு அதிகரிப்பு: உண்மையை மறைக்கும் கணக்கெடுப்பு**

இந்தியக் காடுகளின் நிலை குறித்த அறிக்கையை (ISFR) 2021, இந்தியக் காடு கணக்கெடுப்பு அமைப்பு (FSI) ஜனவரி இரண்டாவது வாரம் வெளியிட்டது. இந்தியக் காடுகள் குறித்து இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை வெளியிடப்படும் இந்த அறிக்கை 1987 முதல் வெளியிடப்பட்டுவருகிறது. சமீபத்திய அறிக்கையின்படி 2,261 ச.கி.மீ. காடு–மரஅடர்த்தி அதிகரித்திருக்கிறது. இந்தியப் புவியியல் பரப்பில் 24% காடு என்கிறது இந்த அறிக்கை.

இந்தக் கணக்கெடுப்பில் கடந்த 20 ஆண்டுகளாக இந்தியாவில் காட்டுப் பரப்பு அதிகரித்துக்கொண்டே வருவதாக ஆரோக்கியமான சித்திரம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. அழகானதொரு சித்திரத்தைத் தீட்ட இந்த அறிக்கை முயன்றாலும் காட்டுப் பரப்பு அதிகரித்திருப்பதற்குக் களத்தில் எந்த ஆதாரமும் இல்லை. காடு என்றால் என்ன என்பதற்குக் காடு கணக்கெடுப்பு அமைப்பு வைத்துள்ள தவறான–திரிபான வரையறையே பிரச்சினைக்கு அடிப்படைக் காரணம் என்கிறார் இயற்கைப் பாதுகாப்பு அறக்கட்டளையைச் சேர்ந்த காட்டுயிர் அறிவியலர் எம்.டி.மதுசூதன்.

ஒரு ஹெக்டேர் நிலப்பகுதியில் வெறும் 10% மரங்கள் இருந்தாலே, அது பசுமைப்பரப்பு என்கிறது இந்த அமைப்பு. இந்தப் புதிய வரையறை அடிப்படையிலேயே காடு–மரஅடர்த்தி அதிகமுள்ள பகுதிகளை பசுமைப்பரப்பு என்று அடையாளப்படுத்தி இந்த அமைப்பு கணக்கெடுப்பை நடத்தியுள்ளது. புதிய கணக்கெடுப்பு அறிக்கையில் உள்ள பிரச்சினைகளைப் பற்றி மதுசூதன் உள்ளிட்ட காட்டுயிர் அறிவியலர்கள் பல்வேறு விமர்சனங்களை முன்வைத்திருக்கிறார்கள். சிலவற்றைப் பார்ப்போம்.

**தேயிலையும் தென்னையும் காடுகள்?**

இந்தியாவில் மிக மோசமாக காடு அழிக்கப்பட்ட பகுதிகளில் ஒன்று அசாமில் உள்ள சோனித்பூர். ஆனால், இப்பகுதியில் காட்டுப் பரப்பு அதிகரித்துவருவதாகக் காடுகளின் நிலை குறித்த அறிக்கை தெரிவிக்கிறது. இது எப்படிச் சாத்தியம்? சோனித்பூரின் ரங்கபரா பகுதியைச் சுற்றியுள்ள தேயிலைத் தோட்டங்களைக் காடுகள் என இந்த அறிக்கை காட்டியுள்ளது.

சோனித்பூர் மட்டுமல்ல, தமிழ்நாட்டின் வால்பாறை பகுதியிலும் தேயிலைத் தோட்டங்கள் காடுகளாகக் காட்டப்பட்டுள்ளன; பொள்ளாச்சி தென்னந்தோப்புகளும் காடுகளாகக் காட்டப்பட்டுள்ளன. 150 ஆண்டுகளுக்கு முன்னால் விலைமதிப்பற்ற பசுமைமாறா ஈரப்பதக் காடுகள் வால்பாறையில் துவம்சம் செய்யப்பட்டுத் தேயிலை, காபித் தோட்டங்கள் உருவாக்கப்பட்டன. 150 ஆண்டுகள் கழித்து அதே தேயிலை, காபித் தோட்டங்கள் காடுகளாகக் கணக்கெடுக்கப்படுவது வேடிக்கை!

இந்தியாவில் 90%–ம் அதிகமாகக் காடு இருக்கும் பகுதியாக லட்சத்தீவு கூறப்பட்டிருக்கிறது. ஆனால், அந்தத் தீவுகளில் இருப்பவை பெருமளவு தென்னை மரங்களே. அரசுக் கணக்குப்படி 'அடர்த்தியான அந்தக் காட்டுப் பகுதி' யில் ச.கி.மீ.க்குத் தலா 2,000 மக்களும் வசித்துவருவதுதான் ஆச்சரியம். இந்தியாவில் மக்கள் நெருக்கம் மிகுந்த நகரங்களில் ஒன்றான கொல்கத்தாவில் மூச்சு முட்டும் கட்டிடங்களுக்கு மத்தியில் இருக்கும் 10–15 மரங்களும் காடாகவே கணக்கில் காட்டப்பட்டுள்ளன.

அதேபோல், டெல்லியில் புதிய நாடாளுமன்ற வளாகம் கட்டப்பட்டுவரும் பகுதிக்கு அருகே மத்திய அரசின் அலுவலகக் கட்டிடங்கள் அடங்கியுள்ள பகுதியும்கூட காடாகவே காட்டப்பட்டுள்ளது. நம் நாட்டு உயிரினப் பன்மைக்கு எதிரியாகக் கருதப்படும் சீமைக் கருவேல ஆக்கிரமிப்புப் பகுதியையும் காடாகவே இந்தியக் காடு கணக்கெடுப்பு அமைப்பு காட்டியுள்ளது. ராஜஸ்தானில் கடுமையாக வறண்ட பாலைவனப் பகுதியான ஜெய்சால்மரிலும்கூடக் காடு இருப்பதாக அந்த அமைப்பு கூறியுள்ளதுதான் உச்சம்.

இந்தியாவில் காடுகளை அழிக்கும் செயல்பாடு 1980–களிலிருந்து சீராக அதிகரித்துவருகிறது. அதேநேரம் காட்டின் பரப்போ புத்தாயிரம் ஆண்டுக்குப் பிறகு கனவிலும் நினைத்துப்பார்க்க முடியாத அளவுக்கு அதிகரித்துவருவதாக அறிக்கை கூறுகிறது. காடுகளின் பரப்பு குறைவதைப் புரிந்துகொள்ள முடியும். ஆனால், எந்தப் பின்னணியும் இல்லாமல் காட்டின் பரப்பு அதிகரிப்பதாக முன்வைக்கப்படும் சித்திரம் எப்படி நம்பகமான ஒன்றாக இருக்க முடியும்?

**ஆதாரமற்ற சித்திரம்**

மக்களின் வரிப்பணத்தில் செயல்படும் இந்தியக் காடு கணக்கெடுப்பு அமைப்பு, தனது மதிப்பீடுகள் குறித்த அறிக்கைகளை வெளியிடுகிறதே ஒழிய, எந்தக் காலத்திலும் கணக்கெடுப்புக்குப் பயன்படுத்திய செயற்கைக்கோள் வரைபடங்களை வெளியிட்டதே இல்லை. வரைபடங்கள்தானே உண்மையை எடுத்துரைக்கும்? தனது வரைபடங்கள் யாருக்காவது தேவையென்றால், ஒரு வரைபடக் கட்டத்தை ₹2,000–

க்கு அந்த அமைப்பு விற்பனை செய்கிறது. இப்படி மொத்த வரைபடங்களையும் யாராவது வாங்க நினைத்தால் ₹50 லட்சத்துக்குக் குறையாமல் தேவை.

"இந்தியக் காடு கணக்கெடுப்பு அமைப்பு தனது அறிக்கைகளைச் சரிபார்ப்பதற்கான எந்த ஆதாரத்தையும் பொதுவெளியில் வெளியிடுவதில்லை. அப்படி ஆதாரங்கள் வெளியிடப்பட்டால், ஒவ்வொரு 2 ஆண்டுகளுக்கும் ஒரு முறை காட்டுப்பரப்பு அதிகரித்துவருகிறது எனபோலியான சித்திரத்தைக் கட்டியெழுப்பும் அந்த அமைப்பின் முயற்சி படாரென்று உடைந்துவிடும். ஒரு காலத்தில், புலிகளின் கால்தடத்தை அடிப்படையாகக் கொண்டு புலிகளின் எண்ணிக்கை அதிகரித்துவருவதாகக் கூறப்பட்டு, பிறகு அது பொய் என்று நிரூபணமானது. அதைப் போன்றதுதான் காட்டுப் பரப்பு அதிகரித்துவருகிறது என்கிற கணக்கெடுப்பும்" என்கிறார் எம்.டி. மதுசூதன்.

**நோக்கம் என்ன?**

சரி, தவறான புரிதலின் காரணமாகத் தோட்டங்களையும் தோப்புகளையும் இந்தியக் காடு கணக்கெடுப்பு அமைப்பு காடு என வகைப்படுத்துகிறதோ என்கிற கேள்வி எழலாம். அப்படிச் சொல்ல முடியாது. மற்றொரு அரசு அமைப்பான 'தேசிய தொலையுணர்வுமையம்' (NRSC) வெளியிட்டுள்ள செயற்கைக்கோள் வரைபடங்கள் காடு, தேயிலைத் தோட்டம், தென்னந்தோப்பு ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாட்டை தெளிவாகக் கூறுகின்றன. அது மட்டுமல்லாமல், 2015–க்குப் பிறகு இந்தியக் காடுகளின் நிலை மிக மோசமாகச் சரிந்துவருவதையும் தேசியத் தொலைவுணர்வு மையத்தின் தரவுகள் தெரிவிக்கின்றன. அப்படியானால், மேற்கண்ட அம்சங்களைத் தெரிந்துகொண்டே காடு கணக்கெடுப்பு அமைப்பு தவறான சித்திரத்தை வலிந்து உருவாக்க முனைகிறது என்றே புரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது.

**இப்படிச் செய்வதன் நோக்கம் என்னவாக இருக்க முடியும்?**

எரிபொருள், கனிமச் சுரங்கம், போக்குவரத்துக்கான சாலை வசதி, தொழிற்சாலைகளுக்குக் காடுகளைத் திருப்பிவிட அரசு முயல்கிறது. நடப்பில் காடுகளின் பரப்பு குறைந்துகொண்டே போகும்போது, காட்டை மேலும் அழிக்கும் செயல்பாடுகள் குறித்து மக்களிடையே பெருத்த கேள்விகள் எழக்கூடும். இந்தப் பின்னணியில் காடுகளுக்கான வரையறையையே மாற்றியமைத்துவிட்டால், காடுகளின் பரப்பு அதிகரித்ததாகக் காட்டிவிடலாம். மற்றொரு பக்கம், காடுகளை அழிப்பதும் கேள்விக்கு அப்பாற்பட்டதாகிவிடும் என அரசு நினைக்கிறது.

அத்துடன், புவி வெப்பமாதலுக்கு எதிராகக் காடுகளின் பரப்பை அதிகரித்துக் காட்டுவதால், கார்பன் வர்த்தகத்தில் அதைப் பணமாக மாற்றிக்கொள்ள முடியும். காட்டின் பரப்பை அதிகரிக்கும் மூன்றாம் உலக நாடுகள் அதற்குப் பதிலீடாக பணக்கார நாடுகளிடம் பணம் பெற்றுக்கொண்டு, அந்த நாடுகள் கூடுதல் கார்பன் வெளியிட வழியமைக்க முடியும்.

**உணர்ந்திருக்கிறோமா?**

கரோனா வைரஸ் பரவலுக்குக் காடழிப்புதான் முதன்மைக் காரணம் என்பது உறுதியாகத் தெரிந்த பின்னரும் காடழிப்பை நாம் கண்டுகொள்ளாமல் இருக்கிறோம். கரோனா வைரஸை விடவும் தீவிரமான–நீடித்த பிரச்சினைகளைக் காடழிப்பினால் இந்தியா எதிர்கொண்டுள்ளது. அஸாம் சோனித்பூர் பகுதியில் மட்டுமல்லாமல், காடழிக்கப்பட்டுள்ள பெரும்பாலான பகுதிகளில் மனிதர்களுக்கும் யானை/புலி/சிறுத்தைகளுக்கும் இடையிலான எதிர்கொள்ளல் கடந்த 10 ஆண்டுகளில் மிக மோசமாக அதிகரித்திருக்கிறது. இரு தரப்பிலும் உயிர்ப் பலிகளும் அதிகமாகவே உள்ளன. அதேபோல் சோனித்பூர் பகுதியில் மலேரியா காய்ச்சல் வழக்கத்தைவிட 8 மடங்கு அதிகரித்திருக்கிறது. காடுகளுக்கான வரையறையை அரசு மாற்றலாம். ஆனால், இதுபோன்ற மோசமான பக்கவிளைவுகளை வரையறை மாற்றங்கள் தடுக்கப் போவதில்லை. காடழிப்பு ஏற்படுத்தும் இதுபோன்ற நிஜமான பாதிப்புகளை அரசும் மக்களும் புறந்தள்ளிவருவதுதான் பிரச்சினைக்கு மூல காரணம்.

இயற்கையான காடுகள் உயிரினப் பன்மைக்கும், மக்களுக்கும் கணக்கற்ற பலன்களை வழங்கிவருகின்றன. காடும் இயற்கையும் வழிவழியாக நம்மை வந்தடைந்துள்ள உயிருள்ள மரபுச் சொத்துகள், பண்பாட்டு அடையாளங்கள். காட்டு வளம் என்பது ஒரு நாட்டின் ஒட்டுமொத்த வளத்தின் அடையாளமும்கூட. யுனெஸ்கோ, ஐ.நா. சபை போன்ற அமைப்புகள், அந்த மரபுச் சின்னங்களை உரிய வகையில் அங்கீகரிக்கின்றன, போற்றுகின்றன, பாதுகாக்க வலியுறுத்துகின்றன. மாறாக, காடுகளுக்கும் இயற்கை வளத்துக்கும் உரிய மதிப்பையும் அங்கீகாரத்தையும் வழங்காமல் வெறும் மேற்பூச்சை நம்பிக்கொண்டிருக்கும் மக்கள் கூட்டத்துக்கு உத்தரவாதமான வருங்காலம் இல்லை என்பதே காலம் உணர்த்தியுள்ள நிதர்சனம்.

---

**4. 'மகிழ் கணிதம்' திட்டம்: பள்ளிகளுக்கு நிதி ஒதுக்கீடு**

தமிழக அரசுப் பள்ளிகளில் 'மகிழ் கணிதம்' திட்டத்தை செயல்படுத்துவதற்காக பள்ளி ஒன்றுக்கு ₹1,350 வீதம் மொத்தம் ₹93.79 லட்சம் (6,948 பள்ளிகள்) ஒதுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வியின் மாநிலத் திட்ட இயக்குநர் இரா. சுதன், முதன்மைக்கல்வி அதிகாரிக–ளுக்கு அனுப்பிய சுற்றறிக்கை: தமிழகத்தில் அரசுப் பள்ளிகளில் 6 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ–ர்களுக்கு எளிய முறையில் கணிதப் பாடத்தை கற்பிக்க ஏதுவாக 'மகிழ் கணிதம்' என்ற திட்டம் அமல்படுத்தப்பட உள்ளது.

இதுசார்ந்து ஆசிரியர்களுக்கு முதல்கட்டமாக கடந்த ஜனவரி 20, 21ஆம் தேதிகளில் பயிற்சி வழங்கப்பட்டது. தொடர்ந்து பிப்ரவரி, மார்ச் மாதங்களில் அடுத்தகட்ட பயிற்சிகள் அளிக்கப்பட உள்ளன.

இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக பள்ளி ஒன்றுக்கு ₹1,350 வீதம் மொத்தம் ₹93.79 லட்சம் (6,948 பள்ளிகள்) ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**1.** பொது பார்மோசா USD பத்திரங்களை வெளியிடும் முதல் இந்திய அட்டவணைப்படுத்தப்பட்ட வங்கி எது?

அ) பஞ்சாப் நேஷனல் வங்கி

**ஆ) பாரத ஸ்டேட் வங்கி ☑**

இ) கனரா வங்கி

ஈ) HDFC வங்கி

✓ பாரத ஸ்டேட் வங்கி ஐந்து ஆண்டுகளுக்கு "Regulation S" பார்மோசா பத்திரங்கள்மூலம் $300 மில்லியன் டாலர் நிதி திரட்டியுள்ளது. பொது பார்மோசா பத்திரங்களை வெளியிடும் முதல் இந்திய அட்டவணைப்படுத்தப்பட்ட வணிகவங்கி இதுவாகும்.

✓ இந்தப் பத்திரங்கள் ஐந்தாண்டுகால அமெரிக்க கருவூல குறிப்புகளுக்கு எதிராக தரப்படுத்தப்பட்டுள்ளன.

---

**2. அந்நிய செலாவணி நெருக்கடியைக் சமாளிப்பதற்காக, இந்தியா, அண்மையில் எந்த நாட்டிற்கு $900 மில்லியன் மதிப்பிலான கடனை வழங்கியது?**

அ) நேபாளம்



**ஆ) இலங்கை ☑**

இ) ஆப்கானிஸ்தான்

ஈ) வெனிசுலா


✓ இந்தியா இலங்கைக்கு அதன் குறைந்துவிட்ட அந்நிய செலவாணிகளை கட்டியெழுப்புவதற்கும் உணவு இறக்கு –மதிக்குமாக $900 மில்லியன் அமெரிக்க டாலர்கள் கடனை அறிவித்துள்ளது.

✓ சரக்குகளை இறக்குமதி செய்வதற்காக இந்தியாவிடம் இருந்து $1 பில்லியன் டாலர்கள் கடனைப்பெற இலங்கை பேச்சுவார்த்தை நடத்திவருகிறது. இறக்குமதிக்காக செலுத்தவேண்டிய டாலர்கள் தட்டுப்பாடு காரணமாக இலங்கையில் கிட்டத்தட்ட அனைத்து அத்தியாவசியப் பொருட்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

---

**3.** 2022 ஜனவரி நிலவரப்படி, எட்டுப்பயணிகளை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் குறைந்தபட்சம் எத்தனை வளிப் பைகளைக் (airbag) கொண்டிருக்க வேண்டும்?

அ) ஒன்று



**ஆ) இரண்டு ☑**

இ) நான்கு

ஈ) ஆறு

✓ 2019 ஜூலை.1ஆம் தேதி முதல் அனைத்து பயணிகள் வாகனங்களுக்கும் ஓட்டுநருக்கான வளிப்பை (driver air bag) கட்டாயமாக்கப்பட்டது. 2022 ஜனவரி மாதம் முதல் அனைத்து வாகனங்களிலும் இரண்டு வளிப்பைகள் (ஓட்டுநர் மற்றும் முன்வரிசையில் பயணிப்போர்) கட்டாய –மாக்கப்பட்டுள்ளது. சாலைப் போக்குவரத்து அமைச்சகம் சமீபத்தில் குறைந்தபட்சம் 6 வளிப்பைகளை கொண்டிருப் –பதற்கான வரைவு அறிவிப்புக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

✓ எட்டுப் பயணிகளை ஏற்றிச்செல்லும் வாகனங்களுக்கு இது கட்டாயம். 'முன் மற்றும் பக்கவாட்டு விபத்துகளின்' தாக்கத்தைக் குறைப்பதே இதன் நோக்கம்.

**4.** இந்தியாவில் ஒவ்வோர் ஆண்டும் 'இராணுவ நாள்' அனுசரிக்கப்படுகிற தேதி எது?

**அ) ஜனவரி 15 ☑**



ஆ) ஜனவரி 20

இ) ஜனவரி 25

ஈ) ஜனவரி 30

✓ ஜெனரல் FR ராய் புச்சரைத் தொடர்ந்து இந்திய இராணுவத்தின் முதல் இந்தியத் தலைமைத் தளபதியாக ஜெனரல் KM கரியப்பா (பின்னர் பீல்ட் மார்ஷல் ஆனார்) பதவியேற்ற நாளைக் குறிக்கும் வகையில், ஜன.15ஆம் தேதி ஆண்டுதோறும் இராணுவ நாளாகக் கொண்டாடப்ப –டுகிறது.

---

**5.** 'புலிகள் பாதுகாப்பு தொடர்பான ஆசிய அமைச்சர்கள் மாநாட்டை' ஏற்பாடு செய்துள்ள நாடு எது?

அ) இந்தியா



**ஆ) மலேசியா ☑**

இ) UK

ஈ) இலங்கை

✓ மலேசிய அரசாங்கமும் குளோபல் டைகர் போரமும் (GTF) இணைந்து புலிகள் பாதுகாப்பு தொடர்பான 4ஆவது ஆசிய அமைச்சர்கள் மாநாட்டை ஏற்பாடு செய்தன. புலிகள் பாதுகாப்பு மாநாட்டில் இந்தியாவின் மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சர் பூபேந்தர் யாதவ் இந்தியாவின் அறிக்கையை வழங்கினார்.

✓ இரஷ்யாவில் நடைபெறும் உலகளாவிய புலிகள் உச்சி மாநாட்டிற்கான புது தில்லி பிரகடனத்தை இறுதி செய்ய புலிகள் உள்ள நாடுகளுக்கு இந்தியா உதவும்.

---

**6.** 'கொய்லா தர்பன்' இணையதளத்தை அறிமுகப்படுத்திய மத்திய அமைச்சகம் எது?

அ) எஃகு அமைச்சகம்



**ஆ) நிலக்கரி அமைச்சகம் ☑**

இ) மின்சார அமைச்சகம்

ஈ) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

✓ நிலக்கரி துறை தொடர்பான முக்கிய செயல்திறன் குறிகா –ட்டிகளுக்காக "Koyla Darpan" என்ற இணையதளத்தை மத்திய நிலக்கரி அமைச்சகம் அறிமுகப்படுத்தியது.

✓ தற்போது, நிலக்கரி/பழுப்பு நிலக்கரி உற்பத்தி, அனல்மின் நிலையங்களில் நிலக்கரி இருப்புநிலை, உட்கட்டமைப்பு திட்டங்கள், தொகுதிகள் ஒதுக்கீடு, முக்கிய நிலக்கரிச் சுரங்கங்களின் கண்காணிப்பு மற்றும் நிலக்கரி விலை உள்ளிட்ட 9 குறிகாட்டிகள் இந்தத்தளத்தில் உள்ளன.

---

**7.** ஆயிஷா மாலிக், எந்த நாட்டின் உச்சநீதிமன்றத்தின் முதல் பெண் நீதிபதி ஆனார்?

அ) இஸ்ரேல் **ஆ) பாகிஸ்தான் ☑**

இ) ஆப்கானிஸ்தான் ஈ) பங்களாதேஷ்



- ✓ பாகிஸ்தான் உச்சநீதிமன்றத்தின் முதல் பெண் நீதிபதியா–க உயர்நீதிமன்ற நீதிபதி ஆயிஷா மாலிக் நியமிக்கப்பட்டு உள்ளார். கடந்த 2012ஆம் ஆண்டு முதல் லாகூர் உயர் நீதிமன்ற நீதிபதியாக பணியாற்றி வரும் நீதிபதி ஆயிஷா மாலிக்கின் பதவி உயர்வுக்கு பாகிஸ்தான் அதிபர் ஆரிப் ஆல்வி ஒப்புதல் அளித்தார்.
- ✓ அவர் 2031 ஜூனில் பணி ஓய்வு பெறும் வரை உச்சநீதி மன்ற நீதிபதியாகப் பணியாற்றுவார்.

---

**8.** 2021ஆம் ஆண்டுக்கான தேசிய துளிர்நிறுவன விருதின் வெற்றியாளர்களுள் ஒருவரான 'ரெபோஸ்' உடன் சார்ந்த துறை எது?

**அ) ஆற்றல் விநியோகம் ☑**

ஆ) மருத்துவத் துறையில் புத்தாக்கம்

இ) நிதியியல் தொழில்நுட்பம்

ஈ) திறன் மேம்பாடு

- ✓ வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம் சிறந்த 46 இந்திய துளிர் நிறுவனங்களை அறிவித்து அவர்களுக்கு தேசிய துளிர் நிறுவன விருதுகளை வழங்கியது. பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்ற மெய்நிகர் கூட்டத்தில் 150 தொழில்முனைவோர் தங்கள் கொள்கை பரிந்துரைக–ளை வழங்கினர். புனேவைச் சார்ந்த 'Repos', 'ஆற்றல் விநியோகப்பிரிவில்', எரிபொருளை வீட்டுக்கு வீடு விநி–யோகம் செய்ததற்காக இந்த விருதை வென்றது.

---

**9.** BHELஆல் கட்டப்பட்ட 'நிலக்கரியிலிருந்து மெத்தனால் எடுக்கும் இந்தியாவின் முதல் ஆலை' அமைந்துள்ள இடம் எது?



அ) சென்னை

ஆ) மும்பை

**இ) ஹைதராபாத் ☑**

ஈ) கொச்சி

- ✓ மத்திய கனரக தொழிற்துறை அமைச்சர் மகேந்திர நாத் பாண்டே, BHELஆல் கட்டப்பட்ட 'நிலக்கரியிலிருந்து மெத்த–னால் எடுக்கும் இந்தியாவின் முதல் ஆலை'யை (CTM) ஹைதராபாத்தில் திறந்து வைத்தார்.
- ✓ இந்த 0.25 TPD (ஒரு நாளைக்கு டன்கள்) திறன்கொண்ட CTM ஆலை BHELஆல் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்ப–ட்டு, மேம்படுத்தப்பட்டு நிறுவப்பட்டுள்ளது. இது அதிக சாம்பல் கலந்த இந்திய நிலக்கரியிலிருந்து 99 சதவீதத்திற்கும் அதிகமான தூய்மையுடன் மெத்தனாலை உற்பத்தி செய்கிறது.

---

**10.** இந்திய ஒப்பன் ஆடவர் ஒற்றையர் பிரிவில் அறிமுக போட்டியில் பட்டத்தை வென்ற முதல் இந்தியர் யார்?



அ) K ஸ்ரீகாந்த்

**ஆ) லக்ஷ்யா சென் ☑**

இ) P காஷ்யப்

ஈ) சாய் பிரனீத்

- ✓ இறுதிப்போட்டியில் நடப்பு உலக சாம்பியனான லோ கீன் யூவை தோற்கடித்ததன்மூலம், இந்திய ஒப்பன் ஆடவர் ஒற்றையர் பட்டத்தை அறிமுகப்போட்டியில் வென்ற முதல் இந்தியர் என்ற பெருமையை லக்ஷ்யா சென் பெற்றார்.
- ✓ BWF சுற்றுப்பயணத்தில் இது லக்ஷ்யாவின் முதல் 'சூப்பர் 500' பட்டமாகும். முன்னதாக 2021 உலக சாம்பியன்ஷிப் போட்டியில் அவர் வெண்கலம் வென்றிருந்தார்.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. பிரமோஸ் ஏவுகணைகள் முதல் முறையாக ஏற்றுமதி: ₹2,800 கோடிக்கு வாங்குகிறது பிலிப்பின்ஸ்**

அதிநவீன பிரமோஸ் ஏவுகணைகளை முதல்முறையாக இந்தியா ஏற்றுமதி செய்யவுள்ளது. சுமார் ₹2,800 கோடிக்கு பிரமோஸ் ஏவுகணைகளை பிலிப்பின்ஸ் கொள்முதல் செய்யவுள்ளது. இதற்கான ஒப்பந்தம் சமீபத்தில் கையொப்பமானது.

இந்தியா–ரஷியா கூட்டு முயற்சியில் உருவாக்கப்பட்ட பிரமோஸ் ஏரோஸ்பேஸ் நிறுவனம் பிரமோஸ் ஏவுகணைகளைத் தயாரித்து வருகிறது. அந்த ஏவுகணைகள் ஒலியைவிட அதிக வேகத்தில் பயணிக்கக் கூடியவையாகும். தரையில் இருந்து மட்டுமில்லாமல் நீர்மூழ்கிக்கப்பல்கள், கப்பல்கள், விமானங்கள் ஆகியவற்றில் இருந்தும் பிரமோஸ் ஏவுகணைகளை ஏவ முடியும்.

இந்நிலையில், கப்பல்களைத்தாக்கி அழிக்கக்கூடிய பிரமோஸ் ஏவுகணைகளை சுமார் ₹2,800 கோடிக்கு பிலிப்பின்ஸ் கடற்படை வாங்கவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சகம் தரப்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின்கீழ் செயல்படும் பிரமோஸ் ஏரோஸ்பேஸ் நிறுவனம் ஏவுகணைகளைத் தயாரித்து வழங்கவுள்ளது.

**பிரமோஸ்–ஒரு பார்வை...**

இந்தியா–ரஷியா கூட்டு முயற்சியில் தயாரிக்கப்பட்டது பிரமோஸ் ஏவுகணை.

சூப்பர்சானிக் ரக பிரமோஸ் ஏவுகணைகளை தரையில் இருந்து மட்டுமன்றி கப்பல்கள், விமானங்கள், நீர்மூழ்கிக் கப்பல்களிலிருந்தும் செலுத்த முடியும்.

பிரமோஸ் ஏவுகணைகள் இந்தியாவின் முப்படையிலும் ஏற்கெனவே இணைக்கப்பட்டுள்ளன. 400 கிலோமீட்டர் தொலைவு இலக்கு வரை தாக்கும் மேம்படுத்தப்பட்ட பிரமோஸ் ஏவுகணையை 2020, செப்டம்பரில் இந்தியா வெற்றிகரமாக பரிசோதித்தது.

---

**2. புதிய தலைமை பொருளாதார ஆலோசகராக டாக்டர் வி ஆனந்த நாகேஸ்வரன் நியமனம்**

டாக்டர் வி ஆனந்த நாகேஸ்வரன் மத்திய நிதி அமைச்சகத்தின் தலைமை பொருளாதார ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மத்திய நிதியமைச்சகத்தின் தலைமை பொருளாதார ஆலோசகர் கிருஷ்ணமூர்த்தி சுப்ரமணியன் பதவிக் காலம் நிறைவடைந்த நிலையில் அப்பதவிக்கு தற்போது நியமனம் அறிவிக்கப்பட்டுள்ளது.

2019 முதல் 2021ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் பிரதமரின் பொருளாதார ஆலோசனைக் குழுவின் பகுதிநேர உறுப்பினராகப் பணியாற்றியுள்ள ஆனந்த நாகேஸ்வரன் ஆமதாபாத்திலுள்ள இந்திய மேலாண்மை கல்வி நிறுவனத்தில் முதுகலை பட்டம் பெற்றவர்.

---

**3. 30-01-2022 – 'மகாத்மா' காந்தியடிகளின் 75ஆவது நினைவு நாள்.**

---

**4. ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் 44 ஆண்டு ஏக்கம் தீர்ந்தது: ஆஷ்லி பார்டி சாம்பியன்**

ஆஸ்திரேலிய ஓபன் கிராண்ட் ஸ்லாம் டென்னிஸ் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவில், உள்ளூர் நட்சத்திரம் ஆஷ்லி பார்டி சாம்பியன் பட்டம் வென்று சாதனை படைத்தார். இத்தொடரில் 44 ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு ஆஸ்திரேலிய வீராங்கனை கோப்பையை முத்தமிட்டது, அந்நாட்டு ரசிகர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. இறுதிப் போட்டியில் அமெரிக்காவின் டேனியலி கோலின்சுடன் (28 வயது, 30வது ரேங்க்) நேற்று மோதிய நம்பர் 1 வீராங்கனை ஆஷ்லி (25 வயது), தொடக்கத்தில் இருந்தே அதிரடியாக புள்ளிகளைக் குவித்து 6–3 என்ற கணக்கில் முதல் செட்டை கைப்பற்றினார்.

இரண்டாவது செட்டில் ஆக்ரோஷமாக விளையாடி பதிலடி கொடுத்த கோலின்ஸ், ஒரு கட்டத்தில் 5–1 என முன்னிலை வகித்ததால், அந்த செட்டை மிக எளிதாக வெல்வார் என எதிர்பார்க்கப்பட்டது. எனினும், உள்ளூர் ரசிகர்களின் ஆரவார ஆதரவுடன் உற்சாகமாக விளையாடிய ஆஷ்லி அடுத்தடுத்து கோலின்சின் சர்வீஸ் ஆட்டங்களை முறியடித்து முன்னேறி 5–5 என சமநிலையை எட்டினார். கோலின்சும் விட்டுக் கொடுக்காமல் போராடியதால் ஆட்டம் டை பிரேக்கர் வரை இழுபறியாக நீடித்தது.

அதில் பதற்றமின்றி அமர்க்களமாக விளையாடிய ஆஷ்லி 6–3, 7–6 (7–2) என்ற நேர் செட்களில் வெற்றியை வசப்படுத்தி சாம்பியன் பட்டத்தை கைப்பற்றினார். விறுவிறுப்பான இப்போட்டி 1 மணி, 27 நிமிடத்தில் முடிவுக்கு வந்தது. இந்த தொடரில் ஒரு செட்டில் கூட தோற்காமல் கோப்பையை முத்தமிட்டுள்ள ஆஷ்லி, 44 ஆண்டுகளுக்குப் பிறகு ஆஸி. ஓபன் தொடரில் சாம்பியன் பட்டம் வென்ற முதல் உள்ளூர் வீராங்கனை என்ற பெருமையை தட்டிச் சென்றார். சொந்த மண்ணில் நடக்கும் கிராண்ட் ஸ்லாம் தொடரில் மிக நீண்ட இடைவெளிக்குப் பிறகு கிடைத்திருக்கும் இந்த வெற்றியை ஆஸி. மக்கள் மகிழ்ச்சியுடன் உற்சாகம் பொங்கக் கொண்டாடி வருகின்றனர்.

* தொழில்முறை கிரிக்கெட் வீராங்கனையாகும் முயற்சியில் 2014ம் ஆண்டில் டென்னிசில் இருந்து விலகியிருந்த ஆஷ்லி, தற்போது மகளிர் டென்னிசில் உலகின் நம்பர் 1 வீராங்கனையாக இருப்பதுடன் ஆஸி. ஓபனையும் வென்று மகத்தான சாதனை படைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. 1978ல் ஆஸி. ஓபன் சாம்பியன் பட்டம் வென்ற வீராங்கனை கிறிஸ்டைன் ஓ நீல், நேற்று ஆஷ்லிக்கு கோப்பையை வழங்கி பாராட்டினார்.

* ஆஷ்லி வென்ற 3வது கிராண்ட் ஸ்லாம் பட்டம் இது. முன்னதாக, 2019ல் பிரெஞ்ச் ஓபன் பட்டத்தையும் கடந்த ஆண்டு விம்பிள்டன் பட்டத்தையும் அவர் வென்றிருந்தார்.

* மார்சிங்கோ அசத்தல்

ஆஸ்திரேலிய ஓபன் சிறுமியர் ஜூனியர் பிரிவில் குரோஷியா வீராங்கனை பெத்ரா மார்சிங்கோ (16 வயது, நம்பர் 1) சாம்பியன் பட்டம் வென்றார். பைனலில் சோபியா கோஸ்டுலாஸுடன் (16 வயது, பெல்ஜியம், 8வது ரேங்க்) நேற்று மோதிய மார்சிங்கோ 7–5, 6–1 என்ற நேர் செட்களில் வென்று கோப்பையை முத்தமிட்டார். இப்போட்டி 1 மணி, 16 நிமிடத்தில் முடிவுக்கு வந்தது.

* புரூனோ அமர்க்களம்

ஆஸி. ஓபன் ஜூனியர் சிறுவர் பிரிவில் அமெரிக்காவின் புரூனோ குஸுஹரா (17 வயது, நம்பர் 1) சாம்பியன் பட்டம் வென்றார். இறுதிப் போட்டியில் செக் குடியரசின் ஜேக்கப் மென்சிக்குடன் (4வது ரேங்க்) மோதிய புரூனோ 7–6 (7–4), 6–7 (6–8), 7–5 என்ற செட் கணக்கில் 3 மணி, 43 நிமிடம் கடுமையாகப் போராடி கோப்பையை தட்டிச் சென்றார்.

* நடாலுடன் இன்று மெட்வதேவ் மோதல்

ஆஸ்திரேலிய ஓபன் ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் இன்று ஸ்பெயின் நட்சத்திரம் ரபேல் நடாலுடன் (35 வயது, 6வது ரேங்க்) ரஷ்யாவின் டேனியல் மெட்வதேவ் (25 வயது, 2வது ரேங்க்) மோதுகிறார். கிராண்ட் ஸ்லாம் வேட்டையில் ரோஜர் பெடரர் (சுவிஸ்), நோவாக் ஜோகோவிச் (செர்பியா) ஆகியோருடன் சமநிலை வகிக்கும் நடால் (தலா 20 சாம்பியன் பட்டங்கள்), மெட்வதேவை வீழ்த்தி மகத்தான சாதனை படைப்பாரா என்பதே டென்னிஸ் ரசிகர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. அதே சமயம், கடந்த ஆண்டு யுஎஸ் ஓபன் பைனலில் ஜோகோவிச்சை வீழ்த்தி அதிர்ச்சி அளித்த மெட்வதேவ் தொடர்ச்சியாக 2வது கிராண்ட் ஸ்லாம் பட்டத்தை கைப்பற்றும் முனைப்புடன் களமிறங்குவதால் போட்டி மிகக் கடுமையாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

* இருவரும் இதுவரை 4 முறை மோதியுள்ளதில் நடால் 3 வெற்றிகளுடன் முன்னிலை வகிக்கிறார்.

* 2019 யுஎஸ் ஓபன் பைனலில் மெட்வதேவுடன் மோதிய நடால் 5 செட்கள் கடுமையாகப் போராடி பட்டம் வென்றார்.

* 2020 ஏடிபி பைனல்ஸ் தொடரில் நடாலுக்கு எதிராக நேர் செட்களில் மெட்வதேவ் வெற்றி பெற்றார்.

---

**1.** **'உலகப்பொருளாதார நிலை & வாய்ப்புகள்' என்பது எந்த அமைப்பின் முதன்மை வெளியீடாகும்?**

அ) உலக வங்கி

ஆ) ஆசிய வளர்ச்சி வங்கி

**இ) ஐக்கிய நாடுகள் ☑**

ஈ) இந்திய ரிசர்வ் வங்கி

✓ "உலகப்பொருளாதார நிலை மற்றும் வாய்ப்புகள்" என்பது ஐநா சபையின் முதன்மையான வெளியீடாகும். சமீபத்தில் இதன் 2022ஆம் ஆண்டின் பதிப்பு வெளியிடப்பட்டது. இவ்வறிக்கையின்படி, உலகளாவிய உற்பத்தி 2022'இல் 4 சதவீதமாகவும், 2023'இல் 3.5 சதவீதமாகவும் மட்டுமே வளரும் எனக்கணிக்கப்பட்டுள்ளது.

---

**2.** **பெஞ்ச் புலிகள் காப்பகம் அமைந்துள்ள மாநிலம் எது?**

அ) மகாராஷ்டிரா

**ஆ) மத்திய பிரதேசம் ☑**



இ) கர்நாடகா

ஈ) கேரளா

✓ மத்திய பிரதேச மாநிலத்தில் பெஞ்ச் புலிகள் காப்பகம் உள்ளது. இந்தப் புலிகள் காப்பகத்தில் இருந்த 'காலர்வாலி' என்ற மிகப்பிரபலமான புலி சமீபத்தில் இறந்துவிட்டதாக அக்காப்பகம் அறிவித்தது. இந்தப் புலி (டி–15) செப்டம்பர் 22, 2005 அன்று பிறந்தது. ஒரே பிரசவத்தில் 5 குட்டிகளைப் ஈன்றெடுத்து புகழ்பெற்ற சாதனையைப் பெற்றதால், அது 'சூப்பர்மாம்' என்றும் அன்புடன் அழைக்கப்படுகிறது. அந்தப் புலி இதுவரை 29 குட்டிகளைப் பெற்றெடுத்துள்ளது. அதில் 25 குட்டிகள் உயிரோடு உள்ளன.

---

**3.** **'மன ஊரு, மன பதி' என்ற திட்டம் செயல்படுத்தப்படுகிற மாநிலம் எது?**

அ) ஒடிஸா

**ஆ) தெலுங்கானா ☑**

இ) மேற்கு வங்கம்

ஈ) கர்நாடகா

Mana Ooru Mana Badi

✓ ₹7,289 கோடி பட்ஜெட்டில் 3 ஆண்டுகளில் செயல்படுத்தப் –படும் 'மன ஊரு, மன பதி' திட்டத்திற்கு தெலுங்கானா அமைச்சரவை சமீபத்தில் தனது ஒப்புதலை அளித்துள்ளது.

✓ இது மாநிலம் முழுவதும் உள்ள பள்ளிகளின் ஒட்டுமொத்த மேம்பாடு மற்றும் அவற்றில் பயனுள்ள அடிப்படைக் கட்டமைப்புகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. தெலுங்கானா மாநிலத்தில் உள்ள 26000 பள்ளிகளைச் சேர்ந்த 19.84 லட்சம் குழந்தைகள் இதனால் பயனடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

**4.** **'திறந்தவெளி தரவு வாரம்' அனுசரிக்கும் அமைச்சகம்?**

அ) மின்னணு & தகவல் தொழில்நுட்ப அமைச்சகம்

**ஆ) வீட்டுவசதி & நகர்ப்புற விவகார அமைச்சகம் ☑**

இ) அறிவியல் & தொழில்நுட்ப அமைச்சகம்

ஈ) தகவல் & ஒலிபரப்பு அமைச்சகம்

✓ வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் 'திறந்தவெளி தரவு வாரத்தை' அனுசரிக்கவுள்ளதாக அறிவித்துள்ளது. இது திறந்தவெளி தரவுகளை ஏற்றுக் கொள்வதை ஊக்குவிப்பது மற்றும் இந்தியாவின் நகர்ப் புறச்சூழலமைப்பு முழுவதும் புதுமைகளை ஊக்குவிப்ப –தை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

✓ 2022 பிப்ரவரியில் சூரத்தில் நடைபெறவுள்ள 'அமுதப் பெருவிழா – சீர்மிகு நகரங்கள்: சீர்மிகு நகரமயமாக்கல்' மாநாட்டிற்காக, திறந்தவெளி தரவுகள் குறித்த விழிப்புண –ர்வையும் பயன்பாட்டையும் ஊக்குவிப்பதற்காக மத்திய வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்தால் மேற்கொள்ளப்படும் நிகழ்வுக்கு முந்தைய முயற்சிகளின் ஒருபகுதியாக இந்தத் திறந்தவெளி தரவு வாரம் உள்ளது.

---

**5.** **"யோக்யதா" என்ற திறன்பேசி செயலி கீழ்காணும் எதனால் தொடங்கப்பட்டது?**

**அ) பொது சேவை மையங்கள் ☑**

ஆ) தேசிய பசுமை தீர்ப்பாயம்

இ) இந்திய தேர்தல் ஆணையம்

ஈ) இந்திய உச்சநீதிமன்றம்

✓ பொதுசேவை மையமானது (CSC) சமீபத்தில் "யோக்யதா" என்ற திறன்பேசி செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது.

✓ இது கிராமப்புறங்களில் உள்ள இளையோர் மற்றும் பிற குடிகளுக்கு தொழிற்சார் கல்வி மற்றும் திறன் மேம்பாட்டு வாய்ப்புகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. வேலைவாய்ப்பை அதிகரிக்க, சைபர் செக்யூரிட்டி, CAD மற்றும் முப்பரிமாண (3D) அச்சுபோன்ற படிப்புகளுக்கான அணுகலை இது உள்ளடக்கியுள்ளது.

---

**6.** **இந்தியாவின் முதல் மாவட்ட நல்லாட்சி குறியீட்டை அறிமுகப்படுத்திய மாநிலம்/யூனியன் பிரதேசம் எது?**

அ) கேரளா

**ஆ) ஜம்மு & காஷ்மீர் ☑**



இ) கோவா

ஈ) சிக்கிம்

✓ இந்தியாவின் முதல் மாவட்ட நல்லாட்சி குறியீடு ஜம்மு – காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் வெளியிடப்பட்டது. இந்தக் குறியீட்டின் கூட்டுத்தரவரிசையில், ஜம்மு மாவட்டம் முதல் இடத்திலும், தோடா, சம்பா, புல்வாமா மற்றும் ஸ்ரீநகர் மாவட்டங்கள் அடுத்தடுத்த இடங்களிலும் உள்ளன. இந்தக் குறியீடு 58 குறிகாட்டிகளுடன் பத்து நிர்வாகத் துறைகளின்கீழ் செயல்திறனை மதிப்பிடும் ஒரு கட்டமைப்பு ஆவணமாகும்.

---

**7.** **'உழவு எந்திரமயமாக்கலின் துணைப்பணி' என்பது எந்த மத்திய அமைச்சகத்தின் திட்டமாகும்?**

அ) அறிவியல் & தொழில்நுட்ப அமைச்சகம்

**ஆ) உழவு & உழவர்கள் நல அமைச்சகம் ☑**



இ) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

ஈ) மின்னணு & தகவல் தொழில்நுட்ப அமைச்சகம்

✓ உழவு மற்றும் உழவர்கள் நல அமைச்சகம் 2014–15'இல் Sub–Mission on Agricultural Mechanization (SMAM) என்ற திட்டத்தைத்தொடங்கியது. இது சிறு & குறு உழவர்களின் பண்ணை எந்திரமயமாக்களுக்கு உதவும். SMAM'இன் சமீபத்திய வழிகாட்டுதல்களின்படி, வேளாண் இயந்திரப் பயிற்சி மையங்கள், வேளாண் ஆராய்ச்சி மையங்கள், கிரிஷி விஞ்ஞான் மையங்கள், வேளாண் பல்கலைகள் வாங்கும் டிரோன்களுக்கு 100 சதவீத மானியம் அல்லது ₹10 இலட்சம் இதில் எது குறைவோ அது வழங்கப்படும். வேளாண் உற்பத்தியாளர் சங்கங்கள், ட்ரோன்கள் வாங்க 75% மானியம் வழங்கப்படும்.

---

**8.** **'மசாலாப் பொருட்கள் வாரியம்' என்பது பின்வரும் எந்த அமைச்சகத்தின்கீழுள்ள ஒழுங்குமுறை மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனமாகும்?**

அ) உழவு & உழவர்கள் நல அமைச்சகம்

**ஆ) வணிகம் & தொழிற்துறை அமைச்சகம் ☑**

இ) MSME அமைச்சகம்

ஈ) பழங்குடியினர் நலத்துறை அமைச்சகம்

✓ 'மசாலாப்பொருட்கள் வாரியம்' என்பது மசாலாப்பொருட்கள் சார்ந்த ஓர் ஒழுங்குமுறை மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்பு நிறுவனமாகும். இது வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகத்தின்கீழ் செயல்பட்டு வருகிறது.

✓ இதன் தலைமையகம் கேரளாவின் கொச்சியில் உள்ளது. மசாலா வாரியம் மசாலா ஏற்றுமதிக்கான நாட்டின் முதல் மெய்நிகர் தளமான 'Spice Xchange'ஐ தொடக்கியது. இந்தியா ஆனது 180'க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு 225 வகையான மசாலா மற்றும் மசாலாப் பொருட்களை ஏற்றுமதி செய்கிறது. இது ஒரு 3D மெய்நிகர் தளமாகும், இது இந்தியாவில் உள்ள மசாலா ஏற்றுமதியாளர்களை உலகெங்கிலும் உள்ள வாங்குபவர்களுடன் AIமூலம் இணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

---

**9.** **'மக்களுக்காக வீதிகள்' என்பது கீழ்காணும் எந்த மத்திய அமைச்சகத்தின் முன்னெடுப்பாகும்?**

அ) மின்னணு & தகவல் தொழில்நுட்ப அமைச்சகம்

**ஆ) வீட்டுவசதி & நகர்ப்புற விவகார அமைச்சகம் ☑**

இ) அறிவியல் & தொழில்நுட்ப அமைச்சகம்

ஈ) தகவல் & ஒலிபரப்பு அமைச்சகம்




✓ வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் ஏற்பாடு செய்திருந்த இணையவழி நிகழ்வில், 'மக்களுக்–காக வீதிகள்' என்பதில் வெற்றி பெற்ற 11 நகரங்கள் 'அண்டை அயல் நட்புகளை வளர்த்தல்' என்பதன் முதற் கட்டத்தில் வென்ற 10 நகரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

✓ இந்த நிகழ்வின்போது, மாற்றத்திற்கான மிதிவண்டிகள் மக்களுக்காக வீதிகள் என்பதன் இரண்டாம் கட்டத்தை அமைச்சகம் தொடங்கியது. 'அண்டை அயல் நட்புகளை வளர்த்தல்: களத்திலிருந்து கதைகள்' எனப்பெயரிடப்பட்ட ஒரு நூல் வெளியிடப்பட்டது.

---

**10.** **'கிராம ஒன்' திட்டமானது பின்வரும் எம்மாநிலத்தின் முன்முயற்சியாகும்?**

அ) தமிழ்நாடு

ஆ) கேரளா

**இ) கர்நாடகா ☑**

ஈ) ஆந்திர பிரதேசம்

✓ 12 மாவட்டங்களில் உள்ள கிராமப்புறங்களில் குடியரசு நாளிலிருந்து 'கிராம ஒன்' திட்டம் செயல்படுத்தப்படும் என கர்நாடக முதலமைச்சர் பசவராஜ் பொம்மை கூறினார்.

✓ இத்திட்டம் குடிமக்களின் வீட்டு வாசலிலேயே பல்வேறு துறைகளின் சேவைகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. பல்வேறு அரசு சேவைகளை வழங்குதற்–காக மாநிலங்கள் முழுவதும் 30000 'கிராம ஒன்' சேவை மையங்கள் திறக்கப்படவுள்ளன.

---

# செய்தித்தாள் நடப்பு நிகழ்வுகள்

**1. மத்திய பட்ஜெட் – வரலாறும் சுவாரஸ்யங்களும்**

மத்திய அரசின் 2022–23ஆம் நிதியாண்டுக்கான நிதி நிலை அறிக்கை (பட்ஜெட்) பிப்.1 தாக்கல்செய்யப்படவுள்ளது.

நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தொடர்ந்து 4ஆவது முறையாக மத்திய பட்ஜெட்டை தாக்கல் செய்யவுள்ளார். இந்நிலையில், பட்ஜெட்டின் வரலாறு குறித்தும் பல்வேறு சுவாரஸ்ய தகவல்கள் குறித்தும் காண்போம்.

வரலாற்று சிறப்பு தாக்கல் செய்யப்பட்ட நாள் / ஆண்டு தாக்கல் செய்தவர்.

இந்தியாவுக்கான முதலாவது பட்ஜெட் ஏப்ரல் 7, 1860 பிரிட்டிஷ் கிழக்கிந்திய நிறுவனத்தால் அந்நாட்டு அரசி விக்டோரியா முன்னிலையில் சமர்ப்பிக்கப்பட்டது.

சுதந்திர இந்தியாவில் முதல் பட்ஜெட் நவம்பர் 26, 1947 ஆர் கே சண்முகம் செட்டி

நீண்ட பட்ஜெட் உரை பிப்ரவரி 1, 2020 (2 மணி நேரம் 42 நிமிஷங்கள்) நிர்மலா சீதாராமன்

பட்ஜெட் உரையில் அதிக சொற்கள் 1991 (18,650 சொற்கள்) மன்மோகன் சிங்

2018 (18,604 சொற்கள்) அருண் ஜேட்லி

பட்ஜெட் உரையில் குறைந்த சொற்கள் 1977 (800 சொற்கள்) எச் எம் படேல்

முதல் காகிதமில்லா பட்ஜெட் 2021–22 நிர்மலா சீதாராமன்

**சுவாரஸ்யங்கள்:**

அதிகமுறை பட்ஜெட் தாக்கல் செய்தவர்கள் மொரார்ஜி தேசாய்–10 முறை; ப சிதம்பரம்–9 முறை; பிரணாப் முகர்ஜி, யஷ்வந்த் சின்ஹா (8 முறை)

பட்ஜெட் மொழி 1955 வரை ஆங்கிலம் மட்டுமே; அதன் பிறகு ஹிந்தி, ஆங்கிலம்

பட்ஜெட் தாக்கல்செய்த முதல் பெண் இந்திராகாந்தி (1970–71)

நிர்மலா சீதாராமன்–முழுநேர நிதியமைச்சர் (2019)

இரயில்வே பட்ஜெட் 2017 வரை தனியாகத்தாக்கல்; அதன் பிறகு பொது பட்ஜெட்டுடன் இணைப்பு

**சிறப்புப் பெயர்கள் பட்ஜெட் காரணம்**

கருப்பு பட்ஜெட் 1973–74 ₹550 கோடி நிதிப்பற்றாக்குறை.

கேரட்–ஸ்டிக் பட்ஜெட் 1986 சலுகைகளும் அபராதங்களும் ஒருசேர அறிவிப்பு.

புதிய சகாப்தம் வகுத்த பட்ஜெட் 1991 தாராளமய கொள்கை அறிமுகம்.

கனவு பட்ஜெட் 1997–98 தனிநபர், நிறுவன, இறக்குமதி வரிகள் குறைப்பு.

ஆயிரமாண்டுக்கான பட்ஜெட் 2000 தகவல்–தொழில் நுட்ப வளர்ச்சிக்கு வழிகோலியது.

பின்வாங்கிய பட்ஜெட் 2002–03 பெரும்பாலான அறிவிப்புகள் திரும்பப்பெறப்பட்டன.

நூற்றாண்டுக்கு ஒருமுறை பட்ஜெட் 2021–22 கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்கள் அறிவிப்பு.

---

**2. திருப்பூர் இளநீர் விற்கும் பெண்ணுக்கு பிரதமர் மோடி பாராட்டு**

திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டையை சேர்ந்த இள நீர் விற்கும் பெண் தாயம்மாள் பஞ்சாயத்து நடுநிலைப் பள்ளி கட்டமைப்புக்காக ₹1 லட்சம் நன்கொடை வழங்கி இருந்தார்.

அவருக்கு பிரதமர் மோடி பாராட்டு தெரிவித்துள்ளார். 'மனதின் குரல்' நிகழ்ச்சியில் பேசிய மோடி, தாயம்மாளை குறிப்பிட்டு பேசினார்.

கல்வி பற்றிய விழிப்புணர்வு சமூகத்தில் ஒவ்வொரு மட்டத்திலும் தெரிகிறது. தமிழ்நாட்டில் திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டையில் வசிக்கும் தாயம்மாளின் செயல்மிகவும் ஊக்கம் அளிக்கிறது.

அவருக்கு சொந்தமாக நிலம் எதுவும் இல்லை. இவர்களது குடும்பம் பல ஆண்டுகளாக இளநீர் விற்று சம்பாதித்து வருகிறார்கள். பொருளாதார நிலை அவருக்கு நன்றாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் தாயம்மாள் தனது மகன், மகளுக்கு கல்வி கற்பதற்கு எந்த தடைக்கல்லையும் ஏற்படுத்தவில்லை.

இவரது குழந்தைகள் சீன்னவீரம்பட்டு பஞ்சாயத்து நடுநிலைப்பள்ளியில் படித்து வருகிறார்கள். அந்த பள்ளியில் பெற்றோர்கள் கூட்டம் நடந்த போது, வகுப்பறைகள் மற்றும் பள்ளியின் நிலையை மேம்படுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது.

பள்ளியின் உட்கட்டமைப்புகளை சரி செய்ய வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. மேலும் இந்த பணிக்கான பண பற்றாக்குறை குறித்தும் விவாதிக்கப்பட்டது.

அந்தக் கூட்டத்தில் தாயம்மாளும் பங்கேற்றிருந்தார். அவர் என்ன செய்தார் என்று யாராலும் நினைத்து பார்க்க முடியவில்லை. இளநீர் விற்று ஓரளவுக்கு சம்பாதித்த பணத்தை தாயம்மாள் பள்ளி கட்டமைப்புக்காக ரூ.1 லட்சம் நன்கொடை அளித்தார்.

உண்மையில் இதை செய்வதற்கு ஒரு பெரிய மனது, சேவை உணர்வு தேவை. அங்குள்ள பள்ளியில் 8ஆம் வகுப்பு வரை இருப்பதாக தாயம்மாள் கூறுகிறார்.

இப்போது பள்ளியின் உட்கட்டமைப்பு மேம்பட்டால் மேல் நிலை கல்வி வரை வகுப்புகள் நடத்தப்படும். இவ்வாறு அவர் பேசினார்.

---

**3. தேசிய மகளிர் ஆணைய தொடக்க தினம்**

கடந்த 1992ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் தேதி தேசிய மகளிர் ஆணையம் தொடங்கப்பட்டது.

---

**4. வாகை சூடினார்; வரலாறு படைத்தார்**

ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியில் ஆடவர் ஒற்றையர் பிரிவில், உலகின் 5ஆம் நிலை வீரரான ஸ்பெயினின் ரபேல் நடால் (35) சாம்பியன் பட்டம் வென்றார்.

இதன்மூலம் தனது 21ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை கைப்பற்றிய நடால், டென்னிஸ் வரலாற்றில் அத்தனை கிராண்ட்ஸ்லாம் வென்ற முதல் வீரர் என்ற சாதனையை படைத்தார். முன்னதாக அவர் 20 கிராண்ட்ஸ்லாம்கள் வென்று, ஸ்விட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், செர்பியாவின் ஜோகோவிச் ஆகியோருடன் சமனிலையில் இருந்தார்.

அவா்களில் யாா் முதலில் 21–ஆவது கிராண்ட்ஸ்லாமை எட்டி சாதனை படைப்பது என்ற போட்டி இருந்தது. இந்த நிலையில், முழங்கால் அறுவைச் சிகிச்சை காரணமாக ரோஜர்பெடரரும், கரோனா தடுப்பூசி சர்ச்சையால் நோவக் ஜோகோவிச்சும் ஆஸ்திரேலிய ஓபனில் பங்கேற்காமல் போனது நடால் அந்தச் சாதனையை முதலில் எட்டுவதற்கு சற்று சாதகமாகிப்போனது.

**2ஆவது அதிகபட்சம்...**

இந்த இறுதிச்சுற்று மொத்தமாக 5 மநே 24 நிமிஷங்கள் நடைபெற்றது. ஆஸ்திரேலிய ஓபன் வரலாற்றில் நீண்ட நேரம் நடைபெற்ற இறுதிச்சுற்றில் இது 2ஆவது இடத்தில் இருக்கிறது. முன்னதாக, 2012இல் ஜோகோவிச்சிடம் நடால் தோல்வி கண்ட இறுதிச்சுற்று 5 மணி நேரம் 53 நிமிஷங்களுடன் முதலிடத்தில் இருக்கிறது.

**தலா 2 கிராண்ட்ஸ்லாம்கள்...**

இந்த ஆஸ்திரேலிய ஓபனில் சாம்பியன் ஆனதன்மூலம், அனைத்து கிராண்ட்ஸ்லாம் போட்டிகளிலும் குறைந்தது 2 முறை பட்டங்கள் வென்ற கணக்கை எட்டியிருக்கிறார் நடால். ஓபன் எராவில் இத்தகைய சாதனையை எட்டும் 2ஆவது வீரர் இவர். முதல் வீரர் நோவக் ஜோகோவிச்.

**முதல் வீரர்...**

ஆஸ்திரேலிய ஓபன் வரலாற்றில், இறுதிச்சுற்றில் முதல் இருசெட்களை இழந்து அடுத்த 3 செட்களை கைப்பற்றி சாம்பியன் ஆன முதல் வீரர் என்ற பெருமையை நடால் பெற்றிருக்கிறார். மறுபுறம், நடாலின் டென்னிஸ் வரலாற்றில் அவர் இவ்வாறு முதலிரு செட்களை இழந்தும் வெற்றியை பதிவு செய்தது இது 4ஆவது முறை.

---

**5. ஒடிஸா ஓபன்: வாகை சூடினார் உன்னாட்டி ஹூடா**

ஒடிஸா ஓபன் பாட்மின்டன் போட்டியில் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் உன்னாட்டி ஹூடா வாகை சூடினார். இப்போட்டியில் சாம்பியன் ஆன மிக இளவயது இந்தியர் என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார்.

14 வயதே ஆகியிருக்கும் உன்னாட்டி தனது இறுதிசுற்றில் சக இந்தியரான ஸ்மித் டோஷ்னிவாலை 21–18, 21–11 என்ற நேர் கேம்களில் 35 நிமிஷங்களில் தோற்கடித்தார். உன்னாட்டிக்கு ₹4.22 லட்சம் ரொக்கம் வழங்கப்பட்டது.

**ஆடவர் ஒற்றையர்:** மறுபுறம், போட்டித்தரவரிசையில் இடம்பிடிக்காவிட்டாலும் அசத்தலாக ஆடி முன்னேறி வந்த கிரண் ஜார்ஜ் ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதிச்சுற்றில் 21–15, 14–21, 21–18 என்ற கேம்களில் மற்றொரு இந்திய வீரரான பிரியான்ஷு இரஜாவத்தை வீழ்த்தி முதலிடம் பிடித்தார். அவருக்கும் ₹4.22 லட்சம் ரொக்கம் கிடைத்தது.

**மகளிர் இரட்டையர்:** இப்பிரிவின் இறுதிச்சுற்றில் போட்டித் தரவரிசையில் 5ஆம் இடத்திலிருந்த இந்தியாவின் டிரிசா ஜாலி/காயத்ரி கோபிசந்த் இணை 21–12, 21–10 என்ற நேர் கேம்களில் மிக எளிதாக, போட்டித்தரவரிசையில் 8ஆவது இடத்திலிருந்த இந்தியாவின் சன்யோகிதா கோர்பேடே/ஷ்ருதி மிஸ்ரா கூட்டணியை வீழ்த்தியது.

இந்த ஆட்டம் 28 நிமிஷங்களில் முடிவுக்கு வந்தது. டிரிசா /காயத்ரி இணை ₹4.44 லட்சம் ரொக்கப்பரிசை பகிர்ந்து கொள்கிறது.

**2 வெள்ளி:** எனினும் ஆடவர் இரட்டையர் மற்றும் கலப்பு இரட்டையர் பிரிவுகளில் இந்தியா சாம்பியன் பட்டத்தை தவறவிட்டது.

ஆடவர் இரட்டையர் இறுதிச்சுற்றில் இந்தியாவின் ரவி கிருஷ்ணா /சங்கர் பிரசாத் உதயகுமார் இணை 21–18, 14–21, 16–21 என்ற கேம்களில் மலேசியாவின் நூர் முகமது அஸ்ரியின்/லிம் கிம் வா இணையிடம் 51 நிமிஷங்களில் வெற்றியை இழந்தது.

கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் M R அர்ஜூன் / டிரீசா ஜாலி ஜோடி 16–21, 20–22 என்ற கேம்களில் இலங்கையின் சச்சின் டியாஸ்/தில்லினி ஹெந்தஹேவா இணையிடம் 36 நிமிஷங்களில் தோற்றது.

இந்த இரு பிரிவுகளிலும் 2ஆம் இடம்பிடித்த இந்திய இணை தலா ₹2.13 லட்சம் பரிசைப் பகிர்ந்துகொண்டன.